755

[illegible]

[illegible]

T.D.R.C.

R.R. No. 755 – 2-1-1910

DIGITIZED

(C)

Q22:4198
N10
119684.

ஸ்ரீ

# ஹரிவம்சம்.

இஃது

வடமொழியிலிருந்து,

வங்கீபுரம்-ஸ்ரீ-வேதாந்தராமானுஜாசாரியரால்

நேரிட

எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு

---

1-ஸ்ரீரங்கம்-சக்கிரவர்த்தி-ம-சேஷாசாரியார்,

2-டி-ஸ்தானிகம் ரே-துரைசாமிஅய்யங்கார்,

இவ்விருவர்களுடன்

---

1910

திருச்சி கோட்டை

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை ரூ 1—0—0

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

755
1910/11
27 JUN 1910
MADRAS

ஸ்ரீ

# ஹரிவம்சம்.

இஃது

வடமொழியிலிருந்து,

வங்கீபுரம்-ஸ்ரீ-வேதாந்தராமானுஜாசாரியரால்

நேரிட

எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு.

---

1-ஸ்ரீரங்கம்-சக்கிரவர்த்தி-ம-சேஷாசாரியார்,

2-ஷை-ஸ்தானீகம் ரே-துரைசாமிஅய்யங்கார்,

இவ்விருவர்களுடன்

---

1910

திருச்சி கோட்டை

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை ரு 1—0—0.

காபிரைட் ரிஜிஸ்டர்.

உ

இப்புத்தகம் டைடில் பேஜில் கண்ட மூவர்போாலும் ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருப்பதால், அம்மூவர்க்கேசொந்தமானது. வேறு எவரும் இதை அச்சிடக்கூடாது.

REGISTRAR OF BOOKS REGISTERED 27 JUN 1910 MADRAS

# அவதாரிகை

சகல வேதங்களையும் நான்காய் வகுத்து உபதேசித்தருளியவரும் ஸ்ரீபாராசரமஹரிஷியின் குமாரனுமான ஸ்ரீவேதவியாஸபகவான் எவ்வோரும் நற்கதியை அடையவேண்டுமென்ற கருணையால் "ஸ்திரீசூத்ர த்விஜபந்தூநாம் த்ரயீ நச்ருதிகோசரா, இதிபாரதமாக்யானங் க்ருபயா முநிநா க்ருதம்:" எனச்சங்கற்பித்து வேதார்த்தங்களையப்படியே எளிய வடமொழிச் செய்யுட்களாகவியற்றி அதற்கு மஹாபாரதமென்ற ஐந்தாம் வேதமெனப் பெயருஞ்சாற்றினர். அவ்விதமுள்ள அப்பிரபந்தமானது இதிகாசத்திற்சேர்ந்தது. மஹாகாவியமெனவும் நான்முகன் கூறினர். அது இலக்ஷத்திருபத்தையாயிரம் சுலோகங்களடங்கியது. இதையே ஸபாதலக்ஷமென வடமொழியிற்கூறுவது. அப்பெருமிதிஹாஸத்தை ஆதியில் பருவம் பருவமாகப்பகுத்து முடிவில் நூறுபருவங்களடங்கியதாய் ஸ்ரீவேதவியாஸரால் வெளியிடப்பட்டது. பிறகு ஸூதர் என்பவர் இதை பாண்டவர் கதைகள் வரையில் 18 பருவங்களாகவும், யாதவர்களுடையவும், ஸ்ரீகிருஷ்ணனுடையவும் சரித்திரத்தைப் பத்தொன்பதாவது பருவமாகவும் வகுத்து வெளியிட்டனர். இப்பொழுதும் அவையட்டக்கச் சருக்கத்தில் அவாந்தரமான நூறுபருவங்களின் பெயர்களும் நன்றாய்க் காணப்படுகின்றன. ஆனதுபற்றி 19-வது பருவமாகிய கில்பருவமென்ற ஸ்ரீஹரிவம்சத்தை மஹாபாரதத்தின் அவயவமாகிய திருமுடிபோலங்கீகரிக்கக்கடவது. இவ்வரிவம்சத்தை அரிவஞ்சமெனத் தமிழ்நாட்டார் எடுத்துக்கூறுகின்றனர். ஸ்ரீசங்கராச்சாரியார்ஸ்வாமிகளும், ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்களும், ஸ்ரீராமானுஜாசாரியார்ஸ்வாமிகளும், ஸ்ரீமத் வேதாந்தாசாரியரும், ஸ்ரீமத்அப்பய்யதீக்ஷிதரும், மற்றுமுள்ள சைவ வைஷ்ணவாசாரியர்களும் இவ்வரிவஞ்சத்தினின்றே பெரும்பாலும் வேண்டிய பிரமாணங்களைத் தத்தங்களுக்காதாரமாக எடுத்தருள்கின்றனர். இது மூன்று சிறிய பருவங்களோடுகூடியதாய் விளங்குகின்றது. இதுவுஞ்சேர்ந்தாலொழிய மஹாபாரதம் பூர்த்தியாவதில்லை. இவைகளுக்கு "ஹரிவம்சஸ்தத: பர்வபுராணம் கிலஸம்ஜ்ஞிதம், ப்ருஹத்பர்வதம்

பூர்வம் வ்யாஸேநோக்தம் மஹாத்மநா." என்று ஆதிபர்வத்தின் துடக்கத்திலும், "பவிஷ்யோத்தர மேதந்தேகநிதம் பாரதம்மயா" என இவ்வரிவம்சத்தின் 3-வது உட்பருவத்தினீற்றிலுமாதாரங்கள் காண்க.

ஆகையாலிவ்வகைவிஷயங்களோடுகூடிய இவ்வரிவம்சத்தை நன்றாயாராய்ந்து சகலருமெளிதிலறியும்படி எளிய தமிழ்நடையிலெழுதவாரம்பிக்கப்பட்டது. அதிலும் ஏற்கனவே அச்சிட்டிருக்கும் வடதேசத்திய புஸ்தகங்களெல்லாம் நமதுநாட்டிலுள்ள பனையோலை யேட்டுப்பிரதிகளோடிணங்காது எறத்தாழவிருக்கின்றன. அன்றியும் ஆதிபர்வத்திற்கணக்கிட்டபடி சரியான சுலோகக்கணக்கும் குறைகின்றன. பிறகு, அதற்காகக்கிரந்தலிபியிலும், தெலுங்குலிபியிலும் முன்னோர்களாலெழுதிவைக்கப்பட்டிருக்கின்ற வோலைப்புத்தகங்களையெல்லாம் வைத்துக்கொண்டு கூடியவரையில் ஜாக்கிரதையாக மொழிபெயர்க்கப்பட்டுவருகின்றது. இதனுள் முதலாவது பருவம் பிர்மாமுதல் யயாதிவரையிலுள்ள பெரியோர்களையும், மனுமன்வந்தரங்களையும், அவ்வரசனுக்குப்பிறபட்ட புரு, யதுமுதலியவர்களுடையவம்சக்கிரமத்தையும், தேவாசுரர்களுக்குக் காலநேமியோடு சேர்ந்த யுத்தத்தையும், பூமிதேவியார் பாரத்தை சகிக்கமாட்டாமல் தேவசபையில் பிரார்த்திததையும், சகலதேவர்களுடைய அமிசாவதாரங்களையும், விஷ்ணுவின் பராக்கிரமத்தையும், அவ்விஷ்ணுவினவதாரத்திற்குத்தக்கதான ஸ்தலவிசேஷத்தைப் பிர்மாதெரிவிப்பதையும், அப்படியே அவ்விஷ்ணுபகவான் அவதாரவார்த்தையை அங்கீகரித்தருளியதையும் கூறுகின்றது.

மேலுமிவ்விதிகாசமானது பாராயணஞ்செய்தமாத்திரத்தில் பலப்பிரதீபிகையென்ற சோதிடசாத்திரப்படி சந்தானமில்லாதவர்க்கு அவரிஷ்டப்பட்ட சந்தானத்தையளிக்குமென வெளியாகின்றது. அதேமாதிரிச் சிலசில விடங்களிலும் பிரத்தியக்ஷானுபவமும் காணப்படுகின்றது. அரைகுறையான வச்சுப்பிரதிகளைப்பாராயணஞ்செய்வதாலும், பக்திக்குறைவாலும் சிலவிடங்களில் பயனற்றும்போகின்றது. ஆனதாலிவ்விதிகாசத்திற்குத் தோஷம் கூறவிடமில்லை. என்கண்ணுற் கண்டதற்கும் ஸாக்ஷிவேண்டுமோ. ஸ்ரீமத்பாகவதம், விஷ்ணுபுராணம் முதலியவைகளெல்லாம் விஷ்ணுவின் பெருமையையே பேசுவன. இவ்வரிவம்சமோ பொதுவாய்ப்பேசுவதுமன்றி சகலமதத்தியவர்களாலு மங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. பிரமாணங்களும், கதைகளுந்தன்றுக்கொன்று விரோதப்படும்பொழுது வேதத்திற்கடுத்தபடியிலிதையே சிறந்தவாதாரமாக வொப்புக்கொள்ளுகின்றனர். ஆனதாலப்புராணங்களைக்காட்டிலும் இந்தஹரிவம்சமே பிரமாணகிரந்தத்தில் மேன்மைபொருந்தியது.

இவ்வளவு விஷயங்களையுமாலோசித்து மிகவும் பிரயாசத்துடன் எளிய தமிழ்நடையில் மொழிபெயர்த்திருக்குமிப்புத்தகத்திலேதாவது கைப்பிழை, அச்சுப்பிழை முதலியவைகள் காணப்பட்டாலுமவைகளையெல்லாம் பாராட்டாமல் இதையெப்படியாவது விருத்திக்குக்கொண்டுவருவதிலேயே புத்தியைச் செலுத்தவேண்டுமென ஒவ்வோர் பெரியோர்களிடமும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

இதினிரண்டாவது மூன்றாவது பருவங்களும் கூடியசீக்கிரத்தில் வெளியாகும். ஸஞ்சிகைகளாய் விடுவதைக்காட்டிலும் பருவம்பருவமாக வெளியிட்டால் ஒருவருக்கொருவர் குண சேஷமில்லாமலும் பாராயணயோக்கியமாகவுமாகின்றதென்ற இவ்வாலோசனையாலிப்பருவம் பூர்ணமான பின் வெளியிடலாயிற்று.

இப்படிக்கு வங்கீபுரம்

ஸ்ரீ வேதாந்தராமானுஜாசாரியார்,

ஸ்ரீரங்கம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 JUN 1910
MADRAS.



# விஷய அட்டவணை.


| அத்தியாயம் | பக்கம். | கதையின் வரலாறு. |
|---|---|---|
| 1 | 1 | ஸ்ரீ வைசம்பாயனருக்கும் ஜனமேஜய ராஜனுக்கு முண்டாகிய சம்பாஷணத்தின் வழியாக ஆதி சிருஷ்டியின்வரலாறு. |
| 2 | 6 | தக்ஷப்பிரஜாதி பதியினுற்பத்தி. |
| 3 | 10 | எழு மருத்துக்களினுற்பத்தியும், அவர்களை வதித்த இந்திரனது சரித்திரமும். |
| 4 | 21 | வேனராஜனது வதமும், அவன் மைந்தனான பிருது சக்கிரவர்த்தியின் சரித்திரமும். |
| 5 | 23 | பிரது ராஜனுக்கும், பூமிதேவிக்கு முண்டான சம்பாஷணம். |
| 6 | 29 | உலக நன்மைக்காகப் பசுவுருவங்கொண்ட பூமிதேவியைத் தேவர் முதலியோர் கரந்தது. |
| 7 | 34 | மனுவந்தரங்களின் சரித்திரம். |
| 8 | 40 | கிருதம் முதலிய யுகங்களின் கணக்குகள். |
| 9 | 43 | சூரியனது சரித்திரமும், அவனது மனைவி ஒளியைச் சகிக்காமலோடியதும். சாயாதேவியை யுற்பத்தியாக்கியதும், யமனுக்குச்சாபம் வந்ததும், சூரியனொளியை துவஷ்டா சாணையிலேற்றிக் குறைத்ததும், த்வாதசாதித்தியர்களைப்படைத்ததும். |
| 10 | 49 | மனுக்களுடைய வமிச சரித்திரம். |
| 11 | 52 | சரியாதியினுடையவும், அந்துமாரனுடையவும் விஸ்தாரமான சரித்திரம். |

| அத்தியாயம். | பக்கம். | கதையின் வரலாறு. |
|---|---|---|
| 12 | 58 | திருடாசுவன் முதலியவர்களின் பரம்பரையும், ஸத்தியவிருதனென்ற திரிசங்குவின் விஸ்தாரமான கதையும். |
| 14 | 63 | சகர மஹாராஜனுடைய சரித்திரம். |
| 15 | 65 | அவர் மைந்தர்களான சாகரர்களுடைய வரலாறு. |
| 16 | 68 | பிதுரு தேவர்களின் சரித்திரமும், சிராத்தங்களின் முறைகளும், சிராத்த தேவர்களின் நிச்சயமும். |
| 17 | 72 | ஸனத் குமாரருக்கும், மார்க்கண்டேயருக்கு முண்டான சிராத்தத்தைப்பற்றிய விசேஷித்த ஸம்பாஷணங்கள் |
| 18 | 76 | சிராத்தத்திலும், யோகத்திலும் ஸஹாயஞ் செய்யும் ஏழு விதமான பிதுருக்களின் நிலைகளும், அத்திரிகையென்பவளின் சுருக்கமான சரித்திரமும். |
| 19 | 85 | கருமங்களுடைய பிரிவும், காமிய சிராத்தங்களுக்குள்ள பயன்களும். |
| 20 | 87 | யமனாற் கூறப்பட்ட சிராத்த நியமங்கள். |
| 21 | 88 | பிதுரு கருமம் முதலிய காரியங்களில் செய்யத்தக்கதான வஸ்துக்களும், தானபாத்திரரும், தானகாலமும் |
| 22 | 93 | பரத்துவாஜரது மரபிற் பிறந்த ஏழுவிப்பிரகுமாரர்களின் யோகானுஷ்டானக்கிரமம். |
| 23 | 95 | நீபனென்ற அரசனை யுத்தத்தில் பீஷ்மன் கொன்றதும், பிர்மதத்தன் மகனான ஸர்வஸேனன் கண்களைப் பூஜனீயையென்றவோர் பக்ஷி பெயர்த்துத் தள்ளியதும். |
| 24 | 106 | முன் கூறப்பட்ட ஏழுவிப்பிர குமாரர்களும் குருக்ஷேத்திரத்தில் வாக்துஷ்டன் முதலிய ஏழு கௌசியர்களாய்ப் பிறந்து காலவரிஷியிடம் ஓதும் பொழுது குருவின் பசுவைத்திருடித்தின்றதும், பிறகு அப்பாவத்தால் காலஞ்ஜரம் முதலிய விடங்களில் மான்முதலிய ஜன்மங்களை யெடுத்ததும். |





| அத்தியாயம். | பக்கம். | கதையின் வரலாறு. |
|---|---|---|
| 25 | 110 | முடிவில் அவ்வேழு யோகிகளில் மூவர்காம்பில்ய நகரத்தில் இராஜ ஸர்களாய்ப் பிறந்ததும், மற்ற நால்வரும் அந்நகரிலே பிராம்மணர்களாய்ப் பிறந்ததும், முதல் மூவரில் ஒருவனாகிய பிர்மதத்தன் அக்காம்பில்லியத்திற்கு அரசனாகியதும், ஜன்மாந்தர ஞானத்தை யிழந்து போகப் பிரியனாயிருந்த வரசனை மற்ற நான்கு ஸாத்விகர்களும் தங்கள் தந்தையைக்கொண்டு முன்னனுஷ்டித்து வந்த யோகத்தை யுணர்வித்ததும், முடிவிலெல்லோரும் நற்கதியை யடைந்ததும். |
| 28 | 118 | அத்திரி மஹரிஷி தவம்புரிந்ததும், அதினின்று சந்திரனுதித்ததும், பிறகவன் ராஜஸூயத்தில் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டு அக்கருவத்தால் குருதாரத்தைப்பிடித்ததும், அத்தாரையினின்று புதனென்றவனுதித்ததும். |
| 29 | 122 | புரூரவன் ஊர்வசியை மணம் புரிந்தது. |
| 30 | 127 | ஜாதி தருமங்களும், நித்தியகருமங்களின் முறைகளும். |
| 31 | 132 | கௌஸிகோத்திரியென்பவளின் சரித்திரம். |
| 33 | 141 | தன்வந்திரி பகவான் அவதரித்த வரலாறும், சிவபெருமான் ஸ்ரீ காசியைத்தாம் வசிப்பதற்காக அங்கீகரித்த வரலாறும். |
| 34 | 143 | யயாதி ராஜனது சரித்திரச் சுருக்கம். |
| 35 | 152 | அவன் மகனான பூருராஜன் வமிசபரம்பரை. |
| 37 | 166 | யதுராஜனது வமிசபரம்பரை. |
| 38 | 172 | சுவபல்கனென்றவன் சரித்திரம். |
| 39 | 175 | வசுதேவனுடைய சரித்திரம். |
| 42 | 181 | வியமந்தகரத்தினத்தின் சரித்திரம். |

| அத்தியாயம் | பக்கம். | கதையின் வரலாறு. |
|---|---|---|
| 44 | 190 | ஸ்ரீ வராஹாவதாரம் முதலிய அவதாரங்களைப்பற்றிய கேள்விகளும், அவைகளுக்குத்தக்க மறுமொழிகளும், தாரகாமயமென்ற தேவாசுரயுத்த வருணனையும், அதில் காலநேமியென்பவன் ஹரியாலிறந்ததும், இதனிடையில் ஊர்வ மஹரிஷியின் சரித்திரமும். |
| 53 | 241 | ஸ்ரீ ஹரிகாலநேமியை வதம் செய்த பிறகு நான்முகனு லழைக்கப்பட்டவராய்ப் பிர்மலோகஞ் சென்றதும், அவ்வுள்ளவர்களால் வெகுமதிக்கப்பட்டதும். |
| 54 | 243 | ஸ்ரீ ஹரி தனது நாராயணாசிரமஞ்சென்று அங்குயோக நித்திரையையடைந்ததும், பிறகு பூமிதேவியுடன் கூட பிர்மா முதலியோர் நாராயணாசிரமத்தின் குஹாத்துவாரத்தின் வாயிலிருந்து துதித்ததும், அதைக்கேட்டு ஸ்ரீ ஹரி எழுந்திருந்து வந்ததும். |
| 55 | 248 | பிர்மா பூமிதேவியின் பாரத்தைக் குறைப்பதைப்பற்றி ஸ்ரீ ஹரியினிடம் தெரிவிப்பதும் சகலருங்கூடி வைராஜமென்ற சபையில் கூடுவதும பூதேவி ஸ்ரீ ஹரியினிடம் தன் துன்பத்தை விண்ணப்பஞ் செய்துகொள்வதும், பிறகு தேவர்களையெல்லாம் பூவுலகில் தம தமசங்கொண்டவதரிக்கக்கட்டளையிடுவதும், சந்தனுராஜனுடைய பூர்வ சரித்திரமும். |
| 58 | | நாரதனெழுந்து ஸ்ரீ ஹரியினிடம் இராமாவதாரகாலத்தில் சத்துருக்கினன் இலவணாசுரனைக்கொன்ற கதையைக்கூறினதும், கம்ஸாதிகளுடைய வுற்பத்தியைக் கூறியதும், அவைகளையெல்லாம் ஸ்ரீ ஹரிதாம் அங்கீகரித்தருளியதும். |
| 59 | 270 | நான்முகனை நோக்கிப்பகவான் தாமவதரிக்கத்தக்க விடமேதென்று வினவியதும், வசுதேவனைக் குறிப்பிட்டு அவர் தெரிவித்ததும், அதைப்பகவான் ஸம்மதித்ததும், பிறகு தேவர்களையும் பிர்மாவையும் அவரவரிடம் செல்லவிடையளித்ததும், தாம் வசுதேவனது குலத்தில் திருவுள்ளத்தைச் செலுத்தியருளியதும். |


27 JUN 1910 ... MADRAS

ஸ்ரீரஸ்து:

# ஸ்ரீ ஹரிவம்சம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணஞ் சதுர்புஜம்,
பிரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே.
வியாஸம் வஸிஷ்ட நப்தாரம் சக்தே: பௌத்ரமகல்மஷம்,
பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம்.
வியாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே,
நமோவை பிர்மநிதயே வாஸிஷ்டாய நமோநம.

ஸ்ரீமன் நாராயணனையும், அவரது அமிசர்களாய் அவதரித்துப் பாரத கதைக்கு நாயகர்களாயிருக்கும் கிருஷ்ணார்ஜுனர்களையும், வாக்குக்குத் தேவதையாகின்ற ஸரஸ்வதிதேவியையும், பாரதத்துக்குக்கர்த்தாவாகிய வேதவியாஸரையும் வணங்கி அதன்பிறகு ஜயமென்று பெயரையுடைய மகாபாரதத்தின் ஈற்றில் கிலமாய்ச்சொல்லப்பட்ட ஸ்ரீ ஹரிவம்சமென்றநூலை உரைக்கின்றேன். (இது சூதபுராணிகரதுவாழ்த்து.) [க]

எல்லாவற்றிற்கும் முந்தினவராயும், சரீரியாயும், நியாமகருமும், யாகத்தினவிஸ்ஸால் ஓமஞ்செய்யப்பட்டவராயும், வேதமந்திரங்களாற்றுதிக்கப்பட்டவராயும், ஸத்தியஸ்வரூபியாயும், ஓங்காரரூபியாயும், குணங்களாலும் தன்மையாலும் மேன்மையுடையவராயும், யோகிகளுக்கு வியக்தராயும், அக்ஞானிகளுக்கு அறியப்படாதவராயும், என்றுமுள்ளவராயும், ஜடமாம் சேதனமாயுமுள்ள இவ்வுலகத்தைக்காட்டிலும் வேறுபட்டவராயும், ...ம் என்றும் அபரமென்று இருவகைப்பட்டபிரகிருதிகளுக்கும் தாண்

பவராயும், நீடித்தபரிசுத்தராயும், அழிவற்றவராயும், நல்வரங்களைக்கொடுக்கின்றவராயும், மங்களஸ்வரூபியாயும், எங்கும்நிறைந்தவராயும் அடையத்தக்கவராயும், பாபமற்றவராயும், சுத்தராயும், சராசரங்களுக்கு குருவாயும், இந்திரியங்களுக்குப்பதியாயுமுள்ள ஸ்ரீஹரியை நமஸ்கரித்து; நைமிசாரண்ணியத்தில்வசிக்கும் தருமபுத்தியுள்ளவரும், எல்லா நூல்களிலும்தேர்ச்சியுடையவரும், ரிஷிகுலங்களுக்கு அதிபதியுமான சௌனகர் என்றமகருஷியானவர், சூதபுராணிகரது மைந்தனான சௌதியென்பவரை வருமாறு வினவினார்.

**சௌனகர் கூறுவது:**—ஓ சௌதியென்பவரே! பரதன் மரபிலுதித்த பாண்டவ கௌரவர்களுடையவும், மற்றுள்ளவெல்லாவரசர்களுடையவும், தேவர்களுடையவும், அசுரர்களுடையவும், கந்தருவர் உரகர் இராக்கதர்களுடையவும், தைத்தியர்களுடையவும், சித்தர்களுடையவும், குஹ்யகர் என்றதேவர் சம்பந்தமுள்ள மற்றவருடையவும் பெருமைபெற்ற சரித்திரமானது தம்மால் நன்றாய்க்கூறப்பட்டது. அவ்விதமே மிகவும் வியக்கத்தக்கவைகளான அவரது தொழில்களும், பராக்கிரமங்களும், அநேகந்தரும நிச்சயங்களும், ஆச்சரியகரமானகதைகளும், யோனி சம்பந்தமில்லாத சிலரின் சிறந்தவுற்பத்தியும், புண்ணியகரமாயும் பழைமையாயுமுள்ள வனேகஞ்சரித்திரமும், சிறந்தவாக்கினால் செவிகளுக்கும் மனதிற்குமின்பகரமாகவும், அமுதத்திற்கொப்பாகவும் தம்மால் சொல்லப்பட்டது. ஓ உரோமஹருஷணன் மகனான சௌதியே! அவைகளில் குருமகாராஜனுடைய வமிசத்திலுதித்த குருக்களுடைய உற்பத்தி மாத்திரம் உம்மாற் கூறப்பட்டது. விருஷ்ணி அந்தகர் என்றவர்களின் வமிசக்கிரமமோ தம்மால் கூறப்படவில்லையாகையால் அவைகளைத்தாமிப்பொழுது கூறுவதற்குத்தகுந்தவராயிருக்கின்றீர்.

**சௌதி சொல்வது:**— ஜனமேஜய மஹாராஜனால் வினவப்பட்டவரும் புத்திமானான ஸ்ரீவேதவியாசரது சிஷியனும், தருமமறிந்தவருமான ஸ்ரீ. வைசம்பாயனர் என்றருஷி, அவ்விருஷ்ணி முதலானோருடைய யாதொருவம்சத்தை விரிவாக முன்பு எவ்வித முரைத்தாரோ, அதையும்மக்கு நான் ஆதிமுதல் நன்றாய்க்கூறுகின்றேன். அதாவது;—பாரதவமிசத்திலுதித்த மகாபுத்திமானான அந்த ஜனமேஜய மஹாராஜன் பாரதர்களுடைய சரித்திரம் முழுமையும் கேட்டபின் வைசம்பாயனரை வருமாறு வினவுகின்றார். ஜனமேஜயன் சொல்வது:—தம்மிடமிருந்து நல்லபொருளோடு கூடியதாயும், வேதார்த்த விஸ்தாரமாயும் விளங்கும் மஹாபாரதமென்ற இதிகாசமானது முதலில் விஸ்தாரமாக என்னால் கேட்கப்-



பட்டது. அக்கதையினிடையில் பெயர்களாலும் தொழில்களாலும் பிரசித்திபெற்ற மஹாரதிகர்களான விருஷ்ணி அந்தகர் என்றவனேகம் சூரர்களும் நரோத்தமர்களும் கூறப்பட்டார்களல்லவா அவர்களுடைய உத்தமமான வனேககாரியங்களும் ஓ பிராம்மணோத்தமரே உம்மால் அங்கங்கு சுருக்கமாகவே கூறப்பட்டனவேயொழிய விஸ்தாரமாகக்கூறப்படவில்லை. ஓ! கல்விப்பொருளிற் சிறந்த பிரபுவே தம்மால் சொல்லிக்கொண்டு வரப்பட்ட புராதனக்கதையில் எனக்கு இன்னமும் பூரணமான திருப்தியுண்டாகவில்லை. ஏனெனில் விருஷ்ணிகள் என்றவரும் அவ்விதமே பாண்டவரும் ஒரே இனத்தாரென்பது என் கொள்கை. தாமோ ஒவ்வொரு வமிசத்தையும் நன்றாயறிந்தவர். அன்றியும் அவர்களை நேரிலேயே கண்டவர். ஆதையால் ஓ தபோதனரே! அவ்விருஷ்ணிகளுடைய குலத்தைப்பற்றியும் விஸ்தாரமாகக்கூறவேண்டும். மேலும் எந்தெந்த வம்சத்தில் எவரெவர் என்பதை நன்றாயறிவதற்கு நான் விரும்புகிறேன். அதுபற்றி ஓ மஹருஷியே! அவ்விதம் பிரத்தியக்ஷமாகக்கண்ட நீர் எல்லாவற்றையும் முழுமையும் எனக்குச்சொல்வதுடன் அவர்களுடைய வமிசத்திற்கு மூலகர்த்தாவாகிய பிரமாமுதல் சகல சிருஷ்டியையும் நன்றாய்க்கவனித்துக்கூறவேண்டும். இவ்விதம் ஆதரித்துக்கேட்கப்பட்ட மகாதபஸ்வியும் விசாலமான புத்தியையுமுடைய வைசம்பாயனர் என்றவர் விஸ்தாரமாகவும் ஆதிமுதற்கொண்டு அவ்விருஷ்ணி முதலியோருடைய வமிச சரித்திரத்தைக்கூறலுற்றார். ஓ ஜநமேஜயராஜனே தேவசம்பந்த முள்ளதும் புண்ணியத்தைக்கொடுக்கத்தகுந்ததும்பாபங்களைப்போக்கத்திறமையுள்ளதும் ஆச்சரியகரமானதும் சிறந்தபொருள்களையுடையதும் வேதத்தோடொக்கத்தக்கதுமான அக்கதையை நான்சொல்லுகின்றேன்கேளும். மேலும் இக்கதையை எவன் கேட்கின்றானோ அல்லது முகப்பாடமாகத்தரிக்கின்றானோ அவன் தனதிஷ்டபிரகாரம் தன்வமிசங்களைத்தழைப்பித்தப்பிறகு மேலுலகத்திலும் பெருமையையடைகின்றான். ஓ அன்பனே! எது புலன்களுக்குத் தட்டாததோ, எது எல்லாவற்றிற்கும் காரணமாகவும் அழிவற்றதாகவும் சராசரங்களைத் தனக்குச்சரீரமாகவுடையதாகவுமிருக்கின்றதோ; அப்படிப்பட்ட அவ்யக்தமென்றகாரணத்தினின்றும் புருஷனாகிய ஸர்வத்திற்கும் நியாமகனான பிரபுமுதலில் பிரகிருதியைப்படைத்தான். அப்பிரகிருதியினின்றும் மஹத் என்றதுண்டாயிற்று. அந்த மஹத்து என்பதையே ஓ மஹாராஜனே அளவற்றவொளியையுடைய பிரமாவாக அறியும். அப்பிரமாவே எல்லாவற்றிற்கும் சிருஷ்டிகர்த்தாவாகவும் காரணனாகத்தனக்கு ஜீவனமாகவுடையராகவும் விளங்குகின்றார். அம்மஹத்து என்றதினின்று

அஹங்காரமென்பதும், இதினின்று ஐம்பூதங்களுமுண்டாயின. அப்பூதங்களினின்று மொன்றுக்கொன்றுள்ள சேர்க்கையினியற்கையால் பலவிதமான படைப்புகளுண்டாயின. இஃதே சனாதனமான சிருஷ்டி. விஸ்தாரமான சிருஷ்டியின் கிரமங்களை நான் கேட்டபடியும் என்புத்திக்கெட்டியவளவும் சொல்லுகின்றேன் கேள். கீர்த்திபெற்ற அப்பெரியோர்களின் கதையானது, நிலையான கீர்த்தியுள்ள எல்லாப்புண்ணியவான்களுக்குங்கூடக் கீர்த்தியைப்பெருக்கத்தக்கதாயும், தனத்தைக்கொடுக்கத்தகுந்ததாயும், சத்துருக்களையழிக்கத்தக்கதாயும், சுவர்க்கவுலகத்தைத்தரவல்லமையுள்ளதாயும், ஆயுளை விருத்திசெய்விப்பதாயுமாகின்றது. ஆகையால் எப்பெரியோரது சரித்திரம் ஸகலபயன்களைக்கொடுக்கத்தகுந்ததும் பரிசுத்தத்திற்கும் பரிசுத்தத்தையளிக்கதகுந்ததுமாயிருக்கின்றதோ, அந்த ஹரிவம்சம் வரையிலுள்ள உத்தமமான சிருஷ்டிக்கிரமத்தைச் சொல்லுகின்றேன்.

பிறகு சுயம்புவான பகவானானவர் நானாவிதமானப் பிரஜைகளைப் படைக்கவேண்டுமென்ற எண்ணமுடையவராய் முதலில் நீரையே படைத்தார். அதனுள் அப்பகவான் தனது வீரியமென்ற இவ்வுலக பீஜத்தை விதைத்தார். இந்நீரே நாரமெனப்படும். நாரமாவது நரசுதர்களெனப்படும். அந்நீரே முதலில் அப்பகவானுக்கு வாஸஸ்தானம். ஆகையால் அப்பகவான் நாராயணனெனப்படுவன். விதைக்கப்பட்ட அவ்வீரியமானது கநகநிறமாக ஓரண்டம்போல லங்கீரி யுற்பத்தியாயிற்று. அவ்வண்டத்தினின்றும் சுயம்புவென்ற பிர்மாவானவர் உதித்தாரென நாம் கேட்டிருக்கின்றோம். பகவானான அவ்விரண்ணியகர்ப்பன் அவ்வண்டத்தினுள் ஒருவருஷம் மட்டில் வசித்திருந்து அம்முட்டையைக் கீழும் மேலுமாக விரண்டு துண்டுகளாக்கினர். மேற்றுண்டே சுவர்க்கம். கீழ்ப்பாகமே பூலோகம். இவ்விரண்டிற்கும் நடுவில்பிரபுவானவராகாயத்தைப்படைத்தார். மேலும் நீரில் மிதக்குமிப்பூமியையும் பத்துத்திசைகளையும் படைத்தார். (திக்குக்களாவது திக்குக்களை நிச்சயிக்கத்தக்க சூரியனைப்படைத்தாரெனக்கொள்க) மேலும் அப்புவிமுதலியவிடங்களில் காலம், மனம், வாக்கு, காமம், குரோதம், இரதி என்பவைகளையும், அதற்கிணங்கிய மற்றுள்ளபடைப்பையும்தன்மனதாலேயே மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், கிரது, வசிஷ்டர் என்ற எழுருஷிகளையும்படைத்து அவர்களைப் பிரஜைகளைப்படைக்கும் வல்லமையுடையோராகவும், மிக வொளியையுடைய அவ்விரண்ணிய கர்ப்பனென்ற பிர்மாவானவர் படைத்தனர். நாராயணனிடமே மனமுள்ள இவ்வெழுவரும் ஸப்தப்பிர்மாக்கள்.



அல்லது பிரஜாதிபதிகளெனப்புராணங்களில் நிர்மாணம் பெற்றவர்கள். பிறகு அப்பிர்மாவானவர் ரோஷஸ்வபாவத்தாலுதிக்கப்பட்ட உருத்திரனைப்படைத்தார். இவ்வனைவருக்கும் முந்தி ஸநத்குமாரனென்ற சிறந்த ஞானியையும் பிர்மா படைத்திருக்கின்றார். ஓ ஜனமேஜயனே இந்த ஸப்தப்பிரஜாபதிகளும் உருத்திரனுமே அனேகம் பிரஜைகளைப்படைத்தனர். ஸநத்குமாரரோ மனத்தையடக்கிக்கொண்டு தனது பிரபாவத்தை வெளியிடவில்லை. அவரோடுகூடிய ஸநத்தனென்ற ஞானியு மவ்விதமேயிருந்துவிட்டார். அவ்வெழு பிர்மாக்களின் பெரிய வம்சங்களும் மாசற்று விளங்கும் தேவகணத்தோடுகூடியவைகளாகவும், நல்வினைகளைச் செய்கின்றவைகளாகவும் மிகுந்த பிரஜைகளையுடையவைகளாகவும், மகரிஷிகளால் விளங்கப்பட்டவைகளாகவும் பெருகின. பிறகு மின்னல்களையும் இடியையும், மேகங்களையும், வானவிற்களையும், பக்ஷிகளையும் முதன் முதலில் படைத்து அதன்மேல்ருக்குக்களையும், யஜுஸ்ஸுக்களையும், ஸாமங்களையும், யாகத்தின் சித்திக்காகப்படைத்தனர். இவைகளைக்கொண்டு சித்தியில்லாத சாத்தியர்கள் சித்திபெற்றதேவர்களைத் துதித்து எப்பொழுதும் வழிப்பட்டனரெனக் கேட்டிருக்கின்றோம். அன்றியும் பகவான் தனது முகத்தினின்றும் வேதங்களையும், மார்பினின்று பிதுருக்களையும், ஆண்குறியினின்றும் மனிதர்களையும், ஜகனத்தினின்று அசுரர்களையும், வாயினின்று சாத்தியர்களையும் படைத்ததாக கேழ்விப்பட்டிருக்கின்றோம். உயர்ந்த அனேகம்பிராணிகள் அப்பகவானுடைய தேகங்களின்றுமுண்டாயின. நீரிலுண்டானவரும்பிரஜைகளைப்படைப்பவருமாகிய ஆபவரென்ற அப்பிர்மாவிற்கு தன்னாற்படைக்கப்பட்ட பிரஜைகளெப்பொழுது விருத்தியடையவில்லையோ அப்பொழுது தாம் தம்தேகத்தையிரண்டுபிரிவாக்கி ஒருபாதியால் புருஷனாகவும் மற்றோர்பாதியால் பெண்ணாகவுமானார். பிறகு அந்த பெண்பாதியில் பலவிதமான பிரஜைகளைப்படைத்தார். அவைகளே அவரது மகிமையால் ஆகாயத்தையும் பூமியையும் நிறைத்துப்பரவியிருக்கின்றன. விஷ்ணுவானவர் இரண்ணியகர்ப்பன் மூலமாக விராட்டைப்படைக்க அவ்விராட்டும் புருஷனைப்படைத்தது. அப்புருஷனை மனுவென வறிவாய். அதேமனுவந்தரமெனப்படும். இது ஆபவரென்றபிர்மாவின் இரண்டாவது மனுவந்தரமெனக் கூறப்படுகின்றது. விராட்டினின்று முதித்தப்பிரபுவான மனுபுருஷன் பிரஜைகளின் சிருஷ்டியைச்செய்தனன் அது நாராயணனுடைய படைப்பு. அப்பிரஜைகள் யோநிஸம்பந்தமில்லாதவர்களே. ஆதிசிருஷ்டியாகிய இவ்வத்தியாயக்கதையை எந்தமனிதன் அறிகின்றானோ அவன் நீடித்தவாயுளையுடையவனாகவும், கீர்த்தியையுடை

யனாகவும், ஞானத்தையுடையவனாகவும், பிரஜைகளையுடையவனாகவும், நிலைத்த தனது யசஸையுடையவனாகவும் ஆவான். மேலும் இந்தத்தேகத்தை யிழந்த பின்பு ஸ்வர்க்கலோகத்தையு மடைவான். அப்படியே அவன் இஷ்டப்பட்ட கதியையடைவான்.

இவ்விதம் ஸ்ரீ மகாபாரதத்தின்
கிலபருவமாகிய ஹரிவம்சத்தில், ஹரிவம்ச
மென்ற முதலாவது உப்பருவத்தில்
க-வது அத்தியாயம்.
ஸம்பூர்ணம்.

---

வைசம்பாயனர் கூறுகின்றார்; இவ்விதமாகப்பிரஜைகள் சிருஷ்டிக்கப்பட்ட பொழுது ஆபவனென்ற பிர்மாவானவர் சதரூபையென்பவளைப் படைத்தார். மனதாற்படைக்கப்பட்ட அச்சதரூபையை மனுபுருஷன் மணம்புரிந்துகொண்டான். மேலுலகத்தையெல்லாம் வியாபித்திருக்கும் அப்பிர்மாவின் மகிமையால் மேற்கூறப்பட்ட சதரூபையென்பவள் தருமத்துடன்பிறந்தாள். அவளோ பதினாயிரம் வருஷங்கள்வரையில் மிகவுங்கடுமையான தவம்புரிந்து தவத்தால் விளங்கப்பட்ட மனுபுருஷனைப்பர்த்தாவாக வடைந்தாள். அவரே சுவாயம்புவ மனுபுருஷனென்று கூறப்படுவர். எழுபத்தியோராயிரம்யுககாலங்கள் அந்தமனுவினுடைய கால மெனக்கூறப்படுகின்றது. இதற்கு சுவாயம்புவமனுவந்தரமெனப்பெயர். இந்தசுவாயம்புவமனுவினிடத்தினின்றும் சதரூபை என்பவள், வீரன் என்பவனைப்பெற்றாள். இவ்வீரனிடமிருந்து காம்யை என்பவள் பிரியவிருதன், உத்தானபாதன் என்ற இருவரைப்பெற்றாள். சிறந்ததோள்களையுடைய ஜனமேஜயராஜனே கேள்; மற்றோர் காம்யையென்பவள் கர்த்தமப்பிரஜாபதியின்மகள். அக்காம்யை என்பவள் பிரியவிருதனையடைந்து ஸம்ராட், குக்ஷி, விராட், பிரபுவென நான்கு குமாரர்களைப்பெற்றாள். அத்திரிப்பிரஜாபதியென்பவர் உத்தான பாதனென்பவனைப்புத்திரனாக வங்கீகரித்தார். அவ்வுத்தானபாதனிடமிருந்து ஸூநிருதை என்பவள் நான்குமைந்தர்களையீன்றாள். சிறந்த இடையையுடைய இந்த ஸூநிருதை என்பவள் தருமனுடைய அசுவமேதயாகத்தினால் உற்பத்தியானவளெனப் பிரசித்திபெற்றவள். இவள் தான் துருவனுக்கு மாதாவாகப்போகின்ற மங்களரூபிணீ. சிறிதுகாலஞ்சென்றபின்பு உத்தானபாதனெனபவன் ஸூநிருதையிடம் துருவன், கீர்த்திமான், சிவன், சாந்தன், அயஸ்பதி என்ற ஐவரைப்பெற்றான். ஓ ஜனமேஜய மஹாராஜனே! அவருள் துருவனென்பவன் சிறந்த பெருங்கீர்த்தியை விரும்பி மூவாயிரம் தேவ வருஷங்களால் கடு



மையான தவத்தைச்செய்தான். பிறகு அந்தத்துருவனுக்கு ஸப்தரிஷிகளுக்கு முன்பு அழிவற்றதும் நிகரற்றவுத்தமமுமான ஸ்தானத்தை இப்புவியில் தவத்தால் பிரீதியடையப்பட்ட பிர்மாவானவர் வரப்பிரதானமாகக்கொடுத்தனர். அப்படிப்பட்டவனுடைய மிகுந்த பெருக்கையும் பெருமையையும் பார்த்து முன்பொருக்கால், தேவாசுரரிருவருக்கு மாசாரியரான சுக்கிராசாரியர் ஒருமாறு ஓர் சுலோகத்தைப்பாடினர். அதாவது; "யாதொரு இந்த துருவனை முன்னிட்டுக்கொண்டு ஸப்தருஷிகளும் விளங்குகின்றனரோ, அந்தத்துருவனுடைய தவத்தின் வீரியமே வீரியம், அவனுடைய படிப்பே படிப்பு, அவனது மனோபலமே பலம்" என்பதாம். அந்தத்துருவனிடத்தினின்றும் முதலில் சிலிஷ்டி, பவியன் என்றிருவரும், பிறகு சம்பு என்றவனுமுண்டானார்கள். அந்த சிலிஷ்டியிடத்தினின்றும் ஸுச்சாயையென்பவள் ரிபு, ரிபுஞ்ஜயன், புண்ணியன், விருகலன், விருகதேஜஸ், என்ற ஐந்து மைந்தர்களைப்பெற்றாள். ரிபுவினிடமிருந்து பிரஹதி என்பவள் நல்லவடிவையுடைய சாக்ஷுஷன் என்பவனைப்பெற்றாள். சாக்ஷுஷனென்பவன் வீரணப்பிரஜாபதியின் மகளான புஷ்கரிணீயென்றவளிடம் மனு என்பவனைப்பெற்றான். மனுவினிடமிருந்து நட்வலை என்பவளிடம் பெருமையையுடைய பத்து குமாரர்கள் ஜனித்தார்கள். அவர்களாவர். ஊரு, பூரு, சதத்யும்னன், தபஸ்வீ, ஸத்தியவான், கவி, அக்னிஷ்டுத்து, அதிராத்திரன், ஸுத்யும்னன், அபிமன்யு என்பவர். ஊருவினிடமிருந்து ஆக்னேயீ என்பவள் அங்கன், ஸுமனஸ், கியாதி, கிரது, அங்கிரஸ், கயன், என்ற ஆறுகுமாரர்களைப்பெற்றாள். அங்கனிடமிருந்து சுநீதையென்பவள் வேனனென்ற குழந்தையைப்பெற்றாள். இந்தவேனனுடைய இராஜ்யவிரோதமான வபராதத்தால் உலகத்தில் பெருத்த கலகமுண்டாயிற்று. பிறகு ருஷிகளெல்லோரும் கூடி அவ்வேனனைக்கொன்று அவனது வலதுகையிற்கடைந்தார்கள். இவ்விதம் ருஷிகளால் வேனனது கரதலம் கடையப்பட்டபொழுது அதினின்றும்பிருதுஎன்பவன் உற்பத்தியானான். அவனைக்கண்ட மகருஷிகள் மிகவும் சிலாகித்து இவன் பிரஜைகளைச் சந்தோஷப்படுத்துவானென்றும்பெருங்கீர்த்தியையடைவானென்றும் புகழ்ந்தனர். வில்லோடும் கவசத்தோடும் கத்தியோடுங்கூடிய அந்த வேனபுத்திரனை பிருது என்பவன் தனது பராக்கிரமத்தால் இவ்வுலகத்தைக் கொளுத்துபவன் போல விளங்கினனும், க்ஷத்திரியஜாதிக்கு முதல்வனாக இவ்வுலகத்தைக்காப்பாற்றினான். இவன் இராஜசூயத்தில் அபிஷேகஞ்செய்யப்பட்டவருள் முதன்மையான சக்கிரவர்த்தி. அவனிடமிருந்து அதிநிபுணர்களான சூதன், மாகதனென்ற இருவர்கள் உண்டா

னர். (இவர் இராஜாக்களுக்குமுன்பின்பக்கங்களிலிருந்துகொண்டு அவரது பெருமையைப்பாடும் பாடகர்கள்.) ஓ பாரதராஜனே கேள்; அப்பிருது மஹாராஜனால் இப்பூமியினின்று பவித்ரமான பயிர்கள் கறக்கப்பட்டன. பிரஜைகளுடைய பிழைப்பைக்கருதி ருஷிகளுடன் கூடியதேவர்களாலும், பித்ருதேவர்களாலும், அசுரர்களாலும், கந்தருவர்களாலும், அப்ஸரஸ்ஸுக்களின் கூட்டங்களாலும், ஸர்ப்பங்களாலும், இயக்கர்களாலும், கொடிகளாலும், மலைகளாலும், அவரவர்களுக்குள்ள பாத்திரங்களில் கறக்கப்பட்ட பூமியானது அவரவரிஷ்டப்படிக்குவேண்டிய பாலைக்கொடுத்தது. அப்பாலால் அவர்கள் பிராணன்களைத்தரித்தனர். அப்பிருது சக்ரவர்த்திக்கு அந்தர்த்தி, பாலிதன் என இருவர் பிறந்தார்கள். அந்தர்த்தி என்பவனிடமிருந்து சிகண்டினீ என்பவள் ஹவிர்த்தானனென்பவனைப்பெற்றாள். ஹவிர்த்தானனிடமிருந்து ஆக்னேயீ என்பவள் ஆறு குமாரர்களைப்பெற்றாள். அவர்களாரெனில்:—பிராசீனபர்ஹிஸ், சுக்கிலன், கயன், கிருஷ்ணன், விருஜன், அஜினன் என்பவராம். திரிகாலஞ்ஞானியான பிராசீனபர்ஹிஸ்என்றவர் பிரஜைகளுக்கெல்லாம் சிறந்த லோகபதியாயிருந்து ஹவிர்த்தான ராஜனிடமிருந்து தனக்குக்கிடைத்த இராஜ்யத்தைச்செம்மையாய் விருத்திசெய்தார். இவருக்குப் பிருதுவீ என்பவளிடம் பிராசீனாக்கிரங்களான குசங்களுண்டாயின. பிறகும் பிராசீனபர்ஹிஸ் என்பவர் ஸமுத்திரனதுமகளான ஸவர்ணை என்பவளை மணம் புரிந்தார். அந்த ஸவர்ணையென்பவள் பிராச்சீன பர்ஹிஸ்ஸினிடமிருந்து பத்து மைந்தர்களைப்பெற்றாள். அப்பதின்மருக்கும் பிராச்சேதஸ்ஸுக்களெனப்பெயர். இவர்கள் அனைவரும் தனுர்வேதத்திற்கரைகண்டவர், ஒருவருக்கொருவரிணங்கியவர் ஒரே விதமானதொழிலைச்செய்பவர். ஆகையால் பதினாயிரம் வருஷம் வரையில் சமுத்திரத்திற் படுத்திருந்து கடுமையான தவத்தை இப்பதின்மரும் ஒரேமனதாய்ச்செய்துவந்தனர். இவ்விதம் இவர்தவம்புரியும்பொழுது உலகத்தையிரட்சிக்கயாருமில்லாமல் பூமியெல்லாம் மரங்களடர்ந்துகாடாகமாறிப் பிரஜைகள் குறைய ஏற்பட்டன. காற்றுக்கூட வீசவில்லை. மரங்களோ ஆகாயத்தையளாவி உலகத்தையடைத்து விட்டன. பதினாயிரம் வருஷகாலம் யாதொருபிரஜைகளும் சலிக்கக்கூடமுடியவில்லை. தவத்தால் மனவடக்கமுள்ள அப்பிராசேதஸ்ஸுக்கள் பதின்மரும் அதைக்கேட்டுச் சினங்கொண்டு தங்கள் வாயினின்றும் காற்றையும் தீயையுமுண்டுபண்ணினார்கள். அப்பொழுது அக்காற்றானது வீசி உலகத்திலுள்ள மரங்களையெல்லாம் வேரோடுபெயர்த்துத்தள்ளியுமுலர்த்தியும் விட்டது. உடன் அத்தீயானது கொளுத்திச்சாம்பலாக்கிக் கா



களையெல்லாம் அதிகோரமாகப்பாழாக்கி நாசஞ்செய்துவிட்டது. இவ்விதம் மரங்கள் முதலியன பெரும்பாலும் நாசமடைந்து சிறிது மிச்சமாயிருக்கும் சமயத்தில் இவ்வோஷதிகளின் நாசத்தை ஓஷதி ராஜனான சந்திரன் கேட்டு, இப்பிராசேதஸ்ஸுக்களென்ற பதின்மரிடமும் வந்து ஓ! பிராசீனபர்ஹிஸ்ஸின் குமாரர்களான, மஹாராஜாக்களே! கோபத்தையடக்கவேண்டும். விசேஷித்து மரங்களில்லாமல் பூமியானது தங்கள் வாயினின்றுண்டான காற்றால் சூன்னியமாகிவிட்டது. காற்றையும் தீயையும் அடக்கவேண்டும். விருக்ஷங்களுக்கெல்லாம் இரத்தினம் போன்ற இக்கன்னிகை நல்ல நிறமுடையவள், வருங்காலத்தின் தன்மையை யறிந்தே விருக்ஷங்களின் கருப்பத்தில் என்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தவளிவள். மாரிஷையென இவளது பெயர். இப்பெண்ணானவள் ஓ! மகாபாக்கியசாலிகளான பிராசேதஸ்ஸுக்களே! உங்களுக்கு மனவியாகக்கடவள். இவளே சோம வமிசத்தை விருத்தியாக்கத்தக்கவள், உங்களுடைய தபோமஹிமையின் பாதியாலும், என்னுடைய மகிமையின் பாதியாலும் இந்த மாரிஷை யென்பவளிடம் பிரஜாதிபதியானதக்ஷன் என்ற பெயரையுடைய ஓர் புதல்வன் ஜனிக்கப்போகின்றான். யாதொரு அக்னிக்கு சமமான சத்தமுடைய அத்தக்ஷன்என்பவன், உங்களது தபோசக்தியால் பெரும் பாலும்கொளுத்தப்பட்ட இவ்வுலகத்தில் மறுபடியும் பிரஜைகளை விருத்திசெய்யப்போகின்றானே. பிறகு அச்சோமனது வாக்கினால் அப்பிராசேதஸ்ஸுக்கள் பதின்மரும் கோபத்தை யடக்கிக்கொண்டு, விருக்ஷங்களிடமிருந்து மாரிஷை என்ற அப்பெண்ணை தருமவழியோடு அங்கீகரித்துக்கொண்டனர். பின்பு அம்மாரிஷை என்பவளிடம் அப்பத்துப் பிராசேதஸ்ஸுக்களும் தங்கள் மனதால் கருப்பத்தை வைத்தனர். அதிலிருந்து சோமனது அமிசத்தோடு மிகவொளி பொருந்திய தக்ஷன் என்பவர் பிறந்தார். பிறகு அத்தக்ஷரும், சோமனது வமிசத்தை விருத்தி செய்யத்தகுந்த மைந்தர்களாகிய ஸ்தாவரங்களையும், ஜங்கமங்களையும், இருகாலிகளையும், நாற்காலி விலங்குகளையும் படைத்தனர். இவைகளையெல்லாம் அத்தக்ஷர் பார்த்து மறுபடியும் பெண்களைப்படைத்தார். அப்பெண்களுள்பதின்மூன்று பெயர்களைக்கசியபர் என்றவருக்குக்கொடுத்தார். மிச்சமுள்ள பெண்களைச் சோமனுக்குக் கொடுத்தார். அப்பெண்களே அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள். முன் கூறிய பதின் மூன்று பெண்களிடமும் பக்ஷிகளும், நாகங்களும், யக்ஷக்களும், தைத்தியர்களும், தானவர்களும், கந்தருவரும், அப்ஸரஸ்ஸுக்களும், மற்றுமனேக சாதியரும் உண்டாயினர். அது முதற்கொண்டே ஓ மஹாராஜனே! பிரஜைகள் ஆண் பெண்ணிருவருமாகிய மிதுனத்

தினின்றே விருத்தியடையத்தலைப்பட்டன. முந்தியவர்களுடைய உற்பத்தியோ எண்ணத்தாலும், பார்வையாலும், தொடுவதாலும், பயன்பட்டு வந்தது.

**ஜனமேஜயன் வினவுவது:**—தேவர், அசுரர், கந்தருவர், உரகர், இராக்ஷஸர் என்பவர்களுடைய உற்பத்தியும், தக்ஷனது உற்பத்தியும் முன்னேயிடத்திற் கூறப்பட்டது. அதில் பிர்மாவின் கட்டைவிரலினின்றும் தக்ஷர் உண்டானாரென்றும், இடது கட்டைவிரலினின்றும் அத்தக்ஷரது மனைவியுண்டானாளென்றும் கூறப்பட்டது. அவ்விதமிருக்க அப்பிர்மா மறுபடியும் பிராசேதஸ்ஸின் தன்மையை எப்படியடைந்தார். சோமனுக்குப்பெண்ணின் வயிற்றிற்பிறந்த தௌஹித்திரனை இத்தக்கனே மறுபடியும் சோமனுக்குப்பெண்கொடுத்ததெப்படி? இது என்னுடைய சந்தேகம். ஓ! அந்தணரே இதைச்செம்மையாய் விளக்கிக்கூறவேண்டும்.

**வைசம்பாயனர் கூறுவது:**—சிருஷ்டியும், சங்காரமும் பஞ்சபூதங்களிடம் எப்பொழுதுமுள்ளவை. ஓ அரசனே! ரிஷிகளும், வித்துவான்களுமிவ்விஷயத்தில் மயங்குவதில்லை. ஏனெனில் கல்பந்தோறும் இந்த தக்ஷன்முதலியோரும் அனேகமாசர்களும் உண்டாவதும், மறுபடி நாசமடைவதும் இயற்கை. அறிஞரிவ்விஷயத்தில் மயங்கார். அன்றியும் மூத்த இளையது என்றபேதமும் இவர்களுக்குள் முன்பு கிடையா. ஓ ஜனமேஜயனே! முன்பு மகிமையும், தவமுமே பெருந்தன்மைக்கும் சிறுதன்மைக்கும் காரணம். தக்ஷரது சராசரரூபமான இச்சிருஷ்டிகதையை எவர் அறிகின்றாரோ, அவர் பெற்றுப்பெருகி நீடியவாயுளுடன் வாழ்ந்து முடிவில் சுவர்க்கலோகத்திலும் மகிமையுடன் வாழ்வார்.

2வது அத்தியாயம் முற்றிற்று.

## 3வது அத்தியாயம்.

**ஜனமேஜயர் வினவுவது:**—ஓ வைசம்பாயனரே! தேவர்களுடையவும், அசுரருடையவும், கந்தருவ உரக இராட்சஸருடையவும் உற்பத்தியை விஸ்தாரமாகக்கூறவேண்டும்.

**வைசம்பாயனர் கூறுவது;**—ஓ ஜனமேஜயராஜனே! முன்புபிர்மாவினால் பிரஜைகளைப்படைப்பாயென ஏவப்பட்ட தக்ஷர் என்பவர் எவ்விதம் பிரஜைகளைப்படைத்தாரோ அவ்விதத்தைச்சொல்லுகின்றேன் கேள். அப்



பிரபுவான தக்ஷர் முதலில் மனதாலேயேவனேகம் பிராணிகளைப்படைத்தனர். இவ்விதம் ருஷிகளையும், கந்தர்வர்களோடுகூடிய தேவர்களையும் அசுரர்களையும், அரக்கர்களையும், இயக்கர்களையும், பூதங்களையும், பிசாசங்களையும், பக்ஷிகளையும், விலங்குகளையும், ஊர்வனஜந்துக்களையும் மானஸமாய்ப் படைத்தும் இவைகள் விருத்தியடையவில்லை. ஆதலால் ஆலோசனைசெய்து மறுபடியும் பிரஜைகளைப்படைப்பதற்காக ஸ்திரீபுருஷர்களின் சேர்க்கையாகிற மிதுனதருமத்தால் படைப்போமெனக்கருதி வீரணப்பிரஜாபதியின் பெண்ணான அஸிக்னீ என்பவளை விவாஹம் செய்துகொண்டார். இவளோ மிகுந்த தபோவலிமையையும் உலகங்களை வகிக்கத்தக்க வல்லமையையுமுடையவள். ஆகையாலிவளிடத்தில் அந்த தக்ஷப்பிரஜாபதி என்பவரே அனேகம் மைந்தர்களையும், அவரது வீரியமுள்ள ஐந்து மைந்தர்களையும் உற்பத்தி செய்தனர். அப்படிப்பட்ட மஹாபாக்கியசாலிகளாகவும் மேன்மேலும் விருத்திக்கு வரத்தக்கவர்களாயுமுள்ள அத்தக்ஷகுமாரர்களைப்பார்த்து பிரியமாய்ப்பேசும் தேவருஷியான் நாரதமுனிவந்து வருமாறுரைத்தார். அவ்வார்த்தையானது அக்குமாரர்களுடைய நாசத்தின்பொருட்டும், தன்னுடைய சாபத்தின் பொருட்டுமாயிற்று. கசியபர் என்ற பிரஜாபதியானவர் யாதொரு சிறந்தமைந்தனைப்பெற்றாரோ, அவரே மறுபடியும் நாரதமுனியாக தக்ஷருடைய சாபபயத்தினால் தக்ஷனுடைய பெண்ணிடம் ஜனித்தார். மேலும் அன் நாரதனையே மறுபடியும் தக்ஷன் என்பவர் அஸிக்கினியிடம் தானுமோர் தகப்பனைப்போலப்பிறப்பித்தனர்.

இவ்விதம் தேவருஷியான நாரதமுனியின் ஜனனம்பலவிதம். ஆகையால் நாரதமுனியானவர் தக்ஷருடைய புத்திரர்களான ஹரியசுவர்களென்ற ஆயிரம் பெயரையும் உட்புகுந்து பிரியவாதந்தாற்கலக்கி நாசஞ்செய்துவிட்டார். அப்பொழுது மிகுந்த தபோவலிமையையுடைய தக்ஷரானவர் அவ்விதம் நாசமடைந்தபின் மகருஷிகளைமுன்னிட்டுக்கொண்டு அம்முனிவருக்கு முன்பாககாசிபப் பிர்மாவினால்வருமாறுயாசிக்கப்பட்டார். அதாவது:—எனக்காக ஓ தக்ஷரே உமது பெண்ணிடம் ஒருதரம் ஜனிக்கட்டுமென்பதே. ஆனதால் தக்ஷரும் தனது பெண்ணைக் காசியபப்பிர்மாவிற்கு தானம்செய்துகொடுத்தார். அப்பெண்ணிடம் தக்ஷ சாப நிவிருத்திக்காக நாரதமுனியானவர் ஜனித்தார்.

**ஜனமேஜயன் வினவுவது:**—ஓ பிராமணோத்தமரே! மஹருஷியான நாரதமுனிவரால் பிரஜாபதியான தக்ஷருடைய குமாரர்களனைவரும் எப்படிக் கொல்லப்பட்டார்களென்றகதையை கேழ்க்க விரும்புகிறேன்.

வைசம்பாயனர் கூறுவது:—தக்ஷருடையபிள்ளைகளான ஹரியசுவர்களனைவரும் உலகத்தில் பிரஜைகளை விருத்திசெய்யவேண்டுமென்று எண்ணமுடையவர்களாய் ஒன்றுசேர்ந்து புறப்பட்டார்கள். அவர்களைப்பார்த்து நாரதமுனி கூறுகின்றார். ஓ தக்ஷபுத்திரர்களே நீங்கள் சிறு குழந்தைகள். ஆகையால் இப்பூவுலகின் அளவையறியமாட்டீர்கள். பிரசேதஸ்ஸுக்களின் வமிசத்திலுதித்த உங்களுக்குப்படைப்பு அரிதன்று. ஆகிலும் இப்பூவுலகின் உள்வெளி நீளமகலம் இவ்வளவுதானென்றறிந்துகொண்டதன் பின் அதில் நின்றத்துப்படையுங்கள். இவ்வார்த்தைகளைக்கேட்ட அத்தக்ஷகுமாரர்களும் நானாதிக்குகளுக்கும் அதனளவைக் காண்பதற்காகப்புறப்பட்டார்கள். அவ்விதம் சென்ற அவ்வனைவரும் அங்குமிங்குமலைந்து முடிவில் மூச்சுவிடமாட்டாமல் மாண்டுபோனார்கள். ஆகையாலிதுவரையிலுமின்னும் சமுத்திரத்திற் சென்ற ஆறுகள்போல் மீண்டுவரவில்லை. இவ்விதம் ஹரியசுவர்கள் முழுமையும் நாசமடைந்தபொழுது பிரசேதஸ்ஸின் குமாரனை தக்ஷப்பிரஜாபதியானவர், மறுபடியும் வீரணனது மகளான அவ்வஸிக்னியிடமே மற்றுமாயிரம் மக்களைப்பெற்றார். உலகத்தை விருத்தி பண்ணுவதற்காகப்பெறப்பட்ட இவர்களுக்கு சபளாசுவர் எனப்பெயரிடப்பட்டது. இவர்களும் முன்போலவே ஒன்றுசேர்ந்து பிரஜைகளை விருத்திபண்ணக்கருதி ஆலோசித்தனர். அச்சமயத்திலும் நாரதமுனிவர் வந்து, பூமியின் பிரமாணத்தையறிந்தும், அதையறியப்போன முந்திய பிராதாக்களுடைய கதியையறிந்தும் அதற்குப்பிறகு பிரஜைகளை விருத்தி செய்யுங்களென உரைத்தனர். இதைக்கேட்டுச் சபளாசுவரனைவரும் தம்முள் பூமியளவுடன் பிராதாக்களைத்தேடிப்பிடித்தபின் நிலத்தமனதுடன் படைக்கலாமெனத்தீர்மானித்துக்கொண்டனர். பிறகு அதேவிதமாகபிராதாக்களான ஹரியசுவர்களைத்தேடுவதற்குத்திக்குகள்தோறும் புறப்பட்டனர். இவர்களும் ஸமுத்திரத்திற்கலந்த நதிகளைப்போல இதுவரையிலும் திரும்பவேயில்லை. இவ்விதம் சபளாசுவர்களும் நாசமானபின்பு தக்ஷரானவர்மிகுந்தகோபமுடையவராய், நாரதனைக்சிப்பாயென்றும் பிறகு கருப்பத்தில் வசிப்பாயென்றும் ஓர் வார்த்தை கூறினர் அதுமுதற்கொண்டு ஒருவன் தேசாந்தரஞ்சென்றிருந்தால் அவனைத்தேடிக்கொண்டு அவன் பிராதாசெல்லக்கூடாதெனவும், அப்படிச் சென்றாலிவனும் மீளமாட்டானென்றும் ஆகையால் அறிவுடையோன் பிராதாவைத் தேடிச்செல்லக்கூடாதெனவேற்பட்டது. அவ்விதம் சபளாசுவர்கள் நஷ்டமானதையுமறிந்து மறுபடியும் தக்ஷப்பிரஜாபதியானவர், அவ்வஸிக்னியிடமே ௬0 பெண்களைப்பிறப்பித்தனர் எனக்கேட்டிருக்கின்றோம். அவ்வறுபது பெண்களையும் பிரபுவான காசியபப்பிரஜாபதியானவர் தனக்குமனைவியாகவங்கீகரித்துக்கொண்டனர்.



ஓ! குருவமிசத்திலுதித்தவனே! கேள். சோமனும் தருமனும், மற்றுமுள்ளரிஷிகளுஞ்சேர்ந்து பத்துகன்னிகளைத்தருமனுக்கும்,13 கன்னிகைகளை அக்காசியபருக்கும் தானமாய்க்கொடுத்தனர்.மேலும் 27 கன்னிகைகளை சோமனுக்கும், நான்கு கன்னிகைகளை அரிஷ்டநேமியென்பவருக்கும், இரண்டு கன்னிகைகளைப் பார்க்கவருக்கும், மற்றுமிரண்டு கன்னிகைகளை ஆங்கிரஸ் என்பவருக்கும், வேறிரண்டு கன்னிகைகளை கிருசாசுவர் என்ற வித்துவானுக்கு மீன்றனர். அக்கன்னிகைகளின் பெயர்களாவன—அருந்ததீ, வஸு, யாமீ, லம்பா, பானு, மருத்வதீ, சங்கல்பா, முகூர்த்தா, ஸாத்தியா, விசுவா, என்பனவாம். ஓ! பாரதனே இப்பத்து கன்னிகைகளும் தருமனது மனைவிகள். இவர்களிடமுண்டான சந்தானங்களைக் கேளும். விசுவை யென்பவளுக்கு விசுவேதேவர்களும் ஸாத்தியை என்பவளுக்கு ஸாத்தியர்களென்பவரும், மருத்துவதியினிடம் மருத்துககளும், வஸுவினிடம் வசுக்களும், பானுவினிடம் ஆதித்தியர்களும், முகூர்த்தையினிடம் முகூர்த்தர்களும், லம்பையென்பவளுக்கு கோஷனென்றதும், யாமியினிடம் நாகவீதி யென்றதும், பூமியிலுள்ள சகலமும் அருந்ததியினிடமும், ஸங்கல்பையினிடம் சங்கல்பமென்றதும் உற்பத்தியானார்கள். பின்பு நாகவீதியினிடம் விருஷலம்பை யென்றவன் பிறந்தான். யாதொருவர்களைச்சோமனுக்குப் பாரியைகளாக தக்ஷப்பிரஜாபதி தானஞ்செய்துகொடுத்தனரோ, அவ்வனைவரும் சோதிரூபமாய்27நக்ஷத்திரங்களின் பெயரையுடையவர்கள். நல்ல கீர்த்தியுடையவர்களாயும், சோதியைமுன்னிட்டிருப்பவர்களாயுமுள்ள மற்ற யாதொருதேவர்களான எட்டு வஸுக்களுளரோ, அவர்களுடைய கதையை விஸ்தரித்துக் கூறுகின்றேன். அவர்களாரெனில்:— ஆபன், துருவன், ஸோமன், தரன், அனிலன், அனலன், பிரத்தியூஷன், பிரபாஸன், என்ற எண்மராம். இவர்களுள் ஆபன் என்பவருடைய குமாரர் வைதண்டியன், சிரமன், சாந்தன், முனி என்றவர்கள். துருவனுடைய புத்திரர் பகவான், காலன், உலகப்பிரகாலனன் என்றவர்கள். ஸோமனென்றவருக்கு ஸர்வக்ஞரான வர்ச்சா என்ற ஓர் குமாரன். இக்குமாரனது அருளால் எவரும் வர்ச்சஸ்வியாக ஆவார். தரன் என்பவருடைய புத்திரன் திரவிணன்,ஹுதஹவ்யவஹன், சிசிரன். பிராணன், ரமணன் என்றவர்கள். இவருக்குமனோஹரையென்றவள் மனைவி.அனிலன் என்றவர்க்குச் சிவை என்றவள்பாரியை. இவளிடத்தில் ஜனித்தவன் மனோஜவனென்றவனும்,அவிக்ஞாதகதி என்ற இருவருமாம். அனலன் என்ற அக்னிபகவானுக்கு நாணற் காட்டில் சிறப்புடன் ஓர்

குமாரன் ஜனித்தான். அவருக்குச் சாகன், விசாகன், நைகமேயன், பிரஷ்டஜன் என நான்கு பெயர்களுள. கார்த்திகை நக்ஷத்திரங்கள் இவ்வனலகுமாரனைக் குழந்தையாகவபிமானித்ததால், இவருக்கே கார்த்திகேயனெனவும் பெயர். ஸ்கந்தன், ஸநத்குமாரன் என்றவிருவரும் இவ்வனலனின் நாலிலொருபாகத்தின் ஒளியாற் படைக்கப்பட்டவர். ஆக இவ்வனலனென்ற வசுவிற்கு மூன்று குமாரர்கள். பின்பு பிரத்தியூஷனுக்கு ருஷ்டி, தேவலனென்ன இரண்டு புத்திரர்களுண்டானூர். அவருள் தேவலனுக்கு இரண்டு மைந்தர்கள். இவ்விருவரும் மிகுந்த பொருமையும் தபோவலிமையுமுடையவர்கள். இப்பிரத்தியூஷனென்றவசுவிற்கு பிரகஸ்பதியினுடன் பிறந்தவளான வரஸ்திரீ என்பவள் மனைவி. இவள் பிர்மத்தியானஞ் செய்பவளாய் மிகுந்த யோகசித்திகளைப்பெற்று இவ்வுலகம் முழுமையும் பற்றற்று ஸஞ்சரிப்பவள். பிரபாஸன் என்ற எட்டாவது வசுவிற்கும் அவளே பாரியை. விசுவகர்மா என்ற மஹாபாக்கியவான் அவளிடம் பிறந்தான். இவ்விசுவகர்மா வென்பவனும் பிரஜைகளுக்குப்பதியானுன். யாதொருவன் பலவிதமான சிற்பங்களுக்கும், ஆபரணங்களுக்கும் படைப்பாளியோ, ஸகல தேவதைகளுக்கும் சிறந்த விமானங்களைச்செய்து கொடுத்தவனே, யாதொருவனுடைய சில்பங்களின் லவலேசங்களைக்கொண்டு மனிதஜாதியார் பிழைக்கின்றனரோ, அப்படிப்பட்ட விசுவகர்மா வென்றவனிவனே. இவ்விசுவகருமாவின் மகள் சுரபீ என்றவள். பதிவிருதையான இச்சுரபியென்பவள் காசியபரை யடைந்து அக்காசியபரிடமிருந்து மகாதேவனுடையவருளால் பதினொரு உருத்திரர்களைப்பெற்றுள். அஜன், ஏகபாதன், அஹிர்ப்புத்தினியன், துவஷ்டா, உருத்திரன் என்றவர்கள் சுரபி என்பவளின் புத்திரர்கள். இவருள் துவஷ்டா என்றவனுக்கு அழகு பொருந்திய விசுவருபனென்றவன் பிறந்தான். இவன் மிகுந்த கீர்த்தியுடையவன். உருத்திரர்கள் பதினொருவரின் பெயர்களாவன:—ஹரன், பஹுரூபன், திரியம்பகன், அபராஜிதன், விருஷாகபி, சம்பு, கபர்த்தீ, ரைவதன், மிருகவியாதன், ஸர்ப்பன், கபாலீ என்பனவாம். இவரே மூவுலகங்களுக்குமதிபதிகளான ஏகாதச ருத்திரர்கள். ஓ பாரதனே! இவ்விதம் நூற்றுக்கணக்கான உருத்திரர்களுடைய கூட்டம் உலகங்களையெல்லாம் வியாபித்திருக்கின்றதெனப் புராணத்திற்கூறப்பட்டிருக்கின்றது. ஓ ஜனமேஜயனே! இவ்வுலகங்களிலுள்ள ஸகலப்பிராணிகளும் யாதொருவருடைய சந்ததிகளோ, அந்தக்காசியபருடைய கதையைச்சொல்லுகிறேன்கேள். அதிதி, திதி, தனு, அரிஷ்டை, ஸுரஸை, கசை, ஸுரபி, விநதை, தாமிரை, குரோதவசை, இரா, கத்துரு, முனி என்றவர்



ர்கள் அக்காசியபரது மனைவிகள். அம்மனைவிகளிடமுண்டான குலங்களைச் சொல்லுகின்றேன் கேள். முன் மனுவந்தரத்தில் உத்தமர்களான பன்னிரண்டு தேவதைகள் இருந்தனர். துஷிதர் என்ற அப்பன்னிருவரும் ஒருவர்க்கொருவர் சாக்ஷுஷமனுவின் முடிவான வைவஸ்வத மனுவின் காலத்தில் ஸர்வப்பிராணிகளுடையவு மிதத்திற்காகப்பேசிக்கொண்டதாவது:—"ஓ தேவர்களே சீக்கிரம் வாருங்கள், அதிதியின் கருப்பத்தையடைந்து இந்த வைவஸ்வதமனுவந்தரத்தில் நாமெல்லோரும் ஜனிப்போம், அது நமக்கு க்ஷேமகரமாகும்". என்று சாக்ஷுஷ மனுவின் காலாந்தத்தில் பேசிக்கொண்டு மரீசிபுத்திரனான காசியபரிடம் தக்ஷனது கன்னிகையான அதிதிக்கு ஜனித்தார்கள். அதன் விபரமாவது;—முதலில் விஷ்ணுவுமிந்திரனுமுதித்தனர். மேலும் அரியமா, தாதா, துவஷ்டா, பூஷா, விவஸ்வான், ஸவிதா, மித்திராவருணரென்றவிரட்டையர், அம்சன், பகன், அதிதேஜன், விஷ்ணுவென்ற பன்னிரண்டாதித்தியர்களுற்பவித்தனர். சாக்ஷுஷமனுவின் காலத்தில் துஷிதரெனப்பிறந்த தேவர்களே வைவஸ்வதமனுவந்தரத்தில் துவாதசாதித்தியர்களாகப் பிறந்தார்கள். சந்திரனுக்கு மனைவிகளாகக்கூறப்பட்ட 27- நக்ஷத்திர ரூபிகளுக்கு அநேகம் ஸந்தானங்களுற்பவித்தன. அரிஷ்டநேமி என்பவரின் மனைவிகளுக்குப் பதினறு ஸந்தானங்களுண்டாயின. அனேகம் குழந்தைகளையுடைய அவ்வித்துவானென்றவர்க்கு நான்கு மின்னற்கொடிகள் பிறந்தன. பிரத்தியங்கிரஸ் என்றவர்க்குப் பிறந்த வுத்தமர்களான ருக்குகள், பிர்மருஷிகளால் கொண்டாடப்பட்டுவருகின்றன. கிருசாசுவரென்ற ராஜருஷிக்கும் தேவருக்கும் இக்கூட்டங்களெல்லாம் இதமானவை. இவ்வனைவரும் ஒவ்வொரு மனுவந்தரத்திலு மொவ்வொரு தடவையுண்டாவார்கள். அவ்விதமே முப்பத்தி மூன்று கோடி தேவர்களுடைய உற்பத்தியும் நாசமும் ஒவ்வோர் கல்ப்பாதியிலும் கல்பாந்தத்திலுமுண்டாகும். (இங்கு பிருதுவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், ஆக இவ்வெட்டிற்கு மபிமானிகள் எட்டுவசுக்கள். காலத்திற்கு அபிமானிதேவதைகள் துவாதசாதித்தியர்கள், மழைக்கபிமானியான சந்திரன் ஒன்று, ஜீவர்களுக்கு அபிமானியான பிர்மா ஒருவர், கருமேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, மனம் ஒன்று, ஆக இவைகளுக்கு அபிமானிகளான ஏகாதச ருத்திரர்கள் பதினொன்று. ஆக முப்பத்திமூன்று தேவதைகளே முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கபிமானிகளெனக்கூறப்படுபவர்) ஓ ராஜனே! எப்படிச்சூரியனுதிப்பதும் அஸ்தமனமாவதுமாயிருக்கின்றானே அப்படியே யுகங்களுடைய

உற்பத்தியும் அழிவும் மநுக்களின் ஜனனமும் மற்றுள்ளதேவதைகளின் பிறப்பும் அழிவுமெனத் தெரிந்துகொள்ளவும்.

திதி என்பவளுக்குக்காசிபரிடமிருந்து இரண்டு புத்திரருண்டானார் எனக்கேட்கப்பட்டிருக்கின்றது. அவர்களே ஹிரண்ணியகசிபுவும், வீரியவானான ஹிரண்ணியாக்ஷனுமாம். பிறகு விப்பிரசித்தியின் மனைவியான ஸிம்ஹிகை என்பவளைப்பெற்றாள். இவள் ஸைம்ஹிகேயரென்றநேகம் மைந்தர்களைப்பெற்றாள். இவர் மிகவும் தேகவலிமையையுடையவர்கள். ஒருசமயம் கணக்கிட்டுப்பார்க்கும்பொழுது பதினாயிரம் பெயரென வாகின்றார். அவர்களுடைய புத்திரர்களும் புத்திர சந்ததியாருமநேகம் பெயர்கள். இவ்வளவவ்வளவென்னக் கணக்கிட முடியாதவர்கள். ஓ ஜனமேஜய மகாராஜனே! ஹிரண்ணியகசிபுவினுடைய சந்ததியைக் கேள். ஹிரண்ணியகசிபு என்றவனுக்கு அநுஹ்லாதன், ஹ்லாதன், பிரஹ்லாதன், ஸம்ஹ்லாதன் என்றப் பிரசித்தமானபராக்கிரமமுடைய நான்கு புத்திரர்களுண்டானார்கள். இவருள் ஹ்லாதனென்றவனுக்கு ஹிரதன் என்றவன் பிறந்தான். ஸம்ஹ்லாதன் என்றவனுக்கு ஸுந்தன், நிஸுந்தன் என இருவர் பிறந்தனர். அநுஹ்லாதனுக்கு ஆயுஸ், சிபி, காலனென மூவர் பிறந்தனர். பிரஹ்லாதன் என்றகுமாரனுக்கு விரோசனன் என்றவன் உதித்தான். விரோசனன் மைந்தன்பலியென்றவன். இப்பலிஎன்றவனுக்குப்பாணன்முதலியநூறுமைந்தர்ஜனித்தனர். அவர்களாரெனில்திருதராஷ்டிரன், சூரியன், சந்திரன், இந்திரதாபனன், கும்பநாபன், கர்த்தபாக்ஷன், குக்ஷிமுதலியோராம். இவர்களுக்கெல்லாம்பாணனென்றவன் மூத்தவனாகவும் மிகுந்த தோள்வலிமையுள்ளவனாகவும் பசுபதிக்கு மிகுந்த பிரியனாகவுமிருந்தான். முன்கல்பத்தில் இப்பாணன் என்பவனால் பசுபதி தேவன் நன்றாய் பூஜிக்கப்பட்டு, அப்பூஜையால் பசுபதி சந்தோஷமடைந்து பாணனது பக்கத்திலேயே எப்பொழுதும் நின்றுகாக்கின்றேனெனவரன் பெறப்பட்டது. இப்பாணனுக்கு லோஹிதியென்பவளிடம் இந்திரதமனன் என்றவன் பிறந்தான். ஓ ராஜனே! ஹிரண்ணியாக்ஷனென்றவனுக்கு கூட்டம் கூட்டமாகவும் நூறாயிரக்கணக்காகவுமனேகமசுரர்கள் ஜனித்தார்கள். அவருள் ஜர்ஜரன், சகுனி, பூதஸந்தாபனன், மஹாபராக்கிரமசாலியான மஹாநாபன், காலநாபன், என்றிவர் அறிவிலும் பலத்திலும் பேர்பெற்றவர்கள். அவ்விதமே தநு என்றவளின் நூற்றுக்கணக்கான சந்ததியாரும் கூர்மையான பராக்கிரமம், தவம், சிறந்த வீரியமிவைகளிற் பேர்போனவர்கள். அவர்களுள் முக்கியமான சிலருடைய பெயரைச் சொல்லுகின்றேன் கேள். த்விமூர்த்தா, சகுனி, சங்குசிரன், விபு, சங்குகர்ணன்



விராதன், கர்வேஷ்டி, துந்துபி, அயோமுகன், சம்பரன், கபிலன், வாமனன், மரீசி, மகவான், இரா, சங்குசிரன், விருகன், விக்ஷோபணன், கேது, கேதுவீரியன், சதஹ்ரதன், இந்திரஜித்து, ஸத்தியஜித்து, வஜ்ரநாபன், ஏகசக்கிரன், மஹாபாகு, மகாபலசாலியான தாரகன், வைசுவானரன், புலோமன், வித்திராவணன், மஹாஸுரன், சுவர்பானு, விருஷபருவா, பெருத்தவசுரனான துஹுண்டன், ஸூக்ஷ்மன், நிசந்திரன், ஊர்ணநாபன். மஹாகிரி, அஸிலோமா, கேசி, சடன், பலகோமதன், கமமூர்த்தன், அசுரரிற் சிறந்த கும்பநாபன், பிரமதன், மயன், குபதன், பலசாலியான ஹயக்கிரீவன், வைசிருபன், விரூபாக்ஷன், சுபதன், ஹரன், ஆஹரன், ஹிரண்ணியகசிபு, சதமாயன், சம்பரன், சரபன், சலபன், வீரியமுள்ள விப்பிரசித்தி, இவவனைவரும் காசியபரிடமிருந்து, தநு என்பவளுடைய புத்திரர்களாய்ப் பிறந்தவர்கள். விப்பிரசித்தியை முன்னிட்ட மஹாபலிஷ்டர்களான இவர்கள் தானவர்களெனப்பெயர் பெற்றவர்கள். ஓ! மஹீபாலனே இவர்களுடைய சந்தானங்களை வரிசையாய் இவ்வளவவ்வளவென்னக் கணக்கிடமுடியாது. ஏனெனில் புத்திரரும் பௌத்திரருமளவில்லாத கூட்டத்தார். அவருள் சுவர்பானு என்றவனுக்குப் பிரபை என்றவள் பிறந்தாள். புலோமனுக்கு மூன்று பெண்கள் பிறந்தனர். ஹயக்கிரீவன் மகள் உபதானவீ என்றவள். விருஷபருவாவின் மகள் சர்மிஷ்டை யென்றவள். வைசுவானரனுக்குப் புலோமா, காலிகாவென இரண்டு புத்திரிகள். வீரியமுள்ள இவ்விருவரும் மரீசி என்றவனை யடைந்தநேகம் சந்தானங்களை யுண்டுபண்ணினர். அவையாவன:—அவ்விரு ஸ்திரீகளுக்கும் அறுபதினாயிரம் தானவர்களுண்டானார்கள். இவரல்லாது மேலும் ஆயிரத்துநானூறு தானவர்களை மரீசி யென்பவன் பெருத்ததவத்தோடு கூடியவர்களாகப் பிறப்பித்து அவர்களை ஹிரண்யபுரத்தில் வசிப்பவர்களாக நிலைநிறுத்தினான். புலோமனுக்குப்பிறந்த பௌலோமர்களும், காலகேயர்களும் மிகுந்த தோள்வலிவுள்ள வசுரர்கள் இரண்ணியபுரத்திலேயே வசிக்கு மிவர்கள் தேவர்களாற் கூட ஜயிக்க முடியாதவர்கள். இவ்விதம் பிர்மாவினாற் படைக்கப்பட்ட மஹாபலசாலிகளான இத்தானவர்கள் ஓ அரசனே! உன் பாட்டனான அர்ஜுனனால் யுத்தத்தில் வதிக்கப்பட்டார்கள். பிரபை என்றவளுக்கு நஹுஷனென்றவன் மகன். ஸ்ருஞ்ஜயன் என்றவன் சச்சீ என்றவளின் மகன். சர்மிஷ்டையென்றவள் புரு என்றவனைப் பெற்றாள். உபதானவீ என்றவள் துஷியந்தனைப் பெற்றாள். இவருக்குப் புறம்பான மற்ற தானவர்கள் பெருத்த வீரிய முடையோரும் கொடுமையானவர்களுமாம். அப்பொழுது

ஸிம்ஹிகையினிடம் விப்பிரசித்திக்குற்பத்தியான ஸைம்ஹிகேயர் என்ற பதின்மூன்று அசுரர்கள், திதி வமிசம், தனுவமிசமென்ற விரண்டு வமிசங்களின் சேர்க்கையால் மிகுந்த பராக்கிரம முடையவர்களானார்கள். மேலும் வியம்சன், சல்வியன், நபன், மஹாபலன், வாதாபி, நமுசி, இல்வலன், சுவஸ்ருமன், ஆஞ்ஜிகன், நரகன், காலநாபன், சுகன், போதரணன், வீரியமுள்ள வஜ்ரநாபன், ஸூரியசந்திரர்களைப் பீடிக்கும் இராகு கேது என்பவர், மூகன், துஹுண்டன் என்ற ஹிலாதபுத்திரன், தாடகையினிடம் ஜனித்த மாரீசன் என்ற ஸுந்த புத்திரன், ஸிவமானன், பராக்கிரமமுள்ள ஸுரகல்பன் என்ற இவர்களெல்லாம் தனு வமிசத்தை விருத்தி செய்யப்பட்ட தானவர் என்ற பெருத்த வசுரர்கள். இவர்களுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் நூறாயிரக்கணக்கானவர்கள். ஸம்ஹ்ராதனென்ற தைத்தியனுடைய குலத்தில் நிவாதகவசர் என்ற பெயரையுடைய மஹா பலிஷ்டர்களாயும் ஆத்மஞானமுள்ளவர்களாயுமுள்ள மூன்று கோடியசுரர்கள் மணிமதி யென்றவிடத்தில் வசித்தவர்கள் தேவர்களாலும் வெல்லமுடியாத கொடிய துஷ்டர்களான இவர்கள் அர்ஜுனனால் கொல்லப்பட்டார்கள். தாம்ரை யென்றவளுக்குக் காகீ, உலூகீ, ஸ்யேநீ, பாஸீ, ஸுக்கிரீவீ, சுசி, கிரத்திரீ என்ற மிகுந்த பலத்தையுடைய ஏழு சந்தானங்களுண்டாயின. அவர்களுள் காகீ என்றவள் காக்கைகூட்டங்களையும், உலூகீ என்றவள் கோட்டான் குலங்களையும், ஸ்யேநீ என்றவள் பருந்து ஜாதிகளையும், பாஸீ என்றவள் குருவி ஜாதிகளையும், கிரத்திரீ என்பவள் கழுகு ஜாதியையும், சுசி என்றவள் நீர்ப்பறவைகளையும், ஸுக்கிரீவீ என்றவள் குதிரை, ஒட்டகம், கழுதை என்ற ஜாதிகளையும் உற்பத்தியாக்கினார்கள். ஆகையால் இவர்கள் தாம்ரை வமிசத்தியவரெனப்பெயர் போனவர். விநதை யென்றவளுக்கு அருணன், கருடன் என விரண்டு குமாரர்கள் பிறந்தனர். இவருள் கருடன் என்ற புத்திரன் பறவைகளிற் சிறந்தவனும் தனது தொழிலால் மிகுந்த கொடுமையுள்ளவனுமாம். ஸுரஸை என்றவள் அளவற்ற மகிமையையுடையவைகளும், அனேகந்தலைகளையுடையவைகளுமான ஸர்ப்பங்களைப் பெற்றாள். இவைகள் ஆகாயத்திற் பறக்கும் கருடன் முதலிய பக்ஷிஜாதிகளுக்கு வசப்பட்டவை. இவ்வண்ணமே கத்ருவின் மைந்தர்களான காத்ரவேயர்களும் பலதலைகளையுடையவரும் கருடனுக்கு வசமானவர்களுமாம். அவர்களுக்குள் முக்கியமானவர்கள் சேஷன், வாசுகி, தக்ஷகன், ஐராவதன், மகாபன்னன், கம்பளன், அசுவதரன், ஏலாபத்திரன், சங்கன், கார்க்கோடகன், தனஞ்செயன், மகாநீலன், மகாகர்ணன், திருதராஷ்டிரன், பலாஹகன், குஹரன், புஷ்பதம்-



ஷ்டிரன், துர்முகன், சுமுகன், சங்கபாலன், கபிலன், வாமனன், நஹுஷன், சங்கரோமன், மணிமுதலியோர். அவர்களுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் கருடனாற் கொல்லப்பட்டார்கள். குரூரமான பற்களையுடைய ஸர்ப்பங்களைக்கொல்லத்தகுந்த பதினாறாயிரம் பக்ஷிக்கூட்டங்களின் கூட்டம் பாம்புகளுக்குப் பிறவி வைரிகளாயிருக்கின்றன. கரைகளிற் சஞ்சரிக்கின்ற நாநாவிதமான பறவைகளெல்லாம் தரை யென்பவளுடைய சந்தானங்கள். சுரபி யென்றவள் பசு ஜாதியையும், எருமைஜாதியையும் படைத்தாள். இளை என்றவள் மரம், கொடி, புல், செடி முதலியவைகளைப்படைத்தனள், கசை என்றவள் இயக்கர்களையும், அரக்கர்களையும் பிறப்பித்தாள். முனி யென்றவள் அப்ஸரஸ்ஸுக்களைப்பெற்றாள். மிகுந்த பலமுடைய அரிஷ்டையென்றவள் அளவிறந்த வழகையுடைய கந்தருவர்களைப்பெற்றாள். ஸ்தாவரஜங்கம ரூபிகளான இவர்கள் காசியபருடைய சந்தானங்கள். அவர்களுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் நூறாயிரம் கணக்கானவர்கள். ஓ ராஜனே! இந்த சிருஷ்டியானது சுவாரோசிஷ மனுவின் காலத்திலுண்டானது. வைவஸ்தமென்ற இந்த மனுவந்தரத்தில், வருணதேவதையைப்பற்றிய யாகத்தில் ஓமஞ்செய்த பிர்மாவினுடைய பிராணி சிருஷ்டியானது இனி கூறப்படுகின்றது. பூர்வ மனுவந்திரத்திலுண்டாகிய மானஸபுத்திரர்களான ஏழுபிர்மரிஷிகளையும், இவ்வைவஸ்வத மனுவந்தரத்தில் பிர்மாவானவர் தாமே தமக்கு குமாரர்களாக ஏற்படுத்திக்கொண்டனர். பிறகு தேவர்களுக்கும், தானவர்களுக்கும் ஒருவருக்கொருவர் விரோதமுண்டாகத் திதி யென்றவள் சந்ததியற்றவளாகவானாள். ஆனதால் திதி யானவள் காசியபரைப்பணிவிடையால் சந்தோஷப்படுத்தினாள். அவ்வித மாராதிக்கப்பட்ட காசியபரானவர் மிகவும் சந்தோஷப்பட்டு மனமிரங்கி வரத்தினால் திதியைச் சந்தோஷப்படுத்த, திதியும் இந்திரனைக் கொல்லத்தகுந்த சாமர்த்தியமும் வீரியமுமுள்ள ஓர் புத்திரனை வரமாக விரும்பினாள். மகாதவசியான காசியபரும் திதியால் விரும்பப்பட்ட அந்தவரனை அவ்விதமே கொடுத்தார். மரீசி ரிஷியின் குமாரனும் சிறந்த புத்தியுடையவருமான காசியப ரிஷியானவர், வரத்தைக்கொடுத்த பின் திதியை நோக்கி வருமாறு கூறுகின்றார். ஓ திதியே! அதேவிதமாக வுனக்கு கருப்பமுண்டாகும். அதை நீ சரிவர வகிப்பாயானால் அதிலுண்டாகும் புத்திரன் இந்திரனைக்கொல்வான். மேலுமக் கருப்பத்தை நூறு வருஷகாலம் நீ பரிசுத்தமாக யாதொரு தவறுதலுமன்னியில் வகிக்கவேண்டும். இவ்வார்த்தையைக்கேட்ட திதியும், அப்படியே ஆகட்டுமென மஹா தபஸ்வியான காசியபரைத் திருப்தி செய்வித்தாள். ஓ அரசனே! அத்திதி

யும், அதேவிதமாய் கருப்பத்தை வகித்தாள். அதன் விபரமாவது; பிறகு காசியபர் கர்ப்பத்தை வகித்துக்கொண்டு திதியிடஞ்சென்று அவளிடம் வைத்துவிட்டு, பரமேஷ்டியைவணங்கி அளவற்றமகிமையுடையவர்களான தேவகூட்டங்களுடையவீரியம் பொருந்தியதும், ஒருவராலும் கலக்கமுடியாததும், தேவர்களாலும் வெல்லமுடியாததுமான தபோவீரியத்தைச்சேர்த்துக்கொண்டு கூர்மையான விரதங்களையுடையவராய் தவத்தின்பொருட்டு பர்வதத்திற்குச்சென்றார். இங்கு அவ்விதம் பரிசுத்தையாய்த் தனிமையாயிருக்கும் திதியினுடைய தவத்தைப்பார்த்து அவளது ஆசுத்தமான சமயத்தைப் பாகசாஸனியானவன் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான். அச்சுதனென்ற அவ்விந்திரன் நூறுவருஷங்கள்முடிய ஒருவருஷம் குறைவான 99-வது வருஷத்தில் தனக்கு இடைவெளியைக் கண்டுகொண்டான். அதாவது காலலம்பாமலே அசுசியோடு பகலில் சயனத்தையேறித் தூங்கினாள். அந்த அசுசியான சமயம்பார்த்து இந்திரனானவன் வஜ்ராயுதத்தைக் கையிற் பிடித்து அவளது குக்ஷிக்குள்நுழைந்து அந்தக்கருப்பத்தை ஏழாகவெட்டினான். வெட்டப்பட்ட அக்கருப்பமானது துன்பம் சகியாமல் அழுதது. அவ்விதமழுவதை இந்திரனானவன் அழாதே அழாதேயென அடிக்கடி அதட்டினான். இவ்விதம் அக்கருப்பத்தை ஏழு துண்டுகளாக்கிப் பின்னும் சத்துருக்களைத் துன்பப்படுத்தும் திறமையுடைய விந்திரன், ஒவ்வொரு துண்டையும் மகா கோபத்தோடு அவ்வஜ்ஜிராயுதத்தாலேயே எவ்வேழாக வெட்டினான். இவைகளே ஓ பரதராஜனே ஸப்தமருத்துக்களென்ற தேவர்களாயினர். இந்திரனால் மாருத, மாருத என்று சொல்லிக்கொண்டே கொலைசெய்யப்பட்டபடியால் எழுமருத்துக்களெனவேபெயர் உண்டாயிற்று (மாருத = அழாதே) ஓபரதகுலசிரேஷ்டனான ஜனமேஜய ராஜனே! நாற்பத்தியொன்பது தேவர்கள் வஜ்ரபாணிக்கு ஒத்தாசைசெய்பவர்கள். இவ்விதம் பெருகப்பட்ட மிகுந்த வல்லமையுடைய அத்தேவர்களின் கூட்டங்களுக்கு அவ்விந்திரனையே யஜமானனாக அவர்களும் மற்றவர்களும் விரும்பினார்கள். ஆகையால் அவ்விந்திரனான ஹரியென்பவன் சிலசில தேவாசுர மனுஷ்யக்கூட்டங்களுக்கு ஒவ்வொருவரைப் பிரஜாதிபதியாக ஏற்படுத்தினான். இவ்வதிகாரம் வரிசையாகப் பிரது மஹாராஜன்முதல் வெளிக்கு வரத்தொடங்கிற்று. ஓ பாரதனே! வீர புருஷனான அந்த ஹரியென்ற இந்திரன் கிருஷ்ணன், ஜிஷ்ணு, பிரஜாதிபதி, பர்ஜன்யன், தபனன், அவியக்தன் என்றபெயர்களால் பெருமை பெற்றவன். அவ்விந்திரனுக்கு இவ்வுலகமுழுமையுமதீனமானது. ஓ பரதகுலதிலகனே! அநேகம் பிராணிகளுடைய படைப்பைச்



சொல்வதாயும் ஸப்தமருத்துக்களுடையவுற்பத்தியை விளக்குவதாயுமுள்ள இவ்வத்தியாயத்தைப் படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் மறுபடி ஜனனாதித்துன்பங்களே யுண்டாகமாட்டாது. ஆகையால் பரலோகமாகிய யமலோகத்திற் பயமேது.

3-ம் அத்தியாயம் முற்றிற்று

## 4-வது அத்தியாயம்.

வைசம்பாயனர் கூறுவது:—பிரஜாதிபதியானவர் வேனனுடைய குமாரனான பிரதுஎன்றவனை அரசுகளுக்குமரசான ஸ்தானத்தில் அபிஷேகஞ்செய்து, பிறகு வரிசையாக இராஜ்யங்களை ஒவ்வொருவருக்காய்ப் பிரித்துக்கொடுக்க வாரம்பித்தனர். அதெவ்விதமெனில்:— துவிஜர்களுக்கும் கொடிசெடிகளுக்கும், நக்ஷத்திரங்களுக்கும், நவக்கிரகங்களுக்கும், வேள்விகளுக்கும், தவங்களுக்கும் அதிபதியாகச் சந்திரனை அதிராஜ்யத்திலபிஷேகஞ்செய்தனர். நீர்களுக்கு வருணனையும், அரசர்களுக்குப் பிரபுவான குபேரனையும், எல்லாத்தேவர்களுக்கும் அங்கிரஸ்ஸின் புத்திரனான பிரகஸ்பதியையும், பதியாக வேற்படுத்தினர். அவ்விதமே அசுரர், பிருகுவமிசத்தியுவர் இருவர்களுக்கும் சுக்கிரனை அப்பீடத்திலபிஷேகஞ்செய்தனர். ஆதித்தியர்களுக்கு விஷ்ணுவென்ற பன்னிரண்டாவதாதித்யனையும், வசுக்களுக்குப் பாவகனையும், பிரஜாதிபதிகளுக்குத் தக்ஷனையும், தேவர்களுக்கு வாசவனையும், திதிதநுமக்களான தைத்தியர் தானவரென்ற அசுரர்களுக்குப் பிரஹ்லாதனென்ற மகா மகிமை யுடையவனையும், பிதருதேவர்களுக்குச் சூரியபுத்திரனான யமனையும், அந்தந்த ஸ்தானத்திலபிஷேகஞ் செய்தனர். அவ்வண்ணமே மாதிரு தேவதைகளுக்கும், நோன்புகளுக்கும், மந்திரங்களுக்கும், பசுக்களுக்கும், இயக்கர் அரக்கர் என்றவர்களுக்கும், ராஜாக்களுக்கும், நாராயணனென்ற பெயருடனவதரித்திருக்கும் விஷ்ணுவையும், சாத்தியர்களுக்கும் உருத்திரர்களுக்குமாக விருஷபத்துவஜனையும், தானவர்களுக்கு விப்பிரசித்தி என்ற ராஜாவையும், பூதபிசாசங்கள் முழுமைக்கும் சூலபாணியான சிவனையும், பர்வதங்களுக்கெல்லாம் இமாலயத்தையும், நதிகளுக்குச் சமுத்திரத்தையும், பரிமளம்,காற்று, தன்மாத்திரைகளென், சத்தம்,ஆகாயம் என்ற இவைகளுக்கெல்லாம் மஹாபலிஷ்டனான வாயுதே

வனையும், கந்தருவர்களுக்குச் சித்திரரதன் என்ற பிரபுவையும், அதிபதியாக்கினார். பின்பு நாகங்களுக்கு வாசுகியையும், சர்ப்பங்களுக்குத் தட்சகனையும், யானைகளுக்கு ஐராவதத்தையும், குதிரைகளுக்கு உச்சைசிரவஸ் என்றதையும், பக்ஷிகளுக்குக் கருடனையும், மிருகங்களுக்குப் புலியையும், பசு விருஷபங்களுக்கு நந்தியையும், மரங்களுக்கு அரசமரத்தையும், சாகரம் மேற்றிசை நோக்கிப்போகும் ஆறுகளாகிற நபநதி முதலிய நதங்கள், மேகங்கள், மழை, சூரியகிரணங்கள் என்ற இவைகளுக்கெல்லாம் வருண தேவனையும், விஷம் பற்களையுடைய பாம்புகளுக்கெல்லாம் சேஷனையும், உடலால் நகரும் மற்ற பாம்புகளுக்கெல்லாம் தக்ஷகனையும், கந்தர்வருக்கு மப்ஸரஸ்சுக்களுக்கும் காமதேவனையும், ருதுக்கள், மாஸங்கள், தினங்கள், பக்ஷங்கள், இரவுகள், முகூர்த்தம், திதி, பருவம், கலை, காஷ்டை, உத்தராயணம், தக்ஷிணாயனம், கணங்கள், அபிருதாதி யோகங்கள், இவைகளுக்கெல்லாம் ஸம்வத்ஸரத்தைப் பிரபுக்களாக முடிசூட்டினார். பிர்மாவானவர், இந்தப்பிரகாரம் கிரமமாக இராஜ்யங்களைப் பிரித்துக் கொடுத்துப் பிறகு திசைகளுக்குப் பாலகர்களையும் ஏற்படுத்தினார். அதன் விபரமாவது:- கிழக்கு திக்கில் வைராஜனென்ற பிரஜாதிபதியினுடைய குமாரனாகிய சங்கபதன் என்றவனை ராஜாவாக அபிஷேகஞ்செய்தார். அவ்விதமே மேற்கு திக்கில் ராஜஸனுடைய புத்திரனும் அழிவில்லாதவனும் மகா பலசாலியுமான கேதுமான் என்றவனை அரசனாக அபிஷேகஞ் செய்தனர். தெற்கு திக்கில் கர்த்தமரது குமாரனான சுதனுவா என்றவனை அரசனாக அபிஷேகித்தனர். அவ்வண்ணமே வடக்கு திக்கில் பர்ஜன்னியப்பிரஜாதிபதியின் குமாரனும் கலங்காத நெஞ்சமுடையவனுமுள்ள இரண்ணிய ரோமன் என்றவனை அரசனாக அபிஷேகித்தனர். அந்த நால்வராலு மின்றுவரையில் ஏழு சமுத்திரங்களுக்குட்பட்டதாயும் பலவகை நாடுகளுடன் கூடியதாயுமுள்ள இப்பூமியானது தருமத்துடன் ஆளப்படுகின்றது. ஓ நராதிபதியே! பிறகு இராஜசூயத்தில் அபிஷேகஞ்செய்யப்பட்ட அரசுக்கு மாசான பிருது சக்கிரவர்த்தியானவர் இந்நான்கு அரசர்களுடனும் மற்றுமுள்ள அதிபதிகளுடனும் இவ்வுலகத்தை நியாய முறை தவறாது ஆண்டனர். இந்தப்பிரகாரம் அளவற்ற மான்மிய முடைய சாக்ஷுஷமநுவந்தரம் முழுமையும் தீர்ந்தபின்பு பிர்மாவானவர் வைவஸ்வதனென்ற மநுவிற்கு இராஜ்யாதிகாரத்தைக் கொடுத்தார். ஓ! பாப மற்ற ராஜேந்திரனே! அநுகூலமாகக் கேட்பதற்கு உனக்கு விருப்பமுண்டானால் அந்த வைவஸ்வத மநுவினுடைய சரித்திரத்தை விஸ்தாரமாகக் கூறுகின்றேன் கேள். இச்சரித்திரமானது மிகவுமுயர்ந்த பிரதிஷ்டையைக் கொடுக்கத்தக்கதும், தனம், கீர்த்தி, ஆயுள் சுவர்க்



கவாச மிவைகளை யளிக்கத்தக்கதும் சுபகரமானதுமென்று புராணத்திற் கூறப்படுகின்றது.

ஜனமேஜயன் வினவுவது:— ஓ வைசம்பாயன மகருஷியே! அப்பிருது சக்கிரவர்த்தியின் ஜன்மசரித்திரத்தை விஸ்தாரமாய் கூறவேண்டும். மகா தீரனான அப்பிருது சக்கிரவர்த்தியினால் எவ்விதம் பூமியானது கறக்கப்பட்டது. அதிலும் பிதுருக்கள், தேவர்கள், ருஷிகள், தைத்தியர், நாகர், யக்ஷர், விருக்ஷங்கள், பர்வதங்கள், பிசாசுகள், கந்தருவர், பிராம்மணர், பலிஷ்டர்களான அரக்கர்கள் என்ற இவர்கள் எவ்வெவ்விதமான பாத்திரங்களில் எவைகளைக் கன்றுகளாக ஏற்படுத்திக்கொண்டு எந்தெந்தவிதமான பால்களைக் கறந்தார்கள். கறந்தவர்கள் யார் யார். எக்காரணத்தினால் முன்கோபமுடைய ருஷிகளால் வேனனுடைய கைத்தலமானது கடையப்பட்டது. இவைகளையெல்லாம் ஆதியோடந்த மாகச் சொல்லவேண்டும். வைசம்பாயனர்:— ஓ ஜனமே ஜயனே! மிகவுமருமையான வேனகுமாரனாகிய பிருது மஹா ராஜாவினுடைய சரித்திரத்தைக் கூறுகின்றேன், ஒருமையான புத்தியுடனும் பரிசுத்தமாகவும் கேள். அசுசியாயும், இதமல்லாதவனாயும், கெட்ட மனமுடையவனாயுமுள்ள நன்றி மறந்தியமமில்லாத கெட்டமானுக்களுக்கு இச்சரித்திரத்தை யுரைக்கக் கூடாது. சுவர்க்காதி புண்ணிய லோகத்தைக் கொடுக்கத்தக்கதும், கீர்த்தி ஆயுள் தருமமிவைகளை விருத்தி செய்யத்தக்கதும், வேதங்களுக்கொத்ததும், ருஷிகளால் ரகசியமாய்க் காப்பாற்றி வைக்கப்பட்டதுமான இச்சரித்திரத்தை உள்ளபடியே கேட்பாய். யாவனொருவன் வேன புத்திரனான பிருது மஹாராஜாவின் சரித்திரத்தை முன்பு பிராம்மணர்களை நமஸ்கரித்துக்கூறுகின்றானோ, அவன் தான் பண்ணின பாபங்களாலாவது அல்லது தான் பண்ணாத புண்ணியங்களாலாவது துக்கப்படுவதில்லை.

4-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 5-வது அத்தியாயம்

வைசம்பாயனர் கூறுவது:—முன்பு அத்திரி வம்சத்திலுதித்தவனும், அத்திரிமகருஷிக்குச் சமானமானவனும், தருமத்தைக்காப்பவனும், பிரபுவுமான அங்கனென்ற ஓர் பிரஜாதிபதியுண்டானான். அவ்வங்கனுக்கு யமனது பெண்ணான ஸுநீதை யென்பவளிடம் வேனனென்ற முழுமையுங்

தருமவழியறியாதவோர் மைந்தன் ஜனித்தான். ஸுநீதையின்மகனான இவ்வேனனென்ற பிரஜாபதி தாயின் தகப்பனான பாட்டனுடைய தோஷத்தால் தன்னுடைய ராஜகருமத்தைப் பின் தள்ளி தன்னிச்சைப்பிரகாரம் தன் மனதிற்கிசைந்த அதர்மங்களிலிழிந்தான். மேலும் அந்த வேனமகாராஜன் தருமத்தை விட்டு நழுவிய சட்டத்தை நிலை நிறுத்தினான். பின்னும் அவ்வேனன் வேதத்திற் கூறிய தர்மங்களைக் கடந்து அதர்மத்திலேயே விருப்ப முள்ளவனானான். ஆகையால் அவ்வரசாளுகையில், வேதம் ஓதுதலும், யாகம் முதலியன செய்தலும் சூனியமாயின. அன்றியும் சிலவிடங்களிற் சிலர் செய்யும் யாகங்களிற் கூட தேவர்கள் ஓமம் செய்யப்படும் ஹவிசையாவது, சமர்ப்பணம் செய்யப்படும் சோமத்தையாவது அனுபவிக்கவுங் கூட முடியவில்லை முக்கியமாய் அந்த பிரஜாபதியான வேனனுடைய உத்திரவானது யாகம் செய்யக்கூடாதென்றும், அவ்விதமே வேறு எந்தவித ஓமமும் செய்யக்கூடாதென்றும் மிகவும் கொடுமையாக நிலை நின்றது. இவ்விதம் அவ்வரசனுக்கு விநாச காலம் ஸமீபித்தபொழுது தானே பூஜிக்கத் தகுந்தவனென்றும், தானே வேள்வியைச் செய்பவனும் வேள்வியுமென்றும், பிறர் செய்யும் யாகங்களெல்லாம் தன்னைக் குறித்தே செய்யப்படவேண்டுமென்றும், அவ்விதமே ஓமம் முதலிய மற்ற கிருத்திகளும் தன்னைக்குறித்தே ஸமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் கட்டளையிட்டான். இவ்விதம் வேத விதி விலக்குகளைக் கடந்த புதியவனான வேனனென்ற அரசனைப்பார்த்து, மரீசி முதலிய எல்லா மகரிஷிகளும் அப்பொழுது வருமாறு கூறினார்கள் அதாவது:— நாங்கள் அநேக வருஷகாலங்கள் வரையில் ஒரு தீக்ஷையை வகிக்கப்போகின்றோம். ஓ! ராஜனே! அதர்மத்தைச்செய்யவேண்டாம். இப்பொழுது உன்னால் கட்டளை யிடப்பட்ட இந்த நியாயமானது ஸநாதன மில்லாதது. நீயோ உத்தமமான குலத்திற் பிறந்தவனும் பிரஜைகளுக்கு அதிபதியுமானவன் இதற்கு ஐயமில்லை. முன்பு உன்னாலும் "பிரஜைகளை ரக்ஷிக்கிறேன்" என்று ஸத்தியம் செய்யப்பட்டிருக்கின்றது என்றுரைக்க, அப்பொழுது தனக்குக் கெடுதியை விரும்பும் துர்புத்தியான வேனனென்றவன், அவ்விதமுரைத்த அவ்வெல்லா மகரிஷிகளையும் நோக்கி வருமாறு ஒருவார்த்தை கூறுகின்றான். ஓ ரிஷிகளே தருமம் என்றதைப் படைத்தவன் என்னைவிட வேறொருவனுளனோ. அவனை யின்னானென்று கேட்க விரும்புகிறேன். படிப்பு, வீரியம், தவம், உண்மை, இவைகளால் எனக்கு ஸமமானவன் இவ்வுலகத்தில் எவன் உளன். எல்லாப்பிராணிகளுக்கும், பெருமை பொருந்திய தருமங்களுக்கும், காரண பூதனான

REGISTERED 27 JUN 1910 MADRAS.



என்னை, அறிவில்லாத மூர்க்கர்களான நீங்கள் அறியவில்லை, நிச்சயம். ஓ! ருஷிகளே! நான் விரும்பினால் இவ்வுலகத்தைச் கொளுத்துவேன் ஜலங்களால் நனைப்பேன். ஆகாயத்தையும் பூமியையும் மறைப்பேன். இதிற் சிறிதளவேனும் ஆலோசிக்கவேண்டாம். இவ்விதம் அவ்வரசனான வேனன் தனது பாபத்தாலும் அஞ்ஞானத்தாலும் அதருமமாய்க்கூற, அதைக் கேட்ட மகரிஷிகள், கோபா வேசம்கொண்டு அவ்வேனனை அரசுபுரியும் நிலையிலிருந்து நீக்குவதற்கு ஆலோசித்து, அம்மகாத்மாக்களெல்லாம் மகா பலிஷ்டனாய் விளங்கும் அவ்வேனனைக் கொன்று, அதனுடன் அவ்வேனனது இடது தொடையை மிகுந்த கோபத்துடன் கடைந்தார்கள். ஓ! ஜனமேஜயராஜனே அந்த வேன ராஜனுடைய இடது தொடையானது கடையப்பட்டபொழுது அத்தொடையில் நின்றும், குட்டையாயும், பருமனாயும், கருத்தவனாயும் உள்ள ஓர் புருஷன் உண்டானான். அவன் ஜநித்தவுடன் விருத்தியடைந்து பயத்துடன் கைகூப்பிக்கொண்டு அந்தரிஷிகளுடைய சபையில் வணக்கமாய் நின்றான். அப்படிப்பட்ட வினயத்துடன் கூடிய அப்புருஷனை அத்திரி என்ற மகரிஷியானவர் அப்பொழுது தயவுடன் பார்த்து, ஓ! மனிதனே! உட்கார் என உரைத்தார் ஓ! அரசனே! அப்புருஷனே நிஷாத வம்சத்துக்கு மூல புருஷனாக ஆனான். பிறகு அந்த வேனனுடைய பாபங்களினின்றும் அநேகம் வேடர்களையும் உண்டாக்கினார். விந்திய பர்வதத்திலும் மற்றுமுள்ள அரணியங்களிலும் உள்ள, வியாதர் தும்பரர் முதலிய கெட்ட வஸ்துக்களில் ருசியையுடைய மனிதர்களெல்லாம் அவ்வேனனுடைய பாபத்தினின்று உதித்தவராகவே அறிவாய்.

பின்பு மறுபடியும் ஆழ்ந்த புத்தியையுடைய அத்திரி முதலிய ரிஷிகளெல்லோரும் வேனனுடைய வலது கையை அரணிக்கட்டைபோல்வைத்துக்கொண்டு கடைய ஆரம்பித்தார்கள். கடைந்த அவ்வலது கையினின்றும் அக்கினிக்கு ஸமானமான ஒளியும், சத்தமும் உடைய பிருது என்றவன் உதித்தான். உதித்தவுடன் தனது சரீரகாந்தியினால் விளங்குபவனும், அக்கினிபோல் பிரகாசிப்பவனும், வில்லோடும் கவசத்தோடும் பொருந்த கீர்த்திகளுக்கெல்லாம் நிலைத்த இடமாகவும் விளங்கினான். இவ்விதம் முதன்மையான ஆஜகவம் என்ற பெருத்த ஒலியையுடைய வில்லைப் பிடித்துக்கொண்டும், உயர்ந்த அம்புகளை வகித்துக்கொண்டும் தனது சரீரத்தை ரக்ஷித்துக்கொள்வதற்கான மிகுந்த காந்தியையுடைய கவசத்தைப்பூட்டிக்கொண்டும் அச்சபையில் நின்றான், அவன் உதித்தவுடன் எல்லாப்பிராணி

களும் எங்கும் சந்தோஷப்பட்டன. ஓ! மகாராஜனே! இந்த ஸத்புத்திரனைப்பெற்றதால், வேன ராஜனும் சுவர்க்கலோகத்தை அடைந்தான். ஓ! மனிதர்களுக்குள் உத்தமமான ஜன்மமே ஜயனே! நல்ல புத்திரனையுடைய சற்புத்திரனுடைய உற்பத்தியால் புத்தென்று சொல்லப்பட்ட நரகத்தினின்றும் வேனன் அப்போது காப்பாற்றப் பட்டான். அவ்விதம் உதித்த பிருது மகா ராஜனைக் குறித்து நான்கு ஸமுத்திரங்களும், கங்கை முதலிய நதிகளும், நான்கு புறமும் இரத்தினங்களை எடுத்துக்கொண்டு தீர்த்தங்களை வகித்துக்கொண்டும், அபிஷேகத்திற்காக அடுத்து வந்தன. திருகால ஞானியான பிரம்மாவும் பிரகஸ்பதியால் காப்பாற்றப்பட்ட தேவர்களுடன் அவ்விடத்திற்கு வந்து அப் பிருது என்பவனைப்பிரஜைகளுக்கு அதிபதியாக அபிஷேகம் செய்தனர். அப்பொழுது ஸ்தாவரங்களாயும், ஜங்கமங்களாயுமுள்ள மற்ற ஸகலப்பிராணிகளும் அவ்விதமே அபிஷேகம் செய்தன. அபிஷேகத்தைப்பெற்ற அப்பிருது மகாராஜனும் ராஜர்களுக் கெல்லாம் ராஜாவாயிருக்கப்பட்ட உத்தமமான பதவியில் பிரஜைகளுடைய பரிபாலனத்தைப் பெற்று விளங்கினான். தர்மங்களை அறிந்த பெரியோர்களால் இவ்விதம் அபிஷேகம் செய்யப்பட்ட மிகுந்த பிரபாவத்தையுடைய அப்பிருது சக்கிரவர்த்தி அப்பொழுது இராஜாக்களுக்கெல்லாம், ராஜாவாயிருக்கும் தன்மையில், மகா ப்பிரதாபத்தோடு கூடிவிளங்கினான். இவனது தகப்பனான வேன ராஜனால் பீடிக்கப்பட்ட அவனது ஜனங்களெல்லாம் பிருதுவினாலே ஸந்தோஷிப்பிக்கப்பட்டார்கள். ஆனதால் அந்தப் பிரீதியின் நிமித்தமாக அவனை ராஜாவென்று அழைத்தன. அவனைக் கண்டு ஸமுத்திரத்தைக் குறித்து ஓடுகின்ற ஜலங்களெல்லாம் ஓடாமல் நிலைத்து நின்றது. பர்வதங்களெல்லாம் இவனுக்கு வழியைக் கொடுத்தன. எந்த மரங்களிலும் தட்டாததால் அவனது தேரிலுள்ள கொடிமரம் முறியாமலே இருந்தது. பூமியானது உழாமலே தானியங்களைக் கொடுத்தது. பசுக்களெல்லாம் வேண்டிய பால்களைக் கொடுத்தன. காட்டிலுள்ள எந்த மரங்களின் இலைகளிலும் தேன் நிறைந்து இருந்தது. இக்காலத்திற்றான் பிர்ம்மாவினால் செய்யப்பட்ட சுபமான யாகத்தில் ஸூதி என்பவளிடம் மகா புத்திசாலியான ஸூதனென்ற பாடகன் நல்ல தினத்தில் ஜனித்தான் அதே தினத்தில் அதே யக்ஞத்தில் புத்திமானான மாகதன் என்றவனும் உண்டானான். அப்பொழுது அவ்விருவர்களும் தேவர்களாலும், ரிஷிகளாலும் பிருது சக்கிரவர்த்தியினுடைய கீர்த்தியைப் பாடுவதற்காகக் கூப்பிடப்பட்டு வரு



மாறு உரைக்கப்பட்டார்கள். ஏ! ஸூதனே ஏ! மாகதனே! நீங்கள் இருவர்களும் இவ்வரசனை இவனது தொழில்களால் துதியுங்கள். உங்களுடைய துதிக்கு இவ்வரசன், தக்கவன் என்று நேமிக்கப்பட்ட அவ்விருவர்களும், அப்பொழுது எல்லா ரிஷிகளையும் நோக்கி, நாங்கள் இருவரும் தேவர்களையும், ரிஷிகளையும், அவரவரது தொழில்களைக்கொண்டு ஸந்தோஷப்படுத்துவோம். இவ்வரசனுடைய தொழிலையாவது லக்ஷணத்தையாவது, கீர்த்தியையாவது, நாங்கள் இருவரும் அறியோம். ஓ! ரிஷிகளே! இந்தத் தெளிந்த காந்தியுடைய இவ்வரசனுடைய எந்த காரியங்களைக் கொண்டு நாங்கள் துதிப்போம் என்றார்.

ரிஷிகள்கூறுவது—: ஓ! பாடகர்களே! இனி இவ்வரசனால் செய்யப்படும்காரியங்களை அறிந்து அதற்கிணங்கத் துதியுங்கள். அன்றியும் முன்பு ஆரம்பத்தில் உண்டான மகா பலமுள்ள பிருது வானவன், எந்தெந்த காரியங்களைச் செய்தானோ, அவைகளை எல்லாம் துதியில் கூட்டிப் பாடுங்கள். அப்பிருதுவானவன் ஸத்தியமானவாக்கை உடையவன். பெருங்கொடையுடையோன். உண்மையிற் கட்டுண்டவன். பிராணிகளை ஆண்டவன். செல்வமுடையோன். ஜயசீலன். பொறுமையால் விளங்குகின்றவன். மிகுந்த பராக்கிரமமுடையவன். தன் ஏவற்படி நடத்துபவன். நியாயத்தை அறிந்தவன். நன்றியுணர்ந்தவன். தயவுள்ளவன். அன்பாய்ப் பேசுபவன். பெருமை பொருந்தினவன். பெரியோரைப் பெருமைப் படுத்துகின்றவன். அநேகம் வேள்விகளைச் செய்தவன். பிராமணர்களிடம் பக்தி யுள்ளவன். ஸத்தியத்திற்குப் போராடுபவன். ஜிதேந்திரியன். அடக்கமுள்ளவன். நிலையுள்ளவன். வியவஹாரமறிந்தவன். பிரஜைகளை ரக்ஷிப்பவன். ஆகையால் அவ்வித குணங்களை நினைத்துப் பாடுங்கள். ஓ! ஜனமேஜயனே, அதுமுதற் கொண்டு உலகங்களில் துதிக்கும் பொழுதெல்லாம் ஸூதமாகதர்களாகிற துதி பாடகர்களால் ஆசீர்வாதங்களாகத் துதிக்கப் படுகின்றன. அப்பொழுது அவ்விருவர்களினுடையவும் அத்துதிகளால் ஸந்தோஷிக்கப்பட்ட பிரஜாதிபதியான பிருது சக்கிரவர்த்தியானவன் ஸூதனென்பவனுக்கு அனூபம் என்ற தேசத்தையும், மாகதன் என்றவனுக்கு மகதமென்ற நாட்டையும் இனாமாக அளித்தான். அதைக்கண்ட ரிஷிகளும் ஜனங்களும் மிகவும் சந்தோஷத்துடன் இந்த ராஜாவானவன் உங்களுக்கு மானியமாகிற விருத்திகளைக் கொடுக்கப் போகின்றான் என்றார்கள். பிறகு ஓ, மகா

ராஜனே பிரஜைகளெல்லோரும் வேன குமாரனான பிருது சக்கிரவர்த்தியை அடைந்து நீர் எங்களுக்கு விருத்தியை கொடுக்கவேண்டுமென்று மகரிஷிகளுடைய வாக்கைக் கொண்டு யாசித்தார்கள். ஜனங்களுடைய நன்மைக்காக சில ஜனங்களால் பிரார்த்திக்கப் பட்ட அப்பிருது மகா ராஜன் வில்லைக் கையில் பிடித்து பாணங்களை எடுத்து மகாபலத்துடன் பூமியை உபத்திரவித்தான். பிறகு அவ்வரசனது பயத்தினால் பீடிக்கப்பட்ட பூமியானவள் ஒரு பசுவினுடைய உருவங்கொண்டு ஓடினாள், அப்படி ஓடும் அவளை வில்லுடன் இவனும் பின் தொடர்ந்தான். அவள் இந்திராதி லோகங்களை எல்லாம் கடந்து அவ்வேன குமாரனது பயத்தால் ஒடிவில் பிரம லோகத்தை அடைந்தும், தன்னெதிரில் வில்லுடன்கூடிய அவ்வேன குமாரனையே கண்டாள். அப்பொழுது அதிக கூர்மையோடு விளங்கும் பாணங்களால் ஜொலிக்கின்ற பராக்கிரமத்தையுடையவனும் எவனையும் கைவிடாதவனும் மகா பாக்கிய சாலியும் உரத்த நெஞ்சனும் தேவர்களாலும் கலக்க முடியாதவனுமான அவ்வேன குமாரனைத்தவிர வேருயாரையும் அப்பொழுது தன்னைக்காப்பாற்ற கிடைக்காததால் அப்பூமியானவள் அப்பிருது மகா ராஜனையே சரணமாக அடைந்தாள். பிறகு மூவுலகுகளாலேயும் பூஜிக்கத் தகுந்த பூமியானவள் கைகூப்பிக்கொண்டு இவ்வரசனை நோக்கி ஓ! அரசனே! அதர்மமான ஸ்திரீ வதத்தைச்செய்யத் தாம் தகுந்தவரல்ல என்னைத் தவிர மற்ற ஜனங்களிடம் கப்பத்தை மாத்திரமே பெற்றுக் கொள்ளத் தகுந்தவர். என்பேரில் ஓ ராஜனே மற்றெல்லா உலகுகளும் இருக்கிற படியாலும் அவைகளை எல்லாம் நான் தாங்கிக்கொண்டு இருக்கிறபடியாலும் நான் நசித்துப்போவேனே யானால் ஸகல பிராணிகளும் நசித்துப்போகும் எனத் தாம் அறிவீர். ஓ! பூபதியே பிராணிகளுடைய க்ஷேமத்தை விரும்பப்பட்ட தாம் என்னைக்கொல்வது தகுதியல்ல. ஓ! பூபாலனே என் வார்த்தையையும் கேளும்: உபாயத்தினால் ஆரம்பிக்கப்பட்ட எல்லாக் காரியங்களும் எளிதாகவே கைகூடும். ஓ! அரசனே எந்த யுக்தியினால் இப்பிரஜைகளை ரக்ஷிப்பீரோ அதைத் தேடும். என்னைக்கொன்றுவிட்டு இப்பிராணிகளை ரக்ஷிப்பதற்கு முடியாது, நானும் உன்னால் அனுபவிக்கத் தகுந்தவளாக ஆகின்றேன். ஓ! மகா பராக்கிரமசாலியே கோபத்தை அடக்கும். விலங்குகளிலும் பெண்களைக் கொல்லக்கூடாதென்று பெரியோர்கள் கூறுகின்றார்கள். ஓ! பூநாயகனே எவ்வகைப் பிராணிகளிடத்திலும் தாம் தர்மத்தைவிடத் தகுந்தவர் அல்ல. இவ்விதம் பூமிதேவி சொன்ன நானா



விதமான வார்த்தையில் பொருத்த மனமுடைய அவ்வரசன் கேட்டு பிராணிகளுடைய இதத்திற்காகப் பலவிதமாய் ஆலோசித்துத் தாம் தர்ம சுருபியாதலால் கோபத்தை அடக்கிக்கொண்டு பூமிதேவியைக் குறித்து வருமாறு கூறுகின்றான்.

5—ம் அத்தியாயம் முற்றிற்று

## 6-வது அத்தியாயம்.

பிருது மகாராஜன் கூறுவது:— ஓ! மங்களகரியான பூமிதேவியே, ஒருவனுக்காக எவனாவது தனக்காவது பிறருக்காவது ஒரு பயனைக்கருதி உலகத்தில் அநேகம் பிராணிகளை கொல்லுகின்றானோ, அவனுக்குப் பாபம் ஸம்பவிக்கும். கெட்டவனான ஒருவன் பல பிராணிகளின் க்ஷேமத்துக்காக கொல்லப்படுவானேயானால் அக்கொலையானது மகா பாதக மாகவாவது உபபாதக மாகவாவது ஆகாது.

எந்த விஷயத்தில் துஷ்டனான ஒருவன் கொல்லப்பட்டு பலருக்கு க்ஷேமம் உண்டாகின்றதோ அவ்விஷயத்தில் அக்காரியத்தைச் செய்தவன் நல்ல புண்ணியங்களைப் பெறத் தகுந்த ஸமர்த்தன் ஆகையால் பிரஜாதிபதியாகிய யான் பிரஜைகளைக் காப்பதற்காக, ஓ! பூமியே உன்னைக் கொல்லுகின்றேன்— இப்பொழுது உலகத்திற்கு இதமான என்னுடைய வார்த்தையை நீ கேட்காமல் போனால் இப்பொழுதே என்னுடைய உத்திரவுக்குக் கீழ்ப்படியாத உன்னை அம்பினால் கொன்று என்னை ப்ரஸித்தப்படுத்தி என் பிரஜைகளை நானே ரக்ஷிப்பவனாக ஆவேன், ஆகையால் தர்மத்தை அறிந்தவருள் சிறந்தவளே அப்படிப்பட்ட நீ என்னுடைய உத்திரவைப் படிந்து இப்பிராணிகளை எல்லாம் பிழைப்பிப்பாய். இப்பிராணிகளை வகிப்பதில் திறமையுடையவள் நீ. எனக்கு பெண்ணுருகையை அடைவாய். பிறகு உன்னைக் கொல்வதற்காக அதிகோரமான உருவத்துடனும்கூட எடுக்கப்பட்ட இவ்வம்பை எய்யாமல் அடக்கிக் கொள்வேன்.

பூமி கூறுவது:— ஓ! வீர புருஷனே! நீர் சொன்னவண்ணம் நான் எல்லாவற்றையும் செய்கின்றேன். இதற்குச் சம்சயமில்லை— உபாயத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட எல்லாக் காரியங்களும் பயன்படும்: ஆகையால் இப்பிராணிகளை எல்லாம் எவ்விதம் உபாயத்தால் ரக்ஷிப்பாயோ அதை தேடு, ஓ! தர்மத்தை வகிப்பவனே! நீ எனக்கு கண்டவுடன் வாத்சல்லியம் உண்டாகத் தகுந்த ஓர் கன்றை தேடிப்பார்; இப்பூமியையும் தட்டி நிறவி ஸமமாகச் செய்வாய். என்னிடத்தில் நின்றும் கறக்கப்படும் பாலானது எல்லா விடங்களிலும் நிறைந்து நிற்க வேண்டும்.

வைசம்பாயனர் கூறுவது:— பிறகு வேனகுமாரனானவன் அப்பொழுது தன்னுடைய வில்நுனியால் அநேகம் மலைகளையும், குன்றுகளையும், தட்டி நிறவி பூமியையும் ஸமமாகச் செய்தான். ஆகையால் பெறிய பர்வதங்களெல்லாம் சிதறி சிற்சிறிய குன்றுகளாக பறவின. ஓ! ஜனமேஜயமகாராஜனே! மன்வந்திரங்கள் கழிந்தவுடன் பூமியானது இயற்கையாகவே மேடுபள்ளத்தினுல் விஷமப்பட்டு போயிற்று. இவ்விதமே சாக்ஷுஷ மனுவின் காலத்திலும் பூதலம் முழுமையும் மேடுபள்ளமாயிருந்தது, ஆகையால் விஷமமான அப்பூமியில் பெரிய பட்டணங்களாவது, கிராமங்களாவது, ஏற்படவில்லை. அன்றியும் பயிர்களாவது, எருது, பசுக்களாவது, வியாபாரமாவது, பேராசையாவது, மாச்சரியமாவது, யாதொன்றும் இல்லை இந்த வைவஸ்வத மனுவின் காலமாகிய இப்பொழுதோ ஓ! ஜனமே ஜயனே! வேனகுமாரன் முதற்கொண்டு முற்கூறிய ஸகலமும் உண்டாயின. ஓ! பாபமற்ற ராஜனே கேள் அப்பிருது மகாராஜனுல் எவ்வெவ்விடம் ஸமமாக்கப்பட்டதோ அவ்வவ்விடங்களிலெல்லாம் அநேகம் ஜனங்கள் திரள் திரளாய் வசிக்கத் துடங்கின. அப்பொழுது அப்பிராணிகளுக்குத் தகுந்த ஆகாரமும் பழங்களும், கிழங்குகளும், வேண்டிய அளவு உண்டாயின. எனக் கேட்டிருக்கின்றோம். பிறகு மேற்கூறிய பிருது சக்கிறவர்த்தி யானவர் பிரம்மாவினுடைய மைந்தனை மனு என்றவனை அப்பூமியாகிற பசுவிற்கு கன்றாக ஏற்படுத்தி தனது கையில் அப்பூமியைக் கறந்தான். அவை எல்லாம் புருஷோத்தமனும் வேனனுகுமாரனும் பிரதாபசாலியாயுமுள்ள அப்பிருதுவினுல் கறக்கப்பட்டபடியால் முற்றிலும் அன்னத்தை கொடுக்கத் தகுந்த நாநாவித பயிர்களாக ஆயின. ஓ! அன்பனே! அவ்வன்னத்தால் இப்பிராணிகள் முழுவதும் தினந்தோறும் இதுவரையில் பிழைக்



கின்றன. பிறகு அப்பூமிதேவியானவள் ரிஷிகளால் கறக்கப்பட்டாளென்று கேள்விப்படுகிறது. அதற்குச் சந்திரன் கன்றாகவும் அங்கிரஸ்ஸின் மகனான பிரகஸ்பதி என்பவர் கறப்பவராகவும் வேதங்கள் பாத்திரங்களாகவும், உவமையற்ற தவமும் சாசுவதமான பிரம்மமும் பாலாகவுமாயின. மேலும் இந்திரன் முதலிய தேவக்கூட்டங்களால் பொன்மயமான பாத்திரத்தைக் கைகொண்டு பூமியானவள் கறக்கப்பட்டாள். அக்காரியத்தில் இந்திரன் கன்றாகவும் பிரபுவான சூரியன் கறப்பவனாகவும், அமிருதமே பாலாகவுமாயின. பிறகு மறுபடியும் அளவில்லாத பராக்கிரமமுடைய பிதுரு தேவதைகளால் ஸ்வதை யென்ற பெயர் பெற்ற பாலானது வெள்ளிப்பாத்திரத்தை யெடுத்து அதில் பூமியினின்று கறக்கப்பட்டது. அவர்களுக்குப் பிரதாப சாலியான யமன் என்ற சூரியகுமாரன் கன்றாகவும்; உலகங்களை யழிக்கும் வல்லமையுடைய அந்தகனென்றவன் கறப்பவனாகவு மானான். பின்பு நாகர்களாலும் தக்ஷகனைக் கன்றாக்கிச் சுரைப்பாத்திரத்தில் விஷமாகிற பால் கறக்கப்பட்டது. ஓ! ஜனமேஜயனே! அந்தநாகர்களாகிய ஸர்ப்பஜாதிகளுக்கு ஐராவதனென்றவன் கறப்பவனாகவும், மற்றுள்ள ஸர்ப்ப ஜாதிகளுக்கெல்லாம் பிரதாபமுள்ள திருதராஷ்டிரனென்றவன் கறப்பவனாகவு மானான். ஆகையால் அவ்விரு ஜாதிகளும் மிகவுங் கொடுமையான தன்மையை யுடையவர்களாகவும், பெருத்த வுடலை யுடையவர்களாகவும், விஷத்தைக் கக்குகின்றவர்களாகவும், அதையே யுண்கிறவர்களாகவும், அக்கறப்பவனைப்போன்ற நடவடிக்கைகளை யுடையவர்களாகவும், அவனையொத்த வீரியமுடையவர்களாகவும், அவனை யடைக்கலமாக வடைந்தவர்களாகவு மானார்கள். மறுபடியும் அசுரர்களாலு மிப்பூமியானது கறக்கப்பட்டது. அதில் பாத்திர மிரும்பு, க்ஷீரம் வைரிகளைக் கொல்லத்தக்க மாயையென்றது. பிரகலாதன்குமாரனான விரோசனனென்பவன் கன்று. அத்தைத்தியர்களுக்குக் கறப்பவனாக உதவி செய்தவன் இரட்டைத் தலையனான மது வென்றவன். இவன் மஹாபலசாலி. அம்மாயையாலேயே இதுவரையிலும் அவ்வசுரர்களெல்லோரும் அளவில்லாத யுக்தியையுடைய மாயாவிகளா யிருக்கின்றார்கள். அம்மாயையாலேயே அவர்களது பலமும் அளவற்றதா யிருக்கின்றது. மறுபடியும் யக்ஷர்களாலும் அப்பூமியானது அரிசிமாவினுற் செய்யப்பட்ட பாத்திரத்தில் நிரம்ப அந்தர்த்தானமென்ற மறைவானது கறக்கப்பட்டது, அப்பொழுது புண்ணிய ஜனங்களான அவ்வியக்கர்களால் குபேரனைக் கன்றாகவும், மணிவரனுக்குப் பிதாவான இரஜதநாபனை கறப்பவனாகவு மேற்படுத்தப்பட்டது. அவ்வியக்களுக்கு மறை

பராக்கிரமமுள்ளவனும், மிகுந்த வலிமையுடையவனு முள்ள திருசிர்த னென்பான் தம்பியெனவும், அவனைப்பற்றியே இயக்கர் முழுமையும் நிலைநிற்கின்றன ரென்றும் வேதவியாசர் கூறுகின்றார். பிறகு அரக்கர்களாலும் பிசாசங்களாலும் மேற்கூறிய பூமியே கறக்கப்பட்டது. அதில் பிணத்தின் மண்டையோடு பாத்திரம். ஓ! நரராஜனே! அவ்விருவர்களும் பிராணிகளைத் தின்னவேண்டுமென் றவாவுடன் கறந்தபடியால் இரத்தமாகக் கறக்கப்பட்டது. அவ்விராஜநாயனே! இங்கும் கறப்பவனானன், ஸுமாலி யென்பான் கன்று. ஆகையாலேயே இயக்கர்களுள்பட இவ்விருவர்களும் இரத்த பானத்தில் விருப்பமுடையவர்களாய் அதைக்குடித்துத் தேவரைப்போ லிவர்களும் பலிஷ்டர்களானார்கள். மறுபடியும் அப்ஸரஸ்ஸுக்களுடன் கூடிய கந்தருவர்களால் அவ் வசுமதியானவள் தாமரை யிலையில் கறக்கப்பட்டாள். இதற்குச் சித்திரரத னென்பான் கன்றானவன். திவ்விய பரிமளங்கள் கறக்கப்பட்டவை. ஓ! பாரதனே! கந்தருவராஜனும், மிகுந்த பலசாலியும் மிகுந்த தைரியஸ்தனும், சூரியனையொத்த ஒளியுடையோனுமான ஸுருசி யென்பானே கறந்தவன். பின்னும் ஓ! ராஜனே! பருவதர்களாலும் அவ்வசுந்தரையினின்றும் உருவங்களோடு கூடிய பலவித மூலிகைகளும், இரத்தினங்களும் கறக்கப்பட்டன. அதில் ஹிமாலய பர்வதம் கன்றாகவும், மஹாமேரு பர்வதம் கறப்பவனாகவும், பாத்திரம் சைலமாகவு மாயின. ஆகையால் சைலங்க ளெல்லாம் நிலைக்கப்பட்டன. பிறகு கொடிகளால் மறுபடியும் அப்பூமியானது இலைகளில் கறக்கப்பட்டது. ஆகையாலேயே கொடி செடிகளின் இலைகள் கொளுத்தப்பட்டாலும் கிள்ளப்பட்டாலும் மேலும் தளிர்க்கின்றன. இவைகளையே பாலாகக் கறந்தமையா லிவைகளே யிதற்குப் பயனாயின. சாலமரமானது கறந்தது. பட்சமானது கன்றாயிற்று. ஆனதுபற்றி அப்படிப்பட்ட இப்பூமியானது எல்லாவற்றையும் தரிப்பதாயும், விசேஷித்துப் போஷிப்பதாயும், பரிசுத்தஞ்செய்யத் தகுந்ததாயும், ஸ்தாவர ஜங்கமங்களான ஸகலப் பிராணிகளுக்கு மிருப்பிடமாயும், அவைகட்குக் காரணமாயும், வேண்டுமெல்லா வற்றையுங் கொடுப்பதாயும், வேண்டியவற்றைச் சுரப்பிப்பதாயும், எல்லாப் பயிர்களையும் முளைப்பிப்பதாயும், நான்கு கடல்களுக்கு முட்பட்டதாயும், மேதினி யென்ற பெயரை யுடையதாயு மாயிற்று, மது கைடப னென்ற இரண்டசுரர்களுடைய மேதஸ் என்ற மாமிச விசேஷத்தினால் முழுமையும் நனைக்கப்பட்டது பற்றி, இப் பூமியானது மேதினி யென்று பிர்மத்தின் தன்மையைப் பரிந்துபேசும் ஞானிகளாற் கூறப்படுகின்றது. பிறகு ஓ!



பாரதனே! வேன குமாரனான பிருது மஹாராஜனுடைய அங்கீகாரத்தால் பூமிதேவியும் அவனுக்கு மகளின் தன்மையை யடைந்தாள். ஆகையா லிவளானது முதல் பிருதிவியென வுரைக்கப்படுகின்றாள். பிறகு அப்பிருதுவினால் பூமியானவள் பலபாகங்களை யுடையவளாயும், சுத்தஞ் செய்யப்பட்டவளாயும், பயிர்களுக்கெல்லா மிருப்பிடமாயும், நிறைந்த செல்வமுடையவளாயும், அநேகம் பட்டண ராஜதானிகளை யுடையவளாயு மானாள். இப்படிப்பட்ட மகிமையை யுடைய வேன குமாரனான அப்பிருது ராஜன் அப்பொழுது பூமிக்குச் சிறந்த வாசனானதால் நாநாவிதப் பிரஜைகளாலும் நமஸ்கரிக்கத் தகுந்தவனும் பூஜிக்கத் தகுந்தவனுமானான். இதிற் சந்தேகமில்லை. வேத வேதாங்கம் முழுமையு மறிந்த மகா பாக்கியசாலிகளான பிராம்மணர்களாலும் சாசுவதனும் பிர்மத்தினிட மிருந்தே யுண்டானவனு முள்ள பிருது ராஜனே வணங்கத்தக்கவன். மிகுந்த வல்லமையுடையவரும் அரசாக்ஷியை விரும்புவருமான க்ஷத்திரியர்களாலும், விரபசாலியு மாதிராஜனும் வேன குமாரனுமான அப்பிருது ராஜனே வணங்கத்தக்கவன். யுத்தத்தில் ஜயத்தை விரும்பும் பராக்கிரமமுள்ள சிப்பாய்களாலும், படர்களுக்கெல்லாம் முக்கியனான அப்பிருதுவே வணங்கத்தக்கவன். எவன் இப்பிருது ராஜனது பெயரையும் கீர்த்தியையும் சொல்லிக்கொண்டு யுத்தகளத்தை யடைகின்றானோ, அவன் அதிகோரமான யுத்தங்களையெல்லாஞ் ஜெயித்து க்ஷேமவானாகவும் கீர்த்திமானாகவும் கரையேறுகின்றான். புண்ணியவான்களாயும் பணக்காரராயுமுள்ள வைசியர்களாலும் பிழைப்பைக்காட்டியமஹாகீர்த்திமானான அப்பிருதுவே நமஸ்கரிக்கத்தக்கவன், அவ்விதமே பரிசுத்தர்களாயும் மேல்மூன்று வருணத்தோரி னடிமைகளாயும் தம்தம் க்ஷேமத்தை விரும்புவோர்களாயுமுள்ள சூத்திரர்களாலும் ஆதிராஜனான இப்பிருதுவே தொழத்தக்கவன். ஓ! ஜனமேஜயனே இவ்விதம் கன்றுகளாயிருந்தவ ரிவரிவ ரெனவும், கறந்தவ ரின்னா ரெனவும், கறந்தபா லின்னின்ன வகை யெனவும், பாத்திரங்க ளின்னவை யெனவும், என்னாற் கூறப்பட்டன. இனிமேல் உனக்கு எதைச் சொல்லவேண்டியது. நீ கேட்டபடி மஹாத்மாவான பிருதுவின் சரித்திர மிப்பொழுது உரைக்கப்பட்டது. ஓ! பரதகுல திலகனே! வேறு எதைக் கேட்க விரும்புகின்றாய். எவன் இந்தப்பிருது ராஜனின் சரித்திரத்தை ஆதிமுதல் தினந்தோறும் கேட்பானோ, அவனிப்புவியில் மக்கள் மருமக்களுடன் நீடியகாலம் வாழ்ந்தானந்திப்பான்.

6-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 7வது அத்தியாயம்

ஜநமேஜயன் வினவுகின்றான்;— ஓ! தபோதனரான வைசம்பாயனரே! எல்லா மனுவந்தரங்களையும், அம்மனுக்களுடைய பொதுப் படைப்புக்களையும், விசேஷித்த படைப்புக்களையும் சொல்லவேண்டும். ஏனெனில் எத்தனை மனுக்களுளரோ அவரவர் காலங்களெத்தனையுளதோ அத்தனை மனுக்களின் காலாந்தரங்களையும் உண்மையாகக் கேட்க ஓ பிராம்மணோத்தமனே நான் விரும்புகின்றேன்.

வைசம்பாயனர் கூறுகின்றார்:— ஓ குருகுலமன்னனான என்னன்பனே அநேகம் வருஷங்களானாலும் அம்மனுவந்தரங்களைப் பற்றிய சரித்திரத்தை விஸ்தாரமாகக் கூறுவது முடியாது. ஆகையால் சுருக்கமாகவே என்னிடமிருந்து கேள். சுவாயம்புவமனு, சுவாரோசிஷமனு, உத்தமமனு, தாமஸமனு, ரைவதமனு, சாக்ஷுஷமனு, வைவஸ்வதனென்ற இப்போதியமனு, ஸாவர்ணிகமனு, பௌத்தியமனு, ரௌச்யமனு, மேருஸாவருணிகரென்ற நான்கு மனுக்கள். இவர்களெல்லாம் ஓ ராஜனே நீ கேட்டபடி சென்றவரும் நிகழுபவரும் இனிவருபவருமாயுள்ள மனுக்கள். நான் கேட்டிருந்தபடி உனக்கும் அவர்கள் என்னால் சொல்லப்பட்டார்கள். அவ்விதமே அம்மனுவந்தரங்களுக்கெல்லாம் ஸப்தருஷிகளையும், அவரது மக்கள்களையும், தேவர்களையும் கூறுகின்றேன். முதலாவது மனுவந்தரத்திற்கு மரீசி, அத்திரி, திருகாலக்ஞானியான அங்கிரஸ், புலஹர், கிரது, புலஸ்தியர், வஸிஷ்டர் என்ற இவ்வேழு பெயர்களும் பிரம்மாவினுடைய புத்திரர்கள். ஓ ராஜனே இவர்கள் வடக்கு திக்கில் வசிக்கும் ஸப்தருஷிகள். அப்பொழுது யாமர்கள் என்ற வேறு சிலர் தேவர்களாயிருந்தனர். மேலும் அச்சுவாயம்புவ மனுவிற்கு ஆக்நீத்திரன், அக்கினிபாகு, மேதா, மேதாதிதி, வசு, ஜியோதிஷ்மான், திருதிமான், ஹவ்வியன், ஸவனன், புத்திரன் என்று மிகுந்த பிரபாவமுள்ள பத்து புத்திரர்களுண்டானார்கள். ஓ! அரசனே! இதுதான் முதல் மனுவந்தரமென வரைக்கப்பட்டிருக்கின்றது. சுவாரோசிஷமனுவந்தரத்தில் வஸிஷ்ட குமாரனான ஔரவர், ஸ்தம்பன், காசியபர், பிராணன், பிரகஸ்பதி, தத்தன், நிச்சியவனன், இவ்வேழு ரிஷிகளும் வாயுவினால் கூறப்பட்ட மிகுந்த விருதமுள்ள ஸப்தரிஷிகள். துஷிதர் என்பவர் தேவர்கள் எனப்படுவர். ஹவித்திரன், ஸுகிருதி, ஜியோதி, ஆபன், மூர்த்தி, அயஸ்மயன், பிரதிதன், நபஸ்யன், நபன்



ஊர்ஜன், என்ற இவர்களெல்லாம் மஹாத்மாவான அம்மனுவின் குமாரர்களும் மகாவீரிய பராக்கிரமமுள்ள இராஜர்களுமானார்கள். என்னால் இப்பொழுது இரண்டாவது மனுவந்தரம் உனக்கு கூறப்பட்டது. ஓ! பார்த்திபனே மூன்றாவது மனுவந்தரத்தைக் கூறுகின்றேன் கேள். உத்தமனென்ற மூன்றாவது மனுவந்தரத்திற்கு வஸிஷ்டரது ஏழு புத்திரர்களும் சப்தரிஷிகள். இவர்களுக்கு வாஸிஷ்டர் எனப்பெயர். ஹிரண்ணியகர்ப்பனென்ற பிரமாவினுடைய புத்திரர்களான ஊர்ஜர் என்றவர்கள் குமாரர்கள். ஓ! மஹாராஜனே ஔத்தமேயர்களென்ற அக்குமாரர் மனதிற்கு ரம்மியரான பதின்மர். அவரது பெயராவன:- ஈஷன், ஊர்ஜன், தனுஜன், மது, மாதவன், சுசி, சுக்கிரன், ஸஹன், நபஸ்யன், நபன் என்றவர்களாம். துவாதசாதித்தியர்களே தேவர்கள். இவ்விதம் மூன்றாவது மனுவந்தரமும் கூறப்பட்டது. இனி நான்காவது மனுவந்தரத்தைக் கூறுகின்றேன் கேள். காவியன், பிருது, அக்கினி, ஜன்யு, தருமன், கபீவனன், கபீவான், இவர்கள் இத்தாமஸமென்ற நான்காவது மனுவந்தரத்திற்கு ஸப்தருஷிகள். இவர்களெல்லாம் புராணத்திற் கூறியபடி புத்திரரும் பௌத்திரர்களுமாம். ஸத்தியர் என்பவர் தேவகணங்கள். ஓ அரசனே! அத்தாமஸமனுவின் குமாரர்களைக் கூறுகின்றேன் கேள். த்யுதி, தபஸ்யன், ஸுதபன், தபோமூலன், தபோதனன், தபோரதி, அகல்மாஷன், தனுவீ, தன்வீ, பரந்தபன் என்ற இவர்களே வாயுவினால் கூறப்பட்டபடி தாமஸமனுவின் மஹாபலசாலிகளான பத்துப்புத்திரர்கள். ஓ! மஹாராஜனே! அதற்குப் பிறகு ஐந்தாவது மனுவந்திரம். அதற்கு வேதபாகு, யதுத்திரன், முனியான வேதசிரன், ஹிரண்ணியரோமன், பர்ஜன்யன், சோமகுமாரனான ஊர்த்துவபாகு, அத்திரிபுத்திரனான ஸத்தியநேத்திரன் இவ்வேழு பெயரும் ரிஷிகள். அபூதரஜஸ் என்றவர்கள் தேவர்கள். அவ்விதமே ஜனங்களும் வேறுவகை. அவர்களை பாரிப்பிலவன், ரைப்பியனென்றவர்கள். பிறகு அம்மனு புத்திரர்கள் யாவரென்று கூறுமெந்தன் வாக்கைக் கேள். திருதிமான், அவ்யயன், யுக்தன், தத்துவதர்சி, நிருத்ஸுகன், அரண்யன், பிரகாசன், நிர்மோஹன், ஸத்தியவாக்கு, கிருதி இவர்களெல்லாம் இரைவதனென்ற ஐந்தாவது மனுவின் புதல்வர்கள். அதற்குப் பிறகு ஓ! ராஜனே! ஆறாவது மனுவந்தரத்தைக் கூறுகின்றேன் கேள். அதற்கு ப்ருகு, நபன், விவஸ்வான், ஸுதாமா, விரஜன், அதிகாயன், ஸஹிஷ்ணு, என்ற இவர்கள் ஸப்தரிஷிகள். ஓ! அன்பனே! சாக்ஷுஷமென்ற இவ்வாறாவது மனுவந்தரத்திற்கு தேவர்கள் யாவரெனக் கேள். முதல்வரான பிரபூதர்கள், ரிஷிகள், பிரத

பாவர்கள், திவ்யௌகஸ்ஸுக்கள், இலேகர்கள் என்ற இவ்வைவரும் பிக்ஷு
தேவகணங்களெனக் கூறப்பட்டவர்கள். அங்கிரஸ் என்ற ரிஷியினு
டைய மஹாத்மாக்களும் மஹாவீரியமுமுள்ள நாட்வலேயர் என்ற புத்
திரர்களே இவர்கள். ஓ மஹாராஜனே! இம்மனுவின் குமாரர்கள் பத்
துப்பெயர்களும் மிகுந்த கீர்த்தி பெற்றவர்களும் ஊருமுதலிய பெய
ர்களை வகித்தவர்களுமாம். இதுவே சாக்ஷுஷ மென்ற ஆறுவது மனுவந்
தரம். இனி ஏழாவதான வைவஸ்வத மனுவந்திரத்தைக் கேள். இதற்கு அத்
திரி பகவானுன வசிஷ்டர், மஹரிஷியான கசியபர், கௌதமர்,
பரத்துவாஜர், விச்வாமித்திரர், மஹாத்மாவான ருசீகருடைய குமார
னும் பகவானுமான ஜமதக்கினியும் ஸப்த ரிஷிகள். ஸாத்தியர், ருத்
திரர், விசுவேதேவர், மருத்துக்கள், வஸுக்கள், ஆதித்தியர்கள், ஸூர்ய
குமாரர்களான அசுவினிகள், என்ற இவர்களெல்லாம் இம்மனுவந்தரத்
திற்குத் தேவர்கள். இக்ஷுவாகு முதலிய பத்துப் பெயர்களும் மஹா
த்மாவான வைவஸ்வதமனுவின் குமாரர்கள். ஓ! பாரதனே! இப்பொ
ழுது என்னால் கூறப்பட்ட மஹாப்பிரபாவமுடைய மஹரிஷிகளின்
புத்திரர்களும் பௌத்திரர்களுமே எல்லாத் திக்குகளிலும் பரவியிருக்
கின்றவர்கள். எல்லா மனுவந்தரங்களிலும் உலகங்களின் நன்னிலைக்
காகவும் இரக்ஷணத்திற்காகவுமே எவ்வேழு பெயர்கள் நியமிக்கப்படுவா
ர்கள். மனுவந்தரம் சென்ற பின்பு நான்கு நான்காய்க் கூறப்பட்ட மனு,
மனுபுத்திரர், ஸப்தரிஷிகள், தேவர்கள் என்ற இவர்களனைவரும் அவர
வர் காரியங்களை தத்தம் அதிகாரத்திற்குத் தக்கபடி செய்து விட்டுப்
பிறகு சாசுவதமான பிர்மலோகத்தை யடைகின்றனர். இவர்களிலும்
சிலர் தவத்துடன் நிலைத்தவராய் விளங்குகின்றனர். ஓ பாரதனே!
சென்ற மனுக்களும் நிகழும் மனுவுமுள்பட எழு மனுவந்தரங்கள் கூற
ப்பட்டன. இனி வரப்போகின்ற எழு மனுவந்தரங்களையும் என்னிடமி
ருந்து கேள். ஸாவர்ணரென்ற மனுக்கள் ஐந்து பெயர். அவர்களுள்
ஒருவர் விவஸ்வா னென்றவரின் புத்திரர். இவருக்கு ஸாவர்ணர் எனப்
பெயர். மற்ற நால்வரும் பரமேஷ்டி யென்ற பிர்மாவினுடைய மக்க
ளர். அவர்களுக்கு மேருஸாவர்ணர் எனப் பெயர். ஓ அரசனே;
இவர்கள் தக்ஷனென்ற பிரஜாபதியினுடைய பெண்ணின் வயிற்றில்
பிறந்த பேரன்கள். நீடியகாலம் மேரு பர்வதத்தின்மேலிருந்து பெருந்
தவங்களை யநுஷ்டித்தவர்கள். ஆகையாலேயே மேருஸாவர்ணர்
எனப் பெயருண்டாயிற்று. ருசி யென்ற பிரஜாபதியின் புத்திரரே
ரௌச்சியர் என்ற மனு. இவருக்கே பூதி யென்றவளிடம் ஜனித்த



வரே பௌத்தியர் என்ற மனு. இதுவரையில் இவ்வேழுபெயர்களும்
மனுப்பட்டத்திற்கு வராதவர். இனி வரப்போகின்றவர். ஸாவர்ண
மனுகாலத்தி லுண்டாகப்போகிற ஸப்த ரிஷிகளைக் கூறுகின்றேன் கேள்.
பரசுராமன், வியாஸர், அத்திரி குலத்திற் பிறந்த தீப்திமான், பரத்து
வாஜரது குலத்திற் பிறந்த துரோணாசாரியரது மகனான அசுவத்தாமா
வென்ற மகா தைரியசாலி, கௌதமரிஷியின் குமாரனான சரத்வா
னென்ற கௌதமன், குசிக குலத்திற் பிறந்த காலவ ரென்றவர், கசியப
மரபிற்றோன்றிய ருருவென்றவர் இவ்வேழு பெயர்களும் இனி வரப்
போகிற ஸாவர்ண மனுவந்திரத்திற்கு ஸப்த ரிஷிகளாகப் போகின்றவர்.
இவர்கள் பிர்மாவிற்கு ஸமமானவர்களும், மகா தன்னியர்களும், பிறப்
பாலும் தவத்தாலும் மந்திரங்களைக் கண்டு வெளியிடுவதாலும் பெய
ர்பெற்ற, புகழை யுடையவர்களாய்ப் பிர்மலோகத்தில் மேன்மையான
பிரதிஷ்டையை அடைவார்கள். எவர் எதிர், நிகழ், கழி யென்ற முக்காலத்
தையு மறிந்தவர்களோ, எவர் சுவயமாகவே நல்ல தவத்தால் பெருமை
யை யுடைந்தவர்களோ, எவர் யோக்கியமான தீர்க்காயுளை யுடை
யவர்களோ, எவர் மந்திரங்களைக் கண்டு அவைகளை விஸ்தாரப்படுத்தல்
முதலியவைகளாலும் எங்கும் நிறைந்த செல்வத்தாலும் பெருமை பெற்
றவர்களோ, இவ்வகைச் சக்தி விசேஷங்களையே ஸப்தரிஷிகளுக்குள்ள
வல்லமைகளாக அறிவாய். கீழ்கூறிய வல்லமைகள் ஏழாயிருக்கும்
தொகுதி. இவைகளாலேயே ஸப்தரிஷிகள் எனப் பெருத்த மேன்பு
டைய அப்பிராம்மணர்களைச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவர்கள்
நீடிய ஆயுள்களை யுடையவர்களாகவும், மந்திரங்களை யுண்டுபண்ணுகிற
வர்களாகவும், உலகங்களுக்கு ஈசுவரர்களாகவும், முக்கால ஞானிகளா
கவும், தங்களறிவால் எல்லாவற்றையும் புலப் படுத்துகிறவர்களாகவும்
அநேக கோத்திரங்களை யேற்படுத்துபவ ராகவு மிருப்பார். மேலும் கிரு
தம் முதலிய எல்லா யுகங்களிலும் அடிக்கடி வருணங்களையும், ஆசிரம
ங்களையும் எல்லா விடங்களிலும் அந்த மகாபாக்கியவான்களும் சத்தி
யம் தருமமிவைகளில் நெறியை யுடையவர்களுமான ஸப்தரிஷிகள்
சீர்திருத்திக் கொண்டே யிருப்பார்கள். அவர்களுடைய வம்சத்தி லுதி
த்தவர்களே தருமங்க ளழிந்தபொழுதெல்லாம் அடிக்கடி மந்திரங்க
ளையும், பிராம்மணங்களையும் வெளியிடும் வேதவாக்கியங்களை வெளிப்ப
டுத்திக்கொண்டே யிருப்பார்கள். பிறர்களுடைய உபகாரத்திற்காகவே
வேண்டிய வரங்களைக் கொடுத்துக் கொண்டே யிருக்கும் மகரிஷிகளு
க்குக் காலமும் வயதும் பிரமாணமில்லை. ஓ! ஜனமேஜய ராஜனே!

இவ்விதம் ஸப்தரிஷிகள் இன்னாரென சுருக்கமாயுரைக்கு என்னால் கூறப்பட்டது. இனி வரப்போகிற ஸாவர்ண மனுவின் குமாரர்களின்னாரெனக் கூறுகின்றேன் கேள். வரீயான், அவரீயான், ஸம்மதன், திருதிமான், வசு, சரிஷ்ணு, அதிருஷ்ணு, வாஜன், சுமதி என்ற இவர்களே ஸாவர்ண மனுவின் குமாரர்கள். முதலாவது மேருஸாவர்ண மனுவந்திரத்தில் புலஸ்தியரது புத்திரனான மேதாதிதி, கசியபரது குமாரனான வசு, ஜ்யோதிஷ்மானான பார்க்கவர், மிகுந்த வொளியையுடைய அங்கிரஸ், வஸிஷ்ட புத்திரரான ஸவனன், அத்திரி மைந்தனான ஹவ்யவாஹனன், புலஹரது மகனான ஸத்தியன் என்ற இவ்வேழு பெயர்களும் ஸப்தருஷிகள். இதற்கு ரோகித மனுவந்தரமெனவும் பெயர். இதில் தேவர்களின் கணங்கள் மூன்றேயுள்ளவை. தக்ஷரது புத்திரரான ரோஹிதனென்ற பிரஜாதிபதியினுடைய பிள்ளைகளே அவர்கள். இம்மனு புத்திரர்களாரெனில் திருஷ்டகேது, பஞ்சஹோத்திரன், நிராகிருதி, பிருதுசிரவன், பூரிதாமா, ருர்வா, கோவஷ்டன், ஹதன், சயன் இவ்வொன்பது பெயர்களுமாம். பத்தாவதான மனுவந்தரமாகிற இரண்டாவது மேருஸாவர்ண மனுவின் காலத்தில் புலஹபுத்திரனான ஹவிஷ்மான், ப்ருகுவம்சத்திலுதித்த ஸுக்ருதி, அத்திரிகுலத்திற் பிறந்த ஆபோமூர்த்தி, வஸிஷ்டஸந்ததியில் பிறந்த அஷ்டமன், புலஸ்திய குமாரனான பிரமதி, கசியப கோத்திரத்திலுண்டான நபோகன், அங்கிரஸ்ஸின் புதல்வனாகும் ஸத்தியன் என்ற இவ்வேழு பெயர்களும் ஸப்தரிஷிகள். தேவகணங்களும் ரிஷிமந்திரங்களாகின்ற அவ்விரண்டுகளுமே. சுதன், உத்தமௌஜன், நிகுஷ்டஞ்ஜன், வீரியவான், சதாநீகன், நிராமித்திரன், விருஷஸேனன், ஜயத்திரதன், பூரித்யும்னன், ஸுவர்ச்சன், இப்பத்துப் பெயர்களும் மனுபுத்திரர்கள். பதினொராவது மனுவந்தரமாகின்ற மூன்றாவது மேருஸாவர்ண மனுவின் காலத்தில் அம்மனுவந்தரத்திற்கு ஸப்தரிஷிகளைக் கூறுகின்றேன் கேள். கசியபரது மைந்தனான ஹவிஷ்மான், ப்ருகு மைந்தனான ஹவிஷ்மான், அத்திரியின் புதல்வனான தருணன், வஸிஷ்டரது புத்திரனான அநகன், அங்கிரஸ்ஸின் மகனான உத்திஷ்டனன். புலஸ்தியரது குமாரனான நிசசரன், புலஹரின் தநயனான அக்நிதேஜஸ் இவ்வேழு பெயர்களும் இனிவரும் மனுவந்தரத்தின் ஸப்தரிஷிகளாம். அப்பொழுது பிர்மாவின் குமாரர்களான மூன்று கணங்கள் தேவர்களாவார். அம்மனுவிற்கு ஸம்வர்த்தகன், ஸுசர்மா, தேவாநீகன், புருத்வகன், க்ஷேமதன்வா, திருடாயு, ஆதர்சன், பண்டகன், மனு என்று ஒன்பது புத்திரர்கள். நான்காவது



மேருஸாவர்ண மனுவந்தரத்திற்கு வஸிஷ்ட புத்திரனான த்யுதி, அத்திரி மரபனான ஸுதபன், அங்கிரஸ்ஸின் மகனான தபோமூர்த்தி, கசியபரது கோத்திரஜனான தபஸ்வீ, புலஸ்திய வம்சத்தியர் தபோசனன், புலஹரது ஸந்ததியிலுதித்த தபோரதி, பிருகுவின் அம்சம்பெற்ற திருதி இவ்வேழு பெயர்களும் ஸப்தரிஷிகள். அந்த மனுவந்தரத்திற்குப் பிர்மாவின் மானஸ புத்திரர்களான ஐந்து கணங்களே தேவர்கள். தேவவாயு, அதூரன், தேவசிரேஷ்டன், விதூரதன், மித்திரவான், மித்திரதேவன், மித்திரசேனன், மித்திரகிருத், மித்திரபாகு, ஸுவர்ச்சன் இப்பத்துப் பெயர்களும் மனு புத்திரர்கள். பதின்மூன்றாவதான மனுவந்தரத்திற்கு திருதிமான் என்ற அங்கிரஸ்ஸின் கோத்திரஜன், ஹவ்யியபன் என்ற புலஸ்திய வமிசத்தியவன், தத்வதருசீ யென்ற புலஹரது சைத்திரான், நிருத்ஸுக னென்ற பிருகுரிஷி மரபன், நிஷ்பிரகம்பனென்ற ஆத்திரேயன், நிர்மோஹனென்ற காசியபன், ஸுதபன் என்ற வாஸிஷ்டன் இவ்வேழு பெயர்களும் ரிஷிகள். தேவகணங்கள் மூன்றெனப் பிர்மாவினாற் கூறப்பட்டிருக்கின்றது. பதின்மூன்று குமாரர்கள் இந்த ருசியென்ற மனுவிற்குப் பிறந்தார்கள். அவர்களாரெனில்:- சித்திரஸேனன், விசித்திரன், நயன், தருமபிருதன், திருதன், ஸுநேத்திரன், க்ஷத்திரவிருத்தி, ஸுதபன், நிர்ப்பயன், திடன், முதலியவர்களாம். பதினான்காவது மாற்றமாகிய பௌத்திய மனுவந்தரத்திற்கு பார்க்கவனான அதிபாகு, ஆங்கிரஸஸான ஸுசிரன், ஆத்திரேயனான யுக்தன், வாஸிஷ்டனான சுக்கிரன், பௌலஹனான அஜிதன், காசியபன், பௌலஸ்தியன் என்ற இவ்வெழுவரும் ஸப்தரிஷிகள். இவ்விதம் ஸகல மனுவந்தரங்களிலுமுதித்த இவர்களுடைய பெயர்களைக் காலையிலெழுந்திருந்து கீர்த்தனம் செய்வதால் சுகம் விருத்தியடைகின்றது. பெருத்த கீர்த்தியை யடைகிறான். அவ்விதமே ஆயுளும் நீடிக்கும். இந்த மனுவந்தரத்திற்கு தேவகணங்கள் ஐந்து. தரங்கபீரு, வப்பிரன், தரஸ்வான், உக்கிரன், அபிமானி, ப்ரவீணன், ஜிஷ்ணு, ஸங்கிரந்தனன், தேஜஸ்வீ, ஸபலன் என்ற இவர்களெல்லாம் பௌத்தியமனுவின் குமாரர்கள். பௌத்திய மனுவினது அதிகாரம் பூர்த்தியாகும் பொழுது கல்பமே முடிகின்றது. இவ்விதம் பதினான்கு மனுக்களுடையவும் சரித்திரம் கூறப்பட்டது! ஓ! அரசனே! அம்மனுக்களாலேயே இப்பூமி முழுவதும் சமுத்திரம் வரையில் கிராமங்கள் பட்டணங்களுள்பட எங்குபார்த்தாலும் ஒவ்வோர் ஆயிரம் யுககாலம் அதிகாரஞ் செலுத்தப்படும்

அப்பொழுதப்பொழுது அவரவர்களாலாளப்படும் பிரஜைகளோடும் தவத்தோடும் அவரவர் காலாந்திமத்தில் எல்லாம் சங்கரிக்கவும்படும்.

7-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 8-வது அத்தியாயம்

ஜனமேஜயன் வினவுகின்றான்:— ஓ மஹா புத்திமானான பிராம்மணோத்தமனே மநுவந்தரத்தின் கணக்கையும், யுகங்களுடைய கணக்கையும், பிர்மாவினுடைய பகற்கால அளவையும் எனக்குக் கூறக்கடவீர்.

வைசம்பாயனர் கூறுவது:— சூரியன் உலகத்தில் வழங்கப்படும் பகலிரவைப் பகுக்கின்றான். அக்கணக்கைக்கொண்டு மற்ற அளவையும் சொல்லுகின்றேன். ஓ அரசனே! பதினைந்து நிமிஷங்கள் கூடியது ஓர் காஷ்டை, காஷ்டை முப்பது கூடியதோர் கலை, முப்பது கலையோர்முகூர்த்தம், முப்பது முகூர்த்தங்களால் சந்திர சூரிய கதியையுடைய ஓர் அஹோராத்திரமெனக் கணக்கறிந்தவர் கூறுகின்றனர். இவ்வஹோராத்திரமே எல்லோர்களுடைய கணக்குகளிலும் எப்பொழுதும் விசேஷமாகத் தொடங்கப்படுவது. இவ்விராப்பகல் பதினைந்து கூடியது ஓர் பக்ஷம், இப்பக்ஷமிரண்டு கூடியதோர் மாதம், இம்மாதமிரண்டு கூடியதோர் ருது. அப்தமென்றால் அயனமெனப்படும். இவ்வயனமென்றது மூன்று ருதுக்கள் கூடியது. இவ்வயனம் தக்ஷிணமென்றும் உத்தரமென்று மிரண்டென கணக்காளிகளாற் கூறப்பட்டிருக்கின்றது. பக்ஷங்களிரண்டுகூடிய வோர்மாதமானது பிதுரு தேவர்களுக்கோர் அஹோராத்திரமெனக் காலமறிந்தவர் கூறுகின்றனர். கறுத்த கிருஷ்ண பக்ஷமானது அந்தேவர்களுக்குப் பகல். வெளுத்த சுக்கில பக்ஷமானது இரவு. ஓ அரசனே! ஆகையால் பிதுரு தேவர்களுக்கு கிருஷ்ணபக்ஷத்தில் சிராத்தம் செய்யவேண்டியது. மனிதர் அளவாலேற் பட்டிருக்கும் ஒரு வருஷமானது தேவர்களுக்கோரஹோராத்திரம். அதில் உத்தராயணம் பகல், தக்ஷிணாயன மிரவு என உண்மையையறிந்த அறிவாளிகளாற் கூறப்பட்டிருக்கின்றது. இக்கணக்காலேற்படும் தேவவருடம் பத்துக்கூடியது ஒருமநுவினஹோராத்திரம். அவ்வஹோராத்திரம் பத்துக்கூடியது மநுவிற்கோர் பக்ஷம். இப்பக்ஷம் பத்துக்



கொண்டது மநுவிற்கோர் மாதம். இம்மாதம் பன்னிரண்டு கொண்டது மநுக்களுக்கு ஓர் ருதுவென வுரைக்கப்பட்டது. மூன்று ருதுக்களாலேற் அயனமும், இவ்வயன மிரண்டாலொரு வருஷமும், மநுவின் வருஷகாலம். இவ்விதமுள்ள நாலாயிரம் வருஷங்கள் கூடினால் கிருதயுக மெனப்படும். அவ்விதம் நூறு பங்கு ஓர் யுகசந்தி காலம் சந்தியாம்ச காலங்களுமவ்வளவே. மூவாயிர வருஷங்கள் கூடினால் கணக்குப்படி திரேதாயுகமாகும். அந்த யுகத்திற்கு மவ்விதமே மூன்னூறு வருஷங்கள் யுகசந்தி காலங்கள். ஸந்தியாம்ச காலமு மவ்விதமே. அவ்வளவா யிரண்டாயிரம் வருஷங்கள் கூடினால் துவாபர யுகமாகும். அதற்கும் இருநூறு வருஷங்கள் யுகஸந்தி காலங்கள். அவ்விதமே சந்தியாம்ச காலமும் கலியுகமானது. மநுவின் வருஷத்தாயிரங்கொண்டதென கணக்காளிகளாற் கணக்கிடப் பட்டிருக்கின்றது. அந்த யுகத்திற்கும் நூறு வருஷகாலம் யுகசந்தி. ஸந்தியாம்சமுமவ்வளவே. இந்தயுகம் பன்னீராயிரம் கூடினால் யுகஸங்கியை யெனப்படும். மேலும் தேவமானத்தால் அந்த யுகக் கணக்கை என்னிடமிருந்து கேள். கிருதம், திரேதா, துவாபரம், கலி, என யுகங்கள் நான்கு. ஓ! வேந்தனே அந்த சதுர் யுகங்களெழுபத்தொன்று கூடினால் ஒரு மநுவந்தரமென விலக்கண நிபுணர்களாற் கணக்கிடப் பட்டிருக்கின்றது. தக்ஷிணம், உத்தரமென விரண்டயனங்களுங் கூறப்பட்டன. மநுவானவர் எந்த அயனத்தில் இலயிக்கின்றாரோ அவ்வயனத்தின் முடிவில் வேறு மநுவொருவர் இக்காலத்தை யாள ஏற்படுகின்றார். ஓராஜேந்திரனே இவ்விதம் மநுவந்தர மொவ்வொன்றுங் கடக்கும்பொழுது தேவவருஷங்கள் பதினாயிரம். இவ்வயுதமென்பது பிர்மாவிற்கு ஓர் பகல். இதுவே கல்பமெனவும் சொல்லப்படும். பிறகு ஆயிரம் யுகம்வரையில் பிர்மாவிற்கு இராக்காலமெனப் பண்டிதர்களாற் கூறப்படுகின்றது. அக்காலங்களில் பலபல மலைகளும் காடுகளும் நிறைந்த இப்பூமியானது ஜலத்தில் முழுகிப்போகின்றது. அவ்விதமாயிரம் யுகங்களானபொழுது பிர்மாவிற்கு ஓர் அஹோராத்திரகாலம். நமக்குப்பூர்ணமான வோர்கல்பம். ஓ பரதகுலமன்னனே! உனக்கு எழுபது யுகங்களுடைய காலஅளவு முழுமையும் சொல்லப்பட்டது. மேலும் கிருதம், திரேதா முதலிய யுகங்களும், மநுவின் காலமும், கீர்த்தியை கொடுக்கத்தகுந்த பதினொன்று மநுக்களும் என்றுரைக்கலாயின. வேதங்களிலும், எல்லாப் புராணங்களிலும் பிரஜைகளுக்கு

அதிபதிகளாய்க் கூறப்பட்ட இம்மனுக்களுடைய நாமகீர்த்தனமானது மிருந்த தனங்களையும் புகழையும் கொடுக்கத்தக்கது. ஒவ்வொரு மனுவின் காலாந்திமத்தில் பிரளயமும், பிரளயாந்திமத்தில் சிருஷ்டியும் உண்டாகும். இவைகளைப்பற்றி இவ்வளவவ்வளவென ஆயிரம் வருஷங்களாலும் கூறமுடியாது. இவ்விதம் பிரளயகாலத்தில் சகலமும் சங்கரிக்கப்பட்டாலும் பிரமரிஷிகளுடன் கூடிய தேவர்கள்மாத்திரம் தங்கள் தவத்தாலும், பிரமநிஷ்டையாலும் வேதாத்தியயனத்தாலும் சங்கரிக்கப்படாமல் இருந்து நிற்கின்றார்கள். ஓ! ராஜனே! ஆயிரம் யுகங்கள் நிறைந்தபொழுது கல்பம் முடிவடைகின்றது. அப்பொழுது எல்லாப்பிராணிகளும் சூரியகிரணங்களாற் றகிக்கப்படும். பிறகு சகலப்பிராணிகளும் பிரமாவை முன்னிட்டுக்கொண்டு பன்னிரண்டாதித்தியர்களோடுங்கூட, யோகசுவரூபியாயும், யோகீசுவரனாயும், பிறப்பற்றவனாயும், தன்னையடைந்தவர்களை நழுவவிடாதவனாயும், தேவனாயும், தேவோத்தமனாயும், சகலபாபங்களையுந்தீர்ப்பவனாயும், ஸர்வேசுவரனாயும், தனது சரீரமாகிற இச்சேதனாசேதனமயமான வுலகத்தை முற்றிலுமறிந்தவனாயுமுள்ள நாராயணனை அடைகின்றன: யாதொருவன் கல்பம் முடிந்தபின்பு அடிக்கடி ஸர்வப்பிராணிகளையும் சிருஷ்டிப்பவனோ, அறியமுடியாத ஸநாதனனாயுமுள்ள அந்த தேவனுக்குக் கீழ்ப்பட்டது இவ்வுலகம் முழுமையும். நான்கு சமுத்திரங்களு மொன்றாய்க்கூடி ஒரே ஜலமயமான அந்தப்பிரளயராத்திரியில் நாராயணனானவர் பிரமாவின் வருஷங்களால் ஆயிரம் வருஷகாலம் யோகநித்திரையை அடைகின்றார். அதாவது பிரமாவிற்கும் பிதாவான நாராயணன் எவ்வளவுகாலம் யோகநித்திரைசெய்வாரோ அவ்வளவுகாலமும் கல்பராத்திரிகாலமெனப்படும். இவ்விதம் ஆயிரம் பிரமவருஷங்கள் சென்றபின்பு பகவானாயும், பிதாமஹனாயுமுள்ள பிரமாவென்ற நாராயணனானவர் மறுபடியும் பிராணிகளைப்படைக்கவேண்டுமெனக் கருதித் தன்மனதை வைக்கின்றார். அதுவே பழைய ஸ்மிருதியென்றும், அதுவே லீலையென்றும், அதுவே அவரது வினையென்றும், இவைகளே அவரதுஸ்தானங்களென்றும், அதுவே கல்பாரம்பமென்றுஞ் சொல்லப்படும். பிறகு முன் ஆதித்தனால் கொளுத்தப்பட்ட ஸகலப்பிராணிகளும் மறுபடியும் தேவராகவும், ரிஷிகளாகவும், யக்ஷர்களாகவும், கந்தர்வர்களாகவும், பிசாசங்களாகவும், உரகங்களாகவும், இராக்ஷதர்களாகவும், படைக்கப்படுகின்றனர். ஓ! பரதகுலோத்தமனே! வஸந்தம் முதலிய ருதுக்கள்தோறும் எப்படி ருதுக்க



ளுடைய குறிப்புகள் பலபலப் பிரகாரமாய் வருஷங்கள்தோறும் அவைகளே மாறிமாறிக் காணப்படுகின்றனவோ அப்படியே பிரளயங்களும் பிரளயாந்திமத்தில் சிருஷ்டிக்கிரமங்களும் மாறிமாறி ஏற்படும். ஆனால் எந்தமனிதர்களும், தேவர்களும், மற்றெல்லா மகரிஷிகளும் அடிக்கடி நல்ல தருமங்களை அனுஷ்டித்து மனம்பற்றற்று சுத்தசித்தமுடையவர்களாயாகின்றனரோ அவர்கள் மாத்திரம் இந்த கல்பாரம்பம் முதலிய யாதொரு சிருஷ்டிகளிலும் படைக்கப்படுவதில்லை. ஏனெனில் இவர்கள் முக்தர்கள். மேற்கூறியதுபோல அந்த சிருஷ்டி முழுமையும் கிரமமாக காலக்கணக்கையறிந்த பகவான் ஆயிரம் யுகங்களாகிற பகலணக்கானபொழுது, மறுபடியும் ஆயிரம்யுகங்களின் காலங்களை இராத்திரியாக்குகின்றார். அப்பொழுது தன்னாற் படைக்கப்பட்ட ஸகலப்பிராணிகளையும் சங்கரிக்கின்றார். மறுபடியும் கல்பாதியிற் படைக்கின்றார். இவர் யோகிகளுக்குக் காணக்கூடியவர். மற்றவர்களுக்கறிய முடியாதவர். தேவர்களுக்கெல்லாம் பெரியவர். ஆகையாலிவர் பெரிய தேவனெனப்படுவர். ஸகலவுலகங்களையும் ஸம்ஹரிப்பதால் ஹரியெனப்படுவர். பிரபுவான நாராயணனென அவரதுபெயர். ஓ! பரதஸிரேஷ்டனான ஜனமேஜயனே இப்போதிய வைவஸ்வத மனுவினுடைய சிருஷ்டியை யுரைக்கின்றேன் கேள். எந்த விருஷ்ணி குலத்தில் எல்லா அசுரர்களுடைய விநாசத்திற்காகவும், மற்ற சகலப்பிராணிகளுடைய க்ஷேமத்திற்காகவும் பிரபுவாயும் மஹாத்மாவாயுமுள்ள ஹரியானவர் அவதரித்தாரோ அந்த விருஷ்ணி வமிசத்தின் பிரசங்கத்தினால் பழமையான சரித்திரத்தைக் கூறுகின்றேன்.

8-ம் அத்தியாயம் முற்றிற்று

## 9-வது அத்தியாயம்.

வைசம்பாயனர் கூறுகின்றார்:— ஓ! சத்ருதாபனனே கசியபரிடமிருந்து தாக்ஷாயணியான அதிதியினிடம் விவஸ்வானென்றவர் பிறந்தார். அவருக்குத் துவஷ்டாவின்மகளும் மூவுலகங்களிலும் கீர்த்திபெற்றவளுமாகிய ஸஞ்ஞை என்றவள் பாரியையானாள். அந்தபகவானும் மஹாத்மஹாவாயுமுள்ள சூரியனுடைய அப்பாரியையானவள் அழகிய வுருவத்தையும் யௌவனத்தையுமுடையவளானதையால் தனதுபர்த்

தாவின் ரூபத்திற்கு விஸ்பத்தை யடையவில்லை. ஓங்கிவிளங்கும் நல்ல
தவத்தோடுகூடிய இந்த ஸுரேணுவென்ற ஸம்க்ஞாதேவியானவள்,
சூரியமண்டலத்திலுள்ள அவ்வாதித்தியனுடைய காந்தியினால் சரீரத்தின்
கொளுத்தப்பட்டவளாய் அச்சரீரம் கன்னிப்போய் அழகுகெட்டுப்போ
யினள். அப்பொழுது அவ்வாதித்தனைநோக்கிச் சிந்தித்தாள் ஆ! இது
ஆச்சரியம். இவ்வளவொளியோடுகூடிய இம்மண்டலத்தில் நிலையாய்
வசித்தும், இவ்வாதித்தியன் மறிக்கவில்லையேயென தொழிந்தனள்.
ஆகையால் கசியபரிஷியின் குமாரனை அவ்வாதித்தன் மார்த்தாண்ட
னென்ற பெயரையடைந்தான். ஓ! ராஜனே! எப்பொழுதும் விவஸ்
வானுடைய காந்தியானது மிகவும் கொடூரமானதாயி மூவுலகங்க
ளையும் கொளுத்துகின்றது. ஓ! குருகுலமன்னனே மிகுந்த தாபத்
தோடுகூடிய ஆதித்தன் ஸம்க்ஞையென்ற தனது பாரியையிடம் மூன்று
மக்களைப்பெற்றான். அவற்றுள் ஒன்றுபெண். மற்றவரில் வைவஸ்
வதனென்ற மனு முதல்வன். சிராத்தங்களுக்குத் தேவனும், பிரஜை
களுக்கு அதிபதியாயுமுள்ள யமனிரண்டாமவன். யமுனை யென்றவள்
மூன்றாமவள். இவருள் யமனும் யமுனையு மிரட்டையாய்ப் பிறந்தவர்கள்.
பிறகு ஸம்க்ஞையானவள் ஆதித்தியனுடைய கொடூரகாந்தியுள்ள வுருவ
த்தைச் சகிக்கமுடியாமல், தனது நிழலைக்கொண்டு தனக்கொரு ஸபத்தி
னியைப் படைத்துக்கொண்டனள். மாயையினால் படைக்கப்பட்ட
மற்ற ஸம்க்ஞையானவள் உடனே பிரத்தியக்ஷமாய் அவளுக்கெதிரில்
வந்து கைகூப்பி நமஸ்கரித்து வணக்கமாய் நின்றுகொண்டு அத்
தேவியைநோக்கி அழகிய புன்னகையுடைய ஓ! தேவியே என்னாலாக
வேண்டிய காரியம்யாது? உனது வசனத்துக்குக் கீழ்ப்பட்டு நிற்கின்றேன்,
நல்லழகுடையோளே உனக்குப் பிரியமான காரியத்தி லாக்ஞையிடு
வாயெனக் கேட்டாள். ஓ! நரேசுவரனே அவ்விதம் வேண்டிக்கொண்ட
மாயாதேவியை நோக்கி உண்மையான ஸம்க்ஞாதேவி கூறுகின்றாள்
ஓ! சாயாதேவியே நான் எனதுதகப்பன் வீட்டிற்குப் போகின்றேன்
நான் வரும்வரையில் உன்னாலிவ்வீட்டிலெனக்காக யாதொருமனோவிகா
ரமுமில்லாமல் வசிக்கப்படவேண்டும். இவ்விரண்டு ஆண்குழந்தைகளும்,
சிறிய இடையையுடைய இப்பெண்குழந்தையும் எனக்காக என்னைப்
போல வெகுமதிப்பாய்க் காப்பாற்றத்தக்கவர்கள். பகவானை பர்த்தா
விற்கு இதை யொருக்காலும் வெளியிடக்கூடாது. என, நியமித்த
வைகளைக்கேட்டு சாயாதேவியானவள் ஓ! தேவியே என் தலைமுடி
யைப் பிடிக்கும்வரையிலும் அல்லது சாபமிடும் வரையிலும் உனது



இவ்வந்தரங்கத்தை உனக்காக நான் வெளியிடமாட்டேன், உனது ஸௌ
க்கியம்போல ஜனித்த வீட்டிற்குச்செல்லுவாயென்றனள்.

**வைசம்பாயனர் கூறுவது!—** இவ்விதம் ஸம்க்ஞையானவள் தனது
ஸவர்ணையை நியமித்துப் பிறகு அவள் மொழிந்ததையு மொப்புக்கொ
ண்டு மிக்க தபோவதியான இவள் வெட்கப்பட்டவள்போலத் தனது
தந்தையான துவஷ்டாவினது சமீபத்தையடைந்தாள். அப்பொழுது
பிதாவானவர் ஓ! பெண்ணே! நீ இங்கு நிற்காதே உன் கணவன் வீட்
டிற்கே போ போ வென அடிக்கடி அதட்டி அதட்டிக் கூறினார்.
ஆனதால் பிறந்தகத்தைவிட்டு ஓர் பெண்குதிரைபோன்ற வுருவத்தை
யெடுத்துத்தனது வுருவத்தை முற்றிலும் மறைத்துக்கொண்டு யாதொ
ருமாசுமற்றவளாக உத்தரகுருக்ஷேத்திரமென்ற தேசத்தையடைந்து புற்
களைமேய்ந்து காலத்தைக் கழித்துவந்தாள்.

இங்கு ஆதித்தனும் இரண்டாவது மாயாதேவியை ஸம்க்ஞையா
கவே நினைத்து இவளிடமுமோர் புத்திரனைத் தனக்கு ஸமமாகப்படை
த்தனன். இம்மைந்தன் மூத்த குமாரனை மனுவிற்குச் சமமாயிருந்தப
டியால், இவனுக்கும் ஸாவர்ணமனுவென அப்பெயரையே மறுபடியும்
வைத்தான். தனக்குச்சமமென்று பொருள்படு மிச்சாவர்ணமென்ற
சொல் இப்புதல்வனுக்கே பொருந்தியது. இவளிட மிரண்டாவதோர்
மகன் பிறக்க அவனுக்குச் சனைச்சரனெனப்பெயரிடப்பட்டது. இவனே
சனீசுவரனென்பான். அப்பொழுது இச்சாயாதேவியாகிய ஸம்க்ஞை
யானவள், தனது குழந்தைகளிடம் அதிகவன்பும் மூத்தவர்களிடம்
குறைந்தவன்பும் பாராட்டி நடந்தாள். இப்பக்ஷபாதத்தை மனுவானவன்
பொறுத்தான். யமனோ பொறுக்கவில்லை. ஆகையால் சூரியகுமார
னான யமனானவன் கோபத்தாலும், வாலிபத்தாலும், இனிவருந் தேவ
காரியபலத்தாலும், அச்சாயாதேவியாகும் ஸம்க்ஞையை அதட்டிப் பேசி
னான். பிறகு இவ்வித முதாசீனித்த யமனைக்குறித்து குரோதத்தினால்
சாவர்ணமனுவின் தாயான சாயாதேவி மிகவும் துக்கப்பட்டவளாய்
கொண்டு உன்னுடைய இக்கால் அழுகிவிழக்கடவதெனச் சபித்தாள்.
உடனே யமனும் அஞ்சலியுடன் பிதாவிற்கு அதுமுழுவதும் தெரிவி
த்துக்கொண்டான். மேலும் சாயாதேவியான ஸம்க்ஞையாகிற மாதா
வின் வாக்கினால் வருத்தப்பட்டவனாகவும், சாபத்தின் பயத்தினால் விய
சனப்பட்டவனாகவும் எப்படி இச்சாபம் நிவிருத்தியாகுமோ அவ்வழி

யையறிந்து அப்பொழுது பிதாவனிடம் சென்று தெரிவிக்கின்றான். ஓ! தந்தையே எல்லாக் குழந்தைகளிடமும் தாயார் எப்பொழுது மன்பாயிருக்க வேண்டியிருக்க, இவள் எங்களைவிட்டு ஸாவர்ணனையும் சனியையுமட்டிலன்பாய் வளர்க்கின்றனள். ஆகையாலவளிடத்தில் கோபித்து என்னால் என்னுடையகால் தூக்கிக் காட்டப்பட்டது. அவளது மேலிற்படவில்லை. வாலிபத்தாலோ அறியாமையாலோ செய்யப்பட்ட இக்காரியத்தை தாம் பொறுக்க வேண்டும். அப்பொழுது அதற்குப் பதிலாகத் தாயானவள் என்னை ஓ மகனே உன்னாற் போற்றத் தக்கவளான யான் எந்த காரணத்தாலிகழப் பட்டேனோ, ஆகையாலிக்கால் கீழேவிழும் சந்தேகமில்லை எனச்சபித்தாள். ஓ! தந்தையே குழந்தைகளொரு சமயம் கெட்டவர்களாயிருக்கக் கூடும். அக்குழந்தைகள் மீது தாயொருபொழுதும் கெடுதல் நினைக்கமாட்டாள். ஓ! உலகேசனே மிகுந்த வொளியுடையோனே! தாயினாற் சபிக்கப்பட்டேன். ஓ! கிரணங்கள் நிறைந்தவனே உம்முடைய வருளால் எனதுகால் விழாமலிருக்க வேண்டுமென மொழிந்த மைந்தனைப் பார்த்து, விவசுவான் கூறுகின்றான். ஓ! புத்திரனே தரும நெறியறிந்தவனும், சத்திய வாதியாயுமுள்ள உன்னையெக்காரணத்தாற் கோபம் வந்தடைந்ததோ, ஆகையாலிவ்விஷயத்திலெனக்குப் பெரிய சந்தேக முதிக்கின்றது. இதற்குத் தக்க காரணமிருக்க வேண்டும். மாதாவினுடைய வாக்கை மாற்றுவதற்கு என்னால் முடியாது. எப்பொழுது உன் பாதத்தினின்றும் மாமிசத்தைப் புழுக்களெடுத்துக் கொண்டு பூமியை குறித்துப் போகுமோ, அதற்குப் பிறகு ஓ! மிகுந்த அறிவையுடைய மைந்தனே சுகத்தை யடைவாய். அப்பொழுது தாயாரின் வாக்கும் பலித்தது போலுண்மையாகும். சாபத்தின் பரிகாரத்தினால் நீயும் ரக்ஷிக்கப் பட்டவனாகத் திகழ்வாய். பிறகு ஆதித்தியனும் ஸம்க்ஞையை யடைந்து, ஓ மனைவியே எல்லாக் குழந்தைகளும் சமமாயிருக்க எதற்காகக் கடைய வர்களான யிருவர்களிடமும் அடிக்கடி அதிக சினேகத்தைப் பாராட்டுகின்றாயென்றார் அதைக் கேட்டவள் சரியான பரிகாரத்தைச் சூரியனுக்குச் சொல்லவில்லை. மேலும் தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு உபாயத்தாலுண்மையை யுரைக்க வாலோசித்தாள். ஓ! குரு குல மைந்தனே பகவானான சூரியன் அப்பொழுதவளை நசிக்கும்படி சபிக்க வேண்டுமென வெண்ணங்கொண்டு அவளது தலைமுடிகளைக் கையாற் பற்றினார். அப்பொழுது காலாவதியும் தீர்ந்து விட்டபடியால், அச்சாயை



யும் விவஸ்வானுக்கு முழுவதும் நடந்தபடியே உண்மையை யுரைத்தனள்.

உடனே சூரியனும் கோபங்கொண்டு துவஷ்டாவண்டைபோனார். துவஷ்டாவும் அச்சூரியனை நியாயந் தவறாது பூஜித்து, கோபத்தாற் கொளுத்த வெண்ணங்கொண்டவரைச் சமாதானப் படுத்தினான். துவஷ்டாகூறுவது; ஓ! ஆதித்தியனே அதிகாந்தியாலிவ்விதமென அறிய முடியாத வும்முடைய வுருவம் நன்றாய் விளங்கவில்லை. அன்றியுமிவ்வுருவத்தைச் சகிக்க மாட்டாமல் அந்த ஸம்க்ஞையானவளிப் பொழுது புல் நிறைந்த வனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாள். நல்ல நடவடிக்கையுடையவளும், எப்பொழுதும் தவத்திலேயே பிரியமுடையவளும், இப்பொழுது பெண் குதிரை வடிவமுடையவளும், இலைகளையே ஆகாரமாகவுடையவளும், மெலிந்தவளும், தீனையும், சடா மண்டல முள்ளவளும், பிரமத் தியானத்திலிருப்பவளும், யானைத்துதிக்கையாற் பறித்தெடுக்கப் பட்ட தாமரை கொடிபோல் வாடினவளும், உத்தமையும், யோகப் பலத்துடன் கூடியவளுமான உமது பாரியையை யோகத்திலிருந்து நீர் பார்ப்பீர். அப்பொழுது என் சொல்லுண்மையாகும். மேலும் வைரிகளிடம் வெற்றியையுடைய தேவனே உமது மனதிற்கு மனுகூலமாய்த் தோன்றினால், உமது வுருவத்தை அழகிய தாகச் சீர் திருத்துகின்றேன் என்றான். இயற்கையாய் விவஸ்வானுடைய வுருவமும் கீழும் மேலும் பக்கங்களிலும் ஸமமாயும் நிறைந்ததாயுமிருந்ததால் எங்கு பார்த்தாலுமொளி வீசி உருவமிருக்குமிடமே தெரியப் படாமலிருந்தது. ஆகையால் துவஷ்டாவின் வாக்கைச் சூரியனும் வெகுமதித்து அவ்விதமே நல்ல வுருவம் கிடைப்பதின் பொருட்டுத் தன் மண்டலத்தைச் சீர்திருத்தும்படி உத்திரவு செய்தார். பிறகு துவஷ்டாவும் மார்த்தாண்டனாகிய விவஸ்வானுடைய மண்டலத்தைச் சாணையந்திரத்திலேற்றி அதன் காந்தியைக் குறைத்தனன். மண்டல வட்டங் குறைக்கப் பட்ட பொழுது காந்தியும் வேண்டிய அளவில் நின்றது. அப்பொழுது அவ்வுருவம் பார்ப்பதற்கு மிகவு மழகியதாய் விளங்கிற்று. சூரியனது முகத்திலிருந்த காந்தியைச் சீர்திருத்தும் பொழுது முகஞ்சிவந்து போயிற்று. ஆகையாலதுமுதல் சூரியனது முகஞ்சிவந்ததாகவே ஆயிற்று. அச்சமயத்தில் முகத்தினின்று உதிரப்பட்ட அமிசங்களெல்லாம் பன்னிரண்டு சூரியர்களாக வானார்கள். ஆகையால் துவாதசாதித்தியர்களும் ஆதிசூரிய பகவானுடைய முகத்திலுதித்தவர்கள். அவர்கள் பெயர்களாவன:— தாதா, அரி

யமா, மித்திரன், வருணன், அமிசன், பகன், இந்திரன், விவஸ்வான், பூஷா, பர்ஜன்னியன், துவஷ்டா, விஷ்ணு, என்றவர்களாம். இவ்விஷ்ணுவென்றவன் கணக்கில் கடையவனாகிலும் பெருமையில் முதல்வன். பிறகு சூரியதேவன் தனது அமிசர்களாகிய பன்னிருவரையும் பார்த்துச் சந்தோஷப் பட்டார். துவஷ்டாவும், சந்தனம், பூமாலை முதலிய அலங்காரங்களாலும், ஒளிமிகுந்த கிரீடத்தாலும், அவர்களைப்பூஜித்துச்சூரியனைக் குறித்து வருமாறு கூறினான். ஓ! தேவனே உத்தரகுரு என்ற தேசத்தில் பசுமையான காட்டில் பெண் குதிரையின் உருவத்துடன் மேய்ந்துகொண்டிருக்கும் உமது மனைவியிடம்போம் என்றவுடன் சூரியனும் நல்ல உருவத்துடன், தமது மனைவியின் குதிரையுருவத்தைக் காண வேணுமென்ற அவாவால் யோகத் தியானத்தையடைந்து, காந்தியாலுந் தவத்தாலும் எப்பிராணிகளாலும் கலங்கா நெஞ்சமுடையவளாயும், பெண் குதிரை வடிவத்தோடு ஸஞ்சரிப்பவளாயும் எங்கிருந்தும் தனக்கு பயத்தை எதிர்பாராத வளாயுமுள்ள தமது பாரியையாகிய ஸம்க்ஞையைக் கண்டார். உடன் தானும் அசுவரூபங்கொண்டு அவளது ஸமீபஞ்சென்று, தமது பாரியையான அப்பெண் குதிரையை அதே ரூபத்துடன் புணரவேண்டுமென நினைத்து அதன் முகத்திலேற, அப்பெண் குதிரையும் திடீரெனவந்தபடியால் இன்னாரின்னதென்றறியாமல் பரபுருஷ ஸம்யோக பயங்கொண்டு அவ்விஷ்டத்திற்கிடங் கொடாமல் தத்தளித்து அங்குமிங்கும் திரும்பும்பொழுது, அப்பகவானான சூரியனது சுக்கிலம் அப்பெண் குதிரையின் மூக்கிலேயே இரண்டுபிரிவாய் வடிந்தது. அதில் வைத்தியோத்தமர்களான அசுவினீ தேவரிருவர் பிறந்தனர். இவர்களுக்கு நாஸத்தியர் என்றும் தஸ்ரரென்றும் பெயர். இவ்விருவர்களும் மார்த்தாண்டனென்ற எட்டாவது பிரஜாதிபதியினுடைய மக்கள்கள். பிறகு அப்பெண் குதிரையை ஸம்க்ஞையின் இயற்கையான ரூபத்துடன் பார்த்தார். அவ்விதமே தனது அழகான ரூபத்துடன் தனது உருவத்தையும் காண்பித்தார். அவளும் சாந்தமான உருவத்துடன் கூடிய தனது நாயகனைப் பார்த்து ஸந்தோஷித்தாள்.

ஓ! ஜனமேஜயராஜனே! யமனும் தான்செய்த அக்கொடுவினையால் மிகவும் துன்பப்பட்ட மனதுடையவனாய்க்கொண்டு பிராணிகளையெல்லாம் தருமத்தினால் ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வந்தான். ஆனதால் அவனுக்கு தருமராஜனெனப் பெயரமைந்தது. அந்நல்வினையால் மிகுந்த பிரபாவமுடைய அவன் பிதிரு தேவதைகளுக்கு அதிபதியாய் இருக்கையும் உலகங்களுக்கு பாலகனாயிருக்கையு மடைந்தான். மனுவும் பிரஜாதிபதியாயானான். தவத்தையே தனமாகவுடைய ஸாவர்ணனும், இனி வரப்போகின்ற கல்பத்தில் ஸாவர்ணிகன் என்ற மனுவாக வேண்டியதற்காக மேரு பருவதத்தின் மேல் இப்பொழுதுங் கூடக் கொடுமையான தவத்தைச் செய்துகொண்டிருக்கின்றான். அவனுடன் பிறந்த சனைச்சரன் என்பவன், நவக்கிரகத்தினுள் ஓர் ஸ்தானத்தை அடைந்தான். மற்ற அசுவநீ தேவர் இருவரும் தேவர்களுக்கு வைத்தியர்கள் ஆனார்கள். அவ்விருவர்களையும் வணங்கினால், நோயுள்ள குதிரைகளுக்கு நன்மை கைகூடும். துவஷ்டாவானவன் சாணைப் பிடித்த சூரியனுடைய காந்திப்பொடிகளால் ஓர் சக்கிராயுதத்தைச் செய்து, தன்னால் படைக்கப்பட்ட விஷ்ணுவிற்குக் கொடுத்தான். அதுமுதற்கொண்டு அசுரர்களைக் கொல்லவேண்டிய யுத்தத்தில் இவ்வாயுதமானது எதிரியால் வெல்லமுடியாததாயிருக்கின்றது. அவர்கள் தங்கையான யமுநாதேவியும், உலகத்தில் விளங்கும் யமுனை என்ற உத்தமமான நதியாகவானாள். யாவனொருவன் தேவர்களுடைய உற்பத்தியைக் குறிக்கும் இவ்வத்தியாயத்தை கேட்கின்றானோ, மனதில் தரிக்கின்றானோ, அவன் ஆபத்துக்களினின்று விடுபட்டு பெருத்த கீர்த்தியையும் அடைவான்.



9-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 10 வது அத்தியாயம்.

வைசம்பாயனர் கூறுகின்றார்— வைவஸ்வதன் என்ற மனுவிற்கு அவனுக்கு நிகரான வொன்பது புத்திரர்கள் ஜனித்தனர். அவர்கள் யாவர் எனில்;— இட்சுவாகு, நாபாகன், திருஷ்ணு, சரியாதி, நரிஷியன், பிராம்சு, நாபாகாரிஷ்டன், கருஷன், பிருஷத்திரன், என்பவர்களாம். ஓ! பாரதசிரேஷ்டனே! அவ்வைவஸ்வதனென்ற மனுவானவன் சந்தானம் வேண்டுமென்ற இச்சைகொண்டு யாகத்தைச் செய்தான். இந்த யாகமானது ஓ! அரசனே! மித்திராவருணர்களுக்கு, இவ்வொன்பது குமாரர்களும் பிறக்கு முந்தி செய்யப்பட்டது. ஓ! பரதஸத்தம! அந்த யாகம் நடக்கும்பொழுது மித்திராவருணர்களுடைய அம்சத்தில் மகரிஷி

யானவன் ஓமம் செய்தார். அப்பொழுது தேவர், கந்தர்வர், மனிதர் தபோதனர்களான முனிவர் எல்லோரும் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தார்கள். அன்றியும் இம்மனுவின் தவமும், வீரியமும், படிப்பும், மிகவும், ஆச்சரியகரமானது எனத் துதித்தார்கள். அந்த யாகத்தில் தேவயோக்கியமான வஸ்திரம், ஆபரணமிவைகளால் அலங்கரிக்கப்பட்டவளாயும், சிறந்த தேகவலிமையையுடையவளாயுமிருக்கிற இளை என்பவள் உதித்தாளெனக் கேள்வி. அவ்விதம் உதித்தவளை யப்பொழுது தண்டதாரனான மனுவானவன், அவளை இளையென்று அழைத்து என்னைத் தொடர்ந்துவா வா! கல்யாணி! என்றான். அதற்கு அவள், தருமத்தோடு கூடிய ஓர் வாக்கியத்தை புத்திரகாமனான மனுவைக்குறித்து வருமாறு உரைத்தனள்.

இளாதேவி சொல்வது:— ஓ! வாக்கில் வல்லவனான மனுவே! மித்திராவருணர்களுடைய அம்சத்தில் நான் பிறந்தவளாகையால் அவர்களுடைய சமீபத்தை யடைகின்றேன் தருமமானது என்னைக் கெடுக்கமாட்டாது, என மொழிந்து உத்தமையான அவ்விளையானவள் மித்திராவருணர்களுடைய சமீபத்தை யடைந்து கைகூப்பிக்கொண்டு ஒரு வார்த்தை சொன்னாள். ஓ! தேவர்களே! உங்களுடைய அம்சத்தில் நான் உண்டானேன். உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும். மனுவினாலோ என்னண்டை வரவேண்டுமென்று சொல்லப்பட்டவளாயிருக்கின்றேன் என்றனள். அவ்விதம் உரைத்த பதிவிரதையாயும், தருமம் தவறாதவளாயுமிருக்கிற அவ்விளையைக் குறித்து, அம்மித்திராவருணர் இருவரும் யாது மொழிந்தனரோ, ஓ! அரசனே! அதைக் கேள்.

மித்திராவருணர் கூறுவது:— ஓ! பெண்ணே! உன்னுடைய இத்தருமத்தாலும், வணக்கத்தாலும், அடக்கத்தாலும், நாங்கள் இருவரும் சந்துஷ்டர்களாகவானோம். ஓ! பெருத்த பாக்கியமுடையவளே நீ கன்னிகை என்ற கீர்த்தியை அடையப்போகின்றாய். மனுவின் வம்சத்தைத் தரிக்கும் புத்திரனாக நீயே ஆவாய். மூவுலகங்களிலும் சுபமானவளே! சுத்தியும்னனென கீர்த்திபெற்றவளாவாய். அப்பொழுதும் உலகத்திற்கு பிரியனாகவும், தருமத்தினால் விளங்குகின்றவனாகவும், மனுவின் வம்சத்தை விருத்திசெய்கின்றவனாகவும் ஆவாய் என்றாசீர்வதித்தனர். பிறகு அவ்விளையானவள் அவ்வார்த்தைகளைக் கேட்டு மனுவினிடம் போகப்புறப்பட்டுத் திரும்பிவரும்பொழுது, நடுவழியில் சந்திரன் மகனான புதனைக்கண்டு அவனால் தன்னுடன் புணரவிரும்பப்பட்டாள். ஓ! ஜனமே-



ஜயனே! சோமனது மகனான அப்புதனிடத்தினின்றும் அவ்விளையினிடத்தில் அப்பொழுது புரூரவஸ் என்பவன் உண்டானான். இக்குழந்தையைப் பெற்றவுடன் அவ்விளை சுத்தியும்னன் என்ற ஆண்மையையடைந்தாள், சுத்தியும்னனுக்கு உத்கலன், கயன், விநதாசுவன் என்ற மிகுந்த தருமசீலர்களான குமாரர்கள் பிறந்தார்கள். ஓ! அரசனே உத்கலனென்பவனுக்கு உத்கலதேசமும், விநதாசுவனுக்கு மேல்தேசமும், கயனென்பவனுக்கு கயாக்ஷேத்திரமும், ராஜதானிகளாக இருந்தன. பிறகு மனு தனது காரணமாகிய சூரியமண்டலத்தை அடைந்தபின் இப்பூமியைப் பத்துபங்காய்ப் பிரித்துப் பத்து க்ஷத்திரியர்கள் ஆண்டனர். எவனுடைய யூபங்களாற் கடல்சூழ்ந்த இப்பூமிமுழுவதும் அடையாளம் செய்யப்பட்டதோ, மூத்தவனான அவ்விக்ஷ்வாகுவென்பவன் மத்திமதேசத்தை அடைந்தான். சுத்தியும்னன் என்பவன் கன்னியின் தன்மையால் இவன்வ்வளவு குணத்தை அடையவில்லை. ஆகிலும் வசிஷ்டருடைய வசனத்தால் பிரதிஷ்டானம் என்ற நகரத்தில் அபிஷியாக்கப்பட்டான். அந்நகரம் தருமராஜனுக்குப் பிரதிஷ்டையைக் கொடுத்தது. ஓ! குருகுலமன்னனே! அவனுக்குப் பிறகு அந்நகரத்தை புரூரவஸ் என்பவனுக்குக் கொடுத்தான். உத்கலனுக்கு திரிஷ்டகன், அம்பரீஷன், தண்டனென மூன்று மக்கள்கள் உதித்தனர். யாதொரு மகாத்மாவானவன் உத்தமமாயும், உலகத்தில் பெயர்பெற்றதாயும் தபசிகளுக்குபயோகமுள்ளதாயும் விளங்கும், தண்டகம் என்ற வனத்தை ஏற்படுத்தினனோ, இம்மனிதன் யாதொருவனத்தில் பிரவேசித்தமாத்திரத்தில் பாபத்தில் நின்றும் விடுபடுவானோ, அவ்வனத்தை யுண்டாக்கினவனே இத்தண்டனென்பான். ஓ! பாரதனே! ஸுத்யும்னனென்பான் ஜனன் என்ற புரூரவஸ்ஸைப் பெற்று, சிறிதுகாலஞ்சென்றபின் சுவர்க்கத்தை அடைந்தான். மனுவின் மகனும் ஆண் பெண்களுடைய குறிகளையுடையவனாயுமுள்ள இம்மைத்திராவருணன் இளையென்றும் ஸுத்யும்னன் என்றும் இவ்விரண்டு பெயர்களாலும் கீர்த்திபெற்றவனாக இப்பூமியை ஆண்டான். மூத்தகூறிய நரிஷியனென்பவனுக்கு சகர் என்ற புத்திரர்கள் உண்டானார்கள். ஓ! பாரதனே! நாபாகனென்றவனுக்கு அம்பரீஷன் என்ற அரசரிற் சிறந்தவோர் மகனுண்டானான். திருஷ்ணு என்பவனுக்கு புத்தவலிமையையுடைய தார்ஷ்டிகன் என்ற க்ஷத்திரியன் உண்டானான். சர்யாதி என்பவனுக்கு ஆண் பெண் குழந்தைகள் இரண்டும் இரட்டையாய்ப் பிறந்தன. அதில் ஆண்பிள்ளையின்பெயர் ஆனர்த்தன் என்று பிரசித்தமானது. சியவனன்என்ற அரசனை மணம்புரிந்த ஸுகன்-

ளிமைப என்றவள் பெண். ஆனர்த்தமகாராஜனது மகன். மகா பராக்கிரமமுள்ள ரேவன் என்பவன். அவனுக்கு ஆனர்த்தமென்பது ஆளும் தேசமாகவும் குசஸ்தலீ என்பது வசிக்கும் ராஜதானியாகவுமிருந்தது. ரேவனுக்கு நூறு மைந்தர்கள் உண்டானார்கள். அவர்களுள் ககுத்மி என்றபெயரையுடைய ரைவதனென்ற புத்திரன் மூத்தவன். அவன் அக்குசஸ்தலியிலேயே நீடியகாலம் வசித்து, சுகன்னியை என்பவளோடு கூட ஒரு சமயத்தில் பிர்மாவினுடைய சமீபத்தில் கானத்தைக்கேட்டுத் தேவர்களுடைய கணக்கால் ஒருமுகூர்த்த காலத்தைப் போக்கினான். அக்காலம் மனிதர் கணக்கால் அநேகயுகங்கள் கழிந்தன. பிறகு யௌவனம் குறையாமலே தன்னுடைய ராஜதானியைக் குறித்துத் திரும்பிவருகையில் யாதவர்களால் சூழப்பட்டதாயும், பல வாயில்களையுடையதாயும், மனதிற்குப்பிரியமாயும். துவாரவதி என்றபெயரால் கட்டப்பட்டதாயும், போஜர், வாசுதேவனைமுன்னிட்ட விருஷ்ணிகள், அந்தகர், இவர்களால் காக்கப்பட்டதாயுமுள்ள துவாரகையைக் கண்டான். பிறகு அந்தரைவதன் இதன் உண்மையை உள்ளபடியறிந்து அந்த சுகன்னியை என்ற பிருந்த நோன்புடைய ரேவதீ என்பவளை பலராமனுக்குத் தானம்செய்து கொடுத்து அவனுடன் தானும் மேருபர்வதத்தினுடைய கொடிமுடியை அடைந்து தவத்திலிருந்தான். இங்கு தருமசுரூபியான பலராமனும், ரேவதியோடு கூடிச்சுகமாக களித்துவாழ்ந்தனன்.

10-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 11-வது அத்தியாயம்

ஜனமேஜயன் வினவுகின்றார்:—ஓ! வைசம்பாயனரே, அநேக யுககாலம் சென்ற பின்னும் கூட ரேவதியையும், ககுத்மியென்ற ரைவதனையு மெப்படி முதுமைப்பருவம் அடையாமல் இருந்தது. மேலும் மேருபர்வதத்தை யடைந்த அந்தச்சரியாதி மகனான ரைவதனுடைய சந்ததியானது இப்பூமியில் எப்படி நிலைத்திருக்கின்றது. இவைகளை உள்ளபடியே கேட்க விரும்புகின்றேன்.

வைசம்பாயனர் கூறுவது:—ஓ! பாரதனே! பிர்மலோகத்தில் எப்பொழுதும் முதுமையாவது, பசி தாகங்களாவது மரணமாவது வசந்தம் முதலிய ருதுக்களின் மாறுதலாவது உண்டாவதில்லை. ஆகையால் அவ்



விருவர்களையும் கூறப்பட்ட அவையொன்றும் துன்பப்படுத்தவில்லை. அக்ககுத்மி என்பான் பிரமலோகம் சென்றிருந்தபொழுது, அவனுடைய ராஜதானியாகிற குசஸ்தலியானது புண்ணிய ஜனங்களாகிற அரக்கர்களால் நாசம் செய்யப்பட்டது. அப்பொழுது அந்நகரத்தில் பிரம்மலோகம் சென்ற தருமசீலனையும், மகாத்மாவாயுமுள்ள ரைவதனுக்கு நூறுதம்பிகள் இருந்தனர். அவர்கள் எல்லோரும் அரக்கர்களுடைய சளையற்ற யுத்தத்தைப் பொருக்கமாட்டாமல் பற்பலதிக்குகளைக் குறித்து ஓடினர். ஓ! ராஜேந்திரனே! அவ்விதம் ஓடிய சரியாதியின் அந்த நூறு மக்கள்களது வம்சத்தில் உதித்த க்ஷத்திரியர்களே அங்கங்கு விருத்தியடைந்தனர். இப்பொழுது அக்குலமே பெரியதாய் விளங்குகின்றது. ஓ! மகாராஜனே யாதொருவர்களுக்குச் சாரியாதர்கள் எனப்பெயர் விளங்குகின்றனவோ அந்த க்ஷத்திரியர்களே எல்லாதிக்குகளிலும் தருமநெறி தவறாதவர்களாய் அநேகம் பர்வதங்களின் இடைகளை அடைந்து இப்பொழுதும் விளங்குகின்றனர். நாபாகாரிஷ்டன் என்பவனுடைய இரு பிள்ளைகளாகிற வைசியரிருவரும் தவத்தினால் பிராம்மணத்தன்மையை அடைந்தனர். கருஷனுடைய புத்திரர்கள் யுத்தத்தில் மிகுந்த கொழுப்பையுடைய காருஷர் எனப்படுவர் பிராம்சு என்பவனுக்கு பிரஜாதி என்ற ஓர்புதல்வன் உண்டானான். பிருஷத்திரன் என்பவன் தனது குருவினுடைய பசுவை இம்சித்து அதனால் உண்டாகிய சாபத்தால் சூத்திரனது ஜாதியை அடைந்தனன். ஓ! ஜனமேஜயனே! இவ்விதம் வைவசுவதன் என்ற மனுவினுடைய ஒன்பது புத்திரர்களும் சுருக்கமாய் கூறப்பட்டனர்.

ஓ! அன்பனே! அம்மனுவுக்கு இக்ஷ்வாகு என்பவன் உண்டானானென்றுரைக்கப்பட்டதல்லவா அவ்விக்ஷ்வாகுவிற்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர் அவர்களுக்குள் விகுக்ஷி என்பவன் மூத்தவன். இவன் பெருத்த தொந்தியை யுடையவனானதலால் யுத்தத்திற்கு உபயோகமில்லாதவனாக ஆனான். ஆகிலும் அவன் சிறந்ததருமம் அறிந்தவனாகவும், பிரபுவாகவும், அயோத்திக்கு அரசனாகவுமிருந்தான். அவனுக்கு சகுனி முதலிய சிறந்த ஐம்பது புத்திரர் ஜனித்தனர். இவர்களுள் 40 பெயர் வடதேசத்தை ஆளப்பட்ட அரசர்கள். ஓ! மஹீபதியே! தெற்கு திக்கில் ஆளுபவர் வேறு எட்டுப்பெயர்கள் இவ்விகுக்ஷிக்கு சசாதனென்ன பெயர்வரக் காரணம் யாதெனில் ஒரு சமயத்தில் இக்ஷ்வாகு மகாராஜன் அஷ்டகை என்ற சிராத்தத்திற்காகத் தனது மகனான விகுக்ஷியை நோக்கி மகனே சிராத்தத்திற்காக யோக்கியமான மாமிசத்தைக் கொண்டுவா என்று உத்

திரவு அளித்தனன். அப்படியே மகாபலிஷ்டனுன விருகனும் வனத்திற் சென்று வேட்டையாடி சொந்தத்திற்குத்தானே பல பிராணிகளைக் கொன்று ஓரிடத்திற்சேர்த்து உட்கார்ந்து கொண்டிருக்கையில், தனக்கு பசியாயிருக்க அவைகளில் ஒன்றுன ஓர் முயலைத் தான் தின்றுவிட்டான். ஆகையால் வசிஷ்டருடைய உத்திரவின் பிரகாரம் இக்ஷ்வாகுவினால் இவன் சசாதனென நிருகரிக்கப்பட்டான். (சசா=முயல்) பிறகு இக்ஷ்வாகு மகாராஜன் சுவர்க்கத்தை யடைந்த பின்பு அவனுடைய நகரமாகிய அயோத்தியை இவனும், அவனது மகன் விகுக்ஷி என்றவனும் ஆண்டான். சசாதனுடைய குமாரன் வீரியமுள்ள ககுத்ஸ்தன் என்பவன். முன்பு ஆடீபகம் என்ற யுத்தத்தில் காளைபுருவமெடுத்து வந்த இந்திரனுடைய கழுத்தின் மீதிருந்து அநேகம் அசுரர்களை இவ்வரசன் ஜயித்தவன். ஆகையால் இவனுக்கு ககுத்ஸ்தன் என்ற காரணப்பெயர் உண்டாயிற்று. (ககுத் = திமில்). அநேனஸ் என்பவன் அவனது மைந்தன். இவனது குமாரன் பிருது என்பவன். இப்பிருதுவின் குமாரன் விஷ்டாசுவன் என்பவன், அவனிடத்திலிருந்தும் ஆர்த்திரன் என்பவன் உண்டானான். இவனுக்கு யுவனாசுவன் என்பவனும் இவ்வரசனுக்கு சிராவன் என்பவனும் பிறந்தான். இவனது மகன் சிராவஸ்தியம் என்ற நகரத்தை உண்டாக்கிய சிராவஸ்தகன் என்ற அரசன். இவனுடைய புத்திரன் பொறுத்த சீர்த்தியையுடைய பிரகதசுவன் என்பவன். அவனுடைய மகன் மிகவும் தருமசீலனுன குவலாசுவனென்பவன். எவன் துந்துவென்ற அசுரனைக் கொன்று துந்துமாரனென்ற பெயரை வகித்தானே, அவனே இந்த குவலாசுவன் என்றவன்.

ஜனமேஜயன் வினவுகின்றான்:— ஓ! மகரிஷியே! துந்து என்பவனுடைய வதத்தையும் எதற்காகக் குவலாசுவன் என்பவன் துந்துமாரன் என்ற தன்மையை அடைந்தானே இவ்விரண்டையும் நான் கேட்க விரும்புகின்றேன்.

வைசம்பாயனர் கூறுவது:— குவலாசுவமகாராஜனுக்கு வில்லாளிகளான நூறு குமாரர்கள் பிறந்தனர். அவர்கள் எல்லோரும் கல்வியிற் சிறந்தவர்களாகவும் தேகவலிவு உள்ளவர்களாகவும் எவராலும் எதிர்க்க முடியாதவர்களாகவும் தருமசீலர்களாகவும் பற்பல யாகங்களைச் செய்தவர்களாகவும் சிறந்த உதாரிகளாகவும் விளங்கினர். இப்படியிருக்கையில் ஒருக்கால் இவரது தகப்பனாரான பிருகதசுவமகாராஜாவின் முதிர்ந்த ப்பிய காலத்தில், அவரது மகனை குவலாசுவனை இராஜ்யத்தில் பட்டா



பிஷேகஞ் செய்து தான் வனத்திற்குச் சென்று பருவதாதிகளிலிருந்து தவஞ்செய்யத்தாகப் புறப்பட்டான். அக்காலத்தில் உத்தங்கர் என்ற பிரம்மரிஷியானவர் அவனைத் தடுத்து வருமாறு கூறுகின்றார்.

உத்தங்கர் கூறுவது:— ஓ! அரசனே! அன்பவில்லாது தவம்புரிவதற்கு இன்றும் கூடவில்லை. ஆகையால் தம்மால் இரக்ஷணமானது அவ்விஷயத்தில் செய்யத்தகுந்தது. அதற்குத் தாமே தகுந்தவர். ஓ! அரசனே! மகா பலிஷ்டனுன தம்மாலேயே இப்பூமியானது துன்பமின்றிக் காக்கப்படுகின்றது. இப்பொழுது காட்டிற்குத் தாம் செல்லக் கூடாது. எப்படி பிராணிகளை இரக்ஷிப்பதிலேயே உத்தமமான தருமம் காணப்படுகின்றதோ, அவ்வளவு தூரம் ஆரணியத்திற் சென்று தவம் புரிவதில் சிறந்த தருமம் காணப்படவில்லை. ஆகையால் வனம் செல்வதில் தமது புத்தி விரும்பவேண்டாம். தம்மைப்போன்ற இப்படிப்பட்ட தருமம் அறிந்தவன் எங்கும் காண்பது அரிது. பிரஜைகளைப் பரிபாலனம் செய்வதற்காகவே தம்மை இவ்விராஜ்யத்தில் அபிஷேகம் செய்யப்பட்டிருக்கின்றது. ரிஷிகளைப்போன்ற அரசர்களால் உத்திரவு அளிக்கப்பெற்ற தம்மால் பிரஜைகளைக் காக்கப்படுவதே உத்தமமான தருமம் என்றறிவீரென்றுரைத்த உத்தங்கரிஷியை நோக்கி பிருஹதசுவமகாராஜன் கூறுகின்றான்.

பிருஹதசுவன்;— ஓ! மகரிஷியே! இப்பொழுது என்னால் இவ்வுலகத்திற்கு எவ்வித பாலனம் நடக்கவேண்டியதோ அதை விஸ்தரித்துச் சொல்லும்.

உத்தங்கர்:— என்னுடைய ஆசிரமத்திற்குச் சமீபத்தில் ஜலமில்லாத பாலைவனம் ஒன்று மணல்நிறைந்து மூடப்பட்டிருக்கின்றது. அத்தேசத்திற்கு உஜ்ஜாலகம் என்று பெயர். அது ஒருக்கால் சமுத்திரக்கரையாயிருந்தது. அவ்விடத்தில் அப்பூமியின் உள்ளில் மணலில், தேவர்களாற் கொல்லமுடியாதவனும், பெருத்த உடலையுடையவனும், மிகுந்த தோள்வலிமையையுடையவனும், மதுவென்ற அரக்கனுக்கு மகனுமான துந்துவென்ற பெருத்த அசுரனொருவன் இவ்வுலகங்களை நாசஞ்செய்வதற்காக கொடுமையான தவம் செய்துகொண்டு படுத்திருக்கின்றான். அவன் ஒவ்வொரு ஆண்டு முடியும் பொழுதெல்லாம் ஒரு சுவாசம் விடுவான். அப்பொழுது மலைகளும் காடுகளும் நிறைந்த இப்பூமியானது எழுநாள் வரையில் அவனது மூச்சுக்காற்றின் வேகத்தால்

கிடையுடனே நடுநடுங்குகின்றது. மேலும் அவன் மணலுள்ளிருந்து கிடந்து மல்லாந்து மூச்சுவிடுவதால் மேலேயுள்ள மணல்களெல்லாம் கிளம்பி யதிகமிடோரூகச் சூரியகிரணங்களையெல்லாம் மறைத்து, கொள்ளைக்கொள்ளியும் சுழற்காற்றுமாக எங்கும் நிறைந்து இவ்வுலகத்தையெல்லாம் விழுங்கிவிடும் போல அந்த உஜ்ஜானக தேசங்களையெல்லாம் துன்பப்படுத்துகின்றது. ஆகையாலன்பனே எனதாசிரமத்திலிருந்து தவம் செய்ய எனக்கு முடியவில்லை. இவ்விதமுலகத்திற்கு கண்டகனும் பெருங்காயமுள்ள அவ்வசுரனை யுலக ரக்ஷணத்திற்காகத் தாம் கொல்லவேண்டும். அவ்வசுரனிறந்த பின் இவ்வுலகங்களெல்லாம் சுகத்தையடையட்டும். ஓ! அரசனே அவனை கொல்வதற்குத் தாமொருவரே தகுந்தவர். ஸ்ரீ விஷ்ணுவினாலென்னைக் குறித்து முன்போர் காலத்தில் இத்துந்துவைக் கொல்வதற்காக வோர் வரமளிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது "ஓ உதங்கனே பெருத்த வசுரனாகிய இத்துந்துவை கொல்வதற்கு எவனுக்கு நீ யாசீர்வதிக்கின்றாயோ "அவ்வனுக்கிரகத்தைப் பெற்ற அவன் எனது வீரியம் பெருகிக்கட்டாயமாய் அத்துந்துவை கொல்வான்." இவ்விதம் வரம்பெற்றயான் அவனைக் கொல்வதற்கு வேண்டிய சகாயம் செய்கின்றேன். அவ்வசுரனோ சாமானியமானவர்களாற் கொல்லமுடியாதவன். ஓ! அரசனே பின்னும் அவ்வசுரன் உபாயமான தபோக்கியால் வருஷங்கள் நூறுனூறும் கொளுத்தத் தகாதவன், மேலும் அவனுடைய வீரியமோ தேவர்களாலும் எதிர்க்க முடியாதது. இவ்விதம் சுபாவ பலம், தபோபலம், ஆயுதபலம், முதலிய பலங்களையுடைய இவ்வசுரன் எனது அனுக்கிரகத்தால் தம்மாலேயே வதம் செய்யத்தக்கவன். இவ்விதமுத்தங்க முனிவரானுரைக்கப் பட்ட ராஜருஷியான பிரகதசுவரானவர் தனது குமாரனை அத்துந்துவதத்தின் பொருட்டு அவ்வுதங்கருக்குக் கொடுத்தார்.

பிரகதசுவர்:—ஓ! மஹரிஷியே நான் காட்டிற்குத் தவம்புரியப்போவதாக வாயுதங்களை ஸத்தியபூர்வமாக விட்டுவிட்டேன். ஆகையால் ஓ! பிராம்மணோத்தமனே இவன் எனது மகன், இவனால் துந்துமரண மேற்படுவதிலையமில்லை. என்றுரைத்தவுடனே தமது புத்திரனை துந்துவதத்திலாஞ்ஞாபித்துக் கூர்மையான நோன்புகளையுடைய தாம் தவம் செய்வதின் பொருட்டே நிலைத்த புத்தியையுடையவராய் பருவதத்திற்கே சென்றார். பின்பு பிதாவினாக்ஞைப்பிரகாரம் குவலாசுவ ராஜனும், தனது மக்கள்களுடன் அவ்வுதங்கரோடு கூட துந்துவை வதஞ்செய்



வதற்காகப் புறப்பட்டார். அப்பொழுது பகவானான விஷ்ணுவானவர் உத்தங்கரது பிரார்த்தனையின் பேரில் உலகரக்ஷணத்திற்காகக் குவலாசுவராஜனிடம் தனது பராக்கிரமத்தைப் புகவிட்டனர். இவ்விதமரசன் புறப்பட்டுப் போகும்பொழுது ஆகாயத்தில் தேவர்களெல்லாம் எவராலும் வெல்லமுடியாத இவ்வரசனே சீமான் இவனே துந்துவை வதம் செய்யப்போகின்றான் என்று ஆனந்தக்களிப்புடன் கூறி புஷ்பமாலைகளாலும் புஷ்பமாரிகளாலுமவ் வரசனை வெகுமானித்தனர். அவ்விதமே தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. இவ்விதம் பெருமை பொருந்திய ஜயசீலனான குவலாசுவராஜன், தமது மக்கள்களுடன் மணல் நிறைந்தும் அழிவற்றதுமான அக்கடற்கரையை வெட்டிப் பிரித்தனர். ஓ! குருகுலமன்னனே! இயற்கையான பலத்துடன் கூடிய அவர் நாராயணனுடைய பிரபாவத்தினால் மிகுந்தபலமுடையவர்களாக விளங்கினார். இவ்விதம் அக்குவலாசுவராஜனுடைய புத்திரர்களால் வெட்டப்பட்டபொழுது அம்மணற்குன்றினுள்ளிருந்து அத்துந்துவென்ற அசுரனானவன் கண்டுபிடிக்கப்பட்டான். ஓ! அரசனே! அப்பொழுது மேற்குதிக்கில் காணப்பட்ட அவ்வசுரனுடைய கோபத்தினால் அவனது முகத்தில் நின்றுமுண்டாகிய அக்கினியால் இவ்வுலகமே கொளுத்தப்படும்போல் தோன்றிற்று. மேலும் மாயையால் அதிவேகமான சமுத்திரம் போலக்கண்ணீர் பெருக ஆரம்பித்தது. அதனால் அக்குவலாசுவராஜனுடைய தொண்ணூற்றேழு புத்திரர்களும் கொளுத்தப்பட்டார்கள். ஓ! கௌரவனே! பிறகு அந்த ராஜாவானவர் மகாபலிஷ்டனான அவ்வசுரனை எதிர்த்தார். மகாபராக்கிரமசாலியும் வைரியை வெல்லும் திறமையுமுடைய அவ்வரசன், அவ்விதம் அத்துந்துவை எதிர்த்த பொழுது அவனுடைய மாயையினால் வெளிப்படுத்தப்பட்ட ஜலத்தின் வேகம்முழுமையும், கோபாக்கினியுமிவ்வரசனது யோகத்தின் பிரபாவத்தால் அடக்கப்பட்டது. மேலும் ஜலத்தினால் தன்னை மறைத்துக்கொண்ட அவ்வசுரனை யோகத்தின் மகிமையால் இவர் கண்டுபிடித்துத் தனது பராக்கிரமத்தினால் முடிவில் அம்மகாகாயனைக்கொன்று உத்தங்க மகரிஷிக்கு அவனுடலையும் காண்பித்தார். இவ்விதம் மகரிஷியினுடைய விருப்பத்தை நிறைவேற்றிய குவலாசுவராஜனை உத்தங்கமகரிஷியானவர் மிகவும் கொண்டாடி மகாதைரியமுள்ள அவ்வரசனுக்கு எவ்வளவு செலவுசெய்தாலும் அழியாத தனத்தை உடைத்தாயிருத்தலாகிய வரத்தையும், எச்சத்துருவாலும் ஜயிக்கமுடியாத பராக்கிரமத்தை உடைத்தாயிருத்தலாகிய வரத்தையும், எப்பொழுதும் தருமத்திலேயே ஆசையை உடைத்தலாகிய வரத்

பஹுமானித்தனர். மேலும் இனி இவ்வரசனது சரீரம் விழுந்தபின்னும், அவ்வரசனுக்குக் குறையாத சுவர்க்கவாசத்தையும் அசுரரால் கொல்லப்பட்ட இவரது புத்திரர்களுக்கு அக்ஷயங்களான உலகங்களையும் அளித்தனர்.

11-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 12-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:—அவ்வரசனுக்கு யோக்கியர்களான மூன்று குமாரர்கள். அவர்களுள் மூத்தவன் திருடாசுவன். சந்திராசுவன், கபிலாசுவன் என்றவர்கள் அவனது தம்பிகள். துந்துமாரராஜனது குமாரனான திருடாசுவனென்றவனுடைய புத்திரன் ஹரியசுவன் என்பவன். ஹரியசுவனுடைய குமாரன் நிகும்பனென்றவன். இவன் எப்பொழுதும் க்ஷத்திரிய தருமத்திற் பிரியமுடையவன். அந்நிகும்பனுக்கு ஸம்ஹதாசுவனென்பவனென்ற ரணசூரன் பிறந்தான். அவனுக்கு அகிருசாசுவன், கிருசாசுவன் என இரண்டு புத்திரர்களும் பொன்மயமான திருஷத்வதி என்ற ஸத்துக்களுக்கு மாதாவான ஒருபெண்ணும் உண்டானார்கள். இவள் மூவுலகங்களிலும் பெருமை பெற்றவள். இவளது புத்திரன் பிரசேனஜித் என்பவன். இவன் பதிவிரதையான கௌரீ என்பவளை தனக்கு மனைவியாக அடைந்தான். ஒருசமயத்தில் இக்கௌரியானவள் கணவனால் சபிக்கப்பட்டு பாகுதா என்றபேர் வகிக்கப்பட்டவளாகவானாள். அவளுக்கு யுவநாசுவனென்ற பெருமை பொருந்திய அரசன் புத்திரன், அவனுக்கு மூன்றுலோகத்தையும் ஜெயித்த மாந்தாதா என்றவன் குமாரன். அவனுக்கு சசபிந்துவினுடைய பெண்ணான சைத்திரரதி என்பவள் மனைவி. இவள் சிறந்தபதிவிரதையும் நிகரற்றவுருவத்தால் இப்புவியில் பேர்போனவளும் பிந்துமதியென்ற பெயரால் பிரசித்திபெற்றவளுமாம். மேலும் தனது ஆறு உடன்பிறந்தவர்களுக்குள் மூத்தவளாய் விளங்குபவள். அவளிடத்தில் இம்மாந்தாதா வென்பவன் தருமநெறி அறிந்த புருகுத்ஸன் என்றவனையும் தருமசீலனான முசுகுந்தன் என்றவனையும் பிறப்பித்தான். இவர்களுள் புருகுத்ஸன் என்பவனுக்கு திரஸதஸ்யு என்ற அரசன் மகன். நருமதை என்றவளிடம் ஸம்பூதன் என்ற மற்றோர் மகனையும் பெற்றான். ஸம்பூதனுக்கு சுதனுவா என்ற அரசன் மகன். இவனுக்கு வெற்றியாளனான திருதன்வா என்றவன் பிறந்தான். இவனுக்கு பேரறிவுடைய த்ரியாருணன் என்றவன் புத்திரன். அவனுக்கு ஸத்தியவிருதன் என்ற





மகாபலசாலியான குமாரன் உண்டானான். இந்த ஸத்தியவிருதன் என்றவன் மிகவும் துர்புத்தியாதலால், பாணிக்கிரகணம் என்ற விவாக சம்பந்தமான மந்திரங்களுக்கு கெடுதியைச் செய்தான். யாதொருவனால் தன் பட்டணத்தில் வசித்த ஒருவனுடைய கன்னிகையை சிறு தன்மையாலும், காமத்தாலும், அறிவின்மையாலும் குதூகலத்தாலும் சாபல்லியத்தாலும் வேறு ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தும் அக்கன்னிகையான பர்பாரியை அபகரிக்கப்பட்டாளோ, அப்படிப்பட்ட பாவத்தொழிலைச் செய்தவன் இந்த சத்தியவிருதன் என்பவனே. இந்த அதருமமாகிற பாபத்தினால் த்ரியாருண மகா ராஜன் இச்சத்திய விருதனை தன் தேசத்தை விட்டு எங்காவது ஓடிப்போ என கோபத்தோடு மொழிந்தான். அவ்விதம் உரைத்தபொழுது அப்புத்திரன், தகப்பனை நான் எங்கு செல்வேனென அடிக்கடி கேட்டான். பின்பு அப்பிதா சுவபாகன் என்ற [illegible]யர்களுடன் வசிப்பாய், போ, என உறைத்தனன். மேலும் அவ்வரசன் கூறியதாவது:— ஏ! குலத்தை கெடுத்தவனே நான் இப்பொழுது உன்னால் புத்திரனுடையவன் ஆக மாட்டேன். நீ எங்காவது செல், என பின்னும் உரைக்கப்பட்ட அந்த சத்தியவிருதன் தகப்பனுடைய வார்த்தையால் அவனது நகரத்தினின்றும் வெளிப்பட்டான். வெளிப்பட்ட அவனை பகவானான வசிஷ்ட மகரிஷியும் தடுக்கவில்லை. அந்த சத்தியவிருதனே சுவபாகர்களுடைய குடிசைகளுக்குச் சமீபத்தில் தகப்பனால் விடப்பட்டது முதல் தானாகவே வசித்து வந்தான். இப்படி இருக்கையில் ஒருக்கால் திரியாருண மகா ராஜன் ஸத்திய விருதன் வசிக்கும் வனத்தை அடைந்தனன்—பிறகு அவனது தேசத்தில் இந்திரன், அவ்வதர்மத்தினால் அப்பொழுது பன்னிரண்டு வருஷங்கள் வரையில் மழையைப் பொழியவில்லை. அச்சமயத்தில் அத்தேசத்தில் மகா தவசியான விசுவா மித்திரன் தனது மனைவிகளை ஓரிடத்தில் விட்டு விட்டு கடற்கரையோரம் போய் பெருத்த தவத்தைச்செய்தார். அந்த சமயத்தில் அந்த ரிஷியினுடைய பத்தினியானவள் தனது வயிற்றில் பிறந்த நடுப்பிள்ளையை கழுத்தில் கயிற்றையிட்டு மற்றவர்களுடைய போஷணைக்காக நூறுபொன்னிற்கு விற்பதாய் விலைகூறி நடத்தாள். இவ்விதம் கழுத்திற் கயிறுகட்டி விக்கிறயம் செய்வதற்கு யோக்கியமாகவிருக்கும் மகரிஷியின் புத்திரனை தருமசீலனான அவ்வரசனது மகனாகிய சத்தியவிருதன் என்பவன் விடுவித்தான். அன்றியும் ஓ! பரதனே சிறந்த கைகளையுடைய அவன் அவ்வந்தணனை ஆகாராதிகளால்

விசுவாமித்திரருடைய சந்தோஷத்திற்காகவும் தயவிற்காகவும் போற்றவும் போற்றினான். அவ்வந்தனனே தனது கழுத்தில் கட்டுண்டிருந்ததுபற்றி பிறகும் மகாதபசியான காலவனென்ற பெயரை அடைந்தான் ஓ! அன்பனே! கௌசிகமகரிஷியும் அந்த விரதனாலேயே ரக்ஷிக்கப்பட்டார்.

12-வது அத்தியாயம் முற்றிற்று.

## 13 வது அத்தியாயம்.

வைசம்பாயனர்;— சத்தியவிரதனென்பவனோ அன்போடும், தயவோடும், சத்தியத்தோடுங் கூடவிசுவாமித்திரருடைய களத்திரத்தை, விரயத்தவாறு போற்றி வந்தான். பஞ்சகாலமாதலால் மான்களையும், காட்டுப்பன்றிகளையும், காட்டெருமைகளையும் கொன்று விசுவாமித்திரரது ஆசிரமத்தினருகி லவைகளின் மாமிஸத்தை மரங்களில் கட்டிவைத்து, உபயோகமுள்ளகாலத்திலவ் விறைச்சிகளைக் கொண்டு பசிதீர்ப்பதுவழக்கம். தகப்பனாருடையவுத்திரவின் பேரில் காட்டிற்குச்சென்று பன்னிரண்டாண்டுகள் வரையில் வாய் பேசாமலிருக்கிற வோர் விரதத்தையு மியுவன் நடத்தி வந்தான். அங்கு திரியாருணமகாராஜனும் வயது சென்ற காரணத்தால் குலவழக்கப்படி தவம்புரிவதற்காகத் தானும் தபோவனத்திற்குச் சென்றனன். யாகம் செய்துவைத்தலும், உபாத்தியாய முமாகிற சம்பந்தத்தால் அயோத்தி நாட்டை அந்தப்புரமுள்படவஸிஷ்ட முனிவரே பரிபாலித்து வந்தனர். இராஜ்ஜியத்தை விட்டுச் சத்தியவிரதனைப் பாணிக்கிரகணத்தின்பேரில் ஸப்தபதியை யனுஷ்டித்து மந்திர பூர்வமாக மணம் புரிந்திருந்த மற்றொருவன் பாரியை யபகரித்த குற்றத்திற்காக விரட்டிய பொழுது, வசிஷ்டரும் மிருந்த கோபத்தையுடைத்தாயிருந்ததால் இந்த ராஜகுமாரனைத் தடுக்க விடமில்லாமலிருந்தது. அச்சமயத்தில் இச்சத்தியவிரதனுக்கோ, தகப்பனார் கோபித்துத் தியாகமசெய்தாலும் இப்புரோகிதரான வசிஷ்டர்கூட என்னை யிரக்ஷிக்க வில்லையேயென வசிஷ்டரிடம் அவனது மனதிலோர்வித கோபமுண்டு. ஆனால் பகவானான வஸிஷ்டரானவர் நல்ல எண்ணத்துடனேயே அப்பொழுது தடைசெய்யாமலிருந்தார். அவ்விதம் வாய் பேசாமலிருந்ததை, இச்சத்தியவிரதனின்ன காரணத்திற்காக யிவர் மௌனமாயிருக்கின்றாரென



அவரது நற்குணத்தை யறியவில்லை. இவ்விதம் மகனிடத்தில் மஹாத்மாவான பிதாவிற்குண்டான அஸந்தோஷத்தால், இந்திரன் பன்னிரண்டாண்டுகள் வரையில் மழைபொழியாமலே யிருந்தான். இப்பொழுது இப்புவியிலொருவராலுஞ் செய்யமுடியாத நீடிய மௌன விரதத்தையுடைய ஸத்தியவிரதனால் தான் செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தஞ் செய்யப்பட்டது போலவே அப்பொழுதே பகவானான வஸிஷ்டனும் பிதாவினாற்றியாகம் செய்யப்பட்ட மகனைத்துணிந்து நான் அவனை அபிஷேகஞ் செய்வேனென்ற புத்தியும் முனிவருக்குண்டாகவில்லை. பன்னிரண்டுவருஷங்கள் வரையில்மௌனமாயிருப்பதான பெரிய விரதத்தையோ மிகுந்தபலமுள்ள அச்சத்தியவிரதனின்னமுந்தரித்து நடத்திவருகின்றான். பஞ்சகாலமும் மென்மேலும் விருத்தியடைகின்றது.

இவ்விதம் காலஞ்சென்று வருகையிலொருநாள் எங்குஞ் சுற்றியும் யாதொரு ஆகாரமுங்கிடையாததால், மஹாத்மாவான வஸிஷ்ட மகரிஷியினுடைய, விரும்பியதெல்லாங்கொடுக்கத்தகுந்த வோர்கறவைப்பசுவை இச்சத்தியவிரதன் கண்டான். பின்பு கோபத்தாலும், அவிவேகத்தாலும், இளைப்பாலும் பசியினாற் பீடிக்கப்பட்டவனுகத் தசதருமத்தையடைந்து ஓ! ஜனமேஜயனே அப்பசுவையவன் கொன்றான். கொன்றவுடன் அப்பசுவின் மாமிசத்தைக்கொண்டு தனதுபசியையும், விசுவாமித்திரரது குடும்பங்களின் பசியையுமாற்றினான்.

இதைக்கேட்ட வஸிஷ்டரும் மிகவுஞ்சினந்து ராஜகுமாரனைநோக்கி ஏ! குரூரனே! மறுபடியு மிவ்விரண்டுபாவங்களையும் நீ செய்யாதிருந்தால் உனது முந்திய பாபத்தைக்கழிப்பதாயிருந்தேன். இப்பொழுதோ பிதாவின் மனதிற்கு அஸந்தோஷமாய் நடந்ததொன்று, குருவின்பசுவை திருடியதிரண்டு, பசுவினிறைச்சியை மந்திரங்களாற் ப்ரோக்ஷணஞ்செய்யாமற்றின்றது மூன்று, ஆக இம்மூன்றதிக்கிரமங்களுமுன்னாற் செய்யப்பட்டன.

வைசம்பாயனர்:— இவ்வண்ணம் மூன்றுதோஷங்களையும் அவனிடம் கண்டமகாதவசியான வஸிஷ்டர் ஏ! திரிசங்குவே! எனவழைத்தனர். ஆகையாலது முதலவனுக்குத் திரிசங்கு வென்ற பெயரேற்பட்டது. விசுவாமித்திரரும் தனது தவத்தின்காலம் முடிந்தவுடன் தனது இப்பழையாசிரமத்தண்டைவந்து, தனது குடும்பங்களுடைய போஷணத்தைப்

பார்த்து, அவ்விதம் போஷித்துவந்த ஸத்தியவிரதனைக்குறித்து ஸந்தோஷத்தால் வேண்டிய வரனைத் தருகிறேனென மொழிந்தனர். பிறகு வரதானத்தால் மயங்கிய அவ்விராஜகுமாரன் "நான் இச்சரீரத்துடன் ஸ்வர்க்கத்தையடைய வேண்டும்." என்ற வரத்தைப் பிரார்த்தித்தனன். இவ்விதம் யாசிக்கப்பட்டதற்கு அவ்விசுவாமித்திரரிஷியும் அவ்விதமே யொத்துக்கொண்டு துவாதசவருஷ க்ஷாமந்தீர்ந்தபின்பு, தகப்பனுண்டு வந்தவனது ராஜ்யத்திலேயே இச்சத்தியவிரதனை யபிஷேகித்து அதன் பின்பு எல்லாத்தேவர்களுக்கும் வஸிஷ்டமகரிஷிக்கும் முன்பாகவே இவர்களை யெல்லா மொருபொருட்டாயெண்ணாமல் அச்சத்தியவிரதனுக்கு அவன் கேட்டுக்கொண்டபடி யாகஞ்செய்வித்தார். உடன், பிரபுவான விசுவாமித்திரர் அந்தமாதிரி சரீரத்துடன் அச்சத்தியவிரதனைச் ஸ்வர்க்கத்திலுமேற்றி வைத்தனர். அச்சத்தியவிரதனுடைய மனைவி கேகய வம்சத்திற்பிறந்த சத்தியரதை யென்பவள். இவள் கோதற்ற ஹரிச்சந்திரன் என்றபுத்திரனைப் பெற்றாள். அவனே திரைசங்கவராஜனென்பவன். இவன் இராஜசூய யாகத்தைச்செய்து ஸம்ராட் அதாவது சக்கிரவர்த்தியென்ற பெரும்பதத்தைப் பெற்றவன். ஹரிச்சந்திரனுக்கு வீரியவானான ரோஹிதனென்பவன் பிறந்தான். எவனால் ராஜ்ஜியஹித்திக்காக ரோஹிதபுரமென்றநகரம் ஏற்படுத்தப்பட்டதோ அவனே யிவன். இவ்வரசன் ராஜ்யத்தைய மேற்படுத்தி யதைப் பரிபாலனமுஞ்செய்து முடிவில் ஸம்ஸாரவாழ்வை அஸாரமாக நினைத்துத் தனதிராஜ்யத்தைப் பிராம்மணர்களுக்குத் தானம் செய்துவிட்டான். ரோஹிதனுக்கு ஹாரிதனென்பவனு மிவனுக்குச் சஞ்சுவென்பவனு முண்டானான். விஜயனென்பவனும், சுதேவனென்பவனும் சஞ்சுவின் மக்கள்கள். எல்லாக்ஷத்திரியர்களையுஞ் செயித்தபடியாலவனுக்கு விஜயனெனப் பெயர் வந்தது. அவனுடைய மகன் ருருகன். இவனறத்தையும் பொருளையு மறிந்து வருட் சிறந்தவன். ருருகனுக்கு விருகனென்பவன் மகன். இவனிடமிருந்து பாஹுவென்பவன் பிறந்தான். இவனரசாண்டு வருங்காலையில் சகர், யவனர், காம்போஜர், பாரதர், பஹ்லவர், ஹைஹயர், தாலஜங்கர் என்ற இவர்களெல்லோரும் கூடிச்சண்டையிட்டு அப்பாஹுமகாராஜனை யக்கிரமமா யிராஜ்யத்தினின்று மோட்டிவிட்டனர். பிறகு அப்பாஹுராஜனுக்குச் சகரனென்றவன் விஷத்துடன் பிறந்தான். (கரம்=விஷம்) இவன் ஔர்வரிஷியினாசிரமத்தை யடைந்து பார்க்கவரால் காக்கப்பட்டான். அப்பொழுது அப்பார்க்கவரிடமிருந்து ஆக்கினேயமென்ற அஸ்திரத்தை யடைந்து ஹைஹயரோடு கூடிய தாலஜங்கர்களைக் கொ



ன்று இப்பூமிமுழுவதையுஞ் செயித்து, சகர், பஹ்லவர், பாரதர் என்ற க்ஷத்திரியர்களுடைய வருணாசிரமாசாரங்களை யெல்லாம் வேறுபடுத்தித் தாத்தித் தருமமறிந்த தானே சக்கிரவர்த்தியாக அவ்வயோத்தியை யாண்டுவந்தான்.

13-வது அத்தியாயம் முற்றிற்று.

## 14-வது அத்தியாயம்.

ஜனமேஜயர்:— ஓ! தபோதனரே! அச்சகரனென்பவன் எப்படி விஷத்தோடு பிறந்தான்? எதற்காக மகாப்பிரபாவமுள்ள சகர்முதலிய க்ஷத்திரியர்களுடைய குலத்திற்கேற்றவாசாரங்களைச் சளையில்லாத அவ்வரசன் நீக்கினான்? இந்த சங்கதியை எனக்கு விரிவாகச் சொல்லவேண்டும்.

வைசம்பாயனர்:— ஓ! அரசனே! ஹைஹயர், தாலஜங்கர், சகர், என்பவர்களால் முற்கியானபாஹுவினுடைய ராஜ்ஜிய மக்கிரமமா யபஹரிக்கப்பட்டது. அப்பொழுது யவனர், பாரதர், காம்போஜர், பஹ்லவர், சகர் என்ற இவ்வைந்து கூட்டக்காரர்களும் ஹைஹயருக்காகப் பராக்கிரமத்தைக் காட்டிசகாயஞ் செய்தவர்கள். இவ்விதமிழக்கப்பட்ட ராஜ்யத்தையுடைய பாஹு மஹாராஜன், அப்பொழுது வேறுதிக்கற்றுப் பத்தினியுடன் கூடிவனாய் துக்கத்திலழுந்தி வனத்தையடைந்து அங்கேயே தனதுயிரையும் விட்டான். யாதவியென்ற அவனதுபத்தினியோ கருப்பத்தோடு கூடினவளாய் கணவனையே பின்சென்றனள். இவளுக்கு இதன்முன்பே இவளது ஸபத்தினியானவள் பொறாமையால் கர்ப்பத்தையழிப்பதற்காக விஷத்தைக் கொடுத்திருந்தாள். அதனாலிவளது கர்ப்பத்தில் விஷமுங்கூடியிருந்தது. இப்படியிருக்கையில் வனத்தில் தனது கணவனான பாஹுராஜனிறந்தவுடன் அவனோடுடன்கட்டை யேறயத்தனித்தாள். அப்பொழுது ஔர்வர் என்ற பார்க்கவர் கருணையாலவளைத்தடுத்து நிறுத்தினார். பிறகு யாதவியும் ஔர்வருடைய ஆசிரமத்திலேயே கரமென்ற விஷத்துடன் கூட ஓர் குழந்தையைப் பெற்றாள். அவனே மிகுந்த தோள்வலியுள்ள சகரன் என்ற மகாராஜன். பிறந்த அக்குழந்தைக்கு அவ்வௌர்வரிஷியே ஜாதகர்மம் முதலியச் சடங்குகளை நடத்தி வேதசாஸ்திரங்களையு மோதுவித்துத் தேவர்களாலும் ஸகிக்கமுடியாத ஆக்கினேயமென்ற அஸ்திரத்தையுமுபதேசித்

தார். அச்சகரனுமவ்வஸ்திர பலத்தோடும், தேஜஸியோடுங் கூடியவனாய் யுத்தத்தில் ஹைஹயர் முதலியோரை உருத்திரன் பசுக்களைக் கொல்வது போலக் கொன்றான். கீர்த்திமான்களுக்குட் சிறந்தவன் இவ்வுலகத்தில், மேன்மேலுஞ் சிறந்தவனாகக் கீர்த்திகளையும் ஸம்பாதித்தான். பிறகு சகர், யவனர், காம்போஜர், பாரதர், பஹ்லவர், முதலியோரைக் கண்டபொழுதே சூன்யமாக்க வேண்டுமென்று நிச்சயித்து அவர்களை விரட்டுகையில், வீரனான சகரனாலடிப்பட்ட அவர்களும் ஒருமிக்கு மோதித் திகைத்து முடிவில் நல்லறிவுள்ள வசிஷ்டரைச் சரணமடைந்தனர். மிகுந்த ஒளியையுடைய வசிஷ்டரு மவர்களைநோக்கி அவர்களுக்கபயங் கொடுத்து சகரனைச் சத்தியத்தாற்றடுத்தார். சகரனும், தன்னுடைய சங்கற்பத்தையும், குருவின் உத்திரவையுமாலோசித்து அவர்களுடைய ஜாதி தர்மங்களைக் கெடுத்து வேஷத்தையும் மாற்றினான். அதன்விபரமாவது:—சகர்களுக்குப் பாதித்தலையை முண்டனம் செய்வித்து விட்டான். யவனர்களுக்கும், காம்போஜர்களுக்கும் தலைமுழுவதும் மொட்டையடிவித்தான். பாரதர் முழுவதுமவிழ்த்துவிட்ட முடியையுடையவர்களாகவும் பஹ்லவர்களைத் தாடிவளர்ப்பவர்களாகவுமாக்கினான். மேலுமவர்களை வேதமோதல், யாகஞ்செய்தல் முதலிய வைதிககாரியங்களில்லாதவர்களாகவு மவ்விராஜனால் தடுக்கப்பட்டனர். கோளிஸர்ப்பர், மஹிஷர், தார்த்தியர், சோளர், கேரளர்என்ற இவர்களெல்லோரும் முன்பு க்ஷத்திரியர்களாயிருந்தவர்கள். ஹைஹயாதிகளுக்குச் செய்த ஒத்தாசையாலிவர்களெல்லோரும் ஓ! அரசனே! வசிஷ்டரது உத்திரவைப்பெற்ற மஹாபலிஷ்டனான சகரனால் வேதாசாரங்களினின்றும் நீக்கப்பட்டனர். பிறகு இவ்வரசன் அசுவமேத யாகஞ்செய்வதாய் தீக்ஷித்துக்கொண்டு குதிரையை வெளியில்விட்டான். அப்பொழுது திருமந்தவராத அவ்வரசன் கசம், அஸ்தாரம், சோழதேசம், மத்திரம், கிஷ்கிந்தை, கௌந்தளம், வங்கம், சாளுவம், கொங்கணம் முதலிய நாடுதேசங்களையெல்லாம் செயித்து முடிவில் ஸகலபூமியையும் வென்றான். இவ்விதம் பலதேசங்களிற் சுற்றிக் கொண்டு முடிவிலக்குதிரையானது தென்கிழக்கு மூலையாய் ஸமுத்திரக்கரையில் மேய்ந்து கொண்டிருக்கையில், எவனாலேயோ அக்குதிரை திருடப்பட்டதுமன்றி பூமிக்குள்ளொளிக்கவும் பட்டது. ஆகையால் அவ்வரசன் தனது மக்கள்களாலவ் விடத்தைக்கல்லினான், அப்பொழுதம் மக்கள்களவ்விதம் கல்லிக்கொண்டுபோகையில், அக்கு பாதாளத்தில் ஆதிபுருஷனையும், ஒளிமிகுந்தவராயும், பாபத்தைப்போக்குகின்றவராயும், கருத்த நிறமுடையவராயும், பிரஜைகளுக் கெல்லாமதிபதியாயும், ஸங்கும்



நிறைந்தவராயும், யோகநித்திரைசெய்கின்றவராயும், புருஷோத்தமனாயும், எல்லாப்பிராணிகளையும் படைக்கின்றவராயும், கபிலமான வுருவத்தால் விளங்குகின்றவராயுமுள்ள சகல கருமங்களாலும் பெறத்தகுந்த நாராயணனைக்கண்டனர். பிறகவரது சமீபஞ்சென்று, நீம்மக்கள்களெல்லோருங் கொக்கரித்து அத்திருடனிவனே எனவுரைத்துக்கொண்டு, இவனைப்பிடி, அடி, ஸர்புத்தியையுடைய குதிரைக் கள்ளனிவனை விடாதேயுங்கள் என ஆரவாரித்தார்கள். மேலுமவர்கள் கயிறுகளையெடுத்து அம்மகாவொளியையுடைய கபிலதேவரைக், காலனாலேவப்பட்டவர்களான விச்சாகரெல்லோரும் கட்டுவிதற்கெத்தனித்தனர். இப்பிரகாரமவரது முகத்திற்கு நேரிற்போகவே அக்கபிலரும் யோகத்தினின்றிரங்கி விழித்துநோக்க, அப்பார்வையாலச்சாகரர் முழுமையுங் கொளுத்தப்பட்டனர். அவர்களுள் மிச்சமானவர் நால்வர். அவர்களை பாஹகேது, ஸுகேது, தருமரதன், சூரனையும் வம்சகரனுயுமுள்ள பஞ்சஜனன் என்றவர்களாம். பிறகு மிச்சமானவிவருள் பஞ்சஜனனைக்கண்டு மனங்குளிர்ந்து அவனுக்குப்பகவானான ஹரியென்ற நாராயணன் பற்பலவரன்களை யளித்தனர். அவை யாவன:—இக்ஷுவாகுவின் வம்சமழிவில்லாதிருப்பது, எவராலுமழிக்க முடியாத கீர்த்தி, சமுத்திரனை மகனாக்கியது, ஒவ்வொருவருக்குந் தேகமழிந்தபின் சுவர்க்கவாசம். அவரது கண்ணொளியாலப்பொழுதிறந்த சாகரர்களுக்கு அழிவற்றவுலகம் இவைகளேயாம். இவ்விதம்வரங்களை யளித்தவுடன் சமுத்திரராஜனும் கையில் காணிக்கையை யெடுத்துக் கொண்டு அம்மஹீபதியை வந்துவணங்கினான். பிறகக்காரணத்தால் சாகரனென்ற பெயரையடைந்தான். அவ்வசுவமேதக்குதிரையையும் அச்சமுத்திரத்தினின்று கைக்கொண்டு மிகுந்தகீர்த்திபெற்ற சகராஜனும் யாகத்தைமுடித்தனர். அவ்விதமே நூறு யாகங்கள் வரையிலிவ்வரசனாற் செய்யப்பட்டன. அறுபதினாயிரம் புத்திரர்களிவ்வரசனுக்குண்டானவர்களெனக் கேட்டிருக்கின்றோம்.

14-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 15-வது அத்தியாயம்.

ஜனமேஜயன் :—ஓ! விப்பிரோத்தமனே! மஹாத்மாவான அச்சகரராஜனுக்குவீரர்களான அறுபதினாயிரம் மக்கள்களெவ்விதம் பிறந்தார்கள்,

வைசம்பாயனர்:—ஓ! ஜநாதிபனே! கேள்; சகரருக்கு தவத்தாற் பாபமற்ற விரண்டுமனைவிகளிருந்தனர். அவர்களில் மூத்தவள் விதர்ப்ப ராஜனது மகளும், சிறந்தபுகழுள்ளவளுமான கேசினியென்பவள். இளைய வளோ சிறந்த தருமங்களையறிந்தவளாயும், அரிஷ்டநேமியென்பவன் மகளாயும், அழகால் பேர்போனவளாயுமுள்ள ஸுமதியென்பவள். ஔர் வரென்றமகரிஷி, இவர்களுக்குள் சிறந்த நோன்புடையவொருவள் அறு பதினாயிரம் புத்திரர்களையும், வமிசத்தைவிருத்தியாக்கத்தக்க வொருபுத் திரஸந்தானத்தை மற்றொருவளுமாகப் பெறக்கடவதென இரண்டு வரங் களையளிக்கின்றேனென்றனர். அப்பொழுது கேசினீ யென்பவள் வமி சகரனானோர் புத்திரவரனை வேண்டினள். மற்றசுமதியென்பவள் மஹா பலசாலிகளான அறுபதினாயிரம் புத்திர வரனைவேண்டினள். அவ்வேண் டுகோளின்படி ஆவ்விருவரும் வரங்களையளிக்க அப்பிரகாரமே கேசினி யென்பவள் சகரராஜனிடமிருந்து மகாபலிஷ்டனான பஞ்சஜனனென்ற அஸமஞ்ஜஸனைப்பெற்றாள். மற்றவளோ விதைகள்நிறைந்தவோர் சுரை க்காய்போன்ற மாமிசபிண்டத்தைப் பெற்றாள். அதில் அறுபதினாயிரம் கர்ப்பங்கள் எள்ளளவுள்ளதாயிருந்தன. காலந்தவறாது அந்தந்த காலங் களில் கிரமமாக இவையெல்லாம் விருத்தியாய்க் கொண்டேவந்தன. தகப் பனும் நெய்நிறைந்த கும்பங்களிற் கருக்கள் முழுமையுமொன்றொன் றாய்ப்போட்டுக் காப்பாற்றினர். செவிலித்தாய்களையும் ஒவ்வொருகும் பத்திற்கும் ஒவ்வொருத்தியாக அவைகளைப்போற்றுவதற்காக ஏற்படுத் தினர். பிறகு பத்துமாதங்களும் பூர்த்தியானபொழுது சுகமாகவே கருக் களெல்லாமங்கங்கள் நிறைந்துதித்தன. இவ்விதமுதித்த இக்குழந்தைகள் நாளுக்குநாள் காலந்தவறாது விருத்தியடைந்து சகரராஜனுக்குச் சந் தோஷத்தைப் பெருக்கிக்கொண்டு வந்தன. ஓ! அரசனே! இவ்விதமாக 60-ஆயிரம் மக்கள்களும் சுரைக்காய்போன்ற மாமிசபிண்டத்திலின்று முண்டாயின. கபிலரென்ற நாராயணருடைய கண்ணொளியாலழிந்து போன இவர்களுக்குப் பின்பு, பஞ்சஜனனென்ற புத்திரனொருவனே மிச்சமானவனென்று கூறினோமல்லவா. அவ்வரசனுடைய மகன் அம்சு மானென்ற வீரியவான். அவனுக்குத் திலீபனென்பவன்மகன். இவனே கட்வாங்கனென்று பேர்போனவன். யாவனொருவனும் சுவர்க்கத்திலி ன்று இப்பூமிக்கு வந்து ஜீவிக்கப்பட்டு, மூன்றுலோகங்களும் தனதுபுத்தியா லும் சத்தியத்தாலுமளக்கப்பட்டனவோ அவனே இக்கட்வாங் கன். ஓ பாபமற்றவனே! திலீபனது மகன் மஹாராஜனான பகீரதன்



எவன் நதிகளிற் சிறந்த கங்கையை ஆகாயத்தினின்றும் பூமியிலிறக் கினானோ, பிரபுவும், பெருங்கீர்த்தியுள்ளவனும், மஹாபாக்கியசாலியும், இந்திரனோடொத்த பராக்கிரமமுள்ள எவன் அக்கங்கையைத் தனக்கு மகளாக்கி சமுத்திரம்வரையிற் கொண்டுபோய்த் தனது மூத்தோர்களுக்குத் திருப்திசெய்வித்தனனோ அவனே இப்பகீரதன். வமிசவிருத்தியை விரும்புவோர்களால் அதுமுதல் கங்கையானது பாகீரதி யெனக்கூறப் படுகின்றது. பகீரதனதுமகன் ராஜாவான சுருதனென்பவிசேஷப்பெற்ற வன். சுருதனுக்கு, உத்தமமான தருமசிந்தையுடைய நாபாகனென்ப வன் மகனானான். இவனது மகன் அம்பரீஷன். இவன் சிந்துத்வீப னென்பவனுக்குத் தந்தை. சிந்துத்வீபனுக்கு மகன் வீரியவானான அயுதாஜித்து. அவனதுமகன் மஹாகீர்த்திமானான ருதுபர்ணனென்ற வன். இவன் சிறந்த அக்ஷஹிருதயமென்ற வித்தையையறிந்தவனும், நள ராஜனுக்குமித்திரனும் மிகுந்தபலிஷ்டனுமாம். இவனுடைய மகன் ஆர் த்தபர்ணியென்பான். அவனது மகனிந்திரனுக்குச் சகாவான ஸுதாஸ னென்பவன். ஸுதாஸனது மகன் ஸௌதாஸனென்றவரசன். இவன் கல்மாஷபாதனெனப் பிரசித்தி பெற்றவனும் மித்திரஸஹனென்ற பெயராற் சிறந்தவனுமாம். கல்மாஷபாதனுடைய மகன் ஸருவகர்மாவென் றபெயர் போனவன். ஸருவகர்மாவிற்குப் புகழ்பெற்ற அநரண்யனென்ற வன் மகன். இவனுடைய புத்திரன் நிக்கினன். இவனுக்கு அநமித்திரன் இரகு என விரண்டரசர்கள். இவர்களுத்தமோத்தமர்கள். அநமித்திர னுக்கு தருமாத்மாவாயும், பேரறிவுள்ளவனுமுள்ள துலிதுஹனென்ப வன் பிறந்தான். அவனுக்கு திலீபனென்ற இராமனுடைய முப்பாட்டன் பிறந்தான். அத்திலீபனுக்கு நீண்டகைகளையுடைய இரகுவென்றவன் பிறந்தான். இரகுவினிடமிருந்து அஜனென்றவன் பிறந்தான். அஜ னிடமிருந்து தசரதனுதித்தான். இவனிடமிருந்து தருமமே வடிவமாய் வந்த பெருங்கீர்த்தியையுடைய இராமனவதரித்தார். இவ்விராமனுக் குக் குசன் என்றவன் அதிதியென்பவனிடம் ஜனித்தான். அவனதுமகன் நிஷதன். நிஷதனுக்கு நலனென்பவன் புத்திரன். நல னுக்கு நபன்புத்திரன். நபனுக்குப் புண்டரீகனென்பவன் மகன். அவ னிடமிருந்து க்ஷேமதன்வா பிறந்தான். க்ஷேமதன்வாவுக்குப் பிரதாப முள்ள தேவாநீகனென்பவன் மகனானான். அஹீநகு என்றபிரபு தேவா நீகனது புத்திரன். அஹீநகுஎன்றவனுக்கு, ஸுதன்வாவென்றவரசன்மகன். ஸுதன்வா என்றவனுக்கு நளனென்றவன் பிறந்தான். உக்தனென்ற வன் அந்நளபுத்திரனானான், மஹாத்மாவான அவ்வுக்தனுக்கு வஜ்ஜிர

நாபனென்றவன்மகன். அவனுக்கு அயுதாச்வனென்று பிரசித்தி பெற்ற சங்கனென்ற விந்துவான் மகன். அவனுடைய மகன் புஷ்யன். அவனுடைய மகன் அர்த்தசித்தி. அவனுடையமகன் சுதர்சனன். அவனிடமிருந்து அக்னிவர்ணன். அவனிடமிருந்து சீக்கிரன். சீக்கிரனுக்கு மரு என்றவன் மகன். இம்மருவோ யோகத்தியானத்தையடைந்து, கலாபமென்ற தீவில்வசிக்கின்றான். சிறந்த புகழையுடைய அம்மருவிற்கு பிரஹத்பலனென்ற வரசன் மகன். ஓ! பாரதகுலமன்னனே! புராணங்களிலிரண்டு நகர்களே பிரசித்தமானவர்கள். அவர்களாரெனில் வீரசேனன் குமாரனும், இக்ஷ்வாகுவம்சத்திலுதித்தவனுமே. இக்ஷ்வாகுவின் வம்சத்திலுதித்தவர்களுள் முக்கியமானவர்களெல்லா மிங்குகூறப்பட்டனர். இவர்கள் சூரியவம்சத்திலிருந்த பராக்கிரமமுள்ள வரசர்கள். அதிதியின் குமாரனும், விவஸ்வானென்ற பெயரையுடையவனும், பிரஜைகளுக்குப் புஷ்டியைக்கொடுக்கத் தகுந்தவனுமுள்ள சிராத்ததேவனென்ற சூரியனது சிருஷ்டியையும் பிரபாவத்தையும் கூறுகின்ற இவ்வத்தியாயக்கதையைப் படித்தவன் புத்திரபௌத்திராதிப் பிரஜைகளையுடையவனாக நீடியவாயுட்காலம் வாழ்ந்து, அதன்பிறகு சகலபாபங்களுமற்று மாயாகுணங்களையுங்கடந்து விவஸ்வானென்ற ஆதித்தியனுடைய ஸாயுஜ்யத்தையடைகின்றனன்.

15-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 16-வது அத்தியாயம்.

ஜனமேஜயன்:— ஓ! விப்பிரருள்உத்தமனே! விவஸ்வானென்ற ஆதித்தியனுக்கு எப்படி சிராத்ததேவனின் தன்மை யுண்டாயிற்றென்பதையும், சிராத்தத்தின் சிறந்தவிதியையும், பிதுருக்களுடைய ஆதிசிருஷ்டியையும், பிதுருக்களென்ற இவர்கள் யாவரென்றதையும் கேட்க விரும்புகின்றேன். ஏனெனில் பிராம்மணர்களால் வருமாறு எனக்கு இவ்விஷயம் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது;— "சுவர்க்கத்திலுள்ள பிதுருக்கள், தேவர்களுக்கும் தேவர்கள் எனவேதமறிந்தவர் கூறுகின்றனர்" என்பது. இதையான் அறிய விரும்புகிறேன், மேலும் எவர் அப்பிதுருகணங்களெனக் கூறப்பட்டவர். எது அவர்களுக்குச் சிறந்த பலம். சிராத்தமென்பது எவ்விதம் நம்மாற் செய்யப்பட்டால், பிதுருக்களை



திருப்திசெய்விக்கும். அவ்விதம் பிரீதியையடையப்பட்ட எந்தபிதுர்க்கள் நம்மை க்ஷேமத்தோடு கூட்டிவைக்கின்றனர். இவ்விதம் பிதுருக்களுடைய வுற்பத்திமுதலிய யாவற்றையும் விரிவாய் கேட்க விரும்புகின்றேன்.

வைசம்பாயனர்— ஆ! அரசனே! பிதுருக்களுடைய வுற்பத்தியாகின்ற வதிநுட்பமான விஷயத்தையுனக்குச் சொல்லுகின்றேன். மேலும் நம்மாற்செய்யப்பட்ட சிராத்தமெவ்விதமப் பிதுர்க்களைப் பிரீதிப்படுத்துகின்றதோ, அப்பிரீதியையடையப்பட்டவப்பிதுருக்களெவ்விதஞ்சிராத்தஞ்செய்தவனை க்ஷேமத்தோடு கூட்டுகின்றனரோ, இவ்விஷயத்தைக் குறித்து முன்பொருக்கால் மார்க்கண்டேயரால் பீஷ்மாச்சாரியருக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதையே மறுபடியும் யுதிஷ்டிரமகாராஜன் சரதல்பத்திற் படுத்திருந்த பீஷ்மாச்சாரியரிடம் நீ கேட்டபடி வினவினார். பிறகு பீஷ்மாச்சாரியாரவெவ்வித முரைக்கப்பட்டதோ அவ்விதமே யடிமுதல் சகலமும் நானுனக்குச் சொல்லுகின்றேன். இது வினயத்துடன் கேட்ட மார்க்கண்டேயருக்கு முன்பொருசமயத்தில் ஸநத்குமாரரால் கூறப்பட்டது.

யுதிஷ்டிரர்:— ஓ! தருமமறிந்த பிதாமகனே! புஷ்டியை விரும்பியவனால் எவ்விதம் புஷ்டியடையப்படுகின்றது. மனிதனெக்காரியத்தைச் செய்தவனாய் துக்கிக்காமலிருப்பான். இதையறிய விரும்புகிறேன்.

பீஷ்மாச்சாரியர்:— எவன் சிராத்தங்களாலும், எல்லாவிதமான இஷ்டபலன்களாலும் பிதுருக்களைத் திருப்தி செய்விப்பானோ, அப்பிதுருகாரியபரனும், பரிசுத்தனுமுள்ள சிராத்தகர்த்தா மேலுலகத்திற் போயுமங்கும் புஷ்டியையடைந்து ஆனந்திக்கின்றான். ஓ! யுதிஷ்டிரனே! பிதுருக்கள் தருமத்தை விரும்பியவனுக்குத் தருமத்தையும், பிரஜைகளை விரும்பியவனுக்குப் பிரஜையையும், புஷ்டியை விரும்புவோனுக்குப் புஷ்டியையுங்கொடுக்கின்றனர்.

யுதிஷ்டிரன்:— ஒவ்வொரு பிராணிகளு மதனதன் புண்ணியபாப கருமங்களுக்குத் தக்கபடி அததன் பயன்களை யனுபவிப்பதற்காகச் சிலருடைய பிதுருக்கள் சுவர்க்கத்திலும், சிலபெயர்களுடைய பிதுருக்கள் நரகத்திலு மிருக்கின்றனர். (பிதுருக்கள்— இறந்த பெற்றோர்) உலகத்திலோ மனிதர்கள் தம்தம் பயன்களைக்கருதி யெப்பொழுதும் மூன்று பிண்டங்களில் முறையே பிதாவையும், பிதாமகனையும், பிர

பிதாமகனையு மாவாகனஞ்செய்து பிரார்த்தனைகளைச் செய்கின்றனர். இவ்விதம் கொடுக்கப்பட்ட சிராத்தங்களெல்லாம் பிதுருக்களை யெவ்வித மடைகின்றன. ஒரு சரீரமவர்களை யடைந்தாலும் நரகத்தில் வசிக்கும் நாஸ்திகரான பிதுருக்களிவர்களுக் கெப்படி மனோபீஷ்டங்களை யளிக்க வல்லமையுள்ளவர்களாவார். அல்லது பிதுருக்களென்றவர் வேறுயாவர்? எவர்களைக்குறித்து நாமிப்பொழுது வழிபடுகின்றோம். சுவர்க்கத்திலுள்ள தேவர்களுங்கூட பிதுருக்களைச் சிராத்தத்தால் வழிபடுகின்றனரெனக் கேள்விப்படுகின்றோம். ஓ! மகாப்பிரதாபமுள்ள பிதாமகனே இதை விரிவாகக் கூறவேண்டும். புத்திமான்களான தாமே இந்த விஷயத்தைச் சொல்லத்தக்கவர். இங்கு நம்மாலெவ்விதம் எப்பிதுருக்களை வழிபட்டால் நமக்குத்தாரணம் கிடைக்கும்.

பீஷ்மாச்சாரியர்:— ஓ! வெற்றியசாளனான தருமபுத்திரனே! இவ்விஷயத்தில் என்னாற் கேட்கப்பட்டபடி யுனக்குக் கூறுகின்றேன் கேள். பிதுருக்களென்பவர் யாவர், எவர்களைக்குறித்து நாம் வழிபடுகின்றோம் என்ற இவ்விஷயத்தைப் பற்றி மேலாகாத்திரத்தை யடைந்திருந்த எனது தந்தையான சந்தனு மகாராஜாவினு லெனக்குக் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது:— ஒருக்கால் நான் சிராத்தஞ்செய்யும் பொழுது என் பிதாவைக்குறித்துப் பிண்டத்தை யிடுவதாய்க் கையிலெடுத்தேன். அதை என் தந்தை விரும்பி, தனது கையைப்பூமியினின்று பிளந்துமேல் நீட்டிக்கரதலத்தால் யாசித்தனர். அப்பொழுதுமக்கை, கடகம் கேயூரம் முதலிய பூஷணங்களாலலங்கரிக்கப்பட்டும், நானெவ்வாறு கையை யுயிருடனிருக்கையிலெப்படிக் கண்டிருந்தேனோ அப்படியே சிவந்த விரல்களையுடையதுமாயிருந்தது. அது சமயத்தில் நான் அக்கரதலத்தில் பிண்டத்தை வைக்க ஆபஸ்தம்பாதி கல்பசாஸ்திரங்களில் விதியில்லாததால் அஞ்சி தருப்பங்களிலேயே யதிகமாயாலோசியாமலே பிண்டப்பிரதானஞ் செய்தேன். பிறகு அக்காரணத்தாலெனது தந்தையு மப்பொழுது மிகவும் சந்தோஷித்து. இனிமையான தமது வாக்கினால், ஓ! பரதசிரேஷ்டனே! என்னைக்குறித்துக் கூறியதாவது. ஓ! பாபமற்றவனே! அறிவாளனும், தருமமறிந்தவனும், சற்புத்திரனுமான உன்னால் யான் புத்திர சம்பத்தையுடையவனானேன். இங்குமங்குமடைய வேண்டிய பயன்களையெல்லாமடைந்தேன். ஓ! உறுதியுள்ளவனே! என்னால் உன்னபிப்பிராயம் இவ்வுலகத்தில் தருமங்களுடைய வியவஸ்தையை நிலைநிறுத்துவதற்காகப் பரீக்ஷிக்கப்பட்டதே யொழியவேறில்லை. தரும



த்தை யிரக்ஷிப்பவனெவ்விதம்தான் நான்காவதான பழுதுறுகின்ற மோக்ஷப் பயனை யடைவானோ, அவ்விதமே தருமத்தைப் போற்றாதவனும், சிக்ஷைக்கு ஸ்தானமான நரகத்தை யடைகின்றான். எப்பொழுதும் தருமாசாரங்களில் அரசனெவ்விதமனுஷ்டிப்பானோ, அவ்விதமே யுலகங்களுமதையே பிரமாணமாயனுசரிக்கும். ஓ! பரதசிரேஷ்டனே! இப்பொழுதினின்றும் நிலையான வேதத்திற் கூறிய தருமானுஷ்டானங்களெல்லாம் பிரமாணமாக்கப்பட்டன. மேலுமெனக்கும் நிகரற்றப் பிரீதியுமுண்டாக்கப்பட்டது. ஆகையால் உனக்குச் சந்துஷ்டனையான் பிரீதியால் மூவுலங்களிலும் துர்லபமான சிறந்தவரமொன் றளிக்கின்றேன் பெற்றுக்கொள். அதாவது;— நீ எவ்வளவுகாலஞ் சீவித்திருக்க விச்சயிப்பாயோ அதுவரையில் உனக்கு மிருத்யு சம்பவிக்கமாட்டாது; உன்னிடமுத்திரவு பெற்றுக்கொண்டே மிருத்யு உன்னையணுகுவான். இஃதல்லாமல் வேறுயாது வரன்வேண்டும். அதை இன்னதென்று உனது மனதிலுள்ளபடி கூறுவாய். இப்படிக்கூறிய அத்தந்தையை நான் நமஸ்கரித்துக் கைகூப்பி ஓ! உத்தமனே! நீரெனக்குப்பிரஸன்னமானதாலேயே நானடையவேண்டிய பயன்களையெல்லா மடைந்தவனானேன். ஓ! சிறந்த வொளியையுடைய பிதாவே! மேலுமக்கு என்னிடமனுக்கிரகம் செய்யவேண்டுமென்ற விருப்பமிருந்தால், தம்மால்கூறப்பட்டபடி ஓர் வினாவொன்று தம்மிடமிருந்து கேட்டறியவிரும்புகின்றேனென்ற இவ்வார்த்தையைக் கேட்ட தருமபுத்தியுள்ள அவரும், என்னைநோக்கி ஏ! பீஷ்ம எதுவேண்டுமென்றாலுங்கேள், அந்த ஸந்தேகத்தையெல்லாம் தீர்க்கின்றேன், எதை வினாவுகின்றாயென்றார். பிறகு யுதிஷ்டிரனே! அந்தர்த்தானமாயுள்ள அவரைக்குறித்து நீ கேட்டபடியே குதூகலத்துடன் புண்ணியவான்களுடைய மேலுலகத்தைப்பற்றிக் கேட்டேன். அதாவது;—

பீஷ்மாச்சாரியர்:— பிதுருதேவர்களென்றவர் தேவர்களுக்குந்தேவரெனக் கேட்கப்படுகின்றார். ஆகையால் தேவர்கள்வேறு, பிதுருக்கள் வேறு? நாம் எவர்களைக்குறித்து வழிபடுகின்றோம். நம்மாற் கொடுக்கப்பட்டச்சிராத்தம் வேறுவுலகத்தையடைந்த பிதுருக்களையெப்படித்திருப்தியாக்கின்றது. ஓ! பிதாவே! சிராத்தத்திற்குயாதுபயன். தேவாசுரமனிதயக்ஷ கின்னர கந்தருவோரகர் எல்லோரும் எவர்களை வழிபடுகின்றனர். இதிலெனக்கு மிருந்த சந்தேகமும், இதையறியவேண்டுமென்றவாவுமிருக்கின்றது. ஓ! தருமமறிந்தவரே தாமெல்லாமறிந்தவ

ஆகையாலிச்சந்தேகத்தைத் தீர்த்துக்கூறவேண்டும். இதைக்கேட்ட ச தையும் பீஷ்மனுக்கு மறுமாறுவிடை யளிக்கின்றனர்.

சந்தனு:— ஏ! பீஷ்மா! எவையெவை யென்னைக் கேட்கப்பட்டனவோ அவைகளை யெல்லாஞ் சுருக்கமாகவே கூறுகின்றேன். சிராத்தத்தில் பிதுருக்களே காரணமென்பதையும், கொடுக்கப்பட்ட சிராத்தத்திற்கு யாதுபயனென்பதையும், பிதுருக்கள் யாவரென்பதையும் கூறுகின்றேன். நிலைத்தபுத்தியுள்ளவனாகக் கேள். ஏ! அப்பனே! ஆதி தேவனுன பிர்மாவினுடைய மக்கள் "பிதுருக்கள்." இவர்கள் சுவர்க்கத்திலுள்ள தேவர்கள். ஆகையாலிவர்களுக்கு பிதுருதேவதைகளெனப் பெயர். தேவர், அசுரர், மனிதர், இயக்கர், உரகர், கந்தருவர், கின்னரர் முதலிய இவ்வுலகம் முழுமையும் அப்பிதுரு தேவதைகளையே சிராத்தத்தால் வழிபடுகின்றன. அவ்விதம் சிராத்தங்களால் திருப்தியடையப்பட்ட பிதுருதேவதைகள், மறுபடியும் தேவாதிமயமான இவ்வுலகத்தைத் திருப்திசெய்விக்கின்றனர். இது பிர்மாவினுடைய கட்டளை. ஆகையாலந்த பிதுருதேவதைகளைக் குறித்து ஏ! மகா பாக்கியவானே! சோம்பலில்லாமல் உக்கிரமான சிராத்தங்களால் வழிபடுவாய்! எல்லாவபீஷ்டங்களையும் கொடுக்குமப்பிதுருதேவதைகள் சகலபயன்களையுங் கொடுத்து க்ஷேமத்தைச் செய்வார். உன் நாமகோத்திரங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்ட அப்பிதுருதேவர்கள் மேலுலகத்தையோ நரகத்தையோ யடைந்த என்னைப் போன்றவர்களைத் திருப்தி செய்விப்பார்கள். மார்க்கண்டேயரிவ்வி மிச்சமுள்ள எல்லாவற்றையுமுனக்குரைப்பார். பிர்மஞ்ஞானியாயும் பிதுருக்களிடம் பக்தனையுமுள்ள இம்மார்க்கண்டேயரோ, சிராத்தத்திலிப்பொழுது எனதனுக்கிரகத்தின் பொருட்டுத்திருக்கின்றனர். ஏ! மஹா பாக்கியவானே! இவரைக்கேள், எனவுரைத்து லோகாந்திரஞ்சென்றார்.

16-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 17-வது அத்தியாயம்.

பீஷ்மாச்சாரியர்:—பிறகு தந்தையினுத்திரவினால் அடக்கத்துடன் மார்க்கண்டேயரை, முன்பு என்னுற்றதையிடம்பாது விளவப்பட்டோர்



அச்சந்தேகத்தையே கேட்டேன். அதற்கு தருமாத்மாவாயும், மிகுந்த தவசியாயுமுள்ள மார்க்கண்டேயர் என்னைநோக்கிக்கூறியதாவது:- ஓ! பாபமற்ற பீஷ்மனே! ஆதியோடந்தம்முழுமையும் சொல்லுகின்றேன் மனச்சுத்தியுடன் கேள். நான் பிதுருக்களுடைய ஆசீர்வாதத்தால் நீடிய வாயுளையடைந்தேன். பிதுருக்களிடமுள்ள பக்தியாலேயே முன்பு சிறந்த கீர்த்தியையுமடைந்தேன். அப்படிப்பட்டயான் அநேகவருஷங்கள்கூடிய யுகத்தினீற்றில் மேருபருவதத்தையடைந்து கொடுமையான தவத்தைச் செய்தேன். பின்பொருக்கால், அம்மேருவின் வடசாரலில் மிகுந்த வொளியால் ஆகாயத்தையெல்லாங் கொளுத்திக்கொண்டு வருமோர் விமானத்தைக்கண்டேன். அதிலுள்ளவோர் மஞ்சத்தில், ஜ்வலிக்கின்ற சூரியன்போலும், அக்கினியில் மற்றோரக்கினியை யிட்டதுபோலுமுள்ள படுத்துறங்குமோர் புருஷனைக்கட்டைவிரல்பிரமாணமுள்ளதாய்க்கண்டேன். தவம்புரிந்துவந்த அப்புருஷனைக்கண்டு தலையால் நமஸ்கரித்து விமானத்திலுள்ள அப்புருஷனைக்குறித்து அர்க்கியம், பாத்தியமிவைகளாற் பூஜித்தேன். பிறகு அப்புருஷனைக்குறித்து ஓ பிரபுவே! எவராலுமெதிர்க்க முடியாத தம்மை யான் எவ்விதமறிவேன். தம்மைத் தபோவலிமையாலுண்டானதும், நாராயணனது திவ்யகுணவடிவமாயுமுள்ள தேவர்களுக்குந்தேவரென என்னுடைவெண்ண முதிக்கின்றதெனக் கூறிய வென்னை நோக்கி அப்புருஷன் புன்சிரிப்புக் கொண்டு கூறியதாவது:— ஓ! மாசற்றவனே! என்னை நீ யறியவில்லையாகில் உன்னுடைய தவம் செம்மையாய்ச் செய்யப்படவில்லை யெனமொழிந்து, ஒரு கணத்திற்குள் மிகவுஞ்சிறந்த வேறோருருவத்துடன் என்னெதிரிற்றோன்றினார். அவரோ ஒரிடத்தில் இதன்முன்னென்றும் பார்க்கப்பட்டவர். பிறகவர்மொழிந்ததாவது:—ஓ! தவசியே! பிரபுவான பிர்மாவின் முந்திய மானஸபுத்திரனும், தபோபலத்தாலுண்டானவனும், நாராயணனது திவ்யகுணவடிவையுடையவனுமமான ஸநத்குமாரனென்ற யாதொருவன் முன்பு வேதங்களில் கேட்கப்பட்டானோ, அவனேயான். பார்க்கவனுன மார்க்கண்டேயனே பதறவேண்டாம் க்ஷேமத்தையடைவாய். உனக்கு எவ்விருப்பத்தைச் செய்யவேண்டும். பிர்மாவின் யாதொரு மற்ற எனதுதம்பிகளான ஏழு புத்திரர்களுளரோ, அவர்களுடைய வம்சங்களெல்லாம் நிலைநிறுத்தப்பட்டன. அவர்களே கிருது, வஸிஷ்டர், புலஹர், புலஸ்தியர், அத்திரி, அங்கிரஸ், புத்திமானுன மரீசி என்றவர்கள். இவர்களெல்லோரும் தேவ கந்தருவர்களால் வணங்கப் பட்டவர்களாக இம்மூவுலகங்களையும் வகித்துவருகின்றனர். யாமோ ஓ! மஹாமுனியே! ஆத்ம

சுவரூபத்தி லாத்மாவை நிலைநிறுத்தி அவ்விரண்டையுங் கூட்டி அடக்கமான யதிகளுடைய நடையையுடையவர்களாயிருக்கின்றோம். பிரஜைகளை விருத்திசெய்யும் நடையையும், விருப்பத்தையும் விட்டுவிட்டோம். எப்பொழுதெவ்விதமுற்பத்தியாக்கப்பட்டோமோ, அப்பொழுதே என்னை குமாரனென வறிவாய். ஆகையாலேயே இச்சனத்குமாரனென்றபெயர் எனக்குநிலைநிறுத்தப்பட்டது. என்னைக்காணவேண்டுமென்ற வாசையால் என்னிடத்தில் எப்போதுகூட வுன்னால் சிரத்தையும் செய்யப்பட்டது. அதற்காக இதோ உனக்குநான் பிரத்தியக்ஷமானேன். எந்த இஷ்டத்தை யுனக்குச்செய்வேன். இவ்விதமுரைத்த சநத்குமாரனை அச்சனத்குமாரனைக்குறித்து அவராலனுக்கிரஹிக்கப்பட்டவன் மறுமொழியாக ஓ! பாரதனே! இவ்விஷயத்தையே கேட்டேன். ஓ! நிக்ருஹனே! பிதுருக்களுடைய திருப்தியும், சிராத்தத்தின் பயனுமின்னதென்னவெனவுமென்னாலவர் வினவப்பட்டார். ஓ! பீஷ்ம! அந்தேவசுவரனான சனத்குமாரர் எனது சந்தேகத்தை யகற்றினார். மேலும் தருமசுவரூபனான அக்குமாரர், பல்லாண்டுகள் கூடிய அப்புகாலத்தில் என்னைப்பார்த்து ஓ! பிரமரிஷியே உன்னோடு நான் கூடியானந்திக்க விரும்புகிறேன். ஆகையால் வெகுப்பிரியத்துடன் நீ கேட்ட வினாக்களைப்பற்றி உள்ளபடியே மறுமொழிகளை யுரைக்கின்றேன் என்றார்.

ஸநத்குமாரர்:— ஓ! மார்க்கண்டேயனே! ஆதியில் பிரமாவானவர் தன்னையே வழிபடவேண்டுமென்று தேவர்களைப் படைத்தார். அத்தேவர்களோ அப்பிரமாவைவிட்டு பயன்களைக் கருதினவர்களாய் பரமாத்மாவை வழிபட்டனர். அதனால் தேவர்களெல்லோரும் பிரமாவினால் மூடர்களாகவும், உணர்வற்றவர்களாகவும் சபிக்கப்பட்டார்கள். உடனே தேவர்களும், அறிவு முணர்வுமற்றுப் போக உலகமும் மோஹாந்தகாரத்திலழுந்தியது. சபிக்கப்பட்ட அத்தேவர்கள் மறுபடியும் பிரமாவை வணங்கி உலகத்தையாசீர்வதிக்கும்படி யாசித்தனர். அப்பொழுது பிரமா கூறியதாவது:— ஓ! தேவர்களே! எனது வாக்கியத்தை யதிக்கிரமித்த தன் பொருட்டு நீங்களனைவரும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளுங்கள். மேலும் உங்களுடைய புத்திரர்களையுமிவ்விஷயத்தைப்பற்றிக்கேளுங்கள் பிறகு நல்லறிவை நீங்களடைவீர்கள்.

வைசம்பாயனர்:— இவ்வுத்திரவைக்கேட்ட தேவர்கள் பிறகு பரமதுக்கிகளாய் தமது புத்திரர்களிடம் தாமநுஷ்டிக்கவேண்டிய பிராயச்சித்தமெவ்விதமெனக்கேட்டனர். அப்பொழுது பரிசுத்தர்களான அப்புத்திரர்களும் அத்தேவர்களைக்குறித்துக் கூறியதாவது:—



புத்திரர்கள்:— ஓ! தருமமறிந்தவர்களே! பிராயச்சித்தமென்பது வாக்காலும், மனதாலும், வினையாலும் செய்யத்தகுந்தது என்றும், எப்பொழுதும் கண்களாற் செய்யத்தகுந்ததென்றும், பிராயச்சித்தத்தினுண்மையை யறிந்தவர்களாயும், நல்லறிவுள்ளவர்களாயுமுள்ள வித்துவான்களான தேவர்கள் கூறுகின்றனர். ஓ! குழந்தைகளே! உங்களிடத்திற்குப் போகக்கடவீர். என்று அத்தேவர்களது புத்திரர்களால் பிதாக்களானத் தேவர்களை நோக்கிக் கூறப்பட்டது.

வைசம்பாயனர்:— பிரம சாபம்பெற்ற அத்தேவர்கள் மேலும் புத்திரர்களால் நிந்திக்கப்பட்டவர்களாய்க்கொண்டு சந்தேகந்தீர்த்துக் கொள்வதற்காக மறுபடியும் பிதாமகனென்ற பிரமாவையடைந்தனர். பிறகு பிரமாவுமத்தேவர்களைப் பார்த்து ஓ! தேவர்களே! நீங்கள் பிரமவாதிகளாகையாலுங்களுக்கு அதுதக்கதே. அப்புத்திரர்கள் கூறியதுமவ்விதமே, வேறில்லை. நீங்கள் சரீரங்களைப்படைக்கின்றவர்களாகவும், அவர்களுக்குத் தேவர்களாகவுமிருக்கக்கடவீர். அவர்களோ உங்களுக்கு ஞானப்பிரதானம் செய்யும் பிதுருக்களாகக்கடவர். இதிலையமில்லை. ஒருவருக்கொருவர் நீங்களிருவரும் பிதுருக்களே. இவ்விஷயத்தில் சந்தேகப்படவேண்டாம். ஆனால் தேவர்களென்றும் பிதுருக்களென்றும் பெயரையுடையவர்களாவீரென வறியக்கடவீரென்று பிரமாவாலுரைக்கப்பட்டவுடன் அத்தேவர்களெல்லோரும் கூடிப் புத்திரர்களிடம் வந்துகூறியதாவது:—

தேவர்கள்:— ஓ! புத்திரர்களே! பிரமாவினால் சந்தேகந் தீர்க்கப்பட்டவர்களாகவும், நாமொருவருக்கொருவர் பிரிதியுள்ளவர்களாகவுமானோம். ஆகையால் யாதொரு உங்களால் நாங்கள் உணர்விக்கப்பட்டோமோ, அக்காரணத்தால் நீங்கள் எங்களுக்குத் தருமமறிந்த பிதுருக்களாவீர். உங்களபீஷ்டமென்ன. என்னவரமுங்களுக்கு வேண்டியது, முன்பு எங்களைப்பார்த்துக்குழந்தைகளே! யென்றுதாங்களழைத்தபடியே தாங்களனைவரும் எங்களுக்குப் பிதுருக்களே. இதுமாறாது, சொன்னது சொன்னதே. எவர் யாதொரு தங்கள் தந்தைகளைக் குறித்துச் சிராத்தக்கிரியைகளைச் செய்கின்றனரோ அதன்பயனை இராக்ஷஸர்களும், அசுரர்களும், நாகர்களுமடைவார்கள். எவர் பிதுருதேவதைகளான

வங்களைக்குறித்துத் தத்தம் தந்தைகளுக்காகச் சிராத்தகிரியைகளை நடத்துவார்களோ, அக்கிரியைகளால் பிதுருதேவரான நீங்கள் திருப்தியையடைந்து, எப்பொழுதுமழிவற்ற வமுதத்திற்கிருப்பிடமாகிய சந்திரனை விருத்தியடையச்செய்கின்றீர். அவ்விதம் விருத்தியடைந்த சோமனும், கடல் மலை முதலிய சராசரம் நிறைந்த இந்த வுலகங்களை யெல்லாம் திருப்தி செய்விப்பான். புஷ்டியை விரும்பிய எந்த மனிதர்கள் சிராத்தங்களைச் செய்கின்றனரோ, அவர்களுக்குப் புஷ்டியையும் பிரஜைகளையும் பிதுருதேவர்களான நீங்களே கொடுக்கும் வல்லமையுடையவர்களாவீர்.

ஸநத்குமாரர்:— ஓ! மார்க்கண்டேயனே! சிராத்தத்திலெவர் அவரவர் தந்தைதாய் முதலியோருடைய நாமங்களையும் கோத்திரங்களையும், உச்சரித்து, அப்பிதுருதேவதைகளைக்குறித்து மூன்றுபிண்டங்களையிடுகின்றனரோ, அப்பிண்டங்களாலப் பிதுர்தேவர்களே திருப்தியடைந்து, சிராத்தம் செய்தவனுடைய பிதா, பிதாமஹன், பிரபிதாமஹனென்ற மூவர்களையும் எப்பொழுதும் திருப்தி செய்விக்கின்றனர். இவ்விதம் முன்பு பரமேஷ்டியான பிர்மாவினால் கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆகையால் தேவர்களும், பிதுருக்களுமாகிய நாமொருவருக்கொருவரிணங்கி அப்பிர்மாவின் வாக்கை யுண்மை யாக்கவேண்டுமென நிச்சயித்துக் கொண்டனர். ஆகையால் அவர்களே பிதுருதேவதைகள். அப்பிதுருக்களுக்கு மத்தேவர்களே பிதுருக்கள். இவ்விதமொருவருக்கொருவர் தேவரும் பிதுருக்களும் பிதுருக்களாவார்.

மார்க்கண்டேயர்:— பகவானும், தேவதேவனும், மிகுந்தவொளியையுடையவராயுமுள்ள ஸநத்குமாரரால் கூறப்பட்டயான், மறுபடியும் அழிவற்றும் தேவோத்தமனும், பகவானுமான அத்தேவனை நோக்கிப் பின்னுமோர் சந்தேகத்தை வினவினேன். ஓ! வெற்றியாளனாகிய காங்கேயனே! அது முழுமையும் ஆதிமுதல் நன்றாய்க் கேள். பிதுருக்களுடைய கணங்களெத்தனை? தேவர்களுக்கெல்லா மமுதத்தை விருத்தி செய்யும் தேவோத்தமர்களான அப்பிதுருதேவர்கள் என்பவர் எங்கே வசிக்கின்றனர்.

ஸநத்குமாரர்:— ஓ! யக்ஞசீலனான மார்க்கண்டேயனே! அப்பிதுருகணங்கள் ஏழு. அவைகளுள் ரூபமுடையவை நான்கு. ப்ரமாணுரூ



மாயுருவமின்றி தெனவூகிக்கக்கூட முடியாத அரூபி கணங்கள் மூன்று. ஓ! தபோதனனே! அவர்களுடைய வுலகத்தையும் படைப்பையும் பிரபாவத்தையும், மஹாத்மியத்தையும் விஸ்தாரமாகக் கூறுகின்றேன் கேள். அவைகளுக்குள் எவை சிறந்தமூன்று கணங்களோ அவை முழுமையும் தருமத்தையே யுருவமாகவுடையவை. அவைகளுடைய பெயர்களையும், அவைகளிருக்கு முலகங்களையும் கூறுகின்றேன் கேள். விராஜனென்ற பிரஜாபதியின் மக்களானபடியாலவர்களுக்கு வைராஜ பிதுர்க்களெனப் பெயர். சூரியர்கள் வசிக்கும் சநாதனமென்ற வுலகமே அவர்களிருப்பிடம். அவர்களையே தேவகணங்களெல்லாம் சாஸ்திரமுறைப்படி வணங்கிவருகின்றன. ஓ! மார்க்கண்டேயனே! இப்பூவுலகில் எவரெவர் யோகாப்பியாசிகளாயிருந்து நடுவில் தவறிப்போகின்றனரோ அவர்களெல்லாம் அச்சநாதன வுலகத்தையடைந்து மறுபடியும் கல்பாதியில் பிர்மவாதிகளாகப் பிறக்கின்றனர். அவ்விதம் பிறந்தவர் பின்னும் முன்பழக்கத்தையேபற்றி, மிகவும் மேன்மைபொருந்திய சாங்கியசாஸ்திரங்களிற் கூறிய யோகவழியை நாடுவார்கள். அவ்விதம் அந்தயோகத்தை முழுமையுமனுஷ்டித்து சித்திபெற்றபின் மறுபடியும் ஜனனாதி வுபத்திரவங்களில்லாத வுத்தம கதியையடைவார்கள். இப்பிதுருகணங்கள் மூன்றும் யோகிகளுடைய யோகத்தை விருத்திக்குக்கொண்டுவருந் திறமையுடையவர்கள். தங்களிடமுள்ள யோகபலத்தால் சோமனுக்கும் அமுதகாரணத்தை யிவர் பூர்த்திசெய்பவராதலால், அவசியம்யோகிகளுக்கு இவர்களைக்குறித்துச் சிராத்தம் முதலியகிரியைகளை நடத்தவேண்டும். இது தவிர சோமபானஞ்செய்தமஹாத்மாக்களான பிதுருக்களுடைய படைப்பாவது:— இவர்களுடைய மனதினின்றும் உதித்தமேனையென்னப்பட்டவள் இமாலயபருவதத்தின் மேன்மைபொருந்தியமனைவி. இவ்வுத்தமிக்கு மைநாகனென்றவோர் புத்திரன் உண்டானான். அவனதுமகன் சீமானான குரௌஞ்சனென்ற மகாகிரி. இவன்பருவதங்களுள் சிறந்தவனும் பலவிதமான ரத்தினங்களையுடையவனுமாம். மேலும் அம்மேனையுடன் இமாலயனென்ற சைலராஜன் அபர்ணை, ஏகபர்ணை, ஏகபாடலையென்ற மூன்று புத்திரிகளையும் பெற்றான். அம்மூவரும் தேவாசுரர் எவராலும் செய்ய முடியாத கொடுமையான தவத்தை யனுஷ்டித்து, உலகங்களிலுள்ள ஸ்தாவரஜங்கமங்களை யெல்லாம் தபிக்கும்படி செய்தார்கள். ஏகபர்ணையென்பவள் ஒருபர்ணத்தாலேயே யாகாரஞ்செய்து வந்தனள். ஏகபாடலையென்பவள் ஒரே புஷ்பத்தைக்கொண்டு ஜீவித்திருந்தனள். மற்று

மூன்றாவது புத்திரியோ அபர்ணையாகவே தவம்புரிந்தனள். (பர்ணம் = இலை) ஆகையால் அருமையாய்ப் பெற்றெடுத்த மேனையானவள் அபர்ணையென்ற தன்மகளை மாதிரு ஸ்நேகத்தா லடங்காத துக்கத்தோடு தவம்புரியவேண்டாமெனத் தடுத்தனள். அவ்விதம் தடுக்கும் பொழுது தேவதைகளாதலால், அவர்து பாஷையாகிய தேவபாஷைப்படி "உ! மா" என நிஷேதம் செய்யப்பட்டது. (உ = அடிகுழந்தை! மா = இவ்வித மூர்க்கம் செய்யவேண்டாம்) அவ்விதமொருவராலு மனுஷ்டிக்க முடியாத தவத்தைச் செய்த யோகானுஷ்டானத்தில் சுந்தரியான அபர்ணா தேவியானவள், மாதாவினால் தடுக்கப்பட்ட அக்காரணத்தா லதன்பின்பு மூவுலகங்களிலும் உமாதேவியெனவே பிரசித்தியடைந்தனள். இம்மூன்று குமாரிகளைப் பற்றியே யிவ்வுலகம் மூன்றும் நிலைத்திருக்கின்றது. இம்மூவரும் யோகபலமுடையவர்களும், பிரமவாதினிகளும், மேம்பட்ட விரதவிஸ்தாரங்களையுடையவர்களுமாய் விளங்குகின்றனர். அவர்களுள் உமைதேவியார் பிறப்பிலும் தவத்திலும் முதன்மையானவள். மிகுந்த யோகபலமுடைய இவள் மகாதேவனைக் குறித்துத் தவம்புரிந்தாள். ஏகபர்ணை யென்றவள் அஸிதரென்ற மகருஷியை மணம்புரிந்து தேவலனென்ற மைந்தனையீன்றாள். ஏகபர்ணை யல்லது ஏகபாடலையென்ற மற்றவள் ஜைகீஷவ்யமகருஷியை மணம்புரிந்து யோகிசம்பந்தமான சங்கன், லிகிதன் என்றயிரு மக்கள்களைப்பெற்றாள். மஹாபாக்கியசாலிகளான இவ்விருதேவிகளாகிய ஏகபர்ணையும், ஏகபாடலையும் யோகாசாரியர்களான அவ்விருவர்களையுமடைந்து வசிக்கின்றனர். மரீசி மஹாரிஷியின் மக்களானவர் சோமபர்களென்ற பிதுருகணங்கள் யாவையுமாவர், அவைகளைத் தேவர்கள் பாவனைசெய்கின்றனர். இவர்களுக்கு அக்நிஷ்வாத்தர்களென்றபெயர். எல்லோருமாவில்லாத மான்மியத்தையுடையவர்கள். இவர்களுக்கு மனதினின்றுதித்தவள் அச்சோதையென்ற நதிரூபமான கன்னிகை. யாதொருவளுடைய பிரபாவத்தாலச் சோதமென்ற பெரியபுஷ்கரிணி யொன்று உலகத்தில் பெயர்போனதாய் விளங்குகின்றதோ, அந்த அச்சோதையென்ற புத்திரியால் நீடியகாலம் வரையில் கண்ணால் காணமுடியாதிருந்த அவளது தந்தைகள் எல்லாம், எவர் கண்களுக்கும் புலப்படாத வுருவமுடையவராகிலும், புன்சிரிப்பையுடைய இவள் கண்களாற் கண்டனள். கண்டும் அப்பிதுருக்களது மனதிலுதித்தவளாகையால் தனது பிதுருக்களை யின்னாரென்று அறிய இயலாற் கூடாமல் மிகுந்த வெட்கமுடையவளாய்க்கொ



ண்டு யிருந்த துக்கத்திலாழ்ந்தாள். பிறகு அங்கு மிங்கும் பார்த்து முடிவில் ஆயுவென்றவன் புத்திரனாயும் ஆகாயத்தில் அத்திரிகை யென்ற அப்ஸரஸ்ஸுடன் விமானத்தின்பேரில் சஞ்சரிப்பவனுமுள்ள வசுவென்றவனைத் தனது பிதாவெனவழைத்தனள். இவ்விதம் தனது தந்தைகளை விட்டுவேறொருவனைத் தந்தையெனவழைத்த மாறுபாடான தோஷத்தால், யோகபலத்தோடுகூடியும் மனதாலேயே யிஷ்டப்பட்ட வுருவங்களையெல்லாமெடுக்க வல்லமையுடையவளுமான இவள் திடீரென அந்த யோகத்தினின்றும் நழுவப்பட்டவளாய்க் கீழேவிழுந்தாள். அப்படிவிழும்பொழுது அதிசூட்சுமமான மூன்றுவிமானங்களைத் தான் வரும்பொழுது ஆகாயமத்தியில் கண்டாள். மேலுமவ்விமானத்தில் தீயிற்றீப் பொரியிட்டது போன்ற வொளியுடன் அறியமுடியாத அதிநுட்பமான வுருவத்துடன்கூடிய மூன்றுபிதுருக்களைக்கண்டாள். தலைகீழாய் விழுமச்சோதை யென்பாள் அப்பொழுது அவர்களைக் கண்டவுடன் மனவுருக்கத்தோடு தன்னைக்காப்பாற்றவேண்டுமென வரக்கப்பிரார்த்தித்தனள். அதைக்கேட்ட அவர்களும், பயப்படாதை யென அவளுக்கபயம் கொடுத்து அவ்விடத்திலேயே அவளைநிற்க வைத்தனர். பிறகு இவள் தீனமான தனதுவாக்கால் அப்பிதுருக்களை மிகவும் திருப்தியாகும்படிப் பிரார்த்தித்துக்கொண்டாள். அதைக்கேட்ட அவர்களும், முறையைமாற்றிய வதிக்கிரமத்தால் நழுவிய வைசுவரியமுடைய அக்கன்னிகையை நோக்கி கூறியதாவது:— ஓ! பெண்ணே! உனது தோஷத்தால் நீ நழுவிவிழுகின்றாய். தேவலோகத்தில் தேவர்களால் எந்ததேகத்தைக்கொண்டு எந்தெந்தகருமங்கள் செய்யப்படுமோ, அந்தந்த கருமங்களின் சுபா சுபப்பயன்களை அந்தேகத்தாலனுபவிக்கவேண்டும். தேவத்தன்மையயடைந்தபொழுது அப்பொழுதே பலிக்கவேண்டும்: மனுஷியத்தன்மைக்கோ அதுபோனபிறகு லோகாந்தரங்களில் பலிக்கும். ஆகையால் ஓ! புத்திரியே! நீ செய்ததோஷத்திற்குப் பயனாக இப்பொழுதே கீழேவிழுகின்றாய். இவ்விதமுரைக்கப்பட்ட அவ்வச்சோதை, மிகுந்தவணக்கத்துடன் தனது அப்பிதுருக்களைத் தெளியவைத்து மன்றாடிவேண்டிக்கொண்டனள். பிறகு அவர்களும் அவசியம் பலிக்கத்தகுந்த சிலகாரியங்களையாலோசித்துத் தயவினால் அவளுக்கு வருமாறு ஆசீர்வதித்தனர். ஓ! பெண்ணே! இந்தவஸுவென்ற வரசனுக்கு நீ பெண்குழந்தையாகப் போகின்றாய். மனிதர்க்குள் மஹாத்மாவான இவ்வஸுவிற்குப் பெண்ணாய்ப்பிறந்து சில்நாட்சென்ற பின் மறுபடியும் உனது ஸ்தானமாகின்ற

ஞர்லபங்கலான வுலகங்களையே யடைவாய். அப்படிப் பிறந்தபொழுது பாராசரரிஷிக்குச் சரீரசம்பந்தமுள்ள வோர்மைந்தனைப்பெறுவாய். பிர்மரிஷியானு அப்புத்திரனும் ஒன்றாயிருந்த வேதத்தை நான்காய் வகுக்கப் போகின்றார். அன்றியும் எப்பொழுதும் யௌவனம்தவராத சந்தனு மகாராஜனுக்குக் கீர்த்திமான்களான விசித்திரவீரியன், சித்திராங்கதனென யிரண்டு குமாரர்களையும் பெறுவாய். இவ்விதயிப் புத்திரர்களைப் பெற்றுப்பின்பு உனது லோகத்தையடையப் போகின்றாய். ஆனால் பிதுருக்களிடமுனக்குண்டான வதிக்கிரமத்தால் தாழ்ந்த ஜன்மத்தை யடைவாய். இவ்வுபரிசரவஸுமஹாராஜனுக்கே அத்ரிகையென்ற அப்ஸரஸ்வினிடம் இருபத்தியெட்டாவதுத் துவாபரயுகாந்தத்தில் மீனுடைய யோநியில் ஜநிப்பாய். இவ்விதம் கூறப்பட்ட அவ்வச்சோதையென்பவளே அப்பொழுது மீன்யோநியில் அவ்வஸுவிற்கு ஸத்தியவதியென்பவளாகப் பிறந்தவள். அத்திரிகை யென்பவளும் அதன்முன்பே கங்கா, யமுனா, ஸங்கமமாகிறப் பிரயாகைத்தலத்தில் மீனாகப்பிறந்திருந்தனள். அம்மீனிடத்தில், அவ்வஸுமகாராஜனுடைய வீரியத்திற்குண்டானபடியால் பிதுருக்களுடைய வாக்கும் சத்தியமாயிற்று. எவ்விடத்தில் மகாப்பிரசித்திபெற்ற பர்ஹிஷதர் என்றபிதுருக்கள் வசிக்கின்றனரோ அவ்வுலகங்கள் சுவர்க்கத்திலுள்ள வைப்பிராஜமென்ற பெயரையுடையவை. அவர்களை யெல்லாத்தேவகணங்களும். யக்ஷர், கந்தருவர், அரக்கர், நாகர், சர்ப்பர், சுபர்ணர் என்றமிகுந்த வொளியையுடைய சகலரும் பாவனை செய்கின்றனர். இப்பிதுருக்கள் மூன்றுவகுப்பினரும் மஹாத்மாவான புலஸ்தியப்பிரஜாதிபதியின் மக்கள்களுமாம். இவர்கள் மஹாத்மாக்களும், மிகுந்தபிரபாவமுடையவர்களுமாம். தருமத்தையே வடிவமாகவுடைய இம்மூன்றுகணங்களும் மங்களமானவர்கள். இவர்களுடைய மனதினின்றுதித்தவள் பீவரீயென்ற கன்னி. தருமத்தை வகித்தவருள் உத்தமையான இவள், துவாபரயுகத்தில் யோகத்திலிஷ்டையையுடையவளாயும், யோகிக்குமனைவியாகவும், யோகிக்குமாதாவாகவுமாகப் போகின்றாள். அதாவது:— துவாபரயுகாந்தத்தில் பாராசரகோத்திரத்தில் சுகனென்ற பெயரையுடையவோர் பிராமணசிரேஷ்டன் பிறப்பான். இவன் வியாசரிடமிருந்து அரணியில் புகையில்லாதவக்னிபோல் பிறந்த சுகப்பிர்மருஷியேயாம். அச்சுகனென்ற மகாதவசியும் யோகீசுவரனுமான பிராம்மணோத்தமன். அப்பிதுரு கன்னிகையான பீவரீ யென்பவளிடம் ஒரு பெண்ணையும், நான்கு ஆண் குழந்தைகளையும் ஜனிப்பிக்கப்போகின்றனர். அந்நால்வரும் யோகாசாரியர்களாயும், மிகுந்த மகிமையுள்ளவர்களாயுமிருப்பார்கள். கிருஷ்ணன், கௌரன், பிரபு, சம்பு, என்பன அவர்களின்பெயர். கிருத்வீயென்றது அப்பெண்பெயர். அன்றியும் ஆறுவது கீர்த்திமதியென்ற யோகினியை யோகமாதாவான அப்பீவரி யென்பாள் பெற்று அனுஹன் என்றவருக்கு மணம்செய்து கொடுக்கப்போகின்றாள். அக்கீர்த்திமதி பிர்மதத்தனென்றவனைப் பெறுவள். தருமாத்மாவான அச்சுகர்என்ற விப்பிரன் இவ்விதம் யோகாசாரியர்களான புத்திரர்களைப்பெற்றுப் பிறகு தனது தந்தையான வியாஸரிடம் சகல தருமங்களையும் கேட்டு, மறுபடியும் இச்சனனாதி துக்கத்திற்கிருப்பிடமாகிய ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவராத மோக்ஷகதியை அடையப் போகின்றார். அப்பதவியானது துன்பலேசமுமற்றது, அழிவற்றது, நிலையானது, ஆதித்தியன் முதலிய வொளிவீசும் வஸ்துக்களில்லாமலே இயற்கையான வொளியையுடையது, பிர்மம் என்ற பெயரையுடையது, மறுபடியும் ஜனனாதியிற் சேர்ப்பிக்காதது. (பிர்மம்=நிறைந்தது, பரந்தது, அல்லது ஞானமயமானது.) ஓ! மார்க்கண்டேயமுனிவனே! பிதுர்க்களென்றவர் அதிநுட்பமான வுருவத்தையுடையவரும், தருமத்தையே வடிவமாகவுடையவருமாம். மேலும்விருஷ்ணி, அந்தகர் முதலிய குலத்தை ஸம்மந்தித்தகதையானது எதினின்று முண்டாக்கப்பட்டதோ, அம்மூன்று பிதுருகணங்களுமென்றுக் கூறப்பட்டன. மிச்சமுள்ள நான்குகணங்களையுமென்னிடமிருந்து கேள்.



27 JUN 1910

இனியென்றுக் கூறப்படும் பிதுருகணங்களெல்லாம் ரூபமுடையவையெனக்கொள்க. கவியனென்ற அக்னியினிடமிருந்து சுவதையென்பவளிடம் பிறந்தமக்கள்கள், பலகர் என்ற பிதுருக்கள், வஸிஷ்டர் என்ற பிரஜாதிபதியின் மேலுலகத்திலுள்ள மிகவுமொளிபொருந்திய வுலகங்களிற்பிரகாசிக்கின்ற ஸர்வாபீஷ்டங்களும் நிறைந்தஸ்தானங்களில் மிகுந்த வொளியுடன் வசிக்கின்றனர். அவர்களைப் பிராம்மணஜாதிகள் பாவனை செய்கின்றனர். ஆகாயத்தில் கௌ என்றபெயரால் பிரசித்திபெற்றவளிவாது மானஸத்திலுதித்த கன்னிகை. அவளே உன்னுடைய வம்சத்திலேயே தானம்செய்து கொடுக்கப்பட்ட சுகன்என்றவரின் பாரியை ஏகசிருங்கை யென்றவள், சாத்தியர்களுடைய கீர்த்தியை விருத்திசெய்கின்றவள். பிறகு, மரீசிகர்ப்பமென்ற வுலகங்களை யடைந்து விளங்குகின்றவர்களாயும், சாத்தியர்களால் விருத்தியடையப்பட்டவர்களாயும், அங்கிரஸ் என்றமஹரிஷியின் மக்கள்களாயுமுள்ளவர்

கள் உபஹூதர் என்றபிதுருக்கள். பலவிதமான பயன்களைக்கருதி அவர்களை க்ஷத்திரியர்கள் வழிபடுகின்றனர். அப்பிதுருக்களுடைய மனதிலுதித்த கன்னிகையசோதை யென்பவள். அவள் விசுவமகான் என்றவருக்குப் பத்தினி. விருத்தசர்மா என்றவர் மருமகன், ராஜரிஷியாயும், மஹாத்மாவாயுமுள்ள திலீபனுக்கு மாதா. முன்பொருக்கால் அத்திலீபனது யக்ஞத்தில் திருப்தியடைந்த மஹரிஷிகளால் வருமாறு சிலகீதங்கள் பாடப்பட்டன. அவையாவன "அந்த சுத்தமான தேவயுகத்தில் ஓ! அன்பனே! யாதொரு அசுவமேதமென்ற பெருமைபொருந்திய யாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அக்னியினின்றுதித்த மஹாத்மாவான சாண்டில்யரிஷியின் ஜன்மத்தைக்கேட்டும், அந்தயாகத்திற்கு யஜமானனும், சத்தியவானும், மஹாத்மாவுமான திலீபனையும் பார்த்த பெரியோர்களான மனிதர்களும், யாதொருயாகத்தின் அவபிருதமென்ற ஸ்நானகாலத்தில் யஜமானனோடுகூட சுவர்க்கத்தை யடைந்தனரோ," இவைகளேயாம். பிறகு கர்தமப்பிரஜாபதியினிடமிருந்து ஸுஸ்வதா என்றபிதுருக்கள் உதித்தனர். மஹாத்மாக்களான இந்தவிப்ரோத்தமர்கள் சுவர்க்கத்திலுள்ள வுலகங்களில், தமதிச்சைப்பிரகாரஞ் செல்லும் விமானங்களில் வசிக்கின்றனர். ஓ! அன்பனே! அப்பிதுருக்களைப் பயனைக்கருதும் வைசியஜாதியர் பூஜிக்கின்றனர். அவர்களுடைய மனதினின்றுதித்தவள் பிரசித்திபெற்ற விரஜையென்பவள். இவள் யயாதிராஜனுக்குத்தாயும் நஹுஷனுக்கு மனைவியுமாம். இவ்விதம் மூன்றுகணங்கள் கூறப்பட்டன. நான்காவதைச் சொல்லுகின்றேனதை யென்னிடமிருந்துகேள். வசிஷ்டர் என்றப்பிரஜாபதிக்குப்புத்திரரான, ஸுகலிர் என்றபிதுருக்கள், சுவதையினீற்றில் சோமரஸத்தைப் பானஞ்செய்யும், ஞானியான ஹிரண்ணிய கர்ப்பனுடைய புத்திரர்கள். அவர்களைச் சூத்திரர்கள் வழிபடுகின்றனர். சுவர்க்கத்திலுள்ள மானஸங்களென்ற வுலகங்களவர்களுடைய ஸ்தானங்கள். அவர்கள் மனதிலுதித்த கன்னிகையான, நதிகளுட்சிறந்த நருமதையென்பவள் அவர்களது புத்திரி. தெற்கு திக்கிலோடும் யாதொருவள் ஸகலப்பிராணிகளையு மிரட்சிக்கின்றனளோ, யாதொருவள் புருகுத்ஸரென்ற மகரிஷியின் பத்தினியும், திரஸதஸ்யுரிஷிக்குத்தாயுமோ அவளே யமுனையென்பவள். இவ்விதமுள்ள பிதுருக்களின் சிராத்தம் முதலிய கருமங்களெல்லா முலகங்களில் நசித்துப்போனபொழுது, அந்தந்தயுகங்கள் தோறும் அப்பிதுருக்களுடைய அனுக்கிரகம் முதலியவைகளைப் பெருக்குவதற்காக, அவர்களைப்பற்றிய சிராத்தாதிகளை மறுபடியுமிவ்



வுலகத்தில் மனுவென்ற பிரஜாபதியானவர் நடத்திவரும்படி செய்விக்கின்றனர். ஓ! பிராம்மண சிரேஷ்டனான மார்க்கண்டேயனே! முதலில் சகலப்பிராணிகளையும் படைத்து அந்தந்தவருணாசிரம தருமத்தோடு அவரவர்களை யிசைவித்து அவரவர்களை விருத்திக்குவரும்படி அவரவர் பிதுருக்களுடைய சிராத்தங்களையும் வருணாசிரம தருமங்களோடு சேர்த்துப் பிதுருகாரியங்களை வழுவாமல் நடத்தி வைத்தகாரணத்தாலிம்மனுவும் சிராத்த தேவனெனப்படுவான். மேற்கூறப்பட்ட பிதுருக்களெல்லோருக்கும், வெள்ளிப்பாத்திரத்தையாவது வெள்ளியுடன்சம்பந்தப்பட்ட வஸ்துவையாவது ஸுவதையாகவெண்ணி வேதமறிந்தவிப்பிரனைக்குறித்து அல்லது புரோகிதனைக்குறித்தாவது தானம் செய்யப்படுமேயானால், அச்சிராத்தம் பிதுருக்களைப் பிரீதியுள்ளவர்களாகச் செய்கின்றது. சோமனுக்கும், அக்னிக்கும், வைவஸ்வதனுக்கும், திருப்திசெய்வித்துப்பின்பு அக்கினியிலாவது, அதுகிடைக்காவிடில் ஜலத்திலாவது, யக்ஞியூன ஹவிஸ்ஸாலாவது, ஜலத்தாலாவது பிதுருக்களையெவன் திருப்திசெய்விக்கின்றானோ, அவனைக்குறித்து அப்பிதுருக்கள் புஷ்டியையும், பிரஜைகளையும், தனங்களையும் சுவர்க்காதி சுகங்களையும், நோயற்ற வாழ்வையும் நீடித்தவாயுள்களையும் அளிக்கின்றனர். ஆகையால் ஓ! சிஷ்ய! தேவகாரியத்தைவிட பிதுருக்களின் காரியம் முக்கியமானது. தேவர்களுக்கு முந்தியே பிதுருக்களுடைய காரியம் செய்யவேண்டியதென ஸ்மிருதிகளிற்கூறப்படும். அப்பிதுருக்கள் சீக்கிரத்தில் பிரஸன்னமாகின்றவர்களும் கோபமற்றவர்களுமாகையா லவர்களாலுலகத்திற்கு நல்லவின்பமுண்டாகும். மேலுமவர்கள் எப்பொழுதும் நிலையான வரமளிக்கின்றவர்களாகையால், ஓ! மார்க்கண்டேயனே! அப்பிதுர்க்களை வணங்கு. ஓ! பிர்மரிஷியே பிதுருபக்தனே! எனக்கு மிகவும் பிரியமானவன். இப்பொழுது உனக்கனுக்கிரகம் செய்கின்றேன். அதனால் நீ யதைப்பிரத்தியக்ஷமாகப்பார்ப்பாய். மேலும் ஓ! பாபமற்றவனே! சிறந்த அறிவுடன் கூடிய தேவர்சம்பந்தம் பெற்ற கண்களைக் கொடுக்கின்றேன். அதனால் நீ யாதொரு அக்ஞானமுமில்லாதவனாய்க்கொண்டு உத்தமமான நற்கதியையும் பார், ஓங்கிவிளங்கும் யோகத்தின் கதியும், பிதுருக்களுடைய சிறந்த கதியும் உன்னைப்போன்ற விரத்தனாலும், மாமிஸமயங்களான கண்களைக்கொண்டு காண்கமுடியாதவை. இவ்விதம் பிதுர்க்களே தேவர்களாகவும், தேவர்களே பிதுர்க்களாகவும், மேலும் தேவர்களும், பிதுர்க்களும், இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் பிதுர்க்களாகவுமாயினர். அப்பிதுர்க்களுள்ளும் மூன்று கணங்களுருவமில்லாதவர்களாகவும், மற்றநால்வர்

மட்டிலுருவமுடையவர்களாகவும் விளங்குகின்றனர். அப்பிதுர்க்களைக் குறித்து அவர்களிடமே மனமுடைய தேவர்கள் கைகூப்பி மிகவுமாதரித்துப் பெருத்தப் பிரயத்தினத்துடன் பூஜைசெய்து வருகின்றனர். விசுவேதேவர், மிகதர், சிருங்கிகள், கிருஷ்ணர் முதலியோர்களும் விதிவழுவாமல் பூஜித்துவருகின்றனர். கேவலம் வாயுவையே ஆகாரமாகவுடையவர்களும், திவாகீர்த்தியர்களும், மேகங்களும், மருத்துக்களும், பிர்மாமுதலிய வேறுதேவர்களும், பிருகு, அங்கிரஸ், அத்திரி முதலிய வெல்லாரிஷிகளும், யக்ஷர், நாகர், ஸுபர்ணரென்றவர்களும் சாரணர்களோடுகூடிய கின்னரர்களும் அவரவர் தம்தம் மனோபீஷ்டங்களைக்கருதியவர்களாக அப்பிதுர்க்களையே பூஜித்து வருகின்றனர். அவ்விதம் பூஜிக்கப்பட்ட அப்பிதுர்க்களும் பலபல விதமானவனேக மிஷ்டஸித்திகளையெல்லா மவர்களுக்குக் கொடுத்தும் வருகின்றனர். அவ்விதமே பிதாமஹர்களான பிதுர்க்கள் நோய், மூப்பு, இறப்பு முதலிய பலவிதமான பயங்களையுடைய இச்சம்ஸாரபந்தத்தை விடுவித்து, மோக்ஷத்தையடையத் தருந்த வுபாயத்தையும், அணிமை முதலிய அஷ்டைசுவரியங்களையும் கொடுக்கின்றனர். பிரபிதாமஹர்களென்ற பிதுர்க்கள் மோக்ஷோபாயம் ஐசுவரியமிவைகளின் பயன்களையும், கண்ணுக்குக் காணவியலாத ஸூக்ஷ்ம தேகவித்தியையும், காரணதேகமாகிய அதேகவித்தியையும், பரிபூர்ணமான வெல்லையில்லாத வைராக்கியத்தையும் கொடுக்கின்றனர். ஐசுவரியங்களை யடைவதற்காக வேற்பட்ட யோகசாதனத்தையே ஐசுவரியமென்றும், யோகமென்றும் கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட சித்தவிருத்திகளை யடக்குவதாகிய யோகச்செல்வத்தை யன்றி எப்படிப்பட்டாலும் அம்மோக்ஷமென்றது கிடைப்பதரிது. இறக்கைகளில்லாத பறவைகளுக்கு ஆகாயத்தில் ஸஞ்சரிப்பது எவ்விதம்முடியாததோ, அவ்விதமே யோகசித்தியில்லாதவனுக்கு மோக்ஷம் ஸித்திக்காது. இம்மோக்ஷமென்றது வேதத்தில் விதிக்கப்பட்ட காரியங்களுக்குள் மிகவும் முக்கியமானது: அன்றியுமிது, மற்றவிதிகளைப் போலப்புதிதாய் வந்துபோவதல்ல, என்றுமுள்ளது. ஆகையாலிதை ஸநாதனமான மோக்ஷதருமமென்றும், இயற்கையாயுள்ளதென்றும் வேதங்கள் கூறுகின்றன. இம்மோக்ஷோபாயமானது அனேகம்மனிதர் முதலிய பிராணிகளுக்குள்ளொரு நல்ல மஹாத்மாவினால், பிதுர்க்களுடைய வநுக்கிரக பலத்தைக் கொண்டடையப்படுகின்றது. இஃதல்லாது பயன்களைக்கருதுவோர்க்கும், முத்துக்கள், வைடூரியம் முதலிய ரத்தினங்கள், உயர்ந்த வஸ்திரங்கள், குதிரைகள், அநேகவாயிரம் யானைகள்,



கோடிகோடிக்கணக்கான ரத்தினராசிகள் முதலிய வில்லறவுபயோகங்களான பொருள்களையும் கொடுக்கின்றனர். இவ்விதமே மேலுலகத்திலுமிப்பிதுர்க்கள், தங்களை வழிபடுகின்றவர்களுக்கு அன்னம், வென்டாழ்வான்குருவி முதலிய பறவைகள் நிறைந்த வனேகம் நடைவாவிகளாலழகிய பற்பலதோட்டங்களையுடைவிப்பதும், கிங்கிணீ முதலியவைகளாலலங்கரிக்கப்பட்டது. மெப்பொழுதும் பூத்துக்காய்த்துப்பழுக்கும் வல்லமையுடைய விருக்ஷங்களாற் சிறந்ததும் நானாவிதங்களான இஷ்டபோகங்கள் நிறைந்ததுமான வனேகம் விமானங்களையும், அவைகளுள்ளனேகமப்ஸரஸ்ஸுக்களையும் அளிக்கின்றனர். பெருமையையும், சந்தானபுஷ்டியையும், தைரியத்தையும், நுட்பமானபுத்தியையும், இராஜ்யத்தையும், நோயின்மையையுமிவ்வுலகத்தில் விரும்பும் மனிதர்களுக்கு, அப்பிதுர்க்கள் பிரீதியுடன்கூட வேண்டும் பயன்களை யெல்லாமளித்து வாழ்த்திவருகின்றனர்.

17-ம் 18-ம் அத்தியாயங்கள் முற்றின.

---

## 19-வது அத்தியாயம்.

அதற்குப்பிறகு சிராத்த கருமங்களுடைய வொழுங்கை ச்சாஸ்திரவிதி வழுமாற் கூறுகின்றேன் கேள். சிராத்தத்தின் வழியானது நித்தியமென்றும், நைமித்திகமென்றும், காமியமென்றும் மூவகைப்படும். மூன்று விதங்களான அஷ்டகை ச்சிராத்தங்களும் ஆக்கிரஹாயணமென்றதை யாதாரமாக வுடையவை. அவைகளுள் முந்தியதான ஐந்திரீ என்பது கிருஷ்ணபக்ஷத்தில் நடத்தக்கூடியது "முத்தமமானதுமெனக் கூறப்படுகின்றது. பிராஜாபத்தியமென்றவை இரண்டாவதாக வாகின்றன. வைசுவதேவகீ என்றது மூன்றாவது. எப்பொழுதும் நெய், வடை, அப்பம் முதலிய வஸ்துக்களாலாவது, மாமிசங்களாலாவது, காய்கறிகளாலாவது அப்பிதுர்க்களைப் பற்றிய சிராத்தங்களை நடத்தவேண்டும். இவ்விதமுள்ள பிதுர்க்களை யாராதிக்க த்தகுந்த வனேகம் மார்க்கங்களைத் தேடிப்பார்த்து எப்பொழுதும் பிதுர்களுடைய சிராத்தங்களையே நடத்திவரவேண்டுமென் வேதத்தில் விதிக்கப்படுகின்றது. யாதேனும் வேறு சதுர்த்தி முதலிய திதிகளிலாவது அவைகளிலும் யத்தினத்துடன் பூஜிக்கவேண்டும். ஆயுள் சிராத்த மென்ற மற்றொன்றை த்தினந்தோறும்

வேறுகத்தனக்குள்ள பொருளெல்லாவற்றாலும் செய்யத்தக்கது. இதனு
லிஷ்டங்களை யபிவிருத்தியுள்ள மக்கள் மடைகின்றான். தாகமுள்ள
பசுக்கள் குளத்தை யடைவதுபோல் பிதுர்க்கள் எக்காலங்களிலும்,
தேவதைகள் திதிகாலங்களிலும் ஒவ்வொரு புருஷனையு மடைகின்றனர்.
ஆகையால் ஓ! மார்க்கண்டேயனே! எவர்களுடைய பிதுர்க்கள் அஷ்ட
கைகாலத்தில் தங்க ளாசையை யடையாமல் திரும்பிப் போவார்களோ
அப்புருஷர்களு மிவ்வுலகத்திலாவது, அவ்வுலகத்திலாவது தங்க ளிஷ்ட
ங்கள் யாதொன்றையு மடையமாட்டார்கள். இவ ரநுபவிக்க வேண்டு
மென்ற வாசைகளெல்லாம் பயனற்றே திரும். அன்றியும் பிதுர்க்
களை ப்பூஜிப்பவர்களுக் குத்தமகதியும், அவரை ப்பூஜிக்காத நாஸ்திகர்
களுக்கு க்கீழ்ப்பட்ட கதியுமேற்படும். தேவர்களாலும், சிராத்தத்தை
க்கொடுத்தவர் உயர்வார். கொடுக்காதவர் தாழ்ந்த கதியை யடைவார்.
பூர்ணிமை திதியில் சிராத்தம் செய்தால்செல்வத்தின் புஷ்டி, சந்ததி
உணர்ச்சி, நல்லறிவு இவைகளை ப்பரிபூர்ணமாய் அடைவார் பிரதமை
யில் செய்தால் வேண்டிய அன்னமும், உள்ளது அழியாமலுமிருக்கும்
துவிதீயை திதியிற் செய்தால் மனிதர்களுக்குள் யுருந்த பெருமையை
யுடையவனுகவும், அவர்களுக்கு யஜமானனுகவு மாவான். திருதீயை
திதியில் செய்தால் சத்ருருக்கள் நாசமடைவார். சதுர்த்தியில் செய்தால்
சத்ருருக்களுடைய உளவுகளை யறிவார். பஞ்சமியில் செய்தவர் பெரு
த்த செல்வத்தை யடைவர். ஷஷ்டியிற் செய்தவர் பிராம்மணர்களுள்
பெருமையை யடைவர். எவன் ஸப்தமியில் பக்ஷந்தோறும் செய்கின்
றனோ அவன் பெரிய யாகத்தையும், கணங்களுக்கு அதிபதியா யிருக்
குந் தன்மையையும் அடைவான். அஷ்டமியிற் செய்தவன் பூர்ணமான
போஜன விருத்தியை யடைவான். மனிதருள் ஐசுவரியத்தை விரும்பு
வோனுல், நவமி திதியில் சிராத்தம் செய்யவேண்டும். தசமி திதியில்
சிராத்தம் செய்தவன் பிர்மத்தின் ஒளியை யடைவான். (பிர்மதேஜஸ்)
மேலும் எல்லாத் தேவர்களுடைய ஸ்தானங்களையும், விப்பிரர்களுக்குள்
மேன்மையையு மடைவான். ஏகாதசி திதியிற் சிராத்ததானம் செய்தால்,
ஐசுவரியமும் ஸந்ததியுமுண்டாகும். துவாதசி திதியில் செய்தால், யுத்
தத்திலோ வாததிலோ இராஜசபையிலோ லாபமுட், இராஜ்ஜியமும்,
ஆயுளும், செல்வங்களு முண்டாகும். திரயோதசியிற் சிராத்தம் செய்த
வனுக்கு, சந்ததி விருத்தியையும், பரிசுத்தங்களான பசுக்களையும், சுவா
தீனமா யிருத்தலையும், சிறந்த சரீர புஷ்டியையும், நீடித்தவாயுளையும்
செல்வத்தையும், அவனுற் பூஜிக்கப்பட்ட பிதுருக்கள் கொடுக்கின்றனர்.



சதுர்த்தசி திதியில் யுத்தத்தில் ஆயுதங்களால் மரித்தவர்களுக்கும், அற்
பாயுட்களாய் மரித்த காளைப்பருவமுடையவர்களுக்கும் சிராத்தம் செய்ய
வேண்டும். அமாவாசியை திதி யன்று முயற்சியுடன் எப்பொழுதும்
பரிசுத்தமா யிருந்து பிதுருக்களுக்கு ச்சிராத்தம் செய்யவேண்டியது.
அப்படி ச்செய்தவன் தன் மனோபீஷ்டங்களை யெல்லா மடைந்து,
சுவர்க்கத்திலு மழிவற்ற சுகத்தை யடைவான். அமாவாசியை தினத்
தில் அன்னதானம் செய்தால் சோமனுக்கு த்திருப்தியாகும். இவ்வி
தம் திருப்தி யடைந்த சோமன் இவ்வுலகங்களை வகிப்பான். பிதுர்க்
களிடம் திருடமான பக்தியுள்ளவன் அவனுடைய விமானத்திலேயே
சித்தர், சாரணர், கந்தருவர், முதலியோர்களா லெப்பொழுதும் புண்
ணிய வரங்களாயும், மனதிற் கின்பங்களாயும், எல்லா விஷ்டங்களையு
மனுபவிக்கத்தக்க கருவிகள் நிறைந்தவைகளாயும், ஆட்டம் வாத்தியம்
பாட்டு இவைகளால் விளங்குகின்ற வப்ஸரஸ்ஸுக்களால் கூட்டம்
கூட்டமாய் விளங்குவனவாயு முள்ள துதிகளால் துதிக்கப்படுவன்.
அமாவாசியையிற் போலவே மாகமாதத்திய மகத்தில் சிராத்தம் செய்ப
வனும். எல்லாவித காமபலன்களையு மடைவான். தேவர்களுக்கும் தேவ
ர்களாகிய பிதுர்க்களை தேவப்பிரியமான மாசி மக நக்ஷத்திரத்தில்
பூஜிப்பதானது, அப்பிதுருதேவதைகளை நேரி லிவன் பூஜித்தது
போலாகையால் அக்காலங்களில் செய்யப்பட்டவை யெல்லா மழிவற்ற
னவாகவும் குறையாதவையாகவு மறியத்தக்கவை.

19-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 20-வது அத்தியாயம்.

ஸநத்குமாரர்:—மேலும் யமதருமராஜனுனவன்சசபிந்து என்பவன்
பொருட்டு ஒவ்வொரு நக்ஷத்திரங்களிலும் வெவ்வேறாகச் செய்யத்தகுந்த
எம்தெந்த வேறு சில காம்யங்களான சிராத்தங்களைக் கூறினுனே, அவை
களை என்னிடமிருந்து நீ கேள்: எவன் கார்த்திகை நக்ஷத்திரந்தன்று
எப்பொழுதும் சிராத்தம் செய்வானே, அவன் புத்திர சந்ததியோடு பல
பல யாகங்கள் செய்யத்தக்க வல்லமையுடையவனுவான். ரோகிணி நட்
சத்திரத்தில் சந்ததியை விரும்புவோன் செய்யக்கடவது. சோமனது
ஸம்பந்தம் பெற்ற மிருகசிர நட்சத்திரத்தில் செய்பவன் நல்ல வொளி

யையடைவான். கோரமான தன்மையையுடையோன் திருவாதிரையிற் செய்தால் நல்ல தன்மையையடைவான், பின்னும் பூர நட்சத்திரத்திற் செய்பவன் நல்ல பாக்கியத்தையடைவான். எவன் உத்திர நட்சத்திரத்திற் செய்வானோ அவன் சந்ததியை யுடையவனாய் நல்ல கொடையாளியாவான். அஸ்த நட்சத்திரத்தில் பிதுருக்களைக்குறித்து த்தர்ப்பணம் செய்பவன் பெருத்தசபையில் நாயகனாவான். சித்திரையிற் செய்பவன் அழகுள்ள புத்திர சந்தானங்களையடைவான். வியாபாரத்தால் விருத்திக்கு வரவேண்டியவன் சுவாதி நட்சத்திரத்திற் செய்ய வேண்டியது. புத்திர ஸந்ததியை விரும்புவோன் விசாகத்தில் செய்யக் கடவன். அநுஷத்தில் செய்தவன் ஓர் மண்டலத்திற் கதிபதியாவான். எவன் கேட்டையிற் செய்வானோ அவன் சந்ததியை யடைவான். மூல நட்சத்திரத்தில் நோய்கள் தீரும். பூராடத்தினால் பெருத்த கீர்த்தியை யடைவான். உத்திராடத்திற் செய்தவன் துன்பங்களினின்றும் நீங்குவான். திருவோண நட்சத்திரத்தினால் மேன்மையான கதியையடைவான். அவிட்ட நட்சத்திரத்தில் இராஜ்ய போகங்களையும் பெருத்த தனங்களையுமடைவான். அபிஜித் என்ற நட்சத்திரத்தினால் ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்களையறிவான். வருண சம்பந்தமுள்ள சதய நட்சத்திரத்திற் செய்தவன் வைத்தியனது வித்தியை யடைவான். பூரட்டாதியில் செய்தவன் நீடித்த வாயுள்களையடைவான். உத்திரட்டாதியில் மிகுந்த பசுக்களையடைவான். ரேவதியில் செய்பவன் வெகு வெள்ளியையடைவான். அசுவதியில் செய்பவன் உயர்ந்த குதிரைகளையடைவான். பரணியில் பூர்ணாயுளை யடைவான். ஓ! மார்க்கண்டயனே! இவ்விதமுள்ள சிராத்தங்களை யெல்லாம் முன் பொருக்கால் சசபிந்து என்றவன் செய்துவந்தமையால், யாதொருப் பிரயாசமுமில்லாமல் இப்பூமி முழுவதையும் ஆண்டு வாழ்ந்தான்.

20-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 21-வது அத்தியாயம்.

ஸநத்குமாரர்;— ஓ! பார்க்கவனே! வெள்ளியாவது வெள்ளியின் சம்பந்தம் பெற்ற வஸ்துவாவது வெள்ளியின் கதையாவது வெள்ளியின் தர்சனமாவது பிதுர்க்களுக்கு மிகவும் பிரியமானதென வுரைக்க



ப்படுகின்றது. ஆகையால் இராஜத தானம் பிதுரு காரியங்களில் மிகவும் முக்கியமானது. இதனால் குறைவில்லாததும் முடிவில்லாததுமான சுவர்க்க வாஸமுண்டாகும். சற்புத்திரர்கள் இத்தானத்தால் பிதுர்க்களைக் கரை யேற்றுவர் எனச்சிராத்த கற்பங்களிற் பெரியோர்களால் கூறப்படுகின்றது. ஏனெனில் முன்பு பிதுருதேவதைகளெல்லாம் வெள்ளிப் பாத்திரத்திலேயே சுவதை யென்பதைக் கறந்தார்கள். அட்சயமாவதின் பொருட்டு அவ்விதம் கறந்தமையால் இப்பொழுதும் இராஜதபாத்திரத்தில் தானம் கொடுக்கப்பட்டதே யட்சயமாகும். கிருஷ்ணமிருக மென்ற மான் தோலின் ஸம்பந்தமாவது, தர்சனமாவது, தானமாவது சிராத்தகாலத்திற் செய்தால், சிராத்த விரோதிகளான இராட்சஸர்களை விரட்டிக் கொல்லும், பிர்ம தேஜஸைக் கொடுக்கும், பசு புத்திராதிகளைக் கரையேற்று விக்கும். ஓ! பிராம்மணனே! பொன் தானம், வெள்ளிப்பாத்திரம், குதபமென்ற பகலின் எட்டாவது பாகமாகிய பதினெட்டு நாழிகைக் காலம், பெண் வயிற்று மகனாகிய தௌஹித்திரன், எள்ளு, பஸ்தமென்ற ஓர்வகை வெள்ளாடு, திரிதண்டம் வகித்த ஸந்நியாசி இவைகளெல்லாம் சிராத்த கருமத்தில் நீடித்த காலமா யுயர்ந்தவைகளாகக் கூறப்படுகின்றன. இவைகளெல்லாம் ஆயுள், புஷ்டி, யசஸ், கீர்த்தி, நல்லறிவு, ஸந்தானமிவைகளை விருத்தி செய்விக்கும். சிராத்தஞ் செய்யும் ஸ்தலத்தின் தென் கிழக்கு மூலையிலோர் வேதி யென்ற மேடையை ஒட்டைச்சாணுயரம் நான்கு மூலைச் சதுரமாகப் போடவேண்டும். இவ்வேதி தனத்தையு மாயுளையும், நோயின்மையும், புஷ்டி, கீர்த்திகளையும் கொடுக்கும். மேலும் கருங்காலிக்கோல்கள் மூன்று அம்மேடையின் மீது வைக்கவேண்டும். இவைகளும் ஒட்டை நீளமுள்ள வைகளாய் வெள்ளிப்பூண் கட்டப்பட்டிருக்கவேண்டும். பிறகு அத்தென் கிழக்கு மூலையிலேயே ஒட்டை நீளம் நாலங்குலம் ஆழமுமான ஓர் பள்ளம் செய்து அதில் ஒட்டையில்லாத அக்கருங்காலிக் கோல்களை வைக்கவேண்டும். பரிசுத்தமான மந்திரங்களால் பாவனஞ் செய்யப்பட்ட ஜலங்களால் குழிகளை எப்பொழுதும் நிறைக்கவேண்டும். பால், ஜல மிவைகளாலும், ஆட்டின்நெய் பசுவின் நெய்களாலும், மந்திரஞ்செபிக்கும் வாக்குக்களாலு மடிக்கடி சுத்தி செய்வது பிதுர்க்களுக்குச் சாசுவதமான திருப்திகரமானது. இப்பிரகாரம் பிரதிதினமும் மூன்று காலஞ் ஸ்நாநம் செய்து பிதுருக்களை எவன் பூஜித்து வருகின்றானோ, அவனிவ்வுலகத்திலும் ஸர்வாபீஷ்டங்களும் நிறைந்து மோனாய் வாழ்வான். அசுவமேதஞ் செய்த பயனை யடை

வான். அப்பிதருக்களெல்லாம் முவ்வேழு பெயர்களெனப் பிரசித்தர் களாகையால் இவர்களால் மூவேழுலகங்களும் வகிக்கப்படுகின்றனர். அவர்களைப் பூஜிக்கும் மனிதருக்குப் புஷ்டி, ஐசுவரியம், ஆயுள், சந்தான மிவைகளெல்லாம் விருத்தியடையும். முடிவில் சுவர்க்கத்திலும் நல்ல சோலையுடன் விளங்குதலையும் கொடுக்கும். இவ்விதம் வரிசையாக மோக்ஷத்தையும் பிதரு பூஜகரடைவார். ஆகையாலிது பாபத்தைப் போக்கவும் அசுவமேதப் பயனைக்கொடுக்கவுந் திறமையுள்ளது. இனி, அச்சிராத்தத்திற்கு வேண்டியதும், வேதசமமானதும் மோக்ஷத்தை கொடுக்கத்தக்கதுமான மந்திரத்தைக் கூறுகின்றேன். அதாவது:- 'தேவர் களுக்கும், மஹாயோகிகளான பிதருக்களுக்கும், ஸ்வதாவின் பொருட்டும், ஸ்வாஹாவின் பொருட்டும் எப்பொழுதும் பலதரம் நமஸ்கரிக் கின்றேன்' என்றவிது சிராத்தத்தினாரம்பத்திலு மீற்றிலு மெப்பொழுதும் மூன்று மூன்று தரம் ஜபிக்கப்படவேண்டும். பிராம்மணர் களாலாசிர்வதிக்கப்பட்டு இவ்விதம் ஜபம் செய்தால் அசுவமேத யாகஞ் செய்தவன் பயனை யடைகின்றான். பிண்டங்கள் வைக்கும்பொழுது இம்மந்திரத்தை மனவடக்கத்துடன் ஜபிக்கவேண்டும். இதனால் பிதரு தேவதைகள் சீக்கிரமாக வருகின்றனர். இராக்ஷதர்கள் வெருண்டோடு கின்றனர். மூவுலகங்களிலும் பிதருக்களைப்பற்றிய இம்மந்திரமானது, எல்லோரையும் கரையேற்று விக்கின்றது. பிரமத்தைப்பற்றிப் பேசும் நியமமுள்ள பிராம்மணர்களால் சிராத்தகாலத்தில் எப்பொழுதுமிம்மந் திரம் செபிக்கப்படுகின்றது. இராஜ்யத்தை விரும்புவோன் எப்பொழுதுமிதைச்சோம்பலின்றி ஜபிக்கவேண்டும். இது வீரியம், சௌரியம், தனம், புத்தி, செல்வம், ஆயுள்விருத்தி, கீர்த்தி இவைகளைப் பெருக்கும். யாதொரு நியமத்தாலும் ருக்குக்களாலும் பிதருக்கள் திருப்தியை யடைவார்களோ! மங்களமான ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கத்தக்க வேழுருக்குக்களாகின்ற அவைகளைக் கூறுகின்றேன் கேள்.

"யாதொருவர் உருவமுள்ளவர்களாகவும் உருவமில்லாதவர்களாகவு மிருக்கின்றனரோ, ஒப்பிய வொளிகளையுடையோரும், ஞானிகளும், யோகக்கண்ணுடையோருமாகிய அப்பிதருக்களுக் கெப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன்." (க)

" இந்திரன் முதலானோர்க்கும், தக்ஷன், மரீசி யிவர்களுக்கும், ஸப்த ருஷிகளுக்குமெவர் பிதுர்க்களோ, ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கின்ற அப்பிதுர்க்களை வணங்குகின்றேன். " (உ)



" மனு முதலியோரைப் பிறப்பித்தவரும், எல்லாவுலகங்களாலும் வணங்கப்பட்டவர்களுமான யாதொரு பிதுர்க்களுளரோ அவர்களை நமஸ்கரிக்கின்றேன். " (ங)

" ஜலம், சமுத்திரம், நக்ஷத்திரங்கள், கிரகங்கள், வாயு, அக்னி இவைகளுக்கும், பூமிக்குமாகாயத்திற்கு மிடையிலுள்ள எல்லாவஸ்துக் களுக்கும் எவர் பிதுர்க்களோ, அவர்களைக் கைகூப்பி வணங்குகின் றேன். " (௪)

" தேவருஷிகளை யெல்லாம் பிறப்பித்தவரும், எல்லாவுலகங்களால் வணங்கப்பட்டவரும், எல்லாவுலகங்களையும் போஷிக்கின்றவருமான பிதாமஹர்களை நான் நமஸ்கரிக்கின்றேன்." (௫)

" பிரஜாபதிக்கும், பசுக்களுக்கும், அக்கினிதேவனுக்கும், சோமனுக்கும், யமனுக்கும், யோகீசுவரர்களுக்கு மெப்பொழுதும் கைகூப்பி நான் நமஸ்கரிக்கின்றேன் " (௬)

" எழுவிதங்களாய் கூறப்பட்ட யாதொரு பிதரு கணங்களுளரோ, அவர்களுக்கும் தானுயுண்டானவரும் யோகஞ்ஞானமுடையவருமான பிர்மாவிற்கும் நான் நமஸ்கரிக்கின்றேன். " (௭)

இவைகளே ஸப்த ருக்குக்களென்றும், தேவரிஷிக்கூட்டங்களால் போற்றி வைக்கப்பட்டதென்றும், பரிசுத்தமானதென்றும், உயர்ந்த தென்றும், நல்லதோராழுரு பொருந்தியதென்றும், இராக்ஷதர்களை யடிக் கத்தக்கதென்றும் கூறப்படுகின்றன. இந்த விதியால் மனிதன் மூன்று வரங்களைப் பெருவான். சிறந்தபக்தி யோகும் சிரத்தையோடு மிந்திரி யங்களை யடக்கிக் கொண்டெவனிச் சப்தருக்குக்களை தினந்தோறும் ஜபிப்பானோ, அவன் எழுகடல் சூழ்ந்த இவ்வேழு பூமிகளுக்கும் ஏக சக்கிரவர்த்தியாவான். எவராலிக்கல்பமுறைக்கப் பட்டதோ சுயம்பு வான அப்பிர்மாவிற்கு நமஸ்காரம். அவ்விதமே மஹாயோகிகளுக்கும் எப்பொழுதும் நமஸ்காரம் செய்கின்றேன். ஓ! அன்பனே! பிதருக் கள் தேவர்களுக்கும் தேவதைகளாக மேலுலகத்தில் விளங்குகின்றனர். பிர்மனின் மக்களான அறிவற்ற இவ்வேழு பிதருகணங்களும் அந்தந்த நிலைகளிலிருந்து மஹாத்மாக்களான எல்லோர்க்கும் ஸர்வாபீஷ்டங் களையுங் கொடுத்து வருகின்றனர். அவர்களுள் மாருதவம் முதலாவது

கணத்தோர் யோகிகளுக்கு யோகத்தை விருத்திசெய்பவர். இரண்டாவது கணத்தோர் தேவர்களுக்கும், மூன்றாவர் தானவர்களுக்கு மவரவரிஷ்டங்களை யளிக்கின்றனர். மிச்சமுள்ள நாலுகணத்தோரும் பிராம்மணர் முதலிய நான்கு வகுப்பினர்க்கு மபீஷ்டங்களை யளிக்கின்றனர் எனக்கூறப்படுகின்றனர். எவன் பிதுருக்களைப் பிரீதிசெய்விக்கின்றானோ, அவன் பிதுருக்களாலும் பிரீதி செய்யப்படுவன். பிதுரு தேவர்களென்றவர் தங்களை வழிபடுகின்றவர்களுக்கு அன்பு, ஸந்ததி, புஷ்டி, ஸ்வர்க்கம், நீடியவாயுள், நோயின்மை, மற்றும் வேண்டிய காரியங்களையும் கொடுக்கும் வல்லமையுடையோர். மேலும் தேவதைகளுடைய பூஜை முதலிய காரியங்களைவிட பிதுருக்களுடைய சிராத்தம் முதலிய காரியங்கள் முக்கியமானவை. தேவர்களுடைய நிலையானது பிதுருக்களை முன்னிட்டதாக விருக்கின்றது, ஓ! பார்கவனான மார்க்கண்டேயனே! அப்பிதுருக்களென்பவர் சிறந்தவநுக்கிரகஞ் செய்கின்றவர், அன்புடையோர். உலகத்திற்குத்தமமான திருப்தியைச் செய்கின்றவர், எப்பொழுதும் நிலையான வரமளிப்பவர், ஆகையால் அவர்களை நாடோறும் வணங்கக்கடவாய். ஓ! பிர்மருஷியே! எவன் பிதுருபக்தனோ அவன் என்னிடமும் பக்தியுள்ளவனே. இதிலையமில்லை. இப்பொழுதுனக்கு க்ஷேமத்தையும் ஞானக்கண்ணுகின்ற வரத்தையு மளிக்கின்றேன். அதனாலெல்லாப் பிதுருக்களுடைய வழியையும் சந்தேகமில்லாமல் பிரத்தியக்ஷமாகப்பார். யோகத்திற்குடைய கதியும், பிதுருக்களுடைய கதியும் உன்னைப்போன்ற தவசியாலும் காணமுடியாதவை. கேவலம் மாமிசமயமான கண்களைக்கொண்டு காணமுடியுமோ. ஓ! பீஷ்மராஜனே! அந்த ஸநத்குமாரனென்ற தேவர், இவ்வித மவரெதிரிலுள்ள என்னைக் குறித்து,] தேவர்களுக்கும் கிடைக்கவரிதான ஞானக்கண்ணைக்கொடுத்துவிட்டுப்பிறகு அவருக்கிஷ்டமான வழியிலிரண்டாவது அக்னி போல் வீசுமொளியுடன் சென்றுவிட்டார். ஓ! குருசிரேஷ்டனே! யாதொரு பிதுருக்களுடைய மஹாத்மியம் முழுதுமென்னாலிப்பொழுதுனக்குக் கூறப்பட்டனவோ, இப்புவியில் மனிதர்களாலறியமுடியாத அவையெல்லாம் அக்குமார தேவருடைய வநுக்கிரகத்தாலேயே கூறப்பட்டவையெனவறியும்.

21-ம் அத்தியாயம் முற்றிற்று.

---



## 22-வது அத்தியாயம்.

மார்க்கண்டேயர்:— மேலுமிதற்குச் சம்பந்தப்பட்ட மற்றோர் கதையையும் குமாரர் அப்பொழுது எனக்குரைத்திருக்கின்றார் அதையும் கேள். அதாவது:— ஓ! அன்பனே! முந்திய யுகத்தில் யோகாப்பியாசஞ்செய்து அதினின்றும் தங்கள் கெட்ட நடவடிக்கையால் நழுவிப்போன ப்ரத்துவாஜ மஹருஷியின் மக்களது மக்கள்களானப் பிராம்மணர்கள் பறவை ஜன்மத்தை யடைந்தவர்களாயினர். இவ்விதம் தம் நிலையினின்றும் நழுவப்பட்டும், யோகதருமத்தி லபராதத்தையுமுள்ள அம்முனிபுத்திரர்களாகிய பக்ஷிகள், பெரியதாகிய மானஸ ஸரஸ் என்ற ஏரியின் கரையையடைந்து, அங்கும் முன் ஜன்மவிருத்தாந்தங்களின் நினைவுடன் முன்பு தங்களாலப்பியசித்து வந்த பொருளையே சிந்திப்பவர்களாய் ஜலத்தில் நழுவி விழுந்து போன தன்பொருளைத் தேடுகின்றவர்போல மயங்கினவர்களாய்ச் சிலகாலம் போக்கி, அவ்விடத்திலேயே தீனியில் ஆசையில்லாமல் காலஞ் சென்றுவிட்டனர். பிறகு யோகப்பிரஷ்டர்களான இவர்கள் தேவலோகத்தில் தேவருடன் வெகுகாலம் வாழ்ந்து, மறுபடியும் குருக்ஷேத்திரத்தில் கௌசிகக்கோத்திரத்தில் உத்தமமான மனிதர்களாய்ப் பிறந்து, வேட்டைதொழிலால் ஜீவித்திருந்து பிதுருக்களுடைய வபராதத்தால் வேறு வேறு கெட்ட ஜாதிகளிற்பிறந்தும், அவர்களுடைய வநுக்கிரகத்தால் முந்திய ஜன்மத்தின் நினைவுடன் அந்தந்த ஜாதியிலுள்ள கெட்டதன்மையை யறிந்தறிந்து அதில் வெறுப்பையடைந்து முடிவில் நல்ல கருமங்களைச் செய்து அடக்கமுள்ளவர்களாய்க் கொண்டு, மறுபடியும் தங்கள் நல்வினையால் பிராம்மண ஜன்மத்தை யடைவார்கள். அப்பொழுதும் பூர்வஜன்ம நினைவுடன் தாங்கள் செய்துவந்த யோகாப்பியாசத்தைச் செய்து அதன் முடிவான சித்தியைப் பெற்று உத்தமமாயும் நிலையாயுமுள்ள மோக்ஷமென்ற பதவியை யடையப் போகின்றனர். ஓ! பார்க்கவனே! அதுபோல் உனக்கும் தருமத்திலேயே மென்மேலுமறிவு செல்லக்கடவது. அதிலும் உத்தமதருமமான யோகதருமத்திலேயே மிகவும் சிறந்த உனதறிவு செல்லக்கடவது. சிற்றறிவுடையோர்களால் யோகாப்பியாசமானது எப்பொழுதுமடையமுடியாதது. ஒருசமயமவர் அந்த யோக லேசத்தை யடைந்தாலும், கடுமையான துன்பங்களவரைக்கலக்கி விடும். அவ்வியசனத்தால் அதருமத்திலேயே சென்று தமது குருக்களையும் துன்பப்படுத்துவார். எவர் இரக்காதவைகளை இரக்கார்களோ, காலில் விழுக்

தவரை யெல்லாம் சார்பவரோ, சரித்திரரை யவமானஞ் செய்யாரோ, செல்வத்தாற் செருக்கற்றவரோ, சாஸ்திரப்படி யுண்பவரோ, விதிப்படி நடந்துள்ள வினையாளரோ, தியானம் ஓத விவைகளையுடையவரோ, கெட்டதைத் தேடாதவரோ, சோகப்படாதவரோ, எப்பொழுதும் மதுமாமிசங்களைப் பக்ஷணம் செய்யாதவரோ, காமமில்லாதவரோ, அப்பிராம்மணரைச் சேவியாதவரோ, கெட்ட சதையில் விருப்பமற்றவரோ, மடியரல்லாதவரோ, மனப்பற்றற்றவரோ, கூட்டத்திலாசையில்லாதவரோ, அம்மனிதர் யோகதருமத்தை யடைவார். யோகமென்பது இப்புவியில் துர்லபமானது. ஆசையடங்கியவர்களாயும், குரோதமற்றவர்களாயும், மானாகங்காரங்களை விட்டவர்களாயுமுள்ளவர்களே, மங்களகரமான யோகசாதனத்திற்குச்சற்பாத்திரர். அவர்களே அடக்கமான நோன்புடையோர். ஓ! அன்பனே! இவ்விதமுள்ள தன்மையுடையவர்களாக அப்பாரத்துவாஜரது மக்கள்களுமாவார். பிறகு தம்மனதாற் செய்யப்பட்ட தோஷத்தைத் தம்புத்தியாலேயே யறிந்து தெளிவார். தியானம் ஜபமிவைகளிலேயே நிரதர்களாய் அடக்கமான வழியில் நிலைநிற்பார். ஓ! தருமமறிந்தவனே! யோகசாதனத்தைவிட வேறு தருமம் விசேஷப்பட்டதல்ல, ஓ! பார்த்தனே! எல்லாத்தருமங்களுக்குள்ளுமிதுவே மேற்பட்டதாகுமிதையே யநுஷ்டிப்பாயாக. அந்தந்த காலத்திற்குத்தக்கபடி கிடைத்த வாகாரத்தையுடையவனாகவும், இந்திரிய ஜயமுடையவனாகவும், அந்த யோகத்திலேயே யன்புடையவனாகவும், பரிசுத்தனாக நித்தியம் பிராணாயாமத்தில் சிரத்தையுடையவனாகவும், நீயிருப்பாயேயானால் நீயும் யோகதருமத்தை யடைவாய். இவ்விதம் சொல்லிவிட்டு பகவானான ஸநத்குமாரர் அவ்விடத்திலேயே மறைந்தனர். பதினெட்டு வருஷகாலமத்தேவனை வழிபட்டுக் கொண்டிருந்த எனக்கு அக்காலம் முழுமையும் ஒருபகற்காலம்போலச் சென்றது. அத்தேவனுடைய வநுக்கிரகத்தாலப்பொழுது எனக்கு வாட்டம் யாதொன்று முண்டாகவில்லை. ஓ! பாபமற்றவனே! பசியாவது தாகமாவது எனக்குத் தோன்றவேயில்லை. அப்பொழுது காலக்கணக்கும் நானறியவில்லை. பிறகு என் மாணாக்கனிடமிருந்தன்றோ காலக்கணக்கு தெரிந்து கொள்ளப்பட்டது.

22-ம் அத்தியாயம் முற்றிற்று.



## 23-வது அத்தியாயம்

மார்க்கண்டேயர்:— அந்தகுமாரதேவர் மறைந்துபோனபின், பிரபுவான அவரது வாக்குப்படி அப்பொழுது விசேஷித்த ஞானத்தைப் புலப்படுத்தக் கூடிய ஒளியுள்ள திருஷ்டியானதெனக் குண்டாயிற்று. பிறகு நான் அத்தேவர் கூறியபடி ஓ! காங்கேயனே! குருக்ஷேத்திரத்தில் கௌசிகக்கோத்திரத்தில் பிறந்திருக்கும் பாரத்துவாஜப் பிராம்மணர்களைக் கண்டேன். அவர்களுள் ஏழாவது பிராம்மணகுமாரனே பிர்மதத்தனென்ற அரசனானது. இவன் பெயராலும் சுவபாவத்தாலும் வினையாலும் பிதுருவர்த்தி யென்று பிரசித்தி பெற்றவன். சுகமகரிஷியின் குமாரியான கீர்த்திமதி யென்பவள், அணுஹனென்ற ராஜாவினிடமிருந்து இப்பிர்மதத்தனைக் காம்பில்லியமென்ற சிறந்தபட்டணத்தில் பெற்றாள்.

பீஷ்மர்:— ஓ! தருமராஜனே! மஹாதபஸ்வியும், மஹாபாக்கிய சாலியுமான மார்க்கண்டேயமுனிவர் இவ்விதமெனக்குக் கூறினரோ அவ்விதமே உனக்கு அவ்வரசனது வம்ச சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேள்.

தருமபுத்திரர்:— அணுஹனென்ற வரசன் யாருடைய புத்திரன். எப்பொழுது பிறந்தவன். தருமத்தை வகித்தவருள் சிறந்தவனான இவ்வரசன் யாருடைய மரபிற் சேர்ந்தவன். பெருங்கீர்த்தியுள்ள பிர்மதத்தனென்ற நரபதி எவ்வித வீரியமுள்ளவன். எவ்விதமிவன் யாருக்கு ஏழாவன். எவ்விதம் அரசாட்சியை யடைந்தான் பகவானாய் உலகங்களெல்லாம் புகழப்படும் யோகமூர்த்தியாயும், பிரபுவுமான சுகமஹரிஷியானவர், அல்பவீரியமுள்ளவனுக்குத் தனது கன்னிகையாயும், மங்களரூபிணியாயுமுள்ள கீர்த்திமதி யென்றவளைக் கொடுக்கமாட்டார். மிகுந்த வொளியையுடைய எனது பாட்டனாரே! இந்த விஷயத்தை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். ஆகையால் தாம் அப்பிர்மதத்தராஜனது, சரித்திரத்தைச் சொல்வதற்குத் தகுந்தவராயிருக்கின்றீர். மேலும், அந்த பாரத்துவாஜ வம்சத்திலுதித்தப் பிராம்மணர்களெல்லாம் ஸம்ஸாரத்திலிருக்கும்பொழுது எப்படியிருந்தார்களோ அக்கதையையும், மார்க்கண்டேயராற் சொல்லப்பட்டபடி யெல்லாவற்றையும் தாம் கூறியருள வேண்டும்.

பீஷ்மர்:— ஓ! தருமராஜனே! என்று பாட்டனான பிரதீபமஹாராஜனுக்குச் சமமானகாலத்திலிருந்தவன் அப்பிர்மதத்தராஜனுமென

வென்றுங் கேட்கப்பட்டிருக்கின்றது. அப்பிர்மதத்தனென்றவன் மஹா பாக்கியசாலியும், யோகியாகவும், ராஜரிஷிகளுட் சிறந்தவனாகவும், எல்லா பிராணிகளுடைய பாஷைச்சொற்களை யறிந்தவனாகவும், எல்லாப்பிராணிகளுடைய இதத்தையே விரும்புகின்றவனாகவும், யாதொரு யோகாச்சாரியரான கீர்த்திபெற்ற காலவமகருஷியுண்டோ, அவருக்கு மித்திரனாகவும் விளங்கினான். தன்தாலிவ்வரசனுக்கு யோகசிட்சையைச் செய்வித்து அதன் கிரமமும் எவராலுபதேசிக்கப்பட்டதோ அக்காலவ மஹரிஷியே இவர். யோகத்திலேயே புத்தியுள்ள கண்டரீகனென்ற மஹானும் அப்பிர்மதத்தனுக்கே மந்திரியாயிருந்தவன். அவன் தோழர்களான அவ்வெழுவரும், வேறு ஏழுஜாதிகளிலும் மிகுந்தப் பிரபாவமுள்ளவர்களாகவே பிறந்தார்கள். எவ்விதம் மார்க்கண்டேயர் எனக்குரைத்தாரோ, அவ்விதமே பௌரவனும் மஹாத்மாவும் பிர்மதத்தனென்ற பெயரையுமுடைய அவ்வமிசம் முழுமையும் உனக்குச் சொல்லுகிறேன் கேள். பிரஹத்க்ஷத்திரனுக்குத் தருமசீலனான ஸுஹோத்திரன் பிறந்தான். ஸுஹோத்திரன் மகன் ஹஸ்தியென்பவன். அவனாலேயே முன்பு இந்த ஹஸ்தினாபுரமென்ற நகரம் நிர்மாணிக்கப்பட்டது. அவனுக்கு மிகவும் உத்தமர்களான அஜமீடன், த்விமீடன், புருமீடன், என்ற மூன்று புத்திரர்கள். அஜமீடனுக்குத் தூமினியிடத்தில் பிருஹதிஷு என்பவன் பிறந்தான். அவனுக்குப் பிரஹத்தனுவென்ற கீர்த்தியுள்ளவன் பிறந்தான் அவன்மகன் பிருஹத்கருமன். அவனது மகன் ஸத்தியஜித்து. அவனது மகன் விசுவஜித்து. அவனதுமகன் ஸேனஜித்து. அன்றியும் விசுவஜித்தென்பவனுக்கு உலகத்தில் பெரும்புகழ் பெற்ற நான்கு புத்திரர்களிருந்தனர். அவர்கள் யாவரெனில்;— ருசிரன், சுவேதகேது, மஹிம்நாரன், அவந்தி, தேசாதிபதியான வத்ஸன் என்றவர்களாம். இவன் மரபிலுதித்தவர்களுக்கு பரிவத்ஸகரெனப் பொதுப்பெயர். ருசிரனென்றவன்மகன் பிருதுஸேனன். அவனது மகன் பாரன் அவனதுமகன் நீபன். அவனுக்கு நூறுமைந்தர்கள் ஜனித்தனர். தோள்வலிவும் சூரர்களுமான அவர்களுக்கெல்லாம் நீபர் என்றபெயர். எல்லோரும் மகாரதிகர்களும் ஒவ்வோர் நகரங்களுக்கு அரசர்களுமாயிருந்தனர். அவர்களுக்குள் காம்பில்லியமென்ற நகரத்திலரசாண்ட ஸமரனென்றவன், அந்நீபவம்சத்திற்குத் திலகனாய்த் தனது வம்சத்தை விருத்திக்குக் கொணர்ந்தவன். ஸமரமென்றால் யுத்தம். அதிலேயே விருப்பமுள்ளவனாகையாலிவனுக்குச் சமரனெனப் பெயர். அச்சமரனுக்கு பரன், பாரன், ஸதசுவன் என மூன்று புத்திரர்



ஜனித்தனர். இவரனைவரும் தருமநெறிதவறாதவர். இவருள் பாரனது மகன் பிருதுவென்பவன். அவனுக்குச் சகல நற்குணங்களும் பொருந்திய ஸுக்ருதனென்றவன் ஜனித்தான். அவனுடையமகன் விப்பிராஜன். அவ்விப்பிராஜனதுமகன் அணுஹனென்றவரசன். அவன் சுகமஹரிஷிக்கு மணவாளனும் கீர்த்தியென்ற அம்மஹரிஷியின் புத்திரிக்குக் கணவனுமான மிகுந்த கீர்த்தியுள்ளவன். அவ்வணுஹனுக்கு மறுபடியும் பிர்மதத்தனென்று பெயரையுடைய வோர் மைந்தன் பிறந்தான். யோகத்திலேயே சிந்தையையுடைய விஷ்வக்ஸேனனென்ற வுத்தமமான தபோதனன் அப்பிர்மதத்தனது புத்திரன் விப்பிராஜனென்றவனே, தான் செய்த புண்ணிய கருமத்தால் மறுபடியுமிங்கு ஜனித்தான். அப்பிர்மதத்தனுக்குப் பெரும்புகழ் பெற்ற ஸர்வசேனனென்ற வேறோர் மைந்தனுளன். ஓ! ராஜனே! பிர்மதத்தனுடைய அரண்மனையில் நீடித்து வாழ்ந்து வந்த பூஜனீயையென்ற பக்ஷியால் இவனது கண்கள் பெயர்க்கப்பட்டன. பிறகு அப்பிர்மதத்த மஹாராஜனுக்கு விஷ்வக்ஸேனனென்ற மகாபலசாலியான மற்றோர் மைந்தனும் ஜனித்தான். அவனுடைய மகன் தண்டஸேனனென்றவன். இவனுடைய மகன் பல்லாடனென்றவன். முன்பொருக்காலவன் ராதேயனான கர்ணனால் யுத்தத்திற் கொல்லப்பட்டான். இவன் மஹாத்மாவாயும் தண்டசேனனது மகனாயும் தன் குலத்தின் விருத்திக்குக் காரணமாயுமிருந்தவன். இவனுடைய மகன் தார்ப்புத்தியென்றவன். ஓ! தருமநந்தனா! அந்நீபர்களுக்கெல்லாம் நாசத்திற்கு அவனே காரணபூதன். யாதொரு தார்ப்புத்தியென்ற இவனுக்காக உக்கிராயுதனென்றவனால் எல்லா நீபர்களும் கொல்லப்பட்டார்களோ, அத்தார்ப்புத்தியே இவன். கொழுப்புடையவனும், துராசாரியும் எப்பொழுதும் அதருமத்திலேயே விருப்பமுள்ளவனுமான அவ்வுக்கிராயுதனென்ற மதம்பிடித்தவன் யுத்தத்திலென்னாற் கொல்லப்பட்டான்.

யுதிஷ்டிரர்:— உக்கிராயுதனென்றவன் எவனுடையமகன்? எந்த மரபிற் பிறந்தவன்? எதற்காகத் தம்மால் கொல்லப்பட்டான்? அதை எனக்குச் சொல்வீர்.

பீஷ்மர்:— அஜமீடன் என்றவன் மகன் அறிவாளியான யவீநரன். அவனுடையமகன் திருதிமான். அவன்மகன் ஸத்தியதிருதி. அவனுடையமகன் திருடநேமியென்பவன். அவனுடையமகன் ஸுதர்மா என்.

றவன். அவனுடையமகன் சக்கிரவர்த்தியான ஸார்வபௌமனென்றவன். பூவுலகிற் கடல்சூழ்ந்த பூமியெல்லாமிவனாலாளப்பட்டது. அவனுடைய வம்சத்தில் மஹானென்றவன் ஜனித்தான். அவன் மகன் ருக்மரதன். அவனுடையமகன் ஸுபார்சுவன். அவனுடையமகன் ஸுமதியென்பவன். அவனுடையமகன் ஸன்னதியென்பான். அவனுடையமகன் மகாபலிஷ்டனான கிருதனென்பான். இவன் கோஸலாதிபதியாகிய ஹிரண்யநாபனென்றவருக்கு மாணாக்கன். இவன் இருபத்திநான்கு பிரிவுகளையுடைய, ஸாமவேதத்தின் ஸம்ஹிதைகளை அவரிடமிருந்து ஓதித் தன்கீழ் தேசத்தில் வெளியிட்டான். அவைகளுக்குப் பிராச்சிய ஸாமங்களென்றும் கார்திகளென்றும் ஸாமவேதிகள் பெயர்கூறுவர். அக்கிருத ராஜனுடைய மகன் கார்த்தியென்ற உக்கிராயுதன். பிறகு வீரனென்ற பௌரவகுலத்தோன். பிருஷதனென்றவனுக்குப் பாட்டனும், பாஞ்சாலநாட்டிற்கரசனுமிருந்த நீபனென்ற பராக்கிரமசாலி யாவனொருவனால் யுத்தத்தில் பராக்கிரமத்தோடு கொல்லப்பட்டானோ, அவ்விதம் கொன்ற அவ்வுக்கிராயுதனே இவன். அவனுடைய மகன் க்ஷேமியன் என்ற பெருங்கீர்த்தியுள்ளவன். க்ஷேமியனுக்கு வீரன் என்றவனும், வீரனுக்கு நிருபஞ்ஜயனென்றவனும், அவனிடமிருந்து பஹுரதனென்றவனும் ஜனித்தார்கள். இவர்கள் பௌரவரெனப்படுவர். ஓ! அனகனே! அவ்வுக்கிராயுதனும், துர்ப்புத்தியென்ற மற்றவனுமக்காலேயில் சமமான பலத்தையும், படைகளையுமுடையவர்களாய் வாழ்ந்தவர்கள். ஆகையால் பலிஷ்டனான அத்துர்ப்புத்தியென்றவன் நீபராஜனுடைய மரணத்திற் கேதுவானான். மிகவுமகங்காரமுள்ள அவ்வுக்கிராயுதனென்பான் நீபர்களையும், அவரோடு கூடவந்த மற்றவரசர்களையும் யுத்தத்தில் கொன்று, சில காலஞ் சென்றபின், எனக்கும் யுத்தத்திற்காகத் தூதனை யனுப்பினான். ஓ! ராஜேந்திரனே! எனதுபிதாமரணமடைந்து அதனால் மனம் நொந்து மந்திரிகள் சூழ்ந்திருக்கத் தரையிற் படுத்திருக்குமென்னிடம், அவன் தூதன் அணுகி வருமாறு கூறினான். அதாவது;— "ஏ! குருபுங்கவனான பீஷ்மனே! சிறப்பான கீர்த்தியுள்ளவளும், உனது தாயுமான யோஜனகந்தியென்ற பெண்மணியை எனக்குப் பாரியையாவதற்காகக் கேட்டுச் சம்மதம் செய்துவைப்பாய். அதற்காக வேண்டிய நாடுகளையும், தனங்களையும் இஷ்டப்பிரகாரம் கொடுக்கின்றேன். அதிற் சந்தேகப்படவேண்டாம். நானுமோர் அரசனாகையாலிப்புவியிலுள்ள இரத்தினங்களை யடைவதற்குத் தக்கவன். ஓ! பாரதனே! எவ



ராலும் ஜயிக்கமுடியாத எனது வீரியமுள்ள படைத்திரளைக் கேட்டமாத்திரத்திலேயே எங்கெங்கும் சத்துருக்களெல்லாம் யுத்தத்தில் நிற்கமாட்டாமற் கண்டவுடனேயே திக்குதிக்காய்ப் பறந்துபோகின்றனர். நீயுமுனது ராஜ்யத்தை விரும்பினால் நான் சொன்னபடி தாயையனுப்பவேண்டும். அப்பொழுது உனக்கும் க்ஷேமம். பிராணன்களுக்கும் சேதமில்லை. உனது குலத்திற்கும் நாசமில்லை. என்னுத்திரவில் நில்லாவிடில் உனக்கு க்ஷேமமில்லை." இவ்விதம் தரையில் படுத்தபடியே உக்கிராயுதன் தூதன் முகமாகப்புறப்பட்ட அக்கினியின் ஜுவாலை போற் பற்றியெரியுமவ்வார்த்தைகளைக் கேட்டு என்தேகமே தபித்துப்போயிற்று. உடனே அக்கெட்ட புத்தியுடைய வுக்கிராயுதனது வார்த்தைக்குப்பரிகாரம் செய்ய வேண்டியதற்காக நமது சேனாபதிகளை வரவழைத்து யுத்தத்திற்குச் சன்னத்தப்படுத்தினேன். என் போதத்தினிலுள்ள சிறுகுழந்தையான விசித்திரவீரியனையும் பார்த்துக் குழந்தையையும் தனிமையாய் விட்டுப் போகமனமில்லாமல் ஆலோசனைசெய்து தீராத கோபமுடையவனும் முடிவில் யுத்தத்திற்கே புறப்பட மனம் வைத்தேன். அப்பொழுது ராஜ்ஜியத்திலுள்ள ஆலோசனையிற் சிறந்த மந்திரிகளாலும், வேதங்களின் கல்பங்கள் போன்ற [illegible]ரியே [illegible]ரிகளாலும், நானாவித நூல்களின் ஆராய்ச்சியுள்ள சினேகர்களாலும் யுத்தஞ் செய்யவேண்டாமென மறுக்கப்பட்டேன்." ஓ! பாபமற்ற யுதிஷ்டிர! அவர்களால் அதற்குத்தகுந்த காரணங்களும் எடுத்துரைக்கப்பட்டன. அவையாவன;—

மந்திரிகள்:— ஓ! பிரபுவே! மகாபாபியான இவ்வுக்கிராயுதனோ பெருந்தபடையுள்ளவன். தாமோ இப்பொழுது பிதாமறிந்த வாசௌசமுள்ளவர். ஆகையாலிச்சமயம் யுத்தத்திற்குப் போகத்தகாத தருணம். தமக்கன்பராகிய யாமிந்த ஸமயத்திலெவ்விதமாவது அவனைச் சாம தான பேத மென்ற மூன்று தந்திரங்களையு முபயோகித்துச் சமாதானப் படுத்துகின்றோம். பிறகு ஆசௌசம் கழிந்தவுடன் பரிசுத்தராய்த் தேவதைகளையெல்லாம் நமஸ்கரித்து, பிராம்மணர்களால் வேதமந்திரங்களைக் கொண்டாசிர்வதிக்கப்பட்டு, அக்னியையும் பிராம்மணர்களையும் பூஜித்த, அப்பிராம்மணர்களாலுத்திரவளிக்கப் பெற்றுப் பிறகு ஜயத்தின் பொருட்டுப் புறப்படத்தகுந்தவராயிருக்கின்றீர். ஆசௌசியாயிருக்கும் பொழுது மந்திரங்களை யுச்சரித்து அஸ்திரங்களைப் பிரயோகம் செய்யவும், யுத்தக்களத்தில் பிரவேசிக்கவும் கூடாதெனப் பெரி

யோர்களுடைய ஆக்ஞையல்லவா. ஆகையால் முதலில் சாமதானங்களாலு மதிலுள்ளவர்களும் பேத தந்திரத்தாலு மதிலுக்குவெளியிலுள்ளவர்களும் யுத்தத்தில் சம்பராசுரனை யிந்திரன் வென்றது போல் தாமும் அவனைக் கொன்று வெற்றியடைவீர்.

பீஷ்மர்:— ஓ! தருமநந்தனா! இக்கண்ணனை வச்சமயத்தில் அறிவாளிகளின் வார்த்தையைக் கேட்க வேண்டும். அதிலும் முன்னறிவுடையோர் வாக்கு விசேஷித்ததென நினைத்து அச்சமயத்தில் யுத்த சன்னத்தனாகிருந்திலேனன். பிறகு சஸ்திரங்களில் வல்லவர்களான படர்களால் முறைப்படி அவர்களது முறையெல்லாம் நடத்திவரப்பட்டது. ஓ! குருசிரேஷ்டனே! அதிசாலத்திற் சிறந்த கருமம் தொடங்கப்பட்டது. அவ்வுக்கிராயுதனும் முதலில் ஸாமம் முதலிய உபாயங்களைக் கொண்டு பற்பல புத்திசாலிகளால் எவ்வெவ்விதம் சமாதானிக்கப்பட்டாலும் அக்கெட்டவெண்ணமுடைய உக்கிராயுதனை சமாதானிக்கக் கூடவில்லை. ஆகினும் அதருமத்திலேயே விருப்பமுடைய அவனது யுத்தப்படையானது அச்சமயத்தில் பராகாரத்திலாவசையுள்ள அவ்வுகளுக்கு ஒவ்வொரு யுத்தத்தினின்றும் திருப்பப்பட்டது. பெருத்த அப்படைத்திரளானது எக்காரணத்தால் முற்றுமழிந்து விட்டதென்ற உண்மையை நானறியேன். பிறகு ஆவேசம் நீங்கின் பரிசுத்தனும் அஸ்திரங்கள் வில் இரதமிவைகளையுடையவனுமப் பிராம்மணர்களாலாசீர்வதிக்கப்பட்டு நகரத்தினின்றும் வெளிப்பட்டுத் தனது பாபவினையாலேயே அடிபட்டுப் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டிருக்கிற அவ்வுக்கிராயுதனென்ற பகைவனைப் போர்புரிந்தேன். பிறகு இருவருமொன்றுசேர்ந்து தோள்வலியாலும் அஸ்திரங்களின் வலியாலும் மூன்று நாளிராப்பகலிடைவிடாமல் பைத்தியம் பிடித்தவர் போல தேவாஸுரர்களது போன்ற யுத்தத்தை நடத்தினோம். பின்பு அப்போர் முடிவில் எனதஸ்திரத்தினால் எப்பொழுது கொளுத்தப்பட்டானோ, அப்பொழுது எனக்கு முன் கவிழ்ந்த முகத்துடன் விழுந்து பிராணனைவிட்டான். ஓ! அன்பனே! இவ்விடையில், நீபகுலனும், உக்கிராயுதனும் கொல்லப்பட்டானென்றபொழுது மிக்க வொளியுள்ள பிருஷதனென்றவன் அஹிச்சத்திர நாட்டிலுள்ள காம்பில்யமென்ற தனது பிதாவினுடைய தான விராச்சியத்தை வந்து சேர்ந்தான். இவன் துருபதனுக்குப்பிதா. என்னுடைய வுத்திரவின் கீழிலேயே யடங்கியவன். பிறகு அர்ஜுனனாலோர் சமயத்திலத்துருபதன் மிகவுமிலகுவாய்ச் செயிக்கப்பட்டான்



உடனே அஹிச்சத்திரத்துடன் கூடிய காம்பில்யராச்சிய முழுமையும் குருவான துரோணாசாரியருக்கு இவ்வர்ஜுனனால் கொடுக்கப்பட்டது. அதைப்பெற்ற மகாபலியான துரோணாசாரியர் மறுபடியும் அவ்விராச்சியத்தைத் துருபதனுக்கே திருப்பிக் கொடுத்து விட்டார் என்ற சங்கதி யுனக்குத் தெரிந்தவிஷயம். இவ்விதமுனக்குத் துருபதனுடையவும், பிர்மதத்தனுடையவும், நீபனுடையவும், உக்கிராயுதனுடையவும் வம்ச சரித்திரமெல்லாம் கூறப்பட்டன.

யுதிஷ்டிரர்:— ஓ! காங்கேயரே! முன்பு பிர்மதத்தனரண்மனையில் வசிக்கப்பட்ட பூஜனீயை யென்ற பக்ஷியானது எதற்காக அவ்வரசனது மூத்தமகனுடைய கண்களைக் கெடுத்தது? அவனரண்மனையிலேயே தோழமையால் நீடியகாலமாய் சிநேகத்துடன் வளர்க்கப்பட்டிருந்த அம்மகாராஜனுக்குத் கெடுதி செய்ய காரணம் யாது? இப்படிப்பட்ட கெட்ட பறவையுடனவ்வரசனுக் கவ்வளவு சிநேகம் ஏற்பட்ட காரணமென்ன? இது என் சந்தேகமாகையாலிதை யுள்ளபடியே தீர்க்கவேண்டும்.

பீஷ்மர்:— ஓ! மஹாராஜனே! பிர்மதத்தனரண்மனையில் முன்பு எவ்விதம் நடந்ததோ, அவை யெல்லாவற்றையு மாதியோடந்தமாக வுரைக்கின்றேன் கேள். ஒரு பக்ஷியானது பிர்மதத்தனுக்கு அந்தரங்கமான இணைபிரியாத தோழியாயிருந்தது. அது அழகிய இறக்கைகளையும், சிறந்த முதுகையும், சிவந்த கழுத்தையும், வியக்கத்தக்க வயிற்றையுமுடையது. ஓ! ராஜனே! அப்பக்ஷிக்கு அவ்வரண்மனையிலேயே அரசனந்தப்புரத்தில் விஸ்தாரமான வோர் பஞ்ஜரமு மேற்பட்டது. அது எப்பொழுதும் பகலில் அவ்வரசனுடைய வரண்மனைக்கு வெளியிலுள்ள கடற்கரைகளிலும், குளங்களிலும், ஏரிகளிலும், ஆறு மலை புதர் வனம் நந்தவனம் முதலியவிடங்களிலும், பரிமளத்தோடு மலர்ந்த கரி நெய்தல் அல்லி தாமரை முதலிய பூந்தாதுகளின் பொடிகள் கலந்த காற்றையுடையதும், அன்னம் ஸாரஸம் அன்றில் முதலிய பறவைகள் நிறைந்ததுமான ஓடைகளிலும், மேய்ந்து திரிந்து அந்தி நேரமாகும்பொழுது மறுபடியும் காம்பில்ய பட்டணத்திற்கே திரும்பி வந்து தன் பஞ்ஜரத்திற் சேர்ந்து இரவில் அவ்வரசனோடு பலபல கதைகளைச் சொல்லிக்கொண்டு சுகமாகக் காலம் கழித்துவரும். ஓ! கௌரவனே! பிறகு ஓர்ஸமயத்தில் அப்பிர்மதத்தனுக்கு ஸருவசேனனென்ற ஓர் புத்திரனுண்டானான். அவ்விதமே அதற்குச் சிலவருஷ

கள் சென்றபின் அப்பூஜநீயை யென்ற பக்ஷியுமோர் முட்டை யிட்டது. அவ்வரண்மனையிலுள்ள தனது பஞ்சரத்திலேயே காலக்கிரமத்தில் குஞ்சும் பொரித்தது. அப்பொழுது கால்கள் மூக்கு வாயுமுடையதே காணப்பட்டது. முதன்முதலில் வாய்திறக்கமாட்டாமலும் கண்திறக்காமலுமிருந்து நாட்செல்லச்செல்ல ஒவ்வோரவயவங்களும் நன்றாய் விளங்கவும் கண்கள் மலரவுந்தொடங்கிற்று பிறகு சிறகுகளுந் தெரிந்து வெளிப்பட்டது. அதுமுதல் பூஜநீயையுந் தனது குஞ்சினிடம்போ லவ்வரசன் குழந்தையினிடமும் சமமானவன்புடன் களித்து விளையாடிக்கொண்டு வந்தது. தினந்தோறும் பூஜநீயையென்ற பக்ஷி வெளியில் மேய்ந்து மடங்கி வரும்பொழுது அமிர்தத்தை யொத்த வபூர்வமான பழங்களைக் கொண்டுவந்து ராஜகுமாரனுக்கும் தன் குஞ்சிற்கும் பகுத்துக்கொடுக்கும். அதை யிரண்டு குழந்தைகளும் சந்தோஷத்துடன் தின்றானந்திக்கும். இவ்விதம் ஒன்றுக்கொன்று மிகுந்த வன்புடனிருப்பதால், பூஜநீயை வெளியில் போயிருக்கும் பொழுதெல்லாம் இராஜகுமாரனுடைய செவிலித்தாய் குழந்தையின் விளையாட்டிற்காக அக்குஞ்சைக் கூட்டினின்றெடுத்து இராஜகுமாரனுக்கு விளையாட்டுக்காட்டுவது வழக்கம். இப்படியிருக்கையிலொருநாள் வழக்கப்படி கூட்டினின்று வெளியில் வந்த சடகபக்ஷியின் குஞ்சைச் சர்வசேனனென்ற குழந்தை, தாயின்கையிற் போகவொட்டாமல் தானே அக்குஞ்சின் கழுத்திற் கெட்டியாய்ப்பிடித்து கொண்டது. அப்படி பொறுக்கமாட்டாமல் அக்குஞ்சு முயிரையிழந்து வாயைப்பிளந்துபோயிற்று. பிறகு அதைக்கண்டரசனுமோடி வந்து மிகப்பிரயாசையின் பேரில் குழந்தைக்கு வேறுசமாதானங்களைக்காட்டிக் கையினின்றும் மரித்த குஞ்சைப்பிடுங்கி அக்கூட்டினுள்ளேயே வைக்கச்செய்து தன் மனதில் மிகுந்த துக்கத்தை யடைந்தான். மேலும் அப்பொழுது அவ்வரசன் கண்ணும் கண்ணீருமாய் அச்செவிலித்தாயைப் பலவிதமாய் நிந்தித்துத் தீராத துயரத்துடன் வீற்றிருக்க அதேசமயத்தில் மூக்கினாலிரண்டு பழங்களைக் கவ்விக்கொண்டு வழக்கம்போல சந்தோஷத்துடன் தனது கூண்டண்டை வந்து அதனுள் சென்று மிருதமாய் வாய்பிளந்து கால்கள் விரித்து மிகவும் பரிதபிக்கத் தகுந்த நிலையில் கிடக்கும் தன்குஞ்சை நோக்கித்திடீரென பயபரத்துடன் கண்கள் சுழல வடங்காத துயரங்கொண்டு அதன் சமீபத்திலேயே தானுமோர் சவம்போலவே நினைத்து விழுந்தது. பிறகு சிறிது நேரம் கழிந்தபின்பு தானாகவே யெழுந்திருந்து குஞ்சைப்பார்ப்பதும் மலைத்து



நிற்பதும் அங்குமிங்கும் நோக்குவதுமாகத் திகைத்துத் திகைத்து வாயினாற் சிறிசிறி யழுதழுது கண்ணீரால் குஞ்சின் தேகமெல்லாம் நனைத்து விட்டது. பிறகு மிகுந்த வலிமையுடைய அப்பக்ஷி தனது மிருதமாய்க் கிடக்கும் குஞ்சைப்பார்த்து ஏ! பால! நான் வரும்பொழுதெல்லாம் என்வரவைப்பார்த்து அதிப்பிரீதியுடனே கூட ஓடி ஓடி எதிர்கொண்டு வருவாயே. விளங்காத மழலைச்சொற்களால் பேசிக்கொண்டு என் சிறகுகளுக்குள் வந்து பதுங்கிக் கொள்வாயே. தின்னத் தின்னப் பசியால் சிவந்த வாயைத் திறந்து காட்டுவாயே. ஏ! வத்ஸ! இப்பொழுது வாயாலொன்றும் பேசவேயில்லையே. என் வயிறு பதைக்கின்றதே. என்னிரக்கைகளாலணைத்து உன்னைப் பார்த்த ஸந்தோஷத்தால் நானும் சுகமாகப்பாடுவேனே. வீச்சி, கூச்சி என்ற உன் மொழிகளையெல்லாமிப்பொழுது கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே. சிறகுகள் முளைத்துச் சிறிது சிறிது பறக்கும் திறமைவந்து என்னோடிணங்கி நான் கொடுக்கும் கனிகளைத் தின்று நாகத்தால் வாயை வாயைத் திறப்பாயே. இனி எப்பொழுது உன்வார்த்தைகளைக் கேட்பேன். இனியெப்படி என்னிஷ்டம் பூர்த்தியாகும். இவ்விதம் நானாவிதமாய் புலம்பி புலம்பி ஒருவாறு தனக்குள்ளேயே சமாதானித்துக்கொண்டு பக்கம் திரும்பி, அங்குவீற்றிருக்கும் பிரம்மதத்தமஹாராஜனை நோக்கி ஓ! ராஜனே! தாமிப்பொழுது இவ்விராஜ்யத்திலபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறீர். ஆகையால் ஸநாதனமான நியாயங்களை யெல்லாம் நன்றாயறிந்திருப்பீர். ஆகிலுமெனது மைந்தனை யும்முடைய மகனும் செவிலித்தாயைக் கொண்டெதற்காகக் கொல்லுவித்தீர். ஏ! க்ஷத்திரியஜாதியிற்கடையனே! எனக்கு இதற்குத்தரம் சொல். "தன்னைச் சரணமடைந்தவன், பசியாற் பீடிக்கப்பட்டவன், சத்துருக்களால் வெட்டப்பட்டவன், தன்வீட்டில் நீடித்திருந்தவனிவர்களை யெல்லாமெப்பொழுதும் காப்பாற்ற வேண்டும். அவ்விதம் காக்காது கைவிட்டால் கும்பீபாகமென்ற நரகத்தை ஐயமில்லாதடைவான். அன்றியுமவனுடைய ஹவிஸ்ஸை தேவர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள்" என்ற இந்த அங்கிரஸ் என்ற மகரிஷியின் சட்டமொன்றைக் கேட்கப்படவில்லை என்றுதோன்றுகின்றது ஓ! தருமராஜனே! தசதருமத்தையடைந்த அப்பூஜநீயை என்றது இவ்விதம் கூறி மகாசோகத்தையடைந்ததாய் அவ்வரசனது பாலனான சர்வசேனனுடைய கண்களிரண்டையும் தனது கைகளாற் பெயர்த்துவிட்டது. உடன் அக்கண்களும் தெரிந்து விழுந்துவிட்டன. இந்தப்படி ராஜகுமாரனைக்குரு

டனுக்கி நீடூரென ஆகாயத்திற் பறந்து போயிற்று. பிறகு அரசன் கண் போன தன் மகனைக்கண்டு ஒன்றுஞ் சிந்திக்காமல் உயரப்பார்த்த பூஜனியை நோக்கி கூறலுற்றான் ஓ! மங்களமானவுருவத்தையுடைய பூஜனியையே இனி துயரமில்லாதிருப்பாய். ஓ பயந்தன்மையுடையவளே பயப்படவேண்டாம். உனக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. உன்னால் நன்மையே செய்யப்பட்டது. அக்கத்தைவிட்டு இனிப்ரீதியோடு திரும்பி நம்மிடமேவருவாய் முன் போல நம்மோடெனக்குக்குறையாத நேசமே நழைக்கட்டும். திரும்புவாய், முன் போலக்களிப்பாய் எனது புத்திரனுக்குண்டான அந்தகா எனக்குச் செய்ததேன்றுமுன் பேரிற் கோபமேயில்லை. ஓ! தோழியே! உனக்கு க்ஷேமமுண்டாகக்கடவது அபகாரிக்குச் செய்யவேண்டியதே யுன்றனால் செய்யப்பட்டது.

பூஜனியா:— ஓ! அரசனே! கேள், எனக்கு என் புத்திரனிடமுள்ள நேசம் போலவே உனக்கு முன்புத்திரனிடம் சிநேகமுளது ஆகையால் நான் கண்ணில்லாத உன்மைந்தனையுடைய உன்னையடைந்து வசிப்பதற்கு விரும்பவில்லை. உனதரண்மனையிலேயே உனக்கோரபராதத்தைச் செய்து உன்னிடமே வசிப்பது நீதியல்ல. சுக்கிராசாரியர் சொன்ன சில நீதி வாக்கியங்களை சொல்லுகின்றேன், கேள் "கஷ்டமுள்ள நேசனையும், செழிப்பில்லாத நாட்டையும், நியாயமில்லாத அரசனையும், அனுகூலமில்லாத உறவினரையும், அடங்காத புத்திரனையும், உள்ளன்பில்லாத மனைவியையும் வெகுதொலைவிலே விடவேண்டும் அவ்விதமுள்ள நேசனிடம் ஸமானமனமில்லை. அம்மனைவியிடம் சுகமில்லை அப்புத்திரனிடம் பிண்டமில்லை. அவ்வரசனிடம் நீதியில்லை அவ்வுறவினரிடம் நம்பிக்கையில்லை. அந்தேசத்தில் ஜீவனமில்லை. ஆகிலுமிவர்களை யாதரித்தாலோவெனில் குராஜனிடமெப்பொழுதும் பயமே. குபுத்திரனிடமெப்பொழுதும் துன்பமே. அபகாரம் செய்தவனிடமெவன் நம்பிக்கைவைக்கின்றானோ அவன் மனிதரிற் கடையோன். பலமில்லாது நாதனுயில்லாதவன் போல அவன் நீடித்த காலஞ்ஜீவித்திரான். நம்பிக்கையில்லாதவனிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது. நம்பிக்கையுடையவனிடமுமதிகம் நம்பிக்கை வைக்கக்கூடாது. அதிகம் நம்புவதாலவனிடமிருந்து கட்டாயமாய் பயமுண்டாகும் அது நம்பியவன் மூலகாரணங்களையெல்லாமறுத்துவிடும். அவ்விதமே இராஜசேவகர்களிடமும் சரியானஜாதியிற் பிறக்காத ஸங்கரஜாதியாரிடமும் எவன்நம்பிக்கை வைக்கின்றானோ மூடனுன அவன் நீடித்துப்பிழைத்திரான். ஒருசமயம் முதலில் மேன்மையை



அடைந்தானுமுடனே ஆகாயத்தில் எறிந்த சரம் போல சந்தேகமில்லாது கீழேவிழுந்து நாசமடைவான்" ஓ! அரசனே! சுக்கிராச்சாரியாரிவ்விதம் கூறினார். பகையாளியானவன் மிருதுவான வார்த்தை நடைமுதலியவைகளா லுறவுகொண்டாடி கொடிகள் படர்ந்து பெரியமரத்தைக்கெடுப்பது போல அவனது பகையனை யழித்துவிடுவான். சுனையான்கள் இவ்விதமிருந்தாகவும் நலிவுள்ளதாகவும் சிறியவைகளாகவுமிருந்து மெள்ளமெள்ள பெரியமரத்தின் வேரைத்தழுவி நின்று முடிவில் அம்மரத்தைப் படச்செய்யுமோ அவ்விதமே சத்துருவும் நேசித்துநேசித்து வணங்கி வாலைக்குழைத்துக் கொண்டு முடிவில் அடியோடு நாசஞ் செய்துவிடுவான். ஓர்சமயத்திலிந்திரன் மகரிஷிகளுக்குமுன்பு தான் தீங்கு செய்வதில்லையென ஸத்தியஞ்செய்து பிறகு சமயம் பார்த்திருந்து நீரின் நுரையாலேயே நமுசி யென்றவனை கொல்லவில்லையா? ஓ! அரசனே! பகையாளிகள் தூங்கப்பட்டவனையோ புத்திசுவாதீனமில்லாதவனையோ பைத்தியம்பிடிக்கப்பட்டவனையோ சமயம் பார்த்து விஷத்தாலோ, தீயாலோ, ஆயுதத்தாலோ அல்லதுவேறுகபடத்தாலோ, வேரோடு, கொன்று, பின்புமவனிடமிருந்து சிறிதேனும் பயமுண்டாகாதபடி அவனை பாக்கிவையார்கள். ஏனெனில் சத்துருக்களின்மிச்சம் கடன்மிச்சம் தீயின்மிச்சம் இவைகளைவைக்கக்கூடாது ஓ! பூபாலனே! அவ்விதம் மிச்சம் வைத்தால் மறுபடியுமிவைகள் விருத்தியடைந்து இவனை அழித்துவிடும். ஆகையாலிவைகளை மிச்சப்படுத்தக்கூடாது பகையுளிருப்பவன் தன்மனதை வெளியிடாமல் கூடச்சிரிப்பான், பேசுவான், கூடவுண்பான், கூடவுட்காருவான் ஆனாலடிக்கடியிவனுக்குச் செய்யவேண்டிய பாபத்தை மாத்திரம் மறக்கான். வைரியோடு எவ்வித ஸம்பந்தஞ் செய்தாலும் அவ்வைரியை நம்பவேகூடாது. இந்திரனானவன் புலோமனோடு ஸம்பந்தம் செய்து அவனுக்குத்தான் மருமகப்பிள்ளையாகியும் சமயம் பார்த்து போரிற் புலோமனை கொன்றானல்லவா. மனதிலுற்பகையை வைத்துக்கொண்டு எவன் பிரியமான வார்த்தையைப் பேசுகின்றானோ, அவனையறிவுள்ளவன் வேடனை மான் போலவணுகவே கூடாது. அவனுக்குச் சமீபத்தில் வசித்தாலெவ்விதத்திலாவது நதியோரத்திலுள்ள மரத்தின் வேரையறுத்து மரத்தைத் தள்ளுவதுபோல இவனையும் கெடுத்து விடுவான். சத்துருவினிடமிருந்து பெருமையையடைந்தவன், தான் பெருமையடைந்தேனென ஸந்தோஷிக்கக்கூடாது. இவ்விதமுள்ள சுக்கிராச்சாரியருடைய நீதங்களெல்லாம் தன்னைக்காற்றுக்கொள்ளும் அறிஞரால் தரித்து வைக்கத்தக்கவை. ஓ! பூநாயகனே! உனது

புத்திரனைக் குருடனாக்கியென்னுலுனக்கு மிகவும் கொடுமையான தீங்கு செய்யப்பட்டது. ஆகையாலுன்னிடம் நான் நம்பமாட்டேன். இவ்வண்ணம் பல நீதிகளைக் கூறிவிட்டுடனே அப்பூஜனியை யென்ற பக்ஷியானது ஆகாயத்தில் பறந்தோடி விட்டது.

பீஷ்மர்:— ஓ! தருமநந்தனு! நீ கேட்டபடி என்னுல் முன்பு பூஜனியையாற் பிர்மதத்தனுக்குச் செய்யப்பட்ட ஸகலவிருத்தாந்தமும் உனக்குக் கூறப்பட்டது. ஓ! புத்திமானுன யுதிஷ்டிரனே! சிராத்தத்தைக் குறித்து யாதொருகேள்வி கேட்கப்பட்டதோ, அதைப்பற்றிய வோரிதிகாசத்தைக் கூறுகின்றேன்கேள் ஓ! மஹாராஜனே முன்பு ஸநத்குமாரனுல் மார்க்கண்டேயருக்குச் சிராத்தத்தின் பயனைப்பற்றியும், புண்ணியத்தின் நிர்மாணத்தைப்பற்றியும் எவ்விதமுரைக்கப்பட்டதோ, அதைக்கேள். ஏழுஜாதிகளிலும் பிறந்த சரித்திரத்தையும் யோகாச்சாரியரான காலவரிஷியின் சரித்திரத்தையும், கண்டரீகராஜனது விருத்தாந்தத்தையும், பிர்மதத்தனை மூன்றுவதாகவுடைய பிரமசிஷ்டர்களான மற்ற யோகிகளுடைய கதையையுமுரைக்கின்றேன்கேள்.

23-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 24-வது அத்தியாயம்.

மார்க்கண்டேயர்:— இவ்வுலகம் சிராத்தத்தில் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. சிராத்தத்திலேயே யோகமும் உற்பவிக்கின்றது. ஆகையால் உத்தமமான சிராத்தத்தின் பயனையும் பிரமதத்தனுடேழுஜாதிகளிலும் எவ்வெவ்வித பயனடையப்பட்டதோ அதையுமுனக்குக்கூறுகின்றேன், அப்பயனை கேட்டபிறகே தருமவிஷயமான புத்தியானது மென்மேலுபயோகத்திற்குவரும். ஓ! அறிவாளியான பீஷ்மனே! முன்பு தருமத்தைக்கெடுத்து பிதிர்க்களைக் குறித்துச் சிராத்தஞ் செய்யப்பட்டபொழுது அப்படிச்செய்த பிராமணர்களால் யாது பயனடையப்பட்டதோ அதை முதலிற்கேள் அதாவது:— ஸநத்குமாரர் மறைந்துபோன பிறகு நான் குருக்ஷேத்திரத்திற் போய் அவ்விடத்தில் அக்குமாரர் சொன்னபடியே பிதிர்பூஜையில் நிரதர்களான ஏழு பிராமணர்களையும் திவ்யமான அக்கண்ணுலேயே கண்டேன். வாக்துஷ்டன், குரோதனன், ஹிம்ஸ்ரன், பிசுனன், கவி, கஸிருமன், பிதுருவர்த்தி என்ற பெயர்களெல்



லாம் அவ்வேழு பெயர்களுக்கு மவரவர்தொழில்கள்போல ஏற்பட்டவை ஓ! அன்பனே! இவரனைவரும் கௌசிகருடைய புத்திரர்களும் கார்க்கியருடைய சிஷியர்களுமாம். இவ்வனைவரும் தங்கள் தந்தையிறந்த பின் நோன்புடையவர்களானார்கள். ஆகிலும் குருவான கார்க்கியருடைய உத்திரவினுல் தருந்த கன்றுடன் கூடியதும் கரவையுள்ளதும் ஒழுங்காக வரப்பட்டதுமான காராம்பசுவை அப்பொழுது மேய்த்துக் கொண்டு வெகுதொலை சென்றனர். ஓ! பாரதனே! அவ்விதம் சென்ற அவர்களுக்கு பாதையில் பசியெடுக்க யதைபொறுக்கமாட்டாமல் வாலிபத்தன்மையாலும் அறிவின்மையாலும் அப்பசுவைக் கொன்று பசியாறலாமென்றவோர் கொடூரமானபுத்தியவர்களுக்குண்டாயிற்று. ஆகிலும் அப்பொழுது அவர்களுக்குள் கவியென்பவனும் கஸிருமனென்பவனும் அப்பசுவை கொல்லும்படி மற்றவர்களிடம் யாசிக்கவில்லை. மற்ற ஐவர்களையும் மறுக்கவுமில்லை. இவ்விதமிருக்கையில் பிதுருவர்த்தியென்பான் பிரதி தினமும் சிராத்தத்திலேயே பிரியமுடையவனுகையால் மற்றவர்களைப்பார்த்து கோபத்துடன் மனதையடக்கி கொண்டு ஓ! ஸகோதரர்களே! அவசியமிப் பசுவைக்கொன்று பசிதீர்க்க வேண்டுமானுல் வீணாக் கொல்லவேண்டாம். பிதுர்க்களைக் குறித்துச் சிராத்தத்திற்காக வுத்தேசித்து இப்பசுவை கொல்லுங்கள். இவ்வுபாயம் நல்லது. இறக்கும் பசுவும் நற்கதியையடையும், நாமும் பசியாறுவோம் எல்லோரும் ஒருமனதாய்ச் சேருங்கள் இப்பசுவுமிவ்விதமே தருமத்தையடையட்டும், இதிலையமில்லை பிதுர்க்களை பூஜிப்போமானுல் நம்மையும் அதருமமணுகாது என்றுரைக்க அதைகேட்ட மற்ற அறுவருமப்படியே செய்வது நன்றென்று சம்மதித்து பசுவைப் புரோக்ஷணஞ் செய்து மந்திரங்கள் ஜபித்து விசஸனஞ்செய்து அதன் மாமிசத்தாற் பிதுருக்களைக் குறித்துச் சிராத்தத்தைச் செய்து தாங்களும் புசித்தார்கள். ஓ! பாரதனே! இவ்விதம் குருவின் பசுவை கொன்று புசித்த இவ்வனைவரும் மறுபடி திரும்பி குருவினதாசிரமம் வந்து குருவை வணங்கி குருவைநோக்கி, ஓ! குருவே! தமது பசுவை காட்டில் புலி கொன்று விட்டது அதன் கன்று மிச்சமிதோவுள்ளது பெற்றுக்கொள்ளுமென்றனர். அதைக் கேட்ட குருவும் கபடமறியாது உண்மை யென்றே நம்பி கன்றை மாத்திரம் பெற்று கொண்டனர். இவ்வண்ணமே அவ்வெழுவரும் குருவைக்கபடத்தாலேயே பூஜித்து வந்தனரே யொழிய நேர்வழியால் பணிவிடைசெய்யவேயில்லை. இப்படி இருக்கையில் அவ்வனைவரும் வயது முதிர்ந்து காலஞ்சென்றனர் பிறகு அவர்கள் முழுமையும் கொடூரமான தன்மையையுடைத்தாயிருக்

னாலும் குருவினிடம் நேர் நெறியில்லாதிருந்தமையாலும் அந்த ஜன்மத்திலும் கொடுமை கொலை திருட்டென்ற கெட்டகுணங்களோடு கூடியவர்களாய் ஒரே இடத்தில் பலிஷ்டர்களும் கோபிகளுமான சகோதரர்களாகவே ஓர் வேடனுக்கு மகன்களாய் பிறந்தார்கள். ஆயினும் அவ்வனைவரும் பசுவைகொலைசெய்கையில் ஓர் ஒழுங்குவழியில் நின்று புரோக்ஷித்துப் பிதுரு பூஜை செய்து தாங்களுபயோகித்தவோர் புண்ணியவசத்தினால் முன்ஜன்மம் நினைவுடனேயே வாழ்ந்தார்கள். இவ்விதம் தசார்ணம் என்ற தேசத்தில் தருமநெறியறிந்தவர்களான வேடர்களாய் பிறந்து தங்கள் கருமத்தில் நிரதர்களாகவும், வீணாசை பொய் விட்டவர்களாகவும் தங்கள் பிராணதாரணைக்கு மாத்திரம் வேண்டியவாகாரத்தில் பிரியமுடையவர்களாகவும், தங்கள் முந்திய ஜன்மத்தின் அகாரியங்களை நினைத்துப்பயந்து பாக்கிப்பொழுதுகளில் தியானபரர்களாகவே காலங்கழித்துவந்தனர். அப்பொழுது அவர்களுக்கு நிர்வைரன், நிர்விருதி, சாந்தன், நிர்மன்யு, கிருதி, வைத்தியசோமா, நிருவர்த்தி என்ற பெயர்களுண்டாயின. இவர்களெல்லோரும் மேன்மையான தருமநெறியறிந்தவர்களான வேடர்களாயிருந்தனர். ஓ! அன்பனே! இம்மையிலியற்கையாய் பிரீதியுள்ள ஜாதியராகையால் அத்தொழிலாலேயே எப்பொழுதும் தங்கள் வயது முதிர்ந்த தாய் தந்தைகளைப் போற்றிவந்தனர். எப்பொழுது அவ்விருவரும் பரலோகஞ் சென்றனரோ அப்பொழுது முதல் அவ்வெழுபெயர்களும் தங்கள் ஜாதிக்குரிய விற்களையெறிந்து அன்னபானமில்லாமல் உயிரையிழந்து விட்டனர். அவ்விதம் வேடஜன்மத்தில் சுபமான கருமங்களைச் செய்து வந்தமையால் ஜன்மாந்திரநினைவுடன் மறுபடியும் அழகிய காலஞ்ஜரமென்ற பருவதத்தில் மான்களாகப்பிறந்துமிருந்த நிர்வேதப்பட்டவர்களாய் காலங்கழித்தனர். அப்பொழுது அவ்வெழுமான்களுக்கும் உன்முகன், நித்தியவித்திரஸ்தன், ஸ்தப்தகர்ணன், விலோசனன், பண்டிதன், கஸ்மரன், நாதி என்ற எழு நாமதேயங்கள். அப்பொழுதுமவையெல்லாம் பூர்வஜாதிநினைவுடன் காட்டிலங்குமிங்கும் சஞ்சரித்துக்கொண்டு, மிகுந்தபொறுமையுடனும், துவந்துவங்களாகிற இன்பதுன்பங்களில்லாமலும், இனிவேண்டுமென்ற பொருள்களை கருதாமலும் புண்ணியகருமங்களிலவாவுடையவைகளாகவும், எல்லோருமொத்த மனமுடையவர்களாகவும், எப்பொழுதும் யோகானுஷ்டானத்தையுடையவர்களாகவும் அக்காட்டிலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்தனர். இவ்விதமிருக்கையில் இவ்வெழுமான்களும் இரைதேடாமல் அஜகரம்போல் கிடைத்ததைக்கொண்டு காலங்கழித்து பிராணன்களைவிட்டன. அவ்விதம் தவ



புரிந்த அம்மான்களுடைய குளம்படிகளெல்லாம் பின்னுங்கூட அக்காலஞ்ஜரகிரியில் காணப்படுகின்றன. அன்பனே! மேன்மையான அவ்விதமாவையெல்லாம் பிறகு சரத்தீவின் நல்லவிடத்தில் மிகவும் மேன்மையுள்ள சக்கிரவாகப் பக்ஷிகளாய் ஜனித்தும் பெண்புணர்ச்சிகளிலாசையையில்லாமல் ஜலக்கரையிலேயே யிருந்து பிரமநிஷ்டையிலேயே நின்றன. அப்பொழுதும் நிஸ்பிருஹம், நிர்மம், க்ஷாந்தம், நிர்த்துவந்தம், நிஷ்பரிக்கிரகம், நிர்விருதி, நிபிருதம் என்ற எழுபெயர்களோடுவிளங்கின. அத்தீவின் அப்பொய்கையின் கரையிலேயே வசித்த முனிகுமாரர்களான அவ்வெழுபறவைகளும் தருமந்தவறாது ஆகாரமெடுக்காமல் பிரமத்தியானத்திலேயே யிருந்து பொய்கைக்கரையிலேயே தங்கள் பிராணனை விடுத்தன. அதன்பிறகு மானஸப்பொய்கையின் கரையில் சகோதரர்களாக அன்னஜாதியிற் பிறந்தனர். அப்பொழுதும் ஜன்மாந்திரநினைவும் நல்லறிவும் அந்நியோன்யம் நேசமும் பிரமத்தியானமும் தவறாமலிருந்தனர். பிராமணஜாதியிற் பிறந்திருக்கையில் யாதொரு அறிவில்லையால் பொய்யாகத் தமது குருவுபசரிக்கப்பட்டாரோ, அக்காரணத்தால் அவ்வெழுபெயர்களுமிவ்விதம் விலங்கு பக்ஷி ஜாதிகளாகும் குறைந்த ஜாதிகளிற்பிறந்து ஸம்ஸாரத்தில் சுழன்றனர். ஆயினும் பிதுருகாரியத்திலுபயோகித்து அதன்பின்பு தாங்கள் பக்ஷித்ததால் நல்லறிவும் பூர்வஜன்மநினைவும் சிறந்த குணமுமிவைகளாலடையப்பட்டது. ஸுமனன், சுசிவாக்கு, சுத்தன், பஞ்சமன், சித்திரதருசனன், ஸுநேத்திரன், சுவதந்திரன், என்ற எழு பெயர் அவ்வன்னஜாதியிலுமுண்டாயின. இவைகளுள் ஐந்தாவதான பஞ்சமனென்ற முனிகுமாரன் மாத்திரம் எழுஜாதிகளிற் ஜனித்தானே அறுவன் கண்டகிகளுக்குப்பிறந்தான். ஏழாவதான ஸ்வதந்திரன் பிரமதத்தனாய்ப் பிறந்தான். எழுபிறவிகளிலும் செய்யப்பட்ட அவர்களுடைய தவத்தாலும், யோகத்தினுடைய பக்குவத்தாலும், புண்ணியகரமான புத்திதுட்பத்தாலும் பூர்வஜாதிகளிலெந்தவேதம் குருக்களிடமோதப்பட்டதோ அதிலப்படியே அவர்கள் புத்தியானது ஸம்ஸார சக்கிரத்திற் சுழன்றுலுந் தவறாது பதிந்திருந்தது. பிரமத்தியானபரர்களான அவ்வெல்லாவன்னங்களும் பிரமவாதிகளாகவும் யோகானுஷ்டானத்தையே நினைத்துக்கொண்டிருப்பவைகளாகவும் ஒன்றோடொன்று நெருங்கிய நேசத்துடன் அம்மானஸப்பொய்கையின் கரையிலேயே வசித்துக்கொண்டிருந்தன. இப்படியிருக்கையில் நீபர்களுக்கரசனும் சீமானுமான விப்பிராஜனென்ற புருவம்சத்தோன், தன் தேசகாந்தியால் நாலாபுறமுமொளி வீசிக்கொண்டிருந்த வல்லமையுடனும் அந்தப்புரத்துடனும் அம்மானஸக்கரையிலுள்ள

வனத்தையே வந்தடைந்தான். அக்காலையிலங்குள்ள சுவதந்திரனென்ற அன்னவுருவையுடைய முனிகுமாரன் அவ்வரசனைப்பார்த்து மயங்கினான். அதாவது:— மிகுந்த செல்வத்துடன் வருகின்ற அவ்வரசனை நோக்கி இவ்வரசனைப் போல் நானுமாவேனையாகில் நன்று, ஏதாவது சிறிது புண்ணியமோ, தவமோ, நியமமோ என்னிடமிருந்தாற் கிடைக்கும் உபவாஸத்தாலும் பயனற்ற தவத்தாலும் மிகவும் நொந்துவிட்டேன். எனக்கேதாகிலும் சிறிதுபுண்ணியமிருந்தாலிப்படிப்பட்ட அரசாக்ஷியை விரும்புகின்றேன்; என்றான்

24-வது அத்தியாயம் முற்றிற்று.

## 25-வது அத்தியாயம்.

மார்க்கண்டேயர்:— பிறகு அதன் தோழர்களான மற்றவன்னப் பறவைகளிரண்டும், அவ்விதம் நீ அரசனாய்ப் பிறந்தால் நாங்களிருவரு முனக்குப் பிரியத்தையும் ஹிதத்தையும் விரும்பு மமைச்சர்களாவோம் என்றன. அதைக்கேட்டு அப்படியே யாகட்டுமென வுரைத்து, யோக சம்பந்தமான அதன்புத்தியும்பொழுது அச்சன்மத்திலேயே சம்பந்தித் தாய்விட்டது. இவ்விதம் சங்கேதம் செய்தபின்பு, சுசிவாக்கென்றது சுவதந்திரனைப்பார்த்து ஏ! சுவதந்திரனே! நீ யாதொரு காரணத்தால் யோகானுஷ்டான தர்மத்தை விட்டு காமபோகத்தையே முக்கியமாகப் பற்றியவனாய் இவ்விதமுள்ள வார்த்தை யபேக்ஷிக்கின்றாயோ, ஆகை யால் என் வார்த்தையைக் கேள். அன்ப! காம்பில்லிய பட்டணத்தில் நீ அரசனாய் ஜனிப்பாயிதிலையமில்லை. இவ்விருவரு மவர்கருத்தின்படி உனக்குச் சகாயர்களான மந்திரிகளாகவுமாவார், எனச்சபித்து மிச்ச முள்ள சக்கிரவாகங்கள் நான்கும் ஒன்றாய்க்கூடி இராஜ்யபோகத்தில் விருப்பமுடைய மூன்று பறவைகளையும் உதாசீனம் செய்து ஸம்பா ஷணத்திற்குக் கூட யோக்கியமில்லை யெனத் துறந்துவிட்டன. இவ் விதம் சபிக்கப்பட்ட அம்மூன்றுபறவைகளும். யோகத்தினின்றும் நழு வப்பட்டவைகளாய் அஞ்ஞானம் மூடி இனிச்செய்யத்தக்கதின்னதென வழியறியாமல் மறுபடியும் ஸஹசாரிகளான மற்ற நான்கு பறவை களையே வேண்டின. பின்பு அவைநான்கும் தயவு செய்து அவைகளு



னொன்றாகிய ஸுமனனென்ற மூத்ததை வேண்டிக்கொண்டு சாபத்தை நிவர்த்திக்கத்தக்கவாக்கைக் கொண்டு சமாதானித்தன.

ஸுமனன்:— உங்களுடைய சாபம் முடிவையுடையதாகும். இதி லையமில்லை. அதெப்படியெனில், இச்சங்கத்தினின்றும் விட்டு மனித ஜன்மத்தையடைந்து மறுபடியும் யோகாப்பியாசத்தை யடைவீர்கள். இந்த சுவதந்திரனப்பொழுது எல்லாப் பிராணிகளுடைய பாஷையை யுமறிந்தவனாவான். பிதுர்க்களுடைய அனுக்கிரகமானது இவனுடைய புத்திரபட்சத்தாற் செய்யப்பட்ட சிராத்தத்தினால் நமெல்லோராலு மடை யப்பட்டது. தருமநெறிப்பிரகாரம் பசுவைப்புரோக்ஷணம் செய்து பசி தீர்க்கலாமெனக் கூறியவனிவன். அதனால் நமக்கெல்லோருக்கும் பூர்வ ஜாதி நினைவும் நல்லறிவும் யோகாப்பியாசத்தின் கிரமமும் மறக்காம லிருக்கின்றன என்றான்.

மார்க்கண்டேயன்:— என இவ்விதம் கூறி அச்சமயத்தில் ஒரு சுலோகத்தையும் வெளியிட்டான். அதாவது;—

"ஓர் புருஷனால் பொருளை மறைத்து சொல்லப்பட்ட வாக்கைக் கேட்டு மறுபடியும் யோகானுஷ்டானத்தை யடைவீர்கள் என்றது."

25-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 26-வது அத்தியாயம்.

மார்க்கண்டேயர்:— யோகானுஷ்டானத்திலேயே நிரதர்களாயும் மானஸப்பொய்கையில் ஸஞ்சரிப்பவர்களாயுமுள்ள அவ்வேழு பெயர்க ளும் — பத்மகர்ப்பன், அரவிந்தாக்ஷன், க்ஷீரகர்ப்பன், ஸுலோசனன், உயிருந்து, ஸுபிந்து, ஹேமகர்ப்பன், என்றவேழு நாமதேயங்களை யுடையவர்களாய் எப்பொழுதும் காற்றையும்ஜலத்தையுமே புசிப்பவர் களாக தன் சரீரங்களை ஒடுக்கிவிட்டனர். அச்சமயத்திலேதான் நான் முன்புகூறிய நீபேசுவரனென விப்பிராஜன் அந்தப்புரத்துடன் இந்திரன் நந்தவனத்தைக் குறித்து வருவது போல அவ்வனத்திற்கு வந்துசேர்ந் தான். ஓ அரசனே! அவ்வனத்தில் யோக தருமத்தில் மனமுடைய அவ்வன்னங்களனைத்தையுமிவ்வரசன் பார்த்து மிகுந்த துதியால் அந்த யோகதருமத்தையே நினைத்துக்கொண்டு மறுபடியும் தனது பட்ட

னமே போய்ச் சேர்ந்தான். அவனுக்கு மிகவுந்தருமசிந்தையுள்ள அணுஹனென்ற ஓர் புத்திரன் ஜனித்தான். நுட்பமான தருமத்திலேயே எப்பொழுதும் பிரியமுடையவனாயிருந்ததால் முடிவிலும் ஸூக்ஷ்மமான பதத்தையே யடைந்தான். அவ்வணுஹனுக்குச் சுகரென்றவர் உயர்ந்த லக்ஷணங்களையுடையவளும், நல்லதன்மை குணங்களோடு கூடியவளும், எப்பொழுதும் யோகானுஷ்டானத்திலேயே பிரியமுள்ளவளுமான கீர்த்தி யென்ற தனது பெண்ணை மணஞ்செய்து கொடுத்தார். ஓ! பீஷ்ம! அக்கீர்த்தியென்பவளை முன்பு சனத்குமாரதேவனாற் கூறப்பட்டவளும், நல்லறிவுள்ளவளும், மங்களகரையும், பிதுருகன்னிகையுமான உதிஷ்டையென்றவளென அறிவாய். உண்மையான தருமத்தை யறிந்தவருட் சிறந்தவளாயும், யோகிகளாலுமறியமுடியாத இவள் யோகத்வத உருவமாகவுடையவளாகவும், யோகியின் மனைவியாகவும், அவ்விதமே யோகிக்கு மாதாவாகவுமென்றால் முன்பு பிதுரு கல்பம் கூறிய விடத்தில் சொல்லப்பட்டது. பிறகு விப்பிராஜமஹாராஜனும் சிலகாலஞ்சென்று தனது ராச்சியத்தில் அணுஹனையபிஷேகித்துப் பட்டணத்தியப் பிராம்மணரனைவரையு மாவழைத்து வாழ்த்தப்பட்டவனாக [illegible] பார்க்கப்பட்ட மானஸப்பொய்கையைக் குறித்தே தவம் புரிவதற்காகப் புறப்பட்டு அவ்வன்னப்பக்ஷிகளைக்கண்ட விடத்தையே போயடைந்தான். அங்கவன் ஆகாரமில்லாமலும், கேவலம் வாயுவையே பக்ஷித்துக்கொண்டு மஹாதவசியாய் சகலபற்றுக்களையும் விட்டு அம்மானஸப் பொய்கையின் பக்கத்தில் சிறந்த தவத்தையே புரிந்துவந்தான். அப்படியிருக்கையில் அவனுக்கோரெண்ணமுண்டாயிற்று. அதாவது அவ்வன்னரூபமான யோகிகளுக்குளொன்றுக்குப் புத்திரனாக ஜனிப்பேனேயாகில் நல்லயோகத்தையுடையவனாக நானுமாவேன் என்றதாம். ஓ! பாரதனே! இவ்விதமவன் நிச்சயித்து பெருத்த தவத்தோடு கூடியவனாகவானான். பிறகுமகாதபஸ்வியான அவ்விப்பிராஜன் என்றவன் தன்மகிமையால் சூரியனைப்போல்விளங்கினான். பிறகு அவ்வனம் முழுமையு மவ்விப்பிராஜனது காந்தியால் விளங்கப்பட்டதால் அவ்வனமும் அப்பொய்கையும் வைப்பிராஜமென்ற பெயரையுமடைந்தது.

பிறகு எந்தவிடத்தில் யோகானுஷ்டானமுடைய நான்கு பக்ஷிகளிருந்தனவோ அவைகளைக்காட்டிலும் வேறுயுள்ள மற்ற யோகப்பிரஷ்டர்களான மூன்றுபக்ஷிகளும் மரணகாலம் சமீபிக்கத் தேகத்தை விழுத்தன. உடன் அவையனைத்தும் காம்பில்லிய நகரத்தில் பிர்மதத்தன்



முதலிய மூவர்களாகப் பிறந்தன. பிறகு சிலகாலஞ்சென்றபின் மற்ற நான்கன்னங்களும் யோகமகிமையாலேயே தங்கள் பக்ஷிதேகத்தை விட்டு அக்காம்பில்ய நகரத்திலேயே பிராம்மணகுமாரர்களாய் ஜனித்தனர். இவர்களேழு பெயர்களும் மகாத்மாக்களாகவும், பாபமற்றவர்களாகவும், நல்லறிவு படிப்பு தவம் பூஜையிவைகளை யுடையவர்களாகவும் வேதவேதாந்தங்களை யெல்லாம் கரைகடந்தவர்களாகவும் விளங்கினர். அவருள் நால்வர் முன் நினைவுடையவர்கள். மற்ற மூவரோ, ஜன்மாந்தர நினைவற்றவர். அதன் கிரமமாவது;— சுவதந்திரனென்றவன் அணுஹனிடமிருந்து மிகுந்த கீர்த்திபெற்ற பிர்மதத்தனென்ற பெயருடன் பிறந்தான். பக்ஷி ஜன்மத்திலப்பிர்மதத்தனுக்கு மந்திரியாக வேண்டுமென எவர்களாற் சிந்திக்கப்பட்டதோ, அந்த சித்திரதருசீ, சுநேத்திரனென்ற இருவர்களும் பாப்ரவியன், வத்ஸன் என்ற பிராம்மணருக்கு ஜனித்து வேதவேதாந்தங்களை யெல்லாம் கரைகடந்த ஞானிகளாயினர். முன் பட்சி ஜன்மத்திற் போலவே இஜ்ஜன்மத்திலேயும் இப்பிர்மதத்தனுக்குத் தோழர்களாகவு மெப்பொழுதும் கூடவேயிருப்பவர்களாகவுமானார்கள். பாஞ்சாலதேசத்தியவனான பாஞ்சிகனென்றவனொருவன். மற்றவன் கண்டரீகனென்றவன். பாஞ்சாலன் ருக்வேதமோதும் பிராம்மணன், அனேகமிடங்களில் ஆச்சாரியனாய் கிரியைகள் செய்துவைக்கும் வல்லமையுடையவன். கண்டரீகனோ யஜுர்வேதம் ஸாமவேதமென்றிரண்டு வேதங்களையோதியவன். அணுஹன் புத்திரனான பிர்மதத்தராஜனோ எல்லாப்பிராணிகளுடைய பாஷையையுமறிந்தவனானான். இவ்விதமிருக்கையில் ராஜனுக்கு ஜன்மாந்திர சாபத்தாலும் தங்கள் நினைவாலும் கண்டரீகனோடும் பாஞ்சாலனோடும் தோழமையுண்டாக அவருடன் கூட எப்பொழுதும் கிராமியதருமமென்ற சிற்றின்பத்திலேயே விருப்பமுள்ளவர்களாய் மோட்ச மார்க்கத்தை மறந்து அறம் பொருளின்பமென்ற மூன்று பயன்களையே நாடிநின்றுளர். அணுஹராஜனோ பாபமற்ற தன் மகனான பிர்மதத்தனைத் தனது ராஜ்யத்திலபிஷேகம் செய்து யோகத்திலேயே மனமுடையவனாய் உத்தமமான கதியை யடைந்தான். பிர்மதத்தனுடைய மனைவி தே லருடையவுமவிதருடையவும் மகளான வணக்கமுள்ள ஸன்னதி யென்றவள். இவள் தேவலரால் மணஞ்செய்து கொடுக்கப்பட்டவள் கணவனது மனதிற்கொத்து நடக்கப்பட்ட சிறந்த பெண். யோகானுஷ்டானத்திலேயே நிலைநிற்பவள். எழுவர்களுக்குள் இப்பாஞ்சிகனே ஐந்தாவன். ஆறுவன் கண்டரீகன். ஏழாவனே பிர்மதத்தன். இவ

டன் கூடவிருந்த மிச்சமுள்ள மற்ற நான்கு பக்ஷிகளும், அக்ஷாம்பில்ய பட்டணத்திலேயே தரித்திரனான ஓர் வைதிகப்பிராம்மணன் வீட்டில் சகோதரர்களாய் ஜனித்திருக்கின்றவர். திருதிமான், ஸுமனன், வித்துவான், தத்துவதர்சீ என்ற பெயரை யுடையவர். வேதச்செல்வமுடையவர். நுட்பமான பொருள்களை நன்றாயறிந்தவர். இப்படிக் காலம் கழித்து வருமவர்களுக்கு அப்பொழுதும் பூர்வஜன்மங்களின் நினைவு மறவாமலே தோன்றிக் கொண்டிருந்தன. அவ்விதம் சிலகாலஞ் சென்றபின் யோகத்திலேயே நிலைமையுடைய அவர்கள் நால்வரும் தபோவனங்களைக் குறித்துப் பிரயாணம் புறப்பட்டு, அச்சமயத்தில் தங்கள் பிதாவைக்கேட்டுக் கொள்ளும்பொழுது அப்பிதா அப்புத்திரர்களைக் குறித்துக் கூறியதாவது;— ஓ! மைந்தர்களே! இப்பொழுது நீங்கள்நால்வரும் என்னைவிட்டுப் போவதாய் எத்தனிப்பது தருமமல்ல. கார்த்திரியத்தைத் திறக்காமலும், புஷ்டியான பொருள்களைச் சேர்க்காமலும், தாய்தந்தையர் பணிவிடைகளைச் செய்யாமலும் எக்காரணத்தால் தபோவனம் செல்லத்துணிந்தீர்கள். என்றவரை நோக்கி அந்நான்குப் பிராம்மணகுமாரரெல்லோரும் மறுபடியும் பிதாவை நோக்கிக் கூறுகின்றார்கள். ஓ! பிதாவே! உமக்கு அதற்குத்தக்க ஏற்பாட்டைச் செய்கின்றோம். அதனால் தாம் செல்வத்தையடைந்து சகல காரியங்களையுமடையலாம். அதாவது;— பெருத்த பொருளுள்ள இந்தசுலோகத்தை மந்திரிகளுடன் கூடியிருக்கும் கல்மஷமற்ற பிர்மதத்தராஜனண்டை போய் அவ்வரசன் செவிகளிற் கேட்கும்படி சொல்லிக் கேட்பியும். அதைக்கேட்டு அவ்வரசன் மிகுந்த பிரீதியுள்ளவனாய் உமக்குக் கிராமங்களையும் போகங்களையும் நிறைந்த தனங்களையும், மேலும் விரும்புமெல்லாச் செல்வங்களையும் வேண்டிய அளவு கொடுப்பான். ஆகையால் இஷ்டப்படி செல்வீரெனச் சமாதானித்துத் தங்கள்குருவான பிதாவைப் பூஜித்து அவருடைய உத்திரவின்பேரில் யோகஞானத்தையடைந்து உத்தமமான சுகத்தை யடைந்தனர். பின்பு முடிவில் அந்தயோகிகள் அடக்கிய மனத்தால் பரமாத்மாவை யநுபவித்து சுகித்தனர்.

26-ம் அத்தியாயம் முற்றிற்று.



# 27-வது அத்தியாயம்.

மார்க்கண்டேயர்:— அப்பிர்மதத்தனுக்கு வைப்பிராஜனென்றவனே மகனாய்ப் பிறந்தான். அவனே யோகத்திலேயே மனமுடையவனும், தவத்தோடு கூடியவனுமான விஷ்வக்ஸேனனென்ற பெயரையுடைய பிரசித்தன். ஒருசமயத்தில் பிர்மதத்தராஜன் தனது பாரியையுடன் வனத்தில் சுகமாக இந்திரனுமிந்திராணியும்போல் விளையாடிக்கொண்டிருக்கையில், அவ்வரசனவ்விடத்திலோர் எறும்பின் வார்த்தையைக் கேட்டான். அப்பொழுது காமினியான தனது மனைவியைக் கலவிக்காக மிகவுமிரந்து வேண்டுமோர் காமுகமான ஆண்எறும்பின் வேண்டுகோளை பெண்ணெறும்பு மிகுந்த கோபத்துடன் தடுத்தது. இதைக் கேட்ட பிர்மதத்தராஜன் பெருத்துச் சிரித்தான். அவ்விதம் காரணமில்லாது மனைவியண்டையிற் சிரித்த அவ்வரசனை நோக்கி நிலையானி ஸன்னதியென்ற மனைவி அப்பொழுது வெட்கப்பட்டவள்போல வாயினள். சிறந்த நிறத்தையுடைய அச்சன்னதி அதுமுதல் வெகுநாள்கள் வரையில் ஆகாரமில்லாமலே உபவாஸமாயிருந்தாள். பிர்மதத்தனாற் கூடியவரையில் சமாதானிக்கப்பட்ட பின்பு, வெளுத்த சிரிப்பையுடைய அப்பாரியை ராஜாவை நோக்கி ஓ! மஹாராஜனே! உம்மால் பரிகாஸம் செய்யப்பட்ட யானினி ஜீவிக்க விரும்பவில்லை என்றனள். உடனே ராஜனும் அச்சிரிப்பிற்குக் காரணத்தை யுரைத்தனன். அதையவள் நம்பவில்லை. மேலும் கணவனை நோக்கி ஆ! இதாச்சரியம் மனிதஜன்மத்தில் எறும்பின் பாஷையை யறியும் தன்மையுமுளதோ, எந்த மனிதன் எறும்பின் வார்த்தையை யறியமுடியும். தேவனுடைய வனுக்கிரகமில்லாமலாவது, ஜன்மாந்தர நினைவில்லாமலாவது, தபோவலிமையில்லாமலாவது, யோக வித்தையில்லாமலாவது இதர ஜாதி பாஷைகளறிய முடியாதல்லவா. ஆகையாலிவைகளுளொது உம்மிடமுள்ளது எதாவதொன்றிருந்தாலல்லவோ எறும்பின் பாஷையை நீர் அறிந்திருப்பீர். எவ்விதம் நானிதிற்றெளிவேனோ அவ்விதம் என்னை நம்பிக்கைப் படுத்தும். இல்லையாகில் கட்டாயம் என்பிராணனை விடுவேன். இது உண்மை என்றாள். பட்டமஹிஷியான தனது மனைவியின் கோபத்தோடு கூடியதும பதட்டமான சொற்களையுடையதுமான இவ்வார்த்தையைக் கேட்ட அவ்வரசன் பெருத்தவாபத்தை யடைந்தவனாய் பிறகு ரக்ஷகனும் சகலதேவர்களுக்கும் மேலானவனும் ஸர்வப்பிராணிகளுக்கீசனுமுள்ள ஹரியான நாராயணனைப் பக்தியால் தியானித்து

நிராஹாரனும் ஜிதேந்திரியனும் ஆறுதினம் வரையில் உபவாஸமாய் சரணமடைந்து அத்தியானத்திலேயே நின்றான். பிறகு அவ்வரசன் பிரபுவாயும் தேவனாயுமுள்ள நாராயணனைத் தரிசித்தான். அப்பொழுது ஸர்வப்பிராணிகளிடமும் தயவுள்ள அப்பகவானானவர் உரைத்ததாவது ஏ! பிர்மதத்த! நீ காலையில் க்ஷேமத்தையடையப் போகின்றாய். என்று கூறியபின்னங்கே அப்பகவானான தேவனுமந்தர்த்தானமானார். மஹாத்மாக்களான நான்குப் பிராமணகுமாரர்களுக்கும் பிதாவான யாதொருவருண்டோ, அப்பிராம்மணன் புத்திரர்களிடமிருந்து அச்சுலோகத்தைப் படித்து தான் எல்லாப்பேறுகளையுமடைந்தவர் போலவானார். அன்டினவரைக் கைநழுவவிடாதவனுமான அவ்வரசனை மந்திரியோடுகூடியிருக்கும் சமயமெதிர்பார்த்துக் கொண்டு அச்சமயம் கிடைக்காததால் அச்சுலோகத்தைக் கேட்பிக்க சமய மெதிர் பார்த்துக்கொண்டேயிருந்தார், பிறகு ராஜாவும் பொய்கையில் நீராடி நாராயணனிடமிருந்து வரனைப் பெற்று சந்தோஷித்தத்துடன் பொன் இரதத்திலேறிக்கொண்டு தனது நகரத்தைப் பிரவேசித்தான். அப்பொழுது அத்தேர்க்குதிரைகளின் கடிவாளத்தைக் கண்டரீகனென்ற வந்தணோத்தமன் பிடித்து நடத்தினான். பப்பிராவியனான பாஞ்ஜாலனென்ற மற்றவிப்பிரன் சாமரத்தைப் பிடித்து வீசினான். இதே சமயமென்று தெளிந்து அப்பிராம்மணனு மப்பொழுது அவ்வரசனையும், அம்மந்திரிகளையும் குறித்து அச்சுலோகத்தைக் கேட்பித்தான். "தசாருண தேசத்திலேழு வேடர்களாகவும் காலஞ்ஜரகிரியில் எழுமான்களாகவும், சரத்வீபத்தில் சக்கிரவாகப்பக்ஷிகளாகவும், மானஸப்பொய்கையில் அன்னங்களாகவுமிருந்த, யாதொரு குருக்ஷேத்திரத்தில் ஜனித்த வேதங்களின் கரைகடந்த வந்தணருளரோ; அவ்வந்தணர்களெல்லாம் மறுபடியும் பிராம்மணர்களாய்ப் பிறந்து இப்பொழுது தொலையுள்ள மார்க்கத்தைக் குறித்துப் பிரயாணம் புறப்பட்டுப் போகின்றார்களே, நீங்கள் மாத்திரமேன் துன்பப்படுகின்றீர்கள்" என்ற இச்சுலோகத்தைக் கேட்டுப் பிர்மதத்தனென்றவரசனும் மூர்ச்சையடைந்தான். அவ்விதமே கடிவாளத்தையும் சாமரத்தையும் பிடித்திருக்கும் கண்டரீகனும், பாஞ்சால்யனுமாகிற மற்றயிருவரும் அவரவர் கையிலுள்ளவைகளை நழுவவிட்டு நினைவு தவறிப்போனார்கள். அவ்விதமே இவர்களைப் பார்த்துப் பட்டணத்திலுள்ள மற்ற ஜனங்களும் நேசர்களும் திகைத்துப் போயினர். ஒருமுகூர்த்தகாலம் வரையில் அதே விதமாய்த் தேரின் பேரிலவ்விருவருடனும் திகைத்தும் பிறகு அவ்வரசன் நினைவையடைந்தான். பிரசம்முவருமப்பொய்கையை நினைந்து



அந்த போகத்தையுமடைந்து, அரசனுடன் அப்பிராம்மணனை நிறைந்த செல்வங்களாலும், போகங்களாலும் சந்தோஷப்படுத்தினர். பின்பு தனது ராஜ்யத்தில் தன் மகனை விஷ்வக்ஸேனனை யபிஷேகித்து அரசனுடன் பிர்மதத்தனும் மனைவியுடன் யோகானுஷ்டானத்தை குறித்து வனத்திற்கே சென்றனர். அங்கு தேவருடைய பெண்ணான ஸன்னதியென்பாள், வனத்திலிருக்கும் தனது பதியை நோக்கி மிகக்களிப்புடன் ஒ பதியே நமதுண்மையை யறிய வேண்டுமென்றே; நான் எறும்பின் வார்த்தையைப் பற்றித் தூண்டிக்கேட்டேன் நானதைக்கேட்க விரும்பினதும் அதற்காகக் கோபித்ததும் உண்மையல்ல. ஆனால் தமக்குத் தம்மாலனுபவித்து வந்த யோகாப்பியாசமானது மறக்கப்பட்டிருந்தது. ஆகையாலதை நினைவுவரும்படி இவ்விதமெல்லா மென்னாலுபத்திரவிக்கப்பட்டது. ஓ! எனது நண்பனே! இதோ நாமெல்லோருமிஷ்டப்படி மேன்மை பொருந்தியதும் நிகரற்றதுமான அந்தகதியை வேண்டு மென்றாலும் அடையலாமென்றனள் பிறகு அவ்வரசனும் மிகவும் சந்தோஷத்துடன் மனைவியின் சிறந்த அவ்வார்த்தைகளைக் கேட்டு தன்மனோபலத்தாலேயே யோகசித்தியையடைந்து முடிவில் எவராலுமடைய முடியாத வுத்தம பதவியையடைந்தான். தருமாத்மாவான கண்டரீகனென்ற வந்தணனும். சிறந்த ஸாங்கிய யோகத்தை யடைந்து சிறந்த யோககதிகளை யெல்லாம் கண்டு மகாசித்தனாய் விசுத்தமான சித்தனாகவானான். பாஞ்ஜாலிய னென்றவனோ கிரமமென்ற வேதபாடத்தையும, சிட்சையையும் உற்பத்தி செய்து மகாகீர்த்திமானாயிருந்து முடிவில் யோகாச்சாரியருடைய கதியை யடைந்தான். ஓ! காங்கேயனே! இவ்விதம் நான் பிரத்தியட்சமாகவனுபவித்த பூர்வசரித்திரமிது. ஆகையாலிதை நன்றாய் மனதிலிருத்திவையும். அது நல்ல க்ஷேமங்களோடு கூட்டிவைக்கும். எவர்களிக்கதையை மனதில் தரித்து வைக்கின்றார்களோ அவர்கள் ஒருக்காலும் விலங்கு பக்ஷி முதலிய ஜாதிகளில் ஜனியார்கள். பெரியோருடைய நல்லகதியைப்பற்றிய இக்கதையைக் கேட்டவர் மிகுந்த செல்வத்தையடைவார். ஓ! பாரதனே! யோக தருமமானது எப்பொழுதும் மனதிலேயே நிலைநிற்கும். இதனாலெப்பொழுதாவது ஸம்ஸாரச்சுழலின் அடக்கமாகிய பற்றில்லாமையை யடையக்கூடும். அதனால் துர்லபமான யோக கதியையுமடைவான்.

வைசம்பாயனர்:— புத்திமானான மார்க்கண்டேய மகரிஷியினால் இவ்விதம் சிராத்த பலனைக் குறித்து முன்பு கூறப்பட்ட இவ்வித்தி

யாயக்கதையானது சோமனுடைய பிரீதியின் பொருட்டாகின்றது. அப்பகவானான சோமனும் உலகத்திற்குப்பிரீதியான வோர்ரக்ஷணத்திற்கேதுவான வோர் தேவன். விருஷ்ணி வம்சத்தின் பிரசங்கத்திற்காக ஆதியிலச்சோமனது வம்சத்தை யென்னிடமிருந்து கேள்.

27-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 28-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— ஓ! ராஜனே சோமனுக்குத் தகப்பனாரான பகவானத்திரி மகரிஷியானவர் முன்பு பிரஜைகளைப்படைக்க விரும்பிய பிர்மாவின் மனதினின்று முதித்தார். அப்பொழுது தன் மக்களோடு கூடிய அவ்வத்திரி மகரிஷியானவர் எல்லாப்பிராணிகளுக்கும் மனம் வாக்கு வினைகளால் க்ஷேமத்தையே செய்துவந்தார். முன்காலத்தில் யாதொருவரால் ஸர்வப்பிராணிகளிடமுமிதத்தையே விரும்பினவராகவும் தருமசுவரூபியாகவும், கூர்மையான விரதங்களையுடையவராகவும், கட்டை சுவர்ப்பாறைபோல வசஞ்சலமாக உயர்த்தூக்கினகைகளுடன் மிகுந்த வொளியையுடையவராகவும் அனுத்தரம் என்ற தவமானது மூவாயிரம் தேவவருஷங்கள் வரையில் அனுஷ்டிக்கப்பட்டதென நம்முடைய செவியால் கேட்கப்பட்டிருக்கிறதோ, அம்மஹாத்மாவே இவ்வத்திரிபகவான். ஓ! பாரதனே! அப்பொழுது கண்கள் கிமைகொட்டாமல் மேல் நோக்கிய சுக்கில தாதுவுடன் தவம் செய்யப்பட்ட மிகுந்த பலத்தையுடைய அவரது தேகமானது அமுதத்தன்மையை யடைந்தது. அமுதத்தன்மையைப் பாவித்துமனமுடைய அம்மகரிஷியின் சரீரத்திலுள்ள அமிருதபாகமான சுக்கிலத்தின் சாரமெல்லாம் தேகத்தின் மேல்பாகத்திலேயே யேறி நின்றதால், அவரது கண்களினின்றும் பத்துத்திக்குகளையும் பிரகாசிக்கச் செய்யத்தகுந்த நீர்த்துளியானது ததும்பிவிழுந்தது. அதை அப்பொழுது அவரது பத்து திக்குகளாகும் பத்துமனைவிகளும் சந்தோஷத்துடன் ஒன்று சேர்ந்து பத்துப்பிரிவாக வகித்துக்கொண்டனர். ஆயினுமக்கருவைதரிப்பதற்குக் கூடவில்லை. ஆகையாலக்கருவானது அம்மனைவிகளிடமிருந்து சீக்கிரமாகவே உலகங்களையெல்லாம் தனது காந்திகளால் விளக்கிக்கொண்டும் அதிகாந்தியுடனும் எல்லோராலும் கொண்டாடத்தகுந்ததுமான சந்திர ரூபமாக விழுந்தது, எப்பொ



ழுது திக்குகளாகிய அப்பதின்மராலும் தரிக்கமுடியவில்லையோ அப்பொழுதே அவர்களோடு கூட அக்கருப்பமானது பூமியில் விசையாகவே விழுந்தது. அவ்விதம் விழப்பட்ட அச்சோமனை, உலகங்களுக்கெல்லாம் ஆதி பிதாவான பிர்மா பார்த்து உலகங்களுக்கெல்லாமிதத்தைச் செய்யவேணுமென்ற கருத்தினால் ஓர் இரதத்திலேற்றிவைத்தார். அந்த ரதமானது வேத மயமென்றும், தருமவடிவுள்ளதென்றும், சத்தியத்தால் கட்டுண்டதென்றும், வெளுத்தவாயிரம் குதிரைகளோடு கூடியதென்றும் நம்மால் கேட்கப்பட்டிருக்கின்றது. அத்திரியின் புத்திரனும் மஹாத்மாவுமான அச்சந்திரன் பூமியில் விழப்பட்டவுடன் தேவர்களும் பிர்மாவின் மானஸபுத்திரர்களான பிரசித்திபெற்ற ஸப்தரிஷிகளும் அவனைத்துதித்தார்கள். அவ்விதமே ஆங்கிரஸரான பிருகு ரிஷியும் தனது புத்திரர்களுடன், ருக்குக்களாலும் மிகுந்த யஜுஸ்ஸுக்களாலும் அதர்வங்களாலும் துதித்தனர் இப்படித்துதிக்கப்பட்ட காந்தியுள்ள அச்சோமனுடைய வீரியமானது மூவுலகங்களையும் எங்கும் திருப்தி செய்துகொண்டு விளங்கிற்று. அச்சோமனும் அச்சிரேஷ்டமான தேரினாலிருபத்தியோருதடவை கடல் சூழ்ந்த இப்பூமியை மிகுந்த கீர்த்தியுடன் சுற்றி வலம் வந்தான். அப்பொழுது அவருடைய எந்த வீரியமானது தெரித்து விழுந்ததோ அது பூமியைப்பற்றிற்று. அதெல்லாம் ஓஷதிகளாக முளைக்கப்பட்டன. ஆகையால் அவ்வோஷதிகளெல்லாம் மிகுந்த வீரியத்துடன் விளங்குகின்றன. அவ்வோஷதிகளாலேயே மூவுலகங்களும் அவைகளிலுள்ள நான்குவிதப்பிராணிகளும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. ஓ! பூபதியே! இந்த ஜகத்திற்குப் பகவானான சந்திரன் போஷணம் செய்பவர். அந்தபகவானான சந்திரனனவர், அந்த ரிஷிகளுடைய துதிகளாலும், அவ்வினைகளாலும் உயர்ந்த காந்தியை யடைந்து ஓ! மஹாபாக்கியவானான அரசனே நூறாயிரம் பதுமமென்ற எண்ணிறைந்த வருஷங்கள் வரையில் உக்கிரமான தவம் செய்தான். பிறகு பொன்னுருவமான யாதொரு தேவிகள் தங்கள் தேகத்தா லிவ்வுலகத்தை வகிக்கின்றனரோ, அவர்களுக்கு பிரசித்தி பெற்ற இச்சந்திரதேவனானவர் தனது கர்மத்தால் நிதியாகவாயினர். பிறகு பிர்மக் ஞானிகளுக்குள் சிறந்த பிர்மாவானவர் அச்சந்திரனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தார், பின்பும் அப்பிர்மாவினாலேயே வித்து, மூலிகை, பிராம்மணர், ஜலமிவைகளுக்கெல்லாம் இராஜாவாக இராஜராஜ்யத்தை வகிக்கத்தக்க பதவியில் இச்சந்திரன் அபிஷேகஞ் செய்யப்பட்டார். அப்பொழுது மூன்றுலகங்களையும் காந்திமான்களிற் சிறந்த சந்திரன் தனது காந்தியால் விளங்கச்

செய்தார். பெருந்த நோன்புகளையுடைய தக்ஷபுத்திரிகளான இருபத்
தேழு பெண்களை அவ்விந்துவிற்குப் பிரசேதஸ்ஸின் குமாரனான தக்ஷன்
மணஞ்செய்து கொடுத்தாரென்றும், அப்பெண்களே இருபத்தேழு நக்ஷத்
திரங்களென்றும் முன்னாலறியப்பட்டதல்லவா? ஓ, பாரதனே! சோபத்
தையுடையவர்களுட் சிறந்த அச்சோமன் அவர்களுடன் அந்த பெருந்த
ராஜ்யத்தை யடைந்து இலக்ஷம் விதமான தக்ஷிணைகளையுடைய இராஜ
ஸூய யாகத்தைச் செய்தான். இந்த யாகத்திற்கு ஹோதா பகவானான
அத்திரிமஹரிஷி, அத்வரியுவோ பகவானான பிருகுமஹரிஷி, இரண்ய
கர்ப்பனென்றவரே உத்காதா, பிர்மாவே பிர்மத்துவத்தை யடைந்தார்.
அந்த யாகத்தில் ஸகல பாபங்களையும் போக்கடிக்கத்தகுந்த ஷாட்குண
பரிபூர்த்தியுள்ள நாராயணன் தானே ஸபாபதியாயிருந்தார். அவரைச்
சூழ்ந்து ஸபையில் இருந்தவர் ஸநத்குமாரர் முதலிய ஆதிப் பிர்மருஷி
களே. அந்த யாகம முடிந்தபின் அதற்குத் தக்ஷிணையாகச் சோமனான
வன் மூன்று லோகங்களையும் கொடுத்தானென நம்மால் கேட்கப்பட்டிருக்
கின்றது. அத்தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டவர் அச்சபையிலிருந்த
பிர்மரிஷி முக்கியர்களான அவர்களே. பிறகு அச்சந்திரனை, ஸினி,குஹூ
த்யுதி, புஷ்டி, பிரபா, வஸு, கீர்த்தி, திருதி, லக்ஷ்மீ என்ற ஒன்பது
தேவிகளும் வந்தடைந்தனர். இவ்விதமிவர்கள் புடைசூழச் சந்திரனும்
யாகத்தின் முடிவில் அவபிருதமென்ற நீராட்டத்தைச் செய்து ஸம்பூர்ண
ராகவும் எல்லாத் தேவரிஷிகளாற் பூஜிக்கப்பட்டவராகவும் இராஜேந்திர
பதவியில் வீற்றிருப்பவராகவும் எல்லாத் திக்குகளையும் பிரகாசிப்பித்துக்
கொண்டிருந்த வொளியுடன் விளங்கினார். மஹரிஷிகளால் பெருமைப்
படுத்தப்பட்டதும், எவராலுமடைய முடியாததுமான அவ்வைசுவரியத்
தை யடைந்த அச்சந்திரனது புத்தியானது மயங்கிப்போயிற்று. அதனா
லவன் புத்தியும் கெட்டது. அதனாலச்சந்திரன் பரபரத்துப் பிரகஸ்பதி
யின் பாரியையான கீர்த்தியுள்ள தாராதேவியைப் பிரகஸ்பதியை யொரு
பொருட்டாயெண்ணாமலே கைப்பற்றிக்கொண்டான். பின்பு பிரகஸ்
பதிக்காகத் தேவர்களாலும், தேவரிஷிகளாலும் பலதரம் அச்சந்திரன்
வணங்கி யாசிக்கப்பட்டும் அப்பொழுதச்சந்திரன் அத்தாராதேவியை விட
வேயில்லை. ஆகையால் பிரகஸ்பதியானவர் அச்சந்திரனிடம் கோபமு
முடையவரானார். அதுசமயம் பார்த்து அசுராசாரியரான சுக்கிரனும்
தமது சிஷ்யர்களான வசுரர்களுடன் கூட தமது பந்துவான ஆங்கிரஸ
ரென்ற பிரகஸ்பதியின் பக்கத்தைச் சேர்ந்துகொண்டனர். இவ்விதமவ்
விருவர்களுக்கு முண்டான சிநேகத்தினால் உருத்திரபகவானும்



பிர்மசிரமென்ற வஸ்திரத்தோடுகூடிய அஜகவமென்ற சிறந்த வில்லையெடு
த்துக்கொண்டு அப்பிரகஸ்பதிக்கு பக்கபலமாய் வந்துசேர்ந்தனர். மஹாத்
மாவான இந்த ருத்திரபகவானால் எடுக்கப்பட்ட இவ்வஸ்திரத்தினால்
முந்தி யாதொரு அசுரர்களுடைய கீர்த்தியெல்லாம் நாசஞ்செய்யப்பட்
டதோ, அவ்வஸ்திரமே யிது. பிறகப்பொழுது அத்தாரை சம்மந்தமான
பெருத்த யுத்தம் தொடங்கிற்று. அது தேவர்களுக்கு மசுரர்களுக்குமுண்
டாகி இவ்வுலகத்தையே நாசமாக்கிவிட்டது. இவ்விதம் நடந்த யுத்தத்
தின் முடிவில் சில தேவர்களும் துஷிதரென்றவர்களுமே மிச்சமாயினர்.
இவர்களுமசுரர்களால் முறிய வடிபட்டுத் தெறித்தோடி அடிதாங்கமாட்
டாமல் முடிவில் ஆதிதேவனும் சநாதனனுமான பிரமதேவனைச் சரணம்
புகுந்தனர். அதன்பின் பிர்மாவும் சுக்கிரனையும், மூத்தவரான சங்கர
னென்ற உருத்திரனையும், சமாதானம் செய்து பிரகஸ்பதிக்குத்தாரா
தேவியைத் தானே அச்சந்திரனிடமிருந்து விடுவித்துக் கொடுத்தனர்.
கர்ப்பமாயிருக்கும் அத்தாரையைப் பார்த்து அப்பொழுது பிரகஸ்பதி
கூறுகின்றார். ஏ! தாரையே! நீ என்னுடையதான இந்த யோநியில்
வேறு கர்ப்பமொன்றும் தரிக்கக்கூடாது. ஆகையால் கர்ப்பத்தைக்
கீழே விட்டுவிடு என, அத்தாரையும் யோனி யில்லாதவிடத்தில் தனது
கருப்பாசயத்தில் வசித்த கருவை விடும்பொழுது புல்லில் தீபிடித்து
எரிவது போன்ற காந்தியுடன் ஓர் குமாரனுற்பத்தியானான். பிறந்த
வுடன் பகவானான அக்குமாரன் தேவர்களுடைய சரீரத்தையெல்லாம்
தனது காந்தியால் தோற்கடித்தான். அதனால் தேவர்களெல்லாம் சந்
தேகப்பட்டவர்களாக வருமாறு பேசிக்கொண்டனர். அதாவது;—ஏதா
ரையே! உண்மைசொல். இக்குழந்தை சோமனுடையதா? அல்லது
பிரகஸ்பதியினுடையதா? என்றெப்பொழுது தேவர்களால் வினவப்பட்ட
வளானளோ, அப்பொழுது அத்தாரை அது எப்படியோ நான் நன்மை
யும் தீமையும் அறியேன் என்றனள். அப்பொழுது திருட்டுத்தனமாய்ப்
பிறந்த அக்குழந்தை, அவ்வார்த்தையைச் சகியாமல் தாரையைச் சபிக்க
வாரம்பிக்க அதைப்பிர்மா தடுத்துத்தானே நேரில் தாரையைக் குறித்துச்
சந்தேகத்தைப்பற்றித், தாரே! உண்மையைச் சொல் இது யாருடைய
குழந்தை என வினவினர். அதன் பிறகு தாரையும் விரதனும் பிரபுவாயு
முள்ள பிர்மாவைப் பார்த்து, கை கூப்பிக்கொண்டு மஹாத்மாவான
அத்திருட்டுக்குழந்தையைச் சோமனுடையதென்று கூறினள்; பிறகு
உலகத்தைப்போஷிப்பவனும் பிராஜைகளுக்கதிபதியுமான அச்சந்திர

தேவன் அக்குமாரனண்டைவந்து வேதமந்திரங்களால் தலையிலுச்சி முகர்ந்து மகாபுத்திமானான அப்புதல்வனுக்குப் புதனென்ன நாமதேயம் செய்தான். இப்பொழுதும் ஆகாயத்தில் எதிராகவேயிப்புதன் உதயமாகின்றான். பிறகு இராஜபுத்திரியான இளையென்பாளவளிடம் ஐளனென்ற மைந்தனைப் பெற்றாள், இவனே புரூரவனென்பான். இவனுக்கு ஊர்வசி யென்ற அப்ஸரஸ்ஸினிடம் மஹாவீரியமுடைய எழு புத்திரர்கள் ஜனித்தார்கள். அதாற்க இங்கு சோமனானவன் பலாத்காரமாகக் குருபத்தினியைப் புணர்ந்ததால், இராஜயக்ஷ்மாவென்ற குறைவு ரோகத்தால் பீடிக்கப்பட்டவனாய் நாளுக்குநாள் மண்டலகாந்தி குறைந்து போனதின்பேரில் தனது தகப்பனான அத்திரி மகரிஷியையே சரணமடைந்தான். அப்பொழுது மஹாதபஸ்வியான அவ்வத்திரிமஹரிஷியும் சரணமடைந்த சந்திரனது தாபத்தைச் சமனஞ்செய்தார். பிறகு இராஜயக்ஷ்மா ரோகத்தால் விடுபட்டு மறுபடியும் எங்கும் பரவிய காந்தியால் பூர்ணமாய் விளங்கினான். இவ்விதம் கீர்த்தியை விருத்திசெய்யத்தகுந்த சோமனது உற்பத்தியானது கூறப்பட்டது, ஓ! மஹாராஜனே! இவனுடைய வம்சத்தையும் என்னிடமிருந்து கேள். செல்வத்தையும் நோயற்றவாழ்வையும் நீடியவாயுளையும் புண்ணியத்தையும் கொடுக்கத்தக்கதும் கீர்த்தியைக்கைகூட்டிக் கொடுக்கத்தக்கதுமான சோமனுடைய இச்சரித்திரத்தைக் கேட்டுச் சகல பாபங்களினின்றும் விடுபடுகிறான்.

28-வது அத்தியாயம் முற்றிற்று.

## 29-வது அத்தியாயம்.

**வைசம்பாயனர்:**— ஓ! மஹாராஜனே! புதனுடைய புத்திரன் வித்வானான புரூரவனென்பவன். இவன் நல்லகீர்த்தியையுடையவன். விசேஷமான தானங்களைச் செய்தவன். நானாவித யாகங்களை நடத்தியவன், பெருத்த தக்ஷிணைகளை கொடுத்தவன். பிர்மத்தைப்பற்றி வாதிப்பவன், கொடுமையான பராக்கிரமமுள்ளவன். சத்ருக்களால் போரில் வெல்லமுடியாதவன், இன்னுமிம்மஹீபதியானவன், அக்னிஹோத்திரம் இன்னும் பலவிதமான யாகங்களை யெல்லாமேற்படுத்தியவன். உண்மையையே யுரைப்பவன். சுத்தமான புத்தியை யுடையோன். வீரனும் பார்க்க விரும்பத்தக்கவன். எவருமறியாத கல்வியையுடையோன்.



எப்பொழுதும் மூவுலகங்களிலும் தனது கீர்த்தியால் நிகரற்றவன் அப்படிப்பட்ட பிர்மவாதியும் பெருமையுள்ளவனும் தருமநெறியறிந்தவனுமான புரூரவமஹாராஜனை நல்ல கீர்த்தியையுடைய ஊர்வசி என்பவள் தனது மானத்தைவிட்டுத் தனக்குக் கணவனாக வரித்தாள். அதனாலவ்வரசனும அவளோடு பதினைந்து வருஷகாலம் கூடிவசித்தான். பின்னும் 5, 6, 7, 8, 9, 10, வருஷங்கள் வரையில் அழகிய சைத்திரரதமென்ற வனத்திலும் அவ்விதமே மந்தாகினி நதிக்கரையிலும், விசாலமான அளகாபுரியிலும. சிறந்த தோட்டமான நந்தனவனத்திலும், உத்தரகுருக்ஷேத்திரத்திலுள்ள மனோபீஷ்ட பலன்களைகொடுக்கத்தக்க மரங்களுள்ள புண்ணிய ஸ்தலங்களிலும் கந்தமாதனத்தின் தாழ்வரைகளிலும், மஹாமேருவின் வடசாரலிலும், இவைகளன்றி தேவர்கள் ஸஞ்சரிக்குமனேகம் வனங்களிலும் ஊர்வசியுடன் மிகுந்த சந்தோஷத்துடன் சுகித்து வாழ்ந்தான். மஹருஷிகளால் துதிக்கப்பட்ட புண்ணியகரமாகிய பிரயாகை யென்னும் க்ஷேத்திரத்திலிப்பிருதுவீபதியான புரூரவன் இராஜதானியைக் கட்டி அதிலிருந்து இப்பூமியை யாண்டுவந்தான். அவனுக்கு தேவபுத்திரரை யொத்த எழு குமாரர்கள் பிறந்தனர். மஹாத்மாக்களான இவ்வேழுபுத்திரர்களும் சுவர்க்கத்திற் பிறந்தவர்கள். புத்திசாலியான ஆயுஸ், அமாவஸு, தருமசுரூபியான விசுவாயுஸ், சுருதாயுஸ், திருடாயுஸ், சதாயுஸ்' வநாயுஸ், என்பன இவர்கள் பெயர், இவர்களெல்லாம் ஊர்வசியினிடம் ஜனித்தவர்கள்.

**ஜனமேஜயன்:**— பற்பலகதைகளை யறிந்த மஹாரிஷியே! தேவியோ கந்தருவ ஜாதியிற் பிறந்த ஊர்வசி யென்பவள். இவன் மனித ஜாதியிற் பிறந்த ராஜாவை மற்ற தேவர்களை எல்லாம்விட்டு மணம்புரிந்து கொள்ள காரணம் யாது அதை யெனக்கு தாம்கூறுவீர்.

**வைசம்பாயனர்:**—பிர்ம சாபத்தால் பீடிக்கப்பட்டவளாக ஐளனென்ற மனிதனைப் பதியாக வடைந்தாள். அவ்விதமடைந்தும் அப்பதியினிடம் சில ஏற்பாடுகளைத் தன் சாப நிவிருத்திக்காக நிச்சயித்துக் கொண்டனள். அவையாவன:—யாதொரு வஸ்திரம் முதலிய ஆவரணமன்றியிலிருக்குமிவனைப் பார்த்து இவ்வரசனைப்பிரியவோர் காலாவதி. எப்பொழுதும் காமவிருப்பங்கொண்ட பின்பே தன்னிடம் சேரவேண்டும் இதைத்தவருதலிரண்டாவது காலாவதி. எப்பொழுதுமிவளது படுக்கைக்கிருபுறமுமிரண்டு ஆட்டுக்குட்டிகள் கட்டியிருக்கவேண்டும். இவை தவறுவது 3-வது காலாவதி. தினமானமொருவேளை நெய்யையே ஆகா

ரமாக-கொடுத்தல், இது நகரினுடைய 4-வது காலாவதி. இந்த நான்கு ஏற்பாடுகளும் தவறாது செய்து கொடுப்பீராகில் இவை தவருகிற வரையில் உம்மோடு கூடிவசிப்பேனெனத் திட்டம் செய்து கொண்டாள். அவ்விதமே அவளுக்கு அவ்வரசனும் அத்திட்டங்களை யப்படியே நடத்தி வந்தான். இவ்விதம் புரூரவஸ்ஸின் சமீபம் ஊர்வசியென்ற சிறப்புடையோள் வசித்து வருகையில் 59 வருஷகாலங்கள் சென்றன. அது வரையில் இவ்வரசனிடமே சாபத்தால் மோஹித்துப்போயினள். இப்படி மனிதராஜனிடம் ஊர்வசி யென்றவள் மயங்கிக் கிடக்கும் விஷயத்தை காந்தருவர்கள் சகிக்கமாட்டால் எல்லோருங் கூடியாலோசித்தனர்.

கந்தருவர்கள்!— மிகுந்த பாக்கியமுடைய ஓ! கந்தர்வர்களே எப்படியானால் சுவர்கத்திற்கு அலங்காரமான ஊர்வசியானவள் மறுபடியும் தேவர்களை வந்தடைவாளோ, அவ்விதமாலோசியுங்கள். என்றபொழுது அவர்களுள் விசுவாவஸு என்ற பேசுந்திறமையுடையோன் கூறுகின்றான். முன்பு அந்த ஊர்வசி புரூரவன் என்ற யிருவர்களாலு மேற்படுத்திக்கொள்ளப்பட்ட சங்கேதமானது என்னால் கேட்கப்பட்டிருக்கின்றது. அச்சங்கேதம் தவறினால் அப்பொழுதே அவ்வரசனை அவள் விட்டுவிடுவாள். ஆகையால் அவ்வரசன் எவ்விதகாரணத்தால் பிரிவானோ அக்காரணம் முழுமையும் நானறிவேன். இப்பொழுதே நான் சகாயத்தோடு உங்கள் காரியத்திற்காகப் புறப்படுகின்றேன். என்றுரைத்துப் பிரயாகைக் கரையிலுள்ள பிரதிஷ்டானமென்ற அப்புரூரவன் நகரத்திற்கு உடனே சென்று இரவில் அவர்கள் படுத்திருக்கையில் அவள் பக்கத்திலிருக்குமோர் ஆட்டுக்குட்டியைத் திருடிக்கொண்டு மேலே போனான். அவ்வாட்டுக்குட்டிகளுக்கோர் அழகிய புன்னகையுடைய இவ்வூர்வசியென்பாள் தாயைப்போலிருக்கின்றாள். ஆகிலுமச்சமயம் கந்தருவர்களுடைய வரவையும், தனது சாபவிமுக்திகாலத்தையுமறிந்து கொண்டாள். பிறகு அரசனை நோக்கி ஓ! மஹாராஜனே! என்னுடைய குழந்தை திருடப்படுகிறது எனக்கூவினள். அப்பொழுது அரசன் நக்னனாயிருந்தமையால் எழுந்திருந்து வரக்கூடவில்லை. பிறகு அரசனும் தன்மனதில் ஆ!! இது சங்கடம் நாமோ நக்னனாயிருக்கின்றோம், இப்படியே புறப்பட்டால் நக்னனென நம்மைப்பார்த்து நமதுதேவியின் சங்கேதம் கெட்டுவிடும் எனவாலோசித்தான். அதற்குள் அக்கந்தர்வர் மற்றொரு குட்டியையும் கொண்டுபோயினர். இரண்டாவதும் போனவுடன் தேவியானவள் ராஜாவைப்பார்த்து ஓ! மஹாராஜனே! அநாதையினுடைய பொருள்



போல என் குட்டிகளிரண்டும் எவராலேயோ திருடிக்கொண்டு போகப்பட்டன. சீக்கிரம் ரக்ஷியுமென்றனள். அது கேட்டவுடனே அவ்வரசனும் சயனத்திலிருந்தெழுந்து நக்னனாகவே அத்திருடரைப் பிடிக்கத் தாண்டியோடினான். ஆட்டுக்குட்டிகளின்டிகளைப்பிடித்துக் கொண்டு புறப்பட்டு வருகையில் ஆகாயத்திலக்கந்தருவர்கள் பெருத்த மின்னலை உற்பத்தி செய்தனர். அதனாலவ்வரண்மனை யெல்லாம் பிரகாசித்தது, அப்பிரகாசத்தால் நக்னனான அவ்வரசனும் அவ்வூர்வசியினது கண்களுக்குப் புலப்பட்டான். அவ்விதம் புலப்பட்ட நக்னனான அவ்வரசனைக் கண்டு தன்னிச்சைப் பிரகாரமெல்லாமுருவெடுக்கும் வல்லமையுடைய அவ்வூர்வசியாகுமப்ஸரஸ்ஸானவள் உடனே மறைந்து போயினள். ஆட்டுக்குட்டியைத் தேடிக்கொண்டுபோன அரசனும் அப்பொழுது கந்தருவர்களால் விட்டுவிடப்பட்ட குட்டிகளைப் பெற்றுக்கொண்டு திரும்பித்தனதரண்மனை வந்து சேர்ந்தான். அவ்விடத்திலூர்வசியைக் காணாமல் பலவிதமாகத் துக்கித்துக் கதறினான். இப்பூமிமுழுமையு மங்குமிங்குமவளைத் தேடித்திரிந்தான். பிறகு ஒருநாள் மிகுந்த பலமுடைய அவ்வரசன் குருக்ஷேத்திரத்திலுள்ள பிலக்ஷதீர்த்தத்தில் விளங்கும் ஹைமவதி யென்னும் புஷ்கரணியில் ஐந்து அப்ஸரஸ்ஸுக்களாகிற தோழிகளுடன் ஜலக்கிரீடை செய்துகொண்டும் நீராடிக்கொண்டுமிருக்கிற தனது பாரியையான ஊர்வசியைக் கண்டான். அவள் சமீபம் சென்றான். பலவிதமாகப் பரிதபித்தான். அவ்விதம் ஸமீபத்தில் வந்து பரிதபிக்குமவ்வரசனைக்கண்ட அவ்வூர்வசியும் தனது சகிகளைக்குறித்து ஓ! சகிகளே! முன்பு நானெவ்விடத்தில் நீடிய காலம் வசித்திருந்தேனோ அவர்தானிந்த புருஷோத்தமரென அவ்வரசனைச் சுட்டிக்கூறினள். ஓ! ஜநமேஜயனே பிறகு அவ்வரசனது பரிதாபத்தையும் வேஷத்தையும் பார்த்து மற்ற சகிகளும் மிகவும் வருத்தப்பட்டனர். இவ்வளவில் ராஜாவும் ஊர்வசியையணுகி ஏ! எனது பிரியசகியே! என்பிராண நாயகியே! சற்று நில். என்மனம் மிகவும் நொந்திருக்கின்றது. என்மீது மனதுவைப்பாய். கொடுமையில்லாத நல்வார்த்தையிலேயே நிற்பாய். உன்னைக்காணாது இதுவரையில் நானோருன்மத்தன் போலவானேன். சிறிதளவேனும் முந்திய சிநேகத்தை யுணர்வாய். இவ்விதம் முதலிய பலவசனங்களை யவ்விருவருமப்பொழுது பேசிக்கொண்டனர். பிறகு ஊருவசியும் ராஜாவைப் பார்த்து ஓ! அரசனே! என்னோடு ஓரிரவே கூடியிருக்கத்தக்கவர் என்றாள். அதை சம்மதித்து உடனே அவ்வூர்வசியின் வித்தையால் பிரதிஷ்டானமென்ற தன்நகரத்

கிற்கே போய் அங்கு ஓரிரவு அவளுடன் சுகித்தான். பிறகு விடியற்காலை ஊர்வசியானவள் ஐளனென்ற அரசனை நோக்கி ஓ! அரசனே! தம்மால் நான் கர்ப்பவதியானேன். ஒருவருஷத்திற்குப் பிறகு தமக்குப் புத்திரர்களுண்டாகப் போகின்றனர், இதிற் சந்தேகமில்லை. எனக்கூறி மறைந்து விட்டாள். பின்பு ஒருவருஷம் சென்று புத்திரர்களுடன் மறுபடியும் அவ்வூர்வசியானவள் பிரதிஷ்டானம் வந்து ராஜாவினிடம் குழந்தைகளைக் கொடுத்தாள். மேலுமப்பொழுதே ஐளராஜனைக்குறித்து ஓ! ராஜனே! இப்பொழுது என்னுடன் சிலகந்தருவர்களும் வந்திருக்கின்றனர். அவர்கள் தமக்குக் கேட்ட வரனைக் கொடுக்க மனமுடையவர்களாயிருக்கின்றார்கள். ஆகையாலவரிடஞ் சென்று அக்கந்தர்வர்களை நோக்கி மஹாத்மாக்களான அவர்களோடு சமத்துவத்தை வேண்டிக் கொள்ளும் எனவும் மொழிந்தனள். அதே விதமாக அவ்வரசனு மக்கந்தருவரிடஞ் சென்றுகேட்க அக்கந்தருவர்களும் அப்படியே தருகிறோமென சம்மதித்து ஓர் சிறிய பாத்திரத்தில் அக்னிதேவனைப் பிரதிஷ்டைசெய்து மிகவுமடக்கமாய் அவ்வரசனிடம் கொடுத்து ராஜனை நோக்கி ஓ! அரசனே! நீ இதைக்கொண்டு ஓர் யாகஞ் செய்தால் எங்களுடைய உலகத்தையடைந்து எங்களோடு சமமாகலாமென்றனர். அவ்விதமே யொப்புக்கொண்டு அப்பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டதைப் பரிசுத்தமான வோரிடத்தில் வைத்துவிட்டுத் தனக்குக் கிடைத்த குழந்தைகளை அரண்மனையிற் கொண்டு போய் ஸுரக்ஷிதமாய் வைத்துவிட்டுத் திரும்பிவந்து அவ்வக்கினி பாத்திரத்தைப் பார்க்கையில் அவ்விடத்தில் அப்பாத்திரத்தைக் காணவில்லை. ஆனாலவ்விடமோர் அரசமரத்தைக் கண்டான். அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு அக்கந்தர்வர்களிடமிச்சங்கதியைத் தெரிவிக்க அவர்களும் அவ்வரசனிடமிருந்து அரணிக்கட்டையைச் செய்வித்து அவ்வரணியினிடமாகக் கடைந்து அக்கினியை யெடுக்கவும் அதன்மூலமாக அந்தயாகத்தைச் செய்யவும் உத்தரவளித்தனர். பின்பு அதேப்பிரகாரமவ்வரசனும் அவ்வரசினிடமிருந்து அரணியைச்செய்வித்து அதைக்கடைந்து சாஸ்திரவிதிப்பிரகாரமாக அக்கினியை யெடுத்து அதை மூன்றாக்கினான். அவைகளாலவ்வரசன் யாகத்தையுஞ் செய்தான். இவ்விதம் அவ்வரசன் பலவிதங்களான யாகங்களால் தேவர்களை திருப்தி செய்வித்து முடிவில் கந்தர்வருடைய உலகத்தை யடைந்தான். ஓ! ஜனமேஜயனே இந்தப்பிரகாரமாக கந்தருவரிடமிருந்து புரூரவஸ் என்ற மஹாராஜன் ஒன்றாயிருந்த அக்னியை மூன்றாக்கினான். இதுவே திரேதாக்னி



யென்பது. இவ்வரசனிவ்விதம் செய்யும் முன் ஒரேஅக்னிதான். ஓ! ஜனமேஜயனே! இப்படிப்பட்ட மகிமையுடன் ஐளனென்ற புரூரவஸ் மஹாராஜன் மிகவும் புண்ணியத்தைக் கொடுக்குந் தன்மையுடையதும் மஹரிஷிகளாற் றுதிக்கப்பட்டதும் கங்கைக்கு வடகரையாயுமுள்ள பிரயாகை யென்ற க்ஷேத்திரத்தில் கட்டப்பட்டப் பிரதிஷ்டானமென்ற நகரத்தில் இராஜ்யபாரத்தைச் செய்துகொண்டு பெருத்த கீர்த்தியோடு நீடிய காலம் வாழ்ந்திருந்தான்.

29-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 30-வது அத்தியாயம்.

**ஜனமேஜயன்:**—ஓ! பரந்த வறிவையுடைய மஹரிஷியே மகாபுத்திசாலியாயும், புதனுடைபௌத்திரராயுமுள்ள எந்த புரூரவஸ்வின் குமாரர் என்றுக் கேட்கப்பட்டாரோ, அவர் ஊர்வசியினிடம் பிறந்தும் க்ஷத்திரியத்தன்மையையடைந்ததெப்படி? மேலும் அத்திரியின் குமாரனான சந்திரனுக்கு பாதாரத்தைத் தீண்டியதாலுண்டாகிய பாபத்திற்காகஇவ்வுலகத்தில்எப்படிப்பட்டப் பிராயச்சித்தம் நிச்சயிக்கப்பட்டது. அதையும் பிராம்மணரென்ற வரைப்படிப்பட்டவர். அவருடைய லக்ஷணம்யாது. அதையுமெனக்குச் சொல்வீர்.

**வைசம்பாயனர்:**— ஓ! ஜனமேஜயனே! அபூர்வமான இவ்விஷயங்களையுனக்குச் சொல்லுகின்றேன் கேள். ஈசுவரன் முகம் கை தொடை கால்களினின்றும் பிராம்மணர் முதலியோரைப்படைத்தார். உத்தமாங்கமான முகத்தினின்றுதித்ததாலும், முதல் முதலுண்டானதாலும், வேதமோதுவதாலும்,அதையோதிவைப்பதாலும் இப்படைப்புகளுக்கெல்லாம் நியாயமாகப் பிராம்மணன் உயர்ந்தவன். தேவர்களும் பிதுருக்களுமிவருடைய வாக்கினாலேயே ஹவ்யத்தையும், கவ்யத்தையுமங்கீகரிப்பதாலிவரைவிட மேற்பட்டவருண்டோ. பிராம்மண ஸ்திரீயினிடம் பிராம்மணனுக்குப் பிறந்து கர்ப்பாதானம் முதலிய கருமங்களாகிய ஸம்ஸ்காரங்களாற் சீர்திருத்தத்தை அனுதியாகவுடையவன் பிராம்மணனாவான். இவ்விதமே க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்றவர்களும் அவரவர்கள் ஸ்திரீகளிடம் அவரவர்களுக்குப் பிறந்தால் அவரவராவார். ஓதுவித்தலுமோதுதலும் யாகஞ்செய்தலும் செய்வித்தலும், ஈதலும்பெறுதலு

மாகிய இவ்வாறு கருமங்களும் பிராம்மணர்களுக்குரித்தானவை. துவிஜர்களுக்குள்ளுத்தமரான இப்பிராம்மணர் வேதத்தையே ஓதிக்கொண்டிருக்கவேண்டும். அதனாலேயே எல்லாத்தவமும் செய்யப்பட்டது போலாகும். எனெனில், வேதாப்பியாசமே சிறந்ததவமெனக் கூறப்படுகின்றது. இதிகாசம், புராணம், புருஷவாக்கியப் பிரமாணம், அங்கம், உபாங்கம், இவைகளையறிந்தவனே வேதத்தினர்த்தத்தை யறியத்தகுந்தவனாவான். பாணினி முதலிய ரிஷிகளாலியற்றப்பட்ட சாஸ்திரங்களைப்படித்து இதிகாஸ புராணங்களுடையவும், வேதங்களுடையவும் புருஷவாக்கியப்பிரமாணங்களை எப்பொழுதும் நன்றாயறிந்து அவைகளை மற்றோர்க்கு எவன் தெளியக் கூறுகின்றானோ அவனே வேதாப்பியாசத்தின் பயனையநுபவிக்கின்றான். கேட்பவனுமிவைகளிலாதரவும் பக்தியுமின்றி யிருப்பானேயாகிலவன் நரகத்தையே யடைவான். பிராம்மணன் வேதபாடத்தை யோதியதால் மாத்திரம் சந்தோஷிக்கக்கூடாது. கேவலம் பாடமாத்திரத்தால் சேற்றிலகப்பட்ட பசுபோல், துன்பப்படுவான். இவருக்கும் பிறந்தபின்பு செய்யத்தக்கது சாஸ்திரவிதிப்படிக்குள்ள ஜாதகர்மமென்பது, பத்தாவது தினத்திலாவது பன்னிரெண்டாவது தினத்திலாவது நாமகரணஞ் செய்யத்தக்கது. ஆறாவது மாதத்தில் அன்னப்பிராசனமென்ற கருமந்தொடங்க வேண்டும் (அன்னம்-சோறு, பிராசனம்-ஊண்). பிறகு அவரவர் குலக்கிரமம்போல சிகை யென்ற குடுமி வைக்கும் கர்மம் செய்விக்க வேண்டும். ஐந்தாவது வயது வந்தவுடன் எழுத்துப்பயிற்சி செய்விக்கத் தொடங்கவேண்டு மெனக்கூறப்படுகின்றது. ஏழாவது அல்லது எட்டாவது வயதில் பிராம்மண குமாரனுக்குபநயன மென்ற கர்மஞ் செய்ய வேண்டும். (உப-வேதமோதுவதற்காக குருவினண்டை, நயனம்-கொண்டுபோய்ச்சேர்ப்பது) அப்பொழுது பஞ்சநூலால் ஒன்பது வடமுள்ள ஓர் சூத்திரத்தை அம்மாணுக்கன் செய்யும் வேதமோதுதல் முதலிய யக்ஞத்திற்காக உபவீதமாக அவனிடது தோளில் வலதுகையைத்தூக்கிச் சாற்றுவிக்கவேண்டும். இதுவே யக்ஞோபவீதம். (யக்ஞ-உபவீதம்) அத்துடன் வில்வமரத்தினின்றாவது பொரசுமரத்தினின்றாவது ஒடித்துக் கொண்டுவரப்பட்ட ஓர் தண்டத்தை கையிலும் முஞ்சிப்பில்லாலியற்றப்பட்ட மேகலையை யரையிலும் கிருஷ்ண மிருகத்தின் அஜினமாகிற தோலையப்பூணூலோடு, தோளிலுமெப்பொழுதும் தரித்துக்கொண்டே வேதமோதவேண்டும். அப்பொழுது தன் குருவையும் சூரியனையுமே பூஜித்துக் கொண்டு இரண்டு காலமும் அன்னபிக்ஷை யெடுத்து அதைக்குருவினிடம் தெரிவித்து அவருக்குமனதால் பூஜைசெய்ததன் பிறகு தான்



உண்ண வேண்டும். கருப்பாதானம் முதலிய கருமங்களை யெவன் சாஸ்திரப்படி நடத்திவைக்கின்றானோ அவ்விப்பிரனும், அன்னங்கொடுத்து ரக்ஷிக்கின்றானோ அவ்விப்பிரனும் குருவெனப்படுவன். எவன் ஒருவனை மாணாக்கனாக வங்கீகரித்து உபநயனஞ்செய்வித்து வேதத்தையு மோதுவித்து அதனர்த்தத்தை யுமுபதேசிப்பானோ அவனை ஆசாரியனெனக் கூறுவர். வேதத்தின் சிலபாகத்தையாவது, அதனங்கங்களையாவது ஜீவிக்காக யெவன் படிப்பிக்கின்றானோ அவன் உபாத்தியாயனெனப்படுவன். உபாத்தியாயனைக்காட்டிலும் ஆசாரியன் பத்துமடங்கு மேற்பட்டவன். ஆசாரியனைக்காட்டிலும் நூறுமடங்கு மேன்மைபொருந்தியவன் பிதா. தந்தையைவிட வாயிரமடங்கு இவர்களைக்காட்டிலும் மேற்பட்டவள் தாயார். பிராம்மணனானவன் பணிவிடையால் குருவினிடமிருந்து சாஸ்திரப்பிரகாரம் வித்தையை யடைந்து அவரால் உத்தரவுபெறப்பட்டவனாகச் சாஸ்திர விதிப்பிரகாரம் விரதசமாபனஞ்செய்து அவபிருதஸ்நானஞ் செய்யக்கடவன். அப்பொழுது அக்குருவிற்குத் தக்ஷிணையாக வோர்பசுவைத் தானஞ் செய்யவேண்டும். இவ்விதம் குருவானுத்தரவளிக்கப் பெற்று நல்ல லக்ஷணம் பொருந்தியவளும் தன்பந்து ஸம்பந்தமுள்ளவளுமான வோர் ஸமானஜாதிப் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளவும். தன்பந்து குலத்திற் சேராததும் தீர்க்க ரோகமுள்ளதுமான பெண்ணையும் விவாஹம் செய்யக்கூடாது. மந்திரோபதேசம்பெற வேண்டிய விஷயத்திலும், யாகாதிகள் சகாயமாயிருந்து செய்விக்குமார்த்துவிஜ்யத்திலும், விவாஹகாரியத்திலும், சிராத்தபோஜனகாரியத்திலும், தத்தம்பந்துக்களுக்குள்ளேயே வேண்டுமென மனு முதலானோர் கூறும் சாஸ்திரம். மணம்புரிந்த பின்பு வேதவிதிப்படி யாகங்களைச் செய்யக்கடவது. இப்பிராம்மணர் தினந்தோறும் செய்ய வேண்டியவையாவன:— விடியற்காலையில் பிராம்மமுகூர்த்தத்திலெழுந்திருந்து அடங்கியமனதுடன் ஸகலத்திற்கும் பிரபுவாயும், ஸகலபாபங்களையும் போக்குகின்றவராயுமுள்ள ஸ்ரீமந்நாராயணனை தியானஞ்செய்து படுக்கையினின்றெழுந்து தனதாசிரமத்திற்குத் தென்மேற்கு மூலையாய்ப் போய் பிர்மரந்திரமாகிறதலையையும் முகநாசிகளையும் மேல்வஸ்திரத்தால் மூடிக்கொண்டு தனதுபூணூலைத் தாவடமாயாக்கியதை எப்பொழுதும் கங்கை வசிக்கும், பரிசுத்தமான வலதுசெவியில் வலமாகச்சுற்றிப் பூமியண்டைபோய் கைதட்டிப் பூமியை மனதாலிடத்திற்காக வேண்டியதன் மேல் புல் வைக்கோல் சருகு முதலியவைகளைப் பரப்பி அதன்மேல் குந்தியிருந்து மௌனமாகயாரையும் பாராமலும்

நன்மையைச் சிந்திக்காமலும், பரிசுத்தவஸ்துக்களைப் பாராமலும் மலமூத்திரங்களை விடவேண்டும். பிறகு கோல்களாற் றுடைத்தெழுந்து மண்களையிரண்டு பாகமாக்கி யதிலொருபாகத்தால் ஆக்கியெடுக்கப்பட்ட ஜலத்தைக் கொண்டு மண்ணைச்சேர்த்தே சௌசம் செய்து கொள்ளவேண்டும். அதன்பிறகு காற்றலங்களையும் கைத்தலங்களையும் மற்றோர்பாகத்தின் மண்ணைக்கொண்டு ஜலத்தோடு சுத்தி செய்யவேண்டும். அதற்குப்பிறகு சுத்தஜலத்தால் கைகளையலம்பிக்கொண்டு வாயையலம்பிக் கொப்பளிக்கவேண்டும். அதனுடனிரண்டுதரமாசமனம் செய்து பரிசுத்தனாய் ஸ்நானஞ்செய்வதற்குச் சங்கற்பஞ்செய்து கொண்டு பெரியோர்கள் தெய்வங்களிருக்கும் ஜலத்திலிறங்கி வாய் மூடி மூன்றுதரம் முழுகியெழுந்து ஆசமனம்செய்துப் புரோக்ஷணஞ்செய்துக்கொண்டு ஜலத்தில்முழுகிக்கொண்டே தனது இருதயத்தில் க்ஷேமகாரனான நாராயணனை தியானித்து வெளிக்கிளம்பி சூரியனிடமுமவனையே தியானித்து அவனுக்கர்க்கியம் கொடுக்க வேண்டும். பிறகு கரையேறி உலர்ந்த வஸ்திரத்தாற்றலை துவட்டிப் புதிய வஸ்திரம் தரித்து ஆசமனம் செய்துப் புரோக்ஷணம் பிராசனம் முதலிய மந்திரங்களாற்றன்னை உள்ளிலுஞ் சுத்தி செய்து கொண்டு காயத்திரியால் மூன்றர்க்கியங்களைக்கொடுத்து அன்பாபபரிகாரத்திற்காக பூப்பிரதக்ஷணஞ் செய்து தர்ப்பணங்களையுஞ் செய்யக்கடவன். பிறகு வேதமாதாவான காயத்திரியை மனதடக்கி ஆயிரந்தரம் ஜபித்து அவளை விஸர்ஜனம் செய்து பின்பு அம்மந்திரத்திறுக்கூறிய சூரியனைச் சாஸ்திரப்படி உபஸ்தான மந்திரப்படி தொழுது 2-வது முகூர்த்தத்தில் ஔபாஸனஞ் செய்ய வேண்டும். 3-வது முகூர்த்தத்தில் வேதத்தையு மதனங்கங்களையு மோத வேண்டும். பிறகு புஷ்பம் முதலிய பூஜா திரவியங்களை ஸம்பாதித்து தேவஸ்தானத்தில் வைத்துத் தனது யோகக்ஷேமத்தின் பொருட்டுத் தேவனை வேண்டியதன் பின் பூஜா நிமித்தமாக மறுபடியும் ஸ்நானாதி மத்தியான காலத்திற் செய்யத்தருந்த கிரியைகளை நடத்தவேண்டும். அதாவது ஸ்ரீ ஹரியை புருஷஸூக்த மந்திரங்களாலு மஷ்டாக்ஷரத்தாலும் ஆவாஹனம் முதலுத்வாஸனம் வரையில் பூஜிப்பதேயாம். இவ்விதம் பூஜித்து அவரவர் விதிப்படி வைசுவதேவத்தைச் செய்து அதிதியாய் வந்த வந்தனரையும் பூஜித்துப் பிறகு கிரமமாகத் தானும் போஜனஞ் செய்யக்கடவன். 6-வது, 7-வது முகூர்த்தங்களி லிதிகாஸ புராணங்களாற் காலத்தை நன்மையாய்க் கழித்து அதன்பிறகுத் தாம்பூலத்தை ஸேவிக்கக்கடவன். மறுபடியும் சாயந்திரமும் மேற்கு ஸந்தி



காலத்திலும் காலைசந்திபோலப் புரோக்ஷணம் அர்க்கியம் ஜபம் உபஸ்தான மிவைகளாலீசுவரனைச் சோம்பலின்றி வழிப்பட்டு ஔபாஸனமும் செய்யவேண்டும். பிராம்மணஜாதியிற் ஜனித்தவர்களுக்குள் ஓதியுணர்ந்தவர் பெரியோர். ஓதியுணர்ந்தவருள் சந்தேகந்தெளிந்தவர் பெரியோர். இவருள் அனுஷ்டானமுடையோர் பெரியோர். இவருள்ளும் பிரம்மவாதிகள் சிறந்தவர். ஆகையாலுலகத்தில் பிரமவாதிகளான பிராம்மணரே தானத்திற்குத்தமமான பாத்திரமென எப்பொழுதும் சம்மதிக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் தனது குருவிற்குச் செய்யப்படும் தானமே மேன்மை பொருந்தியதெனக் கூறப்படுகின்றது. மாதாவிற்காவது பிதாவிற்காவது பிராதாவிற்காவது தங்கைத் தமக்கைகளுக்காவது மருமகன்களுக்காவது அம்மானுக்காவது அத்தைக்காவது தரித்தரர்களான பந்துக்களுக்காவது எந்தவுபகாரம் செய்யப்படுமோ அது மிகவும் சிறந்தது. அதாவது:—தாய்தந்தைமுதலியோர் உடுத்த வஸ்திரங்கூட யில்லாது கஷ்டப்படும் பொழுது அவர்களைக் கவனியாமல் மற்றவர்க்குச் செய்யுந்தானம் பயனைத் தரத்தக்க தல்லவென்பதின் கருத்து. எவ்விதத்திலாவது வேதத்தை யறிந்தவருக்கு கொடுக்கப்பட்டதே அக்ஷயமாகும். தகப்பனைக் காட்டிலும் தாயாருக்குச் செய்யும் முதவி ஆயிரம் மடங்கு சிறந்தது. தனக்குச் சமீபத்தில் ஓதியவனான பிராம்மணனிருக்க அவனைவிட்டு மற்றவனுக்குத் தானத்தையாவது ஹவ்ய கவ்யத்தையாவது கொடுத்தால், தானுதிகளைச் செய்தவனுடைய ஏழுதலைமுறையை யவனையதிக்கிரமித்த பாபம் கொளுத்திவிடும். ஒவ்வோர் கருமத்திலும் தானமென்பது பிராம்மணனுக்கு கொடுத்தால் கூறியபயனும், பிர்மாவிற் கிரண்டுபங்குபயனும், வேதமோதியவனுக்கு லக்ஷம்மடங்கு பயனும், வேதவேதாந்தங்களைக் கரைகடைந்தவனுக்கு அளவில்லாத பயனுமுண்டாகும். மஹாபாதகம், உபபாதகம் முதலியவைகளுக்கேற்பட்டப் பிராயச்சித்த சாஸ்திரங்களெல்லாம் கர்மயோக்கியமான பூமியில் ஜனித்த மனிதர்களுக்கே அதிகாரமுள்ளவை. ஓ! ராஜனே! சுவர்க்கத்தில் வசிக்கும் தேவர்களுக்குச் சாஸ்திரங்களிலதிகாரமில்லை. இதுவரையில் பிராம்மண கிருத்தியம் சுருக்கமாய் கூறப்பட்டது. வைராஜனென்ற மனுவின்குமாரத்தியான இளையென்றவளுக்கும் சந்திரராஜமகனான புதனென்றவனுக்கு மைளனென்றவனுண்டானான் இவன் தனது மாதாமஹனான மனுவின் சம்பந்தத்தால் க்ஷத்திரியனான். இவனது பீஜத்திற்குப் பிறந்தவராகையால் ஊர்வசியின் குமாரரும் க்ஷத்திரியரே. ஆகையால் ஊர்வசியின் ஸம்பந்தத்தைப்

பற்றிய சந்தேகம் நீக்கப்பட்டது. சந்திரனது பரதார கமனஞ் செய்த பாவமானது மிகவும் பலமுள்ளதாயினும் அத்திரிமஹரிஷியின் மஹிமையால் தகுந்த பிராயச்சித்தங்கொண்டு சுத்தம் செய்யப்பட்டது. இவ்விதம் சுத்தப்பட்ட சசாங்கனும் க்ஷயரோகத்தினின்றும் விடுபட்டவனாகவும் எல்லா உலகங்களால் பூஜிக்கப்பட்டவனாகவுமானான்.

30-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 31-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— இளையென்ற புரூரவஸ்ஸின் குமாரர்களான அவ்வனைவரும் தேவலோகத்தில் பிறந்தவர்களானதால் மஹாத்மாக்களான தேவகுமாரர் போல விளங்கினர். அவர்கள் பெயர்களாவன:— புத்திசாலியான ஆயுஸ், அமாவஸு, விசுவாயுஸ், தர்மாத்மாவான சுருதாயுஸ், திருடாயுஸ், வநாயுஸ், சதாயுஸ் என்பனவாம். இவர்களெல்லாம் ஊர்வசியினிடம் ஜனித்தவர்கள். இவர்களுள் மூத்தவனான அமாவஸுவின் புத்திரன் நக்கனை ஜயித்த பீமராஜன். இப்பீமனுடைய புத்திரன் சுவர்ணகாந்தியுள்ள ஸ்ரீமானென்ற வரசன். இவனுக்கு வித்துவான் என்ற மஹாபலிஷ்டனான ஸுஹோத்திரன் என்றவன் குமாரன். இவனுக்கு ஜன்னு என்றவன் குமாரன். இவன் கேசினியின் கர்ப்பத்திலுண்டானவன். எவன் ஸர்வமேதமென்ற பெருத்தயாகத்தைச் செய்தவனோ, எவனைக்கங்காதேவியானவள் தனக்குப்பதியாகவேண்டுமென்று விரும்பினளோ, அப்படிப்பட்ட ஸுஹோத்திரனென்ற ஜன்னு மஹாராஜனும் ராஜரிஷியுமானவனிவனே. அவ்விதம் விரும்பிய கங்கையை இந்தஜன்னுவென்ற ராஜரிஷி சம்மதியாததால் அவ்வரசனுடைய யாகஸபையைத்தன்பிரவாக ரூபமான ஜலத்தினால் நனைக்கவாரம்பித்தாள். அப்பொழுதவள் அநிஷ்டகாரியத்தைப்பார்த்து இந்த ஜன்னுவும் மிகுந்தகோபங்கொண்டவனாகக் கங்கையை நோக்கி ஏ! கங்கையே! உன்னுடைய இந்தப்பிரயத்தினமானது பயனற்றதாகும். இதோ உன்னைக்குடித்து விடுகிறேன். உனது பாபத்திற்குத் தகுந்த பயனையனுபவிக்கப்போகின்றாய் எனப்பலவாறு கூறி முடிவில் அவ்வெள்ளம் முழுமையையும் தனது தபோமகிமையாலிருந்தவிடம் தெரியாமல் குடித்துவிட்டார். அவ்விதம் ராஜரிஷியான ஜன்னுவால் குடிக்கப்



பட்ட கங்கையை அங்கிருந்த மஹரிஷிகளெல்லாம் பார்த்து இருவரையும் சமாதானித்து அக்கங்கையை இவ்வரசனுக்குப் புத்திரியாகும்படி செய்வித்தனர். இதனால் அக்கங்கைக்கு ஜாஹ்னவியென்ற பெயருண்டாயிற்று.

பிறகு சிலகாலஞ் சென்று யுவநாசுவ ராஜனுடைய மகளான காவேரியென்பாளை இந்தஜன்னுமகா ராஜன் மணம்புரிந்துகொண்டான். இக்காவேரியானவள் அக்கங்கையின் பாதியம்சத்தால் பிறந்தவள். அதெவ்விதமெனில்:—ஒருக்கால் யுவநாசுவர் கங்கையைச் சபிக்க அச்சாபத்தால் அக்கங்கையும் தனது பாதிபாகத்தால் காவேரியென்ற பெயருடனவ்வரசனிடமே ஜனித்தாள். நதிகளுட் சிறந்தவளாயும் ஜன்னுவின் பாரியையாயும், மாசற்றவளாயுமுள்ளவளிக் காவேரியென்பாள். காவேரியென்பவளிடம் ஜன்னுராஜன் தருமசீலனான ஸுநஹனென்றப் பிரியமான குமாரனையுற்பத்தியாக்கினன். அவனுடையமைந்தன் அஜகனென்றவன் அவன்புத்திரன் பலாகாசுவனென்றவரசன். அவன் எப்பொழுதும் வேட்டையிற் பிரியமுடையவன். அவன்குமாரன்குசனென்றவன். அக்குசனென்ற ராஜனுக்கு தேவகாந்தியுள்ள நான்கு மைந்தர்களுண்டானார்கள். குசிகர், குசநாபர், குசாம்பர், மூர்த்திமான் என்பனவவர் பெயர். அவர்களுள் குசிகரென்பவர் இந்திரனுக்குச் சமமான புத்திரனையடைய வேணுமென்ற வெண்ணத்துடன் கடுமையான தவம் செய்தார். அத்தவத்தின் உக்கிரம் பொருக்கமாட்டாமல் இந்திரனுமவரிடம் ஜனித்தான். அதன் விபரமாவது;- ஆயிரம் வருஷங்கள் வரையிலதேவிதம் தவம்புரிந்துவரும் சமயத்திலிந்திரனு மவரைவந்து பார்த்தான். பிறகு மிகவுமுக்கிரமான தவவலிமையை அக்குசிகரிடம் கண்டு முடிவில் தனது அம்சத்தையே அவருக்குப் புத்திரனாகப் பிறக்க வேண்டிய விஷயத்தில் நிச்சயித்தான். அம்மைந்தனே காதிராஜனென்ற கௌசிகர். பௌருகுத்ஸியென்ற அவரது பாரியையிட மிக்காதிராஜன் பிறந்தது. இக்காதிராஜனுடைய மகன் விசுவாமித்திரன். இவருக்கு விசுவாதனெனவும் பெயருண்டு. மேலும் விசுவகிருத், விசுவஜித், என்றிருமக்கள்களும் ஸத்தியவதியென்ற வோர்புத்திரியுமுண்டாயின. காதியின் பெண்ணான இவள் சத்தியவதியென்ற பெயரால் புகழ் பெற்றவள். அவளைக் காதி என்றவர் ருசீகர் என்ற பிருகு புத்திரனுக்கு மணஞ்செய்து கொடுத்தார். அப்பார்க்கவனாகின்ற ருசீகருமவளுக்கு மிகவுமிஷ்டராகவேயிருந்தார். ஆகையால் புத்திரசந்தானத்திற்காக வோர் சருவென்ற மந்

திரங்களாற் செபிக்கப்பட்ட இரண்டு வஸ்துக்களை காதிராஜனுக்கும்
தனக்குமாக வெவ்வேறாகவேற்படுத்தினர். ஜபங்கள் நிறைவேறியபின்
அவ்விரண்டையுமெடுத்துப் பார்க்கவரான ருசீகர் தனது மனைவியான
ஸத்தியவதியை யழைத்து ஏ! நாயகி! இச்சருக்களிரண்டிலிது உன்
மாதாவானுபயோகிக்கத்தக்கது. இது உனக்கு. அதில் மிகுந்தபராக்
கிரமுடையவனும், க்ஷத்திரியர்களுக்குள் சிரேஷ்டனும், உலகத்தி
லெந்த க்ஷத்திரியர்களாலும் வெல்லமுடியாதவனும், எந்தக்ஷத்திரிய ரா
ஜனையும் கொல்லத்தக்கவனுமான புத்திரன் ஜனிப்பான். ஏ! கல்லி
யாணி! உனக்குமிந்தச் சருவின் மகிமையால நல்ல மனோபலமும்
தவத்திற்கு இதி போன்றும் விகாரப்படாத அடக்கமான மனதை
யுடையதும் பிராம்மணஜாதிக்குருத்தமுமான சற்புத்திரனுண்டாவான்
என்றிவ்விதமுரைத்துவிட்டுப் பிறகு அந்த ப்ருகு நந்தனரான ருசீகமக
ரிஷி தவத்திற் ப்ரியமுடையவராய் தபோவனத்தைக் குறித்துப் போயி
னர். அப்பொழுது காதிராஜனும் தனதுமனைவியுடன் ருசீகருடைய
ஆசிரமத்திற்கு தீர்த்தயாத்திரை செய்யும் பிரசங்கத்தால் தனதுபுத்திரி
யையும் பார்த்துப் போகலாமென்றவெண்ணத்துடன் வந்து சேர்ந்தனர்.
அப்பொழுது ஸத்தியவதியானவள் அந்தரிஷி கொடுத்த இரண்டு
சருவையுமெடுத்துத் தனது தாயினிடம் கொடுத்தாள். அவைகளைப்
பெற்ற மாதாவும் தெய்வகதியால் தவறி யவைகளையும் யோசிக்கும்பொ
ழுது தன்னுடையதைத் தனதுமகளுக்குக் கொடுத்து மகளுடையதைத்
தானுபயோகித்து விட்டனள். பிறகு ஸத்தியவதியும் க்ஷத்திரியர்களுக்
கெல்லாமந்தகமாயும் அதி கோரமாயுமுள்ள கர்ப்பத்தைத் தனதுஜ்வலிக்கி
ன்றதேகத்தால்வகித்தனள். பிறகொருநாள்ருசீகரிவளைப் பார்த்துச் சந்தே
கித்து யோகத்தியானத்தினாலுண்மையை யறிந்து உத்தம சௌந்தரிய
முள்ள தனதுமனைவியை நோக்கி, அப்பிராம்மண சிரேஷ்டன் கூறியதா
வது. ஏ! கல்யாணி உன் மாதாவாலேமாற்றப்பட்டாய் சருவின் மாற்றத்
தால் உனக்கு கொடுமையான வினைகளையுடையவும் அதிக கொரோ
சித்தனும் அதிபயங்கரனுமுள்ள புத்திரன் பிறக்கப் போகின்றான்.
அவ்விதமே உனக்கு பிர்மநிஷ்டனும் தவத்தையே தனமாகவுடையவ
னுமுள்ள தம்பியும் ஜனிக்கப்போகின்றான். எல்லாவிதமானப் பிர்ம
தேஜஸ்ஸையும் என் தபோமஹிமையால் அச்சருவில் சேர்க்கப்பட்டிருந்
தது. இவ்விதம் கணவனாலுரைக்கப்பட்ட ஸத்தியவதியு மப்பொழுது
தனதுபதியைக் குறித்து இவ்விதமுள்ள கொரோனும் பிராம்மணியமில்
லாது மிகவும் கெட்டதாயுமுள்ள புத்திர னெனக்குண்டாகாமலிருக்க



வேண்டுமென மன்றாடி வேண்டிக்கொண்டனள். அதைக்கேட்ட ருசீக
ருஷியும் ஸத்தியவதியை நோக்கி ஏ நாயகி! அவ்விதம் பிராம்மணாய
சமமான புத்திரனுனக்குண்டாக வேண்டுமென என்னால் சங்கற்பிக்கப்பட
வில்லையே! உக்கிரமான வினைகளையுடையக்ஷத்திரிய குமாரனது பிதாவிற்
கும் மாதாவிற்கு மாசவல்லவா என்று லேற்படுத்தப்பட்டதென்றார். இதை
க்கேட்ட ஸத்தியவதி மறுபடியும் பர்த்தாவைநோக்கிப் பணிந்து ஓ! மஹ
ரிஷியே! தாமிச்சித்தால் இவ்வுலகத்தை யெல்லாம் படைக்க வல்லவராச்
சுதே, அப்படியிருக்க இப்புத்திரனைச் சரிப்படுத்துவது பிரயாஸமா,
எனக்கு எப்படியாவது வைராக்கியத்தை யுருவமாகவுடையதும், நேரான
தன்மையுடையதுமான புத்திரனைக் கொடுக்கவேண்டுமெனவும் பௌத்தி
ரனுக்கு வேண்டுமென்று விச்சருவின் குணமமையட்டுமென வேண்
டிக்கொண்டனள். அவ்விதமுள்ள அச்சத்தியவதியின் பரிதாபத்தையும்
மனதையும் கண்டு முனிவரிரங்கி புத்திரனுக்குப் புத்திரனை பௌத்திர
னிவ்விதமே ஜனிப்பான். புத்திரன் மட்டில் பிர்ம நிஷ்டனாய் ஜனிப்
பானென வரங்கொடுக்க ஸத்திவதியும் பிரபுவே எனக்கும் தமக்குமவ்
விதமேயாகட்டுமென சம்மதித்தனள். மேலும் இதைவிட வேறுவழி
யில்லை யெனவும் ஸத்தியவதி யொப்புக்கொண்டாள். பிறகு ஸத்திய
வதியின் தபோபலத்தினால் ரிஷியும் கலந்து சம்மதித்து திருப்தியடைந்து
ஸத்தியவதியைநோக்கி ஏ! கல்யாணி இவ்விதமே யாகும். புத்திரனா
லென்ன பௌத்திரனாலென்ன விசேஷபேதம் யாதொன்றுமில்லை
எவ்விதத்திலும் சருவின் மான்மியம் தவறாதுபுத்திரனிட மொளித்திருந்
து பௌத்திரனிட வெளிப்படுமென்றனர்.

பிறகு சிலகாலஞ் சென்று ஸத்திவதியுமோர் குழந்தையைப்
பெற்றாள். அக்குழந்தையானது சமரூபமாயும் தவத்தின் வடிவமா
யும் தவத்திலேயே ப்ரிய முடையதாயுமிருந்தது. அக்குழந்தைக்கு ஜம
தக்கினியென நாமதேயஞ் சாற்றினர். ருசீகமஹரிஷியால் விஷ்ணுமந்தி
ரங்களைக் கொண்டு ஜபித்த ஸாத்துவிகமான வோர்சருவும், உருத்திர
மந்திரங்களைக் கொண்டு தாமதமா யோர்சருவும் வைஷ்ணவரௌத்தி
ரங்களால் ஏற்படுத்தப்பட்ட, அவைகள் தெய்வகதியாய் மாறிப்போக
இவ்வளவு தூரம் பிரயாசைப்படவேண்டி வந்தது. மேலும் ஓ! ராஜனே
ரௌத்திரமான பூஜை ஹோமங்களிலும் வைஷ்ணவமா யேற்பட்ட சில
அமிசத்தைக்கொண்டு ரௌத்திராமிசத்தை யடக்கி வைஷ்ணவாமிசத்தை
மாத்திரம் தலைநீட்டிக் கொண்டு ஜனித்தது. ஜமதக்கினியென்ற குழந்தை

யென அறிவாய். ஜமதக்கினி பிறந்தபின் சிலகாலங் கழித்து புண்ணியரூபிணியான ஸத்தியவதியும் கௌசிகியென்ற புண்யநதியாக வுருவமெடுத்துப் பெருகிப்போயினள்.

இக்ஷ்வாகு வம்சத்திலுதித்த ரேணுவென்ற அரசனுடைய மகளான ரேணுகை யென்பாளை ஜமதக்கினி மணம் புரிந்து காமலி யென்ற அந்த ரேணுகையினிடத்தில், மிகவும் பயங்கரனும், எல்லாவித்தைகள் நிறைந்தவனும், உத்தமனும் தனுர்வேதத்தைக் கரைகண்டவனும் துஷ்ட க்ஷத்திரியர்களை யெல்லாம் கண்டவிடத்தில் தலைசீவிக் கொன்று கொல்பவனும், ஜ்வலிக்கின்ற அக்கினிபோன்றவனுமான ஜாமதக்கினியென்கிற ராமன் என்னுமைந்தன் ஜனித்தான். இவ்விதம் ஔர்வரென்ற ருஷிகருக்கு ஸத்தியவதியிடத்தில் மஹாகீர்த்திமானான ஜமதக்கினி யென்பவர் தபோவலிமையால் பிர்மஞானிகளுக்குள் சிறந்தவராக வுண்டானார். இவருக்கிரண்டாவன் பெயர் சுனச்சேபன். மூன்றாவன் பெயர் சுனப்புச்சன். இவன் கடையன். காதி ராஜனுடைய புத்திரர்களுள் மூத்தவரான விசுவாமித்திரரோ, பிர்மருஷிக்குச் சமமான மஹிமையை யடைந்து இனிவரும் எட்டாவது மனுவந்திரத்தில் ஸப்தருஷிகளுள் ஒருவராக அப்பதவிக்கு வரும்படியான புதவியைப் பெறத்தகுந்தவராயினர். விசுவாதனென்ற இவ் விசுவாமித்திரரோ அந்த யாகத்தில் பிருகுமஹரிஷியின் ஆசீர்வாதத்தால் கௌசிகவம்சத்தை விருத்திசெய்கின்றவராயினர். விசுவாமித்திரருடைய மக்கள் தேவராதன் முதலியோர்: அவர்கள் மூவுலகுகளிலும் புகழ் பெற்றவர்கள், அவர்களுடைய பெயர்களைக் கேள். தேவசிரவன், காத்தியாயனர் என்ற வகுப்பினரையுண்டாக்கிய கதியென்பான். சாலாவதி யென்ற நகரத்திற் பிறந்தவர், ஹிரண்யாக்ஷன், ரேணுவிடமிருந்துமுண்டான ரேணுமான், ஸாங்கிருதி, காலவன், முத்கலன், மதுச்சந்தன், ஜயன், தேவலன், அஷ்டகன், கச்சபன், ஹாரீதன் இவர்களெல்லாம் விசுவாமித்திரருடைய புத்திரர்கள். கௌசிகரென்ற இம்மஹாத்மாக்களுடைய கோத்திரங்களெல்லாம் மிகவும் பிரசித்தப்பட்டவை. பாணினன், பப்ருவன், தியானஜப்பியர், அரசர்களான தேவராதர்கள், சாலங்காயனர், பாஷ்கலர், லோஹிதர், யாமதூதர், காரீஷவர், ஸௌசுருதர் என்ற இவர்களெல்லாம் கௌசிகரெனவும், மற்றவர் ஸைந்தவாயனரெனவும் பெயர்பெற்றவர். தேவலர், ரேணுக்கள், யாக்ஞவல்கியர், அகமர்ஷணர், தாரகாயனர், சுஞ்சுலர் இவர்களெல்லாம் ஔதும்பரர் எனக்கூறப்



பட்டவர். ஓ! ஜனமேஜயராஜனே! சாலாவத்தியர், ஹிரண்யாக்ஷர், ஸாங்கிருத்தியர், காலவர், பாதராயணிகளென்ற இவர்களும் மற்றவர்களும், புத்திமானான விசுவாமித்திரருடைய ருஷிகுலங்களுக்குள் விவாஹம்செய்து கொள்ளத்தகுந்த கௌசிகர்கள். இவர்கள் பலவகுப்பினரெனக் கூறப்படுகின்றனர். ஓ! மஹாராஜனே! பௌரவராஜனுடையவும், பிர்மரிஷியான கௌசிகருடையவும் ஸம்பந்தமானது இவ்வம்சத்திலிருப்பதுபற்றிப் பிர்மக்ஷத்திரகோத்திரமென இவ்வம்சத்தியவருடைய பெயர். பிறகோர்சமயத்தில் பிருகு குலத்திற் பிறந்த சுனச்சேபன் என்ற முனிவரன் கௌசிகரான விசுவாமித்திரருக்குப் புத்திரனாக வானான். ஹரிதசுவருடைய யாகத்தில் சுனச்சேபன் யாகபசுவாக ஏற்படுத்தப்பட்டான். ஆகிலும் அந்தயாகத்திற்கூடிய தேவர்களால் உயிருடன் மறுபடியும் திருப்பிக்கொடுக்கப்பட்டான். அவ்விதம் தேவர்களாற் கொடுக்கப்பட்டதால் தேவராதனென்ற மற்றோர் பெயருமவனுக்கே யுண்டாயிற்று. அத்தேவராதன் முதலிய ஏழுபெயர் விசுவாமித்திரருடைய குமாரர்கள். விசுவாமித்திரரிடமிருந்து திருஷத்வதிக்குப் பிறந்த அஷ்டகனும் விசுவாமித்திரருடைய புத்திரனே. அஷ்டகன் மைந்தன் லௌஹியென்பவன். இவ்விதம் ஜன்ஹுவினுடைய வகுப்பினர் முழுமையும் சுருக்கமாய் என்னாற் கூறப்பட்டனர். அதற்கு மேல் ஆயுஸ் என்ற மஹாத்மாவினுடைய வம்சத்தைக் கூறுகின்றேன்.

31-வது அத்தியாயம் முற்றிற்று.

## 32-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— ஆயுஸ்ஸின் மக்களைவர். அவர்களெல்லோரும் வீரர்களும் மஹாரதிகர்களுமாம். மேலும் அவர்கள் சுவர்பானுமகளான பிரபையென்பவளிடம் பிறந்தவர்கள். முதலிற் பிறந்தவன் நஹுஷன். அதனுடன் விருத்தசர்மாவென்றவன் பிறந்தான். மற்ற ரம்பன், ரஜி, அனேனு என்ற மூவரும் மூன்றுலகங்களிலும் கீர்த்தி பெற்றவர்கள். அவர்களுள் ரஜியென்பான் ஐந்நூறுமக்கள்களைப் பிறப்பித்தான். இக்கூட்டத்திற்கு ராஜேயமெனப் பிரசித்தமான பெயர். இது இந்திரனையும் பயப்படுத்தும். ஒருசமயத்தில் தேவர்களுக்குமசுரர்களுக்கும் மதிகோரமான போர் கைகலந்தபொழுது இருவர்களுமொருவருக்கொருவர் சளையாமல் பிர்மாவைச் சரணம்புகுந்து எங்களுள் எவ

குக்கு ஜயமுண்டாகுமெனக் கேட்கப் பிர்மாவும் எந்த கக்ஷிக்காரர்களுக்காக ரஜியென்பவன் கையுதாயுதமுமாகவந்து சகாயஞ்செய்வானோ அக்கட்சியே ஜயிக்குமென்றும், எக்கட்சியில் ரஜிராஜனுளனோ அக்கட்சியில் தைரியமும், ஜயலக்ஷ்மியும், தருமமுங் கூடிவதால் அக்கட்சியே ஜயலக்ஷ்மியையடையுமென்றும் கூறினார், மேலும் ஓ! பரதஸிரேஷ்டனே! அத்தேவருமசுரரும் நான்முன் நான்முன்னென்று தத்தம் ஜயத்தை விரும்பிக்கொண்டு எந்தரஜிராஜனை வந்தடைந்தார்களோ, அப்படிப்பட்ட சுவர்ப்பானுவின் தௌஹித்திரனான ரஜியென்பான் பிரபையென்பவளிடம் ஜனித்தான். அவ்வரசன் மிகுந்த பராக்கிரமமுடையவனாய்ச் சோமனுடைய வம்சத்தை விருத்தியாக்கினவன். அப்படிப்பட்ட ரஜிராஜனைத் தேவருமசுரருமேககாலத்திற் போய் எங்கள் யுத்தத்திற்குச் சகாயமாகச் சிறந்தவில்லைத் தாமெடுக்கவேண்டுமென்றனர். பிறகு அவ்விருவருக்கும் தனது பயனையறிந்த ரஜிராஜன் தன்பயனையும் கீர்த்தியையும் கருதி வருமாறு கூறலுற்றான்.

ரஜிராஜன்:— ஓ! இந்திரனை முன்னிட்ட தேவர்களே! சகலவசுரக்கூட்டங்களையும் நான் ஜயிப்பேனாகில் சுவர்க்கத்தில் நானே இந்திரனாவேன். அவ்விதமுங்களுக்குச் சம்மதமாயிருந்தால் தருமத்தோடுதோயுத்தஞ்செய்கின்றேன். என்ற வார்த்தையைக் கேட்ட தேவர்களனைவரும் முதன்முதலில் அரசனுடைய மனதை யறிந்தவர்களாகக்கொண்டு, ஓ! அரசனே! உமதிஷ்டப் பிரகாரம் உம்முடைய வெண்ணம் பயன்படவுமக்குச் சம்மதித்தோமென்றனர். இவ்வார்த்தையைக் கேட்டபின் அசுரர்களை நோக்கியுமிவ்வார்த்தையே கேட்டனர். அதற்கு அவ்வசுரர்கள் செருக்கடைந்தவர்களாகத் தனதாயவனையே விரும்பிக்கொண்டு அவ்வரசனைநோக்கி அகங்காரத்துடன் வருமாறு மறுமொழி கூறினர். அதாவது;— எங்களுக்கு பிரஹ்லாதனென்பவே இந்திரன். நாங்களுமவருடைய புகழைக் கருதியே ஜயத்தை விரும்புகிறோம். இவ்விதமுள்ள சுற்பாட்டில் நின்று எங்களுக்குச் சகாயம் செய்தால் நாங்கள் சம்மதிப்போமென்றனர். அதைக் கேட்ட ரஜிராஜனும் அசுரர்வார்த்தையை ஒப்பாமல் அவரை விலக்கிவிட்டனர்.

பிறகு தேவர்களால் நீரே எங்களுக்கிந்திரனாவீரென வுற்சாகம் செய்யப்பட்ட ரஜிராஜனும் படையெடுத்துப் பின்வாங்காத போர்புரிந்து வஜ்ரபாணிக்குமசையாத அவ்வசுரர்களை யெல்லாம் போர்முகத்தில்



முறியடித்துப் பலரைக்கொன்றும், பலரை நாசியும்விதமாக முடிவில் தாமே ஜயித்து மிகவும் மேன்மை பொருந்திய ஜயலக்ஷ்மியுடன் கூடினவராக விளங்கினர். பின்பு தேவர்களுடன் கூடச் சதக்கிரது வென்ற மித்திரன் என்பவன் ரஜிராஜன் சமீபம் வந்து நான் ரஜிராஜனுடைய புத்திரனெனப் பகிரங்கமாய்ச் சொல்லிக்கொண்டு மேலுமோர் வார்த்தையையும் பேசினான்: ஓ! என்பிதாவே! தாம் தேவர்களுக் கெல்லாமிந்திரனாயிருக்கின்றீர், இதிற் சிறிதளவேனும் ஐயமில்லை. ஆகிலும் தமது புத்திரனான யானிந்திரனென நல்வினைகளாலெவ்விதம் கீர்த்திபெறுவேனோ அவ்விதம் தாம் பிரியப்படவேண்டுமென வேண்டினான். அவ்வரசனும் சக்கிரனுடைய வாக்கைக் கேட்டு அவனது கபடத்தால் வஞ்சிக்கப்பட்டவராய், சதக்கிரதுவைக் கண்டு சந்தோஷப்பட்டவராய் அவ்விதமே யாகக்கடவதெனச் சம்மதித்தார். பிறகு தேவருக்குச் சமமானப்பிரபாவங்களையுடைய அந்த ரஜிராஜன் சரீரமிழந்தபின்பு, அவ்வரசனுடைய குமாரர்களாகிற ஐநூறு பெயர்களும் இந்திரனை ஐநூற்றியொன்றாவதானப் பிரதாவாக்கி அவனோடு தாயபாகக் கிரமப்படிச் சண்டையிட்டு இந்திரனிடமிருந்து அவனது அமராவதியையும், சுதர்மையையும் மற்றுமுள்ள எல்லாக் கொலுச்சட்டங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். பலவிதமாகவும் சுவர்க்கலோகத்தை யெல்லாம் அவ்வைந்நூறு ராஜகுமாரர்களும் ஆக்கிரமித்துக்கொண்டு இந்திரனின்னவிட மிருக்கின்றானெனக் கூட யாருமறியவொட்டாமற் செய்துவிட்டனர். பிறகு வெகுகாலமவ்விதமே மகாபலிஷ்டனான இந்திரனிருந்தவிடம் தெரியாமலோடி யொளிந்து யாகத்திற்கூட ஹவிர்ப்பாகமில்லாமல் தேகமும் மெலிந்து மிகுந்த துயரத்துடன் துன்பம் சகிக்கமாட்டாமல் பிழைக்க வழியறியாது தனது புரோஹிதரான பிரகஸ்பதியை யேகாந்தத்தில் சரணம்புகுந்து, ஓ! குருவே! ஓ! பிர்மருஷியே! ஆஹாரம்கூட யில்லாமல் மெலிந்துவிட்டேன். ஆகையால் யாகங்களிலெனக்கும் சிறிய இலந்தைக்கனியளவாவது ஹவிர்ப்பாகத்தைக கொடுக்கும்படி செய்விக்கவேண்டும். அதனுடைய மஹிமையாலுயிருடனாவது ஜீவித்திருப்பேன். ஓ! பிராம்மண சிரேஷ்டனே! ஓ! பிரபுவே! ரஜிராஜ குமார்களால் யானிப்பொழுது இராஜ்ஜியமிழந்தவனாகவும், மனம் நொந்தவனாகவும், ஆஹாரமில்லாதவனாகவும், அதனால் மெலிந்ததேகமுடையவனாகவும், காந்தியற்றவனாகவும், வலிவில்லாதவனாகவும், அதனால் காரியாகாரியமறியாத மூடனாகவுமானேனென்ற சக்கிரனை நோக்கிப் பிரஹஸ்பதி கூறுகின்றார்.

பிருஹஸ்பதி:— பாபமற்ற ஓ! சக்கிரனே! இதைமாதிரி முன்பே என்னை நீ கேட்டுக்கொண்டிருந்தாலுனக்குப் பிரியமான காரியத்தைச் செய்ய நான் என்னாலில்லாதவனாயிருந்திருக்கமாட்டேன். ஓ! தேவேந்திரனே! இனியாவதுனக்கு இதமான காரியத்தைத் தொடங்குகின்றேன். இதில் நீ சந்தேகிக்கவேண்டாம். யாகத்திலுனது ஹவிர்ப்பாகத்தையும், சுவர்க்கராஜ்யத்தை யுந்திக்கிரமாகவே யெப்படி யடைவாயோ அப்படியாக வெனதன்பனே செய்கின்றேன். உன் மனம் வாடவேண்டாம் என்றிவ்விதமான பல தேறுதல்களை யுரைத்தார்.

வைசம்பாயனர்:— உடன் பிருகஸ்பதியும்பொழுது இந்திரனுடைய வீரியம் விருத்தியடையும்படிக்கும், அந்த ரஜிபுத்திரர்கள் தானும் மயங்கியவர்களாய் வீரியம் குறையும்படிக்குமுள்ள தந்திரம் ஒன்றைச் செய்தார். அதாவது:- தெய்வமே யில்லையென்றும், இவ்வுலகங்களெல்லாமியற்கையா யிவ்விதமுண்டாகின்றனவென்றும், வேதம் என்பது ஸாதனமில்லாததென்றும், அனாதிமோர் பண்டிதர்களியற்றப் பட்ட பொய்நூலேயென்றும், தேகத்தினழிவே மோக்ஷமென்றும், தருணிகளின் போகமே பிரமானுபவமென்றும், பாபப்படுதலே நரகானு பவமென்றும், சுகப்படுதே பரலோகானுபவமென்று மின்னுமிவ்வித முன்ன வின்னும் நாஸ்திக வாதங்களையெல்லாம் சேர்த்துத் தடுக்க முடியாத குதர்க்கங்களால் நிலைநாட்டி வைதிக மார்க்கங்களுக்கெல்லா மெதிரிடையான பார்ஹஸ்பத்தியமென்றும் நாஸ்திகமென்றும் உலோகாயதமென்றும் பிரசித்திபெற்ற சாஸ்திரத்தை யெழுதி வெளியிட்டனர். ஆனால் வைதிக தருமநெறியறிந்தோர்க்கு அம்மதமின்பப் படாது. அதைக்கண்டு அவ்வாயுபுத்திரருடைய அவ்வைவனைய ராஜகுமாரர்களும் மயங்கினர். அன்றியும் வேதோக்தமான தருமசாஸ்திரங்களைப் பழித்தனர். தர்க்கயுக்திகளால் நிறைந்த அம்மதத்தை யெடுத்துப் பிரசாரஞ் செய்யும் திறமையுடையோனுமம்மதத்தை மிகவும் வெகுமதித்தனர். அவ்வதருமத்தா லவர்களெல்லாம் பாபிகளாய்த் தீர்ந்து எல்லா விதத்திலுங் குறைவையே யடைந்தனர். அப்பொழுது சக்கிரனும் பிருகஸ்பதியின் ஆசீர்வாதத்தாலெவராலு மடையமுடியாத மூவுலகத்தி லதிராஜ்யத்தை யடைந்து மேன்மையான சுகத்தை யநுபவித்தான். எப்பொழுதவ்விவரும் மிகவும் மூடர்களாகவும், பேராசையாற்பயித்தியம் பிடித்தவர்களாகவும், வேதவிரோதமான நடவடிக்கைகளையுடையவர்களுமானார்களோ, அதேகாரணத்தால் காளாவட்டத்தில் பிரகஸ்ப



தியான குருவினிடத்திலும் பகையையுடையவர்களாகி முடிவில் வீரிய பராக்கிரமங்களெல்லாங் குறைந்தவர்களுமாயினர். ஆகையால் கேடிய காமக் குரோதிகளான ரஜிபுத்திரர்களைக் கொன்று இந்திரனும் மேன்மையான பதவியையுடைய தேவைசுவரியத்தை யடைந்தான். எவனிப்பதவி யிழந்த இந்திரனுடைய கதையையும், மறுபடியுமிந்திரன் உத்தமமான தனது ராஜ்யத்தை யடைந்த கதையையும் கூறுகின்ற இவ்வத்தியாயத்தைக் கேட்கின்றானோ அல்லது முகபாடமாகத் தரிக்கின்றானோ அவன் கெட்டபுத்தியை யடையமாட்டான். மேலுமவன் வாழ்நாள் முழுமையும் பிணியற்றவனாகவும் பாபமற்றவனாகவும் சுகத்தையே அநுபவிப்பான்.*

32-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 33-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:—அவர்களுக்குள் மற்றொருவனாகிய ரம்பனென்றவன் ஸந்ததியில்லாதவன். அனேனுவின் குலத்தைக் கூறுகின்றேன். அனேனுவிற்கு மிகுந்த கீர்த்தியுள்ளப் பிரதிக்ஷத்திரராஜன் என்பவனும் அவனுக்கு ஸஞ்ஜயனென்ற புகழ்பெற்றவனும் ஸஞ்ஜயனுக்கு ஜயனென்பவனுமவனுக்கு விஜயனென்பவனும், அவனுக்குக் கிருதியென்றவனும், அவனுக்கு ஹரியச்வதனென்பவனும், அவனுக்குப் பிரதாபசாலியான சகதேவனென்பவனும், அவனுக்குத் தருமசீலனான நதீனனென்பவனும், அவனுக்கு ஜயத்ஸேனனென்பவனும், அவனுக்கு ஸங்கிருதியென்றவனும் அவனுக்குத்தருமத்திலேயே மனமுடையவனும் மிகவும் கீர்த்திமானுமான க்ஷத்திரதர்மா வென்றவனும் ஜனித்தார்கள். இவ்விதமனேனுவின் குலமுறைக்கப்பட்டது. இனியிருத்தசர்மா அல்லது க்ஷத்ர விருத்தனென்பவனுடைய சந்ததியை யென்னிடமிருந்து கேள்.

க்ஷத்திரவிருத்தன் மகன் ஸுஹோத்திரன், அவனுக்கு மிகவும் தருமசீலர்களான காசன், சலன், கிருத்ஸமதன் என்ற மூன்று மக்கள்கள். அவர்களுள் கிருத்ஸமதனுக்குச் சுனகன் என்றவனும், அச்சுனகனுக்குச் சௌனகர்களென்ற பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிகளிற் பிறந்த பலபெயர்களும் மக்கள்கள். மற்ற சலனென்பவன்மகன் ஆர்ஷ்டி ஷேணன் என்பவன். அவன் மகன் காசன். ஓ! அரசனே காசனுக்குக் காசிகனென்ற பலமக்கள்களும், தீர்க்கதபனென்ற மற்றொருவனுமுன்

டானர்கள். அவனுக்கு தன்வன் என்றவனும், அத்தன்வ முனாராஜனு க்குத் தன்வந்திரியென்றாகயான் புத்திமானும். விருத்தாபியமுமுள்ள அத்தன்வ ராஜனுடைய தவத்திற்கிரங்கி நமது மனிதஜாதிக்குள்ளோர் மனிதன் போலவே அவதரித்தார்.

ஜனமேஜயன்:— ஓ! மஹாரிஷியே! தேவனான தன்வந்தரியானவர் இம்மனிதர்களுள்ளோர் மனிதனாயெவ்விதம் பிறந்தார்? அதனுண்மையை யுள்ளபடியே யறிய விரும்புகிறேன்.

வைசம்பாயனர்:—ஓ பாரதலதிலகனே! தன்வந்தரியின் அவதாரத் தைக் கூறுகின்றேன் கேள். அப்பகவான் அமுதத்திற்காகப் பாற்கடலைக் கடைந்தபொழுது அதினின்றும் நான்குபுறமும் வீசியவொளியுடனுதித் தனர். அப்பொழுது அணிமாதி விருத்திகளைப் பழக்கப்படுத்திக்கொண்ட படியே அவை நிறைவேறுவதின்பொருட்டு அங்குள்ளவிஷ்ணுவைக்கண்டு நின்றனர். அக்காலையில் விஷ்ணுவும் ஓ! அப்ஜனேயென்றழைக்க அத னாலத்தன்வந்தரிக்கு அப்ஜனென மற்றோர் நாமதேயமுமேற்பட்டது. பிறகு அவ்வப்ஜன் விஷ்ணுவைநோக்கி ஓ! பிரபுவே! நானுமது புத்திரனா யிருக்கின்றேன். ஆகையால் ஓ! தெய்வநாயகனே; எனக்கு இவ்வுலகத்தி லிடத்தையும், ஹவிர்பாகத்தையு மேற்படுத்திக் கொடுமெனக் கேட்க அப்பிரபுவும், அவ்வப்ஜனைநோக்கி மெய்யானமொழியொன்றையுருளினர். அதாவது இதன் முன்பேயே யாகங்கள் தேவரும் ஆஹுதி செய்யப்படும் ஹவிஸ்ஸுக்களெல்லா மப்பொழுதிருந்த தேவர்களுக்குள்ளேயே மஹ ரிஷிகளாற் பங்கிடப்பட்டுப் போயின. இப்பொழுதுனக்காகப் புதிதாய் கூட்டுவதற்கு எவ்விதத்திலும் முடியாது, நீ தேவர்களுக்கெல்லாம் பிற் பட்டு ஜனித்தவன். அன்றியும் நீ தேவபுத்திரனாயிருக்கின்றாய். ஈசு வரனல்ல. ஆனாலிரண்டாவது ஜன்மத்தில் நீ பெரும்புகழையடை வாய். அணிமாதி விருத்திகளுமுனக்கப்பொழுது கர்ப்பத்திலேயே லபித் திக்கும் அந்த சரீரத்தோடு கூடவே நீ தேவத்தன்மையையடைவாய். அப்பொழுது சருவின் மந்திரங்களாலும், பலவித நோன்புகளாலும் ஜபங் களாலுமுன்னைப் பிராமணரெல்லோரும் பூசிப்பார்கள். அப்பொழுது நீ ஆயுர்வேதத்தை யெட்டுப் பிரிவையுடையதாகச் செய்யப்போகின்றாய். அந்த ஜன்மமானது கட்டாயமுனக்குண்டாகும். அதினிப்பயனும் பலி க்குமென என்னாலிதன் முந்திய கல்பங்களில் காணப்பட்டிருக்கின்றது. காலசக்கிரமான து இரண்டாவதான த் துவாபரயுகத்தை யடைந்தபிறகு நீ ஜனிப்பாய் சந்தேகமில்லை. இவ்விதமிவ்வரத்தைக் கொடுத்து அத



னுடன் விஷ்ணுவும் அந்தர்த்தானமாயினர். இரண்டாவதானத் துவாபர யுகம் வந்தபொழுது தீர்க்கதமராஜன் மகனும் லெளஹோத்திரியுமான காசிராஜனும் புத்திரசந்ததியை வேண்டித்தவஞ்செய்யவிரும்பும்பொழுது அவனது புரோகிதர் ஒரு ஜாம மாத்திரம் ஜபிக்கப்பட்ட மந்திரத்தினா லேயே பிரசன்னமாய் வரனைப்பூர்த்திசெய்து கொடுக்கத்தகுந்த மந்திர த்தையுபதேசித்தனர். அம்மந்திரத்தைப்பெற்றவக் காசிராஜனும் நீரா டிப்பரிசுத்தனாய் ஏகாந்தத்திலிருந்து மந்திரத்தை ஜபித்து, அம்மந்திரத் திற்குரிய தேவதையைச் சரணம்புகுந்தான். அதெவ்விதமெனில்; எத் தெய்வம் ஒரு சாமமாத்திரம் பூஜிக்கப்பட்டபொழுதே எனக்குப் புத்தி ரனையளிக்குமோ, அந்த அப்ஜனென்ற தேவனைச் சரணமடைகின்றேன். என இவ்விதமவ்வரசனத் தேவனைவழிபட்டுத் துதிக்குமளவில், அத னால் சந்தோஷப்பட்ட பகவானான அவ்வப்ஜதேவனும் பிரசன்னனாய் நேரில்வந்து அவ்வரசனைக்குறித்து. ஓ! அரசனே! சிறந்த நோன்புடை யோனே உன் தவத்தால் பிரீதியடைந்தேன். என்னவரனை விரும்பு கின்றாய் கேள். அதைக் கொடுக்கிறேனென, அவ்வரசனும். ஓ! பக வானே தாமெனது பக்தியால் பிரீதியையடையப் பட்டவராகில், பெரும் புகழையுடைய புத்திரனை எனக்குத்தாமேயாகக் கடவீரென்றான். அதைக்கேட்ட தேவனுமப்படியேயாகட்டுமென வுத்திரவளித்து அவ்விட த்திலேயே அந்தர்த்தானமாயினர். பிறகு அத்தன்வந்திரி தேவனுமப் பொழுது அக்காசிராஜனுடைய வரன்மனையில் காசிராஜனாய் அவதரித்து எல்லாரோகங்களையுந்தீர்க்கும் திறமையுள்ள வித்துவானாய் விளங்கினர். மேலும் பாரத்துவாஜமுனி புங்கவரிடமிருந்து ஆயுர்வேதம் முழுமையு மோதி வைத்தியர்களுடைய செய்கை முழுவதையுமெட்டுப் பாகமாக வகுத்து ஸுசுருதர் முதலிய சிஷியர்களுக்களித்தனர். அத்தனுவந்தரி யையே திவோதாஸனெனவும் கூறுவதுண்டு. அவருடைய புத்திரன் கேதுமானென்பவன். அவனுக்கு வீரனான பீமரதனென்பவனுண்டா னான். அவனுடையமகன் திவோதாஸன். இவன் மிகுந்த தருமிஷ்டனா கவும் காசிதேசத்திற்குப் பதியாயுமிருந்தான். அவனுடைய காலத்தில் க்ஷேமகனென்றவோர் இராக்கதன் அக்காசியென்ற வாரணசியைச் சூன் னியமாக்கிவிட்டனன். மேலும் அப்பட்டணமானது புத்திமானும் மஹாத்மாவுமான நிகும்பனென்ற வுருத்திரகணாதிபதியினால் ஆயிரம் வருஷம் வரையில்யாதொரு குடியுமில்லாமல் பாழாய்ப் போகும்படி சபிக் கவும் பட்டது. அவ்விதம் சபிக்கப்பட்டபொழுது திவோதாஸனும் அப் பட்டணத்திற்கப்புறமாகக் கோமதி நதிக்கரையில் காசிநகரத்தை ஸ்தா

பித்தான். திவோதாஸனுக்கு முன்பு வாரணாசியான பத்திரசிரேணிய னென்ற வரசனுடையமக்கள்களான நூறு க்ஷத்திரியர்கள் வசியிருந்தது. அப்படிப்பட்ட யானிப்பான வக்காசிநகரை பலிஷ்டனான அத்திவோ தாஸராஜன் தனக்குச்ஸ்வாதீனமாக்கி யிருந்தான்.

**ஜனமேஜயன்:**—நிகும்பனென்ற பிறபு வாரணாசியைச் சூன்னிய மாகும்படிச் சபிக்கக்காரணமென்ன அந்த நிகும்பனோ நியாயத்தையே வடிவமாகவுடையவர் ஆகையால் க்ஷேத்திரமான வக்காசி சபிக்கப் படுவானேன்.

**வைசம்பாயனர்:**—ராஜரிஷியும் மிகுந்த பராக்கிரமசாலியுமான அத் திவோதாஸன் தான் ஜயித்தவுடன், ஜனங்கள் நிறைந்த அப்பட்டணத்தில் சுகமாகவசித்தான். அச்சமயத்தில் மகேசுவரனானவர் தமது பாரியுடன் கூடத்தமது பாரியையின் பிரியத்திற்காகவே அவளது பிதாவின் நகரமாகிய இமாலயத்திலேயே வசித்துக்கொண்டு வரும்நாளில் தேவருக்கருகாயால் மிருந்தவத்தையே பொருளாகவுடைய அபராதப்பிரமதகணங்களெல் லாம் முன் கூறப்பட்ட வுபதேசங்களால் ஸ்ரீபார்வதியைச் சந்தோஷப் படுத்திக்கொண்டுவந்தன. அதைக்கண்டு மகாதேவி சந்தோஷப்படுவாள். ஆனால் அவளது மாதாவான மேனாதேவி வெறுப்பாள், மேலுமடிக்கடி அந்தவுமாதேவியாரையும் மகாதேவனையும் கண்டு மனவெறுப்புடன் ஏ! பெண்ணே! உங்கள் பரிவாரங்களோ எப்பொழுது மசுத்தமானது, உன் பர்த்தாவோ தரித்திரன், அதுபோனாலும் மெப்பொழுதும் நற்சீலமேயில் லாதவர், என மேனாதேவி மொழிந்து கொண்டே வந்தனள். அதைக் கேட்ட மகாவரப்பிரதையான மகாதேவியாரும் பெண்தன்மையால் தாயி டம் மிருந்தசினத்தையடைந்தமதை வெளிக்காட்டாமற் புன்னகை செய்துதனது பர்த்தாவான சிவனது பக்கத்தையடைந்து மிருந்தவா ட்டமுள்ள முகத்தையுடையவளாய் மகாதேவனை நோக்கி ஓ! தேவ தேவனே! இனி நானிவ்வீட்டில் வசிக்கமாட்டேன், தங்களுடையக் கிர கத்தைக்குறித்து என்னை அழைத்துப் போமென்றனள் ஓ! குருநந்த னனே! உடன் மகாதேவனும் அதேவிதம் தமது வாசத்திற்காக எல்லா வுலகங்களையும் தமது ஞானக்கண்ணுறல் நோக்கியும் முடிவில் பூலோகத்தி லேயுள்ள வாரணவசீ நகரத்திலேயேப் பிரியமுடையவரானார். மேலும் அவ்வாரணாஸியானது அக்காலத்தில் திவோதாஸனாலாளப்பட்டு வருவ தாகவுமறிந்தார். பிறகு பக்கத்தில் நிற்கும் நிகும்பனை கூப்பிட்டு வருமாறு



உரைத்தனர். ஓ! கணநாயகனே, வாரணாசியை யடைந்து அதைச்சூனியமா க்கவேண்டும். அந்நியாளப்பட்ட வரசனோமிகவும் வீரியமுடையவன். ஆகையால், இலேசான வுபாயத்தினாலேயே காரியத்தைக்கைகொள்ள வேண்டுமென்றனர்.

பிறகு நிகும்பனும் அப்பொழுதே வாரணாசி க்ஷேத்திரத்தையடை ந்து, அப்பட்டணத்தில் வசிக்கும் கண்டுகனென்ற வோர்க்ஷவரகனுக்குக் கனவில் தான் தர்சனம் கொடுத்து ஏ! பயமில்லாத நாபிதனே எனக்கு இப்பட்டணத்திலோர் ஆலயத்தைக்கட்டி என்னைப் போன்ற வோருருவ த்தையதில் ஸ்தாபிப்பாய், அதனாலுனக்கு வேண்டிய க்ஷேமத்தைச் செய்கின்றேனென்ன வரப்பிரசாதமளிக்க அவ்வாதுனைப்படியே அவ்வம் பட்டனும் கனவிற்கண்டபடி சகலமும் செய்து அரசனுக்கு மக்காரியங் களெல்லாம் தெரிவிக்க, அரசனுமப் பூதத்திற்கென்று பூஜை, நைவேத் தியங்களுக்காகத் தகுந்த ஏற்பாடுகளை யேற்படுத்தினான், பிறகு தினந் தோறும் சந்தனம், தூபம், மாலைகள், அபிஷேகம், மாமிசம், அன்னம், பானங்களிவைகளாற் பூஜையிடுவதும், கூடுவதும், பாடுவதும், வணங்கு வதும், காணிக்கை செலுத்துவதுமாக மிகவுமாடம்பரமாய் விருத்திக்கு வரத்தலைப்பட்டது. இம்மாதிரியாகப் பூஜிக்கப்பட்ட அக்கணநாயக னும், அப்பட்டணங்களிலுள்ள வெல்லாஜனங்களுக்கும் மவரவரிஷ்டப் பிரகாரம் சந்தானங்களையும், செல்வத்தையும், ஆயுளையும் இன்னும் வேண் டும் வரங்களையும் வாமளித்து கொண்டு வந்தார். இச்சங்கதிகளை எல்லா மரசன் கேட்டாச்சரியப்பட்டுத் தனதுமனைவியையும் புத்திரனுக்காக வப்பூதனாயகனை வழிபடும்படி உத்திரவளிக்க வதனால் ஸுயசையென்ற பெயரையுடையவளும் மகாபதிவிரதையுமான அவ்வரசனது பாரியையும் அதேவிதமாக அவ்வாலயம்சென்று விஸ்தாரமானபூஜைகளை நடத்திவைத்த தன்பின் புத்திரசந்தானத்தை வேண்டிக்கொண்டனள். இதேமாதிரியாக அடிக்கடி குறிதும் பெருத்தபூஜையிடுவதும் வேண்டுவதுமே தொழி லாயிருந்தும் பலதடவைகளில் புத்திரசந்தானம் தரவேண்டுமென வேண் டியும் அந்த நிகும்பனென்ற பூதநாயகனூர் ஓர்காரண விசேஷத்தால் வ்வர சிக்கு மறுமொழி கூறவேயில்லை. மேலும் அப்பூதநாயகனவ்வேளையி லெல்லாம் இக்காரணத்தைப் பற்றி இவ்வரசன் நம்மிடம் கோபிப்பானே யாகில் அப்பொழுதுதான் முன்னைய காரியம் நிறைவேறுமென வழிபார்த்து கொண்டேயிருந்தனர். அதுபோலவே சிறிது காலஞ்சென்றபின் அர சனுக்கும் கோபமுண்டாகி யப்பூதநாயகனை நோக்கி அடா! நமது

கோட்டை வாசலிலுள்ள நிகும்பனென்னும் பூதமானது இந்நகரிலுள்ள சகலருக்கு
மிஷ்டங்களையெல்லாம் கொடுத்தும் நமக்கு மாத்திரம் நமதபீஷ்டமான
புத்திரசந்ததியைப்பற்றி யேன் வரமளிக்கவில்லை? என்றுடையவர்களா
லேயே தினந்தோறு மிந்நகரத்திலெப்பொழுதும் பூஜிக்கப்படுகின்றதே,
என்றுத்தேறியப்படுத்தப்பட்ட என்னுடைய பாரியையால் எனது புத்திரசந்தி
க்காக வத்தனையோ தரம் பிரார்த்திக்கப்பட்டும் நன்றியில்லாத இப்பூதம்
வக்காரணத்தாலெனக்குப் புத்திரவானை கொடுக்கவில்லை. ஆகையாலினி
நம்மிடமிருந்து பூஜை முதலியவைகளை யடையா இப்பூதம் தகுதியற்றது.
ஆனதுபற்றி கெட்டவென்னமுடைய இப்பூதத்திருலயத்தை நாசப்படு
த்துவேனென தீர்மானித்து அதையேகாயில்பாபிஷ்டனும் துராத்மாவு
மான அவ்வரசன் கணநாதனுடைய அவ்வாலயத்தை யிடித்து நாசமாக்கி
விட்டான். அதைக்கண்டு அந்த நிகும்பனென்ற கணப்பிரபுவும் ராஜனைச்
சபித்தார். அதாவது ஓ! அரசனே; யாதொரு காரணமுமில்லாமலெனது
ஆலயத்தைப் பாழாக்கியதால் உன்னகரமான இவ்வாரணாசி முழுமையும்
யாதொரு காரணமுமில்லாமல் நிச்சயமாகப் பாழாய்ப் போகக்
கடவது. என்ற இச்சாபத்தால் அதிசீக்கிரமாகவே யாதொரு காரண
முமில்லாது அவ்வாரணாசி முழுமையும் பாழாகப்போயிற்று. அதன்பின்
நிகும்பனும் மகாதேவன் சமீபம்சென்று வாரணாசியைப் பழாக்கிய சங்
கதியையாவிவனைப்படுச்செய்ய அதைக்கேட்டப் பரமேசுவரனும் அப்பா
ழான காசிநகரிற் றனக்கு ஸ்தானத்தை யேற்படுத்திக்கொண்டனர். பிறகு
அக்காசி பூமியிலேயே ஸ்ரீபார்வதியை ரமித்துக் கொண்டிருக்கும் பரம
சிவன் சுகமாய் வாழ்ந்து ரமித்துக்கொண்டிருந்தனர். மகாதேவி, மட்
டில் அப்பாழான நகரில் தம்முடைய வாஸமனையிற் போலவ்வளவு ஸந்
தோஷத்தை யடையாது தேவனை நோக்கி இப்பாழானவிடத்திலெவ்
விதம் வசிப்பதென நினைக்க, அதையறிந்து தேவியாரைநோக்கி ஏ! பார்
வதி! நான் வீட்டில் வசிக்கமாட்டேன். என்னிருப்பிடமெப்பொழுதும்
ஆவரணமில்லாமலும், பந்தங்களின்று விடுபட்டதுமான ஏகாந்தஸ்தலம்.
உன் வீட்டிற்கு இனி நான்வரமாட்டேன். உனக்குப் பிரியமுண்டா
னால் உன் வீட்டைக்குறித்து நீ போவெனத் திரியம்பகனும், திரிபுராந்த
கனுமான பகவான் புன்னகையுடனருளிச்செய்தனர். அதுமுதல் அக்
காசியும் காரணத்தால் அவிமுக்தமெனப்பெயர்பெற்றது. இவ்விதமாக
வாரணாசியென்ற நகரம் சபிக்கப்பட்டது, அவிமுக்தமென்று பெயர்
வரக்காரணமும் கூறப்பட்டது. தருமஸ்வரூபியாயும், எல்லாத்தேவர்
களால் நமஸ்கரிக்கப்பட்டவருமான மகேசுவரன் தமது தேவியாருடன்



திருதம் முதலிய மூன்றுயுகங்களிலும் அக்காசிநகரில் பிரத்தியக்ஷமாக
வசிப்பாரோ, மஹாத்மாவினுடைய அந்நகர் கலியுகத்தில் மறைந்து
போகும். அவ்வண்ணம் மறைந்த வந்நகரம் மறுபடியும் ஜனவாச யோக்
கியமான நகரமாகும். இம்மாதிரியாக அப்பட்டணமுண்டாவதும், சபிக்
கப்படுவதும் பாழாக்கப்படுவதுமாயிருக்கின்றது.

முன் கூறப்பட்ட பத்திரசிரேணியனுடைய குமாரனை துர்த்தம
னென்ற பேர்பூண்ட வரசனானவன், திவோதாச மஹாராஜனால் சிறுவால
னென வுதாசீனிக்கப்பட்டிருந்தான். அவ்விதயிருக்கையில் அத்துர்த்
தமன் ஹைஹயனுடைய வுரவைச்செய்துகொண்டு அவன் சகாயத்தால்
தனது பிதா ஆண்டுவந்த அக்காசி நாட்டைத்தனக்கு வசமாக்கினான்.
ஓ! பாரதனே! பகைக்கு முடிவு எவ்விதம் க்ஷத்திரியனால் செய்யத்தக்
கதோ அவ்விதமே இத்துர்த்தமனாலும் செய்யப்பட்டது. ஆகையாலிதில்
யாதொரு அநியாய விரோதமுமில்லை.

பிறகு திவோதாஸனிடமிருந்து திருஷத்வதியினிடம் வீரியமுள்ள
பிரதர்த்தனனென்றவன் பிறந்தான். அம்மைந்தனால் மறுபடியுங்காசி
நாடு துர்த்தமனிடத்தினின்றும் தன்கைவசமாக்கப்பட்டது. அப்பிரதர்த்
தன் ராஜனுக்கு வத்ஸனென்றும், பார்க்கனென்று மிருமக்கள்களுண்டா
னர். அவருள் வத்ஸராஜனுக்கு அளர்க்கனென்றவன் மகன். அவ
னுக்கு ஸன்னதியென்றவன்மகன். அவ்வளர்க்கனென்ற காசிராஜன்
பிரமக்ஞானமுடையவனும் ஸத்தியமாய் போராடுகின்றவனுமாம். அவ்
வளர்க்கனென்ற ராஜரிஷியைக் குறித்திவ் வுலகத்தியவர்களால் முன்
போர் கீதம்பாடப்பட்டிருக்கின்றது. அதாவது:— அறுபதினாயிரத்தறு
நூறு வருஷகாலம் வரையில், அவ்வளர்க்கராஜனைத் தவிர்த்த யெவரு
மிப்புவியை ஆளவேயில்லை. உலோபாமுத்திரையி னாசீர்வாதத்தால்
நீடிய ஆயுட்காலங்களையடைந்து யௌவனந்தவறாது யுவாவாகவே காசி
பூபதியின் மாபினுதித்த வளர்க்கராஜன் அந்நாட்டை யாண்டுவந்தான்
வடிவழகு வயது முதலிய சகலமும் நிறைந்த பெருந்தோள்வலியுள்ள
அவ்வளர்க்கராஜன் அநேகம் நாடுகளைக் கட்டியாண்டு நிகும்பன்சாபம்
முடிவானபின் க்ஷேமகனென்ற ராக்ஷஸனையும் கொன்று மறுபடியும் அவ்
வாரணாசியைச் சீர்திருத்தி எல்லோரா நகரமாக்கிப் பற்பலகுடிகளை
யேற்றித்தானு மங்கு சென்று வாழ்ந்தான். இவைகளே அக்கீதங்க
ளாம். அந்த ஸன்னதி யென்பானுக்குச் சுநீதனென்றவனும், அவனுக்கு
க்ஷேமியனென்றவனும் அவனுக்குக் கேதுமானென்றவனும், அவனுக்குச்

சகேதுவென்பவனும், அவனுக்குத் தர்மகேதுவென்பவனும், அவனுக்குச் சத்தியகேதுவென்பவனும், அவனுக்கு விபு வென்றவரசனும், அவனுக்கு ஆனர்த்தனென்றவனும், அவனுக்குச் சுகுமாரனென்றவனும், அவனுக்குத் திருஷ்டகேதுவென்பவனும், அவனுக்கு வேணுஹோத்திரனென்பவனும், அவனுக்குப் பார்க்கனென்பவனும் மக்களாய் ஜனித்தவர்கள். மேற்கூறப்பட்ட வத்ஸனுக்கு வத்ஸபூமி யென்றும். பார்க்க குலத்திற்குப் பார்க்கபூமி யென்றும் பெயர். இவர்களெல்லாம் அங்கிரஸ என்ற மஹாரிஷியின், புத்திரர்கள். இவர்களே பல்லாயிரம் பெயர்களாகப் பெருகிக் காலாந்திரத்தில் பிருகுவம்சத்திலுங் கலந்து இப்பொழுது பிராமணர்களாகவும், க்ஷத்திரியர்களாகவும் வைசியர்களாகவும், விளங்குகின்றனர். இவர்களெல்லாம் காசிராஜர்களென்று கூறப்பட்டவர்கள்; இனி நஹுஷன்கதையைக் கேள்.

33-ம் அத்தியாயம் முற்றிற்று

---

## 34 வது அத்தியாயம்

வைசம்பாயனர்:— பித்ருக்களின் கன்னிகையான விரஜையென் பவளிடம், நஹுஷமஹாராஜனுக்கு மகாபராக்கிரமசாலிகளியும், இந்திரனுக்குச் சமானமானவர்களுமான ஆறு குமாரர்களுதித்தனர். அவர்கள் யாவரெனில்:— யதி, யயாதி, ஸம்யாதி, ஆயாதி, பயன், ஸுயாது என்றவராம். அவருள் யயாதி என்பவன் பூபதியானான். ஆனால் யதியென்றவனே மூத்தவன். யயாதி யிரண்டாமவன். முந்திய மிகவுந் தருமசிந்தையுள்ள யதியென்றவன் ககுத்ஸ்தராஜனுடைய மகளான கோவென்றவளை யடைந்து, உலகத்தில் விருப்பமில்லாதவனாய் மோக்ஷ தருமத்தையே மேற்கொண்டு முடிவில் முனியாயிருந்து பிரம்மஸ்வரூபனாய் தீர்ந்தான். ஆகையால் மற்ற பேருக்குள் மூத்தவனான யயாதி யென்பவன் இப்பூமிமுழுவதையுஞ் செயித்து சுக்கிராசாரியாரிடமிருந்து தேவயானியையும் அசுரேந்திரனான விருஷபர்வாவின் மகளாகிய சர்மிஷ்டை யென்ற வகைப்பெண்ணையும் மணம்புரிந்து கொண்டான். பிறகு யது, துர்வஸு, என்ற இரண்டு புத்திரர்களை தேவயானியென்றவள் பெற்றாள். த்ருஹ்யு அநு பூரு யென்ற மூவர்களைச் சர்மிஷ்டை யென்றவள் பெற்றாள். அந்த யயாதி ராஜனுக்கு தேவேந்திரன் ஒக்க விளங்குமோர்



இரதத்தைப் பிரீதியால்கொடுத்தனன். அந்த ரதமானது பொன்மயமானதும், தேவமகிமையுடையதும், தெய்வத்தன்மையும் மனோவேகமும் வெளுத்தநிறமுமுள்ள வாறு பரிகள் பூட்டியதுமாய் விளங்கியது. அந்த ரதத்தின் சகாயத்தாலேயே அப்பாரியைகளை மணம் புரிந்தான். அவ்வுயர்ந்த ரதத்தினாலேயே ஆறு தினங்களுக்குள் இப்பூமி முழுமையுஞ் செயித்தான். மேலும் மித்திரனோடு கூடிய அமரர்களையும் நிகரற்ற போர்வீரனான யயாதியென்போன் தன் கீழ்ப்படுத்தினான். அதின்பின் அவனுக்குப் பிறகுவந்த மற்ற பௌரவரெல்லோருந் தம் முறையே வசுராஜனறுதியனுபவிக்கப்பட்டு முடிவில் குருமபனும் ஆதிஜனமேஜயன்னாளில் கார்க்கியனும் வாசகுருவென்ற வக்தணனது சாபத்தால் நாசத்தையடைந்தது. அதன் விரிவு:— கார்க்ககுலத்திய வாக்குரானுடம் பாலனைத்தனது கொழுப்பாற்றுங் ப்படுத்தியதாலச்சனமேஜயன் பிர்மஹத்தியை யடைந்து அதனாலுடல்முழுதும் புலால்நாற்றமெயிருந்து அந்நகரவாசிகளாலும் மூரோராலும் வெறுக்கப்பட்டு முடிவில் சௌனகவிருஷியைச் சரணம்புக அவ்விருஷியும் விந்திரோதமென்ற யச்சனமேஜயனைப் பரிமேதமென்ற பெருந்தவோர் வேள்வியால் பாவனஞ்செய்வித்து அவபிருத ஸ்நாடத்தோடு புலால் நாற்றத்தையடியோடு நீக்கி மறுபடியு மவ்விராச்சியத்தில் அபிஷேகித்தனர். ஆனதுபற்றிச் சேதியரசாகிய வசுராஜனுக்கு விந்திரோதனிடமிருந்து மாற்றி அமரபதியாலன்புடனளிக்கப்பட்டது. அதைப் பெற்ற அவ்வசுமன்னன் உபரிசரவசுவென்ற புகழையடைந்தான். பிறகு முறையே பிருகத்ரதனென்ற வக்குலத்தோனுக்கும் முடிவிற் ஜராசந்தனுக்கும் கிடைத்தது. அவனையும்வீமன் கொன்று அந்த ரதத்தை வீமன் கண்ணனுக்குப் பரிசாக வீன்றான். இதுநிற்க, முன்கூறப்பட்ட நாகுஷனாகும் யயாதி ஏழு கடல்களையுந்தீவுகளையும் வென்றவைகளை ஐந்தாய் வகுத்துத் தென்கிழக்கில் உருவசுவையும், மேற்கிலும் வடக்கிலும் முறையே துருஹ்யுவையும் மனுவையும், வடகிழக்கில் மூத்தயதுவையும், நடுவிற் பூருவையு மரசர்களாக நியமித்தனன். அவ்வண்ணமே நாளது வரையில் அச்சந்ததியாராலேயே நீதிவழுவாதாளப்பட்டு வருகின்றது. அவ்வைந்து மைந்தர்களின் சந்ததிகளைப் பிறகு சொல்லுகின்றேன். அதனிடையில் அந்த யயாதியினுடைய சுருக்கமான விருத்தாந்தமாவது:— அவ்விதம் யயாதிராஜன் தனது புதல்வர்களிடமரசாட்சியைக் கொடுத்து தானும் வில்லம்புகளை விட்டு நிச்சிந்தையாயிருக்கையி லவனை மூப்புப் பருவம் வந்தடைந்தது. அக்காலையில் தன்னுடன் ஜநித்துத் தன்தனயர்

கருக்குக் கொடுக்கப்பட்டு அவர்களால் வெகுகாலப்பட்ட வாலின்முறை யைப் பார்த்து அடங்காத வானந்தத்தை யநுபவித்தான். ஆகிலுமச் சுவர்யெல்லாது சுக்கிரபகவானது சபத்தாற்றலனை யாக்கிரமிக்க. யயாதி யும் மீண்டுஞ் சிந்தையில்லாது சிற்றின்பத்திலேயே முழுகியிருக்க வேண்டுமென்ற தன்னாசையை நடத்த முடியாதவனானேன்: அதற்காகத் தன் மைந்தருள் யதுவென்றவனை யடைந்து ஏ! யதுவே! உன் காளைப் பருவத்தை யெனக்குக் கொடுப்பாய். எனது விருத்தாப்பியத்தைப் பெற்றுக்கொள்வாய். உனது யௌவனத்தாற் சிறிது காலம் பூமியிற் சஞ்சரித்திவ்வுலகத்திய சுகத்தை யநுபவிக்கின்றேனென்று வேண்ட, அந்த யதுராஜனும் ஏ! பிதாவே! பிராமணனல்லாத மற்றவர்க்கிரத்தல் வேத சாஸ்திரங்களிற் கூறப்படாததென என்றாற் கேட்கப்பட்டிருக் கிறது. அவ்விதியைப்பாராட்டாமல் தம் கிழத்தனத்தை வாங்கிக் கொள்ளமாட்டேன். மேலும் ஜரையை யடைந்தவர்க்குப் போஜனபானாதி களிலெத்தினையோ கெடுதிகளுள. ஆனதாலும் ஜரையைப் பெற்றுக் கொள்ள விருப்பமில்லை. என்னைவிடப் பிரியமான புத்திரர்களின்னும் நான்கு பெயருளரல்லவா, அவர்களிடம் பிரார்த்திப்பீரென்றான். இவ்விதம் மறுமொழி கூறப்பட்ட யயாதியுமாறுக் கினங்கொண்டு பேச்சிற் சிறந்த வருகையிற் றன்மைந்தனை யதுவை வெகுவாகவப்பொழுது நிந்தித்து ஏ! யதுவே! உனக்கென்னைவிட யெவனுதாரமாயுள்ளவன். எவன் தருமத்தை விதிக்கின்றவன். எந்த நியாயம் எந்த வேத வாக்கியத்திலி தற்கு விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஏ! கெட்டபுத்தியை உடையோனே! உன்பிதாவும் குருவுமான வென்னை யனாதரவு செய்ததால் உன்மரபினர் ராஜ்ய மில்லாதவரும் மூடர்களுமாவாரென சபித்தனன்.

பிறகு அவ்விருத்தன் துருவசுவையும், துருஹ்யுவையும், அநுவை யும் கிட்டி முன்வேண்டிய மாதிரியே தெரிவிக்கச் சகலரும் யதுவைப் போலவே மறுமொழியும் மொழிந்தனர். ஓ! ஜனமேஜயனே! ஆசையா லதிகோபத்துட னம்மூவரையும் முன்னொருபருவத்தில் நான் கூறியபடி சபித்தனன். இவ்விதம் நான்கு மைந்தர்களையுஞ் சபித்து விட்டுக் கடைசியாய் புருவை யணுகி. ஏ! குணாளனா புருவே! உனது யௌவ னத்தாற் சிறிது காலம் பூமியில் சஞ்சரித்து வுலகசுகத்தை யநுபவிக்க விரும்புகின்றேன். என் கிழத்தன்மையை நீ பெற்றுக்கொண்டுனது யௌவனப் பருவத்தைக் கொடுப்பாயென்றான். அவ்வார்த்தையைக் கேட்டவுடனப்படியே சம்மதித்து அப்புருவென்ற மைந்தனச்சரையைப்



பெற்றுக்கொண்டு தனது யௌவனத்தையீன்றான். ஏ! பரதகுல திலகனே! அப்புருவின் யௌவனத்திரு லவ்வரசனும் திவ்ய தருண னாய் இவ்வுலகவின்பம் முழுமையுமநுபவித்து விசுவாசி யென்றவ ளோடு கூடச் சைத்திரரதமென்ற குபேரனது உத்தியான மெங்கு மெல்லாம் போய் ரமித்து விளையாடி யொடுவில் அச்சிற்றின்பங்க ளெல்லாமொழிவை யடைந்த பின் தன்மகனான புருவினிடம் வந்து அவனது யௌவனத்தைக் கொடுத்துத் தனது விருத்தாப்பியத்தைத் திரும்பவும் பெற்றுக்கொண்டான். அப்பொழுது அந்த யயாதியாற் சில கீதங்கள் பாடப்பட்டன. அவையாவன;— ஆசைகளெல்லா மநுப வித்தடங்காதவை ஆசையாளன்மை தன்னங்கங்களை யிருந்த விடம் காணுதொடுக்கிக்கொள்வதுபோலவ் வாசையைச் சுருக்கிக்கொள்ள வேண்டும். எரிகின்ற தீக்கு எவ்வளவு காஷ்டங்களிட்டாலுமடங்காது மேன்மேலே பெருகுமே யொழிய வெரிந்துபோதுமெனத் தீ ஒருபொழுதும் திருப்தியை யடையாது. அது போலவே ஆசையும், இவ்வுலகிலுள்ள தானியங்கள், பொன், பசுக்கள், பெண்களென்ற போக்கிய வஸ்துக்களெல்லா மொருவனுடைய வாசைக்குக் கூடப் போதாதது. இளைமான் கொம்புபோல் மேன்மேலும் வளர்ந்து கொண்டே யிருக்கும். ஆகையால் எவன் வினையாலும், மனதாலும், வாக்காலும் எவருக்குந் தீங்கு செய்யாதிருப்பானோ அப்பொழுதே பிரம நிஷ்டை கைகூடும். எப்பொழுது பிறரிடமிருந்து தானும் பயப்படாமல் தன்னிடமிருந்து பிறரும் பயப்படாமலிருப்பானோ, எப்பொழுது ஆசையும் கோபமும் அடங்குமோ அப்பொழுது தான் பிரமஞானம் கைகூடும். கெட்ட புத்திகளாலெது விடமுடியாததோ, எது பிராணன் போமளவுள்ள பிணியோ, அந்த ஆசையென்றதை விட்டவனுக்கு ஆத்மானந்தம் கைகூடும். ஜரையை யடைந்தவர்க ளுடைய தலைமயிர்களும், பற்களும் ஜீர்ணமாகின்றன. உயிர்த்திருக்க வேண்டுமென்ற வாசையும், பொருளாசையுஞ் சிவனுள்ளவரையில் நசிப் பதில்லை. இவ்வுலகத்திலுள்ள காமசுகமும், சுவர்க்காதி பரலோகசுகமும், காமமென்ற வாசையின் வெறுப்பான வொழிவாகும் சுகத்திற்குப் பதினா றிலொரு பங்கு கூடச் சமமாகாது. இவ்விதம் பலகாதைகளைக் கூறித் தேறி முடிவில் தனது பாரியைகளுடன் தபோ வனஞ்சென்று பெருந்த காலங்கள் வரையில் பிருகுதுங்க மென்றவிடத்தில் தவம் புரிந்து அத்தவத்தின் முடிவில் ஆகாராதிகளை யெல்லாமடியோடு

விட்டொழித்து பிதுர்த்வத்திற் சேர்ந்தவனாய்த் தன்மனைவிகளுடன் மோக்ஷத்தை யடைந்தான்.

ஓ! மஹாராஜனே! அவனது வம்சத்தில் ஐந்து பெயர்கள் ராஜரிஷி சிரேஷ்டர்களாயிருந்தார்களல்லவா, அவர்களாலேயே இப்பூமிமுழுமையும் சூரியனுடைய கிரணங்கள்போல் வியாபிக்கப்பட்டிருக்கின்றது. ராஜரிஷிகளாற் பெருமைப்படுத்தப்பட்ட யதுமஹாராஜனது வம்சத்தைக் கேட்பாய். அந்த யது மஹாராஜனுடைய வம்சத்திலே தான் விருஷ்ணி குலோத்தமனும், ஸர்வ பாபங்களையும் நீக்குபவனும் புருஷனான நாராயணன் அவதரித்தான். இந்த யயாதியின் சரித்திரத்தைப் படித்தவனும் கேட்டவனும், செல்வம், ஆயுள், குலம், கீர்த்தியிவைகள் நிறைந்தவனாக நீடு வாழ்வான்.

34-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 35-வது அத்தியாயம்.

ஜனமேஜயன்:— ஓ! பிராம்மணசிரேஷ்டமரே! புருமஹாராஜாவின் வம்சத்தையும், அவ்விதமே த்ருஹ்யு, அநு, யது, துர்வஸு என்ற மஹாராஜாக்களின் வம்சத்தையும் வெவ்வேறாக அதை யுள்ளபடியே கேட்க விரும்புகின்றேன். விருஷ்ணி வம்சத்தைக் கூறவேண்டிய முறையால், முன்னம் என்னுடைய வம்சத்தைத் தொடங்கி ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் தாம் கூறக்கடவீர்.

வைசம்பாயனர்:— ஓ! பார்த்திவனே! முதலில் நீ பிறந்த வுத்தமமான புருவின் வம்சத்தை ஸங்க்ஷேபித்துக் கேள். அது உத்தமர்களான அரசர்களைக் கூறும் வம்சம். அவ்விதமே த்ருஹ்யு, அநு, யது, துர்வஸு என்பவரின் சரித்திரமும் பிறகு கூறப்படும். அதாவது,— புருவிற்கு மஹாவீரியமுள்ள ஜனமேஜயனென்ற அரசன் மகன். பிரசின்வானென்றவன் அவன் மகன். அவன் கிழக்குத்திசை முழுவதும் ஜயித்தவனாகையால் அப்பிரசின்வானென்ற காரணப் பெயரால் புகழ் பெற்றவனானான் அவனுடைய மகன் பிரவீரனென்பவன். அவன் மகன் மனஸ்யு. அவன் மகன் அபயதனென்ற அரசன். அவன் மகன் ஸுதந்வா. அவன் மகன் பஹுகவன். அவன் மகன் ஸம்யாதி.



அவன் மகன் அஹம்யாதி. அவன் மகன் ரௌத்ராச்வன். அவனுக்கு மிச்ரகேசியென்ற அப்ஸரஸ்ஸினிடம் ருசேயு, கிருகேயு, கக்ஷேயு, ஸ்தண்டிலேயு, ஸன்னதேயு, தசார்ணேயு, ஜலேயு, ஸ்தலேயு, தனேயு, வனேயு, என்ற பத்துக் குமாரர்களும், ருத்திரை, சூத்திரை, பத்திரை, மலதை, மலஹை, கலதை, நளதை, ஸுரஸை, கோசபலை, ரத்நகூடை எனப் பத்துக் குமாரிகளும் ஜனித்தனர். அத்திரி கோத்திரத்தில் உதித்தப் பிரபாகரரென்ற மஹரிஷி அப்பத்து குமாரிகளுக்கும் பர்த்தாவாகவானார். பிறகு அம்மஹரிஷி ருத்திரை யென்பவளிடம் கீர்த்திமானான சோமனென்ற மைந்தனைப் பெற்றார். ஸ்வர்ப்பானு என்றவனால் அடிப்பட்ட சூரியன் ஆகாயத்தினின்றும் பூமியில் விழும்பொழுது உலகமெல்லாமிருள் வந்து கவ்விக்கொள்ள அச்சமயத்தில் யாதொருவரால் பிரபையென்ற பேரொளி யொன்றுண்டாக்கப்பட்டதோ; மேலும் ஆகாயத்தினின்றும் விழும் சூரியனை யாதொருவர் விழாதே விழாதேயெனத் தடுத்து நிலைநிறுத்தினரோ அப்பிரபாகரரென்ற மஹரிஷியிவரே அத்திரிகோத்திரமென்ற உத்தமமான கோத்திரங்களை யிவரே வெளிப்படுத்தினர். தேவர்களாலுமிவ் வாத்திரேயர்களுக்கே யாகத்தில் விசேஷதக்ஷிணை முதலிய தனங்களேற் படுத்தப்பட்டன. அவ்விதம் பெருமையுள்ள பிரபாகரர் அப்பத்து ஸ்திரீகளிடமும் பத்து புத்திரர்களைப் பெற்றனர். அவ்வனைவரும் கூர்மையான தவத்திலேயே நிஷ்டையை உடையவர்களும், பெரிய கோத்திரங்களுக்கு மூலகாரணர்களும் வேதங்களின் கரையைக் கடந்தவர்களுமாம். அவர்கள் பெயர் ஸ்வஸ்தியாத்திரேயரென்பது. இது நிற்க ருசேயு முதலிய பத்து ராஜகுமாரர்களுக்குள் கக்ஷேயுவென்பவனுக்கு ஸபாநரன், சாக்ஷுஷன், பரமந்து, என மூன்று புத்திரர்களுண்டாயினர். அவருள் ஸபாநரன் மகன் காலாநலனென்ற அறிவாளியான அரசன். அவனுடைய மகன் ஸ்ருஞ்ஜயனென்ற தருமசீலன். அவனுடைய மகன் வீரனான புரஞ்ஜயன். அவனுடைய மகன் ஜனமேஜயன். அவன் மகன் மஹாசாலன். அவன் வேதங்களில் நல்லறிவுடையவனும், இப்புவியில் பெருத்த கீர்த்தி உடையவனுமாம். அவன் மகன் மஹாமனஸ். அவன் மிகுந்த வீரியமுடையவனானதால் தேவர்களாலும் பூஜிக்கப்பட்டவனாயிருந்தான். ஓ! பாரதனே! அவனுக்குத் தருமமறிந்த உசீநரனென்றவனும், மஹாபலிஷ்டனான திதிக்ஷுவும் மைந்தர்கள். உசீநரனுக்கு உயர்ந்த ராஜரிஷிவம்சத்திற் பிறந்த ம்ருகை, க்ருமி, நவை, தர்வை, திருஷத்வதி என்ற ஐந்து மனைவிகள். அவ்வரசனுக்கு முதிர்ந்த வயதில் தபோ

பலத்தால் திருஷையிடம் திருகனென்றவனும், கிருமியிடம் கிருமியென்றவனும், *நவையிடம் நவனென்றவனும், தர்வையிடம் ஸுவ்விருதனென்பவனும், திருஷத்வதியிடம் ஸிபியென்றவனும் ஜனித்தார்கள். இவ்வைந்து மைந்தர்களுக்கும் ஒளசீநரென்ற பெயர். அவருள் ஸிபியென்றவனுக்கு ஸிபிகளென்றவைகளும், திருகனுக்கு யௌதேயங்களென்றவைகளும், நவனுக்கு நவராஷ்டிரமென்றதும், கிருமிக்குக் கிருமிலாபுரியென்றதும், ஸுவ்விருதனுக்கு அம்பஷ்டையென்றதும் ஆண்ட தேசங்கள். ஸிபியென்றவனுக்கு விருஷதர்ப்பன், ஸுவீரன், மத்திரகன், கேகயன் என்ற மிகுந்த வீரியபராக்கிரமுடைய நான்கு புத்திரர்களுண்டானார். அவர்களாண்ட ராஜ்யங்களனேகமாயிரம். மத்திரகங்களென்றும், கேகயங்களென்றும், விருஷதர்ப்பகங்களென்றும், ஸுவீரகங்களென்றும் பெயர் பெற்ற நகரங்கள் பற்பல உண்டாயிருந்தன. பிறகு திதிக்ஷுவென்றவனுக்கு வைதிக்ஷுவென்ற உஷத்ரிதன் பிறந்தான். அவன் மகன் பேனனென்பவன். அவனிடமிருந்து ஸுதபனென்பவன் பிறந்தான். அவனுடைய மகன் பலியென்பவன். அவன் பொன்மயமான வில்லுடன் மனித யோனியில் ஜனித்த வோர்மஹாயோகி. அப்பலியென்ற வரசன் முன்பு அங்கன், வங்கன், ஸும்ஹன், புண்டிரன், கலிங்கன், என்ற வமிசகர்களான ஐந்து மக்கள்களைப் பிறப்பித்தான். இவர்களுக்குப் பாலேயர் எனவும் பெயர். அப்பலிராஜனுக்குச் சிறந்த யோகாப்பியாசமும் ஒரு கல்பமளவுள்ள *வாயுள்நிலையும், போரில் தோல்வியின்மையும், தருமத்திலேயே முக்கியமானனமும், விகரற்ற தோள்வலிவும், தருமத்திலுள்ள மதிதமும், பிர்மாவால் வரங்களாக வளிக்கப்பட்டன. மேலும் பிர்மாவானவர் அப்பலிராஜனை நோக்கி ஓ! ராஜனே! பூவுலகில் நீ நான்கு வருணங்களையும் முறைப்படி நிலைநிறுத்துவாயென வருள் செய்தனர். இவ்விதமனுக்கிரகிக்கப்பட்ட அவ்வரசன் அவருடைய உத்திரவின்படியே மீப்படிந்து மிருந்த அடக்கத்தை யடைந்து களித்தான். அவ்வரசனுடைய க்ஷேத்திரத்திலுற்பத்தியான புதல்வர்களே முன் கூறப்பட்டவர்கள். அதாவது:- தீர்க்கதமஸ் என்ற மஹரிஷிக்கு ஸுதேஷ்ணை யென்ற பலிராஜன் பாரியையிடம் ஜனித்தவராதலால் அவ்வைவரும் மஹரிஷிகளாகவே இருந்தனர். பிறகு பிரபுவான பலியும் அவ்வைந்து மைந்தர்களையும் இவ்வுலகத்தில் அபிஷேகித்து ஸந்துஷ்டனாய்த் தானும் யோகத்திலேயே புத்தியையுடையவனாக யோகாப்பியாசத்தையே



செய்து கொண்டு எப்பிராணிகளாலும் கலங்காமல் தனது காலத்தையெதிர் பார்த்திருந்து நீடிய காலாந்திரத்தில் தனது பதவியை யடைந்தான். அவ்வைந்துபுத்திரர்களின் சிறைந்த தேசங்களைந்து. அவை யாவன;— அங்கம், வங்கம், ஸும்ஹகம், கலிங்கம், புண்டிரகம் என்பன. அவர்களுடைய வமிசமாவன:— அங்கராஜனுடைய மகன் ததிவாகனனென்ற பெயர்பெற்ற வரசன். ததிவாகனன் மகன் திவிரதன். அவனுக்கிந்திரனுக்கு நிகரான தருமரதனென்றவன் பிறந்தான். அவன் மகன் சித்திரரதன். அவனால் விஷ்ணுபதமென்ற மலையில் சோமயாகம் செய்கையில் இந்திரனோடு கூட ஸோமபானம் செய்யப்பட்டது. அச்சித்திரரதன் மைந்தன் தசரதன். அவனே ரோமபாதனெனப் புகழ்பெற்றவன். அவனுடைய மகளே சாந்தை யென்றவள். அவளுடைய பர்த்தாவான ருஷ்யசிருங்கமஹரிஷியின் அனுக்கிரகத்தால் மஹாவீரனான சதுரங்கனென்ற மைந்தன் அத்தசரதனுக்குண்டானான். அச்சதுரங்கன் மகன் பிருதுலாட்சன். அவன் மகன் சம்பன். அவனுடைய பட்டணமே சம்பாநகரமென்றது. அது மாலினீ யென்றபழைய பெயரையுடையது. பூர்ணபத்திரருடைய அனுக்கிரகத்தால் அச்சம்பனுக்கு ஹரியங்கனென்ற குமாரன் பிறந்தான். அவனுக்காக ருஷ்யசிருங்கரென்ற வைபாண்டகி ருஷியானவர் போரிற் சகலரையும் வெல்லத்தக்கதோர் யானையை மேலுலகத்தினின்றும் மந்திரபலத்தால் பூவுலகுக்கிறக்கிக் கொடுத்தார். அது அவனுக்குத்தமமான வாகனமாயிருந்தது. அவன் மகன் பத்திரரதன். அவன் மகன் பிருஹத்கர்மன். பிருஹத்தர்ப்பனென்றவன் அவன் மகன். அவனுடைய மகன் பிருகன்மனன். அவன் மகன் ஜயத்திரதன். அவன் மகன் விரேதன். அவன்மகன் விசுவஜித்து. அவன் மகன் கர்ணன். அவன் மகன் ஹரியங்கன். அவன் மகன் கர்ணன். அக்கர்ணன் மகன் விகர்ணன். அவனுக்கு அங்கவம்சத்தை விருத்திசெய்யத்தகுந்த நூறுமக்கள்கள் உண்டானார். முந்தி கூறப்பட்ட பிருகத்தர்ப்பனின்மகனான பிரஹன்மனனென்றவனுக்குச் சைத்தியராஜனது பெண்களான யசோதேவீ, சத்தியையென இரண்டுமனைவிகளுண்டாயிருந்தனர். அவ்விருபாரியைகளா லிரண்டுவமிசங்கள் பிரிக்கப்பட்டுப்போயின. ஜயத்திரதனென்பவன் யசோதேவியிடம் ஜனித்தவன். ஸத்தியையிடம் விஜயனென்ற மற்றோர் மைந்தனுண்டானான். அவன் பிர்மக்ஷத்திரமென்றவிரண்டுவகுப்பினாரிலும் சிறந்தவன். அவ்விஜயனுக்குத் திருதியென்பவன்பிறந்தான். அவன் மகன் திருதவிருதன் அவன்மகன் ஸத்தியகர்மா. அச்சத்தியகர்மனின் மகன்ருதன் என்ற அதிரதன், யாவனொருவன் கர்ணனை

யைக் கண்டெடுத்தாரோ, யாதொருவனெடுத்ததால் க்ருதபுத்திரனான கர்ணன் பெயர் பெற்றானோ அச்சுதனே இவன். அக்கர்ணனுக்கு விருஷ ஸேனன் மகன், அவன் மகன் விருஷன். இவர்களுடைய வமிசத்திய அரசர்களியாவரும் என்றுக் கூறப்பட்டனர். மஹாபலிஷ்டனான கர்ணனைப் பற்றி விஸ்தாரமாக முன்பே என்னுற் கூறப்பட்டபடியாலிங்கொரு தரம் கூறப்படவில்லை. இவ்வனைவரும் ஸத்தியமான விரதமுடையவர்களும் பெருத்த மனமுடையவர்களும் சிறந்த குலத்தையுடையோரும் மஹாரதிகர்களுமாம். ஓ! மஹாராஜனே! இனி பௌரவமஹாராஜனது மைந்தனை ருசேயுராஜனுடைய வம்சத்தைக் கூறுகின்றேன் கேள், ஓ! பார்த்திவனே! அவ்வம்சத்திலேயே நீயு முதிக்கப்பட்டவன்.

35-வது அத்தியாயம் முற்றிற்று.

## 36-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— ருசேயுவென்ற ராஜரிஷியானவர் ஒருவராலு மெதிர்க்கமுடியாதவரு மிவ்வுலகுக்கோர் சக்ரவர்த்தியுமாகக் கூறப்பட்டவர், அந்த ருசேயும் மஹாராஜனுக்குத் தக்ஷகனுடைய பெண்ணாகிய ஜ்வலனை யென்பாள் மனைவி, அவளிடம் மதிநாரனென்ற வரசன் பிறந்தான், அம்மதிநாரனுக்கு மஹாதருமிஷ்டர்களான மூன்று புத்திரர்கள் உண்டானார்கள்— அவர்களே ஸாராத்தியன், பிரதிரதன், ஸுபாஹு என்றவர்கள். இவர்களன்றி கௌரியென்ற வோர் கன்னிகையும் பிறந்தாள். அவளே மாந்தாதா வென்றவனுக்குத் தாயான பதிவிரதா சிரோன்மணி. அம்மைந்தர் அனைவோரும் வேதமறிந்தவர்களும், பிரமிஷ்டர்களும், ஸத்தியவாதிகளும், அஸ்திர சாஸ்திரங்கற்றவர்களும் தேகவலிமையுடையவர்களும், யுத்தத்தில் பின்வாங்காதவர்களுமாம். அவர்களுள் பிரதிரதனென்றவர்க்கு கண்வர் என்றவர் பிறந்தார். அவருடைய மகன் மேதாதிதி யென்பவர், அவரிடமிருந்து காண்வாயினர் என்ற விப்பிரர்களுண்டாயினார். அன்றியும் ஈலினி யென்ற பிரமவாதினியான வோர் புத்திரியும் மேதாதிதிக்கு உற்பவித்தாள். அவளைத் தம்ஸு வென்றவர் அடைந்தார். அத்தம்ஸு என்றவருக்கு ஸுரோதனென்ற ராஜரிஷி ஜனித்தனர். அவர் தருமத்தையே கல்யாணகுணமுடையவர். பெருத்த கீர்த்தியுடன் விளங்குபவர். பிரமத்தைப்



பற்றி நன்றாகப் பேசத்திறமையுடையவர். அவருடைய பாரியை உபதானவீ யென்றவள். அவ்வுபதானவீ யென்றவள் நான்கு மைந்தர்களைப் பெற்றாள். அவர்களே துஷ்யந்தன், ஸுஷ்மந்தன், பிரவீரன், அநகன் என்றவர்கள், அவர்களுள் துஷ்யந்த மஹாராஜனுக்குப் பரதனென்ற மஹாவீரியவான் பிறந்தான். அப்பரதன் தான் ஸர்வதமனன் என்ற பெயராலும், பதினாயிரம் யானைவலிவுடனும் விளங்கினவன். இவ்விதம் அனேகம் மான்மியத்தோடு கூடிய அப்பரதனென்பவன் இவ்வுலகங்களை யெல்லாம் வென்று சக்கிரவர்த்தியானான். அவன் சகுந்தலை என்பவளிடம் பிறந்து சிலநாட்கழித்து துஷ்யந்தனிடம் சேர்ப்பிக்கப்பட்டபொழுது துஷ்யந்தனும் தான் அங்கீகரிக்கச் சந்தேகிக்க வப்பொழுது ஆகாசவாணிப்பரதனை யங்கீகரித்துப் பரிபாலிப்பாயென வுத்தரவளிக்க அதன் மேல் துஷ்யந்தனாலங்கீகரிக்கப்பட்டு அப்பௌரவராஜ்யத்தி லபிஷேகஞ் செய்யப்பட்டான். ஆகாசவாணி சொன்னதாவது:— மாதாவானவள் பைபோன்றவள் பிதாவினுடைய பீஜமாகையால் புத்திரன் பிதாவினுடையதே, எதனாலுண்டாயிற்றோ அதுவேயிது. ஆகையால் பிதாவே புத்திரன், ஆகையால் ஏ! துஷ்யந்தராஜனே சகுந்தலையை யவமதிக்காமல் குழந்தையை யங்கீகரித்துப் போற்றுவாய், ஏ! நரதேவனே! சுக்கிலமென்றதே புத்திரனையுண்டுபண்ணுவது நீயே இந்த கர்ப்பத்தை வைத்தவன், சகுந்தலை உண்மையையே யுரைக்கின்றனள், " என்றதேயாம், அப்பரதனுடைய பெயராலேயே பிறப்பட்டவரெல்லாம் பாரதரென்ற பெயரை அடைந்தனர். ஓ! ராஜனே! நான் முன் சொன்னபடி மாதாக்களுடைய கோபத்தால் அப்பரதனுடைய புத்திரர்களெல்லாம் நஷ்டப்பட்டபொழுது ஆங்கிரஸனான பிருஹஸ்பதியினுடைய புத்திரனும் மஹத்தான ரிஷியாயுமுள்ள பரத்துவாஜரென்றவர், யாகத்திற் சம்பந்தப்பட்ட மருத்துக்களெல்லாம் தருமசங்கரத்தைச் செய்தார். இதைப்பற்றியே வோர் இதிகாசமும் கூறப்படுகின்றது. அதாவது, பரத்துவாஜரென்றவர் யாகத்தில் சம்பந்தப்பட்ட மருத்துக்களுடன் தன் வீரியத்தைக் கலந்தார். அது முதலில் பயனற்றுப்போகப் பின்னும் புத்திரோத்பத்திக்காக நிலைப்படுத்தப்பட்டது. பிறகு ஜதனென்றவன் பரத்துவாஜரிஷியினிடமிருந்து அப்பரதனுக்கோர் குமாரனாகப் பிறந்தான். அவன் பிறந்தவுடன் பரதமஹாராஜன் சுவர்க்கத்தையடைந்தான். பிறகு பரத்துவாஜரிஷியானவர் சிலகாலமிருந்து ஜதனுக்கு அந்த ராஜ்யத்திலபிஷேகஞ்செய்து தானும் தபோவனஞ் சென்றுவிட்டார். அவ்விதராஜன் ஸுஹோத்திரன்! ஸுஹோதா, நயன், திக்தன், கபில

வென்றைந்து மக்களைப் பெற்றான். அவர்கள் ஸுஹோத்திரனுக்குக் காசன், க்ருத்ஸமதி யெனவிரண்டு புத்திரர்கள் பிறந்தனர். அக்கிருத்ஸமதி யென்பவனுடைய மக்களெல்லாம் பிராம்மணர்களாகவும், க்ஷத்திரியர்களாகவும், வைசியர்களாகவுமாயினர். காசன் என்பவனுக்குக் காசியனென்றவர் மக்கள்கள். அவருள் தீர்க்க தபஸென்றவர் சேரிட அக்காசராஜனது குமாரர், அத்தீர்க்க தபஸென்றவரின் குமாரர் பேரறிவாளியான தன்வந்தரியென்றவர். அவர் மகன் கேதுமான். அவனது மகன் வீரனான பீமரதன். அவன் மகன் திவோதாஸன் என்ற சகலராக்ஷஸர்களையுங்கொன்ற மஹாராஜன். அச்சமயத்திலே தான் வாரணஸி நகரத்தைக் க்ஷேமகனென்றவர்க்கன் சூனியமாக்கினன். மேலும் புத்திமானான நிகும்பனென்ற சிவகணபதியாலும் ஆயிரம் வருஷங்கள் வரையில் பாழாகும்படி சபிக்கப்பட்டது. அவ்விதம் அந்நகரம் சபிக்கப்பட்டபொழுது அவ்வரசன் கோமதி நதிக்கரையில் விஸ்தாரமானவோர் நகரத்தைக்கட்டுவித்தான். யதுவமிசத்திலுதித்தபத்ரசிரேணியனென்றவன் கைவசத்தி லவ்வாரணசி யென்ற காசிநகர் அத்திவோதாசனுக்கு முந்தி விளங்கிற்று. பிறகு இவரால் அப்பத்ரசிரேண்யனுடைய புத்திரர்களான நூறு மைந்தர்களும் வெல்லப்பட்டு அக்காசி நகர் தனது கைவசமாக்கப்பட்டது. அப்படிப்பட்ட திவோதாசனுடைய குமாரன் ப்ரதர்த்தனன், அவனுக்கு வத்ஸனென்றும் பார்க்கவனென்றுமிரண்டு மக்கள்கள். அவருள் வத்ஸனுக்கு அளர்க்கனென்றவனும் அவ்வளர்க்கனுக்கு ஸன்னதி யென்றவனும் பிறந்தான்.

முன் கூறப்பட்ட பத்ரசிரேணியனுடைய குமாரனான துர்த்தமனென்ற பேர்போன வரசனானவன் திவோதாஸமஹாராஜனால் சிறுவாலிபனென்ன வுதாசீனம் செய்யப்பட்டிருந்தான். அது சமயத்திலவனும் ஹைஹயனுடைய தோழமைக்கொண்டு அவனுடைய சகாயத்தால் தனது பிதாவைவிட்டு வந்த வக்காசிநாட்டைத் தன்வசமாக்கிக் கொண்டான். ஓ! பார்த்தனே! பகைக்கு முடிவு எவ்விதம் க்ஷத்திரியரால் செய்யத்தக்கதோ, இவ்விதமே இத்துர்த்தமனாலும் செய்யப்பட்டது ஆகையாலிதில் யாதொரு தர்ம விரோதமில்லை.

அவ்வளர்க்கனோ பிரமிக்ஞான முடையவனும் ஸத்தியத்திற்குப் போராயினென்றவனுமாம். இவனது பிதாவான அப்பிரதர்த்தனன் மறுபடியும் அக்காசிநகரைத் துர்த்தமனிடம் இருந்து தன் வயிசத்திற்கு



ஆதீனமாக்கினன் ஆகையால் அக்காசிநகரில் அவ்வளர்க்கன் என்ற மஹா யோகீசுவரனே அறுபதனாயிரத்து நூறு வருஷங்கள் வரையில் தனது யோக மஹிமையால் யௌவனப் பருவமும் வடிவழகுங் குன்றாமல் அந்தப் பட்டணத்தை யாண்டான். அச்சிறப்பு லோபாமுத்திரையென்பவளால் அருளப்பட்டது. மேலும் நிகும்பரது சாபாந்தத்தில் க்ஷேமகனென்ற அவ்ராக்ஷஸனைக் கொன்று அவ்வாரணசியைச் சீர்திருத்திப் புதுப்பித்து யாதொரு இடருமில்லாமல் விளங்கச் செய்தான். அவனுடைய மகன் ஸுநீதன். அவன் மகன் க்ஷேமியன், அவன் மகன் கேதுமான். அவன் மகன் ஸுகேது. அவன் மகன் தர்மராஜன். அவன்மகன் ஆர்த்தன். அவன்மகன் ஸுகுமாரன். அவன் மகன் ஸத்தியகேதுவென்ற மஹாரதன், அவன் மகா பராக்கிரமசாலியும் மிகுந்த தருமிஷ்டனுமாம். வத்ஸனென்றவனுண்டபூமிக்கு வத்ஸராஜ்ஜியங்களென்றும், பார்க்கவர் ஆண்டபூமிக்கு பார்க்கராஜ்யங்களென்றும் உலகத்தில்பிரசித்தம். அவரவர்களுடைய நல்வினைகளால் நயத்திற்கு மூலாதாரமான வீட்டில் நிலைநின்றவர்களும், குருகுலத்திற்கு மூலகாரணர்களுமாம், பரத்துவாஜரது சம்பந்தத்தால் கூறப்பட்டவர்களெல்லாம் ஆங்கிரஸர்களாகியும், பிறகு பார்க்கவகுலத்தில் ஜனித்தவர்களாயினர். ஓ பார்த்தனே! அவ்விதம் ஜனித்தவர்களி லனேகர் பிராம்மணர்களாகவும் க்ஷத்திரியர்களாகவும், வைசியர்களாகவும், சூத்திரர்களாகவுமாயினர். ஸுஹோத்திரனுக்கு பிருஹத் என்றவன் புத்திரன். அப்பிருஹத் என்றவனுக்கு அஜமீடன், த்விமீடன், புருமீடன் என மூன்று மக்களுண்டாயினர். அவருள் அஜமீடனுக்கு மிகுந்த கீர்த்தியுள்ள நீலினீ, கேசினீ, தூமினி யென்ற மூன்று மனைவிகளிருந்தனர். அவருள் கேசினியினிடம் ஜஹ்நுவென்பவர்பிறந்தார். அவர் ஸர்வமேதமென்ற பெரியவோர் யாகத்தைச் செய்துகொண்டிருக்கையில் கங்காதேவியானவள் தனக்குப் பதியாக வேண்டுமென்ற வெண்ணத்துடன் அவரை யணுகினாள், அவர், அக்கங்கையை விரும்பாததால் அக்கங்கையுமவர் யாகபூமியை நனைத்துக் கெடுக்கத் தொடங்க, அதைக் கண்ட இவர் அக்கங்கை ஜலம் முழுவதையும் பானஞ் செய்வதாய் கோபங்கொண்டு கங்கையை நோக்கி ஓ! கங்கையே! மூன்று உலகங்களையும் பாவிப்பிக்கும் பிரவாஹரூபமான ஜலம் முழுமையுஞ் சுருக்கிப் பானஞ் செய்துவிடுகிறேன். இதோ உன் அதிக்கிரமத்திற்குத் தக்க பயனை யனுபவிக்கப் போகின்றாய் என்றுரைத்தபடியே பானஞ் செய்துவிட்டார். அதைக்கண்டவிருந்த மகரிஷிகள் யாவரும்

சுபாதாளித்து அக்கங்கையை அச்சன்னுவிற்குப் புத்திரியாகச் சேர்ப்பித்தனர். அதுமுதலவளுக்கு ஜான்னவியென்ற பெயருண்டாயிற்று. பிறகு யுவனாசுவனுடைய புத்திரியான காவேரியை அச்சன்னு என்றவர் மணம்புரிந்து கொண்டார். அக்காவேரி யென்பவள் கங்கையால் தனது சாபகாரணத்தைக்கொண்டு தன் சரீரத்தை யிரண்டு பங்காக்கப் படைக்கப்பட்டவள். அச்சன்னுவிற்குப் பிரியமான புத்திரன் அஜகனென்ற மிகுந்த வீரியமுள்ளவன். அவ்வஜகனுடைய மகன் பலாகாசுவன். அவன் மகன் குசிகன். அவனெப்பொழுதும் வேட்டையாடுவதிலேயே பிரியமுடையவன். அவன் பல்லவர் என்ற வனசரர்களாற் றுசையப்படு மிகுந்த கஷ்டத்தை யடைந்து, அதன் பின்னிந்திரனைக் குறித்து அவ்விந்திரனுக்குச் சமமான புத்திரனைப் பெறவேண்டுமென்ற எண்ணத்துடன் கடுமையான தவம்புரிந்துவர அச்சமயத்திலத்தவத்திற்கு பயந்து அவ்வரசனுக்குப் பிரத்தியட்சமாகி அவ்விதம் வரமளித்துத் தனது யசத்தைக் கொண்டு காதியென்றவோர் மைந்தனை யீன்றான். ஆகையால் அக்காதியென்பவன் அவ்விந்திரனேயென அறிவாய். காதியின் மக்கள்கள் விசுவாமித்திரன் என்ற விசுவரதன் என்றவரும், விசுவகிருத், விசுவஜித் என்றவர்களும், ஸத்தியவதியென்ற பெண்ணுமாம். ருசிகருக்கு ஸத்தியவதியினிடம் ஜமதக்னி யென்றவர் பிறந்தார். விசுவாமித்திருடைய மக்கள்கள் தேவராதர்முதலியோர். மூவுலகுகளிலும் பிரசித்திபெற்ற அவர்கள் பெயர்களைக் கூறுகின்றேன் கேள். தேவசிரவன், காதியாயினர் என்றவர்களையுண்டாக்கிய கதி என்பவன். சாலாவதியிற் பிறந்த ஹிரண்ணியாக்ஷன், ரேணுவினிடம் இருந்துண்டான ரேணுமான், ஸாங்கிருதி, காலவன், முத்கலன் என்ற மகாபிரசித்தியையுடைய இவர்களாம். கௌசிகர்களாகிய அம்மஹாத்துமாக்களுடைய கோத்திரங்களெல்லாம் மிகவும் மேன்மைபொருந்தியவை. பாணினன், பப்ருவன், தியானஜப்பியர், தேவராதரென்ற அரசர்கள், சாலங்காயனர், பாஷ்கலர், லோஹிதர், யாமதூதர், காரீஷவர், ஸைசிரவர் என்ற இவர்களெல்லாம் கௌசிகரெனவும் மற்றவர் ஸைந்தவாயனரெனவும் பெயர் பெற்றவர்கள். இவர்கள் வேறு ருஷிகுலங்களுடன் விவாகம் செய்யத் தக்கவர்கள். ஓ! மகா ராஜனே பௌரவனுடையவும். பிர்மருஷியான கௌசிகருடையவும் ஸம்பந்தம் இந்த வம்சத்தில் இருப்பதால் இவ்வம்சத்தில் பிர்மக்ஷத்திரமெனப்படும். விசுவாமித்திருடைய புத்திரர்களுக்குள் மூத்தவர் சுனச்சேபனென்றவன். இவன் பிருகு வம்சத்தியவனாயினும் கௌசிக வம்சத்தியவனா



யினன் அவ்விசுவாமித்திருக்கு இத்தேவராதன் முதலிய வேறு பல குமாரர்களுமுளர். திருஷத்துவதியின் மகனான அஷ்டகனுமவர் மைந்தனே. அவனுக்கு லௌஹியென்பவன் பிறந்தான். இவ்விதம் ஜன்னுவின்பரம்பரைக் கூறப்பட்டது.

ஓ! புருஷசிரேஷ்டனான ஜனமேஜயனே! அஜமீடனுடைய வேறோர் வம்சத்தைக் கேட்பாய். அஜமீடனுக்கு நீலியினிடம் ஸுசாந்தியென்பவன் ஜனித்தான். அவனுக்குப் புருஜாதியென்பவன் பிறந்தான். அவனுக்குப் பாஹ்யாசுவனென்றவனுதித்தான். அவனுக்கு முத்கலன், ஸ்ருஞ்ஜயன், பிருஹதிஷு, யவீநரன், கிருமாளாசுவனென்ற ஐந்து மக்கள்களுண்டாயினர். இவ்வைந்து பெயர்களே இப்புவியை யாளப் போதுமானவரென வுரைக்கப்பட்டனர். அவ்வைவருமாண்ட தேசமே ஜனங்கள் நிறைந்த பாஞ்சாலமென்றது. அவைகளை யிரக்ஷிக்கப்போதுமானவர் என்றபொருளையுடையவராதலால் அவ்வைவரும் பாஞ்சாலரென்றகாரணப் பெயரையடைந்தனர். (பாஞ்ச=ஐவர்தொகுதியே, அலம்=போதுமானது.)

முத்கலனுடைய புத்திரன் மௌத்கல்யரென்றவர். இவருடைய வம்சத்தியவரெல்லாம் மஹாத்துமாக்களும் உத்தமமான க்ஷத்திரியசம்பந்தமாத்திரமுள்ள பிராம்மணர்களாயினர். இவரனைவரும் அங்கிரஸ் என்ற மஹரிஷியின் பக்ஷத்தைப்பற்றியவர்கள். காண்வமௌத்கலரென இவர்பெயர் வழங்குகின்றது. மௌத்கல்யருடைய மூத்தகுமாரன் பிர்மருஷியான இந்திரசேனன். அவருக்கு வத்திரியசுவன் பிறந்தான். அவனுக்கு மேனகையிடம் ஆணும்பெண்ணுமான இரட்டைக்குழந்தைகளுண்டாயின. அவைகளே திவோதாஸனென்ற ராஜரிஷியும், அஹல்லியையென்ற பதிவிரதையிற் கீர்த்திபெற்றவளுமாம். அவ்வஹல்லியை என்பவள் சரத்வான்என்றவனுக்குச் சதானந்தனென்ற ருஷிசிரேஷ்டனைப் பெற்றாள். அச்சதானந்தனுக்குச் சத்தியதிருதியென்ற தனுர்வேதபாரங்கதனான புத்திரனுதித்தான். அச்சத்தியதிருதியென்பவன் ஓரப்ஸரஸ்ஸின் எதிரில் மயங்கித்தனது பலத்தைவிட அதுசரஸ்தம்பத்தில் பட்டொழுகியிரண்டாய்ப் பிரிந்து ஆண்பெண்ணிரண்டாக உண்டாயிற்று. அச்சமயத்தில் வேட்டையாடப்போன சந்தனுமஹாராஜன் மிகுந்தகிருபையாலெடுத்து வளர்த்தனர். அக்குழந்தைகளே கிருபனும், கௌதமியென்ற கிருபியுமாம். இவர்களெல்லாம் சரத்துவதர்களெனக் கூறப்பட்டவர்களாம். அன்றியும் அக்கௌதமர்களென்ற

வர்களு மிவர்களேயாம். இதற்குப் பிறகு திவோதாஸனுடைய சந்ததியைக் கூறுகின்றேன் கேள்: திவோதாஸன் புத்திரன் மித்திரயு என்பவன். அவனிடமிருந்து மைத்திராயணன் என்பவனுதித்தான். அவனிடமிருந்து ஸோமனென்பவன் பிறந்தான். இவர்கள் மைத்திரேயர்களெனப்படுவர். மேலுமிவர்கள் பார்க்கவருடைய பக்கத்தைப் பற்றி க்ஷத்திரியதருமத்துடன் கூடியத்துவிஜராயினர்.

ஸ்ருஞ்ஜயனென்ற மஹாராஜனுக்குப் பஞ்சஜனனென்பவன் பிறந்தான், அவனுக்குச் சோமதத்தனென்பவன் ஜனித்தான். அவனுடைய மகன் சகதேவனென்பவன். அவனுடைய மகன் சோமகனென்றவரசன். இவன் அஜமீடனுடைய வம்சமெல்லாம் க்ஷீணமான பின்பு வம்சகாரனாய்ச் சனித்தவன். அவனுடைய மகன் ஜந்துவென்பவன். அவனுக்கு நூறுமைந்தர்களுண்டாயினர். அவர்களுள் சிரேஷ்டன் துருபதனுக்குப் பிதாவானப் பிருஷதன். அத்துருபதனிடமிருந்து திருஷ்டத்யும்னன் உதித்தான். அவனிடமிருந்து திருஷ்டகேது வென்பவன் ஜனித்தான். இவர்களெல்லாம் மஹாத்மாக்களான அஜமீடர்களெனப்படுவர்கள். மேலுமிவர்களுக்குச் சோமகர்களெனவும் பெயர்.

ஓ! ஜனமேஜயனே! அஜமீடனுடைய மூன்றாவது பாரியையும், உங்கள் பெரியோர்களைப் பெற்றவளுமான தூமினியென்பவள் சந்ததியில்லாமல் தனக்கோர் புத்திரனை விரும்பினவளாய்ச் சிறந்தவிருதாசரணைகளுடன் அனேகமாண்டு வரையில் கடுமையான தவத்தைச் செய்தும், நானாவித ஹோமங்களாலக்னியகவானைத் திருப்திசெய்வித்தும், பரிசுத்தமானவாகாரத்தை மிதமாகவுண்டும், அக்னிஹோத்திரத்திற்குபயோகப் பட்ட தருப்பங்களிலேயே படுத்துமிவ்விதம் பலவிதமான நோன்புகளைச் செய்துவந்தனள். அவ்விதமவளது விருதாதிகளெல்லாம் முடிந்தபின் அவளது பர்த்தாவான வஜமீடனுடன்கூட வந்தபோபலத்தால் அத்தூமினியென்ற பட்டமஹிஷிக்குப் புகைநிறமுடையருக்ஷனென்ற வோர் குமாரன் பிறந்தான். அந்தருக்ஷனிடமிருந்து ஸம்வரனென்ற வரசன் பிறந்தான். அவனிடமிருந்து குருவென்ற மஹாராஜன் உதித்தான். அவனே பிரயாகையிலிருந்த பிரதிஷ்டானநகரத்தைவிட்டுக் குருக்ஷேத்திரத்தைப் பணித்தவன். அம்மஹாபாக்கியசாலியான குருமஹாராஜன் அனேகவருஷகாலம் வரையில் இந்திரனைக்குறித்துக் கடுமையானதவம்



புரிந்து முடிவில் அவ்விந்திரனைப் பிரத்தியக்ஷீகரித்து அவ்விந்திரனிடமிருந்து வேண்டியவரங்களைப் பெற்றுக்கொண்டான். அக்குருக்ஷேத்திரமென்றது மிகுந்தபுண்ணியத்தைக் கொடுக்கத்தகுந்ததும், மிகப்பரிசுத்தமானதும், மனதிற்கு ரமணீயமானதும், புண்யவான்கள் வசிக்கப்பட்டதுமாம். அக்குருமகாராஜனுடைய சந்ததியும் மிகுந்த கீர்த்தி பெற்றது. அக்குருவின்மரபினர்க்கும், அக்குருவின்பின் கௌரவர்களெனப் புகழ்பெற்ற பெயருண்டாயிற்று. அக்குருமஹாராஜனுக்குச் சுதநுவா, சுதனு, பரிக்ஷித்து, அரிமேஜயனென நான்கு குமாரர்கள் உதித்தனர். அவருள் மூத்தவனான சுதனுவா என்றவனுக்குச் சுஹோத்திரனென்பவன் பிறந்தான். அவனுக்குச்சியவனன் என்றவறம்பொருந்தபுத்திமான் பிறந்தான். அச்சியவனனிடமிருந்து கிருதயக்ஞனென்ற அனேகமயாகங்களைச்செய்து விசுருதனென்ற இந்திரனுக்கொப்பான குமாரனைப் பிரப்பித்தான். இவனுக்குச் சேதிராஜ்யத்தையாண்ட மஹாவீரனான வசுராஜன் பிறந்தான். இவன் எப்பொழுதும் விமானத்தின் மேலில் ஆகாயத்திலேயே சஞ்சரிப்பவன்; ஆகையாலிவனுக்கு பரிசரவசுவெனவும் புகழ்ப்பெயருண்டு. அவ்வசுவினிடமிருந்து கிரிகை என்றவள் மஹாரதிகனையும், மகததேச மன்னனையும் மிகவும் பிரசித்தி பெற்றவனுமுள்ள பிரஹத்ரதன் என்ற மஹாராஜனையும், மணிவாகனனான குசனென்றவனையும், பிரத்தியக்கிரகனென்றவனையும், மாருதனென்றவனையும், யதுவென்றவனையும், மத்ஸியராஜனையும், பிறகேழாவது குழந்தையான காளியென்ற ஸத்தியவதியையும் பெற்றாள். அவருள் பிரஹத்ரதனென்றவனுக்கு சாக்கிரனென்றவன் ஜனித்தான். அவனுடைய மகன் விருஷபனென்ற மஹாவீரன். அவனுடைய மகன் புஷ்பவானென்ற தருமசீலன். அவனுடையகுமாரன் ஸத்தியஹிதனென்றகீர்த்திமான். அவன்மகன் ஊர்ஜதனென்ற தர்மாத்மா. அவன்மகன் ஸம்பவனென்ற மஹாவீரியசாலி. அவன்பிறக்கும் பொழுது இரண்டு பிரிவாய்ப்பிறக்க அப்பிரிவுகளை ஜரையென்ற தேவதை யொட்டிவைத்தது. ஆகையாலதன்பின்பவன் ஜராஸந்தனெனப்பெயர்பெற்றான். மகாபலிஷ்டனானவவன் எல்லாக்ஷத்திரியர்களையுஞ் செயித்தவன். அவனுடைய புத்திரன் சகதேவனென்பவன். அவன் மகனுதாயுஸ்ஸென்றசீமான் அவ்வுதாயுஸ்ஸென்றவன் மிகவுந்நர்மசீலனான சுருதகர்மனென்ற மைந்தனைப்பெற்றான். அவன்மகதநாடு முழுமையும் வசமாக்கி யாண்டான், இது சுதனுவா என்றவன் வமிசம்.

மூன்றாவதான பரீக்ஷித்து என்றவன் வம்சத்தைக் கூறுகின்றேன் கேள். பரீக்ஷித்து மகாராஜனுக்குச் சிறந்த தருமிஷ்டனான ஜனமேஜயனென்ற குமாரன் ஜனித்தான். அவனுக்கு சுருதசேனன், உக்கிரசேனன், பீமசேனனென மூன்றுமக்கள்களுண்டானார்கள். அம்மூவரும் மஹாபாக்கியசாலிகளும் விருத்தபராக்கிரமமுடையவர்களும் தோள்வலிமையுடையவர்களுமாம். அம்மூவரன்றி ஸுரதன், மதிமான் என்றிரண்டு புத்திரர்கள் பிறருண்டானார்கள். அவருள் ஸுரதனென்றவனுக்குப் பெருந்தவிக்கிரமமுடைய விதூரதன் என்பவன் பிறந்தான். அவ்விதூரதன் என்றவரசனுக்கு ருக்ஷனென்ற மஹாரதிகன் பிறந்தான். அந்த ருக்ஷராஜனுக்கு மறுபடியும் ருக்ஷனென்ற பெயரையுடைய புதல்வனை ஜனித்தான். ஓ! ஜனமேஜயராஜனே! உனது இளைவம்சத்தில் இரண்டு ருக்ஷர் என்றவர்களே. அவ்விதம் பரீக்ஷித்து என்றவர்களுமிருவரே. பீமசேனன் என்றவர் மூவர். ஜனமேஜயனென்றவரிருவர். இதுநிற்க முன்னிரண்டாவது ருக்ஷராஜனுக்குப் பீமசேனனென்ற குமாரன் பிறந்தான். அப்பீமசேனனுக்குப் பிரதீபமஹாராஜான் பிறந்தான். அப்பிரதீபமஹாராஜனுக்குச் சந்தனுமஹாராஜனும் பிறந்தான். அவன் கூடப்பிறந்தவர்கள் தேவாபியும் பாஹ்லிகனுமாம். அம்மூவரும் மஹாரதிகர்களெனப் பிரசித்தர்கள். ஓ! பார்த்திவனே! உன்னுடைய பிறவியே சந்தனுவின்குலம். ஓ! நரேசுவரனே! பாஹ்லிகனுடைய ராஜ்யம் பைசவாலியமென்பது. அவனுடையமகன் சோமதத்தனென்ற கீர்த்திமான். அச்சோமதத்தனிடமிருந்து பூரி, பூரிசிரவஸ், சலன் என்றமூவர் பிறந்தனர். தேவாபியென்ற மஹாத்மா தேவர்களுக்கெல்லாம் உபாத்தியாயரானார். அன்றியுமம்மஹாத்மாவிற்குச் சியவனன் மகனானகிருதன் என்பவன் சிறந்தவன்பன்.

சந்தனுமஹாராஜனோ கௌரவவம்சஸ்தர்களுக்கு முக்கிய புருஷனானான். யாதொருவம்சத்தில் நீ பிறந்தாயோ அந்தசந்தனுவின் வம்சத்தைக் கேள். சிறப்புவாய்ந்த அச்சந்தனுராஜன் கங்காதேவியிடம் தேவவிரதனென்ற குமாரனை பிறப்பித்தான். அவரே பீஷ்மரென்ற பெருங்கீர்த்திபெற்ற பாண்டவர்களின் பிதாமஹன். மறுபடி. அச்சந்தனுராஜன் காளியென்ற ஸத்தியவதியை மணம்புரிந்து அவளிடம் விசித்திரவீரியனென்ற தர்மாத்மாவாயும் பாபமற்றவனுமும் முன்னை மகனைப்பிறப்பித்தனன். கிருஷ்ணத்துவைபாயனர் என்ற வேதவியாஸ பகவான் விசித்திர வீரியனுடைய க்ஷேத்திரமாகிற பாரியையினிடத்தில் திருதராஷ்டிரன், பாண்டு, விதுர



னென்ற மூன்று புத்திரர்களைப்பிறப்பித்தனர். அவருள் திருதராஷ்டிரனென்பான் காந்தாரியினிடம் நூறு மக்களைப் பிறப்பித்தான். அம்மக்களுள் மூத்தவன் துரியோதனன் என்றவன்! அவனே மற்ற தம்பிகளுக்கெல்லாம் பிரபுவாயிருந்தவன், மற்ற யிரண்டாவது பாண்டுராஜனுக்குத்தனஞ்செயனென்ற வர்ஜுனன் பிறந்தான். அவ்வர்ஜுனன் ஸுபத்திரையிடம் அபிமன்யுவென்ற ரணதீரனைப் பெற்றான். அவ்வபிமன்யுவின் மகன்பரீக்ஷித்து என்ற உன்னுடையபிதா. இவ்விதம் ஓ! ராஜனே! நீயாதொருவம்சத்திற் பிறந்தனையோ அப்பௌரவராஜனது வம்ச முரைக்கப்பட்டது.

துர்வஸு, த்ருஹ்யு, அனு, யதுவென்ற மற்ற வம்சங்களைக் கூறுகின்றேன் கேள். அதாவது:—துர்வஸுவிற்கு வன்னியென்பவன் ஜனித்தான். அவன் மகன் கோபானு, அவன்மகன் திரைஸானு, அவன் மகன் கரந்தமன், அவன்மகன் மருத்தன். அம்மருத்தனென்றவரசன் வெகுகாலம் வரையிற் சந்ததியில்லாமலிருந்து, அதற்காகப் பலபலயாகங்களைச் செய்தும், வெகுதக்ஷிணைகளைக் கொடுத்தும், வெகுதானங்களைச் செய்தும் முடிவில் ஸம்மதை யென்றபெண்ணை பெற்றான். அப்பொழுது ஸம்வர்த்தர் என்ற மஹாரிஷிக்குப் பாதிதக்ஷிணைக் கொடுக்கப்பட்டது. ஆகிலும் முடிவில் ஆண் ஸந்ததியில்லாமல் முடிவில் பாபமற்ற துஷ்யந்தனென்ற பௌரமைந்தனைப் பெற்றான். முன்பு யயாதிராஜன் தனக்கு மூப்புவந்தபொழுது யாதொரு சாபமிட்டானோ அச்சாபப்படித் துருவசுவின் வம்சம் முடிவில் பூருவின் வம்சத்திலேயே உட்புகுந்துவிட்டது. அத்துஷ்யந்தன்மகன் கருத்தாமனென்றவரசன். அவனிடமிருந்து ஆக்ரீடனென்றவன் பிறந்தான், அவனுக்கு பாண்டியன், கேரளன், சேரன், சோளன் என நான்கு மைந்தர்கள் ஜனித்தனர். அவர்களுடைய நகரங்களும் ராஜதானிகளும் மிகவுஞ் செழித்தவை. அவருடைய பெயர்களாலேயே அவர்கள் நாடுகளும் புகழ்பெற்றவை. பாண்டியனதுநாடு பாண்டியமென்ற தேசமே. அவ்விதமே கேரளநாடு சோழநாடு என்பனவாம்.

த்ருஹ்யு என்றவன் மகன் பப்ருஎன்பவனும், சேது வென்றவனுமாம். அப்பப்ருவிற்கு அங்காரஸேதுவென்றவன் மகன். அவன் மருத்துக்களுக்குப் பதியாயிருந்தவன். யௌவனாசுவனென்றவனாலவன் யுத்தத்தில் முற்றிலும் கொல்லப்பட்டான். அந்தத் துவந்துவ யுத்தமானது

பதினான்கு ராஸம் வரையிலிடை விடாததிகோரமாக நடத்தப் பட்டது. அவ்வங்காரஸேதுவின் மகன் காந்தாரனென்றவன். அவன் நிர்மாணித்த பட்டணமே காந்தார நகரமும் அதைச் சார்ந்த நாடுகளுமாம். அக்காந்தார நாட்டிலுள்ள குதிரைகள் மிகவும் வேகமும் சிறப்புமுள்ளவைகள் யெனப்பிரசித்தம்.

அனுவிற்குத் தருமனென்ற வொர்மைந்தனுண்டானான். அத்தருமனுக்கு கிருதனென்றவன் ஜனித்தான். அவன் மகன் துருவடன், அவன் மகன் பிரசேதஸ். அவன் மகன் ஸுசேதஸ். இவ்வனைவரும் ஆனவர் என்ற வரசர்கள் முடிவிலிவர் சந்ததியும் பௌரவகுலத்திற் பிரவேசித்தது. இனி யயாதிக்கு மூத்தமைந்தனும் மஹாகீர்த்திமானுமுள்ள யதுவின் வமிசத்தை விஸ்தாரமாக ஆதிமுதல் கூறுகின்றேன் கேள்.

36-ம் அத்தியாயம் முற்றிற்று

---

## 37-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— யது என்பவருக்கு தேவகுமாரர்கள் போன்ற ஸஹஸ்ரதன், பயோதன், குரோஷ்டா, நீலன், அஞ்ஜிகனென்ற ஐந்து குமாரர்களுண்டானார்கள். அவருள் ஸஹஸ்ரதன் என்றவனுக்கு நல்லதருமமறிந்த ஹைஹயன், ஹயன், வேணுஹயன் என்றமூன்று மைந்தர்களுண்டானார்கள். அவருள் ஹைஹயனென்றவனுக்குத் தருமநேத்திரனென்பவன் புத்திரன். அவனுக்குக் காந்தனென்பவன் மகன். அவனுக்கு ஸாஹஞ்ஜனென்பவன் புத்திரன். இவனால்ஸாஹஞ்ஜனி என்ற நகரமேற்படுத்தப்பட்டது. அவனுடைய புத்திரன் மஹிஷ்மானென்றவரசன். இவனால் மாஹிஷ்மதியென்ற நகரம் நிர்மாணிக்கப்பட்டது. அம்மஹிஷ்மானென்றவனுக்குப் பிரதாபசாலியான பத்திரசேணியனென்றவன் பிறந்தான். இவன் வாராணஸி நகரத்திற்கதிபனென முன்பே கூறப்பட்டிருக்கிறது. அவனுடைய புத்திரன் துர்த்தமனென்றவன். அவனுக்குப் புத்திமானும் வீரியவானுமுள்ள கநகனென்றவன் ஜனித்தான். அக்கநகனுக்கு உலகப்பிரசித்தர்களான கிருதவீரியன், கிருதௌஜஸ், கிருதவர்மா, கிருதாக்நியென்ற நான்குகுமாரர்கள் ஜனித்தனர். அவருள் கிருதவீரியனென்பவனுக்கு அர்ஜுனனென்ற, ஆயிரங்கைகளுடன் கூடியவனும், ஏழு தீவுகளுக்கும் சக்கிரவர்த்தியுமாகிய மைந்தனுண்



டானான். இப்பூவுலகமுழுமையும் அவ்வர்ஜுனன் ஆதித்தன்போல் ஒளிவீசுமிரதத்தின்மேலேறிக்கொண்டு தானொருவனாகவே ஜயித்தாண்டான். அவ்வரசன் அநேகமாயிரம் வருஷங்கள்வரையில் ஒருவராலும் செய்யமுடியாத தவத்தையனுஷ்டித்து, அத்திரிமகரிஷியின் [illegible] தரித்த தத்தாத்திரேயபகவானை யாராதித்தான். அதனாற் பிரீதிப்பட்ட தத்தாத்திரேயபகவானும் அக்கார்த்தவீரியார்ஜுனனுக்கு மிகுந்த மேன்மைபொருந்திய நான்கு வரங்களை யளித்தனர். அவைகளாவ நினைத்தபொழுது ஆயிரங்கைகளுதித்தல், அதருமத்திற்செல்லும் மனதைத் தருமத்தாலடக்கி யெப்பொழுதும் தருமத்திலேயே நிலைநிற்றல், க்ஷத்திரியர்களுக்குரித்தான யுத்தத்தாலேயே பூமிமுழுவதுஞ் செயித்துத் தருமவழியாற் பிரஜைகளைத்திருப்தி செய்வித்தல், அநேகம் யுத்தங்களைச்செய்து அதில்வரும் பலபலவைரிகளை வென்று வருங்கால் அப்படிப்பட்ட யுத்தத்திலே தன்னைக்காட்டிலுமதிகரித்த மான் உடையோனால் மரணமென்றிவைகளாம். இப்படிப்பட்ட மேன்மை பொருந்திய அவ்வர்ஜுனனுக்கு யுத்தகாலங்களில் திடீரென்று யோகீசுவரர்களுக்குத் தங்கள் யோகப்பிரபாவத்தாற்போலத் தனதுசங்கற்பமாத்திரத்தால், ஆயிரங்கைகளுமுதயமாகும் வழக்கம். இவ்விதமவனால் ஏழுகடல்களுடனும் ஏழுதீவுகளுடனும் கூடிய இப்பூமிமுழுவதும் க்ஷத்திரியதருமமாகிய யுத்தத்தாற் செயிக்கப்பட்டது. ஓ! ஜனமேஜயனே! அவ்வரசனால் ஏழுதீவுகளிலும் சாஸ்திரமுறைப்படி எழுநூறு யாகங்கள் நடத்தப்பட்டன. அந்த யாகங்களிலெல்லாம் பிராம்மணர்களுக்கு வேண்டியவளவு தக்ஷிணைகள் கொடுக்கப்பட்டன. அந்த யாகங்களும நாட்டப்பட்ட யூபஸ்தம்பங்களும், கட்டப்பட்ட வேதிகளும் கனகமயங்களே. சிறந்தவலங்காரங்களோடுகூடிய விமானங்களிற் சஞ்சரிக்கும் தேவர், கந்தருவர், அப்ஸரஸ்ஸென்ற சகலருடனும்கூட வரதாஸன் மகனும், அறிவாளியும், கந்தர்வனுமான நாரதன், அந்தயாகங்களிலெல்லாமந்த வரசனது மகிமையைக்கண்டு வருமாறு சில பாட்டுகளைப்பாடினான்.

நாரதன்:— உலகத்திலுதித்தவர்களும் இனியுதிப்பவர்களுமான எவ்வரசர்களும் யாகத்தினாலாவது, தானத்தினாலாவது, தவத்தினாலாவது, பராக்கிரமத்தினாலாவது, படிப்பினாலாவது, இந்த கார்த்தவீரியமஹாராஜனுடைய கீர்த்திபெற்ற பதவியை யடையமுடியாதவர்களே. மேலும் மவ்வரசன் ஏழுதீவுகளிலும் கத்திகேடயம், வில், கவசம், ரதமிவைகளு

டன் எப்பொழுதுமங்கங்குள்ள மனிதர்களால் காணப்படுவன்றோ? லவோ. அன்றியும் எவ்வளவு செலவு செய்தாலும் குறைவுபடாத செல்வ வளப்பமில்லாதிருத்தலும், மதிமயக்கமின்மையும், தருமத்தோடுகூடிப் பிரஜைகளுடைய அவ்வரசனுக்குப் பெருங்கீர்த்தியாயிருக் இவ்விதமுள்ள வவ்வரசனென் எண்பத்தையாயிரம் வருஷங்கள் பூமிக்கு ராஜராஜனென சக்கிரவர்த்தியாயிருந்து வாழ்ந்தான். எழுது அவ்வரசனே வேதங்களிற்கூறிய யக்ஞங்களைக் காப்பவ யிலுள்ளக்ஷேத்திரங்களுக்கெல்லாமதி தியுமாயிருந்தான். (க்ஷேத் உழுதுபயிர்செய்யக்கூடிய நிலம்.) அவ்வரசனது இஷ்டம் போலவே மழைபொழிந்து ... டிருந்தமையா லவ்வர்ஜுனனே! யோகியின் வலிமையடைந்தா ... பால் வருணனோ வெனு வியக்கத்தக்கவரு ரான். நாண் ... களால்காய்ச்சிப் போயிருக்கும் தோள்களை ய அவ்வாயிரம் ... ன் தோன்றும்போழுது ஆயிரங்கிரணங்களு ரத்காலத்திலுதித்த சூரியனைப்போல் விளங்குவான். மிகுந்தசிறப் புடைய அவ்வர்ஜுனன் கார்கோடகனென்ற நாகராஜனது மைந்தர்களை யெல்லாம் செயித்து மாஹிஷ்மதியென்ற நகரத்தில் மனிதரோடிக ருடன்கூட சமானமாய் வசிக்கும்படி செய்வித்தான். பின்னும் தாமரைபோன்ற கண்களையுடைய அவ்வர்ஜுனனென்றவன் மாரி காலத்தில் விளையாட்டிற்காகச் சமுத்திரத்தினுடைய வேகத்தைத்தனது கைகளாலடக்கி யெதிர்த்துச் செல்லும்படி செய்வான். நுரை யின் வரிசைகளாகின்ற மாலைகளையுடையதும், கொந்தளித்த ரைக்கிரன்களை யுடையதுமான நர்மதைநதியானது அவ்வரசனது வலிமையைக் கண்டு லஜ்ஜித்துக்கொண்டே பிரவாகித்து வருவது வழக்கம். அவ்வரசனுடைய ஆயிரங்கைகளாலும் ஓர்சமய த்தில் விளையாட்டிற்காகச் சமுத்திரஜலமானது கடையப்படும்பொ ழுது பாதாளத்திலுள்ள பெருத்த வசுரர்களெல்லாம் பயத்தாலோர் க்கம் பதுங்கிக்கொண்டு யாதொரு சேஷ்டைகளுமின்றிப் போவார் கள். பின்னுமவ்வரசன் மற்றோர்சமயத்தில் தனதாயிரம் கைகளாலும், அச்சமுத்திரத்தைப் பொடிபொடியாகச் செய்யப்பட்ட பெருத்தவலை களையுடையதாயும், தத்தளிக்கப்பட்ட திமிங்கிலங்களையுடையதாயும், கைகளின் விசையாலுண்டாகிய காற்றால் நிலைகுலையாக்கப்பட்டப் பெரியநுரையையுடையதாயும், பெருத்தசுழல்களால் சகிக்கமுடியாத தாயும் செய்துவிடுவான். கடலிலிரங்கிக்கலக்கும் காலையிலெல்லாம் பயங்கரனான அவனை மந்தரபருவதமென்றும், அவனது விளையாட்டுக்



களை ... கடைதலென்றும், இனித்தங்களுக்கு அதிலிருந்து அமிருதம் என்ற வேர் வஸ்துகிடைக்குமென்றும் ஸந்தேகித்துக்கொண்டு பற்பல ஸர்ப்பங்களெல்லாம் தங்கள் தங்களை யசைக்காமல் வணக்கத்துடன் எதிர்பார்க்கின்ற வழக்கம். ஓர் சமயத்தில் சாயங்காலவேளையில் அவ்வ ரசனது நடைவேகத்தாற் புறப்பட்டகாற்றால் லங்கேசவரனுடைய வாழைத்தோட்டத்திலுள்ள வாழைகளெல்லாம் முறிய, அதனால் லங்கே சன் கோபித்துப் போர்புரியவர அச்சமயத்தில் அவ்விராவணனை இவ்வர் ஜுனன் அவனுடைய சைனியங்களுடன் தனதுவிற்களின் நாண்களி னாற்கட்டித் தனதுநகரமாகிய மாஹிஷ்மதியில் கைதியாக்கிச் சிறைச் சாலையி லமைசர்களுடன் வரையிற் கட்டவிழ்க்காமலே யடைத்து வைத்தான். அவ்விதமர்ஜுனனால் சிறைச்சாலையிலடைக்கப்பட்ட இரா வணனைக் கேட்ட புலஸ்திய மஹரிஷியானவர் உடனே புறப்பட்டுத் தானேநேரிற் சென்று அவ்வர்ஜுனனைக்கண்டார். மேலும் தனது பேரனாகிய யிராவணனைக்கட்டவிழ்த்து விட்டுத்தரவேண்டுமென யாசிக் கவும் யாசித்தனர். அப்படியே புலஸ்தியருக்குப் பயந்து அவர்பேர னை விட்டொழித்தான். ஒரோர்சமயத்தில் அவ்வர்ஜுனனென்பவன் தனதுவிற்களையெல்லாம் வளைத்து குணத்துவனி செய்வானேயாகில் யுகாந்தகாலத்திலுண்டாகும் காளமேகங்களினின்றுண்டாகு மிடிகளைப் போல் நடுக்கமாயிருக்கும். ஓ! பார்த! அப்படிப்பட்ட மஹாவீரிய முள்ள அவ்வரசனது ஆயிரங்கைகளும், யுத்தகளத்தில் பார்கவனென பரசுராமனுடைய பரசுவென்ற கோடாரி ஆயுதமானது கனகமயமான பனைமரங்களை முறித்துத் தள்ளுவதுபோல் முறித்துத் தள்ளிவிட்டன. ஓ! ஜனமேஜயனே! மேலுமோர் விந்தையைக் கேள். ஒருக்கால் பசிப் பிணியுடன்கூடிய அக்கினிதேவனால் தனதாஹாரத்தின்பொருட்டு அவ்வர் ஜுனனிடம்வந்து யாசிக்கப்பட்டது. அதற்கவ்வீரனான வவ்வரசன் அக்கினிதேவனுக்காகத் தனது ஏழுதீவுகளையும் அதிலுள்ள கிராமம் பட்டணம் ராஜதானி யெல்லாவற்றையும் பிக்ஷையாகக் கொடுத்தான். பின்பு உடனே அக்கினிபகவானும் அர்ஜுனனுடைய உத்திரவுப்படி எங்கும் தஹனிகரணம் செய்ய வாரம்பித்தனர். அப்பொழுது சகலவூர்களும் பட்டணங்களும் தேசங்களும் தீப்பற்றி யெரியவாரம்பித்தன. பிறகு புருஷர்களுக்கெல்லாம் யிந்திரனான அவ்வர்ஜுனனாகிய மஹாத்மாவி னுடைய மகிமையால்; அவ்வக்கினிபகவான் அவ்வரசனுடைய வனேகம் பருவதங்களையும், வனங்களையும், அழகிய வனேகமாசிரமங்களையும், ... னிடையில் அத்ரேயனாகிய வர்ஜுனனுடன்கூட வருணன்

மைந்தனுகிய ஆபவரென்ற மகரிஷியினுடைய வாசிரமத்தை தகனம் செய்ய வாரம்பித்தான். யாதொருவருமனன் மூப்பு ஈத்தயிரான முனி யிருந்த யாதொரு வலியுடனென்றவரைப் புத்திரனுகப் பெற்றாரோ, அவரே இவ்வாபவரென்ற மஹரிஷி. பின்பப்பொழுது அவ்வாபவரென்பவர் மிகுந்த கோபத்தால் அவ்வர்ஜுனனை நோக்கி ஒ! ஹைஹயனே! நான் வசிக்கப்பட்ட உனதான யிவ்வனத்தை மட்டில் எக்காரணத்தால் நீ நீக்கித்தகனம் செய்யவில்லையோ, அக்காரணத்தாலுன்னுற் செய்யப்பட்ட இப்பெருந்த காரியத்தையும், இக்காரியத்தாலுனக்குண்டாகிய கீர்த்தியையும், இனி குருகுலத்திற் பிறக்கப்போகின்ற பாண்டுவின் மகனுகிய மற்றோர் அர்ஜுனனென்பவன் கெடுக்கப்போகின்றான். அவனன்றியே ஜமதக்கியின் மைந்தனும், மஹாதபஸ்வியாயும், பிராம்மணனும், பிரதாபசாலியாயுமுள்ள ராமனென்ற பெருந்தோள்வலிமையுடையோன் யுத்தத்திற் போராடி உன்னுயிரங்கைகளையும் வெட்டி முடிவிலுன்னையும் கொல்வான்.

வைசம்பாயனர்:— ஓ! ஜனமேஜயனே! தருமத்தோடு நியாயத்தவராது பிரஜைகளைக்காப்பாற்றி வந்தவனும், குறையாத செல்வமுடையவனுமாக விளங்கிவந்த அக்கார்த்தவீரியனுக்கு அம்முனிவரது சாபத்தால் பரசுராமனிடமிருந்து மரணமென்றதி வ்விதமேற்பட்டதும், அவ்வரசனுக்கு இதன்முன்பே வரதானமாக தத்தாத்ரேயரிடமிருந்து பெறப்பட்டதேயாம். அவனுடைய ஆறு மக்கள்களில் அவனுக்குப்பிறகு மிச்சமானவர் மஹாத்மாக்களான ஐவர்களே. மேலுமவர்களெல்லோரும் வில்வித்தையிற் றேர்ந்தவர்களும், தேகவலிவுடையவர்களும், மனோவலிமையுடையவர்களும், தருமசிந்தையுள்ளவர்களும், மஹாரதிகர்களும், சிறந்த புகழுடையவர்களுமாம். சூரஸேனன், சூரன், திருஷ்டோக்தன், கிருஷ்ணன், ஜயத்துவஜனென்ற ஐந்நாமதேயங்களு மவ்வைவருடையனவாம். அவருள் ஜயத்துவஜனென்பவன் அவந்தி தேசாதிபதி. ஜயத்துவஜனுடையமகன் மகாபலிஷ்டனுன தாலஜங்கனென்றவன். அவனுக்குத் தாலஜங்கர்களென்ற நூறு மக்கள்கள் ஜனித்தனர். மகாத்மாக்களான ஹைஹயரென்ற அவர்களுடைய குலத்தில் வீதிஹோத்திரர், ஸுஜாதர், போஜர்! அவந்தியர் என்றவர் உற்பவித்தனர். அந்தாளஜங்கர்களும்பாரதர்களும் தாலிகோத்திரமென்ற பொதுப்பெயரை யுடையவர்கள். அவர்களுடைய மக்கட் பரம்பரைகளெல்லாம் எண்ணிறைந்தவைகளாதலால் இங்கு முழுமையும் கூறமுடியாதவை. விருஷதன் முதலிய யாதவர்



களெல்லாம் பரிபூரணமான இஷ்டசித்திகளையுடையவர்கள். தனதுவம்சத்தை விருத்திக்குகொண்டுவரும் பாக்கியம் முன்னே அவ்விருஷனென்ற மஹாராஜனுக்கு மதுவென்ற மகன் பிறந்தான். அவனுடைய நூறுமக்கள்களுள் வமிசதாரியானமகன் விருஷணனென்றவன். அவ்விருஷணனிடமிருந்து விருஷ்ணிகளென்ற வகுப்பினர் உண்டாயினர். மதுவினிடமிருந்து நேரிற் பிரிந்தவர்களாதலால் மாதவர்களென்றும், யதுவின்வம்சினராதலால் யாதவர்களென்றும் ஹைஹயராஜனது சம்பந்தத்தால் ஹைஹயரென்றும் குலப் பெயர்களையுடையவராயினர். அவ்விதமே ஓ! பாபமற்ற ஜனமேஜயனே, அவ்வனைவரும் சூரர்களாகவும், வீரர்களாகவும், சௌரியமுள்ள சேனையையுடையவர்களாகவும் கூறப்படுகின்றனர். புகழ்பெற்ற சூரஸேனனென்ற மகாராஜனால் வெகுகாலமாளப்பட்டதால் அவனதுராஜ்யத்திற்குக்கூட சூரஸேனமென்ற பெயருண்டாயிற்று. ஓ! அன்பனே. எவன் அக்கார்த்த வீரியார்ஜுனமஹாராஜனுடைய பிறப்பையுமிருப்பையும் பற்றின இச்சரித்திரத்தை தினந்தோறும் கூறுகின்றனே, அவனுக்குச் செல்வம் குன்றுது. அழிந்த செல்வமும் கைகூடும்.

இவ்விதம் யயாதி மஹாராஜனுடைய புத்திரர்களான புகழ்பெற்ற மஹாவீரர்களுடைய அவ்வைந்து குலங்களும், பஞ்சமஹாபூதங்கள்போல் இவ்வுலகங்களை யெல்லாம் போற்றிவருகின்றன. அறம் பொருள்களின் நியாயமறிந்த எந்த வரசன் இவ்வைந்து குலபரம்பரைகளைச் செவிதாழ்த்திக் கேட்பானே அவன் தன்னைந்து பொறிகளுக்கு மடக்கமுள்ள வீசுவானுவான். மேலும் அவர்கள் கதையைக் கேட்பதாலும் தரிசிப்பதாலும் துர்லபங்களான ஆயுஸ், கீர்த்தி, சந்ததி, செல்வம் பூமியென்ற ஐந்துவரங்களையுமடைவான்.

ஓ! பாரதனே! இனிக் குரோஷ்டாவென்ற மஹாராஜனது சிறந்த பௌருஷத்துடன்கூடிய வமிசத்தைக் கேள். யதுவின் வமிசத்தை வகிப்பவனும், யாகம் புண்ணிய மிவைகளைச் செய்த தவனுமான அக்குரோஷ்டாவின் வம்சத்தைக் கேட்பவன், தான்செய்த சகலபாபங்களின்றும் விடுபடுவான். ஏனெனில், அம்மஹாராஜனது வம்சத்திலேயே விருஷ்ணிகுலதிலகரான ஸ்ரீஹரியானவர் அவதரித்தார்.

37-வது அத்தியாயம் முற்றிற்று.

## 38-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:—குரோஷ்டாவென்பவனுக்கு காந்தாரியென்றும் மாத்திரியென்றும் இருமனைவிகளிருந்தனர். அவர்களுள் காந்தாரியென்பவள் மஹாபலசாலியான ஸுமித்திரனென்பவனைப் பெற்றாள். மாத்ரியென்பாளும் யுதாஜித்து, தேவமீடுஷன் என்ற இருமக்களைப் பெற்றனள். ஆகையால் அவ்வரசனுடைய வம்சம் மூன்றுவகையாயின. அவருள் மாத்திரியின் மகனான யுதாஜித்தென்பவனுக்கு விருஷ்ணி, அந்தகனென்ற இருமக்கள்களுண்டாயினர். அவருள் விருஷ்ணியென்பவனுக்கு சுவபல்கன், சித்திரகனென்ற இருமக்கள்கள் ஜனித்தனர். ஓ! மகாராஜனே! அச்சுவபல்கனென்ற அரசன் எவ்விடத்தில் வசிப்பானோ, அவ்விடத்தில் வியாதிகளின் பயமாவது மழைபொழியாத துர்ப்பிக்ஷபயமாவது உண்டாகமாட்டாது. ஒருக்கால் காசிராஜனுடைய தேசத்தில் மூன்றுவருஷங்கள் வரையில் இந்திரன் மழைபெய்யப்பொழியவேயில்லை. அப்பொழுது அதற்காக அக்காசிராஜன் அச்சுவபல்கராஜனைத் தனதுநாட்டிற்கு வரும்படி வேண்டிக்கொண்டனன். அவ்விதமே அச்சுவபல்கராஜன் போய் வசிக்க அக்காசிநாடு மழையாற் செழித்தது. ஆதலால் காசிராஜனுடைய மகளான காந்தினி என்பவளை மணம்புரிந்து கொண்டான். அக்காந்தினியென்பாள் நாடோறும் பிராம்மணருக்குப் பூதானம் செய்துகொண்டே வந்தனள். ஆகையாலேயே அவளது பெயர் காந்தினியென வழங்கப்பட்டது. (காம்—பூமியை தினி—நித்தியம் தானம் செய்பவள்) அவள் பிறக்குமுன் தாய்வயிற்றில் வெகுவருஷங்கள்வரையில் இருந்திருந்தபொழுது, அவளது பிதா தன்பாரியையை யணுகி ஓ! கர்ப்பமே! எத்தினைவருஷங்களாயின. இனி பிறப்பாயாக, ஏன் தாமதிக்கின்றாயென மொழிந்தனன். அதைக் கேட்ட கர்ப்பசிசு பிதாவைநோக்கி ஓ! பிதாவே! நான் பிறந்தாற்றினந் தோறும் பூதானம் செய்வேன். அது உமக்குச் சம்மதமானால் பிறக்கின்றேனென்றது. அதைக்கேட்ட அவ்வரசனுமப்படியே சம்மதித்தான். பிறகுதான் அக்காந்தினி ஜனித்தாள். அக்காந்தினியென்பவள், அச்சுவபல்கனிடமிருந்து நற்கொடையாளனும், யாகப்பிரியனும், தைரியசாலியும், படிப்பாளியும், பெரியோர்களுக்கன்னதாதாவுமான அக்ரூரர் என்ற மஹாத்மாவைப் பெற்றனள். அவ்வக்ரூரரென்ற மஹாத்மாவானவர் உக்கிரசேனை யென்றவளிடம் உபாசங்கன், மத்து, மிருதுரன், அரிமேஜயன், அவிக்ஷிபன், உபேக்ஷன், சத்ருக்னன், அரிமர்த்



தனன், தருமதிருக், யதிதர்மன், கிருத்திரபோஜாந்தகன், ஆவாகன், பிரதிவாஹன், என்ற புத்திரர்களையும், சுந்தரியென்ற வொரு பெண்ணையும் பிறப்பித்தார். அப்பெண் ஜனித்தபிறகு பிரசேனன், உபதேவனென்ற இருபுத்திரர்களுண்டாயினர்.

சித்திரகனென்ற ராஜனுக்குப்பிருது, விப்ருது, அசுவக்கிரீவன், அசுவபாஹு, ஸுபார்சுவகன், கவேஷணன், அரிஷ்டநேமி, அசுவன், சுதர்மன், தருமபிருத், ஸுபாஹு, பஹுபாஹு, சிரவிஷ்டை, சிரவணை என்றமக்கள்கள் ஜனித்தனர். பிறகு அசுமகி யென்றவளிடம் தேவமீடுஷன் என்ற அரசன் சூரனென்ற புத்திரனைப் பெற்றான். அச்சூரராஜனுக்குப் போஜையென்றபட்டமஹிஷியிடம், நீண்டகைகளையுடைய வசுதேவனென்ற ஆநகதுந்துபி, தேவபாகன், தேவசிரவன், அநாதிருஷ்டி, கநகன், வத்ஸவான், கிருஞ்ஜிமன், சியாமன், சமீகன், கண்டூஷன், என்ற பத்து புத்திரர்களும், பிருதுகீர்த்தி, பிருதை, சுருததேவை, சுருதசிரவை, ராஜாதிதேவியென்ற ஐந்துபுத்திரிகளும் பிறந்தனர். இவ்வைந்து ஸ்திரீகளும் புகழ்பெற்ற வீரியமுள்ள குமாரர்களுக்குத் தாய்மார்களாவர்கள். ஆநகதுந்துபியென்பவர் பிறந்தபொழுது, ஆகாயத்தில் தேவதுந்துபிவாத்தியம் முழக்கப்பட்டது. மேலும் அச்சூரனது அரண்மனையில் புஷ்பமாரி பொழியப்பட்டது. மனிதவுலகத்தில் எவ்வளவு மனிதர் ஜனித்திருக்கினும் அவ்வசுதேவருக்கு நிகரான வேறுமனிதரே இப்பூவுலகிலில்லை. அவரது காந்தியைக் கண்ணுற்றால் சாக்ஷாத்திய பூர்ணிமைச்சந்திரன் போற் காணும். அவ்வைந்து பெண்களுக்குள் பிருதையென்ற பெண்ணை குந்தியென்ற அரசன் தன்பெண்ணாகப் பாவித்தான். அவ்விதமே சூரராஜனும் வயது சென்றவனும் பெருமை பொருந்தியவனுமான அக்குந்திபோஜனுக்கு அப்பிருதை யென்றவளைப் பெண்ஸந்தானமாக ஈன்றான். ஆகையால் அப்பிருதையானவள் குந்தியெனப் பெயர்பெற்றாள். குந்தி போஜனது மகளென வழைக்கவுமிதே காரணம். சுருதத்தேவை என்பவளிடத்தில் கேகய ராஜனுக்கு ஸந்தர்தனன் முதலியோர் பிறந்தனர். சுருதசிரவையினிடத்தில் சைத்தியனுக்கும் தமகோஷனென்றவனுக்கு மஹா பலிஷ்டனான சிசுபாலனென்பவன் பிறந்தான். இவனே முன்பு தைத்தியரென்ற அசுரர்களுக் கெல்லாம் அரசனாயிருந்த ஹிரண்யகசிபுவென்றவன். பிருது (சிருத) கீர்த்தியென்றவளிடம் விருத்தசர்மா வென்றவனுக்குக் கருஷ தேசாதிபதியான தந்தவக்கிரனென்பவன் பிறந்தான். பிருதை யென்ற குந்தியைப் பாண்டு

மணம் புரிந்து கொண்டான். அக்ருதியிடம் சுருமாரனிடமிருந்து யுதிஷ்டிரனென்பவரும், யாமிதேயனிடமிருந்து பீமசேனனும், இந்திரனிடமிருந்து அர்ஜுனனும் பிறந்தார்கள். இவ்வுலகத்தில் இந்திரனையொத்த அவர்களுக்கு நிகரான மற்றொருத்தர் கிடைப்பது மிகவுமரிது.

பிறகு முன்கூறப்பட்ட சாத்ராயின் குமாரனான அசமஞ்சினிடமிருந்து சினி யென்பவனுண்டானான். அவனது மகன் ஸத்தியகன். ஆண் மக்களுள்! யுயுதானன், ஸாத்யகி யென்ற இருவர்கள். அவருள் யுயுதானனுக்கு அஸங்க னென்பவன் மகன். அவனுடைய மகன் புமி யென்பவன், அவனுக்கு யுகந்தரன் என்பவன் மகன், இவனோடு அவ் வம்சம் பூர்த்தியடைந்தது. மகா பாக்கியசாலியனான வுத்தவனென்பவர் தேவபாகன் என்பவனுடைய புத்திரன். தேவசிரவசானவர் அவ்வுத்தவரை உண்மையறிந்தவர்களுக்குள் உத்தமரெனப் பெரியோர்கள் கூறுவார்கள். மற்றொருவர் அசமஞ்சனிடத்தில் அநாதிருஷ்டியென்ற அவ்வசுதேவனது தம்பியானவர் கீர்த்திமானான யசஸ்வீ யென்பவனைப் பெற்றார். தேவசிரவனென்ற மற்றவர் ஸ்ரீக்கிரியனான சத்ருக்னனென்பவனைப் பிறப்பித்தார். அந்த தேவசிரவனென்பவர்க்குப் பிறந்த அச்சத்ருக்னனென்பவனே வேடர்களென இவ்வுலகத்தில் புகழ் பெற்ற ஏகலவ்யனென்பவன், ஓ! ராஜனே! அம்மகன் பிறந்தவுடன் வேடர்களால் வளர்க்கப்பட்டு வந்ததனால் வேடனாகத் திரிந்தான். வத்ஸாவானென்பவன் சந்ததியில்லாதவன், ஆகையால் அவனுக்குச் சூரனானது மகனும், பிரதாபசாலியுமான வசுதேவன் தனது ஒளரஸ குமாரனான கௌசிகனென்ற புத்திரனை தத்தமாய்ச் செய்து வேதவிதிப்படித் தானம் வார்த்துக் கொடுத்தனர். அவ்விதமே சந்தானமில்லாத கண்டூஷனென்றவனுக்கும், விஷ்வக்ஸேனன் சில மைந்தர்களைத் தானமாய்க் கொடுத்தார். அவர்கள் யாவரெனில்:— சாருதேஷ்ணன், ஸுசாரு, பஞ்சாலன், கிருதலக்ஷணன் என்பவர்களாம். யாதொருவன் ஒருபொழுதும் வெளியிற் சென்றால் யுத்தமில்லாமற்றிரும்பானோ, வெளிக்கிளம்பிப் போகும் பொழுது எவனுடன் கூட வநேகம் காக்கைகள் கூடப் போய்க்கொண்டேயிருக்குமோ? எவன் சாருதேஷ்ணனால் வேட்டையாடப்பட்ட இனிப்பான வுயர்ந்த மாமிசத்தைப் புஜிப்போமெனக் கூறுவனோ, அப்படிப்பட்ட கஷவனுக்குத் தந்திரிஜன், தந்திரிபாலனென்ற இரு புத்திரர்களுண்டாயினர். வீரன், அசுவஹானன் என்ற இருவர்களும் கிருஞ்சிமனென்பவன் புத்திரர்கள். ஶ்யாமனென்பவன் மகன் சமீகன்.



சமீகன் ராஜ்யாதிபதியாயிருந்து, போஜகுலத்தின் வெறுப்படைந்து புருஷ கீர்த்தியையும் பரலோக சுகத்தையும் கருதி ராஜசூயயாகத்தை முறைப்படி செய்தான். அவனுக்கு சத்ருக்களையடக்கும் விமோசனனென்பவன் பிறந்தான். இனிமேல் புண்ணியவானான வசுதேவருடைய சந்தானங்களைக் கூறுகின்றேன் கேள். இவ்விதம் மூன்று பிரிவுகளையுடையதும், வெகு விஸ்தாரமானதும், வெகு கிளைகளையுடையதுமான விருஷ்ணி மஹாராஜனுடைய வம்சத்தை எவன் கேட்கின்றானோ படிக்கின்றானோ மனதில் தரிக்கின்றானோ அவன் செல்வம் நிறைந்த பலவிதமான சந்ததிகளை யடைந்து வாழ்வான்.

38-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 39-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— ஆநகதுந்துபியென்ற அவ்வசுதேவனுக்குப் பௌரவியான ரோஹிணி, உத்தமியான இந்திரை, வைசாகி, பத்திரை, ஸுநாமனி, ஸஹதேவை, சாந்திதேவை, ஸ்ரீதேவை, தேவரக்ஷிதை, விருகதேவி, உபதேவி, தேவகி, ஸுதனு, படவை என்றவர்கள் மனைவிகள். அவர்களுள் ஸுதனுவும், படவையும் பணிவிடைசெய்யும் பரிசாரகைகள், பௌரவியென்ற ரோஹிணியென்பவள் பாஹ்லீக ராஜனது மகள். அவளே பட்டமஹிஷியாய் விளங்கியவள். இவ்விதம் பதினான்கு பாரியைகளையுடைய அவ்வசுதேவர் இராமனென்ற மூத்தகுமாரனையும் சாரணன், சடன், துர்த்தமன், தமனன், சுவப்ரன், பிண்டாரகன், உசீனரன் என்ற புத்திரர்களையும் சித்திரையென்ற புத்திரியையும் பட்டமஹிஷியான அந்த ரோஹிணியினிடம் பிறப்பித்தனர். இவ்விதம் ரோஹிணியின் ஸந்தானங்கள் பத்து. பிறகு வசுதேவரிடமிருந்து தேவகியினிடத்தில் மிகுந்தகீர்த்திமானான சௌரியென்ற ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்தார். அச்சித்திரையென்பவளே பிறகு ஸுபத்திரையென்ற பெயரையடைந்தவள். இராமனிடமிருந்து ரேவதியிடத்தில் நிசடன் என்றவன் பிறந்தான். சுபத்திரையிடத்தில் பார்த்தனிடமிருந்து ரதிகனான அபிமன்யுவென்ற ராஜகுமாரன் ஜனித்தான். அக்ரூரனிடமிருந்து காசிகன்னியினிடத்தில் ஸத்தியகேதுவென்பவன் பிறந்தான். வசுதேவ

சிடமிருந்து மற்றமனேகர்களிடமிருந்தும் பெற்றவர் ஜனித்தனரோ, அவர்கள் பெயரைக் கூறுகின்றேன், கேள். ஓ பௌரவனே! விருஷ்ணிவம்சத்தவர்களும் சாத்வததேசத்தவர்களுமான மக்கள். தேவரக்ஷிதையென்றவள் உபாஸங்கவரனென்ற புத்திரனைப் பெற்றாள். விருகதேவியென்பவள் மகாத்மாவான அகாவஹனென்ற மைந்தனைப் பெற்றாள். திருகர்த்ததேசாதிபதியான வைகிராயணனென்றவரோர் ஸமயத்தில் யாதவர்கள் சபையில் வந்திருந்த கார்க்கியமஹரிஷியை நோக்கிப்பரிஹாஸமாக, ஓ! மஹரிஷியே! தமக்கு ஆண்மையில்லையோ அதனாலேயே தமக்கு ஸந்ததியில்லை யென நினைக்கின்றேனெனக் கூறியதுமன்றி பலபேர்களுடன் கூடி பரிஹாஸிக்கத்தலைப்பட, அதைக்கண்ட அந்த யாதவர்களெல்லாம் கைகொட்டிக்களிக்க அதனால் அந்த கார்க்கியமஹாமுனிவர் அடங்காத கோபங்கொண்டு தெற்கு தேசத்தை நாடியங்கு சூலபாணியைக் குறித்துத் தவம் புரிந்தார். பிறகு சூலபாணியும் பிரத்தியக்ஷமாகவந்து பிரஸன்னமாக, கார்க்கியரும் யாதவர்களை ஜயிக்கத்தக்க வோர் புதல்வனை வேண்டினர். அவ்விதமே வரனைக்கொடுத்து மறையுமந்தர்த் தானமாயினர். பிறகு அந்த கார்க்கியர் 12-வருஷபர்யந்தம் இரும்புப் பொடியைத் தின்றுகொண்டிருந்து முடிவில் கோபாலிபோல் வந்த திரி அப்ஸரஸ்திரீயிடம் புணர்ந்து அவளிடம் வண்டுபோன்ற நிறத்தோடு கூடிய வோர்புத்திரனைப் பிறப்பித்தார். அப்புத்திரனை யத்தேசத்தை ஆண்ட யவனராஜன் விரும்ப அவனிடமே கொடுத்துவிட்டனர். ஸந்ததியில்லாத அந்த யவனராஜன் தனதரண்மனையில் மகவுமானை யாய் அக்குழந்தையை வளர்த்துவந்தான். அவனை யுத்தத்தில் குதிரை கள்வஹிக்கும் உடல்கருத்திருந்ததால் காலனென்றும் யவனராஜனதரண் மனையில் வளர்ந்ததால் யவனனென்றும் மனிதர்யாவரும் விளங்கிற்று. அப்படிப்பட்ட காலயவனனென்பவன் ஒருசமயத்தில் யுத்தத்திலாசை கொண்டவனாய்த் தனது பக்கத்திலுள்ள மந்திரிகளைக் கேட்க அப்பொழுது அச்சபையிலிருந்த நாரதமுனிவர் விருஷ்ணிகளையும், அந்தகர்களையும் குறிப்பிட்டுக் கூறினர். அதைக்கேட்ட அக்காலயவனனும், கோரமான சேனையுடன் மதுராபுரியை முற்றுகையிட்டான். மேலும் அவ்விருஷ்ணி முதலியோரிடம் தூதனையனுப்பினன். பிறகு அவ்விருஷ்ணி அந்தகர் முதலிய யாவரும் காலயவனனிடம் பயந்து, மகாபுத்திமானான ஸ்ரீகிருஷ்ணனை முன்னிட்டுக்கொண்டு மந்திராலோசனை செய்து முடிவில் அவர்களெல்லோரும் நகரத்தைச் சத்துருவசம்விட்டு வெளியிலேயோடிப்போவ தென நிச்சயித்துக் கொண்டார்கள். பிறகு அவ்விதமே அவ்வனை



வரும் பிநாகியான சங்கர பகவானுடைய வரப்பிரதான வலிமையை யாலோசித்துத் தற்காலம் சிறந்த மதுரா நகரத்தைவிட்டு த்வாரவதி யென்ற புதிய வோர்நகரத்தை யேற்படுத்திக்கொண்டு அதில் வசிக்க மனமுடையவர்களாய் குசஸ்தலியென்ற புண்ணிய தேசத்தை யடைந்தனர். இவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஜன்மத்தைச் சுருக்கமாய்க் கூறிய இவ்வத்தியாயத்தை, எவன் பரிசுத்தனாகவும் ஜிதேந்திரியனாகவும் பர்வகாலங்களில் கேட்பானோ, அல்லது கேட்பிப்பானோ அவன் சிறந்த புத்திமானாகவும், முக்கடன்களையும் கடந்தவனாகவும், சுகியாகவுமாவான்.

39-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 40-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— அந்தக் குரோஷ்டாவென்ற வாசனுக்கோ மிகவும் கீர்த்திமானான விருஜினீவான்என்ற மற்றோர் மைந்தனிருந்தான். அவனுக்கு வேள்வியிற் சிறந்த ஸ்வாஹியென்றவன் பிறந்தான். அவனுக்கு உசத்த்ரு என்ற காவலன் பிறந்தான். அவன்அனேகம் யாகங்கள் பெருத்த தக்ஷிணைகளுடன் தேவர்களைத் திருப்தி செய்வித்தான். புத்திரசந்தானத்தை விரும்பியதற்காக வோர் யாகத்தைச் செய்ய வதனாற் சித்திரரதனென்ற சிறந்த கர்மங்களோடு கூடிய மைந்தனுதித்தான். அவனுக்கு வீரனும், யாகசீலனும், பெருத்த தக்ஷிணையை யுடையவனுமுள்ள சசபிந்து வென்றவன் பிறந்தான். அவன் ராஜருஷிகளுக்குட் சிறந்த நல்வினைகளைச் செய்தவன். பிருதுசிரவனென்ற பெருங் கீர்த்தியை யுடையோன், அவனது மகன் அவனுக்குப்பிறகு பார்த்தசிரவனென புராணமறிந்தோர் கூறுகின்றனர். பிறகு யக்ஞனென்றவன் ஜனித்தான். அவனுடைய மகன் உசதன். அவனுடைய மகன் சினேயுவென்பவன். அவனுடைய மகன் மருத்தன் என்றவன். அவனுடைய மூத்தமகன் கம்பளபர்ஹிஷன். அவனுடைய மகன் ருக்மகவசன். அவன் சிறந்த பல யாகங்களுடையபலத்தாற் ஜனித்தவன். வில்லுங்கையும் கவசமு முடனுமான நூறு க்ஷத்திரிய வீரர்களை யேககாலத்திற் செயித்து அதன் பின் உத்தமமான இராஜ்ய ஸம்பத்தை யடைந்தான். அந்த ருக்மகவசனிடமிருந்து ருக்மேஷு, பிருதுருக்மன், ஜியாமகன், பாலிதன், ஹரியென்ற ஐந்து மக்கள் ஜனித்தனர். அவருள் பாலி

தேசமும் ...களையும் விதேக ராஜனுக்குத் தானமாய்க் கொடுத்தனன். ருக்மகவசனென்றவன் தந்தையின் ராஜ்யத்தில் அபிஷேகிக்கப்பட்டான். பிறகு ருக்மேஷுவென்றவனை வேறு இணங்கியிருந்தான். ஜ்யாமகன் என்றவன் இராஜ்யத்தினின்றும் மற்றவர்களால் துரத்தப்பட்டு வனத்தில் ஆசிரமத்தை யடைந்து வசித்துவந்தான். அந்தச் சமயத்தில் பக்கபலமில்லாமலும், மனதில் மாத்திரம் ... அங்குள்ள பிராம்மணர்களால் சமாதானிக்கப்பட்டுச் சிறிது காலங் கழித்துப் பிறகு தானொருவனாகவே இரதத்திலேறிக் கொடிகட்டிக் கையில்வில் பிடித்து நருமதைக் கரையிலுள்ள வேறோர் தேசத்தை ஜயித்து அங்கு மிருத்திகாவதி யென்ற வேறோர் நகரத்தை நிர்மாணித்து அதினின்றும் ருக்ஷவானென்ற மலையை ஜயித்து அங்குள்ள சுக்திமதியில் வசித்தான். அவனுக்கு சைப்பியையென்றும் பதிவ்ரதையென்றும் பெயருடைய மஹாபதிவிரதை மனைவி. வெகுகாலம் வரையில் அவ்வரசன் புத்திர சந்ததியற்றவனாயினும் இரண்டாவது மனைவியை விரும்பவில்லை. இவ்விதமிருக்கையில் ஒருக்காலோர் பெருத்த போருண்டாக அதிற் சென்று போராடி முடிவில் ஜயம்பெற அதில் அகப்பட்ட வேறோர் சிறு பெண்ணைக் கண்டழைத்துக் கொண்டுவந்து தன்பாரியை யிடம் காட்டி மிகுந்த பயத்துடன் ஏ! நாயகியே இப்பெண் உனது மருமகளென்று உரைத்தான். இதைக் கேட்ட அவனது தேவியாரும் இவள் யாருடைய மகளென வினவினள். அதைக் கேட்ட ஜ்யாமக ராஜனும் தேவியாரை நோக்கி ஏ! தேவியே, உனக்குப் பிறக்கும் மைந்தனுக்கு இவ்வுபதானவி யென்பவள் மனைவி யாவாளென்றனன். பிறகு அதேவிதம் அக்கன்னிகையின் அற்புதமான தபோவலிமையால் வயது முதிர்ந்தவளாயினும் அச்சைப்பியை யென்ற பட்டமஹிஷியும் விதர்ப்பனென்ற வோர் புத்திரனைப் பெற்றாள். அவளை மணம் புரிந்த அவ்விதர்ப்ப ராஜன் சிறந்த க்ஷத்திரியவான்களான கிருதன், கைசிகனென்ற இருமக்களையும் அதன் பின் லோமபாதனென்ற மூன்றாமவனையும் ஜனிப்பித்தான். அவ்லோமபாதன் மகன் பப்ருவென்பவனும், அவனுக்கு ஆக்ருதி யென்றவனும், அவனுக்குக் கைசிகனென்றவனும், அவனுக்குச் சேதி யென்றவனும் உதித்தார்கள். அச்சேதி ராஜனைப்பற்றியே பிற்பட்டவர்களுக்கெல்லாம் சைத்திய ரென்ற குலப்பெயருண்டாயிற்று. மேலும் அவ்விதர்ப்பனுக்குப் பீமனென்ற மற்றொரு குமாரனிருந்தானல்லவா, கிருதனென்ற அவனுடைய மகன் குந்தி யென்பவன். அவனுக்குத் திருஷ்டகன் என்றவன் மகன். அவன் போர் வீரனும் பிரதாப



சாலியுமாம். அத்திருஷ்ட ராஜனுக்கு ஆவந்தன், தசார்ஹன், பலிஷ்டனான விஷஹரன் என்ற மஹாசூரர்களான மூன்று மக்கள் தோன்றினர். அவருள் தசார்ஹனது மைந்தன் வியோமன். அவனிடமிருந்து பிறந்தவன் ஜீமூதன். அவனுடைய மகன் விக்ருதியென்பவன். அவனுக்குப் பீமரதனென்பவன் மகன். அவனுடைய புத்திரன் நவரதன் என்பவன். அவனுடைய மகன் தசரதன், அவனுடைய மகன் சகுனி யென்பவன். அவனுக்கு கரம்பியும், அவனுக்குத் தேவராதனும் அவனுக்குத் தேவக்ஷத்திரனும் பிறந்தார்கள். அத்தேவக்ஷத்திரனென்றவனுக்குத் தேவர்களது கர்ப்பம் போன்றதும் மதுரமான வாக்கையுடையதுமான மது வென்ற குழந்தை பிறந்தது. அம்மதுவிற்கு வைதர்ப்பாவென்றவளிடம் மருவஸனென்றவன் பிறந்தான். அவனுக்குப் புருத்வாவென்ற புருஷ சிரேஷ்டன் ஜனித்தான். பிறகு அப்புருத்வாவினிடமிருந்து பத்திராவதி யென்றவளிடம் மது வென்ற மற்றொருவன் பிறந்தான். அவனுக்கு ஐக்ஷ்வாகியென்றவளிடம் ஸத்வதன் என்றவன் பிறந்தான். அச்சத்வதனென்றவன் எல்லா குணங்களும் நிறைந்தவனும், சாத்வதர்களுடைய கீர்த்தியை விருத்தி செய்பவனுமாயிருந்தான். இவ்விதம் கூறப்பட்ட மஹாத்மாவான ஜ்யாமக மஹாராஜனுடைய வம்சத்தைக் கேட்டவர்கள் உயர்ந்த கீர்த்தியுடனும் பிரஜைகளுடனும் கூடி வாழ்வார்.

40-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 41-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— அச்சத்வதனிடமிருந்து சத்வகுணம் நிறைந்த குமாரர்களை கௌசல்யையென்றவள் பெற்றாள். அவர்கள் யாவரெனில்:- பஜி, பஜமானன், திவ்யனான தேவாவிருதன், அந்தகன், விருஷ்ணி, என்றவர்களாம். அவர்களுடைய வம்சம் நான்கு பிரிவை யுடையது. அவைகளை விஸ்தாரமாயென்னிடமிருந்து கேள். இரண்டாவனான பஜமானனென்றவனுக்கு பாஹ்யகஸிருஞ்ஜயீ, உபபாஹ்யகஸிருஞ்ஜயீ யென்றிரு மனைவிகள். அவர்களுள் மூத்தவளுக்குக் கிருமி, கிரமணன், திருஷ்டன், சூரன், புரஞ்ஜயன் என்ற பல மைந்தர்கள் ஜனித்தனர். மற்றவளுக்கு அயுதாஜித், ஸஹஸ்ராஜித், சதாஜித், தாசகன் என்ற

வர்கள் ஜனித்தனர். மூன்றாவது தேவாவிருதனென்றவரசன் தனக்கு
சர்வ நற்குணங்கள் நிறைந்த புத்திரனுண்டாக வேண்டுமென நிச்சயித்
தவனாய்ப் பெருத்த தவங்களைச்செய்தான். இவ்விதம் மனதையொடுக்கி
கொண்டு பர்ணாசையென்ற நதியின் ஜலத்தில் சுசியாய் எப்பொழுதும்
ஸ்நானாசமன பரனாயிருந்தமையால் அம்மஹாநதியுமவனிடம் பிரீதியுள்
ளவளானாள். பிறகு அத்யுத்தமமானநதியானவள் மனதிலாலோசித்தா
லோசித்துப் பார்த்து அவ்வரசன் நற்குணங்கள்நிறைந்த புத்திரனை
விரும்பி எந்தப் பெண்ணையுமடைய வில்லையென வறிந்து கொண்டாள்.
அதன் பின் தானே அவ்வெண்ணத்தைப் பூர்த்திசெய்து வைக்கலா
மென நிச்சயித்துக்கொண்டு ஒரு குமாரிபோல வடிவமெடுத்து அவ்
வரசன் முன்னே வந்து அவனைத் தனக்குப் பதியாக வேண்டுமென
விரும்பினள், அவ்விதமே அவளது வடிவம் குணமொழுக்கம் முதலிய
வைகளைக் கண்டு அவ்வரசனும் சம்மதித்துத் தனக்கு மனைவியாக
வங்கீகரித்துக் கொண்டான். பிறகு அவளிடம் புணர, அவளும் அவனிட
மிருந்து கர்ப்பத்தைத் தரித்துப் பத்தாவது மாதத்தில் சகல நற்குணங்
களும் நிறைந்த பப்ருவென்ற மைந்தனைப் பெற்றாள். இவ்வம்சத்தில்
புராண மறிந்தோர் தேவாவிருதராஜனுடைய குணங்களையும் கீர்த்தி
யையும் பற்றி வெகுவாக கொண்டாடுகின்றனர். மேலும் அத்தேவாவிரு
தனென்றவன் அருகிலும் தொலையிலுமொன்று போலவே
தோன்றுகிறவன். பப்ருவென்றவன் மனிதருள் சிரேஷ்டன்; தேவா
விருதனென்பவன் தேவர்களுக்குச் சமமானவன் எனப் பல பல வித
மாய் முன்னோர்களால் கொண்டாடப் பட்டவரிருவருமென அறிவாய்.
எழுபதினாயிரத்தேழு புருஷர்களும் பப்ருதேவாவிருத ரென்ற இருவர்
களும் மோக்ஷத்தை யடைந்தவர்கள். யாகசீலனும், கொடை யாளியும்,
அறிவாளியும், பிரம நிஷ்டனும், உறுதவாயுதனும், சிறந்த கீர்த்தியுள்ள
வனும் மிகுந்த காந்தியுள்ளவனும், ஸாத்வதர்களுக்கெல்லா மூத்த
மனுமவனே. அவனுடைய வம்சம் மிகவும் பெரிது. அதிலுண்டான
போஜர்களெல்லாம் மார்த்தி காவதர்களென்பவர்கள். அந்தகனிட
மிருந்து காசியரசன் மகளானவள் குகுரன், பஜமானன், சமி, கம்பள
பர்ஹிஸ்ஸென்ற நான்கு மைந்தர்களை யீன்றனள். அவருள் குகுரன் மகன்
திருஷ்ணுவென்பவன். அவனுடைய மகன் கபோதரோமன். அவன்
மகன் தைத்திரி யென்பவன். அவனிடமிருந்து புனர்வசு வென்ற
வனுண்டானான். அவன் மகன் அபிஜித்தென்பவன். அவனுக்கு ஆஹு
கனென்றவன், ஆஹுகியென்றும் கூறப்பட்ட வோர்புத்திரனும் புத்திரியு



மாகிய விரட்டைக் குழந்தைகள் பிறந்தது. அவ்வாஹுகனைப்பற்றி வரு
மாறுள்ள சுலோகங்களைப் பெரியோர்கள் கூறுவதுமுண்டு. அவை
யாவன:— குதிரைக்குட்டிபோன்ற யாதொரு ஆஹுகன் வெளியிற்
புறப்படுங்காலங்களிலெல்லாம் வெளுத்த குடைப்புக்களையுடைய பரிவாரங்
களும் அனேகசத்தி வீரர்களும் பின்றொடர்ந்தே போவார்களோ பின்னு
மவனைச்சுற்றிலும் புத்திரஸந்ததியில்லாதவனும், நூறு வயதிற்கு குறை
ந்தவனும், விசேஷித்த தானம்செய்யாதவனும் நற்கருமத்தைச்செய்யாத
வனும், யாகஞ்செய்யாதவனும், காணமாட்டானே, மேலும் கிழத்திசை
யிலனேகம் யானைகளும், அனேகமாயிரம் ரதங்களும், அலைகளிற் பூட்
டிய குதிரைகளும் அவனைப்பெருமைப்படுத்திக்கொண்டே போகுமோ,
என்றவைமுதலியவைகளேயாம். அவ்வாஹுகனுக்குக் காசியையென்
பவளிடம் தேவகனென்றவனும், உக்கிரசேனனென்றவனும் பிறந்தனர்.
அவருள் தேவகனுக்கு தேவருக்கு நிகரான தேவவான், உபதேவன்,
ஸுதேவன், தேவரக்ஷிதன் என்ற நான்குபுத்திரர்களுண்டாயினர். அவ்
விதமே தேவகி, சாந்திதேவை, ஸுதேவை, தேவரக்ஷிதை, விருகதேவி
உபதேவி, ஸுநாம்னியென்ற ஏழுபெண்களுண்டாயினர். அவர்களை
யெல்லாம் நான்முன்கூறியபடியே வஸுதேவருக்குக் கல்யாணம்செய்து
கொடுத்தான். உக்கிரசேனனுக்கு ஒன்பது குமாரர்களுண்டாயினர். அவர்
களுக்குள் கம்ஸனென்றவன் மூத்தவன். நியக்ரோதன், ஸுநாமன், கங்
கன், சங்கு, ராஷ்டிரபாலன், ஸுதனு, அநாதிருஷ்டி, புஷ்டிமான் என்ற
வர் மற்றவர். மேலும் கம்ஸை, கம்ஸவதி, ஸுதனு, ராஷ்டிரபாலினி,
கங்கை, என்ற ஐந்துபெண்களும் பிறந்தனர். இவ்விதம் குகுரகுலத்தி
லுதித்த உக்கிரசேனமஹாராஜன் அவனுடைய சந்ததியோடு விஸ்தார
மாய்க் கூறப்பட்டான். இவ்விதமிக்குகுரர்களுடைய வம்சத்தை யெவன்
மனதிற்றரிக்கின்றானோ அவன் தன்னுடையவம்சத்தையும் விஸ்தாரமாகத்
தழைப்பிப்பான்.

41-வது அத்தியாயம் முற்றிற்று.

## 42-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— பிறகு பஜமானனென்றவனுக்கு ரதிகனென
விதூரதன் பிறந்தான். சூரனென்ற ராஜாதிதேவன் அவனுடைய சுதன்.
அவனுக்குத்ததத்தன், அதிதத்தன், பலி, சோணாசுவன், சுவேத வாஹனன்

சுசி, நந்தனாதா, தண்டசத்ரு, சத்ருஜித்து, என்ற மஹாவீரியவான்களான புத்திரர்களும் சேவினா, சேவிந்தட்டென்ற புத்திரிகளுமுண்டாயினர். அவருள் சமியென்றவன் மகன் பிரதிக்ஷத்திரன். அவனுடைய மகன் சயம்போஜன் அவனிடமிருந்து ஹிருதிகனென்றவன் ஜனித்தான். அவனுக்கு மிகவும் சத்துருபயங்கரர்களான புத்திரர்கள் ஜனித்தனர். அவருள் மூத்தவன் கிருதவர்மா, மத்தியமன், சததனுவா தேவரிஷியான நாரதருடைய வசிஷ்யாதத்தாற் பிறந்த வைதரணனென்ற வைத்தியசாஸ்திரநிபுணன் மற்றவன். இவர்களோ புகழ்பெற்ற மைந்தர்கள். சுத்தயசன் புத்திரருள் மத்திமர் அந்தகனென்ற வரசனுடைய நால்காலத்து மைந்தருள் கம்பளபர்ஹிஷனென்றவனுக்குத் தாந்தன், விதாந்தன், ப்ரசயானு, காமதை, காமதம்பிகை யென்றவர்கள் மக்கள்கள். இவர்களன்றி அஸமௌஜஸ், வீரனான ஸமௌஜஸ்ஸென்ற வீருவர். அவருள் அஸமௌஜஸ்ஸென்றவன் சந்ததியில்லாதவன், ஆகையால் அபுத்திரனாகிய அவ்வஸமௌஜஸ் ஸென்றவனுக்கு ஸௌதம்ஷ்டிரன், சாருரூபன், ஸுருக்மனென்ற மூன்று குமாரர்களைத் தானமாகக் கொடுத்தனர். ஓ! ராஜனே இவர்களன்றி யின்னுமெத்தனையோ அந்தகர்கள் என்னாலுனக்குக் கூறப்பட்டிருக்கின்றனர். அந்தகர்களுடைய வம்சத்தைக் குறித்த இக்கதையை யெவன் மனதில் தரிக்கின்றானோ அவன் தனக்கும் விஸ்தாரமான வமிசத்தை யடைவான்.

ஓ! ராஜனே! காந்தாரி யென்றும் மாத்திரியென்றுமிருமனைவிகளும் க்ரோஷ்டாவென்றவனுக் குண்டாயிருந்தனரல்லவா. அவர்களுள் காந்தாரியென்பவள் அனமித்திரனென்றவனைப் பெற்றாள். மற்ற மாத்திரியென்றவள் யுதாஜித்தென்றவனையும், தேவமீடுஷனென்றவனையும் பெற்றாள். அவருள் அனமித்திரன் மகன் நிக்னன். அந்நிக்னனுக்கு பிரசேனன், சத்ராஜித்து என்ற மஹாவீரர்கள் ஜனித்தனர். அப்பிரசேனனென்றவன் துவாரகையில் வசிக்கும்பொழுது சமுத்திரராஜனிடமிருந்து தேவயோக்கியமான ஸியமந்தகம் என்ற வோர் இரத்தினத்தைக் கைப்பற்றினான். மற்ற அச்சத்ராஜித்து வென்றவனுக்குச் சூரியபகவான் சிறந்த உள்ளன்போடுகூடிய மித்திரனாயிருந்தார். அவ்விதமிருக்கையி லொருநாள் அச்சத்ராஜித்து அதிகாலையில் சந்தியாவந்தனம் முதலிய காலைக்கடன்களைச் செய்வதற்குச் சமுத்திரத்தின் கரையோரத்திற்சென்று சூரியனைக்குறித்து உபஸ்தானமென்ற வழிபாட்டைச் செய்துகொண்டிருந்தான். அச்சமயத்தில் அப்பகவானான சூரியனும்



அவர் உபஸ்தானம் செய்தவுடன் எதிரில் தோன்றினார். அப்பொழுது தனது மண்டலத்திலிருந்து விசத்தனாது உருவம் தெரியாது விளங்குமச் சூரியபகவானை நோக்கி ஓ! பகவானே! எவ்விதம் ஆகாயத்தில் உம்மைப் பார்ப்பேனோ, அவ்விதமே இங்குமென்னெதிரில் பார்க்கின்றேனே ஒழிய விசேஷத்திற்குத்தக்க வேறொன்றும் விசேஷமொன்றையுங் காணேன் என்றான். அதைக்கேட்ட சூரியபகவானும் உடனே தன் கழுத்தினின்றும் உத்தமமான ஸியமந்தகமென்ற ரத்தினத்தை யெடுத்து யாருமறியாமல் ஏகாந்தத்தில் அச்சத்ராஜித்து என்றவரசன் கழுத்தில் தரிப்பித்தார். பிறகு அவ்வரசனும் சூரியபகவானை நல்லவுருவத்துடன் கண்டானந்தித்தார். பிறகு அவருடன் ஒரு முகூர்த்தகாலம் வரையில் அனேகம் கலைகளைப் பேசிக்கொண்டிருந்தான். அதன் பிறகு தன்மண்டலத்திற்குப் போகவேண்டுமென்று விரும்பிய சூரியனைக் குறித்து சத்ராஜித்து என்பவன் ஓ! பகவானே! உலகத்தையெல்லாம் எந்த இம்மணியால் விளங்கச்செய்கின்றீரோ, இதனை எனக்குத் தந்தருளவேண்டுமென வேண்ட அவ்விதமே அப்பகவானும் அம்மணியைக் கொடுத்தனர். அதைப்பெற்றுத்தன் கழுத்தில் பூட்டிக்கொண்டு துவாரகைக்குட் சென்றான். அப்பொழுது அவனைக்கண்ட அத்துவாரகையிலுள்ள ஜனங்களெல்லாம் சூரியனேவருகின்றானென்று அங்குமிங்கும் பயந்தோடத் தலைப்பட்டனர். சத்ராஜித்தனும் அந்த ஸியமந்தகரத்தினத்துடன் தனது அரண்மனைபுட்சென்று தனது தமயனை வணங்கி மிகவும் அன்பினால் அவனிடம் கொடுத்தனன். அந்த ரத்தினமானது அவ்வரண்மனையில் பொருட்களைக் கக்குகின்றது வழக்கம். அந்த ரத்தினம் வந்தபின் அதின்மகிமையால் காலங்களில் மழைபொழிதலும் மஹாமாரி முதலிய கொள்ளைநோய் இல்லாதிருத்தலும் ஏற்பட்டன. அவ்விதமுள்ள அந்த ரத்தினத்தை ஒர்சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் விரும்ப அப்பிரசேனன் அதைக்கொடுக்க சம்மதிக்கவில்லை. கோவிந்தனாயவர் அப்பிரசேனனிடமிருந்து பலாத்காரமாய் அந்த ரத்தினத்தைக் கைப்பற்ற சக்தியுள்ளவராயினும் அதில் அவ்வளவு விருப்பத்தை அவர் செய்யவில்லை.

இப்படியிருக்கையில் ஒருக்கால் பிரசேனனென்பவன் அச்ஸியமந்தக மணியைக்கழுத்திலணிந்து கொண்டு வேட்டையாடுவதற்காக வனத்திற்குச்சென்றான்.

அப்பொழுது அவனைக்கண்ட வேறோர் சிங்கம் அவனது கழுத்தில் அணிந்துகொண்டிருந்த ரத்தினத்தைப்பார்த்து மாமிசமென்று மயங்கி அவனைக்கொன்று அவ்விரத்தினத்தை வாயாற் கவ்விக்கொண்டு ஓட்டம் பிடித்தது. பிறகு அதைக்கண்ட மஹாதேகவலியோடு கூடிய கரடிராஜன் அச்சிங்கத்தைக் கொன்று அம்மணியைக் கையிலெடுத்து தன் கழுத்திலணிந்துகொண்டு தனது இருப்பிடமாகிய குகைக்குட் சென்றது. பிறகு த்வாரகா பட்டணத்திலுள்ள விருஷ்ணி, அந்தகர், எல்லோரும் அம்மணியை விரும்பிய இந்த வசுதேவன் மகனான கிருஷ்ணனே அப்பிரசேனனைக்கொன்றிருக்கவேண்டுமெனக் கிருஷ்ணனைப்பற்றியே சந்தேகித்தனர். அவ்வபவாதத்தைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணனும் அக்காரியத்தைத் தான்செய்யாதவனாகிலும் தன்னிடமிருந்த அத்தோஷத்தை நிவிருத்தி செய்து கொள்வதற்காக அவர்கள் சபைநடுவில் அந்தரத்தினத்தை நான் தருவேனென பிரதிக்ஞை செய்து உடனே அத்துவாரகையினின்றும் புறப்பட்டு எங்குபிரசேனன் வேட்டையாடச்சென்றானோ, அங்கேயே தானும் சென்றார். பிறகு பிரசேனனுடைய அடியைப்பிடித்துச் செல்லுங்காலையில் தன்னிடத்திலுள்ளவுள மனிதர்களால் ருக்ஷவான், விந்தியம், என்ற மலைகளிலெல்லாம்தேடி முடிவில் சிறந்த மனமுடைய அவ்வாசுதேவன் குதிரையோடு கொல்லப்பட்ட அப்பிரசேனனது சவத்தைக் கண்டுபிடித்தார். ஆனால் இரத்தினத்தை மாத்திரம் காணவில்லை. அங்கு ஒருசிங்கம் வந்திருப்பதாகவும் தெரியவந்தது. பிறகு அச்சிங்கத்தின் காலடியைப்பற்றிச் சிறிது தூரம் போகும்பொழுது அங்கோர் சிங்கம் செத்துக்கிடந்தது. அதன் ஸமீபத்தில் ஓர் பெருத்த கரடியின் அடிகளும் காணப்பட்டன. பிறகு அக்கரடியின் அடியைப்பற்றிப்போகும்பொழுது சிலது தூரத்தில் ஒரு குகையின் வாயிலை அம்மாதவன் கண்டார். அங்குநின்று செவிகொடுத்துக் கேட்கும்பொழுது ஒரு பெண்ணின் குரல் கேட்கப்பட்டது. அதாவது:— "பிரசேனனைச் சிங்கம் கொன்றது, அச்சிங்கம் உனது தந்தையான ஜாம்பவானால் கொல்லப்பட்டது பெண்ணே என் அழுகின்றாய். இனி இந்த ரத்தினம் உன்னுடையதுதான்" என்ற இக்காதையேயாம். அதைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணனும் அதன் வாயிலில் தன்னுடன் வந்த காவற்படைகளை நிறுத்திவிட்டு தானொண்டியாய் யாதொன்றுக்கு மஞ்சாதவனாய் அப்பாட்டையைப் பற்றியே அக்குகைக்குட் சென்றனர். அப்பொழுது தனது கையிற் யாதொரு ஆயுதமும் கொண்டுபோகவில்லை. தன்னுடன்வந்த பலராமனும் அக்குகையின் வாயிலிலேயே அப்படைகளுக்கு



யஜமானனாய் நிறுத்தப்பட்டார். இவ்விதம் நிராயுதபாணியாய்க் குகைக்குட் சென்ற ஸ்ரீகிருஷ்ணனும் அங்கு ஜாம்புவானென்றவோர் கரடிராஜனைக் கண்டார். பிறகு அவ்விருவருக்கும் கடுமையான போர் கைகலந்தபோது அப்போரில் அவ்விருவருக்கும் யாதொரு ஆதாரமுமில்லாமல் கேவலம் கைகளாலேயே அடித்துக்கொண்டனர். இவ்விதம் 21 நாள் ராப்பகலிடைவிடாமல் அச்சண்டை நடந்துகொண்டிருந்தது.

இங்கு துவாரகாத்துவாரத்தில் காவலுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த பலதேவன் முதலியோரெல்லோருமிரண்டு மூன்றுநாள்வரையில் ஸ்ரீகிருஷ்ணனுடைய வரவை யெதிர்பார்த்திருந்து அவர் வராததால் த்வாரகாநகரம்சென்று குகைக்குட்சென்ற ஸ்ரீகிருஷ்ணனுடைய வரலாற்றைக் கூறினர். அங்கு வாசுதேவனும் 21-வது நாள் ஜாம்புவானென்ற மகாபலிஷ்டனான கரடிராஜனை ஜெயித்து அவனோடு சிநேகஞ்செய்து, அவனுடைய பிரியமான பெண்ணாகிய ஜாம்பவதியென்ற கன்னிகையையும் மணம்புரிந்துகொண்டு தன்னுடைய அபவாதத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்காக ஸியமந்தகமென்ற அந்த ரத்தினத்தையும் பெற்றுக்கொண்டார். பிறகு ருக்ஷராஜாவான அச்சாம்பவானை பலவிதமாகச் சமாதானப்படுத்திக் கடைசியாக அக்குகையினின்று வெளிப்புறப்பட்டு சிறந்த விஜயலெக்ஷ்மியுடனும், அச்சாம்பவதியுடனும், ஸியமந்தகமணியுடனும் அத்துவாரகா பட்டணம்வந்து யாதவர்கள் நிறைந்த சபையில் தன்னபவாதத்தை விடுவித்துக்கொண்டு பிரசேனனது தம்பியான சத்திராஜித்திற்கு அச்சியமந்தகரத்தினத்தைக் கொடுத்துவிட்டார். இப்பிரகாரம் வைரிகளைக் கொல்லும் ஸ்ரீகிருஷ்ணனால் பொய்யாய்த் தன்னிடம் வந்த அபவாதத்தைப்பற்றி, அவ்வபவாதரூபமான பாபத்தினின்றும் தன்னுடையசுவரூபமானது ஸியமந்தகமணியைத் திருப்பிக் கொண்டுவந்து கொடுத்ததால் சுத்தி செய்யப்பட்டது.

ஸத்திராஜித் தென்பவனுக்குப் பத்து மனைவிகளும் அவர்களிடம் நூறு மக்கள்களு முண்டாயிருந்தன. அவர்களுக்குள் பெருங்கீர்த்தி பெற்றவர் பங்ககாரன், வீரனான வாதபதி, உபஸ்வான் என்ற மூவர்கள். அவ்விதமே ஸத்தியபாமை, விருதினி, பிரஸ்வாபினி என்ற மூன்று கன்னிகைகளும் மிகவு முத்தமமான குணங்களாலும் அழகாலும் பெயர்போனவர்கள். அம்மூன்று கன்னிகைகளும் சத்திராஜித்தினால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கப்பட்டார்கள். குரோஷ்டா என்பவனுடைய இரண்டாவது மனைவியான மாத்திரியென்பவளின்

புத்திரனுக்குப் பிரசினி யென்பவன் பிறந்தான். அப்பிரசினி யென்பவனுக்கு சுவபல்கன், சித்திரகன் என யிருவர் பிறந்தனர். அவருள் சுவபல்கனென்றவன் காசிராஜனது மகளான காந்தினி யென்பவளை மணம் புரிந்து அவளிடம் நீண்ட புஜங்களும் சிறந்த படிப்பும் பெருத்த கீர்த்தியும் மிகுந்த பாக்கியமும் நல்ல கொடையுமுள்ள அக்ரூரர் யென்பவர் பிறந்தார். பிறகு உபமத்கு, மத்கு, ம்ருதுரன், அரிமேஜெயன், கிருதீபன், உபேக்ஷன், சத்ருக்கினன், அரிமர்த்தனன், தர்மபிருத், தர்மீ, கிருத்திரமன், போஜாந்தகன், ஆவாகன், பிரதிவாகனென்றவர்களும் சுந்தரி யென்ற சிறந்த புத்திரியும் ஜனித்தனர். இச்சுந்தரி யென்பவள் ஸாம்பனை மணம் புரிந்து அவனிடத்தினின்றும் சிறந்த வடிவத்துடன் கூடிய மணமிக்க ஆனந்தகரமான அசுந்தரை யென்றவோர் மகனைப் பெற்றாள். அக்ரூரனென்றவரால் உக்கிரசேனி யென்றவளிடம் சுதேவன், உபதேவன், என்ற தேவர்களுக்கொப்பான இருமக்கள்கள் பிறப்பிக்கப்பட்டனர். சித்திரகன் என்பவனுக்குப் பிருது, விப்ருது, அசுவசேனன், அசுவபாகு, சுபார்சுவகன், கவேஷணன், அரிஷ்டநேமி, தருமன், தருமபிருத், சுபாகு, வெகுவாகு, யென்ற புத்திரர்களும், சிரவிஷ்டை, சிறவணை யென்ற புத்திரிகளும், ஜனித்தனர். இவ்விதம் ஸ்ரீகிருஷ்ணனுடைய பொய்யான அவ்வபவாதத்தைத் தீர்த்த இவ்வத்தியாயக் கதையைப் படித்தவனையும் கேட்பவனையும் வேதத்திலுள்ள மித்தியா சாபங்கள் யாதொன்றுமொருபொழுது மணுகாது.

42-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 43-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— இவ்விதம் ஸ்ரீகிருஷ்ணனால் திரும்பிக்கொண்டு வந்து கொடுக்கப்பட்ட சியமந்தகமணியை பப்ரு யென்பவன் தனது கழுத்தில் அணிந்துகொண்டான். இதனிடையில் சததன்வா என்பவனால் எப்பொழுதும் இந்த ரத்தினமானது விரும்பப்பட்டிருந்தது. ஒவ்வொரு சமயத்தில் தோஷமில்லாத சத்தியபாமையையும் கேட்பான். அக்ரூரர் என்பவர் இந்த சியமந்தக மென்ற ரத்தினத்தை சத்தியபாமையிடம் தனக்குவேண்டுமென விரும்பியிருக்கின்றனர். இப்படியிருக்கை



யில் ஓரிரவில் மகாபலிஷ்டனான சததன்வா என்பவன் அந்த சத்ராஜித்தென்பவனைக் கொன்று அவன் அணிந்திருந்த ரத்தினத்தைக் கைப்பற்றி அதில் விருப்பமுள்ள அக்குரூரருக்குக் கொடுத்தான். அக்ரூரர் என்பவரோ அந்தரத்தினத்தை கையில் வாங்கிக்கொண்டு அந்த சததன்வா என்றவனோடு ஓர் ஸங்கேதம் செய்துகொண்டனர். அதாவது:— என்னிடம் இந்த ரத்தினமிருப்பதாக வெளிப்படுத்தக் கூடாதென்பதும், ஒருசமயம் ஸ்ரீகிருஷ்ணனால் நீ எதிர்க்கப்பட்டால் நானெனது இனத்தாருடன் ஒத்தாசைசெய்து கொடுக்கின்றேனென்பவாம். பின்னும் அவ்வக்ரூரர் கூறியதாவது:— ஏ! நண்பனே! இப்பொழுது இத்துவாரகை நகர் முழுவதும் என்னுடைய வசத்திலிருக்கின்றது ஆகையாலுனக்கு வேண்டிய ஒத்தாசையை நான் செய்கின்றேன் என்றனர். இவ்விதமான பின்பு, கீர்த்திமதியான சத்தியபாமையும் தனது தகப்பனார் இறந்துவிட்டதால் மிகுந்த துக்கத்தோடு கூடியவளாக ரதத்தின் மீதேறி வாரணாவதம் யென்ற நகரத்தை அடைந்தாள். அங்குபோய்த்தனது தகப்பனாருடைய நிலையையும் போஜனாகிய சததன்வாவினுடைய கொடுமையையும் தனது பர்த்தாவினிடம் தெரிவித்து அடங்காத துக்கத்துடன் பக்கத்தில் நின்று கொண்டு தன் கண்களினின்றும் நீர்களைச் சொரிந்தாள். ஸ்ரீ ஹரியான கிருஷ்ணனோ அரக்கு மாளிகையில் நீறாய்ப்போன பாண்டவர்களுக்கு தர்ப்பணம் முதலிய பரலோகக்கிரியைகளைச் செய்து அதன் மேற் கிரியைகளுக்காகச் சாத்யகி யென்பவனை வைத்துக்கொண்டிருந்தார். பிறகு தன் மனைவியாரிடமிருந்து துவாரகையின் விருத்தாந்தத்தை கேட்டதும் மிகுந்த பரபரப்புடன் அம்மது சூதனனவர் தனது துவாரகையிற் சென்று தனக்குத் தமையனான பலராமனை நோக்கி வருமாறு கூறலுற்றார். ஏ! அண்ணா! ஓரிரத்தினத்திற்காக ப்ரசேனன் சிங்கத்தினால் கொல்லப்பட்டான். பிறகு சததன்வாவினால் அவனது தம்பியான சத்ராஜித்தும் கொல்லப்பட்டான். அச்சியமந்தக ரத்தினமோ நம்மைச்சேரவேண்டியது. அதற்கு நாம் யஜமானர். ஆனதால் சீக்கிரமாக ரதத்திலேறி மகாபலவானான அச்சததன்வாவைக்கொன்று அச்சியமந்தகமணியை நாம் அடைய வேண்டியதாயிருக்கின்றதென்றனர். அவ்விதமே ராமனும் கிருஷ்ணனும் அச்சததன்வாவுடன் கொடூரமான போர் புரிந்தார்கள். அச்சமயத்தில் அச்சததன்வா வென்றவன் நாலாதிக்குகளையும் பார்த்தும் யாரும் சகாயமில்லாமல் தானொருவனாகவே வெகுநேரம் சண்டை செய்தான். அக்ரூரனும் அவருடைய யுத்தக் கோலாகலத்தைப் பார்த்தும் தான் சக்தியுள்ளவராயினும் வஞ்சனையினால்

சததன்வாவிடம் வந்துசேரவில்லை. சததன்வாவும் யாரும் சகாயமில்லாததால் எங்கேயாவது ஓடிவிடவேண்டுமென்று ஆலோசித்து யுத்தவில்வர்களிடம் மிகவும் பயந்து ஓர்வகை குதிரை கட்டிய ரதத்தின் மீதேறி வெகு தூரம் ஓடிவிட்டான். அது ஹ்ருதயா வென்றும் நூறு யோஜனை தூரம் ஓடக்கூடியதாம் பிரசித்தி பெற்றதுமாம். அவ்வாறோடிய அச்சததன்வாவை ராம கிருஷ்ணர்களிருவர்களும் விடாமலே பின்தொடர்ந்து போய் துரத்தியடித்தார்கள். அப்பொழுது வெகுதூரமோடிய இளைப்பால் அக்குதிரைகளுடைய பிராணன்களெல்லாம் துடிதுடித்தன. அச்சமயம் பார்த்து ஸ்ரீகிருஷ்ணனும் ராமனை நோக்கி ஓ! மிகுந்த பாகுபலமுடையவரே! நீங்களும் நடக்கவேண்டாம். அவனது குதிரைகள் இப்பொழுது துன்பப்பட்டிருக்கின்றன. நீர் இளைப்பாறும் நான் காலாலேயே நடந்துபோய் அந்த ரத்தினத்தைக் கைப்பற்றி வருகின்றேனென மொழிந்து, உடனே அவ்வச்சுதனும் அவ்விதம் கால்களாலேயே நடந்துபோய் மிதிலாபுரிக்கு அப்பக்கத்தில் களைத்து நிற்கும் அப்போதுவென்ற பகைவனுடன் சண்டையிட்டுச் சிறந்த அஸ்திரங்களை யெல்லாமெய்து அக்கிருஷ்ணன் முடிவிலவனைக்கொன்றே விட்டார். ஆனால் ஸ்யமந்தகமென்ற ரத்தினமாத்திரம் அவனிடத்தில் காணப்படவில்லை. உடனே திரும்பித்தனது தமையனான ராமனிடம் வந்து சொன்னார். அப்பொழுது ராமனும் ஏ! கிருஷ்ணா! அந்த ரத்தினத்தைக் கொடு பார்ப்போமெனக் கேட்க ஸ்ரீ கிருஷ்ணனும் அவனிடம் பரிசோதித்துப் பார்த்தும் ரத்தினம் கிடைக்கவில்லை யென மறுமொழி கூறினர். உடனே அப்பலராமனும் ஜனார்த்தனனான கிருஷ்ணனைப் பார்த்துப் பலதடவை சீ சீ, யென தூஷணையாகத் திட்டி வெறுத்து முடிவில் ஏ கிருஷ்ணா! நீ எனது தம்பியாகையால் உன்னுடைய இவ்வபராதத்தை நான் சகித்தேன். எவ்விதமாவதுனக்கு நன்மையுண்டாகட்டும் நான் எங்கேயாவது செல்லுகின்றேன். துவாரகையில் எனக்காகவேண்டிய தொன்றுமில்லை. அவ்விதமே உன்னுடைய மற்ற யாதவர்களாலு மெனக்கு ஆகவேண்டிய பயன் யாதுமில்லை என மொழிந்து வைரிகளை வெல்லும் திறமையுள்ளவரான அப்பலராமன் பிறகு மிதிலாபுரியிற் சென்றார். அங்கு ஸர்வ போகங்களும் நிறைந்த உபசாரங்களைக்கொண்டு அம்மிதிலாதிபதியால் பூஜிக்கப்பட்டவராய்க் காலங்கழித்து வந்தனர். இதே சமயத்தில் மகா புத்திசாலியான பப்ருவென்ற காந்தினியின் புத்திரனான அக்ரூரன் என்றவர் நானாவிதமான தடையில்லாத அநேக யாகங்களைச் செய்



தாய் தீக்ஷையாகிற கவசத்தைத் தரித்துத் தன்னை ரக்ஷித்துக்கொள்வதற்காக வரித்துக்கொண்டார். இவ்விதம் தன் கையிலுள்ள அச்சியமந்தக மணி வெளிப்படாமலிருக்கிறதற்காக மகாகீர்த்திமானான அவ்வக்ரூரர் அறுபது வருஷம்வரையில் அந்த யாகங்களில் அநேகம் ரத்தினங்களையும், பொருள்களையும், பலவிதமான பதார்த்தங்களையும் செலவு செய்தார். அம்மகாத்மாவினுடைய அன்னதானத்தாலும், தக்ஷிணைகளாலும் நிறைந்து பேர்போன அந்தயாகங்களுக்கெல்லாம் அக்ரூர யாகங்களென ஓர் புகழ்ப்பெயர் உண்டாயின.

பிறகு துரியோதனனென்ற ராஜாவானவன் மிதிலாபுரியை அடைந்து அங்கு வசிக்கும் பலராமனிடமிருந்து கதாயுத்தப் பயிற்சியை அடைந்தான். இதனிடையில் அநேகம் ஆஸ்திகர்களான விருஷ்ணி அந்தகர் முதலியோர்களால் வெகுவாக அப்பலராமனும் ஸமாதானம் செய்யப்பட்டு துவாரகையிற் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார். பிறகு மகாத்மாவான ஸ்ரீகிருஷ்ணனோடும் முன்போல் நேசமுடையவரானார். அக்ரூரரோ அந்தகரென்ற தன்வகுப்பினரோடுகூட துவாரகையைவிட்டு வெகுதூரம் சென்றனர். அங்கேவசிக்கவும் வசித்தனர் ஓ! பரதராஜனே! மஹாபலிஷ்டனான சத்ராஜித்தென்பவனைக் கொன்ற விருத்தாந்தத்தை ஸ்ரீ கிருஷ்ணன் நன்றாய் அறிந்திருந்தும் தனது உறவினர்க்குள் சண்டை யாகக்கூடாதென்ற காரணத்தால். அச்சததன்வாவுக்குப் பக்கபலமாயிருந்த எவரோடும் பகைக்க வில்லை. அவ்வக்ரூரன் துவாரகையை விட்டுப் போனபின்பு அத்தேசத்தில் மழை பொழியாமலும் பயிர்கள் பிடியாமலும் துர்பிக்ஷம் விருத்தியடைந்து வெகுவாக ராஜ்யமும் நடுங்க ஆரம்பித்தது, ஆதலால் அதன் பிறகு அக்ரூரர் அந்தகர் என்ற யாதவர்களெல்லாம் அக்ரூரரிடம் சென்று ஸமாதானஞ் செய்து மறுபடியும் துவாரகாபட்டணத்தை அடைவித்தனர். அப்பொழுது இந்திரனும், அக்கச்ச தேசங்களிலெல்லாம் மழை பொழிந்து நாட்டைச் செழுப்பித்தனன். அக்ரூரனும் தனது தங்கையான நல்லொழுக்கத்தோடு கூடிய சுதாரியென்ற கன்னிகையை, அக்கிருஷ்ணனுடைய நேசத்தை விரும்பியவனாய் அவருக்கே கல்யாணம் செய்து கொடுத்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணனானவர் தந்திர உபாயத்தால் ஸ்யமந்தகமணியானது அக்ரூரரிடமிருப்பதாகத் தெரிந்துகொண்டார். அதனுடன் யாதவர்களெல்லோரையும் ஓர் சபை கூட்டி அச்சபை நடுவில் ஜனார்த்தனரான ஸ்ரீகிருஷ்ணனும் அவ்வக்ரூரனை நோக்கி ஓ! பிரபுவே! யாதவகுலத்திற்குத் திலகம்போன்றவரே! தம்முடைய கையிலுள்ள அச்சியமந்தக ரத்தினமென்ற

மணியை வெளியிடவும் ஓ! பெருமையுள்ளவரே! நீர் என்னிடத்தில் தாழ்மையான புத்தியைச் செலுத்தவேண்டாம். அநேக வருஷகாலமாக இச்சபையிலுள்ள யெல்லோருக்கும் என்னிடத்தில் கெட்ட எண்ணமுண்டாயிருக்கின்றது. ஓ! பாபமற்றவரே! வீணாகக்காலதாமதம் செய்யவேண்டாம். என்றனர். பிறகு ஸ்ரீ கிருஷ்ணனுடைய வார்த்தையினால் ஸகலயாதவர்களும் நிறைந்த அச்சபையில் அவ்வக்ரூரனானவர் மனதில் யாதொரு துன்பமில்லாமலே அந்த ரத்தினத்தை தமனிடமிருந்தெடுத்துக் கொடுத்து விட்டனர். பிறகு தான் சொல்லிய வார்த்தையைக்கேட்ட அப்பப்ருவென்ற அக்ரூரரிடமிருந்த அச்சியமந்தக ரத்தினத்தை அச்சபையிலுள்ள எல்லோருக்கும் காண்பித்து மறுபடியும் அக்கிருஷ்ணனானவர் மிகுந்த சந்தோஷத்துடன் கூடியவராய் அவ்வக்ரூரனுக்கே கொடுத்து விட்டனர். அக்ரூரனும் அக்கிருஷ்ணனுடைய கையினின்றும் கிடைக்கப்பட்ட அச்சியமந்தக ரத்தினத்தைத் தன் கழுத்தில் பிரசித்தமாய் அணிந்துகொண்டு கிரணங்களையுடைய சூரியன்போல் விளங்கினான். அதன் பிறகு மிகுந்த சந்தோஷத்தோடு கூடிய அந்த யாதவர்களெல்லாம் கைகூப்பிக்கொண்டு தாமரை யிதழ்போன்ற கண்களையுடைய அந்த ஸ்ரீ கிருஷ்ணனை நமஸ்கரித்தார்கள். இவ்விதம் கூறப்பட்ட இவ்வத்தியாயக்கதையை எவன் பரிசுத்தமான மனதுடன் கேட்கின்றானோ அவன் ஸகலவிதங்களான சுகங்களையுடைய பலனை இவ்வுலகத்திலேயே அடைவான். மேலும் அவனுக்கு இப்பூலோகம் முதல் பிரமலோகம் வரையில் சிறந்த கீர்த்தியுண்டாகும். இதில் ஸந்தேகமில்லை ஓ! ஜெனமேஜயனே! உனக்கு உண்மையாக யிவ்விதமுண்டாகுமென்றே சொல்லுகின்றேன்

43ம் அத்தியாயம் முற்றிற்று

## 44-வது அத்தியாயம்

ஜனமேஜயன்:— ஓ! வைசம்பாயனரே! அளவில்லாத மஹிமையையுடைய விஷ்ணுவின் அவதாரங்களைக் கூறும்புராணங்களில் வராகமென்று ஓர் அவதாரம், கதை கூறும் திறமையுடைய சத்துக்களின் வாக்கினின்று நம்மால் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வராக மூர்த்தியினுடைய விஸ்தாரமான கதையை நான் கேட்டதில்லை. அதின்



விதியையும் நானறியேன். அதின் விசேஷகுணம், காரணம் சங்கர்ப்பம் யாதொன்றையும் நானறியவில்லை. ஆகையால் அவ்வராகமென்பது எத்தன்மையுள்ளது? எவ்வுருவமுடையது? எத்தேவதை? எவ்விதமான நடவடிக்கையுள்ளது? எப்பிரபாவமுடையது? அவ்வராக மூர்த்தியால் முன்பு எந்தெந்த காரியம் செய்யப்பட்டது? யாகத்திற்காக ஒன்று கூடி சன்னத்தர்களாயிருக்கும் பிராமணர்களுக்கு முன்பு அவ்வராக மூர்த்தியினால் எக்காரியம் செய்யப்பட்டது? அம்மஹாவராகனுடைய சரித்திரமானது வேதவியாசனால் எவ்விதம் கூறப்பட்டது? எந்த நாராயணனாகிய பரமாத்மாவானவர் வராக ரூபத்தை யடைந்து தனது சிங்கத்தால் சமுத்திரத்தில் முழுகிய இப்பூமியை உத்தாரணம் செய்தாரோ அக்கதைகளையெல்லாம் எனக்கு விஸ்தாரமாகக் கூறக்கடவீர். ஹரியான அக்கிருஷ்ணனுடைய அக்கதைகளெல்லாம் கேட்க விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். ஓ! பிருமணோத்தமனே! அந்தப்பிரபுவான விஷ்ணுவினுடைய முறையாகச் செய்யப்பட்ட காரியங்களுக்கிணங்கிய காரணங்களாகிய அவதாரங்கள் எவையெவையுளவோ அவைகளையும், இவருடைய உண்மையான தன்மையெதுவோ அதையும் விஸ்தரித்துக் கூறவேண்டும். மேலும் ஐசுவரியம் முதலிய ஆறு குணங்களோடு கூடியவரும், திருகாலக் ஞானியும், படைத்தல் காத்தல் அழித்தலென்ற ஸகலத்திற்கும் யஜமானனும், சிறந்த தேவர்களுக்குச் சத்துருக்களான அசுரர்களைக் கொல்லுகின்றவருமான எங்கும் நிறைந்த அவ்விஷ்ணுவானவர், வசுதேவருடைய குலத்தில் அவதரித்து வாசுதேவ[illegible]ற பெயரை அடைந்தார்; ஒளிமிகுந்த தேவர்களால் சூழப்பட்ட[illegible], புண்ணியவான்களால் நிறைந்ததும் புண்ணியத்தைக் கொடுக்க[illegible]மான தேவலோகத்தைவிட்டு மிகவும் அபாஸமான இம்மனுஷ்யலோகத்துக்கு வந்தார். தேவர்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் எஜமானனும் எங்கும் நிறைந்தவனும் இப்பூமி முதலியவைகளைப் படைத்தவனும் உள்ள அவ்விஷ்ணுவானவர் எதற்காக தனது ஒளிவடிவமான ஸ்வரூபத்தை மனுஷ்ய சம்பந்தமான யோனியில் சேர்ப்பித்தார். எவர் ஸம்சாரசக்கிரத்தை ஒருவராய் சுழற்றிக்கொண்டிருக்கின்றாரோ எவர் ஸம்ஸாரிகளான மனிதர்களுக்கு க்ஷேமத்தைச் செய்கின்றனரோ அந்த ஹரியானவர் இம்மனுஷயோனியில் எதற்காகத் தனது புத்தியை வைத்தார். இந்திரியங்களை யடக்கிய யோகிகளுக்கு எவர் ரக்ஷணத்தைச் செய்கின்றாரோ எவர் இவ்வுலகத்திற் கெல்லாம் யோக க்ஷேமத்தைச் செய்கின்றனரோ

அப்படிப்பட்ட விஷ்ணுவானவர் இப்பூமியை யடைந்து ஓர் இடையனை போலாயினர். எவர் மகாபூதமயங்களை சரீரமாயுடையவரோ அம்மகாபூதங்களைப் படைத்தவரோ, அவைகளை வகித்துக்கொண்டு மிருப்பவரோ, ஸ்ரீகர்ப்பருன அப்பகவான் பூமியிற் பிறந்த தேவகியாகிய ஓர் மனித ஸ்திரீயினால் தனது கர்ப்பத்தில் தரிக்கப்பட்டார். எவரால் இம்மூவுலகுகளும் தேவர்களுக்காக மூன்று அடிகளால் அளக்கப்பட்டும். இவ்வுலகங்களில் அறம் பொருள், இன்பமென்ற மூன்றுவர்க்கங்களின் மார்க்கங்கள் நிலைநிறுத்தப்பட்டனவோ எவர் பிரளயகாலத்தில் இவ்வுலகத்தையெல்லாமுண்டு ஜலமயமான தன்னுடைய சரீரத்தால் ஒரேசமுத்திரமாகச் செய்வாரோ எவர் அறியக் கூடியதாம் அறியமுடியாததுமான வழியினால் நிலைநிற்பவரோ எவர் பழமையான தனது உருவத்தை உடையவராயினும் வராகரூபத்தை அடைந்தவராய்த் தனது கொம்பின் நுனியால் இப்பூமியை உத்தாரணம் செய்தவரோ, எவர்முன்பு இந்திரனுக்காக இம்மூவுலகத்தையும் அசுரர்களிடமிருந்து ஜயித்து தேவதைகளுக்கு திருப்பிக்கொடுத்தவரோ, எவரால் சிங்கவடிவமெடுத்து ஹிரண்யகசிபுவென்ற பெருத்த வீரியமுள்ள வசுரன் கொல்லப்பட்டானோ, எவர் ஒளர்வமென்ற ஸம்வர்த்தகாக்கினியாக வடிவமெடுத்து பாதாளத்திற்போய் சமுத்திரத்திலுள்ள ஜலமாகின்ற ஹவிசைப் பானம் செய்தனரோ, எவரை அநேகம் தலைகளுடையவனாகவும், அநேகம் ஆரங்களையுடையவனாகவும், வேண்டியவைகளெல்லாம் அளிப்பவராகவும், ஆயிரங்கால்களையுடையவராகவும் யுகந்தோறும் மறைகள் கூறுகின்றனவோ, சராசரரூபங்களான இவ்வுலகமெல்லாம் நஷ்டமானபொழுது ஜலரூபமான தனது திருமேனியில் யோகநித்திரைசெய்யும் எவனுடைய அரணிபோன்ற பரிசுத்தமான கொப்பூழில் பிதாமகனான பிர்மாவினுடைய இருப்பிடமாகிய கமலம் உற்பவித்ததோ தாரகாசுரன் முதலியோருடைய யுத்தத்தில் எவரால் பற்பல அசுரர்களும் கொல்லப்பட்டார்களோ, எவர் ஸர்வதேவமயமாயும் ஸர்வஆயுதங்களையுமுடைய திருமேனியையெடுத்துக்கருடன்மீதெழுந்தருளினவராய் அதனால் மிகவும் கொழுப்படைந்த காலநேமியென்ற அசுரனானவன் கொல்லப்பட்டாரோ, அவ்விதமே மயனென்ற அசுரனும் தாரகனென்ற மகாவசுரனும் கொல்லப்பட்டாரோ, திருப்பார்க்கடலின் வடபுறத்தில் யாதொருவர் சாசுவதமான யோகநித்திரையை அடைந்து விளங்குகின்றாரோ, அதனால் அவரிருப்பிடம் தேவர்களாலும் கூட



இருட்டில் வஸ்துக்களைக் காணமுடியாததுபோல் எத்தகையோன் அறியமுடியாதவரோ, தேவதைகளுக்கெல்லாம் தாயாகிய அதிதியானவள் தன்னால்செய்யப்பட்ட சிறந்த தவத்தால் யாதொருவரைத்தனது கர்ப்பத்தில் வகித்து, அசுரர்களால் சிறையாக்கப்பட்ட இந்திரனானவன் விடுவிக்கப்பட்டானோ, மேலும் அவ்விந்திரனது இஷ்டங்களை யெல்லாம் எவர் பூர்த்தி செய்துகொடுத்தனரோ, மேலும் தன்னுடைய அடிகளை மூன்று உலகங்களிலும் பரப்பி சமுத்திரத்தில் படுத்திருக்கும் அசுரர்களை எல்லாம் கொன்று சுவர்க்கலோகத்தை மறுபடியும் தேவர்களுக்கே திருப்பிக் கொடுத்து அவ்விந்திரனை அத்தேவர்களுக்கெல்லாம் எஜமானனாகச் செய்தனரோ; எவர் நானாவிதமான பாத்திரங்கள் தக்ஷிணை தீக்ஷை, சம்ஸம், உரல், காருபத்தியம், அன்வாஹாரியம், ஆஹவநீயம், வேதி, குசம், சுருக், சுருவம், மற்றும் பற்பல பாத்திரங்கள், புரோக்ஷணி, ஆவபிருத்தியம், சுதாத்திரிகள், முதலிய யாகங்களுக்கு உபயோகங்களான வஸ்துக்களை எவர் வேறுருபமாக வெளியிட்டனரோ, எவர் பிதிர்க்களைக் கவியமென்றவைகளைப் புசிக்கும்படி செய்தனரோ, யாதொருவர் யாகமாகிற காரியத்தில் மந்திரங்களுடைய விதியைக் கொண்ட யூபங்களையும் ஸமித்தையும் ஸ்ருவத்தையும் ஸோமத்தையும் பரிசுத்தங்களான பரிதிகளையும் மற்றும் யாகங்களுக்குரிய திரவியங்களையும் நானாவிதமானயக்ஞங்களையும் சபாபதிகளையும் எஜமானர்களையும் பரிசுத்தமானஹவிசுக்களையும் உயர்ந்த தனது சங்கற்பத்தால் பிரித்துப்பிரித்து யேற்படுத்தினரோ, எவர் காஷ்டை கலை க்ஷணம், மூன்று காலங்கள், முகூர்த்தங்கள், திதிகள், மாதங்கள், பக்ஷங்கள் வருஷங்கள், ருதுக்கள், யோகங்கள், மூன்றுவிதமான பிரமாணங்கள், ஆயுள், இடங்கள், [illegible], குறைவு, இலக்கணம், இலக்கியம், உருவத்தின்சிறப்பு, யாகத்துக்குத்தகுந்தவர்களான பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியனென்ற மூன்றுவர்ணங்கள், மூவுலகங்கள், ருக், யெஜுஸ், சாமம் என்ற வேதத்தின் திரள், மூன்று அக்கினிகள், மூவிதவினைகள், மூன்று உபாயங்கள், மூன்று குணங்கள் இவைகளெல்லாம் அனந்தங்களாயிருக்க வேண்டுமென்ற சங்கற்பத்தோடு எவரால் முன்பு படைக்கப்பட்டனவோ, எவர் ஸர்வப்பிராணிகளுடையவும் குணங்களைப்படைத்தனரோ, எவர் ஸர்வப்பிராணிகளிடமுள்ள குணங்களைத் தனக்குச்சரீரமாக வுடையவரோ, எவர் மனிதர்களுடைய இந்திரியங்களோடு ஸம்பந்தப்பட்ட வழியால் அவைகளின் போகத்தில் ரமிக்கின்றனரோ, எவர் எவ்விடத்திலும் பிறப்பு இறப்புகளால் எல்லாப்பிராணிகளுக்கும் நேதாவாகவும் இவ்வுலகத்திற்கு

ஈசுவரனாகவும் விளங்குகின்றனரோ எவர் தர்மவழியில் நடப்பவர்களுக்கு ஸகாயபூதரோ எவர் பாபிகளுக்குச் சகாயஞ் செய்யாதவரோ, எவர் நாலு வர்ணங்களையும் படைத்தவரோ, அத்வர்யு ஹோதா, உத்காதா, பிரம்ம என்ற நால்வர்களால் செய்யத்தகுந்த யாகத்தை யிரக்ஷிப்பவரோ; எவர் நான்கு விதமான வித்தைகளை அறிந்தவரோ, எவர் நான்கு ஆசிரமங்களிலும் ஸம்பந்தமுடையவரோ, எவர் திக்குகளிலிடைகளிலுள்ள விதிக்குகளோ, ஆகாயஸ்வரூபியோ எவர் வாயுஸ்வரூபியோ, எவர் ஜலம் அக்கினி சந்திர சூரியர்களுடைய ஒளி இவைகளை சுவரூபமாக உடையவரோ, எவர் அஞ்ஞானமாகிற இருளுக்கு முடிவான யோகீசுவரரோ, சிறந்த சோதியானது எவரையடைகின்றதோ, சிறந்த தவமானது எவரை அடைகின்றதோ, எவரை உயர்ந்ததாகவும் தாழ்ந்ததாகவும் வேதங்கள் கூறுகின்றனவோ, எவர் மேன்மைபெற்ற பரமாத்மாவென்ற தன்மையையுடையவரோ, ஆதித்தன் முதலியபேரொளியவரோ, தைத்தியர்களுக்கெல்லாம் அந்தகரான பிரபுவேயவரோ, யுகாந்தகாலங்களில் எவர் அந்தகரோ, உலகங்களுக்கு சங்காரத்தைச் செய்யும் அந்தகனுக்கும் அந்தகன் எவரோ, உலகமரியாதைகளுக்கு எவர் ஒர் அணைபோன்றவரோ, பரிசுத்தமான கர்மங்களுக்கும் பரிசுத்தமானவர் எவரோ, வேதத்தையறிந்தவர்களால் எவரறியத்தக்கவரோ, எவர் சிருஷ்டிகர்த்தாவான பிரபுவோ, அடக்கமுள்ள மனதை உடையவர்களுக்கு எவர் சந்திரனைப்போன்றவரோ, அக்கினியைப்போன்ற ஒளியை உடையவர்களுக்கு எவர் அக்கினிபோன்றவரோ மனிதர்களுக்கு எவர் மனதின் வடிவாயிருப்பவரோ தவசிகளுக்கு எவர் தவத்தின் வடிவமாயிருப்பவரோ வணக்கமாய் நடப்பவர்களுக்கு எவர் விநயத்தின் வடிவமாயிருப்பவரோ, ஒளியிருந்தவருக்கு எவர் பேரொளியோ, சிருஷ்டிகளுக்கு எவர் கர்த்தாவோ இவ்வுலகம் உற்பத்தியாவதற்கு மேன்மையான காரணம் யெவரோ, உடலையுடைய பிராணிகளுக்கு எவர் சிறந்த உடலையுடையவரோ, நல்லகதியை அடைபவருடைய உத்தமகதியெவரோ, ஆகாயத்துக்குப் பிராணன் வாயு, வாயுவிற்குப் பிராணன் அக்கினி, அக்கினியைப் பிராணனாகவுடையவர்கள் தேவர்கள், அவ்வக்கினிக்குப் பிராணன் மதுசூதனன், என்று யாதொரு வேதங்கள் கூறுகின்றனவோ அன்னரசத்தினின்றும் இரத்தமும், அதினின்று மாமிசமும், அதினின்றும் மேதஸென்றதும், அதினின்று எலும்புகளும், அதினின்று மஜ்ஜையும், அதினின்று சுக்கிலமும், உண்டாகின்றன. அந்த சுக்கிலத்தினின்றும் கர்ப்பம் என்றது உண்டாயிற்று. இக்கர்ப்பத்திற்கு மூலம் அன்னத்தின் ரஸமே தவிர வேறில்லை. அச்சுக்கிலத்தில் ஜலத்தின்பங்கு



முற்பட்டது. அது சந்திரனுடைய அம்சமென கூறப்படுகின்றது. ஆகையால் சுக்லமென்பது சந்திரனுடைய சுவரூபமென்றும் சோணிதமென்பது அக்கினி சுவரூபமென்றும் ரஸரூபமான இவ்விரண்டுகளும் சந்திராக்கினிகளை யுடைய அம்சங்களென்றும் நிர்ணயிக்கப்பட்டன. மேலும் சரீரத்திலுள்ள கபவர்க்கத்தில் சுக்கிலமும் பித்தவர்க்கத்தில் சோணிதமும் அவைகளுக்குள் கபத்தின் நிலை ஹிருதயமென்றும் பித்தத்தின் நிலை நாபியென்றும் அவைகளுக்குள் ஹிருதயமென்பது தேகத்தினுடைய மத்தியிலுள்ளதென்றும் அதுவே மனதிற்கிருப்பிடமென்றும் நாபிக்குள்ளா கோஷ்டமென்பது யாதொன்றுளதோ அதுவே பித்தத்தின் ஸ்தானமென்றும் கூறப்படுகின்றது. அன்றியும் மனமென்பதே பிர்மாவென அறியத்தக்கது. கபமென்பது சந்திர தேவதையென அறியத்தக்கது. பித்தமென்பது அக்கினி தேவனென அறியப்பட்டது இவ்விதம் இவ்வுலகமானது அக்கினியையும் சோமனையும் மூலமாகவுடையது. இவ்வண்ணம் சுக்கில சோணிதங்களுடைய சம்பந்தத்தால் கர்ப்பமானது திரண்ட மேகம்போல் விருத்தியடையும் பொழுது வாயுவானது பரமாத்மாவோடு கூடியதாய் அக்கர்ப்பத்தில் பிரவேசிக்கின்றது. அவ்விதம் அதினுட் சென்ற பிறகு கர்ப்பம் விர்த்தியடைந்து கால்கள், கைகள், உடல், தலை என ஐந்து பாகத்தோடும் பிராணன், அபானன், ஸமானன், உதானன், வியானன் என்ற வாயுக்களோடும் கூடியதாய் மறுபடியும் நன்றாய் விருத்தி யடையத் தொடங்குகின்றது. அவைகளுள் பிராணன் என்பது இடத்தை விருத்தி செய்துகொண்டு எங்கும் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. அபானன் என்பது பின்னுடலைப்பற்றியும், உதானனென்பது மேல் சரீரத்தைப் பற்றியுமிருக்கின்றன. வியானனென்பது பெருக்கச் செய்கின்றது. ஸமானனென்பது ஸரியான நிலையில் திருப்பிக்கொண்டு வந்து வைக்கின்றது. பிறகு பஞ்சபூதங்களுடைய பெருத்த ஸம்யோகமும் அவைகளுடைய குணங்களாகிற சப்தம் பரிசம் முதலிய ஐந்து விஷயங்களையும் பற்றத்தகுந்த இந்திரியங்களுக்கு மூலாதாரங்களான பிருதுவி, வாயு, ஆகாயம், அப்புசோதி, யென்ற ஐந்துகளும் அதனதன் தொழில்களைச் செய்கின்றன. அவ்விதமான தேகத்தில் கடினமான பாகம் பார்த்திவமெனவும் பிராணனைப் பற்றி நிற்பது வாயுவெனவும் இடைவெளிகளாயிருக்கின்றவை ஆகாயத்தின் நிலைகளெனவும் கூறப்படுகின்றன. மேலும் ஜலத்தின் அம்சமிருப்பதால் வியர்வை முதலிய பெருக்குகளுற்பவிக்கின்றன. தேயுவை வடிவமாயுடைய சோதி

யானது கண்ணை அடைந்து விளங்குகின்றது. இவ்வைந்துக்களையும் தன்னிஷ்டப்பிரகாரம் நடத்தி வைப்பது மனமென்ற உள்ளிந்திரியம். இவ்வகை யிந்திரியங்களுடனும், விஷயங்களுடனும், பூதங்களுடனும் கூடிய இத்தேகமானது எவருடைய சங்கற்பத்திற்கு அதீனமாயிருக்கின்றதோ இவ்வகைப்பிராணிகளெல்லாம் வசிக்கத்தக்க கிராமங்களும் நகரங்களுமெவருடைய வீரியமுள்ள சங்கற்பத்தால் படைக்கப்பட்டனவோ அப்படிப்பட்ட பகவானென்ன விஷ்ணுவானவர் மிகவும் நசுவரமான இவ்வுலகத்தில் நரஜென்மத்தை யெதற்காக வெடுத்தார். ஓ! பிராம்மணோத்தமனே! இதெனக்குப் பெருத்த சந்தேகம் இச்சந்தேகமே எனக்குப் பெருத்த வாச்சரியம். உத்தமமான கதியை யடையப்பட்டவர்களுக்கெல்லாம் சிறந்த கதியான பகவான் மனிதசரீரத்திலெவ்விதம் ஆசைப்பட்டார் என்னுடையவும் என்முன்னோருடையவும் வம்சசரித்திரம் முழுமையும் கேட்கப்பட்டது. இப்பொழுது விருஷ்ணிகளுடையவும் அவ்வம்சத்திலுதித்த விஷ்ணுவினுடைய சிறந்ததும் ஆச்சரியகரமுமான சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறேன். தேவர்களாலும் தைத்தியர்களாலு மவ்விஷ்ணுவானவர் மிகவும் ஆச்சரியமான தன்மையையுடையவராகப் புகழப்படுகின்றனரோ அவ்விஷ்ணுவினுடைய வாச்சரியகரமான அவதாரத்தை ஓ! சிறந்த முனிவரே! எனக்கு நீர் சொல்லுவீராக இது சாமானியமல்ல ஆச்சரியகரமானதும் நல்ல யின்பத்தைக் கொடுக்கத்தகுந்ததுமான சரித்திரம் புகழ்பெற்ற பலம், வீரியம், தேஜஸ், முதலிய குணங்களுக்கிருப்பிடமானவரும், எங்கும் நிறைந்தவரும், தேவர்களுக்கெல்லாம் முந்தின தேவனுமுள்ள விஷ்ணுவினுடைய வுண்மையான சரித்திரத்தை நீர் எனக்குச் சொல்லவேண்டும்.

44-ம் அத்தியாயம் முற்றிற்று.

---

## 45-வது அத்தியாயம்.

**வைசம்பாயனர்:—** ஓ! அன்பனே! சார்ங்கமென்ற வில்லையுடைய விஷ்ணுவின் விஷயமாக உன்னால் பெருத்த வினாக்கள் வினவப்பட்டன. ஆகிலும் எனக்குத் தெரிந்தவரையில் அவ்விஷ்ணுவினுடைய கீர்த்தியைக் கூறுகின்றேன் கேட்பாயாக. நற்செயலாயுனக்கு விஷ்ணுவின் பிரபாவத்தைக் கேட்பதில் புத்தியுதித்தது. ஆ!! விஷ்ணுவின் மிகவும்



தெய்வத்தன்மை பொருந்திய அவதாரத்தைச் சொல்லுகின்றேன் கேள். வேதங்களை யோதியறிந்த விப்பிரர்கள் யாவனொருவனைப் பலகண்களையும், முகங்களையும், அழிவற்றகைகளையும், தலைகளையும், பயனுள்ள தோள்களையுமுடைய தேவனாகவும், ஒளிவீசும் பலகாதுகளையும், பல கிரீடங்களையுமுடைய பிரபுவாகவும் பலபயன்களையும் கொடுக்கின்றவராகவும் காணப்படும் பற்பல வஸ்துக்களுக்கு மாதியாகவும், அழிவற்றவர்களாகவும் யக்ஞமூர்த்திகளாகவும் ஹோமமாகவும், ஹோமஞ்செய்யப்படும் வஸ்துவாகவும், ஹோமம் செய்கின்றவராகவும், அதற்குவேண்டிய பரிசுத்தங்களான பாத்திரங்களாகவும், வேதியாகவும், தீக்ஷையாகவும், சருவாகவும், ஸ்ருவமாகவும், ஸ்ருக்காகவும், ஸோமமாகவும், முரமாகவும், உலக்கையாகவும், புரோக்ஷணமாகவும், தக்ஷிணாயனமாகவும், அத்துவரியுவாகவும், உத்காதாவாகவும், சபாபதியாகவும், சபையாகவும், யாகசாலையாகவும், யூபஸ்தம்பமாகவும், ஸமித்தாகவும், குசங்களாகவும், தர்வியாகவும், சமஸமாகவும், உரலாகவும், பிராக்வம்சமாகவும், யாகம்செய்யும் இப்பூமியாகவும், ஹோதாவாகவும், சயனமாகவும், குறுகினவஸ்துக்களாகவும், நீண்டவஸ்துக்களாகவும், மற்றுமுள்ள சராசரங்களாகவும், பிராயச்சித்தங்களாகவும், யாகத்திரவியங்களாகவும், மெழுகிவைக்கப்பட்ட பரிசுத்தமான ஸ்தலங்களாகவும், மந்திரமாகவும், யாகத்தைவகிக்கும் அக்கினியாகவும், ஓர்பங்காகவும், பலபங்குகள்கூடிய தொகுதியாகவும், ஹவிஸ்ஸுக்களைப் புசிக்கின்றவராகவும், ஸோமத்தைப்பானம் செய்கின்றவராகவும், அக்கினியினின்றெழும்பிய ஜுவாலையாகவும், மேலெடுக்கப்பட்ட ஆயுதத்தை உடையவராகவும், நிலையுள்ள பிரபுவாகவும் கூறுகின்றனரோ, அந்தயக்ஞத்திற்கும்பிரியமான தேவர்களுக் கெல்லாமீசனும், ஸ்ரீவத்ஸம் என்ற மருவைமார்பிலுடையவராயும், ஸர்வக்ஞனுமுள்ள விஷ்ணுவினுடைய அனேகம் அவதாரங்கள் சென்றுவிட்டன. இனியுமெவ்வளவோ அவதாரங்களுண்டாகப் போகின்றனவென்று சதுர்முகனே கூறியிருக்கின்றார். ஓ! மஹாராஜனே! என்னைநோக்கி தெய்வசம்பந்தமாயுள்ள யாதொரு சரித்திரத்தைப்பற்றி வினவுகின்றாயோ, யாதொருகாரணத்திற்காகப் பகவானும், தெய்வநாயகனும், அரிகளைக்கொல்பவருமான விஷ்ணுவானவர் தேவலோகத்தைவிட்டு வசுதேவனுடைய கோத்திரத்தில் அவதரித்தாரோ அக்கதையை முற்றிலுமுனக்குச் சொல்லுகின்றேன் கேள். அவ்வாசுதேவனுடைய மான்மியம்பொருந்திய சரித்திரமானது தேவர்களும் மனிதர்களும் நிறைந்த இவ்வுலகங்களின் இதத்

நிற்கும் விருத்திக்குமேயாகின்றது. பெருமாளும் எல்லாப்பிராணிகளையும் தனக்குச் சரீரமாகவும், எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவுமுள்ள அப்பகவான் ஓர் சிறந்ததான காரியத்தைப்பற்றியே அவதரிக்கின்றார். ஓ! ஜனமேஜயனே! புண்ணியத்தைக் கொடுக்கத்தக்கதும், பிராகிருத ஸம்பந்தமில்லாத குணங்களுடன் கூடியதும், மிகவும்பெருமை பொருந்திய சக்ஷுஸ்ஸுக்களால் லக்ஷிக்கப்பட்ட வேதவாக்கியங்களால் சிறப்பிக்கப்பட்டவைகளுமான அவரது அவதாரங்களைக் கூறுகின்றேன். மனச்சுத்தியுடனும் பரிசுத்தமான வாக்குடனும், கேட்பாயாக. இனி என்னுல் கூறப்படும் பழமையான சிறந்ததுமயனது புண்ணியத்தைக் கொடுக்கத்தக்கதும் வேதங்களாற் சம்மதிக்கப்பட்டதுமானதையால், அப்பிராக்கிருதமான விஷ்ணுவின் கதையை ஜாக்கிரதையாய்க் கேள், ஓ! பாரதனே! எந்தெந்த காலங்களில் வர்ணாசிரம தருமத்திற்குக் குறைவு வருகின்றதோ, அந்தந்தகாலங்களில் அத்தர்மங்களை நிலைநாட்ட வேண்டியதற்காகப் பிரபுவானவர், அந்தந்த விடங்களிலவதரிக்கின்றார். அவருடைய முதல் உருவமானது மிகவும் உயர்ந்தது. ஓ! ராஜனே! அவ்வுருவமானது எப்பொழுதும் ஒளிமிகுந்த சோதியுருவான உலகத்திலிருந்து கொண்டு ஒருவராலும் செய்யமுடியாத தவத்தைச்செய்துகொண்டேயிருக்கின்றது. இது அவரது முதலாவது உருவம். அவரது இரண்டாவது உருவமானது சயனரூபமாயிருந்து யோக நித்திரையை யடைந்திருக்கின்றது. இது பிராணிகளைச் சங்கரிக்கவும், படைக்கவும், யோகிகளால் சிந்திக்கவு முபயோகமானது. மேலுமிவ்வுருவே பலயுகங்கள் முடிந்தபின் ஓர் காரியத்தின் பொருட்டிவ்வுலகத்தி லுற்பவிக்கின்றது. ஆனதாலிது காரியவுருவம். பலயுகங்கள் பூர்ணமான பிறகு தேவர்க்கும் தேவனும், ஜகத்துக் கீசனுமுள்ள பிதாமகனும், லோக பாலகர்களும், சந்திரன், சூரியன், அக்கினி, இவர்களும், தக்ஷன் முதலிய பிரஜாபதிகளும், கபில தேவரும், இந்திரனும் தேவர்களும், ஸப்தரிஷிகளும், பிரியவ்ரதனும், மிகவும் கீர்த்திபெற்ற வாயுதேவனும், ஸமுத்திரங்களும் மலைகளும், அந்த விஷ்ணுவின் தேகத்தை யடைந்து ஜீவித்திருக்கின்றன. அவ்விதமே மகாப்பிரபாவசாலியான ஸநத் குமாரனும் சிறந்த புத்திமானும் பகவானும் பிரஜைகளைப் படைப்பவனுமான மநுவும் பிதுர்தேவரும் அப்பிரளயகாலத்தில் அவ்விஷ்ணுவினுடைய தேகத்தையே அடைகின்றனர். இவ்விதம் தேவர்கள், அசுரர்கள், உரகர், கின்னரர், மனிதர் மற்றுமுள்ள, சராசரங்களெல்லாம் ஒடுங்கிப்போன அப்பிரளயகாலத்தில் யுத்தத்தில் விருப்பமுள்ளவர்



களாகவும், எவராலுமெதிர்க்க முடியாதவர்களாகவுமுள்ள மதுகைடபனென்ற வீரர்களான இரண்டு அசுரர்கள் எவரால் மிகுந்த வாதனைத்துடன் கொல்லப்பட்டார்களோ பிறகு அந்த மகாப்பிரளயத்தில் ஜலரூபமான அனந்த சரீரத்தின்மேல் படுத்துக்கொண்டிருக்கும் அக்கமல நாபனுடைய நாபிக்கமலத்தில் தேவர்களும் ரிஷிகளும் கூட்டம் கூட்டமாய் ஜனித்தனரோ அவ்வுற்பத்திக்கு பௌஷ்கரமெனப்பெயர். யாதொரு புராணத்தில் யாதொரு வேதங்களால் நிர்ணயிக்கப்பட்ட தேவனானவர் வராகமென்ற அவதாரத்தைச் செய்தனரோ, அவரது மான்மியத்தைக் கூறுகின்றேன் கேள். அந்த வராக மூர்த்திக்கு நான்கு வேதங்களே கால்கள், யூபஸ்தம்பங்களே கோரைப்பற்கள், யாகங்களே மற்றபற்கள், சயனமே முகம், அக்கினியே நாக்கு, தர்ப்பங்களே உரோமங்கள், பிரமாவே தலை, அகோராத்திரங்களே பார்வைகள், ஸ்ருதியே அதனுடைய செவிகள். நெய்யே நாசி, ஸ்ருவமே மூக்கு, ஸோமமே குர்குர்ரென்றசத்தம், தருமம் சத்தியம் முதலியவைகளே அதனடிகள், பிராயச்சித்தமே நகம், பசுவே ஆசிசைதை, உத்காதாவே சத்தம், பயமே அதன் அண்டம், பிராணனே அதன் முழிகள், விருத்தியான சோமமே அதனிரத்தம், வேதியே அதன்தோள், ஹவிஸே அதன்வேகம், பிராக்வம்சமே முன்னுடல் தீக்ஷையே அதன் நிலை, தக்ஷிணையே இருதயம், காமமே உதடுகள், பிரவாக்கியமே சிறந்த சுழிகள், வேதமார்க்கமே நடை, ரகஸ்யமான உபநிஷத்தே இருப்பு, பத்தினியே யதன் நிழல், இவ்விதம் யாகமயமான மேரு பர்வதத்தின் கொடி முடி போலுயர்ந்த அவ்வராக மூர்த்தியானவர் பாதாளத்தில் முழுகிக்கிடக்கும் கடலோடு கூடிய பூமிதேவியைத் தனது கோரைப்பற்களால் உத்தாரணம் செய்து இவ்வுலகங்களினுபகாரத்துக்காக சரியான முன்னிலையில் கொண்டு வந்து நிலை நிறுத்தினார். அப்பொழுது அந்த பூமிதேவியானவள் அவ்வராக மூர்த்தியினது சரீர சம்பந்தத்தால் மேன்மையான ஆனந்தத்தை அனுபவித்தாள். மேலும் தன்னை உத்தாரணம்செய்த இவ்வுலகங்களையெல்லாம் படைக்கும் அத்தேவனுக்கு நமஸ்காரம் செய்தாள். இவ்விதம் அவ்வராகமூர்த்தியால் பிராணிகளுடைய இதத்துக்காக பிரளயத்தில் முழுகிய பூமியானது உத்தாரணம் செய்யப்பட்டது.

இதன் பிறகு நரசிம்மனது சரித்திரத்தைக் கேள். முன்பு கிருதயுகத்தில் தேகபலத்தால் கொழுப்படைந்த [illegible]சுரனானவன் கொடுமையான தவத்தை பதினொராயிரத்தி நூற்றைப்பதினைந்து வருஷம்வரையில்

செய்தான். அப்பொழுது அவன் தினந்தோறும் ஸ்நாநம், போஜனம் ஜலபாநனை, உபவாசம் முதலிய உறுதியான நோன்புடன் மிகவும் அடக்கமாகவும் பிர்மசர்யத்தோடும் நெறிதவறாமலிருந்தான். அவனது தவத்தாலும் நியமத்தாலும் பிரீதியை அடையப்பட்ட பிர்மாவானவர் சிறந்த அன்னம்பூட்டிய விமானத்தின் பேரில் உட்கார்ந்துகொண்டும் ஆதித்தியர் வசுக்கள் சாத்தியர் மருத்துக்கள் முதலிய தேவர்கள் புடைசூழ தும்புரு கின்னரர்கள் பாட திக்குகள் நதிகள் எல்லாம் வணங்க நவக்கிரகங்களெல்லாம பயந்து நிற்க நீடிய தவங்களையுடைய தேவரிஷிகளாலும் சப்தரிஷிகளாலும் துதிக்க புண்ணியசாலிகளான ராஜரிஷிகள் வியக்க அப்சரஸுக்களெல்லாம் கந்தர்வர்களோடும் நடிக்க இவ்வித கோஷங்களுடன் சராசரங்களுக்கெல்லாம் குருவாயும் பிர்மஞானிகளுக்குள் உத்தமராயுமுள்ள பிர்மாவானவர் பிரத்தியக்ஷமாய் வந்து அதைத்ய ராஜனான ஹிரண்யகசுபை நோக்கி வருமாறு கூறுகின்றார். பக்தனே! என்னிடத்தில் பக்தனான உனது தவத்தினால் நான் மிகவும் சந்தோஷித்தேன் உனக்கு வேண்டிய வரங்களைக்கேட்டுக் கொள். உன் விருப்பத்தையும் அடைவாய்.

இரண்யகசபு:— ஓ பிர்மதேவனே! எனது தவத்தால் நாம் பிரீதியை அடைந்தது வாஸ்தவமானால் தேவர் அசுரர்கள் கந்தர்வர் இயக்கர் உரகர் இராக்கதர் மனிதர், பிசாசர், என்ற எவர்களும் என்னைக் கொல்வதற்குச் சக்தி அற்றவர்களாக வேண்டும். ஓ பிதாமகனே! அவ்விதமே ரிஷிகளும் எவ்வளவு கோபம் வந்தாலும் என்னை சபிக்க வல்லமை இல்லாதவர்களாக வேண்டும் ஒரு சமயம் அவர் தவறி சபித்தாலும் அதுவரையிலுள்ள அதன் தபோபலம் முழுமையும் என்னைவந்து அடைய வேண்டும். மேலும் சக்தி முதலிய சஸ்திரங்களாலாவது அஸ்திரங்களினாலாவது மலையினாலாவது மரத்தினாலாவது உலர்ந்ததாலாவது நனைந்ததாலாவது மற்றெதினாலாவது எனக்கு மரணமென்பது சம்பவிக்கக் கூடாது. ஆனால் சதுரங்க பலத்தோடுகூடிய என்னைகேவலம் கையடியினாலேயே கொல்லத் தகுந்தவனெவனோ அவனே எனக்கு மிருத்துயுவாக வேண்டும் நானேசூரியன் சோமன் வாயு அக்கினி ஜலம் ஆகாயம் நக்ஷத்திரங்கள் பத்துத்திசைகள் காமம் குரோதம் வருணன் வாசவன் எமன் தனபதியான குபேரன் சித்திரகன் இவர்களனைவருக்கும் எஜமானனுமாவனும் அவர்களை எதிர்க்கவைக்க சக்தியுள்ளவனாகவும் ஆவேன். இவ்விதம் தவசியான அசுரனால் கூறப்பட்ட சுயம்புவீரயும்



பகவானுமாயும் உள்ளபிர்மாவானவர் அதைத்ய ராஜனை நோக்கி சிரித்துக் கொண்டு ஒருவார்த்தை கூறுகின்றனர்.

பிர்மா:— ஓ! அன்பனே! இவ்வரங்களெல்லாம் என்னால் உனக்கு கொடுக்கப்பட்டன. உன் மனதிலுள்ள எண்ணங்களான இவைகளை எல்லாம் நீயடைவாய். இதில் ஸம்சயமில்லை. இவ்விதம் அசுரனுக்குவரன் கொடுத்துவிட்டு பிர்மாவும் பிர்மரிஷிகளால் நிறைந்த வயிருஜமென்ற தனது சபையை யடைந்தனர். பிறகு தேவர்களும் நாகர்களும் கந்தர்வர்களும் முனிகளும் அவ்வரதானத்தைக்கேட்டு திகிலையடைந்து அப்பிதாமகனைக் கிட்டி இந்திரனை முன்னிட்டுக் கொண்டு பிர்மாவினிடத்தில் தெரிவித்துக் கொண்டார்கள்.

தேவர்கள்:— ஓ! பகவானே! நீர்கொடுத்த வரத்தினால் அவ்வசுரன் எங்களைக் கொல்லப்போகின்றான். ஆனதால் எங்களிடத்தில் தயவு செய்யவேண்டும். ஓ! பகவானே! இவனுடைய மரணத்தையும் ஆலோசிக்கவேண்டும். ஓ! பகவானே! தாமே சுயமாக உதித்தவரும் எங்கும் நிறைந்தவரும் இவ்வுலகத்துக்கு ஆதிகர்த்தாவும் ஹவியம், கவியம், என்ற இருவிதமான வஸ்துக்களைப் படைத்தவரும் அறியமுடியாதவரும் காரணரும் சர்வசரமுமாயிருக்கின்றீர். எங்களால் அதிகம் சொல்லவேண்டுவது என்ன இருக்கின்றது. இவ்விதம் இந்திராதி தேவர்களால் கூறப்பட்ட ஸர்வலோகத்துக்கும் இதமானவாக்கியத்தை சதுர்முகன்கேட்டு வருமாறு கூறலுற்றார். ஓ! தேவர்களே! ஒருவன் தவம் புரிந்தால் அத்தவத்திற்கு தக்கபயனை அவனநுபவிக்கவேண்டியது சாஸ்திர விதியாகையால் அவ்விரண்யகசுபுவின் தவத்தின் முடிவில் பகவானான விஷ்ணுவானவர் அவனை வதம்செய்வாரென்ற பங்கஜாஸனிடமிருந்து உண்டானவார்த்தையை ஸகலரும் கேட்டு, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மிகுந்த சந்தோஷத்துடன், அவரவரிடம் சென்றனர். அவ்விரண்யகசுபும் பிர்மாவினிடமிருந்து வரத்தைப்பெற்றவுடன் ஸகலப்பிராணியையும் உபத்திரவிக்க ஆரம்பித்தான். அதாவது ஆசிரமங்களில் வசிக்கும் கடுமையான விரதங்களையுடைய தபோமகிமை பெற்றவர்களாயும், சத்தியத்திலும் தர்மத்திலுமே மனமுள்ளவர்களாயும், அடக்கமுள்ளவர்களாயுமுள்ள ரிஷிகணங்களை முதல்முதலில்கலக்கினான். பிறகுசுவர்க்கத்திலுள்ள இந்திராதிதேவர்களையெல்லாம் தோற்கடித்தான். அதன்பின் மூவுலகங்களையும் தனக்கு வசமாக்கிக்கொண்டு, சுவர்க்கத்தில் போய் அங்கேயேவசித்தான். அதினுடன் பூலோகத்திலுள்ள தனது அசுரர்

களெல்லாம் யாகங்களையனுஷ்டிக்கும்படி செய்து அதினால் அவனே திருப்தியடைந்தான். யாகத்திற்குள்ள ஹவிர்பாகங்களையெல்லாம் அநுபவிக்கத் தேவர்களுக்கதிகாரமில்லையென்றும் தன் தைத்யர்களுக்கே அதிகாரமென்றும் சட்டம் கட்டினான். அதனால் மிகவும் துன்பத்தையடைந்த ஆதித்யர், ருத்திரர், விசுவேதேவர், மருத்துக்கள், சாத்தியர், அப்சரசுக்கள், கந்தர்வர்கள், பிர்மக்ஞானியான பிராமணர்கள், ருஷிசிரேஷ்டர்கள், சுபர்ணர்கள் முதலியவெல்லோரும் ரக்ஷகனும், சரணமாயும், மகாபலமுடையவனும், ஸர்வாந்தர்யாமியாயும், வேதமயனும் எக்ஞமயனும், பிர்மமாயும், பிர்மாவாயும், என்றுமுள்ளவனும் முக்காலமாயும் பிரபுவாயும் எல்லா உலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவனும் உள்ள எங்கும் நிறைந்த நாராயணனை அடைக்கலம் புகவேண்டுமென்ற கோலத்துடன் அடுத்துச் சென்றனர்.

தேவர்கள்:— இரண்யகசிபுவினிடத்தினின்றுண்டான துன்பத்தால் உமது திருவடியில் அடைக்கலம் புகுந்த எங்களை ரக்ஷிக்கவேண்டும். ஏனெனில் நாமே பிர்மாமுதலிய எங்களுக்கெல்லாம் போஷகராயிருக்கின்றீர் ஓ! தேவோத்தமனே! நீரே யெங்களுக்கு உத்தமமான தெய்வம். நீரே எங்களுக்குக் குருவும், மலர்ந்த செந்தாமரைப்பூவின் இதழ்கள் போன்ற கண்களையுடையவரும், எங்களுடைய சத்துருக்களாகிற அசுரருடைய பக்கத்தில் பயத்தைதவுண்டுபண்ணுகிறவருமான ஓ! பகவானே! திதியினுடைய வம்சத்தின் நாசத்துக்காக எங்களுக்கு ரக்ஷகராகக்கடவீர்.

விஷ்ணு:— ஓ! தேவர்களே! பயத்தை விடுங்கள். நானுங்களுக்கு அபயத்தைக் கொடுக்கின்றேன். முன்பிரகாரம் சீக்கிரமாகவே சுவர்க்கத்தை யடைவீர்கள். அந்தவரதானத்தால் கொழுப்படையப்பட்டவனும் தேவர்களாலும் தேவேந்திரனாலும் கொல்லமுடியாதவனுமான அவ்வசுரனை அவனது பரிவாரத்துடன் இதோ கொல்லுகின்றேன். இவ்விதம் அப்பகவான் அத்தேவர்களைக் குறித்துக் கூறியபின் தேவர்கள் முதலிய எல்லோரும் பகவானுடைய உத்திரவின்படி அவரவரிருப்பிடம் சென்றனர். இங்கு ஸ்ரீஹரியும் இரண்யகசிபுவினுடைய சபையைக்குறித்து பாதி உடல் நரனாகவும், பாதி உடல் சிங்கரூபமாகவும், நரசிங்கமென்ற உருவத்தோடும், கைமேல் கைதட்டிக்கொண்டும், காளமேகம்போன்ற பெருத்த உடலுடனும் இடிபோன்ற குரலுடனும் மின்னல்போன்ற ஒளியுடனும் பெருத்த வேகத்துடனும் போய்ச்சேர்ந்தார். அங்கு சென்ற அந்நரசிம்ம மூர்த்தியானவர் மிகவும் பலிஷ்டமாய் பிரதாபத்தால்



ஜ்வலிக்கின்றவனும் கொழுப்படைந்த புலிபோன்ற வீரியத்தையுடையவனும் கோபத்தால் எரிகின்ற அசுரக்கூட்டங்களால் காக்கப்பட்டவனுமிருக்கிற அவ்விரண்யகசிபுவென்ற அசுரராஜனை ஒரே கையினால் ஒரு க்ஷணப்பொழுதில் கொன்றார். ஓ! ராஜனே! நரசிங்கமென்ற அவதாரம் கூறப்பட்டது. இனி இதற்கடுத்தது வாமனமென்ற அவதாரம். முன்பு அசுரர்களை நாசம் செய்யக்கூடிய வாமனமென்ற ரூபத்தையடைந்து பலவானான பலிசக்கிரவர்த்தியினுடைய யாகத்தில் மகாபலசாலியான விஷ்ணுவினால் மூன்று அடிகள் யாசிக்கப்பட்டும் பிறகு அதை அளர்ப்பதற்காக மூன்று விக்கிரமங்களோடு கூடிய திரிவிக்கிரமமென்ற நாமதேயத்துடன் எவனாலும் கலக்கமுடியாதவராய் ஓங்கிவளரும்பொழுது அம்மகாபலியினுடைய சபையிலிருந்த பெரிய அசுரர்களான விப்பிரசித்தி, சிபி, சங்கு, அயசங்கு, அயசிரன், சங்குசிரன், ஹயக்ரீவன், வேகவான், கேதுமான், உக்கிரன், சோமவியக்கிரன், புட்கரன், புஷ்கலன், மயபனன், பிரகத்கீர்த்தி, மகஜிக்ருவன், சாசுவன், அசுவபதி, பிரக்லாதன், அசுவசிரன், கும்பன், சமுகலாதன், ஆகாசப்பிரியன் அனுக்லாதன், அர்ஹாரன், வராகன், சங்காரன், ருஷன், தீர்க்கஜிருவன் அர்த்தவாதன், னுயனன், மிருதுஜாபன், மிருதுப்பிரியன், வாயு, எவிஷ்டன், நமுசி, சம்பரன், விஜ்வரன், சந்திரஹந்தா குரோதஹந்தா குரோதவர்த்தனன் காலகன், காலகேயன், விருத்திரன், குரோதன், விரோசனன் கரிஷ்டன், வரிஷ்டன் பிரலம்பன், நரகன் இந்திரதாபன், வாதாபி, அதிலோமன், புலோமன், வாக்கலன், பிரமதன், மதன் கசருமன் காலவதனன் கராளன், கைசிகன், சரன், ஏகாக்ஷன், இராகு, சிறுமான் கனன், சக்கர அஸ்தன், பரிகபாணி, சூலஹஸ்தன் என்ற இவர்களெல்லாம் நானாவிதங்களான ஆயுதங்களை கையிலெடுத்துக்கொண்டும் பலவிதகோரமான உருவங்களைத் தரித்துக்கொண்டும் அடிபிடி கட்டுவெட்டு குத்தெனக் கொடூமான வாக்குக்களைப் பேசிக்கொண்டும் நானாவிதமான கிரீடம் குண்டலம் முதலிய ஆபரணங்களைப் பூட்டிக்கொண்டும் அங்குமிங்கும் தன்னாயுதங்களோடு ஓடியாடி அடித்துவந்து உபத்திரவித்தனர். அப்பொழுது அவ்வசுரர்களையெல்லாம் அப்பிரபுவானவர் காலாலும்கையாலும் அடித்து, ஒழுதலின்றி அனுகவொட்டாமற் செய்துகொண்டு தான் பயங்கரமான ஒரு உருவமெடுத்து இப்பூமியையும் ஆகாயத்தையும் தனதுபராக்கிரமத்தாலேயே தனக்கு வசமாக்கிக்கொண்டார். திரிவிக்கிரமனென்ற அப்பெரிய உருவமெடுத்தபொழுது சந்திரனும் சூரியனும் அவர்மார்பளவுக்குச்சரியாயிருந்தார்கள். மேலும் உயரும்பொழுது நாபிக்குச் சரியாயிருந்தார்கள்.

மேலும் விகசிதமிலித்தபொழுது அவர்மாரணவுந்தச் சரியாயிருந்தார்கள். இவ்விதம் பிராமணர்களெல்லோரும் விகாரற்றவீரியமுடைய திருவிக்கிரமாவதாரத்தின் மூன்றடிவிக்கிரமங்களையும் கூறுகின்றனர். திருவிக்கிரமனும் இவ்விதம் பூமி முழுவதையும் தன்வசமாக்கி, பெரிய அசுரர்களையெல்லாம் கொன்று, மறுபடியும் அந்த சக்கிரனுக்கு பூமியையும் சுவர்க்கத்தையும் திருப்பிக்கொடுத்தார். ஓ! அரசனே! உனக்கு வாமனாவதாரம் இன்னதென கூறப்பட்டது. வேதத்தையறிந்த பிராம்மணர்களாலும் இவ்விதமே கூறப்படுகின்றது. இனிபுகழ்பெற்றதும், சிறந்த பொய்யமையோடு கூடினதுமான, தத்தாத்திரேயமென்ற அவதாரம் கூறப்படுகின்றது. ஒருசமயத்தில் வேதங்களும் அதிற்கூறிய கர்மங்களும் யாகங்களும் நசித்துப்போய், நான்கு வர்ணங்களும் ஒன்றுக்கொன்று கலந்துபோய், அவரவர் கர்மங்களும் மறைந்துபோய் அதர்மம் விர்த்தியடைந்து, சத்தியம் அடியோடு குன்றி, அசத்தியம் மேற்கிளம்பி பிராணிகளெல்லாம் அலைந்துபோய் தர்மமும் அலைந்துபோனபொழுது, அத்தாத்ரேய பகவானும் மறுபடியும் எக்ஞங்களோடும் மற்றகர்மங்களோடும் கூடிய வேதங்கள் முழுமையும் திருப்பிக் கொண்டுவந்து நிலைநாட்டப்பட்டது. அவ்விதமே நான்கு வர்ணங்களும் அதனதன் நிலையில் நிறுத்தப்பட்டன. அப்பகவானால் ஹேஹயராஜனது மகனும் சிறந்தபுத்திமானுமான கார்த்தவீரியனுக்கு சிறந்தவரங்கள் கொடுக்கப்பட்டன. அப்பொழுது அவ்வரசனை நோக்கி அப்பகவான் கூறியதாவது. ஓ! பாபமற்ற அரசனே! உனது இக்கைகளிரண்டும் எதிராளியுடன் போர்புரியும்பொழுது உனக்கு ஆயிரங்கைகளாகக்கடவது. ஓ! பாபமற்றவனே! கடல்சூழ்ந்த இப்பூமிமுழுவதும் ஆள்வாயாக. உனது சத்துருக்கூட்டங்களுக்கு நீ புலப்படமாட்டாய். நுட்பமான தருமங்களையெல்லாம் அறிவாய், என இவ்விதம் வரமளித்தார். இதனால் கார்த்தவீரியனும் அனேகவருஷங்கள் வரையில் இப்பூமியைப் பரிபாலித்து வருணாசிரம தருமங்களை நிலைநிறுத்தினான். ஓ! ஜனமேஜயனே! இது ஓர் விஷ்ணு சம்பந்தமாயும் ஆச்சரியகரமாயும் சுபகரமாயுமுள்ள அவதாரம் பெரியோர்களிடம் என்னால் கேட்கப்பட்டபடி உரைக்கப்பட்டது. இனிமேல் அந்த மகாத்மாவான விஷ்ணுவினுடைய ஜாமதக்னியமென்ற அவதாரம் கூறப்படுகின்றது. அவ்வவதாரத்தில் போர்முகத்தில் ஆயிரங்கைகளுடன் விளங்கும் அக்கார்த்தவீரியனென்ற அர்ச்சுனனை பரசுராமனென்ற பெயருடன் [illegible]ப்பிரபுவானவர் பலரும் வியக்கத்தக்கதாய்க் கொன்றார். அ[illegible] — தேரிலிருந்த அவ்வர்ச்சுனனைப் பூமியிற்றள்ளி



நிற்கவைத்து தன்னிஷ்டப்பிரகாரம் கோலாகலமாய்ச் சண்டைசெய்து கோடையிடிபோல் கதறக்கதற அவனது ஆயிரங்கைகளையும் தனதுபரசுவென்ற அவ்வாயுதத்தால் வெட்டித்தள்ளினர். அப்பரசுவென்ற ஆயுதத்தாலேயே 21-தரம் இப்பூமியிலுள்ள க்ஷத்திரியர்களையெல்லாம் கொன்று பூமிமேல் பரப்பி பெரும்பாலும் க்ஷத்திரியன் இல்லாமலே செய்துவிட்டார். சிறந்த தபோதனராயும், பிருகுவம்சத்தில் பிறந்தவராயுமுள்ள அப்பரசுராமன் க்ஷத்திரியப்பூண்டுகளை வேரறுத்த ஸகலவிதமான பாபங்களின் பரிகாரத்திற்காக கடைசியில் அசுவமேதமென்ற யாகத்தைச்செய்தார். அந்தயாகத்தில் மாரீசனென்ற காசியப மகரிஷிக்குத் தான் ஜயித்த பூமி முழுவதையும் அநேகம் யானைகளையும் வேகமுள்ள குதிரைகளையும் தக்ஷிணையாகக் கொடுத்தார். அப்பரசுராமன் மகேந்திரமென்ற பர்வதத்தில், மான்தோலை வஸ்திரமாக உடுத்திக்கொண்டு சடையையே மகுடம்போல் மண்டலாகாரமாய் சுற்றிக்கொண்டு சிறந்தவுருவத்துடன் இப்பொழுதும் வசிக்கின்றார். இது தேவனும் சாசுவதனும் அழிவற்றவனுமுள்ள ஜாமதக்னியமென்ற அவதாரம்.

பிறகு 24-வது யுகத்தில் தாமரை யிதழ்போன்ற விசாலமான கண்களையுடைய பகவான் விசுவாமித்திரரை முன்னிட்டுக்கொண்டு தசரதசக்கிரவர்த்திக்குப் புத்திரனாக வேண்டுமெனச் சங்கற்பித்து தன்னை நாலுபிரிவுகளாக்கினர். ஈசுவரனான அப்பிரபுவானவர் உலகத்தில் எப்பொழுதும் இராமனென்ற பெயரால் புகழ்பெற்றவர். ஒளியால் ஆதித்தியனுக்கொப்பானவர். உலகத்தை ரக்ஷிப்பதற்காகவும் இராக்ஷதர்களை வதம் செய்கிறதற்காகவும் தர்மத்தை விருத்தி செய்கிறதற்காகவும் அம்மகா கீர்த்திமானான பகவான் இராமநியனாக அவதரித்தனர். அப்படிப்பட்ட அப்பிரபுவை மனுஷ்யேந்திரனாகவும், சகலபூதபதியினுடைய வடிவமாகவும் உலகத்தோர் கூறுவர். அந்த இராமனைக் குறித்துப் புத்திமானான விசுவாமித்திரரால் தேவசத்துருக்களான அசுரர்களைக் கொல்லவேண்டியதற்காகப் பலவிதமான அஸ்திரங்களெல்லாம் உபதேசிக்கப்பட்டன. யாகங்களுக்கு விக்கினங்களைச் செய்துகொண்டிருந்த மகா பலவான்களான மாரீசன், சுபாகுவென்ற இருவர்களும் கொல்லப்பட்டார்கள். மகாத்மாவான ஜனகனுடைய தனுர்யாகத்திற்சென்று ருத்திரனது வில்லானது விளையாட்டாகவே யதன்பின்பு முறிக்கப்பட்டது. பிறகு அதற்காகச் சீதையும் விவாகம் செய்யப்பட்டாள். அதன்பின் பரசுராமனை யடக்கி அயோத்திக்குச் சென்று

தந்தையினுத்திரவால் அங்கிருந்து பதினான்கு வருஷகாலம் ஸர்வப் பிராணிகளுக்கும் ஹிதத்தையே செய்யவேண்டுமென்ற எண்ணமுடையவராய்த் தனது தம்பியான லக்ஷ்மணனோடும், தனது மனைவியான ஸீதையோடும் வசித்தார். யாதொருவள் அந்த இராமனுடைய பக்கத்தில் உருவத்தோடு ஸீதையென்ற பெயருடன் விளங்கினளோ, அவளோ முன்பு அவரது திருமேனியைவிட்டுப் பிரியாத லக்ஷ்மி யென்றவள். ஆகையால் அந்த இராமனுடன் பதினான்கு வருஷங்கள் வரையில் வனத்திலும் ஸஞ்சரித்தனள். அவ்விதம் வனங்களில் ஸஞ்சரிக்கும் பொழுது இராகவனானவர், ஜனஸ்தானமென்ற விடத்திலிருந்து தேவர்களுடைய காரியத்தைச்செய்யத் தொடங்கினார். அவ்விடத்தில் அவ்விராமனுக்குக் கொடூரமான அபராதத்தைச் செய்த இராக்ஷஸ வேந்தனையும், ஸீதையினுடைய அடியையும் தேடிக்கொண்டு தனது தம்பியுடன் கூட தெற்கு திக்கை நோக்கி அப்பிரபுவானவர் புறப்பட்டார். அந்த சாபத்தினால் விராதன், கபந்தன் என்ற பெயர்களுடனும், அதிகொடூரமான உருவங்களுடனும் கூடிய இருகந்தர்வர்களைக் கொன்றுநற்கதியைக் கொடுத்தனர் சந்திரன், சூரியன், அக்கினி, மின்னல் இவைகளைப்போன்ற வொளியை யுடையவர்களாயும், பழுக்கச் சுடப்பட்ட வுயர்ந்த தங்கத்தினால் பூண்கட்டப்பட்டவைகளாயும், மகேந்திரனுடைய வஜ்ஜிராயுதத்திற்கு நிகரான வலுவையுடைய வைகளாயுமுள்ள பாணங்களால் அவ்விராமனால் அரக்கர்களும் கொல்லப்பட்டார்களென கேட்கப்படுகின்றது. பிறகு சுக்கிரீவனுக்காக அந்த இராமனால் வானரராஜாவும் மகாபலிஷ்டனுமான வாலியென்றவன் போர்முகத்தில் கொல்லப்பட்டான். அதினுடன் அவனது தம்பியான சுக்கிரீவனென்பவன் கிஷ்கிந்தைநகரில் அபிஷேகம் செய்யப்பட்டான். அதன் பிறகு தேவர், அசுரர், யக்ஷர், கந்தருவர் முதலிய எவர்களாலும் கொல்லமுடியாதவனும், இராக்ஷதரெல்லாம், வேந்தனும், கருத்த மைபோன்ற உருவத்துடன் கூடிய கோடிகோடி அரக்கர்களால் புடைசூழப்பட்டவனும் மூன்று வுலகங்களையும் கதறச்செய்யும் மகா கோரரூபியாயும், ஒருவராலும் ஜெயிக்க முடியாதவனும், மிகவும் கொழுப்புடையவனும், வெங்கைப் புலி போன்ற பரபரப்பை யுடையவனும் தேவர்களுடைய கண்களாற் கூட பார்க்க முடியாதவனும், வரதானத்தால் அகங்கார முடையவனும் நீருண்டமேகம்போல் கருத்தவனும், விஸ்தாரமான கருத்த ஆகாயம் போன்றவனும், மகாபலவானும், புலஸ்திய மகரிஷியினுடைய பேரனும், தனக்குப்பெருத்த அபராதம்செய்தவனுமுள்ள இராவணனென்ற



விலங்கேசனை அவனது படைகளோடும் மந்திரிகளோடும் உறவினர்களோடும் புத்திரமித்திர பிராதாக்களோடும் யுத்தத்திற் கொன்றார். மேலும் மதுவென்ற அசுரனுடைய புத்திரனும், மிகவும் கொழுத்தனுமுள்ள லவணன் என்ற அசுரவீரனும் வரத்தினாற் செருக்கினால் வுலகத்தை யுபத்திரவிக்க அதைச்சகியாத யிராமன் அவனையும் யுத்தத்திற் கொல்லுவித்தார். மேலுமப்பொழுது யுத்தவீரனான இராமனால் கொழுத்த பலபல இராக்ஷஸர்களெல்லாம் கொல்லப்பட்டார்கள். இவ்விதம் அனேக நன்மையான காரியங்களை யெல்லாம் இவ்வுலகத்திற்குச்செய்த மகாதர்மிஷ்டனான இராமனென்பவர், யாதொரு தடையுமில்லாமல் பத்து அசுவமேதயாகங்களை செய்தார். அவ்விராமன் இவ்வுலகத்தையாண்ட பொழுது அமங்களங்களான வார்த்தைகள் கேட்கப்படவில்லை. கடுமையான பெருங்காற்று வீசவில்லை. ஒருவனுடைய பொருளையும் மற்றொருவன் திருடினதில்லை. எவளும் கைம்பெண்ணாகி அழுததில்லை. எவரும் அநாதர்களாகவில்லை. இவ்வுலகம் முழுமையும் மிகவுமடங்கியிருந்தது. எப்பிராணிகளுக்கும் ஜலத்தினின்றாவது, காற்றினின்றாவது, மற்ற எவைகளினின்றாவது, பயமென்பதே கிடையாது. வயதில் மூத்தவர்கள் பாலர்களுக்கு பரலோகக்கிரியைகளைச் செய்ததேயில்லை. பிராம்மணரை க்ஷத்திரியரும், க்ஷத்திரியர்களை வைசியர்களும், அம்மூவர்களையும் சூத்திரர்களும், அகங்காரமும் அசூயை முதலியவைகளுமில்லாமல் படிந்து பணிவிடைசெய்தார்கள். பெண்பாலார் தங்கள் கணவனை அதிக்கிரமிக்கவில்லை. இவ்வுலகம் முழுமையும் கள்ளனென்பனேயில்லாமலிருந்தது. இப்பூமியானவள் அப்பொழுது அந்த ஸ்ரீராமனைத்தவிர வேறொருவரையும் பர்த்தாவாக விரும்பவில்லை. சகலஜனங்களுக்கும் அவரே இரக்ஷகராயினர். ஒவ்வொருவரும் நீடித்த ஆயுட்களையும், தழைத்த குடும்பங்களையுமுடையவர்களானார்கள். எப்பிராணிகளாவது பிணிகளால் பீடிக்கப்படவில்லை. மகாதர்மிஷ்டனான அந்த ஸ்ரீராமனுடையகாலத்தில் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும், ரிஷிகளுக்கும் இப்பூமியிலேயே ஒருவருக்கொருவர் ஸல்லாபம் முதலிய ஸம்பந்தங்களுண்டாயிருந்தன. புராணமறிந்தவர்கள் அந்த ஸ்ரீராமனிடத்தில் உண்மையான பொருளை யறிந்தவர்களாய், புத்திமானான அவருடைய மான்மியத்தைப் பலவிதமாகப் பாடியிருக்கின்றனர். அந்த ஸ்ரீராமன் பசுமையான நிறமுடையவன். எப்பொழுதும் தருணன, சிவந்த கண்களையுடையோன், ஒளியிருந்த சிவந்த வாயையுடையோன், சுருக்கமாகப் பேசுகின்றவன், முழந்தாள்வரையில் நீண்ட கைகளையுடையோன், அழகிய முக

முடையோன், சிங்கத்தின் தோள் வலியோன். இவ்விதமுள்ள அவ்விராமன் பதினொராயிரத்தொருநூறுவருஷங்கள் வரையில் அயோத்திக்கு பதியாயிருந்து இவ்வுலகம் முழுமையுமாண்டான். அப்பொழுது ருக்கு, சாமா, யஜுஸ் என்ற வேதங்களுடைய கோஷமும், நாண்களுடைய ஒலியும், வேண்டியதைக்கொடுங்கள், வேண்டியவளவு புஜியுங்கள் என்ற வாக்குக்களாய், எங்கு மிடைவிடாமல் நிறைந்திருந்தன. மேலும் சந்திரனையும் சூரியனையும் கீழ்ப்படுத்தப்பட்ட ஒளியுடனும் ஒப்பற்ற பராக்கிரமத்துடனும் விளங்கிய அவ்விராமன் புண்யகரங்களையும் ஏராளமான தக்ஷிணைகளோடும் கூடிய நூறுயாகங்களால் தேவர்களைத் திருப்தி செய்வித்தினர். இந்தப்பிரகாரமாக இக்ஷ்வாகு குலத்திலவதரித்த மகாபாகுவான ஸ்ரீராமன் இராவணனை அவ்வாறு பரிவாரத்தோடு கொன்று தருமங்களை உலகத்தில்நிலைநாட்டி மறுபடியும் தேவலோகத்தை அடைந்தனர். மேலும் கேசவனுடைய வேறோர் அவதாரமானது எல்லா உலகங்களுடையவுபகாரத்திற்காக மாதுரமென்றகல்பத்திலுண்டாயிற்று. அவ்வவதாரத்தில் சால்வன், மைந்தன், துவிதன், கம்ஸன், அரிஷ்டன், ரிஷகன், கேசி, பூதனை, குவலயாபீடன், சாணூரன், முஷ்டிகன், என்ற மனித தேகத்தை யடைந்தபற்பல அசுரர்களைக் கொன்றார். மேலும் அப்பொழுது பாணாசுரனுடைய ஆயிரங்கைகளும் வெட்டப்பட்டன. யுத்தத்தில் நரகனும் காலயவனனும் கொல்லப்பட்டார்கள். அரசர்களுடைய அனேகம் இரத்தினங்களெல்லாம் தனது பராக்கிரமத்தால் ஸம்பாதிக்கப்பட்டன. உலகத்திலிருந்த கெட்டநடவடிக்கையுள்ள அரசர்கள் முழுவதும் கொல்லப்பட்டார்கள். துவாபரயுகத்தின் ஒன்பதாவதும் கலியின் 28-வதுமான அந்தசமயத்தில் விஷ்ணுவானவர் ஜாதுகர்ணர் என்றவரை முன்னிட்டுக்கொண்டு வேதவியாசராக அவதரித்து, ஒரே மொத்தமாயிருந்த வேதத்தை நான்காகப் பிரித்தார். ஸத்யவதி யென்பவளுடைய குமாரனான அவ்வேதவியாஸபகவானால் அழிந்துபோன பாரதகுலமானது மறுபடியும் உத்தாரணம் செய்யப்பட்டது. ஓ! அரசனே! இவ்விதம் லோகோபகாரார்த்தமாக அந்த மகாத்மாவான அவ்விஷ்ணுவினுடைய அவதாரங்களில் சென்றவைகளெல்லாம் கூறப்பட்டன. இனிவரும் அவதாரங்கள் கூறப்படுகின்றன. கலியுகத்தின்முடிவில் சம்பளமென்ற கிராமத்தில்வசிக்கும் பிராமணனிடத்தில் அப்பகவானவர் லோகோபகாரார்த்தமாக கல்கியென்ற பெயருடன் மறுபடியும் அவதரிக்கப் போகின்றார். அநயாக்ஞவல்க்ய ரிஷியைமுன்னிட்ட பத்தாவது அவதாரம். அவ்வவதாரத்தில் பகவானான கல்கியானவர் விபரீத



மான ஆசாரங்களையுடைய சூத்திரர்களையும் மற்றுமுள்ளோரையுங்கொன்று தருமங்களை நிலைநாட்டி கங்காயமுனைகளின் மத்திமப்பிரதேசத்தில் தனது பரிவாரத்தோடு நிலைக்கப்போகின்றார். இவ்விஷயமானது எப்பொழுது நடக்குமென்றால், உத்தமமான க்ஷத்திரியகுலங்களெல்லாம் நசித்து அவரது வர்க்கங்களெல்லாம் பாழாய்ப்போய் கண்டவர்களெல்லாம் அரசர்களாகப் புறப்பட்டு பேராசைபிடித்தவர்களாய் பிரஜைகளை ரக்ஷிக்காமல் தங்களுடைய சுகத்தையே விரும்பியிருக்கும்பொழுது உலகத்திலுள்ள பிரஜைகளெல்லாம் ஒன்றுக்கொன்று திருடுவதும் பொட்டுவதும் கொலைசெய்வதுமாய் அநியாய வழிகளில் கஷ்டத்தை அநுபவிக்கும் கலியுகத்தின் சந்திபாகத்தில் பிராணிகளுடைய துன்பங்களைச் சகிக்கமாட்டாமல் தானே நேரில்ரக்ஷிப்பதற்காகப் பூலோகத்தில் அவதரித்துக் கலியின் அதருமங்கள் எல்லாவற்றையும் அழித்து மறுபடியும் கிருதயுகதருமத்தைத் தலைநீட்டச்செய்வார். அப்பொழுது இயற்கையாக நியாயம் தவறாது நடப்பார்கள். இவ்விதம் பிர்மவாதிகளால் புராணங்களில் தேவகுணங்களோடுகூடிய அவதாரங்கள் பற்பல கூறப்பட்டன. பகவானுடைய அவதாரவிஷயத்தில் அது இன்னின்ன தன்மைபொருந்தியதென நிச்சயிக்கப் பிர்மவாதியான தேவர்களும் மயங்குகின்றார்கள். ஆகிலும் அவ்விஷயத்தைப்பற்றி வேதங்களோடொத்த புராணம் மாத்திரமிருக்கின்றது. இதுவரையில் ஒருஉத்தேசமாக பகவானுடைய அவதாரங்கள் கூறப்பட்டன. சர்வலோகங்களுக்கும் குருவாயும், கீர்த்தனம் செய்யத்தக்கவராயுமுள்ள அப்பிரபுவின் அவதாரங்களுடைய ஸங்கீர்த்தனத்தால் அவரவர்களுடைய பிதுருக்கள் திருப்தியடைகின்றார்கள். அவ்விதமே ஒப்பற்ற வீரியமுடைய விஷ்ணுவின் அவதார சரித்திரத்தை யெவன் கைகூப்பிக்கொண்டு நல்லமனதுடன் கேட்கின்றானோ, அவனுடைய பிதுருக்களும் திருப்தியடைகின்றார்கள். ஒவ்வொருமனிதனும் யோகேசுவரனான பகவானுடைய தனது யோகமகிமையின் சங்கற்பத்திற்கு அடங்கிய இவ்வவதாரங்களையும் சரித்திரங்களையும் கேட்டு ஸகலபாவங்களினின்றும் விடுபடுகின்றான். மேலும் சகலவிதமான பெருத்தநிறைவுகளையும் விசேஷித்த போகங்களையும் மற்றுமெல்லாவற்றையும் அப்பகவானுடைய வநுக்கிரகத்தால் அடைகின்றான்.

45-ம் அத்தியாயம் முற்றிற்று

## 46-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— விஷ்ணுவினுடைய விஷயமேன்ற மேன்மையையும், கிருதயுகத்திலுண்டாகிய ஹரியென்ற தன்மையையும், தேவர்களுக்குள் விளங்கும் வைகுண்டமென்ற தன்மையையும், மனுஷ்யர்களுக்குள் விளங்கும் கிருஷ்ணனென்ற தன்மையையும், எங்கும் நிறைந்த ஈசுவரத்தன்மையையும், அந்தந்த தன்மைகளில் நடத்தப்பட்ட மிகவும் சூட்சுமமான காரியங்களுடைய கதியையும் சென்றதையும் இனிவரப்போகிற கதையையும் ஓ! அரசனே என்னிடமிருந்து உள்ளபடியே நீ கேள். எவருக்கும் புலப்படாதவரும் புலப்படும் பூதாதிகளில் சரீரியாய் நிற்பவரும் பகவானுமான இந்த நாராயணன் என்ற பிரபுவானவர், கிருதயுகத்தில் ஹரியென்பவராகவானார். அப்பொழுது பிர்மாவும் இந்திரனும், சந்திரனும், யமனும் சுக்கிரனும், பிரகஸ்பதியும், தக்ஷ, அதிதியென்பவருக்குப் புத்திரத்தன்மையை யடைந்து விஷ்ணுவென்ற பெயரால் புகழ்பெற்ற இப்பகவானை இந்திரனுக்குத் தம்பியான உபேந்திரனெனக் கூறுவர். அவ்வவதாரமானது அதிதிக்காகச் செய்யப்பட்ட இப்பகவானுடைய அநுக்கிரகவிசேஷம். மேலுமது தேவர்களுக்கு வைரிகளான தைத்தியர், தானவர், ராக்ஷதர்களாகின்ற துஷ்டர்களுடைய வதத்திற்காகத் தோன்றியது. ஆதிகாலத்தில் மூலப்பிரகிருதியைச் சரீரமாகவுடைய இப்பகவான் முதலில் பிர்மாவைப்படைத்தார். அவ்வாதி புருஷனான பிர்மாவும் ஆதியுகத்தில் கணக்குக்கடங்காத அநேகம் பிரஜாபதிகளைப் படைத்தார். அவர்களெல்லோரும் மிகவும் மேன்மைபொருந்திய பிர்மாவினுடைய வம்சங்களைப் பெருக்கினர். இவ்விதம் மகாத்மாக்களான அவர்களிடமிருந்து பலவிதமாயும் சாசுவதமாயுமுள்ள இவ்வுலகங்களுண்டாயின. ஆச்சரியகரமாயும் கீர்த்தனம் செய்யத்தக்கதாயுமுள்ள விஷ்ணுவினுடைய நாமசங்கீர்த்தனத்தைக் கேள்.

ஓ! அன்பனே! கிருதயுகம் நடந்துவரும்பொழுது விருத்திராசுரனுடைய வதமானது செய்யப்பட்டது. அப்பொழுது மூன்றுலகங்களிலும் பிரசித்தமான தாரகாசுரனைப்பற்றிய யுத்தமொன்று உண்டாயிற்று. அந்த யுத்தத்தில் அதி கோரர்களான அநேகம் அசுரர்கள் யுத்தத்தில் கொழுப்படைந்தவர்களாய்க் கொண்டு தேவர்களையும் யக்ஷர்களையும் உரகர்களையும், கண்டவிடமெல்லாம் அடித்துத் துரத்தினார்கள். அவ்விதமடிபட்ட தேவர் முதலிய அனைவரும் அந்தயுத்தத்தில் திருப்பியடிக்க சக்தியற்றவர்களாய்த் தங்கள் மனதால் ஹரியென்ற நாராயணதேவனை இ



க்ஷகராக வடைந்தனர். இதற்குள் மேகங்களெல்லாம் குறைக்கொள்ளியுடையமாய்ச் சந்திரன், சூரியன், நவக்கிரகம் முதலியவைகளையும் ஆகாயம் முழுமையும் மறைத்துக் கொண்டு வருஷத்தின. அப்பொழுது அதி கோரங்களான இடிகளுடனும் மின்னல்களுடனும் கூடிய மிகவும் வேகமுள்ள புயல் காற்றுகள் வீசின. ஒளி மிகுந்த இடிகள் போலும் வஜ்ஜிராயுதம் போலுமுள்ள குறைக்கொள்ளிகளெல்லாம் ஆகாயமெங்கும் பரவின. ஆயிரம் பதினாயிரம் லக்ஷமென்ற கணக்கால் கீழேவிழவும் ஆகாயத்தில் சஞ்சரித்த விமானங்களெல்லாம் தலை கீழாக விழவுமாரம்பித்தன. பிரளயகாலத்தில் சகல லோகங்களுக்கு முண்டாகும் பயங்கரமான குறிகளெல்லாம் அப்போர் முகத்திலுண்டாயின. இவ்வித மிருக்கையில் ஒரு பெரிய இருள் வந்து திக்குக்களை அறியாமற் செய்து விட்டது. மிகவும் கருத்த அவ்விருட்டானது உருவத்தோடு கூடிய காளிபோலும், காளமேகங்களாகிற புடவைகளால் தலையைமறைத்து மூடிக்கொண்டது போலும், அப்பொழுது தோன்றிற்று. அப்பகலிலிவ்வித மிருள் வந்து மூடிக்கொள்ள, சூரியனைக்கண்டு பிடிக்கவே கூடவில்லை. அவ்விதமிருக்கையில் ஹரியானவர் கிருஷ்ணனென்ற வுருவத்துடன் தனது கைகளால் மிகவும் இருண்டமேகங்களை ஒதுக்கி ஒன்றாய் விளங்கும் தனது சரீரத்தைத் தோற்றுவித்தார். அச்சரீரமானது இருண்டமேகம் போல் கருத்ததும், கருத்த ரோமங்களுடையதும், இந்திர நீல மலை போலும், பிரகாசமுள்ள பீதாம்பரத்தை யுடையதாயும், பழுக்கச் சுட்ட பொன்மயமான பூஷணங்களையுடையதாயும், யுகாந்தாக்கினிபோல் புகையுடன் ஜ்வலிப்பதாயும், பெருத்த நான்கு தோள்களையுடையதாயும், பொன்மயமான பிடிகளோடு கூடிய ஆயுதங்களால் விளங்கப்பட்டதாயும், சூரிய சந்திரர்களையும் விளங்கச்செய்வதாயும், நானாவிதமான பர்வதங்கள் சேர்ந்தது போலும், நந்தகமென்ற கத்தியை யேந்திய கையையுடையதாயும், கொடுமையான விஷங்களையுடைய பாம்புகள் போன்ற அம்புகளையுடையதாயும், சக்தி, கலப்பை, சங்கு, சக்கிரம், கதை, இவைகளையுடையதாயும், விளங்கிற்று. மேலும் அவரதுஉருவத்தைப் பார்க்கும்பொழுது பொறுமையென்பதை அடிவேராகவுடைய பெரிய ஒருபர்வதம் போல் தோன்றிற்று. ஸ்ரீலக்ஷ்மியை மார்பிலுடையவரும், சார்ங்கமென்ற வில்லையுடையவருமான அவ்விஷ்ணுவை, சந்திரனும் சூரியனுமாகிற சக்கிரங்களையுடையதும், மந்திரபருவதத்தை அச்சாகவுடையதும், கருடனைத் துவஜமாகவுடையதும், திக்குகளை குதிரைகளாக வுடையதும், மேருவை மேற்றட்டாகவுடையதும், ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரம் முத

வியவைகளாகிற பூக்களின் அலங்காரத்தையுடையதான ரதத்தின் பேரில் வீற்றிருப்பதாக நினைத்தனர். இவ்விதம் பயகாலங்களில் சாதுக்களுக்கு அபயத்தைக்கொடுக்கும் அவ்விஷ்ணுவை தைத்தியர்களால் தோற்கடிக்கப்பட்ட ஆகாயத்திலுள்ள தேவர்களெல்லாம் தரிசனம் செய்தார்கள். மேலும் இந்திரன்முதலிய தேவர்களெல்லாம், கைகூப்பிக்கொண்டு ஜயமென்ற சொல்லை முன்னிட்டுக்கொண்டும் ரக்ஷகரான அப்பெருமானைச் சரணமடைந்தனர். அதனுடன் ஜகத்திற்கு நாதனும் எங்கும் நிறைந்தவராயுமுள்ள அந்நாராயண தேவனைத் துதிக்கவாரம்பித்தனர். ஓ! தேவனே; வெற்றியடைவீராக. ஓ! ஜகன்னாதனே ஜெயிப்பீராக! ஜனார்த்தனனே! விஜயம் செய்யக்கடவீர் ஓ! ஒளியிருந்த பிரபுவே! ஓ விஷ்ணுவே! ஓ சங்கு முதலிய பஞ்சாயுதங்களையும் தரித்தவரே! உமக்கு எவ்விடத்திலும் விஜயமாகக்கடவது. ஓ! ஹ்ருஷீகேசனே! உமக்கு நமஸ்காரம். ஓ! ஜனார்த்தனா! உமது திருவடியைப் போற்றுகின்றோம். ஆதிதேவனே! உலகத்தோர் விரும்புவதெல்லாம் கொடுக்கும் திறமையுடையவனே பிராணிகளால் பாவனை செய்யப்பட்ட பாவரூபனே உமக்கு வணக்கங் கூறுகின்றோம். ஓ! பிரபுவான விஷ்ணுவே! சகலபிராணிகளுக்கும் அதிபதியான உமக்கு நமஸ்காரம். உலகத்திற் காதிமூலமான புருஷனுக்கு பலதரம் வணங்குகின்றோம். ஓ! பகவானே! மகாத்மாவான உமக்கு மேன்மேலும் நமஸ்கரிக்கின்றோம் ஓ! ஜகன்னாதனே! எங்களுடைய நமஸ்காரத்தால் யாது பயன். உமது கருணையன்றோ முக்கியமான காரணம். ஆகையால் தைத்தியர்களுடைய துன்பங்களாகின்ற பாசங்களாற் கட்டுண்ட தேவர்களாகிய எங்களை விடுவிக்கவேண்டும். இவ்விதங் கூறப்பட்ட தேவர்களுடைய வாக்கை தேவோத்தமரான அவ்விஷ்ணுவானவர் கேட்டு அந்த யுத்தத்தில் வந்த தானவருடைய விநாசத்திற்காகச் சங்கற்பித்தனர். பிறகு ஆகாயத்திலிருந்தபடியே புருஷோத்தமரான அவ்விஷ்ணுவானவர் அத்தேவர்களைப்பார்த்து பிரதிக்ஞையுடனொரு வார்த்தை பேசுகின்றார்.

ஓ! தேவர்களே! பதறாதேயுங்கள். மனதை சமாதானப் படுத்துங்கள் பயப்படவேண்டாம். உங்களுக்கு நன்மையுண்டாகும். என்றுமிப்பொழுது இங்கு வந்திருக்கும் அசுரர்களெல்லாம் கொல்லப்பட்டார்களென அறியுங்கள். இம்மூவுலகங்களையும் உங்களுக்குக் கொடுக்கின்றேன், பெற்றுக்கொள்ளுங்கள். இவ்விதமுரைத்த சத்திய சந்தரான அவ்விஷ்ணுவினுடைய வாக்கியத்தினால் நம்பப்பட்ட தேவர்களெல்லோரும் அமிருதத்தைக் கண்டவர்கள்போல் பெருத்த சந்தோஷத்தை யடைந்தார்கள்



அதனுடன் அப்பெருத்த இருளும் நீங்கிற்று. கொக்குகளும் கழுகுகளும் வெகுதொலையில் பறந்தோடின. இனிமையான காற்றுவீசிற்று. திசைகள் தெளிந்தன. நக்ஷத்திரம் முதலிய சோதிக்கணங்களெல்லாம் நன்றாய் விளங்கிக்கொண்டு சந்திரனையும், சூரியனையும் வலமாகச் சுற்றின. கிரகங்களும் ஒன்றோடொன்று பகையாமல் நேராயின. நதிகளெல்லாம் தெளிந்தன. மார்க்கங்களெல்லாம் புழுதியில்லாமல் விளங்கின. சமுத்திரங்களெல்லாம் அலையடங்கின. மனிதர்களுடைய இந்திரியங்களும் மனங்களும் சமாதானப்பட்டன. மகரிஷிகளெல்லாம் சோகத்தைவிட்டு வேதங்களை உரத்தியோதினர். பெரியோர்செய்யும் யாகங்களிற் கொடுக்கப்பட்ட ஹவிஸ்ஸை அக்னிபகவான் ருசியோடு அங்கீகரித்தனர். அந்தந்த வர்ணத்தோர் அவரவருடைய தர்மங்களில் சந்தோஷித்து நிலைநின்றனர். ஓ! பூபதியே! தேவதேவராயும் உண்மையான பிரதிக்ஞையை உடையவராயுமுள்ள அவ்விஷ்ணுவினுடைய, மிகவும் கொழுப்படைந்த அவ்வசுரர்களை உங்களுடைய வடிவதனோடிருந்துகொண்டே கொல்லுகின்றேன்" என்ற அவ்வார்த்தையைக் கேட்ட தேவர்களெல்லோரும் பெருத்த ஆனந்தத்தை யடைந்தார்கள்.

46-ம அத்தியாயம் முற்றிற்று.

## 47-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— பிறகு ஒருவராலேயும் ஜயிக்கமுடியாத அதைத்தியர்களும் தானவர்களுமாகிய அசுரர்களெல்லோரும் தேவர்களுக்கு விஷ்ணுவினால் கொடுக்கப்பட்ட அபயப்பிரதானத்தைக் கேட்டு மேல் நடக்கவேண்டிய யுத்தத்திற்காக பெருத்த எழுச்சியைச் செய்தனர். அதாவது மயனென்ற அசுரன் ஆயிரத்திருநூறுமுழம் அகலமுள்ளதாயும், பொன்மயமாயும், அழியாததாயும், நான்கு சக்கிரங்களோடு கூடியதாயும், இயற்கையாகவே பராக்கிரமத்தை யுடையதாயும், சிறப்பாகப் பொருத்தப்பட்டதாயும், அநேகம் ஆயுதங்களோடு கூடியதாயும், அநேகம் மணிகள்கட்டியதாயும், புலித்தோல்களால் அலங்கரிக்கப்பட்டதாயும், இரத்தினங்களால் இழைக்கப்பட்டதாயும், பொன்ஜாலர்களால் எடுத்துக்கட்டப்பட்டதாயும், உறப்புள்ள அச்சையுடையதாயும், அழகியமேற்றட்டை உடையதாயும், பார்வைக்குப் பர்வதம்போன்றதாயும், நானாவிதமான பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டதாயும், விசித்திரமான பக்ஷிகளோடு

கூடியதாயும், உயர்ந்த அஸ்திரங்களோடுகூடிய அம்புறாத்தூணிகளால் நிறைக்கப்பட்டதாயும், மேகம்போல் கர்ஜிப்பதாயும், கதை, உலக்கை, முதலிய, ஆயுதங்களால் நிறைந்ததாயும், உருவமெடுத்துவந்த சமுத்திரம்போல் காணுவதாயும், பொன்மயமான குத்துக்கால்கள் கடைந்த கட்டைகள் விமானம் கலசம் இவைகளையுடையதாயும், சிங்காரமான கொடிகள் கட்டப்பட்டதாயும், ஆதித்யனைப்போன்ற ஒளியையுடையதாயும், மந்தரபர்வதம்போன்ற வடிவமுள்ளதாயும், ஆகாயத்திலேயே சஞ்சரிப்பதாயும், மற்ற ரதங்களுடைய வேகத்தை வெல்லுவதாயுமுள்ள ஓர்பெரிய இரதத்தைப் படைத்து அதில் தானிருந்துகொண்டான். அப்பொழுது அம்மயனைப்பார்க்குங்கால் மேருபர்வதத்தின் மேலுதித்த சூரியன்போல இருந்தது. தாரகாசுரனும் ஓர்க்ரோசம் (2மைல்) விஸ்தாரமுள்ளதாயும், இரும்பினால் செய்யப்பட்டதாயும், காக்கையைத்துவஜமாகவுடையதாயும், அனேகம் பர்வதங்கள் கூடினதுபோலும், கருத்தமேகக்கூட்டம்போலும் நல்ல ஊருக்கிணை செய்யப்பட்ட எட்டுச்சக்கிரங்களையுடையதாயும், அவ்விரும்பினாலேயே செய்யப்பட்ட குத்துக்கால் மேற்கட்டு முதலிய ஸகல வஸ்துக்களையுடையதாயும், இருட்டில்தோன்றும்தணல்போல ஜ்வலிப்பதாயும், கர்ஜிக்கின்ற மேகம்போன்றதாயும், அனேகம் பக்கங்களையுடையதாயும், உலக்கைமுதலிய அனேகமாயுதங்களால் நிறைந்ததாயும், இரண்டாவது மந்தரபர்வதமே வந்ததுபோல் தோன்றுவதாயும், ஆயிரங்கழுதைகள் பூட்டப்பட்டதாயுமுள்ள இரதத்தைச் சன்னத்தப்படுத்திக்கொண்டு அதன்மேலேறி யுத்தத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தான். விரோசனனென்பவனோ, மகாகோபத்துடன் அப்போர்முகத்தில் விளங்கிய கொடிமுடிபோல் கதாபாணியாய் நின்றுகொண்டிருந்தான். ஹயக்ரீவனென்பவனோ, ஆயிரங்குதிரைகள் பூட்டிய இரதத்தின் மேலேறினான். வராகனென்பவன் அனேகம் விற்களைக்கையிற்பிடித்து அதன் நாண்களை இழுத்திழுத்து டங்காரஞ்செய்துகொண்டு, அனேகம் கொடிமுடிகளையும், மரங்களையும், செடிகளையுமுடைய பெருத்தமலைபோல், அந்தயுத்தமுகத்தில் நின்றுகொண்டிருந்தான். கரனென்பவனோ கோபத்தினாலும் கொழுப்பினாலும் கண்டபடி அட்டகாஸம் செய்துகொண்டு சிவந்த முகத்தோடும் ததும்பிய கண்ணீரோடும் நறநறவென்று கடித்த உதடுமடித்த வாயோடும் யுத்தத்தை யெதிர்பார்த்துக்கொண்டு நின்றான். த்வஷ்டா என்பவனோ பதினெட்டுக்குதிரைகள்பூட்டிய ரதத்தின்மேலேறித் தமது சைன்னியங்களையெல்லாம் வியூகம்வியூகமாய் வகுத்து அதைச்சுற்றிக் கொண்டேயிருந்தான். விப்ரசித்தியின் மகனான சுவேதனென்பவனோ



வெளுத்த ஆபரணங்கள் தரித்துக்கொண்டு வெளுத்த பர்வதம்போல் யுத்தத்திற்கு எதிர்முகமாக நின்றான். பலியின் புத்திரனான அரிஷ்டனென்பவனோ பெரிய குண்டுக்கற்களையெல்லாம் கையிலெடுத்துக்கொண்டு யுத்தத்திற்கு எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான். கிசோரனென்பவனோ மிகுந்த சந்தோசத்தால் குதிரைக்குட்டிபோல் அந்த அசுரசைன்னியத்தின் நடுவில் சூரியன்போல் விளங்கினான். இலம்பனும் ஆகாயத்திற்பெருகும் நீருண்டமேகம்போல் வந்த அசுரசைன்னியத்தின் நடுவில் யுத்தத்திற்கு சன்னத்தனானான். சொர்ப்பானுவான இருட்டுப்போர்வீரன் உதடுகளையும், பார்வையையும், பற்களையும், ஆயுதமாகக்கொண்டு கொக்கரித்துச்சிரித்துக் கைகொட்டி எதிராளியை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான். இன்னும்பலர் குதிரையின்மீதும், பலர் யானையின்மீதும், பலர் சிங்கத்தின்மீதும், சிலர் புலியின்மீதும், சிலர் பன்றிமீதும், சிலர் கரடிமீதும், சிலர் கழுதைமீதும், சிலர் ஒட்டகத்தின்மீதும், சிலர் மேகத்தின்மீதும், சிலர் பெருத்த பக்ஷிகளின்மீதும், சிலர் காற்றின்மீதுமாக சிங்கநாதம் அட்டகாசம் செய்துகொண்டும் தோள்களிலடித்துக்கொண்டும் கொழுத்துப்போன குகைகளிலுள்ள புலிசிங்கங்கள்போல் ஆரவாரித்தனர். மேலும் கத்திகளையாட்டுவதும் கதைகளைச் சுழற்றுவதும் உலக்கைகளைச் சுற்றுவதும் நாண்களை இழுத்து டங்காரம்செய்வதுமாய் தேவர்களைப்பயப்படுத்தினர். மேலும் பிராஸம், பாசம், கத்தி, தோமரம், அங்குசம், பட்டிசம், உலக்கை, நளிகம், துப்பாக்கி, பீரங்கிகள், பெரிய குண்டுக்கற்கள், சிறிய கற்கள், தாட்கள், சக்கிரம், முதலிய ஆயுதங்களால் ஒருவருக்கொருவர் களிப்பதும், அங்குமிங்கும் சுற்றுவதும், கடல் கொந்தளித்ததுபோல் இரைவதுமாய் மிகுந்தகோஷத்துடனும் அட்டகாச ஒலிகளுடனும் அவ்வசுர சைன்யமெல்லாம் தேவர்களுடைய வரவை யெதிர்பார்த்துக்கொண்டு கருத்தமேகங்களொன்று சேர்ந்துவந்ததுபோல் யுத்தத்தில் மதங்கொண்டிருந்தார்கள். மேலும் யுத்தத்தைஎதிர்பார்க்கும் அச்சைன்யமானது அற்புதமாகவும் அனேகமசுரர்களால் நெருங்கியதாகவும் வாயு, அக்கினி, ஜலம், மேகம், பர்வதம், இவைகள் ஒன்றுசேர்ந்ததுபோலும் யுத்தம்செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தால் பயித்தியம் பிடித்தது போலும் விளங்கிற்று.

47-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 48-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— ஓ! ஜனமேஜயராஜனே! இதுவரையில் அசுரர்களுடைய சைன்யங்கள் கூறப்பட்டன.

இனி தேவர்களுடைய விஷ்ணுசம்பந்தமான படையெழுச்சியைக் கூறுகின்றேன் கேள். ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்திரர்கள், அசுவினிகள் இவர்களெல்லாம் தங்கள் தங்கள் படைகளுடனும் மற்ற பரிவாரங்களுடனும் யுத்தத்திற்கு சன்னத்தராயினர். தேவேந்திரனோ ஆயிரங் கண்களுடையனே தேவசைன்னியங்களுக்கு அதிபதியாக ஐராவதத்தின்மேல் ஏறினான். அவனது இடதுபுறத்தில் பக்ஷிபோன்ற வேகத்தையுடையதாயும் சிறந்த சக்கிரங்களுடையதாயும் வயிரத்தாலும் தங்கத்தாலும் அலங்கரிக்கப்பட்டதாயுமுள்ள ரதமானது அநேகம் தேவ, கந்தர்வ, யக்ஷர்களோடு, ஆயிரக்கணக்காய் பின்தொடரப்பட்டது. மேலும் சபைக்குரியர்களான மகவும்சாந்திபொருந்திய அநேகம் பிரமரிஷிகளால் துதிக்கப்பட்டவனும், வஜ்ராயுதத்தினுடைய வீச்சினால் வெளித்தோம்பப்பட்ட மின்னல்களாகின்ற வானவிற்களால் விளங்கிய பர்வதங்கள்போன்ற காளமேகங்களால் காக்கப்பட்டவனுமுள்ள அப்பகவானான இந்திரனுவன், ஐராவதத்தின்மீதேறி யுத்தசன்னத்தனானான். பின்னும் அவனைச்சுற்றிலும் சோமயாஜிகளான பிராமணர்களெல்லாம் வேதமந்திரங்களால் ஸ்தோத்திரம் செய்யவும், தேவவாத்தியங்கள் முழங்கவும், அப்சரசுக்கள் நடிக்கவும் சூரியனைப்போன்ற கொடியவொளியுள்ள ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரங்குதிரைகள் பூட்டியமனோவேகமுள்ள ஓர் இரதமானது மாதலி யென்ற ஸாரதியோடு கூட அப்பொழுது சன்னத்தம் செய்யப்பட்டது. அதைப்பார்க்குங்காலையில் மேருபர்வதம் முற்றிலும் உதயமான சூரியன்போல் விளங்கிற்று. யமனென்பவனோ காலதண்டத்தைக் கையிலேந்தி தேவர்களுடைய படையின் முன் முகத்தில் அசுரர்களை பயப்படுத்திக்கொண்டு நின்றான். வருணனோ அநேகம் சர்ப்பங்களோடு கூடிய நாலுசமுத்திரங்களாலும் காக்கப்பட்டவனாகவும் சங்கு முத்து இவைகளால் செய்யப்பட்ட தோள்களை யுடையவனாகவும் ஜலமயமான சரீரத்துடன் காலபாசத்தைக் கையிலேந்தி சந்திரனுடைய கிரணம் போன்ற குதிரைகளால் விளங்கும் ரதத்திலேறிக்கொண்டு தேவர்களுடைய படையின் நடுவில் யுத்தசமயத்தை யெதிர்பார்த்துக்கொண்டு கரைபுரண்ட சமுத்திரம்போல் நின்றான். நரவாகனனான குபேரனோ



யக்ஷர், ராக்ஷசர், குஹ்யகர் முதலியவர்களுடைய படைக்கூட்டங்களோடு நீலரத்தினம்போல் பசுமையான சிறந்த தேகத்துடன் சங்கம், பதுமம் என்ற நிதி ராஜர்களால் புடை சூழப்பட்டவனாக சிறந்தவடிவுடன் கதாயுதத்தைக் கையிலேந்தி புஷ்பகமென்றவிமானத்தில் போருக்கு மார்பு கட்டி நின்றான். மேலும் அந்த ராஜராஜனும், சிவனுக்குத்தோழனும் நேரிடை சிவன்போலும் விளங்குகின்ற கும்பரனனவன் யுத்தரங்கத்திலுள்ள எல்லோருக்கும் பார்க்கத்தக்கதான உருவத்துடன் விளங்கினான். இவ்விதம் கூடிய இவர்களுக்குள் தேவேந்திரன் என்பவன் தேவசைன்யத்தின் கிழக்குபாகத்தையும், யமன் தெற்குபாகத்தையும், வருணன் மேற்குபாகத்தையும், குபேரன் வடக்கு பாகத்தையும் காத்துக்கொண்டு நாலுதிக்குக்களிலும் பெருத்தபலமுடையவனும் லோகபாலர்களுமான இந்நால்வர்களும் சாக்கிரதையாயிருந்தார்கள். சூரியனென்பவன் ஏழு குதிரைகள் கட்டியதும் ஆகாயத்தில் சஞ்சரிக்கத்தக்கதும் தன்னுடைய காந்திகளால் நான்கு புறமும்வீசிய ஒளியையுடையதும் நாடோறும் உதயத்தையும் அஸ்தமனத்தையும் செய்யக்கூடிய ஒரே சக்கிரத்தோடு கூடியதுமான தேருடன் கூட அத்தேவர்களுடைய படைக்கு நடுவில் அங்குமிங்கும் சஞ்சரித்துக்கொண்டு அத்தேவர்படையைக் காத்துவந்தான். வெள்ளைக்குதிரைகளோடு கூடிய தேரில் விளங்கும் குளிர்ந்த கிரணங்களையுடையசந்திரனும் பனி நீரால் நிறைந்த தனது கிரணங்களால் உலகத்தைசந்தோஷப்படுத்திக்கொண்டும் நக்ஷத்திரங்களால் பின்றொடரப்பட்டும் அந்த யுத்தபூமியில் வந்துசேர்ந்தான். அச்சந்திரனென்பவன் ரசங்களுக்கு நாக்குப்போன்றவனாயும் ஓஷதிகளுக்கு ரக்ஷகனாயிருப்பவன் அமிர்தத்திற்குமூலகாரணன், இவ்விதமுள்ள சந்திரனை அங்குவந்திருக்குந்தானவர்களெல்லாம் கண்ணுற்றுக்கண்டார்கள். பிறகு யாவனொருவன் எல்லாப்பிராணிகளுடையவும் சரீரத்தில் பிராணனாகவும் மேலும் ஐந்து விதமாகவும் இம்மூவுலகங்களையும் தரிக்கின்றானோ, எவனை அக்னிக்கு சாரதியாகக்கூறுகின்றார்களோ எவனை எல்லாம் உண்டாவதற்கு ஈசுவரனாகக் கூறுகின்றனரோ, ஷட்ஜம் முதலிய ஏழுசுவரங்களை ஆதாரமாகவுடைய கீதமானது எவனைக்காரணமாகவுடையதோ, எவனை உயர்ந்த பூதமென வேதங்கள்கூறுகின்றனவோ, எவனை ஸ்தூல சரீரம் இல்லாதவனாக பெரியோர்கள் கூறுகின்றனரோ, எவனை ஆகாயத்தில் சஞ்சரிப்பவனாகவும் விரைவாய்ச்செல்லுகின்றவனாகவும் ஒலிக்குக்காரணமாகிய ஆகாயத்தினின்று உண்டானவனாகவும் பிரமாணங்கள் கூறுகின்றனவோ, சகலப்பிராணிகளுக்கும் ஆயுள்போன்ற அவ்வாயுதேவனானவன் தன்னுடைய பராக்கிரமத்தால் அசுரர்களையெல்லாம் நடுங்

கும்படி வீசினான் மற்றுமுள்ள மருத்துக்களும் தேவர்களும் கந்தர்வர்களும் வித்தியாதரக் கூட்டங்களோடு கத்திகளை யெடுத்து ஒருவருக்கொருவர் வலியாயடினார்கள். உரகர்களோ கொடுமையான விஷத்தோடு கூடிய அனேக சர்ப்பங்களைப் படைத்து அத்தானவர்கள்பேரில் பிரயோகித்தார்கள். யாதொருவர் இருடீகேசன், பத்மநாபன் திரிவிக்கிரமன் முதலிய திருநாமங்களால் பிரசித்திபெற்ற தேவரோ, எவர் யுகாந்தத்தில் வெளிக்கிளம்பும் அக்கினி ரூபியோ, எல்லா உலகத்திற்கும் பிரபுவோ, கடல்களுக்கும் காரணமோ மதுவென்றவனைக்கொன்றவரோ ஹவியம் என்பதைப்புஜிப்பவரோ யாகங்களால் பூஜிக்கப்பட்டவரோ, பூமிமுதலியபூதங்களுக்கந்தராத்மாவோ, சகலருக்கும் சமமானவரோ யோகிகளுக்குச் சாந்தியைச்செய்பவரோ, வைரிகளைக்கொன்றவரோ, உலகத்திற்கு மூலகாரணமோ, உலகத்திற்கு வித்துப்போன்றவரோ, உலகத்தோர் அக்ஞானத்தைப்போக்குகின்றவரோ, கம்பீரமான புத்தியையுடையவரோ, அப்படிப்பட்ட ஹரியென்ற பகவான் அனேகம் சூரியன்கள் உதித்தாற்போன்ற உருவத்தோடு தேவர்களுடைய சைன்னியத்தில் சங்கு, சக்கரம், கதை முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு யுத்தசன்னத்தராய் வந்து சேர்ந்தனர். அப்பொழுது அவரது இடதுகையானது சத்துருக்களுக்குக் காலன்போன்ற கதாயுதத்தையும் வலதுகையானது சக்கிராயுதத்தையும் வேறுகைகளெல்லாம் சார்ங்கம் முதலிய ஆயுதங்களையும் வகித்தன. அவ்விதமுள்ள விஷ்ணுவை அனேகம் சர்ப்பக்கூட்டங்களை பலவிதமானபூஷணங்களாய் அணிந்து கொண்டிருப்பதாயும் மந்திர பர்வதம்போல் பெருத்த உடலையுடையதாயும் இதன்முன்பு நடந்த பலபல தேவாசுரயுத்தங்களில் காட்டப்பட்ட பராக்கிரமத்தையுடையதாயும் இந்திரனால் அடிக்கப்பட்ட வஜ்ஜிராயுதத்தின் தழும்புகளை யுடையதாயும், சிறந்த கிரீடங்களை யுடையதாயும், உயர்ந்த குண்டலங்களையுடையதாயும், ஆச்சரியகரமான விரிந்த இறக்கைகளாகிற வஸ்திரத்தை யுடையதாயும் காவிக்கல்களால் நிறைந்த பர்வதம் போல் விளங்குகின்றதாயும், சந்திரகிரணம்போன்ற வெளுப்பை கழுத்திலுடையதாயும் யுகாந்த காலத்திலுண்டாகிய வானவிற்கள் போன்ற பலவிதமான இரத்தினங்களோடுகூடிய நானாவிதசர்ப்பங்களையெல்லாம் மாலைகளாய் உடையதாயும் அருணனுக்குத் தம்பியாயுமுள்ள கருடன் அந்த ஹரியென்பவரை வகித்தது. பொன்மயமான நல்ல உருவத்தோடு கூடிய கருடன் மீது யுத்தத்திற்காகப் புறப்பட்ட அந்தஹரியை, தேவர் கூட்டங்களும் முனிகணங்களும் மற்றுமுள்ள தபோதனர்களும் பின்சென்று



வேதமந்திரங்களால் வருமாறு துதித்தார்கள். அதாவது ஓ! இருடீகேசனே! உமக்கு நமஸ்காரம், ஓ! பிரபுவே! அசுரசைன்யத்தை ஜயிக்கக்கடவீர். ஹரி, பிர்ம, சிவரூபங்களான மும்மூர்த்தியையுடைய உமக்கு நமஸ்காரம். ருக்கு, சாமம், யஜுஸ் என்ற மூன்று வேதமூர்த்தியான உமக்கு நமஸ்காரம். யோகிகளால் தியானிக்கத் தக்கவராயும் அவர்களுக்கு யோகப்பயனை அளிக்கின்றவராயுமுள்ள உமக்கு நமஸ்காரம். நானாவிதமான விகல்பங்களில்லாத ஏக ரூபியாயும் கேவலம் ஞானத்தையே வடிவமாயுடையவராயுமுள்ள உமக்கு பலதரம் நமஸ்கரிக்கின்றோம். யாதொருவரை ஞானமயமான சுடரென்று ஞானிகள் போற்றுகின்றனரோ ஓ! ஹரியே! உலகத்த குருநாதனை அந்த உம்மை நமஸ்கரிக்கின்றோம். அசுரப்படைகளை வெல்லக்கடவீர். ஓ! தேவனே! அனேக வருஷங்களாலும் உம்மைத்துதிப்பதற்கு நாங்கள் வல்லமையற்றவர்கள். ஓ! புருஷோத்தமனே! நீர் சத்துருக்களை ஜயிக்கக்கடவீர். இவ்விதமுரைக்கப்பட்ட வார்த்தையைக்கேட்ட ஸ்ரீஹரியானவர், குபேரன், யமன், வருணன், தேவேந்திரன் சந்திரன் வாயு, அக்கினி, இவர்களால் நிறையப்பட்ட யுத்தப்படைக்குட் சென்றார். அப்பொழுது ஜயசீலராயும் எல்லாவற்றையும் சகிப்பவராயும் மிகுந்த ஒளியையுடையவராயுமிருக்கிற விஷ்ணுவினுடைய, சிறந்தவொளியால் ஆக்கிரமிக்கப்பட்டஅத்தேவசைன்யமானது யுத்தத்திற்காக மேன்மேலும் விருத்தியடைந்து விளங்கிற்று. பிறகு தேவர்களுக்குப் பின்னிருந்து தேவர்களுக்கே ஜயமுண்டாகவேண்டுமென்று பிருகஸ்பதிவேண்டினர். அசுரர்களுக்குப் பின்னிருந்து அசுரர்களுக்கு ஜயமுண்டாகவேண்டுமென்று சுக்கிரன் வேண்டினர்.

48-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 49-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— இவ்வண்ணங்கூடிய தேவாசுரர்களுக்குள் தாங்கள்தாங்களே ஜயிக்கவேண்டுமென்கிற பெரியயுத்தமானது உண்டாயிற்று. முதலில் தானவர்களெல்லாம் நானாவிதமான ஆயுதங்களுடன் தேவர்களோடு நெருங்கிமலைகளோடு மலைகள்போல மிகுந்தஆச்சரியமான யுத்தத்திற்குத் தொடங்கினர். தர்மம், அதர்மம், செருக்கு, வணக்கம், இவைகளொன்றோடொன்று கைகலந்ததுபோன்ற அத்புதமானது பார்த்தவருடை

ய மனைதயெல்லாம் கவரக்கூடியதாயிருந்தது. ரதங்களோடு ரதங்களும் வாகனங்களோடு வாகனங்களும், கதாபாணிகளோடு கதாபாணிகளுமாய் நெருங்கி யுத்தம்செய்யும் அக்கூட்டங்களால் அவ்விடங்களெல்லாம் கொந்தளிப்புள்ள சமுத்திரங்கள்போல் விளங்கின. அவர்கள் விடும் பாணங்களால் ஆகாயத்தை நிறைத்துவிட்டன. உலகத்திற்கு மிகவும் பயங்கரமாயும் பிரளயகாலாக்னிபோலுமுள்ள அந்தயுத்தத்தில் முதலில் தானவர்களெல்லாரும் இந்திரன்முதலிய தேவர்களைப் பலவிதமான ஆயுதங்களால் இரத்தத்தைப் பெருகும்படி கால்வேறு கைவேறு தலைவேறாக முறியடிக்க, அதனால் சலித்துப்போன அத்தேவர்களெல்லாம் எல்லையில்லாத துன்பத்தை அனுபவித்தனர். உற்றுப்பார்க்கையில் தேவர்களுக்குள் கண்டவிடமெல்லாம் காயமுடையவர்களும் சண்டைதாங்காது மண்டையுடைந்தவர்களும் பாணம்பொறுக்காத மார்பையுடையவர்களும் இரத்தத்தைக் கக்குகின்றவர்களும், நறுக்கிய கைகால்களையுடையவர்களும், மெய்மறந்தவர்களும், அறிவுதயங்கியவர்களும், பிராணனைவிட்டவர்களும், விடுவதற்குச்சன்னத்தாயிருப்பவர்களாகப் பலபெயர்கள் கீழேவிழுந்துபோயினர். இவ்விதம் மாயவலையினால் துன்பப்படுத்தப்பட்டதும் யாதொரு பிரயத்தனமுமில்லாமல் பிராயித்து ஓய்ந்திருப்பதுமான தனதுபடைகளைத் தேவேந்திரன் பார்த்து, அடங்காதகோபத்துடன் அத்தானவசைன்னியத்தைத் தாமஸமென்ற அஸ்திரத்தினால் பெருந்துணம்மேலிட்டதாகச் செய்தான். அதனால் அத்தைத்தியர்களெல்லாம் தங்களினத்தோரையாவது பிறரையாவது தெரிந்துகொள்ள சக்தியற்றுப்போயினர். அந்தசமயம் பார்த்து தேவர்களெல்லாம் மறுபடியும் உற்சாகத்துடன் அவ்வசுரப்படைகளுக்குள் நுழைந்து கொடூரமான யுத்தத்தைச் செய்தனர். அதனால் அநேகம் தானவர்கள் சிறகுகள்போன பக்ஷிகள்போல் அப்போர்க்களத்தில் விழுந்து மடிந்தனர். மைபோலிருண்ட— அத்தாமஸாஸ்திரத்தின் பெருமையாலிவ்விதம அசுரர்கள் மடிவதை மயனென்ற அசுரன்பார்த்து பிரளயகாலத்திலுண்டாகும் பெருத்த அக்கினிபோன்ற ஔர்வமென்னுமோர் அக்கினியால் அவ்விருளை யகற்றினான். அதனுடன் மூர்ச்சித்துப்போன அத்தைத்தியர்களெல்லாம் மறுபடியும் உற்சாகத்துடன் எழுந்திருந்தனர். மயனுடையதான ஔர்வமென்ற அக்கினியைக்கண்ட தேவர்களெல்லாம் அதன் காளலை சகிக்கமாட்டாமல் குளிர்ந்த கிரணத்தோடுகூடிய சந்திரனுக்குச் சமீபத்தையடைந்தனர். இந்தப்பிரகாரம் ஔர்வமென்ற சோதியால் முற்றிலும் பராக்கிரமத்தை யிழந்த தேவர்களெல்லாம் மிகுந்த துன்பத்தையடைந்து தேவேந்திரனுக்குத் தெரிவித்தனர். மேலும் அதனால் தவிக்கப்பட்டவர்



களோடு யாரைச்சரணமடைவோமென்று ஹா. ஹா. காரத்துடன் அங்கும் இங்கும் அலையுங்காலையில் தேவராஜனால் ஏவப்பட்டவருணன் அத்தேவர்களைநோக்கி வருமாறு கூறலுற்றான்.

வருணன்.— ஓ! தேவேந்திரனே! முன்காலத்தில் ஓர்பிர்மரிஷிக்குப் பிறந்த ஊர்வரென்ற மிகுந்த தபோவலிமையுடைய ஓர்முனிவர், அதிகொடூரமான தவத்தைச்செய்தனர். அவர் பிரமனுக்குச் சமானமான குணத்தோடு கூடியவர். அவ்விதம் ஆதித்யனைப்போல் அழிவற்ற தவத்தைச் செய்யும் அவ்வூர்வரிஷியைக்காண்பதற்காக அநேகம் முனிகணங்களும் பிர்மரிஷிகளோடு கூடிய தேவர்களும் தானவேசுரனான இரண்யகசிபுவென்ற அசுரனும் அவரண்டை வந்தனர். அன்றியும் பெருத்த தபோவலிமையையுடைய அந்தரிஷியைக்குறித்து பிர்மரிஷிகளெல்லாம் வேதோக்தமான சிலவாக்குக்களைக் கூறினர். அவையாவன:— ஓ! பகவானான மகாரிஷியே! ரிஷிகளுடைய வம்சத்திற் பிறந்த உமதுகுலம் உம்மை ஒருவரையே பற்றியிருப்பதாலும் நீர் சந்ததியில்லாமலிருப்பதாலும் உம்மோடு அற்றுப்போவதாயிருக்கிறது. நீரோ இக்குமாரத்தன்மையிலேயே கடுமையான தவத்திலிருந்து காயக்கிலேசத்தையே செய்துவருகின்றீர். யோகீசுவரர்களான மகரிஷிகளுடைய அநேகம்கோத்திரங்களெல்லாம் பெருகிவருகின்றன. தமது கோத்திரம்மாத்திரம் அநேகம் பிரஜைகளுக்கெல்லா மாதாரமான தம்முடைய ஒரேதேகத்தை யடைந்திருக்கின்றது. குலங்கள் வேரறுக்கப்பட்ட பொழுது முந்திய அக்குலத்தோர்க்கு நற்கதியில்லாமற் போகின்றது. தாமோ தவத்தாலுத்தமராகவும் பிர்மாவுக்குச்சமமான காந்தியை யுடையவராகவுமிருக்கின்றீர். ஆகையால் தமது வம்சம் விருத்தியாவதின்பொருட்டுத் தம்மனதை சங்கற்பிப்பீராக. நிலைநிறுத்தப்பட்டவுமது தேஜஸ்ஸானது உம்மைப்போன்ற வேறோரிரண்டாவது தேகத்தைப் படைக்கட்டும். இவ்விதமாக மகரிஷிகளால் கூறப்பட்ட அவ்வூர்வரானவர் தன்மனதில் அடிபட்டவர் போலத் தன்னிடம்வந்த ரிஷிக்கூட்டங்களையெல்லாம் நிந்தித்து வருமாறு கூறுவதாவது:— ஓ! ரிஷிகளே! ரிஷிகளுக்காக எந்ததர்மமானது சாசுவதமென முன்பே கூறப்பட்டுளது. வனத்தில் தானுயுண்டாகும் கிழங்குகளையும் பழங்களையும் புஜித்துவரும் மகரிஷிகளுக்கு இது தகுதியுள்ளகர்மமா? பிராம்மணயோனியில் பிறக்கப்பட்ட பிராமணர்களுக்கு பிர்மசர்யம் (அதாவது) பிர்மத்தியானமென்பது பிர்மாவையும் ஓர்சமயத்தில் நடுங்கச்செய்யும். பிராம்மணர்களுக்கு விருத்திகள் மூன்று. அவையாவன.— கிரகத்தில் வசிப்பது, ஆசிரமத்தில் வசிப்பது, வனத்தில் வசிப்

பது என்பனவாம். வனத்திலுள்ள ஆசிரமங்களில் வசிக்கும் நமக்கு வனமேயிருப்பிடமாயிருக்கின்றது. ஜலத்தையேபருகுகின்றவரும், வாயுவையேபக்ஷிக்கின்றவரும், வேகவைக்காமல் பல்லாலேயே கடித்துப் புசிப்பவரும், கல்லில்வைத்து இடித்துத்தின்பவரும், உதடுகளாலுண்பவர்களும் பஞ்சாக்கினியில் தவம்புரிகின்றவர்களும், ஒருவராலும் செய்யமுடியாத நோன்புகளோடு கூடியவர்களாயும், காயக்லேசமாகிற தவத்தில் நிலைத்தவராயுமுள்ள இம்முனிகளெல்லாம் பிர்மசர்யமென்பதை முன்னிட்டுக்கொண்டு மேன்மையான பதவியை வேண்டுகின்றனர். பிராமணர்க்கு பிராம்மணத்தன்மையென்பது அப்பிர்மசர்யத்தைக்காட்டிலும் வேறொன்றிருப்பதாக வேதம் விதிக்கின்றதோ, பிர்மத்தையறிந்த ஞானிகள் இவ்விதமல்லவா கூறுகின்றார்கள். அதாவது:- பிர்மசர்யத்தில் தைரியம், தனிபதும் ஞானமென்பதும் விளங்குகின்றன. எந்தப்பிராம்மணர்கள் பிர்மசர்யத்தில் நிலைத்தவர்களோ, அவர்களே மோக்ஷத்தில் நிலைத்தவர்கள். ஆகையால் யோகத்தியானமில்லாது மனதினுடைய சித்திகிடைக்க மாட்டாது. அம்மனச்சித்தியில்லாமல் ஞானமில்லை. அந்தஞானமில்லாமல் மோக்ஷமில்லை. ஆனதுபற்றிப் பிர்மசரியமென்பது உயர்ந்த தருமத்திற்கு மூலமாயிருக்கின்றது. அதுவே பெருந்தவம். கண்காது முதலிய ஐந்து பொரிகளையுமடக்கிக்கொண்டு பிர்மசரியத்தோடு இருப்பதைக்காட்டிலும் தவமென்பது வேறொன்றுண்டோ? பிரயோஜனமில்லாது தலைமுடியை வாங்குதலும், சந்தர்ப்பமில்லாது ஓர்நோன்பைச்செய்தலும், பிர்மசர்யமில்லாதொன்றைஅனுஷ்டித்தலுமாகிய இம்மூன்றும் வீணானவையே. மனைவிகளாவது, அவர்களுடன் கூடுவதாவது, தன்னிடமொன்றுமின்றமையே பாவனையை மாற்றுவதாவது இவைகளெல்லாம் தவசிகளுக்கு வெகுதூரத்திலுள்ளவை. யாதொருபிரஜையானது பிர்மாவினுடைய மனதாலேயே சிருஷ்டிக்கப்பட்டதோ, அவ்விதமே மகாத்மாக்களான உங்களுடைய தவத்திற்கும் வீரியமுண்டாகில் அப்பிர்மாவைப்போல மனதாலேயே நீங்களும் பிரஜைகளைப் படையுங்கள். தவசியால் தன்மனதைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட யோனியே அங்கீகரிக்கத்தக்கது. தவசிகளுக்கு மனைவிகளை மணம்புரிதலாவது அதில் பீஜத்தைவைக்கவாவது அதுதருமவிருதமாகவாவது கூறப்படவில்லை. சத்துக்களான உங்களால் யாதொரு இவ்வார்த்தை பயமில்லாதுரைக்கப்பட்டதோ, அதை அசத்துக்களால் கூறப்பட்ட வார்த்தையைப்போல் என்னுடையபுத்தியெண்ணுகின்றது. இதோ நான் ஓங்கிவிளங்கும் அந்தராத்மாவையுடையதும் மனோமயமானதுமான சரீரத்தை மனைவியின் சம்போகமில்லாமலே படைத்து எனதுசரீரத்தினி



ன்றும் உற்பத்தியாகிற புத்திரனைப்போல் வெளிப்படுத்துகின்றேன் இதோ என்னுடைய ஆத்மாவானது வேறொருசரீரத்தை ஜனிப்பிக்கப் போகின்றது. தவத்தின் சம்பந்தமானவிதியால் இதோயென்னிடமிருந்து பிராணிகளையெல்லாம் கொளுத்தத்தகுந்த மிகுந்ததேஜஸ்ஸோடுகூடிய புத்திரனுண்டாகப் போகின்றான், எனக்கூறி அதனுடன் அவ்வூர்வரென்பவர் தவத்திலிருந்து தனது தொடையை ஒருதர்ப்பத்தால் கடைந்தார். அப்பொழுது அவருடைய தொடையைப்பிளந்துகொண்டு அனேகம் ஜ்வாலைகளோடுகூடி[illegible]லகத்தைக் கொளுத்தவல்லமையுமுள்ள அக்கினிவடிவமான வோர்[illegible]பிறந்தான். அவன் ஊருவைப்பிளந்து வந்ததாலும், உலகத்தைக்கொளுத்தியதாலும், ஔர்வனென்றும் அந்தகனென்றும் பெயர்பெற்றான். அவன்பிறந்தமாத்திரத்தில் அளவில்லாதகோபத்துடன் மூவுலகங்களையும் புசிப்பவன்போல கசடற்றுவிளங்கும்வார்த்தையால்தன் தகப்பனரைக்குறித்து வருமாறு கூறினான். ஓ! பிதாவே! எனக்குப் பசியாயிருக்கின்றது. எனக்குஉத்திரவு கொடுத்தால் இவ்வுலகத்தைத் தின்றுவிடுகிறேனென வுரைத்து சுவர்க்கம்வரையிலும் பரவின சுவாலைகளோடு பத்துத்திக்குகளையும் கொளுத்துபவன்போல பிரளயாக்கினிக்குச் சமமாகவிருத்தியடைந்தான். இதனிடையில் எல்லாவுலகத்திற்கும் பதியும் பிரபுமான பிர்மாவானவர், ஔர்வரென்றமுனிவரெவ்விடத்தில் தனது புத்திரனைப் படைத்துவிட்டனரோ, அவ்விடத்திற்குவந்து அவ்வூர்வருடைய புத்திராக்கினியால் விளங்கும் தொடையைக்கண்டார். மேலும் அவருடைய கோபாக்கினியால் மிகவும்தபிக்கப்பட்ட ரிஷிகளோடுகூடிய உலகங்களைப்பார்த்து பரிதபித்து அவ்வூர்வரை, வருமாறு வெகுமானத்தோடுகூடிய ஓர்வார்த்தையால் சமாதானிதனுக் கூறியதாவது. ஓ! மஹரிஷியே! உலகங்களின் க்ஷேமத்தைவேண்டி உமது புத்திராக்கினியை, அடக்கிக்கொள்ளுவீராக இப்புத்திரனுக்குச்சிறந்த சகாயத்தையும் வாசஸ்தானத்தையும் அமுதத்துக்கொப்பான போஜனத்தையும் கொடுக்கின்றேன். என்னுடையவார்த்தையை உண்மையாகக்கேளும். உமது புத்திராக்கினிக்கு நான்கொடுக்கும் போஜனத்தால் தாம் மிகவும் திருப்தியடைவீர்.

ஊர்[illegible] ஓ! பகவானே! தன்னியனாகவும் அனுக்கிரகிக்கப்பட்டவனாகவுமா[illegible]யாதொருகாரணத்தால் பகவானாகியதாமே என்னுடைய குழந்தைக்காக இப்படிப்பட்ட எண்ணத்தைச் செய்தீரோ அதை விட வேறு அனுக்கிரகம் யாதுளது. ஓ! பகவானே! தமதுசமாகமத்தை நான்

விரும்பவேண்டியிருக்கத் தாமேவிரும்பியது எனது பாக்கியம். என்னுடையபுத்திரன் மெய்விதமான ஹவ்வியங்களால் சுகத்தையடையப்போகின்றான். வாசஸ்தான மெங்குளது. அவனுடையபோஜனம் எவ்வுருவமானது. தீர்மகாப்பிரபாவமுள்ள எனதுபுத்திரனுக்கு அவனுக்குரிகான எதை ஏற்படுத்தப்போகின்றீர்.

பிர்மா:— ஓ! பிராமணோத்தமனே! படவாமுகத்தில் வாசமும் சமுத்திரமே வாயுமாக சம்பவிக்கப்போகின்றது. எனகருக்காரணமான யாதொரு ஜலமென்பதுளதோ அஜ்ஜலமயமானதேகமே உமதுபுத்திரனுக்கு ஆகாரமாக ஏற்படும். ஆகையால் அக்கடல்களினுள்ளேயிருக்கும் படவாமுகத்தில் வசித்துக்கொண்டும் அக்கடல்களில் வந்துவிழும் நீர்களைக் கொண்டும் அதிலேயே நிலையாகக்கடவது. பிறகுயுகாந்தகாலத்தில் இப்புத்திராக்கினியும் நானும் ஒன்றாய்க்கூடி இத்தலோகங்களில் விளையாடி தேவாசுர ராக்ஷச மனிதமயமான இப்பிராணிகளையெல்லாம் தகித்து சங்காரத்தைச் செய்வதற்கு உபயோகமாவோம். நான்போய்வருகின்றேன்.

வைசம்பாயனர்:— இவ்விதம் பிர்மா உத்தரவளித்தவுடன் அப்புத்ராக்கினியானது தனதுதேஜஸ்ஸை தகப்பனாரிடம்வைத்துவிட்டு தான்மாத்திரம் சமுத்திரத்தில்சென்று நீரைக்குடித்துக் கொண்டிருக்கிறது. அதுவே படவாமுகாக்கினி என்பது. பிறகு மகரிஷிகளுடன் பிர்மாவும் தனது உலகம் சென்றனர். இவ்விதம் ஔர்வருடைய பிரபாவத்தை யறிந்த ஒவ்வொருவரும் மனதில் அடங்காத வியப்பையடைந்தனர். பிறகு அங்கிருந்த இரண்யகசுபுயென்ற அசுரராஜன் அவ்வற்புதத்தைக்கண்டு அவ்வௌர்வரைக்கிட்டி நமஸ்கரித்துவருமாறு கூறினர். ஓ! பகவானே! இது மிகவும் அற்புதம் கண்ணால் காணும்படியான காரியமிருக்கது. ஓ! முனிபுங்கவனே! தமது தவத்தால் பிர்மாவும் ஆனந்தித்தார். ஆகையால் நான் உமக்கும் உமதுமைந்தனுக்கும் அடிமையென அறியத்தக்கவர். அவ்விதமென்னை அனுக்கிரகித்தால் நான்சிறந்தவனாவேன். தங்களை பூஜிப்பதிலேயே எண்ணமுடையவென்னை கண்ணெடுத்துக் கடாக்ஷிக்கவேண்டும். எப்பொழுது உமக்குஅடிமையானேனோ இனியெனக்குண்டாகும் அபஜெயமெல்லாம் தம்முடையதே யென்றான்.

ஔர்வர்:— ஓ! அசுரராஜனே! உன்னால் யான்குருவாய் மதிக்கப்பட்டபடியால் நானும்தன்னியனாகவும் பெரியோர்களாலும் பூஜிக்கப்பட்டவனாகவுமானேன். என்னுடைய தவத்தால் எனக்கு எவ்விதத்தில் ஒன்றும் பயமில்லை. ஆகையால் என்னையடைந்த உனக்கு பரிசாக என்று



டையபுத்திரனால் நிர்மிக்கப்பட்ட தேஜோமயமான இந்தமாயையை உனக்குக் கொடுக்கின்றேன் பெற்றுக்கொள். இவ்வக்கினியானது அக்கினிதேவர்களாலும் தொடமுடியாதது. இது தனதுவம்சத்தைக் காக்கவும் எதிரிகளைக் கொல்லவும் உபயோகமுள்ளது என்று முனிவருரைக்க, அவ்விதமே செய்கின்றேனென அம்முனிபுங்கவனை நமஸ்கரித்து அவ்வசுரோத்தமன் அம்மாயாக்கினியைப் பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம் சென்றான்.

வருணன்:— ஓ! தேவேந்திரனே! அந்தமாயையே இது. தேவர்களாலும்சகிக்கமுடியாமலும் இருக்கும்படி ஔர்வனென்ற ரிஷிகுமாரனால் முன்காலத்தில் செய்யப்பட்டது. ஆகையால் அவ்விரண்யகசிபுவென்ற அசுரன் வெளிக்கிளம்பினால் இம்மாயாக்கினியானது வீரியமற்றதாகும் என முன்பே இதற்கோர் சாபமும் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் இம்மாயையைக்கொல்லவேண்டுமானால் ஓ!சக்கிரனே! எனக்குச்சகாயமாக சந்திரனைக் கொடுக்கவேண்டும். அப்பொழுது நான் அவனோடும் மற்றுமுள்ள ஜலஜந்துக்களோடு மொன்றுசேர்ந்து இம்மாயையை உமதுகிருபையால் வென்றுவிடுகிறேன். இதிற்சிறிதளவேனும் சந்தேகிக்கவேண்டாம்.

49-ம் அத்தியாயம் முற்றிற்று

# 50-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— தேவர்களுடைய விருத்தியை வேண்டுகிற இந்திரனும் மிகவும் சந்தோஷத்துடன் தன் முன்னிருந்த சந்திரனை வருணனோடு கூடியுத்தஞ்செய்யும்படி உத்திரவு கொடுத்தான். அதன் விபரமாவது:— ஏ! சந்திரனே! வருணனுக்குதவிக்காகவும், அசுரர்களுடைய விநாசத்திற்காகவும், தேவர்களுடைய ஜயத்திற்காகவும் நீ சீக்கிரம் போ, நீ ஒப்பற்ற வீரியமுடையவனாகவும் சோதிகளுக்கெல்லா முயர்ந்த ஈசுவரனாகவுமிருக்கின்றாய். இரசத்தின் தன்மையை யறிந்தோர் இவ்வுலகங்களிலுள்ள ரசத்தையெல்லாம் உன்னுடைய தன்மைபொருந்தியதாகவே கூறுகின்றனர். சமுத்திரம்போல் ஏறுவதும் குறைவதுமாயுள்ள உனது மண்டலமானது காலங்களை வகுத்து அஹோராத்திரத்தைச் சேர்ப்பிக்கி

ன்றது. இவ்வுலகங்களெல்லாம் உனது மண்டலத்தில் தோன்றும் தோற்றமாகிய முயலெனக் கூறப்படுகின்றது. ஓ! சோமதேவனே! நக்ஷத்திரங்களுடைய கதியை யறிந்தோர் கூட உன்னை நன்றாயறியமாட்டார். நீ சூரியனுடைய நிலைக்கு மேற்பட்ட நிலையிலிருக்கின்றாய். ஆகையால் இருளை அணுகவொட்டாமல் உனது மண்டலத்தாலேயே உலகத்தை விளங்கச்செய்கின்றாய். நீ குளிர்ந்த பனிமயங்களான கிரணங்களையுடையவன். சோதிகளுக்கெல்லாம் அதிபன். சசமென்ற களங்கத்தையுடையவன். வருஷத்தைப் பூர்த்திசெய்கின்றவன். காலத்தோடுசேர்ந்த வடிவையுடையோன். பூஜிக்கத்தக்கவன் அழிவற்ற சோமராசன். ஓஷதிகளுக்கெல்லாமீசன். கர்மங்களுக்குக் காரணபூதன். ஜலத்திற்கு மூலகாரணன். சீதமானதன்மையை யடைந்தவன். அமுதத்துக்காதாரமானவன். எப்பொழுதும் சஞ்சரிப்பவன். பெருத்த வாகனமுடையவன். ஒளி விருத்தவன். இனிமையான தேகத்தையுடையவன். சோமயாகஞ் செய்கின்றவர்க்குச் சோமனாய் விளங்குகின்றவன். எல்லாப்பிராணிகளுக்குந் துன்றும் நீ நல்ல தன்மையை யுடையவன். இருளைப் போக்கடிக்கின்றவன். அசுவினி முதலிய நக்ஷத்திரங்களுக்கரசன். இவ்வுலகங்களுக் கோரிராஜராஜன். ஆகையால் நீ சேனாபதியான இவ்வருணனோடு கூட சகாயமாகப்போய், இப்பொழுது அசுரர்களால் விடப்பட்டதாயும் சகல தேவர்களையும் கொளுத்துகின்றதாயுமுள்ள இம்மாயையை அடக்குவாயாக.

சந்திரன்:— ஓ! தேவராஜனான உலகேசனே! யுத்தத்திற்காக என்னைப்பார்த்து யாதொரு இவ்வாக்கியங்கள் செய்யப்பட்டனவோ, அவ்வுத்திரவுகளை எனது சிரஸால் வகித்து இதோ தைத்தியமாயையைப் போக்கடிக்கத்தக்கதான மிகவும் குளிர்ந்த கிரணங்களைப் பொழிகின்றேன். ஓ! தேவேந்திரனே! இதோ எனது சீதளகிரணங்களால் கொளுத்தப்பட்டும் பனியால் கவ்வப்பட்டுமிருக்கின்ற தைத்தியர்களை இப்பெரும்போரில் மாயையையும் கொழுப்பையும் விட்டவர்களாகப் பார்க்கப்போகின்றீர்.

வைசம்பாயனர்:— பிறகு சந்திரனால் விடப்பட்ட பெருந்துளிகளோடு கூடிய பெருத்த மழையானது ஆகாயத்தை மேகங்கள் போலதி கோரர்களான அவ்வசுரர்களை யெல்லாம் கவ்விக்கொண்டது. இவ்விதம் வருணனும் சந்திரனும் பாசத்தையும் பனிமயங்களான கிரணங்களையுமாயுதங்களாகக் கொண்டவ்வசுரர்களையெல்லாம் சலிக்கவிடாமலடித்தார்கள். மேலுமவ்விருவர்களும் கொந்தளித்த சமுத்திரம் போன்ற



பாசத்தையும் ஹிமத்தையும் கையிலெடுத்துக்கொண்டு அப்போர்க்களம் முற்றிலும் சுற்றி அவ்வசுரர்களை யெல்லாம் நனைத்து விட்டனர். இவ்விதம் பிரளயகாலத்திலுண்டாகும் காளமேகங்கள் போல் நாலாபுறமும் ஜலத்தையும் ஹிமத்தையும் பொழிந்து அவ்வசுரருடையமாயையை முற்றிலுமழித்து, எல்லா அசுரர்களையும் சிகரங்களற்ற மலைகளைப்போல் அப்போர்க்களத்திற் படுக்கச்செய்தனர். மேலும் அவ்வசுரர்களுக்கு விபரீத காந்தியோடு கூடிய விமானங்களெல்லாம் தலைமாறி விழுந்தன. அவ்விதம் வருணனுடைய பாசத்தாலும், சந்திரனுடைய கிரணங்களாலும் மிகவும் துன்புற்ற அசுரர்களை மயனென்றவன் பார்த்து அடங்காதகோபமடைந்து கற்களையும் பாறைகளையும் குண்டுகளையும் மரங்களையும் காடுகளையும் சிங்கம்புலியானைகளையும் மற்றுஞ்சில கோரமான விலங்குகளையும் வெளிக்காட்டத் தகுந்தவோர் மாயையைப் படைத்து தேவசைன்னியத்தின்பேரில் பிரயோகித்தான். உடனே அப்பார்வதியென்ற மாயையானது தேவர்களை யடித்து அசுரர்களைத் தெளிவித்தது. அதனால் சந்திரனுடையவும் வருணனுடையவும் மாயைகள் பயனற்றதாயின. பிறகு தேவர்களோ, அப்பார்வதி யென்ற மாயையினின்றும் கிளம்பி வந்துவிழப்பட்ட பாறைகல்மரம்முதலியவைகளால் அடிபட்டும், பலதிக்குகளில் சிதறிபட்டும், ஒவ்வொருவரும் சிதைபட்டும், கால்கைகளெல்லாம் முறிபட்டும், யாதொரு காரியங்களுஞ் செய்யவல்லமை யற்றும் போயினர். ஆனால் அம்மாயையானது கதாதரனான விஷ்ணுவை மட்டில் மயக்கக்கூடவில்லை. ஆகையால் அந்த யுத்தத்தில் விளங்கும் ஸ்ரீபதியான ஜகதீசனானவர் சிறிதளவேனும் சலிக்கவில்லை. பொறுமையே வடிவமாகவுடையராதலால் கதாயுதத்தைக் கையால் பிடித்திருந்தும் ஜகன்னாயகரான அவர் அவ்வசுரர்கள்மேல் கோபிக்கவுமில்லை. ஆனால் காலத்தை யறிந்த அக்காளமேகன் அந்த யுத்தத்தில் அசுரர்கள் மடியும்காலத்தையே எதிர்பார்த்தார். அன்றியும் அப்பகவான் வாயுவையும் அக்கினியையும் அப்பார்வதியென்ற மாயையை யகற்றும்படி உத்திரவளித்தனர். அவ்வுத்திரவினால் அவ்விருவரும் அதிவேகமாகக்கிளம்பி நாலாபுறமும்வீசி அம்மாயையைச் சாம்பலாக்கி யழித்தனர். மேலும் அத்தைத்திய சைன்னியங்களையும் யுகாந்தகாலத்திய அக்கினிபோல் கொளுத்தினர். அத்தானவருடைய விமானங்களையெல்லாம் வாயுதேவன் தலைகீழாய்த் திருப்பியொன்றோடொன்று மோதியடிக்க அவைகளை யெல்லாம் அக்கினிதேவன் கொளுத்தமுடிவில் அநேகமாயிரம் அந்த விமானங்களெல்லாம் சாம்பலாயின. அசுரர்களெல்லாம் முயற்சியற்று நின்று போயினர். தேவர்களெல்லாம்

சந்தோஷித்தனர். ரிஷிகளெல்லாம் நன்றாக இந்திரனை ஆசிர்வதித்தனர். விஷ்ணுவை தேவர்களும் ரிஷிகளும் ஜயஜயவென்ற வாக்குகளால் புகழ்ந்தனர். இவ்விதம் இந்திரனுக்கு ஜயமும் மயனுக்கு அபஜெயமும் ஆனபொழுது திக்குகளெல்லாம் தெளிந்தன. தருமம் தலையெடுத்தது. சந்திர சூரியர்கள் தன்வழியில் நடந்தனர். உலகங்களெல்லாம் அததன் நிலையில் நின்றன. நல்லோர்களெல்லாம் நன்னடையில் நிலைத்தனர். யாகங்களெல்லாம் முறைப்படி நடந்தன. தேவர்களெல்லாம் ஹவிர்ப்பாகத்தை முறைப்படி கைக்கொண்டனர். திக்குபாலர்களெல்லாம் பயமின்றி தத்தம்வேலைகளைப்பார்த்தனர். துஷ்டர்களுக்குக் கெட்டகருமங்கள் பலிக்காதுபோயின. சுத்தர்களுக்கு தவம்முதலிய நற்கருமங்கள்பலித்தன. இவ்விதம்முக்கால்பாகம்தருமமும் காற்பங்குஅதர்மமுமாய் இவ்வுலகங்களெல்லாம்விளங்கின. அரசர்களெல்லாம் பிரஜைகளை இரக்ஷிப்பதிலேயே மனமுடையவராயினர். அதனால் பிராமணர் முதலியோர்களும், இல்லறத்தன்மை முதலிய ஆசிரமதருமங்களும் ஒழுங்காய்நடத்தினர். இவ்விதம்தேவர்களுக்குண்டாகிய விஜயத்தைக்காலநேமியென்றஅசுரோத்தமன்கேட்டு அடங்காதகோபத்துடன்கிரீடங்களோடு கூடிய நூறுதலைகளுடனும், அனேகம் அங்கங்களோடுகூடியதோள்களுடனும், வெள்ளிமயமானகவசத்துடனும், அனேக வாயுதங்களோடு கூடிய நூறு கைகளுடனும், கோபித்த நூறு முகங்களுடனும், சுருட்டைமயிர்களுடனும், சிவந்த மீசைகளுடனும், உதடுகளைக் கடித்துக்கொண்டும், அட்டகாசம் செய்துகொண்டும், பெரிய நீலாசலம்போன்ற உருவத்துடனும், கைகளாலாகாயத்தையும் கால்களால் பூமியையும் நிறைத்துக்கொண்டும், மூச்சுக்காற்றுகளால் மேகங்களை யொதுக்கிக்கொண்டும், குரூரமான பார்வையுடன் கூடிய கண்களால் எல்லா தேவர்களையும் கொளுத்துகின்றவன் போலும், சத்ருக்களை யதட்டிக்கொண்டும், யுகாந்தகாலத்தில் புறப்பட்ட மிருத்யுபோலும், மாலை ஆபரணங்களோடும், தன்விரல்களால் தேவர்களாலடிபட்ட அசுரர்களையெல்லாம் எழுந்திருங்களென உத்திரவு செய்துகொண்டும், யுத்தகளத்தில் பிரவேசித்தான். அப்பொழுது தேவர்களெல்லாம் அவனைக்கண்டு மிகுந்த பயத்தால் வாடியகண்களையுடையவராயினர். உலகத்திலுள்ள சகலப் பிராணிகளும் பெரிய உருவத்துடன் வரும் அக்காலநேமியைக் கண்டு திரிவிக்கிரமரூபியான நாராயணனேஇவனென நினைத்தனர். காலநேமியும் போர்க்களத்தில் தனது முதலாவதடியை வைத்தவுடன் எல்லாத் தேவர்களும் கலங்கும்படியான கர்ச்சனையுடன் யுத்தம் செய்யத் தொடங்கினான். மேலும் அப்பொழுதவன் விஷ்ணுவோடு கூடிய மந்தரபர்வதம் போல் விளங்கினான்.



அப்படிப்பட்ட காலனைப்போன்ற அக்காலநேமியைக்கண்ட இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் நடுநடுங்கிப்போயினர்.

50 ம் அத்தியாயம் முற்றிற்று.

## 51-வது அத்தியாயம்.

**வைசம்பாயனர்:**— ஓ! ஜனமேஜயனே! கோடைகாலத்தின் முடிவில் கிளம்பும் கார்மேகம் போல் மேன்மேலும் விருத்தியாய்க்கொண்டு வருகின்ற அக்காலநேமியை மற்றஅசுரர்களெல்லாங்கண்டு சிறிதேனும் பயமில்லாமல் அமுதத்தைக்கண்டதேவர்கள் போல மிகுந்த பரபரப்புடன் முன்பு தேவர்களாலடிபட்ட மயன் தாரகன் முதலிய அசுரர்களோடு கூட அத்தேவர்களுடன் யுத்தஞ்செய்வதற்கு மறுபடியும் திரும்பிவந்தனர். மேலும் அம்மயன் முதலியோர் அங்குமிங்கும்தங்கள் படைகளையெல்லாம் அணிவகுத்து அங்கங்கு காவல்களையும் ஏற்படுத்தி தங்களுக்கு நாயகனாய் வந்த சேனாபதியான காலநேமியைக்கண்டு மிகவுமானந்தித்தனர். இவ்விதம் மயனும், மயனைச்சார்ந்த வராகனும், வீரியவானான ஹயக்கிரீவனும், விப்பிரசித்தியும், அவன் மகனான சுவேதனும், கரன், இலம்பன், அரிஷ்டன், கிசோரன், உஷ்டிரன், சுவர்ப்பானு, முதலிய மகாபலிஷ்டர்களான தபோவலிமைபொருந்திய எல்லா அசுரர்களும், காலநேமியைச் சூழ்ந்துகொண்டு அவனுக்கு சகாயமாய் கதை, சக்கிரம், முதலிய ஆயுதங்களாலும் கற்களாலும், குண்டுகளாலும், அஸ்திரங்களாலும், சஸ்திரங்களாலும், தோள்களாலும், தாள்களாலும், உலக்கைகளாலும், நாநாவிதயந்திரங்களாலும், பாசங்களாலும், மற்றும் பற்பல ஆயுதங்களினாலும் தேவசைன்னியங்களோடு யுத்தம் செய்தனர். அதனால் அவ்வசுரர்களுடைய சைன்னியங்களானது கொழுந்துவிட்டெரியும் அக்கினிபோல் விளங்கிற்று. அப்பொழுது இந்திரனால் காக்கப்பட்டதேவசைன்னியமானது சந்திரசூரிய நக்ஷத்திரங்கள் யாதொன்றும் காணாது நெருங்கிய இருள்போன்ற மேகங்களால் நிறைந்த ஆகாயம்போல் சிறிதளவேனும் விளங்கவில்லை. ஆயினும் சந்திர சூரியர்களுடைய வொளிகளால் விளங்குவதாயும் வாயுவின் வேகத்தோடு கூடியதாயும், சோமனால் சௌக்கியகரமாயும் நக்ஷத்திரக் கூட்டங்களாகிற பதாகத்தையுடையதாயும் நவக்கிரக நக்ஷத்திரமாலைகளையுடையதாயும், யமன், இந்திரன், குபேரன், வருணன் இவர்களால் காக்-

கப்பட்டதாயும், அக்னியினாலும் வாயுவினாலும் ஜ்வலிக்கின்றதாயும், பெருத்த கடல்போன்றதாயும், பலவிதமான அஸ்திரங்களையுடையதாயும் யக்ஷகந்தர்வர்களால் விளங்குவதாயுமுள்ள தேவர்களுடைய பெருத்த சைன்யமானது நாராயணனையே முக்கியமான ரக்ஷணமாகவுடையதாயிற்று. இவ்விதமுள்ள சைன்யங்களுக்கும் சமாகமம், நேர்ந்தபொழுது யுகாந்த காலத்தில் ஆகாயத்திற்கும் பூமிக்கும் சமாகமம் நேர்ந்ததுபோல் தோன்றிற்று. அப்பொழுது அத்தேவாசுரர்களுக்குள் பொறுமைக்கும் கோபத்திற்கும், செருக்கிற்கும், வணக்கத்திற்கும் கைகலந்ததுபோன்ற கொடூரமான யுத்தம் தொடங்கிற்று. அந்த யுத்தமானது, கீழ் மேல் சமுத்திரங்களிரண்டும் கொந்தளித்தெழுந்து ஒன்று சேர்ந்து ஆரவாரித்ததுபோல் தோன்றிற்று. அந்தயுத்தத்தில் ஒவ்வொரு தேவனையும் அசுரனையும் பார்க்கும்பொழுது பர்வதங்களிலுள்ள புஷ்பித்த காடுகளினின்றும் வெளிப்புறப்பட்டயானை போல் விளங்கினன். உடனே அந்தந்த சைனிகள் பேரியென்ற சகாரவாத்தியத்தை அடித்து சங்கவாத்தியங்களையும் முழங்கினர் அப்பேரியினோசையும், அச்சங்கின் தொனியும் ஆகாயத்தையும் பூமியையும் திக்குகளையும், நிறைத்தன. பிறகு நாண்களை யிழுப்பதும், டங்காரங்களைச் செய்வதும், துந்துபி வாத்தியங்களை முழக்குவதும், சிங்கநாதம் செய்வதுமாயிருந்தன. அதனுடன் ஒருவருக்கொருவர்நெருங்கிசிறிதளவேனும் தயங்காமல் அவரவராயுதங்களையும் கைகளையும் கால்களையும் வெட்டுவதும், கட்டுவதும், முறிப்பதும், தரிப்பதுமாய் த்வந்த்வயுத்தம்செய்யலாயினர். அந்தயுத்தத்தில் தேவர்களெல்லாம் கடுமையான இடிகளையும் இரும்புத்தாள்களையுங்கொண்டு அசுரர்களையடிக்க, அசுரர்களும் பெரியகதைகளைக்கொண்டடித்தடிக்க இவ்விதமொருவருக்கொருவர் பாணங்களாலும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் உலக்கைகளாலும் அதிகோரமாகச்சண்டையிட, வெட்டுண்டவர்சிலர், பாசத்தால் கட்டுண்டவர்சிலர், தடுமாறிவிழுந்தவர்சிலர், வேகமாயோடும் ரதங்களோடும் குதிரைகளோடுமொன்றோடொன்று மோதியுடைந்து தலைமாறி விழுந்தவர்சிலர்; இரத்தத்தைக்கக்குகின்றவர்சிலர்; மண்ணைக்கவ்வுகின்றவர்சிலர், தலையுடைந்தவர்சிலர், குடலறுந்தவர்சிலர், இவ்விதமின்னவிதம் என்றுசொல்லமுடியாத அதிகோரமான சங்குலயுத்தம் நடந்தது. பிறகு ரதிகளோடுரதிகளும், குதிரைவீரனோடுகுதிரைவீரனும், யானைவீரனோடுயானைவீரனும், காலாட்களோடு காலாட்களுமாக முறைப்படிக்குள்ள சண்டைசெய்ய ஆரம்பித்தனர். அதில் ரதங்களுடையசத்தங்களும், வீரர்களுடைய அட்டகாசங்களும், யானையினுடைய பீட்காரங்களும், குதிரை



களுடைய கனைப்பும், காலாட்களுடைய கத்திகளினோசையு மொன்றுசேர்ந்து மழைகாலத்தில் நீருண்டமேகங்களொன்றுசேர்ந்து வானத்தில் இடிமின்னல்முதலிய முழக்கங்களோடு நிறைந்ததுபோல் விளங்கிற்று. அப்பொழுது ஒருவன் மற்றொருவன் ரதத்தைச்சாய்ப்பதும் சாரதியைக்கொல்வதும் குதிரைகளைவெட்டுவதும் கைகளால்தூக்கியெறிவதும் கத்தியால் வெட்டுவதும் அதைக்கேடயத்தால் தாங்குவதுமாகப் போர்புரிந்தனர். இந்தசமயத்தில் காலநேமியென்ற மகாசுரனானவன் மிகுந்தகோபத்துடன் கூடினவனாய் நதிகளின்வெள்ளத்தால் நிறைந்த சமுத்திரம்போல் பொங்கி அதிவேகமாகசேனையின்முன்வந்து நின்றுகொண்டு கண்களினின்றும் கோபாக்கினிஜொலிக்க முகம்சிவந்து பெருமூச்சுவிட்டு கண்களெல்லாம் நெருப்புப்பொறிகள்பறக்கக் குறுக்கும்நெடுக்குமாய்கைகளைவிரித்துக்கொண்டு பெருத்த அட்டகாசத்துடன் அஞ்சுதலைகளோடுகூடிய பாம்புகள்போன்றதன்னுடையகைகளை அஸ்திரங்களில்வைத்துவிற்களில்பூட்டி தேவர்கள்மீது பிரயோகித்து ஆகாயம்முழுமையும் நிறைத்துவிட்டான். செம்மட்டை மயிர்களோடுகூடிய அக்காலநேமியைப் பார்க்கும்பொழுது சகலரும் சந்தியாகாலத்தின் சிவந்தமேகங்களோடுகூடிய மகாமேருபர்வதமென நினைத்தார்கள். அவ்வசுரன் அந்தயுத்தரங்கத்தில் அங்குமிங்கும் வேகமாய் நடக்கையிலுண்டான அடிகளின்வேகத்தினால் இறந்தவர்கள் எத்தனையோ தேவர்கள். அப்பொழுது முறிந்தவையெத்தனையோமரங்கள். ஒடிந்தவையெத்தனையோ கொடிமுடிகள். மேலும் ஆயுதங்கள்போல மிகவும் உறுதியான தனது கைகளால், ஒருதேவனைப்பிடித்து மற்றொரு தேவன்மீதடித்தடித்து எத்தனையோ தேவர்களையெல்லாம் உயிரிழக்கச் செய்தனன். சிலதேவர்களைத்தன் முஷ்டிகளால்குத்திவிழுத்திவிட்டான். சிலரையிரண்டாய்க்கிழித்தெறிந்துவிட்டான். எத்தனையோ யக்ஷகந்தருவபதிகளெல்லாம் உரகர்களுடன் தலைகீழாய்விழுந்துமடிந்தனர். இவ்விதம்யுத்தஞ்செய்துவரும் அக்காலநேமியையெதிர்ப்பதற்கு அத்தேவர்படைகளிலுள்ளவெவராலும் எவ்விதம் முயற்சிசெய்தும் முடிவில்சக்தியில்லாமல்போயிற்று. அதனால் ஆயிரங்கண்களோடுங்கூடிய இந்திரனும் அவனது சரப்பிரயோகத்தால் திகைத்துநின்றுவிட்டான். இவ்விதம் தேவர்படைகளையெல்லாம்ஜயித்த அவ்வசுரன் மறுபடியும் கதாயுதத்தையோங்கிக்கொண்டோடிவந்து ஐராவதத்தின்பேரில் வீற்றிருக்கும் தேவேந்திரனை நோக்கி வருமாறு கூறுகின்றான்.

காலநேமி:— ஏ! தேவேந்திரனே! எனது சமீபத்திற்கு வருவாய். இப்பொழுது என்னால் நீ ஜயிக்கப்பட்டாய். இதுமுதல் நீ தேவேந்திரன்,

அல்ல ஏ! விருத்திராசுரனைக் கொன்றவனே! இதோபார் நீபார்த்துக் கொண்டிருக்கையில் உன்தலையைப் பிளக்கின்றேன். இனி அசுரேந்திரனானே அழிவில்லாத தேவேந்திரனுமாவேன். இதிற்சந்தேகமில்லை. கடுமையான ஆண்மையோடுகூடிய உன்னை இதோகொல்லுகின்றேன்.

வைசம்பாயனர்:— இவ்விதம் அந்த யுத்தத்தில் அட்டகாசத்துடன் பேசிய காலநேமியைப்பார்த்து இந்திரனானவன் அடங்காத கோபத்துடன் அதிவேகமாகத்தனது கையிலிருந்த வஜ்ஜிராயுதத்தால் அவ்வசுரன் மார்பில் ஓங்கியடித்தான். ஆனால் அவன் மார்பையடைந்த அவ்வஜ்ஜிராயுதம் மாத்திரம் தெறித்துப் பொடிப்பொடியாயினவே தவிர, அவ்வசுரனைச் சிறிதளவும் துன்பப்படுத்தவில்லை. ஆகையால் அக்காலநேமியானவன் மறுபடியும் அதிவேகமாய் கதாயுதத்தைதூங்கிக்கொண்டு ஐராவதத்தினுடைய மிகவும்பலத்தோடு இந்திரனுடையமஸ்தகத்திலடிக்க அதனால்அம்மஸ்தகம் பிளந்து இரத்தம்சொரியக் கீழேவிழுந்துமூர்ச்சையடைந்தது. பின்னும் அதோடுநில்லாமல் அதேயுத்தமுகத்தில் அக்கதையால்இந்திரனையும் அடித்தான். உடனேபுரந்திரனானவன் மார்பெலும்புகளெல்லாம்முறிந்து இரத்தங்கக்கிக்கொண்டு ஐராவதத்திலிருந்து தரையில்விழுந்தான். ஓ! மகாராஜனே! சிறிதுநேரம் சுவர்க்கலோகத்தைவிட்டு அந்தசமயத்தில் பூலோகத்திற்குப்போய், மனுஷ்யசரீரத்தில்பிரவேசித்து இளைப்பாறி மறுபடியும் சுவர்க்கலோகம்வந்து மூர்ச்சைதெளிந்து ஐராவதத்தின்மேலேறிக் கொண்டானெனினும், அப்போர்முகத்தில்சண்டைசெய்யக்கூடவில்லை, நீருண்டமேகம்போலும், வற்றியகடல்போலும், சிறிதேனும்பராக்கிரமமில்லாதவனாக அவ்வருணனும் இவ்வசுரனால்முறியடிக்கப்பட்டான். அவ்விதமே வாயுவும் அக்கினிதேவருமாயினர். அவ்வண்ணமேசந்திரனும், ஆதித்தியரும், ஆதித்யர்களும், வசுக்களும், உருத்திரர்களும், தம்தம்பராக்கிரமத்தையிழந்தனர். இவ்விதம் அக்காலநேமியானவன் மற்றோர் சக்தியோடுகூடிய குமாரபகவானைப்போல் மகாபராக்கிரமசாலியாக மேலெல்லாம் இரத்தம்பெருக அச்சமரபூமியில்நிற்குங்காலத்தில், தனதெதிரில்வந்தவசுக்களுளொருவனைத் தன்கையிலிருந்த சக்தியென்ற ஆயுதத்தாலடித்து பூமியில்தள்ளினான். இன்றுமொரேகாலத்தில் தனது ஆயுதங்களாலொருங்கே நின்ற குபேரன் யமன் வருணன் இந்திரன் இவ்வனைவரையும்இவர்களால் விடப்பட்டஅஸ்திரங்களையெல்லாம்தடுத்து கீழேவிழச்செய்தான். அதில் ஒவ்வொருவரும் அவனதுசக்தியினடிக்குப்பாத்திரராஞர்கள். அப்பொழுது யமனால் காலதண்டமானது பிரயோகிக்கப்பட அதைஅவ்வசுரன் கையில்பிடித்துக்கொண்டான். அதைக்கண்டுசகலரும்மிகவும் ஆச்சரியம்



அடைந்தனர். சிலர் தங்கள் பராக்கிரமங்களையிழந்து தங்கள்கையிலுள்ள அஸ்திரசஸ்திரங்களையும் எறிந்துவிட்டு நூறாயிரக்கணக்காய் ஓட்டம்பிடித்தனர். மேலும் தேவராஜனான சதக்கிருதுவானவன் மறுபடியும் வஜ்ஜிராயுதத்தையெடுத்து அதனால் அவ்வசுரனையடித்தான். ஆகிலும் அவன் சிறிதாவேனும் சலிக்கவேயில்லை. பின்னும் கோபம்சகியாமல் அவ்வஜ்ஜிராயுதத்தாலேயே காற்றின்விசையோடு ஓங்கியடித்தான். அப்பொழுது அவ்வசுரன் கொட்டாவிவிடுவதுபோல் வாயைத்திறந்துவிழுங்க அச்சமயத்தில் இந்திரனானவன் சிறிய உருவத்துடன் அவன்வாயினுள்ளே நுழைந்து அவனதுவிலாவைக் கிழித்துக்கொண்டு கீழேகுதித்து மறுபடியும் தன் உருவத்துடன் அவனுக்கெதிரில் தோன்றினான். அந்தசமயமிந்திரன் நாராயணகவசத்தால் காப்பாற்றப்பட்டான். பிறகு அவ்விந்திரனானவன் தீராதகோபமுடையவனாய் சூலாயுதத்தைக் கையிலெடுக்க அந்தச்சமயத்தில் பிர்மாவானவர் இந்திரன்சமீபம்வந்து, ஓ! இந்திரனே! இவ்வசுரன் என்னால் வரங்கொடுக்கப்பட்டவனும் மிகுந்தபலமுடையவனுமாயிருக்கின்றனன். இவன்சூலத்தினாலாவது, மற்றஎந்த ஆயுதத்தினாலாவது கொல்லமுடியாதவன். இச்சூலமும் பயனைவிடாதது. ஆகையால் இதைபிரயோகிக்கவேண்டாமெனக்கூறினர். இதைக்கேட்ட சூலபாணியான அவ்விந்திரன் அவ்வாயுதத்தை உபசங்காரம் செய்துகொண்டனன். இந்தசமயத்தில் தேவர்களெல்லாம் காலநேமியால் துன்பத்தையடைந்து வேறுவழியொன்றுமறியாமல் எல்லோருமொன்றுசேர்ந்து மகாத்மாவாயும் ஈசுவரனுமுள்ள கிருஷ்ணவடிவமான ஹரியை நல்லவாக்குக்களால் துதித்தார்கள். ஓ! பகவானே! இந்தயுத்தத்தில் போர்புரியவந்த குபேரனென்பவன் காலநேமியென்ற அசுரனால் கருத்த இரும்புத்தாள்களைக்கொண்டு முறிய அடிபட்டு நொந்தவனாய் தன்பதவியை விட்டொழிந்தான். சகலரையும் சங்கரிக்கும்யமனோ தன்னுடையதிக்கான தெற்குதிக்கில் பதுங்கிப்போனான். மற்றும் சிலலோகபாலகர்களோ, தங்களுருவத்தைவிட்டுப் பூலோகத்திலுள்ள மனிதசரீரத்தில் பிரவேசித்துத் தங்கள்பதவிகளையெல்லாமிழந்து பூலோகத்தில் அலைகின்றனர். அவ்வசுரனோ இவ்விதம் லோகபாலர்களையெல்லாம் அவரவர் ஸ்தானங்களினின்றும் நீக்கி அவர்களுக்கு வேண்டிய தண்டனைகள்செய்து எல்லாத்திக்குகளிலும் தன் தேகத்தை நாலாய்வகுத்து நின்றனன். பின்னும் அவன் நக்ஷத்திரமார்க்கத்தையடைந்து சந்திரனுடையசம்பத்தையும் நகரத்தையும் தனதுவசமாக்கினான். சந்திரனையும் நிலையைவிட்டுமாற்றினான். சூரியனைச் சுவர்க்கத்துவாரத்தினின்றும்நீக்கினன். அச்சூரியனது உத்தராயணம் தக்ஷிணாயனமென்ற

இரண்டுவீதிகளுடன் கூடிய நகரத்தையும் தனத்தைவருத்தும் காரியத்தையும் தனக்குவசமாக்கினான். தேவர்களுடைய முகமாகிய அக்னியைத் தனக்கு முகமாக்கிக்கொண்டான். அவ்விதமே வாயுதேவனையும் தனது இஷ்டம்போல் வசமாக்கிக்கொண்டான். சமுத்திரத்திலுள்ள எல்லாநதிகளையும் அதன்உருவத்துடன் தனக்கு அதீனமாக்கிக்கொண்டான். மற்றும் நிலபுரங்களிலுள்ளவைகளும் பூபதிகளால் ரக்ஷிக்கப்பட்டவைகளுமான அநேகம் நதிகளையும் தன்னிடத்திலேயே வசிக்கும்படிசெய்தான். இவ்விதம் அவ்வசுரனுடையவன் நாமேசுயம்புபோலவும் பசுபதியான சிவன் போலவும் சர்வலோகமயனும் சர்வலோகபயங்கரனும் சர்வலோகத்திற்கும் முக்கியமானபாலகனுமாய்ச் சந்திரன், சூரியன் முதலிய கிரகங்களுமாய்க் காற்றும் நெருப்பும் கூடினது போலெப்பொழுதும் விளங்குகின்றான். ஓ! ஹரியே! இவ்விதமெல்லோர்க்கும் எல்லாவுலகங்களுக்கு முற்பத்திக்கும் பிரமாணத்திற்கு மேலான உயர்ந்த பதவியில் விளங்கும் அவ்வசுரனை, மற்றஅசுரர்களெல்லாம் பிரமனைத் தேவர்கள் துதிப்பதுபோலத் துதிக்கின்றார்கள்.

51-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 52-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— மிக்க பெருமையோடுகூடிய அந்தகாலநேமியிடத்தில் அசுரத்தன்மையால் வேதங்கள், தருமம், பொறுமை, உண்மை, நாராயணனைச்சம்பந்தித்த மோக்ஷலக்ஷ்மியென்றவைகளும் சேரவில்லை. அவனும் இவ்விதம் அவைகளைப் புறம்விட்டதினால் மிகவும்கோபத்தோடு வைஷ்ணவமென்றபதத்தைத் தேடிக்கொண்டு நாராயணனுடைய சமீபம் வந்தடைந்தான். அப்பொழுதங்கு கருடன்மேல் வீற்றிருப்பவராயும், சங்கு, சக்கரம், கதை இவைகளை யேந்திக்கொண்டிருப்பவராயும், அசுரர்களுடைய விநாசத்திற்காக எப்பொழுதும் சிறந்தஆயுதத்தை சுற்றிக்கொண்டிருப்பவராயும், நீருண்டமேகம்போன்ற திருமேனியையுடையவராயும், அதில் தோன்றும் மின்னல்போன்ற வஸ்திரத்தோடு விளங்குகின்றவராயும், தைத்தியர்களுடைய விநாசத்திற்காகவே யுத்தத்திற்குச் சித்தமாயிருப்பவராயுமுள்ள விஷ்ணுவைக்கண்டு கோபத்தாற்பொங்கியவனாயுடன் வருமாறு கூறினான். நமது முன்னோர்களாகிய அசுரர்களுக்கெல்லாம்



இவனே பெருந்சத்துரு. சமுத்திரத்தில்வசிக்கும் நமதுமுன்னோர்க்கு இவனேவைரி. மதுகைடபர்களுக்குமிவனே பகைவன். இவன்நமக்கும் அடங்காத சண்டைக்காரனென்று கூறப்படுகின்றான். யாதொருவனால் நமதுமுன்னோர்களான வெகுஅசுரர்களெல்லாம் கொல்லப்பட்டார்களோ அந்த தயவில்லாதவனிவனே. எவனால் அசுரஸ்திரீகளெல்லாம் கதறவடிக்கப்பட்டார்களோ, அந்தநயவற்றவனும் தேவர்களுக்குட்சேர்ந்த விஷ்ணுவென்றவனும், சுவர்க்கவாசிகளுக்குள் வைகுண்டனென்றவனும், உரகர்களுக்குள் அனந்தனென்றவனும், ஜலங்களில்பிரமாவைப்படைத்த சுயம்புஎன்றவனுமிவனே. தேவர்களுக்குநாதனும், நமக்குவிரோதியுமானவன் இவனே. இவனுடைய பெருங்கோபத்தாலேயே இரண்யகசபுவும் கொல்லப்பட்டான். இவனதுநிழலை யொட்டியதேவர்களெல்லாம் யாகமுகத்தில்நின்றுகொண்டு ரிஷிகளால்ஹோமம்செய்யப்பட்ட மூன்றுவிதமான ஹவிஸையும் புஜிக்கின்றனர். இவனே அசுரர்களெல்லாம் மடிவதற்கு றேது. யுத்தத்தில் நமதுகுலங்களெல்லாம் இவனுடைய பராக்கிரமத்தாலேயொடுங்கிவிட்டன. யுத்தங்களில் தேவர்களுக்காகஉயிரைக்கொடுத்து நிற்கின்றவன் இவனல்லவோ. சூரியனுடைய ஒளிக்குச்சமானமான சக்கிராயுதத்தைப் பிரயோகிப்பவனிவனே. உலகங்களுக்கெல்லாம் காலனைப்போல நாளிருக்கையில் நமதுதைத்தியர்களுக்குக் காலன்போன்றவனிவனல்லவா. அவைநிற்க, சென்று போனகாலங்களிலெல்லாம் காட்டிய துர்ப்புத்தியானயிவன் இதோபலனை அனுபவிக்கப்போகின்றான். இதோ என்னெதிரில் இவ்விஷ்ணுவானவன் தற்செயலாய் வந்துசேர்ந்தனன். இப்பொழுதே என்னுடையபாணத்தாலடிபட்டு என்னையேவணங்கப்போகின்றான். நம்முன்னோர்களுக்குச் சத்துருவாயும் தானவர்களுக்குப் பயங்கரனுமுள்ள இந்தநாராயணனைக்கொன்று தற்செயலாய் பெருங்கீர்த்தியை யடைகின்றேன். இனித்தாமதிக்கிறதில்லை. நாராயணனைச்சேர்ந்தவர்களையுமிதோ நான்கொல்லுகின்றேன். இவன் வெவ்வேறுஜாதிகளிற் புகுந்து ஒவ்வொருயுத்தத்திலும் நமதுஅசுரகுலங்களைத்துன்பப்படுத்துகின்றான். ஒரேசமுத்திரமாயிருக்குங்காலையில் அந்தமதுகைடபர்களிருவர்களையும்தன்துடையின்மீதுவைத்துக்கொன்றவனிவனல்லவோ. முன்புநரனும் சிங்கமுமான இரண்டு உருவங்களையும் ஒருருபமாயெடுத்து என் பிதாவான இரண்யகசிபுவைக் கொன்றவனல்லவோ, தேவர்களுக்குத் தாயான அதிதியென்றவள் இவனையல்லவோ தனதுகர்ப்பமாகத் தரித்தாள். வாமனனாகப்புறப்பட்டுபலியினிடத்திலிருந்தும் பிறந்தவனல்லவோ இவன். பலியினுடைய யாககாலத்தில் இம்மூவுலகங்களையும்

மூன்று அடிகளால் அளந்தவனுமிவனேயல்லவோ, அவனே கடைசியாய்
மறுபடியுமிப்பொழுது இத்தாரகாமயமான சண்டையில் எதிரியாய் வந்து
முடிவில் என்னோடும் சண்டை செய்து தேவர்களுடன் கூட விநாசத்தை
யடையப்போகின்றான். இந்தப்பிரகாரம் அவ்வசுரன் அப்போரில் வந்த
நாராயணனை துர்வாக்குகளால் பலவிதமாகத்திட்டி முடிவில் யுத்தம்செய்
வதிலேயே விருப்பமுடையவனானான். இவ்விதம் பலவிதமாகத் திட்டப்
பட்டும், சதாதாரனான நாராயணன் சிறிதளவேனும் கோபிக்காமல் உத்தம
மான பொறுமையென்ற பலத்தோடு கூடியவராய் புன்சிரிப்புடன் ஓர்
வார்த்தை சொல்லுகின்றார். நீ அல்பமான கொழுப்பையும் பலத்தையு
முடைய தைத்தியன். கோபத்தினால் துர்ப்பாஷைகளைப் பேசுகின்றாய்.
உன்னுடைய தோஷத்தாலேயே நீயடிபட்டவனானாய். பொறுமையற்றுப்
பலவாறாகப் பேசுகின்றதால் நீ அதமனென்றே என்னுடைய சம்மதம்.
உன்னுடையவாயால்வீணாகப்பேசுவதால்யாதுபயன். எவ்விடத்தில்பெண்
கள்வாயால்புலம்புகின்றனரோ அவ்விடத்தில்சூரனானபுருஷன்நிற்கவேமா
ட்டான். ஏ! தைத்தியனே! இதோபார், வேதமார்க்கம்தப்பிநடக்கப்பட்ட
வர்களும் பிரமாவால்கட்டளையிடப்பட்டமார்க்கமாகிற அணையைமீறினவர்
களுமான எவர்கள்தான், நன்மையையடையப்போகின்றார்கள். இதோ நான்
தேவர்களுக்குத் தீங்கு செய்பவனான உன்னைக்கொல்லப்போகின்றேன்.
பிறகு அந்தந்த தேவர்களையும் அவரவர்களுடைய பதவிகளில் நிலைப்படுத்
தப்போகின்றேன்.

வைசம்பாயனர்:-- இவ்விதம் ஸ்ரீவத்ஸதாரியான விஷ்ணுவானவர்
அப்போர்முகத்தில்சொல்லஅதைக்கேட்டஅத்தானவராஜனும்தனது நூறு
கைகளிலும் அஸ்திரங்களைப் பூண்டவனாய் கலகலவென்று சிரித்தான்.
மேலும் ஓடிவந்து சிவந்தகண்களுடன் விஷ்ணுவின்மார்பில் ஓரடியுமடித்
தான். அதைக்கண்டு அவனுக்கு பக்கபலமாய் வந்திருக்கும் மயனையும்
தாரனையும்முன்னிட்ட தானவர்களெல்லாம் கூர்மையான ஆயுதங்களோடு
அவ்விஷ்ணுவைச் சூழ்ந்தெதிர்த்து கொண்டனர். அவ்விதம் சூழ்ந்த சா
வா[illegible]தங்களோடுகூடிய அவ்வசுரர்களால் ஏககாலத்தில் அவ்விஷ்ணு அடி
படப்பட்டார்போலாயினும் சிறிதேனும் சலிக்கவில்லை. ஆகையால் அக்கா
லநேமியென்ற மகாசுரன் அவ்விஷ்ணுவுக்கு வாகனமான கருடனைக்
கிட்டி தன்முழுபலத்தோடு ஒருகதாயுதத்தையெடுத்து அக்கருடன்பேரில்
பிரயோகித்தான். தைத்தியனுடைய அக்காரியத்தால் விஷ்ணுவும் மிக
வாச்சரியத்தை யடைந்தார். அவனாலடிபட்ட கருடனும் மிகவு
நொந்து அடிக்கடி நிலைத்து நிற்கமாட்டாமல் தத்தளித்தார். ஆகிலு



நெடுமாலால் விருத்தி செய்யப்பட்ட பலத்தையுடையவராதலால் மூர்ச்சை
யையடையவில்லை. எப்பொழுது அக்கதையானது கருடனுடைய தலை
யில்தாக்கிற்றோ, அப்பொழுது அவ்வடியைத் தாங்கமாட்டாமல் அப்பக்ஷி
ராஜன் காலால் பூமியைத் தாங்கினார். இவ்விதம் கஷ்டப்பட்ட சுபர்ண
னைக்கண்டு வைகுண்டனும் அடங்காத கோபங்கொண்டு கண்களிரண்டும்
சிவக்கக் கையில் சக்கிராயுதத்தை எடுத்தார். அப்பொழுது மிகுந்த விசை
யோடுகூடிய அப்பக்ஷிராஜனோடு கூட அப்பிரபுவானவர்மிகவும்பெருத்தார்.
அவ்விதமே அவரது கைகளும் அடைத்துப்பெருகின. அதைப்பார்த்தவர்
கள் மறுபடியும் உலகங்களை அளப்பதற்குத்தான் பெருகுகின்றனரோ
வெனச் சந்தேகித்தனர். பிறகு விசுவரூபத்தையுடைய அப்பெருமானை,
கந்தர்வர்களோடுகூடிய அந்த ரிஷிகளெல்லாம் துதிக்கத்துடங்கினர்.
ஓ! தேவதேவேசனே! சங்குசக்கிரகதாதரனே! எங்கும் நிறைந்தவனே!
சோதிவடிவமானவனே! எல்லோர்க்கும் உள்ளமாயிருப்பவனே! உலகத்
தையெல்லாம் தன்னிடம் உபசங்காரம் செய்துகொள்ளவல்லவனே! ஐம்
பொறிகளுக்கு மீசனே! உமக்கு நமஸ்காரம், மகா பலிஷ்டனான இவ்வசு
ரனை ஜயிப்பீராக. ஓ! விருபாக்ஷனே! உலகத்திற்கு சுகத்தைப் பண்ணு
முமக்கு நமஸ்காரம். ஓ! உலகத்திற்கு நாயகனே! எங்களையெல்லாம் காப்
பாற்றும். இவ்வசுரனை விஜயம் செய்யும். இவ்விதம் துதிக்கப்பட்ட அம்
மதுஸூதனன் கிரீடத்தால் சுவர்க்கத்தையும், அம்பரத்தால் அம்பரத்தை
யும், திருவடிகளால் பூமியையும், திருமேனியால் திக்குகளையும் ஆக்கிர
மித்துக்கொண்டு சூரியகிரணங்கள்போன்றதும், ஆயிரம்ஆரங்களையுடை
யதும், வைரிகளைக்கொல்லவல்லமையுள்ளதும், எரிகின்ற தீபோன்ற
தும், அதிகொடூரமானதும், கண்கொண்டு பார்க்கமுடியாததும், நல்
லோர்பார்க்க இனிப்பானதும், பொன்மயமான வட்டையையுடைய
தும், வஜ்ஜிரமயமான நாபியையுடையதும், பயங்கரமாயும் பழைய
வசுரர்களுடைய இரத்தம், குடல், மாமிசம் முதலியவைகளாற்
பூசப்பட்டதாயும், சத்துருக்களை ஜயிப்பதில் நிகரற்ற வலிமையுடைய
தாயும், கூர்மையான சுடர்களையுடையதாயும், சிவந்த பூமாலைகளால
லங்கரிக்கப்பட்டதாயும், இஷ்டப்படி செல்லத்தக்கதாயும், இஷ்ட
மான வுருவத்தையெடுக்க வல்லமையுடையதாயும், சுயம்புவான பக
வானால் சுவயமாகப் படைக்கப்பட்டதாயும், எதிரிகள்கண்டு நடுங்கக்
கூடியதாயும், மகரிஷிகளின்கோபங்களாற் பூரிக்கப்பட்டதாயும், எப்பொ
ழுதும், யுத்தத்திலேயேகொழுக்கப்பட்டதாயும், பிரயோகிக்கப்பட்டமாத்
திரத்தில் சராசரங்களான உலகங்களையெல்லாம் மூர்ச்சையடையச்செய்வ

தாயும், தன்னைக் கண்டமாத்திரத்தில் மாரிசப்பிரியங்களான பிராணிகள் எல்லாம் சந்தோஷிக்கத்தக்கதாயும், ஒப்பற்ற வேலைகளைச்செய்யத்தகுந்ததாயுமுள்ள சக்கிராயுதத்தை அந்தயுத்தத்தில் ஜொலிக்கப்பட்ட கோபத்தையுடையவராகவும், இடதுகையில் கதையைப்பிடித்தவராகவும், தன்னுடைய ஜோதியாலேயே அசுரர்களுடைய பராக்கிரமத்தை அடக்கச்செய்கின்றவருமாகப் பிரயோகித்தார். அவ்விதம் பிரயோகிக்கப்பட்ட சக்கிராயுதத்தினால் அக்காலநேமியினுடைய கைகளும் நாலுதலைகளும் ஒருகணப்பொழுதுக்குள் இருஇருவென்று அறுக்கத்தள்ளப்பட்டன. இவ்விதம் தலைகளும் கைகளும்போய் முண்டமாய் நின்ற அவனது உடல்கூட கிஞ்சித்தேனும் சலிக்கவில்லை. அப்பொழுது பார்த்தவர்களுக்கு கிளைகள் தறித்துவிட்ட மரம்போல் தோன்றிற்று. பிறகு பக்ஷிராஜனானவர் தனது இறகுகளை விரித்து வேகமாய்ச்சென்று தனதுவேகத்தால் முண்டத்தைக் கீழே தள்ளினார். தள்ளப்பட்ட அம்முண்டமும் மேல் லோகத்தினின்றும் சுழன்று சுழன்று பிருத்வி அதிர்ச்சியுடன் கீழே விழுந்தது. இவ்விதம் அவ்வசுரன் இறந்துவிழுந்தபொழுது ரிஷிகளுடன் கூடிய தேவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து நன்று நன்றென அவ்விஷ்ணுவைத் துதித்தனர். அந்த யுத்தத்தில் காலநேமியை ஜயித்த அவ்வுபராக்கிரமத்தையுடைய மற்றுஞ்சில அசுரர்களெல்லாம் அந்த ஹரியினால் ஓட்டப்பட்ட அந்த தர்சனபகவானுடைய கைகளாலேயே ஆக்கிரமிக்கப்பட்டனர். மேலும் சிலவசுரர்களைத் தலைமயிரைப்பற்றி பிடித்தும் சிலரை கழுத்தைப் பிடித்தும் சிலவசுரர்களைக் கிழித்தும் சிலரை வயிற்றைக் கிழித்தும் சிலரை கொன்றும் சிலரைத் தாக்கிப்பிடித்தும் இவ்விதம் பலவிதமாக யுத்தம் செய்து போரில் வந்திருந்த அசுரர்களையெல்லாம் அச்சக்கிராயுதன் உயிரை இழக்கச் செய்தனர். இவ்விதம் சகல அசுரர்களும் இறந்தபின் புருஷோத்தமனான அக்கதாதரன் தேவர்களுக்குப் பிரியமான காரியத்தைச் செய்ததால் தான் சங்கற்பித்த காரியத்தை நிறைவேற்றினவராய் கவலை யொழிந்து நின்றனர். இப்பிரகாரம் அவ்வசுரப்படைகளையெல்லாம் பாழாயொழிந்து தாரகாமயமான யுத்தத்தையும் முடித்து ஏகாந்தமாய் கருடன்மீது வீற்றிருக்கும் அப்பகவானுடைய சமீபத்தை உலகங்களுக்கெல்லாம் பிதாமகனான பிர்மதேவன் அனேகமான பிர்மரிஷிகளுடனும் கந்தர்வர்களுடனும் அப்ஸரஸ்த்ரீகளுடனும் கூடினவராய்க்கொண்டு வேகமாய் வந்து தேவதேவனான அந்த ஹரியை மிகவும் பெருமைப்படுத்தி வருமாறு சில வார்த்தைக் கூறுகின்றனர்.



பிர்மதேவன்:— ஓ தேவனே! பெருத்த காரியம் தம்மால் செய்யப்பட்டது. தேவதைகளுக்கு இடையூறான சல்லியமான தெடுக்கப்பட்டது. இவ்வசுரர்களுடைய வதத்தால் நாங்கள் மிகவுமானந்தித்தோம். ஓ! விஷ்ணுவே! உம்மாலடிபட்ட இக்காலநேமியென்ற மகாசுரன் வேறொருவரானும் கொல்லமுடியாதவன். அவனைக்கொல்லத் தக்கவர் தம்மைத் தவிர எவருமில்லை. இவன் தேவர்களையும் சராசரங்களான இவ்வுலகங்களையும் ரிஷிகளையும் என்னையும் வெகுவாக ஹிம்சித்துக்கொண்டிருந்தான். ஆகையால் தமது கொடுமையான இக்காரியத்தால் நான் மிகவும் சந்தோஷித்தேன். யாதொரு காலநேமியைக் கொல்லுவதற்காக இங்கு தாமுதித்தீரோ, அதனால் காலனுக்கு சமானமான அவனது காரியம் தீர்ந்து விட்டது. ஆகையால் தங்களுக்கு மேன்மேலும் க்ஷேமமுண்டாகக்கடவது. வருக, வருக, நாமிருவரும் உத்தமமான சோதியுலகத்திற்குச் செல்லுவோம். அங்கு பிர்மரிஷிகளெல்லாம் சபையில் வீற்றிருந்துகொண்டு நாலுள்பட எதிர்பார்க்கின்றார்கள். ஓ! பேசுவதிற் சிறந்தவரே! அங்கு யெழுந்தருளப்பட்ட தம்மை அப்பிராகிருதமான வாக்குகளாற்றுதித்தும் பூஜிக்கவும் விரும்புகிறோம். வரனளிப்பவர்க்கெல்லாம் உத்தமமான வரனைக் கொடுத்தருள்பவரே! தமக்கு நான் எவ்வரனைக் கொடுப்பேன். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் மற்றுமுள்ள சகலருக்கும், தாமல்லவோ வரதன். ஓ! பகவானே! இம்மூவுலகமும் யாதொரு சத்துருக்களுமில்லாமல் சுகத்துடன் நிறைந்தது. ஆகையால் இதைசக்கிரனுக்குத் தாம் கொடுத்தருள வேண்டும். இவ்விதம் திரிகாலஞானியான பிர்மதேவனால் விண்ணப்பஞ் செய்யப்பட்டவரான அழிவற்ற ஹரியானவர் இந்திரன் முதலிய சகல தேவர்களையும் பார்த்து மங்களமான வாக்கினால் வருமாறு அருளிச்செய்கின்றார்.

பகவான்:— ஓ! தேவர்களே! இங்குவந்திருக்கு மெல்லோர்களும் செவிதாழ்த்திய தேகங்களுடன் இந்திரனை முன்னிட்டுக்கொண்டு நமது வார்த்தையைக் கேளுங்கள். இந்த நம்முடையயுத்தத்தில் காலநேமி முதலிய சகலஅசுரர்களும்கொல்லப்பட்டார்கள். அவர்களோபராக்கிரமத்தில் சக்கிரனைக்காட்டிலும் மேன்மைபொருந்தியவர்கள். இப்பெருத்த யுத்தத்தில் வைரோசனனானதைத்தியேந்திரனும், சொர்ப்பானுவென்ற பெருத்த கோபிஷ்டனும் மாத்திரம் தவறி ஓடிவிட்டனர். ஆகையால் இந்திரனும் வருணனும் அவரவர் திக்குக்களையடைந்து வாழக்கடவர். அவ்விதமே யமனும் குபேரனும் தெற்கிலும் வடக்கிலுமிருந்து பரிபாலிக்கக்கடவர். யோகத்திற்கனுகுணமாக நக்ஷத்திரங்களுடன்கூடி சந்திரனும்வாழ்க. அப்த

தையும் ருதுக்களின் முகத்தையும் சேர்த்து அயனங்களுடன் சூரியன் வாழ்க. சப்பியர்களாற் பூஜிக்கப்பட்ட நெய்ஹோமங்களெல்லாமினிச் சரிவரநடங்கட்டும். பிராம்மணர்களால் வேதவிதிப்படி ஹோமஞ்செய்யக்கடவது. பலிஹோமங்களால் தேவர்களும், வேதமோதுவதால் ருஷிகளும், சிராத்தங்களால் பிதுருதேவர்களுமிஷ்டப்படி திருப்தியையடையக்கடவர்கள். வாயுவும் நல்வழியில் முன்போற் சஞ்சரிக்கத்தக்கவன். அக்கினியும் மூன்றுபிரிவுகளாக ஜுவலிக்கக்கடவது. பிராம்மணர் க்ஷத்திரியர் வைசியர் என்றமூவரும் அவரவர்விதிப்படி தங்குமனுலகங்களை தம்தம் குணங்களால் விருத்திசெய்வார்களாக. தீக்ஷிதர்களாகிய த்விஜர்களால் யாகங்களெல்லாம் செய்யக்கடவன. அந்தந்த யாகங்கள்தோறும் அதற்குத்தக்கபடி நிறைந்த தக்ஷிணைகளைத் தானம்செய்யத்தக்கது. சூரியன் கண்களையும், சோமன் ரஸங்களையும், வாயு பிராணன்களையும், சுபமான கருமங்களால் நல்லதிருப்தியோடு காத்துவரக்கடவர். முறைப்படி மஹேந்திர பருவதத்திலிருந்துற்பத்தியாய் பெருகும் தாய்போன்ற நதிகள் எல்லாம் அசுரரிடமுள்ள பயத்தைவிட்டுக் கவலையில்லாதவர்களாகச் சுகிக்கட்டும். ஓ! தேவர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. ஸநாதனமான பிர்மலோகஞ் செல்லுகின்றோம். தம்தங்கள் வீட்டிலும், எல்லா உலகங்களிலும், யுத்தத்திலுமெதையும் நம்பவேகூடாது. பெரும்பாலும் அசுரர்களிடம் நம்பவேகூடாது. அசுரர்கள் எப்பொழுதுமசப்தத்தன்மை உடையவர்கள். இடைவெளி பார்த்திருந்து உங்களைக்கொல்ல எத்தனிப்பார்கள். அவர்களுக்கு நிலையானமரியாதை யென்பதே கிடையாது. நன்மார்க்கத்திலு மொழுங்கிலுஞ் செல்லுமுங்களுடைய புத்தியானதெப்பொழுதும் நன்மையையே நாடும். ஓ! தேவர்களே! நானேதுஷ்டர்களுக்குத் துஷ்டன். வஞ்சகனுக்கு வஞ்சகன். நல்லதன்மையையுடைய வுங்களைப்போன்றவர்களுக்கு நல்லவன். தீயர்களுக்கு மேன்மேலும் அஞ்ஞானத்தையே கொடுப்பவன். எப்பொழுது தானவர்களிடமிருந்து பிராதுன்பமுங்களுக்குண்டாகுமோ, அப்பொழுது நான்வேகமாய்வந்து அப்பயத்தைத் தீர்த்துங்களுக்கு சுகத்தைக்கொடுப்பேன். இவ்விதம்பகவான் தேவர்களைநோக்கி யுபதேசித்தருளியதன்பின் பிர்மாவுடன் தன்னுடைய சோதியுலகத்திற் கெழுந்தருளினர். தானவர்களுக்கும் விஷ்ணுவிற்கும் நடந்த இப்பெருத்த தாரகாமயமென்ற புதியயுத்த விசேஷங்களெல்லாம் மிகவுமாச்சரியகரமானவை. ஓ! ஜனமேஜயராஜனே! தாம்கேட்ட வினாவிற்கு விடையளிக்கப்பட்டது.

52-ம் அத்தியாயம் முற்றிற்று.



# 53-வது அத்தியாயம்.

ஜனமேஜயன்:— ஓ! வைசம்பாயனரே! சலிலயோனியாயும் தேவதேவனுமுள்ள பிர்மாவுடன் பிர்மலோகத்திற் கெழுந்தருளிய ஸ்ரீவைகுண்டன் அங்கு என்னசெய்தருளினர். அசுரவதமும்முடிந்து தேவரால் வெகுமானிக்கப்பட்டபின் எதற்காக அப்பிர்மாவினாலங்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டனர். அப்பிர்மலோகத்திலிப்பகவானுக்கு எப்படிப்பட்ட ஸ்தானம். அங்குசென்று எவ்விதயோகத்தை யடைந்தனர். சகலப்பிராணிகளாலும் பாவனைசெய்யப்பட்டுவருமப்பகவான் எவ்விதமான நியமத்தைவகித்தனர். அங்குபலவிதமாய் ஆராதிக்கப்படுங்காலையில் சமஸ்தமான யிவ்வுலகமுமெப்படி தேவாசுர மனிதர்களெல்லோரும் விரும்பும் நிறைந்தசெல்வத்தை யடைந்தது. கோடையின் முடிவிலெவ்விதம் கண்வளர்கின்றார். மாரிசென்றபின் எவ்விதமுணர்கின்றார். பிர்மலோகத்திலிருந்தபடி யெவ்விதம் இலௌகிகமான பாரத்தை வகிக்கின்றனர். ஓ! விப்பிரேந்திரனே! அப்பகவானுடைய அப்பிராகிருதமானமேலுலகத்திய சரித்திரத்தையுமுள்ளபடியே விஸ்தாரமாகக்கேட்டறியவிரும்புகின்றேன்.

வைசம்பாயனர்:— ஓ! இராஜனே! முதலில் நாராயணனுடைய திருவிளையாடல்களாகிற பிரவிருத்திகளையும், எப்படி பிர்மலோகத்தைக் குறித்தெழுந்தருளினாரோ, அங்குசென்று அப்பிர்மாவுடனெவ்விதம் ஆமோதித்தாரோ, அவைகளையும் விஸ்தாரமாகக் கேள். அப்பெருமானுடைய வழியானது தேவர்களாலும் கண்டுபிடிக்கமுடியாததும் மிகவும் நுட்பமானதுமாம். அவரைக்குறித்து யாதொருசங்கதிகளைப் பிரமாணங்களையநுசரித்து நானுனக்குக் கூறுவேன். அதை நீகேள். இத்தேவனானவர் இவ்வுலகமயர். இவ்வுலகங்கள் மூன்றும் இத்தேவமயங்கள். மேலும் இத்தேவர் ஸகலதேவமயர். சகலதேவர்களும் அத்தேவமயர்களாய் சுவர்க்கத்தில் விளங்குகின்றனர். முடிவை அறியவேண்டுமென்று சிறந்தபெரியோர்கள்கூட அத்தேவனுடைய முடிவானஎல்லையை அறியமுடியாதவர். இவரே உத்தமனாகவும், எல்லாவற்றிற்குமெல்லையாகவு மிருக்கின்றார். இவ்வுலகங்களுக்குளிம்மாதவனே அறியத்தக்கவர். தேவர்களால் தேடத்தக்கவரும் அத்தேவர்களுக்குமறியமுடியாத பிரசுபோன்றவராயுமுள்ள அப்பகவானுடைய, பிர்மலோகத்தில்நடந்த பழையவிருத்தாந்தத்தைக் கூறுகின்றேன் கேள். அப்பகவான் பிர்மலோகம்சென்று அங்குவிளங்கும் பிர்மாவினுடைய ஸ்தானத்தைப்பார்த்து அங்குள்ள ரிஷிகளையெல்லாம் ரிஷிகளின்சமயப்பிரகாரம் நமஸ்கரித்தனர். மேலும் பிராக்சவனமென்று

இடத்தில் மகரிஷிகளால் ஹோமம் செய்யப்பட்ட அக்கினியைக்கண்டு மிகுந்தசுடர்மூர்த்தியான் அப்பகவான் நமஸ்கரித்தார். பிறகு மூன்பகலில் நடத்தவேண்டியகிரியையைச்செய்து யாகங்களில் மகரிஷிகளால் நெய்யைக்கொண்டு ஹோமம்செய்யப்படும் ஹவிர்பாகத்தைப் புஜித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் தனதுவேறோர் திருமேனியையுமங்கு வேதமுறைப்படி நமஸ்கரித்து, நமஸ்கரிக்கத்தகுந்த பிர்மஞானிகளான மகரிஷிகளுக்கு முன்பு சிறக்கமுடியாத அப்பகவான் சநாதனமான அப்பிர்மலோகத்தைச் சுற்றிவலமாக வந்தார். அங்கு சிங்காரிக்கப்பட்ட அநேக யூபஸ்தம்பங்களையும், பரிசுத்தமான ஆஜ்ஜியஹோமத்தாலுண்டாகிய தையை முகர்ந்துகொண்டும், பிர்மரிஷிகளால் ஓதப்பட்ட வேதங்களைக் கேட்டுக்கொண்டும், பூஜிக்கப்படும் தனதுவேறோர் மூர்த்தியைப் பார்த்துக்கொண்டும், சிறிதுநேரம் அங்குமிங்கும் சஞ்சரித்தார். அப்பொழுது ரிஷிகளும் தேவர்களும் மற்றும்சபையிலுள்ளவர்களுமொன்றுசேர்ந்து பவித்திரத்துடன்கூடிய விரல்களையுடைய கைகளால் உயர்த்திவெடுக்கப்பட்ட அர்க்கமென்றபூஜையை வகித்துக்கொண்டு அப்பகவானை எதிர்பார்த்தனர். தேவர்களிடங்களில் யாதொருமான்மியமுளதோ, அவையெல்லாம் ஜனார்த்தனனிடத்தினின்றுமுண்டானது. அவ்விதமே தேவர்களிடத்திலின்று மேதை உண்டாயிற்றே, அதுவும் அம்மதுசூதனனிடமிருந்தே உண்டானது. அக்கினி, சோமன், இவ்விருவர்களுடைய பரிணாமமே இவ்வுலகமென அறிஞர்கள் அறிகின்றனர். அந்தசோமனையும் அக்கினியையும் உலகத்தையும் சநாதனரான விஷ்ணுவாகவே ஞானிகள் அறிகின்றனர். எப்படிபாலினின்று தயிரும், தயிரினின்று நெய்யுமுண்டாகின்றதோ அப்படியே புத்தியால் கடைந்து பார்க்கும்பொழுது இவ்வுலகமானது ஜனார்த்தனனிடத்தினின்று முண்டானதாகத்தெளிவாகும். எவ்விதம் பரமாத்மாவானவர் இந்திரியங்களோடும் பூதங்களோடும் கூடினவராகக் கூறப்படுகின்றாரோ அவ்விதமேவேதங்களோடும் தேவர்களோடும் இவ்வுலகங்களோடும் கூடினவர் ஹரியென்பவர். எவ்வண்ணம் பிராணிகளுக்கு இப்பூவுலகில் பூதங்களுடையவும் இந்திரியங்களுடையவும் சேர்க்கையுண்டாகின்றதோ, அவ்வண்ணமே சுவர்க்கத்திலுள்ள தேவர்களுக்குப் பலம் ஐசுவரியமிவ்விரண்டும் விஷ்ணுவின் அனுக்கிரகத்தாலுண்டாகின்றன. யாகசீலர்களுக்கு யாகத்தின் பயனையளிப்பவரும் பரிசுத்தரும் இறந்தவரும்ஆத்துமாக்களையுடையவரும் உலகவியாபாரத்தை வகித்தவருமான இப்பகவானே மந்திரங்களில் மந்திரம்போல் கூறப்படுகின்றார்.



மகரிஷிகள்:— ஓ! தேவதோத்தமனே! மிகுந்த ஒளியையுடைய பத்மநாபனே தம்முடையவரவு சுகமானதா. இதோ யக்ஞசம்பந்தமான விருந்து. அதைமந்திரமுறைப்படி அங்கீகரித்தருளவேண்டும். யாகத்தால் சுத்திசெய்யப்பட்ட இப்பாத்தியத்திற்குப் பரிசுத்தரான நீரே பாத்திரர். மந்திரங்களில் கூறப்பட்டபடி தாமல்லவோ நல்ல அதிதியாகக்காணப்பட்டவரென மதிக்கப்படுகின்றீர். எங்கும் நிறைந்தபகவானே! தாம் யுத்தத்திற்கு எழுந்தருளியிருக்கும்பொழுது எங்களுடைய கிரியைகளெல்லாம் மேலோடவில்லை. விஷ்ணுசம்பந்தமில்லாமல் யாககாரியமானது விதிக்கப்படவில்லை. தக்ஷிணையோடுகூடிய யக்ஞத்திற்கு உம்முடைய அனுக்கிரகமல்லவோ பயனாகவேண்டும். இப்பொழுது எங்களால் ஆராதிக்கப்படும் தம்முடைய திருமேனியைக் கடாக்ஷித்தருளுகின்றீர். இவ்விதமுறைத்த மகரிஷிகளைநோக்கி அப்பகவான் இவ்விதமே ஆகக்கடவதெனப் பிரதிமரியாதை செய்தருளினர். பிர்மலோகத்திலுள்ள பிதாமகனென பிர்மாவும் அப்பொழுது அடங்காத ஆனந்தத்தை அனுபவித்தார்.

53-ம் அத்தியாயம் முற்றிற்று.

## 54-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— பிறகு ஈசுவரனான அந்தஹரி அம்மஹரிஷிகளால் பூஜிக்கப்பட்டவராய்க்கொண்டு பழைமையாயும் சோதிமயமாயும் பிர்மஸ்வரூபத்தின் நிலைமையாயுமுள்ள நாராயணாசிரமத்தைக் குறித்துப் பிரவேசித்தருளினர். அதன்கிரமமாவது:— அப்பிர்மசபையிலுள்ள எல்லோரையுமழைத்து மகிழ்ந்தமனதுடன் ஆதிதேவனையும் பதுமயோனியாயுமுள்ள பிரமனுக்கு வணங்கித்தனது பெயரால்பெயர்பெற்ற நாராயணாசிரமத்தைப் பிரவேசிப்பதற்காக அதனண்டைபோய் அதனுடன் தனதாயுதங்களையெல்லாம் தன்னிடமிருந்தெடுத்து வைத்துவிட்டுக் கேவலம் ஜலமயமானதாயும், சோதியுருவங்களையுடைய தேவர்குழாங்களாலும் சாசுவதர்களான மஹரிஷிகளின்கூட்டங்களாலும் நிறைந்திருப்பதாயும், பிரளயகாலத்திய மேகங்களோடுகூடியதுபோலும், நக்ஷத்திரநிலைகள்போலும், பெருந்தயிருளால் பூசப்பட்டதுபோலும், சுரர்அசுரர்முதலியவெவர்களாலும் ஆக்கிரமிக்கமுடியாததாயும் விளங்கும் தனதாசிரமத்தைக் கடாக்ஷித்தனர். மேலுமவ்விடத்தில் வாயு, சந்திரன், சூரியனிவர்களுடைய நிலைகள்யாதொன்றுமில்லை. ஆனாலவ்விடம் பற்பநாபனென்ற நாராயணனுடைய

திருமேனியினொளியாலேயே விளங்குகின்றது. அவ்வளவு மகிமையை உடைய அவ்வாசிரமத்தில் பிரவேசிக்கும் சமயத்தில், பிரவேசித்துக்கொண்டே ஜடாபாரத்தையுடையவராயும், ஆயிரந்திருமுடிகளுடனும் அந்த ஜலத்தின்மீது யோகநித்திரையைச் செய்தருளத்தவித்தார். உடனே உலகங்களின் முடிவுகாலத்தையறிந்தவரும் கால்ரூபிணியும் உலகங்களை எல்லாமொடுங்கச் செய்விப்பவளும் காளியென்ற பெயரையுடையவளுமான யோகநித்திரையும் அவ்வெம்பெருமானை அவரது திருவுள்ளம்போல் வந்தடைந்தனள். பிறகு நோன்புடையோர்க்குள் ளுத்தமரான அந்தஹரியானவர் சமுத்திரம்போலும் நீருண்டமேகம்போலும் நீலமாயும், ஒரே சமுத்திரமயமாயுமுள்ள ஒளிமழுங்காத சயனத்தில் படுத்துக்கொண்டனர். அவ்விதந்திருப்பள்ளிகொண்ட மஹாத்மாவாயும் பிரபுவுமான விஷ்ணுவை நோக்கி மறுபடியிவ்வுலகங்களின் படைப்பின்பொருட்டு மஹரிஷிகளுடன்கூடிய தேவர்களெல்லாம் தியானஞ்செய்துகொண்டேயிருந்தனர். அவ்விதம் திருக்கண்வளரும் பெருமானுடைய நாபிமத்தியினின்றும் சூரியனுதித்தாற்போன்ற ஓர் தாமரைப்பூ உதித்தது. அதுவுலகுக்காதியிலுற்பத்தியையும், எல்லாம்மடிந்தமுடிவில் ஜனனமரணத்தையுமுடைய சதுர்முகனுந்தம் பிரமனுக்கு ஆசனமாகியபீடம். மேலுமது ஆயிரமிதழ்களை உடையதும், நல்லநிறமுடையதும், நயமுள்ளதும், சிங்காரமானதுமாம். அம்மஹாமுனியான நாராயணன் பிர்மஸூசனைப்பெருக்கியுடைய திருக்கைகளையுடையவராகத் திருக்கண் வளர்ந்துகொண்டபடியே சகலவுலகங்களுடைய காலக்கணக்கையுமெண்ணிக் கொண்டேயிருக்கின்றார். ஓர் சமயத்தில் திறந்த அவர்வதனகமலக் குகையினின்றுமுண்டாகும் மூச்சுக் காற்றுகளால் வீசிவிலக்கப்பட்ட மேகக்கூட்டங்களெல்லாமாயிரக்கணக்காய் ஆகாயத்திலங்குமிங்குமலைந்து களைத்து விழுந்துபோகின்றன. அவ்விதமே பிராணிக்கூட்டங்களும் மேற்கிளம்பி தடுமாறி கீழேவிழுந்து திண்டாடிப்போகின்றன. ஆதிமுதல் பிர்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டவைகளும் மிகவும் பரிசுத்தமானவைகளும் தன்றுலேயே தானாய்வகுக்கப்பட்டவைகளுமானப் பிராணிகளெல்லாம் படைப்பின்முடிவாகிய காலகருமத்தால் அந்தந்தகாரண கதியையடைந்தன. அக்கதியை அவைகளைப்படைத்தபிர்மாவுமறியான். அழிவற்ற பிர்மஞானிகளான பிர்மரிஷிகளுமறியார். அதுமுழுமையும் ஸ்ரீவிஷ்ணுவினுடைய நித்திரைவடிவமான யோகத்தைத் தமோகுணத்தால் மூடப்பட்டதாய்க்கொண்டு பிரவேசிக்கின்றன. அவ்விதமுள்ள வுலககதியைப் பிரமனைமுன்னிட்ட அப்



பிர்மரிஷிகளு மொருவருமறியவில்லை. மேலும் ஓரிடத்திலுறங்குகின்றவனும் ஓரிடத்தில் வீற்றிருப்பவனுமான வொருவரையேபற்றி எவன் தூங்குகின்றானென்றும் விழித்திருக்கின்றானென்றும் நிர்ணயித்துக்கூறவல்லவன், எவன் உயர்ந்த யோகங்களையுடையவன், எவன் சிறந்தவொளியையுடையவன், எவன் ஒளியில்லாத கருத்தவஸ்துக்களைக் காட்டிலும் கருத்தவனென்று தேவர்கள்கூட அப்பிராகிருதங்களான யுக்திகளாலின்னமுமறியக்கூடவில்லை. மேலுமிவரைப்பற்றி பிர்மஸ்வரூபத்தை விளக்கும் வாக்கியங்களாலாவது, எல்லாயிலக்கணங்களும் பொருந்திய பிர்மாணங்களாலாவது, அவதாரங்களாலாவது, திருவிளையாடல்களாலாவது இன்னவிதமென்று கண்டுபிடிக்கமுடியவில்லை. எவர்கள் அத்திருமாலைப்பற்றிய சிலகாதைகளைக்கொண்டு சிலசரித்திரத்தை யறிகின்றார்களோ, அவர்களே பழமையானரிஷிகளெனப் புராணங்களில் கூறப்படுகின்றனர். மேலுமிவருடைய சரித்திரமானது தேவர்களிடங்களிலும் பழமையாகப் பேசிக்கொள்ளப்படுகின்றது. எதனையோ பழமையானதிற்கெல்லாமாதியான சனாதன்மையை விளக்கும் பழையசரித்திரம். தேவதேவனாகிய இத்திருமாலுடையதாகையாலிதற்கும் முன்பட்டது யாதொன்றுமில்லை. ஹரியினுடைய அச்சரித்திரங்களாலேயே சுருதிகளும் மற்றுமுள்ள புராணேதிகாசாதிகளும் நிறைந்திருக்கின்றன. உலகங்களாற் றொழப்படுமத்தேவேசன் உலகங்களுண்டாகும் பொழுதுண்டாகுகின்றார். மேலுமம்மதுசூதனன் அசுரர்களுடைய விநாசத்திற்காக விழித்துக்கொள்ளுகின்றார். இவர்திருக்கண் வளருங்காலையில் தேவர்கள்கூட அழிவற்ற இவரைக்காண்பதரிது. ஆகையால் கோடையின்முடிவிலிவர் உறங்குவதும் மாரியின்முடிவில் விழித்துக்கொள்ளுவதும் சயனமென்றும் உத்தானமென்றும் மாத்திரங்கூறத்திரமுள்ளதல்லாது, உள்ளபடியே யறிவதும் கூறுவதுமியலாதது. அம்மதுசூதனனே நான்குவேதங்களும் அவைகளிற் கூறப்படும் வேள்விகளும் அவைகளினங்கங்களும், அந்தயாகங்களாலடையப்படும் பயனும் ஸ்ரீபுருஷோத்தமனுமாம். அவ்வெம்பெருமானுறங்கியருளும்பொழுது மந்திரங்களாற் பரிசுத்தஞ்செய்யப்பட்ட கிரதுமுதலியகருமங்கள் யாதொன்றும்நடக்கமாட்டா. பிறகுசரத்காலத்திற்றுடங்கச் செய்விக்கும் இம்மதுசூதனன் உணர்ந்தருள்கின்றார். இவ்விதமுள்ள விஷ்ணுகாரியமானவருஷசக்கிரத்தை இதேவிதமாக அப்பகவானுறங்கியபொழுது மேகராஜனாகியபுரந்திரன் சுழற்றிக்கொண்டேயிருக்கின்றான். நெருங்கியமாயையென யாதொன்றுளதோ அதுவே நித்திரையென வுலகத்தில் கூறப்படுகின்றது. அந்நித்திரையானது தற்செயலாய்

கோரமானவடிவத்துடன் கூடியதாய் மஹீபதிகளுக்கெல்லா மோர்கான ராத்திரியாகின்றது. அதனுடையவுடல் தமோகுணத்தின்வழியாக வெளிப்பட்டு நித்திரையென்றபெயருடன் திவசத்தைநாசஞ்செய்கின்றது. இவ்வுலகத்திலுள்ள ஸகலப்பிராணிகளுடையவும் பாதியாயுட்காலங்களைக் கபளீகரிக்கின்றதும் மிகவுங்கொடுமையானதுமாயிருக்கின்றது. இதனையொருவனே வேசிக்கப்பட்டா லடிக்கடி கொட்டாவிவிடுவதுடன் அதினுடைய வேகத்தைப் பொறுக்கமாட்டாமல் கடலில்முழுகித் தத்தளிப்பவன்போலாகின்றான். இவ்வுறக்கமென்றதிப்புவியில் அன்னத்தினின்றுவது, களைப்பினின்றுவதுண்டாகின்றது. மேலுமிது உலகத்திலுள்ள எல்லோர்க்குமுண்டாகக்கூடியது. தூக்கத்தின் முடிவிற்றுகைமேயிது பிராணிகளுக்கு பெரும்பாலும் ஈசித்துவிடுகின்றது. மரணகாலம்வந்தபொழுது அப்பிராணிகளுடைய பிராணன்களை அடியோடுநாசஞ்செய்கின்றது. தேவர்களுக்குள் நாராயணனையொழிய மற்றெவருமிதை தரிக்கமுடியாதவர். உலகத்தையெல்லாம் சங்கரிப்பவர்க்கு இந்தயோகமாயையான நித்திரையென்பாள் தோழியாயிருந்து ஸகாயஞ்செய்கின்றாள். விஷ்ணுவின் சரீரத்தினின்றுற் பத்தியானவளிவள். அப்படிப்பட்டவிவள் கமலம்போன்ற கண்ணையுடையவளாய்க்கொண்டு, சங்காரகாலத்தில் நாராயணனுடைய முகத்தில் விளங்குகின்றாள். இம்மாதிரியாக இந்தயோகமாயையாகிய உலகமோகினியானவள் இவ்வுலகங்களையெல்லாம் அவைகளுடைய வினாசத்திற்காகத் தமோகுணத்தின் வழியாகின்ற கருந்தமார்க்கத்தால் குறுகிய காலத்திற்குள்ளாகவே விழுங்கிவிடுகின்றாள். கணவனால் தனது தன்மார்க்கமுள்ள மனைவிபோல் நாராயணனால் வகிக்கவும் அநுபவிக்கவும் தகுந்தவளாகின்றாள். முன்கூறப்பட்டபடி யெங்கும் வியாபியும் விஷ்ணுவாயுமழிவற்றவராயுமுள்ள அந்நாராயணன், அந்நாராயணாச்சிரமத்தில் யோகநித்திரையால் மறைக்கப்பட்டவராய் உலகத்தை மோஹித்துக்கொண்டு கண்வளர்கின்றார். அவ்விதம் அநேகம் வருஷங்கள்வரையில் துயிலும் மஹாத்மாவான அவருக்குச் சிறந்தகிருதயுகமும் திரேதாயுகமும் சென்றுவிட்டன. பிறகு துவாபரயுகாந்தத்தில் மிகவும் துன்பப்பட்ட வுலகங்களை நினைத்துப்பார்த்து பிறகு மஹரிஷிகளால் துதிக்கப்பட்ட அச்சோதிவடிவுடையோன் விழித்தருளினன்.

ரிஷிகள்:— உடன்பிறந்த நித்திரையென்பதை அணிந்துகொண்டமாலையைப்போல் விட்டுவிடுவீராக. இதோ பிரமனுடன் கூடிய இந்தேவர்களெல்லாம் தமது தரிசனத்தை யெதிர்பார்க்கின்றனர். ஓ! இருடீகே



சனே! பிரமக்ஞானிகளும் பிரமத்தைத்துதிப்பவர்களும் கூர்மையான நோன்புகளையுடையவர்களுமான இந்தரிஷிகள் தம்மைவாழ்த்துகின்றனர். ஓ! சகலப்பிராணிகளாலும் பாவனைசெய்யப்பட்ட விஷ்ணுவே! தனக்குச் சரீரமானபிருதுவி, ஆகாயம், தீ, காற்று, நீராகியபூதங்களுடையமங்களமானவாக்குகளைக்கேட்பீராக. ஓ! தேவனே! அநேகம் ரிஷிகளுடன் கூடிய இந்தஸப்தரிஷிகள் தேவயோக்கியமாயும் பாடத்தக்கதாயுமுள்ள துதிகளால் விரைந்து துதிக்கின்றனர். ஆகையால் சீக்கிரமாக வெழுந்தருளவேண்டும். ஓ! தாமரைக்கண்ணனே! ஓ! தாமரைநாபனே! ஓ! ஒளிமிகுந்தவனே! அதற்கோர் காரணமுண்டாயிருக்கிறது. தேவர்களுடைய காரிய கௌரவத்தினாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காகவும், ஓ! கேசவனே! நித்திரையை ஜயித்தருளவேண்டும். ஓ! ஜனார்த்தனனே! தாமுறங்கினாலிவ்வுலகமெல்லா முறங்கிப்போகின்றது. தாம் விழித்தால் உலகமும் விழித்துக்கொள்ளுகின்றது. ஆகையால் ஓ! தேவதேவனே! ஓ! உலகநாயகனே! தேவர்களைக்காப்பாற்றியருளவேண்டும். ஓ! கோவிந்தனே! உலகமெல்லாம் நஷ்டமான பின்னு மெப்படிக் கண்வளர்கின்றீர். தேவர்களோடும் அசுரர்களோடும் மனிதர்களோடுங்கூடிய இவ்வுலகமுனது அழிந்து போலாயிற்று. கண்களால் கடாக்ஷித்தருளவேண்டும்.

வைசம்பாயனர்:— பிறகு அந்த நாராயணன் எல்லாஜலத்தையுமொடுக்கிக்கொண்டும் பேரிருளையெல்லாமகற்றிக்கொண்டும் உயர்ந்ததும் சிறந்ததுமான காந்தியால் விளங்கிக்கொண்டும் அந்தநித்திரையினின்று முணர்ந்தெழுந்தருளி தனதுகண்களுக்குமுன்பு வந்திருக்கும் சதுர்முகனோடு கூடியவர்களாயும், தம்மையெதிர்பார்ப்பவர்களாயும், கலங்கியவர்களாயும், உலகத்திற்காக ஒன்றுசேர்ந்தவர்களாயுமுள்ள தேவர்களையெல்லாம் கடாக்ஷித்தருளினார். அதனுடன் அந்தஹரியாகியதேவனானவர் நித்திரையால் இளைப்பாறப்பட்ட கண்களையுடையவராய்க்கொண்டு அத்தேவர்களைநோக்கி உண்மையைவிளக்கும பொருளையுடையதாயும், தருமத்தைக் காரணமாகப்பற்றிய செல்வத்தையுடையதாயுமுள்ள திருவாக்கினால் வருமாறு அருளிச்செய்கின்றார்.

ஸ்ரீபகவான்:— ஓ! தேவர்களே! எங்கிருந்துங்களுக்கு யுத்தமுண்டாயிருக்கின்றது. எதினின்று பயம் வந்திருக்கின்றது. எவனுக்கு எவனாலென்ன ஆகவேண்டியது. என்னிடத்திலென்ன இல்லாதது. உலகத்தில் எவ்வசுரனிடமிருந்து ஜனங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கத்தக்க தானவ எவ்வித க்ஷேமக்குறைவுண்டாயிருக்கிறது. அதை சீக்கிரமாக நான

றிய விரும்புகின்றேன். இதோ நான் பிரம்மஞானிகளுக்குநடுவில் சிறந்த ஆசனத்தைவிட்டு உங்களுடைய க்ஷேமத்திற்காகச் சன்னத்தனாயிருக்கின்றேன். உங்களுக்கென்ன செய்யவேண்டியது.

54-ம் அத்தியாயம்முற்றிற்று.

---

## 55 -வது அத்தியாயம்.

வைசம்பாயனர்: — உலகங்களுக்குப் பிதாமஹனான பிரம்மதேவனானவர் விஷ்ணுவினால் சொல்லப்பட்ட அவ்வார்த்தையைக்கேட்டு, எல்லாசுவர்க்கவாசிகளுக்குமறிதற்கும் மேன்மையுமுள்ள வோர்வார்த்தை கூறுகின்றார். ஓ! அசுராந்தகனான விஷ்ணுவே! யுத்தம்தோறும் மாறுமில்லாதபோன்ற தாம் எங்களுக்கு அபயப்பிரதானம் செய்கின்றவராயிருக்கையில் எந்த தேவர்களுக்கும் சிறிதேனும் பயமென்பதேயில்லை. மேலும் தேவேந்திரனான சக்கிரனென்பவனும் வைரிகளைவேரறுக்கும்தாமும் சன்னத்தர்களாயிருக்கையில் தருமநெறியாலேயேதவறாது நடந்துவரும் மனிதர்களுக்கும் பயமென்பது எங்கிருந்துண்டாகும். உண்மையான தருமத்தில் நிலைநிற்பவரும் மனதில்கவலையற்றவருமான மனிதர்களை மிருத்யுவானவன் அகாலத்தில் கண்ணெடுத்தும் பார்க்கமுடியாதவன். மானவர்களுக்குப் பதியான அரசர்களுமொருவருக்கொருவரிணங்கி ஜனங்களிடமிருந்து ஆகாயத்தில் ஆறிலொருபங்கைப் பெற்றுக்கொண்டுவருவதால் கலகமென்பதே கிடையாது. மேலும் அரசர்களெல்லாம் ஜனங்களுடைய ஹிதத்தையே நாடி அவர்கள்கொடுக்கும் வரிகளால் கருவமடையாமல் வரிப்பணங்களைக் கொண்டு வேண்டிய ஒத்தாசைகளைச்செய்து மிச்சமுள்ளபணங்களால் பொக்கிஷங்களை நிறைக்கின்றார்கள். ஜனங்கள் நிறைந்த தேசங்களையெல்லாம் மிகவும்பொருமையோடுகூட உக்கிரமான தண்டனைகளைச்செய்யாமலும் நான்கு ஜாதிகளையும் சுகசுகமாய்ப்பரிபாலிக்கின்றார்கள். பிரஜைகளுக்குப் பயத்தைக்காட்டாமலும், மந்திரிகளால் மிகவும் வெகுமானிக்கப்பட்டவர்களாகவும், இரதம் முதலிய நான்குவகைச் சைன்னியங்களாலிரக்ஷிக்கப்பட்டவர்களாகவும், ஆறுவிதமான ராஜகுணங்களை நாடியிருக்கின்றனர். சகலவரசர்களும் தனுர்வேதத்திலும், வேதத்திலும், நிஷ்டையையுடையவர்களாக அந்தந்தகாலங்களில் பெருத்ததக்ஷிணைகளுடன்கூடிய யாகங்களைச்செய்கின்றனர். பிரமசரியமென்றநியமத்தால்திரைகளுடன்



வேதங்களையோதி மஹரிஷிகளையும், பரிசுத்தமான பலவித சிராத்தங்களால் பிதாமஹர்களையும் திருப்திசெய்விக்கின்றனர் வைதிகம், லௌகிகம் தர்மசாஸ்திரோக்தமென்ற மூன்றுவிதமான எந்தகாரியமும் இப்பொழுதுபூமியிலுள்ள அரசர்களுக்குள் அறியாதவரேயில்லை. மேலும் அவர்கள் உயர்ந்ததும் தாழ்ந்ததுமான இரண்டுதத்துவங்களையறிந்து மகரிஷிகளுக்குநிகரான காந்தியையுடையவர்களாய் விளங்குகின்றனர். இப்பொழுதுள்ள அவ்வரசர்களெல்லாமித்துவாபரயுகத்தை மறுபடியும் கிருதயுகமாகச் செய்யப்பிரயத்தினம் செய்கின்றனர். அவர்களுடைய பிராபவத்தாலேயேவாசவனும் தகுந்தகாலங்களில் மழையைப்பொழிகின்றனன். வாயுதேவனும் உண்மையாக நாலாதிசைகளிலும் சுகமாகப்புழுதியில்லாது வீசுகின்றான். பூமியும் யாதொருபூகம்பம்முதலிய உற்பாதங்களில்லாது விளங்குகின்றது. ஆகாயத்தில் நவக்கிரகங்களும், நக்ஷத்திரங்களும் அதன்வழியே சுபமாகச் சரிவரசஞ்சரிக்கின்றன. முக்கிய நக்ஷத்திரங்களுடன்கூடிய சந்திரனும் யோகந்தவராது இனிமையாக ஸஞ்சரிக்கின்றான். பலதவிமானவலமாகவே யிரண்டு அயனங்களிலும் சூரியன்நடக்கின்றான். பலதவிமான ஹவ்யகந்தங்களால் திருப்தியடையப்பட்ட அக்கினிதேவனும் நல்லமணமுடையவனாயிருக்கின்றான். இவ்விதம்யாகங்களெல்லாம் மிகவும்நன்றாய் விருத்தியாய்க்கொண்டும், தேவர்களெல்லாம் திருப்தியடைந்துகொண்டுமிருப்பதால் பூமிமுழுமையையுமடைந்திருக்கும் ஜனங்களெல்லோர்க்கும் காலனிடமிருந்து பயமென்பதேது. ஒங்கிவிளங்கும் கீர்த்தியையுடையவர்களும், ஒருவர்க்கொருவரிணங்கியிருப்பவரும் பலிஷ்டர்களுமான அரசர்களும், வேந்தர்களுடைய பெருத்தசைனியங்களால் பூதலம் மிகவும் துன்பப்படுகின்றது. அப்படிப்பட்டயிப்பூமியானவள் நராதிபர்களால் ஹிம்ஸையையடைந்து தத்தளித்த கப்பலைப்போல் தம்மைச்சரணமாக வடைந்திருக்கின்றாள். யுகங்களின்முடிவுகாலத்தில் தோன்றுவதுபோல மலைகளெல்லாமசைந்து நடுங்க அதனால்பூமிக்குண்டாகிய கட்டுவிடவும், அவ்விதம் கட்டுவிட்டதால் நாலாபுறமும் வெள்ளம்பெருகியோடி மிகுந்ததுன்பத்தையடைந்த இப்பூமியானவள் அடிக்கடிவெகுசிரமத்துடன் பாரத்தைசகித்துவருகின்றனள். ஏனெனில் க்ஷத்திரியர்களின்தேகங்களாலும், பராக்கிரமத்தாலும், பலத்தாலும், ஜனங்களுடையவிஸ்தீரணமான தேசங்களாலும் இப்பூமியானவள் பாரத்தைசகிக்கமாட்டாமல் சிரமப்படுகின்றவள்போல் காண்கின்றாள். மேலும் ஒவ்வொருபட்டணங்களிலுமொவ்வோர் அரசர்கள் கோடிக்கணக்கான சைன்னியங்களோடு வசித்துவருவதாலும் தேச

ங்கள்தோறும் அனேகமாயிரம் கிராமங்கள்பெருகியிருப்பதாலும், எண்ணிறைந்த வரசர்களின் கூட்டங்களாலும், அவர்களுடைய பலிஷ்டர்களான சேனாவீரர்களின் பலங்களாலும், இப்பூமியானவள் சிறிதளவேனும் இடைவெளியில்லாதவளாய் நிறைந்திருக்கின்றாள். அப்படிப்பட்ட இப்பூமியானவள் காலத்தையாதொரு கெடுதலுமில்லாது செய்துவிட்டு தான் அங்குமிங்குமசையக் கூடமாட்டாமல் எனக்குமுன் என்னுடைய ஆலயத்தைவந்தடைந்தாள். ஓ! விஷ்ணுவே! இவளுக்கு நீதாமே உத்தமமான இரக்ஷகராகவேண்டும். கர்மங்களைச் செய்யத்தகுந்தஸ்தலமாகிய மனிதர் வசிக்குமிப்பூமிதேவியானவள் மிகவும்நொந்தவளாயினள். எவ்விதம் க்ஷேமத்தையடைவாளோ அக்காரியம் செய்யத்தக்கது. உலகத்திலிவள் நிலைத்திருப்பவளன்றோ. ஓ! மதுசூதனா! இவளுடையபீடையால் பெருத்த தோஷமுண்டாகுமல்லவோ. சகலவுலகங்களுக்கும் கிரியையின்மையும் அதனால் உலகம் கெடவுமேதுவாகும். அரசர்களின் திரள்களால் நிச்சயமாயிவள் சிரமப்படுகின்றாள். ஆகையால் இவள் தன்னோடு பிரியாத பொறுமையென்பதைவிட்டு அசலையென்ற பெயரைமாற்றி சலையெனக் கூறும்படியாயினள். இவைகளெல்லாம் இப்பூமியினிடமிருந்து நாங்கள் கேட்டறிந்தோம். அவைகளைச் சர்வக்ஞரானதாமே அறிந்தேயிருக்கின்றீர். அதுபற்றி பூமியின்பாரத்தை யிறக்குவதற்காகத் தம்மோடு ஆலோசனை செய்யவிரும்புகின்றோம். தேசங்களை விருத்திசெய்யும் அரசர்கள் எல்லோரும் நல்வழியிலேயே நிலைத்திருக்கின்றனர். மனிதருக்குள்ளடங்கிய க்ஷத்திரியர் முதலிய மூன்றுவருணங்களும் பிராம்மணரையனுசரித்து நடக்கின்றன. வாக்குகளெல்லாமுண்மையையும், வருணங்களெல்லாம் தருமத்தையும், அந்தணர்களெல்லாம் வேதங்களையும், ஜனங்களெல்லாம் விப்பிரர்களையும்தழுவிநிற்கின்றார்கள். இவ்விதம் பூவுலகத்தில் சகலரும் தருமத்தைக் கருதிநிற்பதால், எவ்விதம் தருமத்திற்கு யாதொருதீங்கும் உண்டாகாதோ, அவ்விதம் சிறந்தவாலோசனையானது நம்மால் செய்யத்தக்கது. நல்லோர்களுக்கு உதவியானவளிவள் அல்லாது வேறுபட்டவள் அல்ல. இவளுக்கும் தர்மமே நல்லுதவியாயிருக்கின்றது. பூமியின் பாரத்தைத்தீர்க்கவோ அரசர்களைக் கொல்லவேண்டியதவசியமாயிருக்கின்றது. ஆகையால் ஓ! மிகுந்த பாக்கியசாலியான பிரபுவே! ஆலோசனைக்காக எங்களோடெழுந்தருள்க. நாங்களெல்லோரும் பூமிதேவியாரை முன்னிட்டுக்கொண்டு மஹாமேருவின் கொடிமுடிக்குச் செல்லுகின்றோமென மொழிந்து பிறகு உலகத்திற்குப்பிதாமஹனும் விசித்தபுத்தியையுடைய



வரும் சிறந்தவொளியையுடையவருமான பிர்மாவும் பிருதுவியுடன் வாய் மூடிக்கொண்டனர்.

55-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 56-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— அப்பிர்மாவின் வார்த்தைகளைக்கேட்ட மழைகாலத்திய மேகம்போன்ற வொளியையுடைய ஸ்ரீமந்நாராயணனும் அப்படியே செய்வோமெனச் சம்மதித்து அத்தேவர்கூட்டங்களுடன் மழைகாலத்திய கருத்தமேகங்களோடுகூடிய பருவதம்போன்ற திருமேனியுடன் புறப்பட்டருளினர். அப்பொழுது முத்துமணிகளாலலங்கரிக்கப்பட்டதும் சந்திரனோடுகூடிய மேகம்போலுமுள்ள ஜடாமண்டலத்தையும், கருத்ததிருமேனியையும் வகித்துக்கொண்டும், மயிர்க்கூச்சலோடுகூடிய விசாலமான திருமார்புடனும், ஸ்ரீவத்ஸத்தால்விளங்கும் ஸ்தனமத்திமதேசத் [illegible] துக்கொண்டும், சகலவுலகங்களுக்கும் குருவாகிய அழிவற்ற அச்சுதனாகிய யவர் சந்தியாகாலத்திய செம்மானத்தோடுகூடிய நீலமான வாகாயத்தை சம்மதித்த அஸ்தமனகிரிபோல் விளங்கினார். இவ்விதம் கருடனோடு எல்லோர்க்கும் முன்னெழுந்தருளும் ஸ்ரீஹரியைச் சகலதேவர்களும் அவரிட்டமே நாட்டியகண்களுடன் பின்சென்றனர். இவ்விதம் சிறிதுநேரத்திற்குள்ளாவே ரத்தினபர்வதத்தை போய்ச்சேர்ந்து அங்குவிளங்கும் இச்சித்தவுருவத்தை யெடுக்கவல்லமைபொருந்திய தேவசபையை எல்லோரும் தம்தங்கள் கண்களாற்கண்டனர். அச்சபையானது மேருகிரியின் மேற்பாகத்திலுள்ளதும், எப்பொழுதும் சூரியகாந்திபுடைகூடியதும், கனகமயமான தூண்களாலிசைக்கப்பட்டதும், வச்சிரகற்களாற்பதிக்கப்பட்ட பெரியவாயிற்படிகளையுடையதும், மனதாலேயேநிர்மாணம்செய்யப்பட்ட பதுமைகளால் நிறைந்ததும், அனேகம் விமானங்களை மாலைபோலுடையதும், நவரத்தினமயங்களான பலகணிகளையுடையதும், நினைத்தவிடம் செல்லத்தகுந்ததும், நானாவிதங்களான ரத்தினங்களிழைத்ததும், எல்லாப்பருவங்களுடைய செடிகொடிபூபழங்களால் நிறைந்ததும், தேவர்களுடையமாயையே வந்துவகித்துக்கொண்டிருப்பதுபோலுள்ளதும், விசுவகர்மாவால் படைக்கப்பட்டதுமாம். அப்படிப்பட்ட மங்களகரமான வே

சபையைச் சகலதேவர்களும் மிகுந்த அக்களிப்புடன் முறைதவறாது அவரவர்க்குரிய ஆசனபீடங்களிலும், சிலர் விமானங்களிலுமாகத் தேவராஜனது ஆக்ஞைப்பிரகாரம் சிறிதளவேனும் தவறாது உட்கார்ந்துகொண்டனர். அவ்விதமே சிலர் பத்ராஸனங்களிலும், சிலர் பீடங்களிலும், சிலர் விரித்த ரத்தினகம்பளங்களிலும், சிலர் தர்ப்பாசனங்களிலும், வீற்றிருந்தனர். அதனுடன் வாயுதேவனானவன் பிர்மாவினால் உத்திரவுகொடுக்கப்பட்டவனாய் சபையிலுள்ளோர்களையெல்லாம் கூசலிடாமலிருக்கும்படி சைகைமாத்தி யாதொரு ஒலியுமில்லாமற் செய்தனன். இவ்விதம் சிறிதேனும் யாதொரு சத்தமுமின்றி அடங்கிய பிறகு அத்தேவர்களுடைய சபையில் மிகுந்தகருணையுடன் கூடிய பூமிதேவியானவள் மிகுந்தகஷ்டத்தால் துன்பம் சகிக்கமாட்டாமல் வருமாறு ஓர் வார்த்தை பேசத்தொடங்கினாள்.

பூமிதேவியார்:— ஓ! தேவனே! தம்மால் நான் தரிக்கத்தகுந்தவள். ஆதலால் தம்மாலிவ்வுலகம் தரிக்கப்படுகின்றது. மேலும் தாமே பூதங்களையும், மூவுலகங்களையும் வகிக்கின்றீர். இவ்வியாவையுமெல்லாம் யாதொரு பராக்கிரமத்தாலும் பலத்தாலும் தம்மால் வகிக்கப்படுகின்றனவோ, அப்படிப்பட்ட [illegible] எல்லாம் மிகவும் பிரயத்தனப்பட்டுக்கொண்டு தரிக்கப்படுகின்றன. தம்மால் தரிக்கப்பட்டதை நான் வகிக்கின்றேனேயொழிய தம்மால் தரிக்கப்படாததை நான் வகிக்கவில்லை. மேலும் தம்மால் தரிக்கப்படாத யாதொரு பூதமுமில்லவேயில்லை. ஓ! தேவனான நாராயணனே! புகழ்ந்தாமும் என்னுடைய சுமையிறக்கலைத்தாமே உலகத்தினிடத்திற்காகச் செய்வித்தருள்கின்றீர். தம்முடைய பராக்கிரமத்தாலேயே ஆக்கிரமிக்கப்பட்டவளாயினும் இப்பொழுது ரஸாதலத்தை யடைந்திருக்குமென்னைக் காப்பாற்றும். ஓ! தேவோத்தமனே! தம்மையே சரணம் புகுந்திருக்கின்றேன். இதற்குமுன்பும் கொடியவர்களான அசுரர்களாலும் அரக்கர்களாலெப்பொழுதெப்பொழுது பீடிக்கப்படுகின்றேனோ அப்பொழுதெல்லாம் அநாதனான தம்மையே சரணமடைந்துகொண்டிருப்பது வழக்கம். எதுவரையில் தம்மை நான் சரணம் புகவில்லையோ, அதுவரையில் எனக்கும் பயமென்பது. [illegible] பத்மத்திற் பிறந்த முதல்வரான பிர்மாவால் படைக்கப்பட்டேன். உடனே பெருங்கடலிற் [illegible] கொண்டிருக்கும் பிரம்மஹாத்மாவான விஷ்ணுவினுடைய செவிகளினின்றுண்டானவர்களாயும், அறிவற்றவர்களுமான பிரசண்டசுரர்கள் புறப்பட்டு அவ்விதம் உற்பத்தியாக்கப்பட்ட என்னையறிந்துகொண்டு மகிழும்



சவரும்போல என்னண்டைவந்து நின்றார்கள். அப்பொழுது வாயுவென்பது பிர்மாவாலேவப்பட்டதாய் அவர்களுக்குள் நுழைந்தது. அதன்பிறகு அவர்களாகாயத்தையெல்லாமடைத்துக்கொண்டு பெருத்தனர். பிறகு பிராணனுடன் கூடிய அவ்விருவரையும் பிர்மாமெதுவாகக் கையாற்றடவும்பொழுது ஒருவன் கடினமாகவும் மற்றொருவன் மெதுவாகவுமிருந்தான். ஆகையாலச்சலிலயோநியான பிரபு மெதுவாயிருந்தவனுக்கு மதுவெனவும், கடினமாயிருந்தவனுக்குக் கைடபனெனவும் பெயரிட்டனர். அப்பெயர்களுடனவ்விரு அசுரர்களும் மிகக்கொழுப்படைந்து அங்குமிங்கும் சஞ்சரிக்கத்தொடங்கினர். எங்குமோரே கடல்மயமாயிருப்பதால் அவர்கள் கொழுப்புக்குத்தக்கபடி எதிர்த்துச்சண்டையிட யாரையுமவர்கள் பார்க்காது பிர்மாவோடேயே சண்டைக்குவர, அப்படிப்பட்டவர்களைக்கண்டு பிர்மாவும் மறைந்துகொண்டனர். மேலும் அந்நான்முகனார் பத்மநாபனுடைய நடுநாபியினின்றுமுண்டாய் வளர்ந்திருக்கும் தாமரைப்பூவினுள் இரகசியமாய் வசிக்கவுமிச்சித்தனர். அந்த ஏகார்ணவத்தின் நடுவில் வசிக்கும் நாராயணனும் பிதாமஹனும் வெகுகாலங்கள்வரையில் சலிக்கவில்லை. அம்மதுகைடபர்களிருவர்களுமங்குமிங்கு மலைந்துபார்த்து எங்கும் யாதொருவரையும் காணாமல் மறுபடியும் வெகுகாலங்கழித்து சதுர்முகனுரெவ்விடமுள்ளாரோ அந்த நாராயணனிடமே வந்து சேர்ந்தனர். அப்பொழுதும் பெருத்தகாயமும் மிகுந்த கோரர்களுமான அவ்வசுரர்களைக்கண்டு நடுநடுங்கித் தாமரையிற்பதுங்க அதையறியாத அவ்விருவரும் நாராயணனுடைய தாமரைத்தண்டைப் பிடித்தசைக்க உடனே பெரு[illegible] முன்னாபுருஷனானவன் சயனத்தைவிட்டுத் திடீரென வெழுந்திருந்தார். அதனுடன் அவ்விரு அசுரர்களுக்கும் நாராயணனுக்கும் கொடூரமான சண்டை உண்டாயிற்று. மூவுலகமுமோரே ஜலமயமாயிருந்தபொழுது அனேகமாயிரம் வருஷங்கள்வரையில் அதிககோரமான யுத்தமுண்டாக, அவ்வளவுகாலமாகியும் அவ்விரு அசுரர்களும் சிறிதேனுஞ்சலிக்கவேயில்லை. இவ்விதம் வெகுகாலம் கழிந்தபின்பு யுத்தத்தில் வெறியடைந்த அவ்விருவர்களும் களித்தமனதுடன் ஹரியான நாராயணதேவனை நோக்கிக் கூறியதாவது. ஏ! தேவோத்தமனே! உன்னுடைய யுத்தத்தால் திருப்தியடைந்தோம் எங்களுக்குத்தகுந்த மிருத்யுதானே. எங்களை ஜலத்தால் நனைக்கப்படாத பூதலத்தில் எங்களை ஜயிக்கவேண்டும். நாங்களிருவருமுனக்குப் புத்திரத்தன்மையையடைய விரும்புகின்றோமென்றனர். பிறகு அதனுடன் அந்த ஹரியானவர் தமது கைகளாலேயே பிடித்தெறிந்து [illegible]

மலே வெகுவாகப்போர்புரிந்தனர். அதன்பிறகு அவ்விருவருமவர் கிருமேனியிலேயே மரணத்தையடைந்தனர். அவ்விதமிறந்த அவ்விருவர்களுடையவும் மாம்சம்முதலியவற்றால் அச்சாகரஜலமெல்லாம் குழம்பிப்போயிற்று. அதுவன்றி வட்டத்தில் கடற்றிரைகளாற் கடையப்பட்டு அவர்கள் மேதம் என்ற மாம்சமேதஸ்ஸையும் வெளிக்கிளப்பி நிறப்பிப்பரப்பிவிட்டது. ஆகையால் கடல்நீரும் மேதமுமொன்றாய் கலந்துபோயிற்று. பிறகு பகவனான நாராயணன் அனேகம்பிராணிகளைப் படைத்தருளினர். அவர் மேதத்தாற்றடித்த ஜலபாகமே பூமியாகிய கடினபாகமாகையால் பிறகும் அப்பூமிக்கு மேதினியென்ற பெயரிடப்பட்டது. இவ்விதம் பற்பனுபனுடைய பிரபாவத்தாலேயே முதலிலும் பூமியாகிய நான் ஸ்தாபிக்கப்பட்டேன். பிறகும் மார்க்கண்டேயமுனிவர் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது வராகாவதாரமெடுத்துத் தன்னுடைய பற்களின் நுனியால் கடலில் முழுகிய நான் உத்தாரணம் செய்யப்பட்டேன். ஓ! தேவர்களே! நீங்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அசுரர்களாலாக்கிரமிக்கப்பட்டபொழுது பலியினிடமிருந்து என்னைத்தனது மூன்றடிவிக்கிரமங்களால் திருப்பிக்கொண்டுவந்து நிலைநாட்டப்பட்டேனல்லவா. இப்பொழுதும் வெகுவாகத்துன்பப்பட்டு சகிக்கமுடியாமல் காப்பாற்றயாருமில்லாதவள்போல இந்தகதாதரனையே சரணமடைந்திருக்கின்றேன். பொன்னிற்கு வன்னிகுரு, கிரணங்களுக்குச் சூரியன்குரு, நட்சத்திரங்களுக்குச் சோமன்குரு, எனக்கு நாராயணனேகுரு. இவ்வுலகங்களை ஒருவனான [illegible] யாதொன்றுமிலதா, அவ்வதமெனக்குத் தாங்கும்படியாக வல்லமைகொடுத்தருளல் கதாதரனே. [illegible] வேண்டுமென்ற எண்ணங்கொண்ட பரசுராமனால் கோபத்தை முன்னிட்டு இருபத்தியொருதரம் க்ஷத்திரியர்களுடன் யுத்தஞ்செய்யப்பட்டது. அதன்முடிவில்பகவானும் தன்தகப்பனாருடைய ஸ்ராத்தத்திற்காக யாகவேதியில் ஏற்றப்பட்டயான் ராஜாக்களின் ரத்தத்தால் தர்ப்பணஞ்செய்யப்பட்டேன். பிறகு காசியபமஹரிஷிக்குத் தானமாகவும் கொடுக்கப்பட்டேன். க்ஷத்திரியர்களின் மாம்சம் மேதம் இரத்தம் முதலியவைகளால் நிறையப்பட்ட நான் மாதவிடாய்கூடிய ஓர் யுவதியான பெண்போல காசியபரிடம் போய்ச்சேர்ந்தேன். அப்பொழுது என்னைநோக்கி அக்காசியபர் ஏ! பூமியே! என்ன தலையை வணங்கிக்கொண்டிருக்கின்றாய். வீரர்களுடைய மனைவியார்செய்யும் நோன்பைத்தரித்திருக்கும் ஏன் வியசனப்படுகின்றாயென்றனர் அப்பொழுது நான் உலகங்களெல்லாம் பூஜிக்கத்தகுந்த அக்காசியபரிடம் தெரிவித்துக்கொண்டதாவது:—



ஓ! பிராம்மணோத்தமனே! என்னுடைய கணவர்களெல்லாம் பார்க்கவபகவானால் கொல்லப்பட்டார்கள். ஆயுதபாணிகளாயும் பராக்கிரமசாலிகளாயுமுள்ள க்ஷத்திரியர்கள் யாதொருவருமில்லாததால் நான் நாயகனில்லாத விதவைபோலானேன். சூனியமான நகரங்களையும் தேசங்களையும் வகிப்பதற்கு நான்விரும்பவில்லை. ஆகையால் எனக்குத்தகுந்தவனும் தமமைப்போன்றவனும் கடல்சூழ்ந்தும் அனேக நகரம் கிராமங்களோடு கூடியதுமான இவ்வுலகத்தை ரக்ஷிக்கவல்லமையுள்ளவனுமுள்ள பர்த்தாவைக் கொடுக்கவேண்டுமென்றேன். அதைக்கேட்ட அக்காசியபபகவான அப்படியே ஆகட்டுமென்று மானவேந்திரனை மனுமஹாராஜனுக்கு என்னைக் கொடுத்தனர். அப்படிப்பட்டயான் அம்மனுவின் குலத்திலுதித்த இட்சுவாகுவமிசத்திய ராஜர்களிடம் வசித்து நீடியகாலத்தாலொருவரிடமிருந்து மற்றொருவரிடமாக அனேகமரசர்களையடைந்து வாழ்ந்திருந்தேன். நானும் அனேகம் மானவேந்திரர்களால் அனுபவிக்கப்பட்டேன். எனக்காக எத்தனையோ சூரர்களான அரசர்களெல்லாம் யுத்தஞ்செய்து ஜயித்துக்கடைசியாய் சுவர்க்கத்தை யடைந்திருக்கின்றனர். அவ்விதம் அவர்களெல்லாம் காலனுக்குவசமாய் முடிவில் என்னிடத்திலேதானேலயித்தும் போயினர். என்னைக்கைப்பற்ற வேண்டியதற்காக யுத்தத்தில் முதுகுகாட்டித்திரும்பாத க்ஷத்திரிய வீரர்களுடைய யுத்தங்களில் எத்தினையோபெயர் சண்டைசெய்திருக்கின்றனர். இப்பொழுதும் சண்டைசெய்கின்றனர். இதெல்லாம் தேவசம்பந்தமான உங்களுடைய ஆக்ஞையால் பரிபாலிக்கப்பட்டுவருகின்றது. உலகத்தினிமித்திற்காகவே அரசர்களும் அரசர்களுக்குள்சண்டையும் அதில் மடிதலுமுண்டாகின்றன. இப்பாரத்தை சகிக்கமாட்டாத என்னிடத்தில் அச்சுமையை யகற்றிவிடவேண்டுமென்ற காரணத்தைப்பற்றி கருணையென்பது இருக்குமானால் யாதொருவரை யடைக்கலமாய் வந்தடைந்திருக்கின்றேனோ அந்த ஸ்ரீசக்கிரதாரியான இலக்ஷ்மீபதியொருவரே எனக்கு அபயம் கொடுத்தருளவேண்டும். என்பாரம் விடுவிக்கப்படுமேயாகில் இந்த ஸ்ரீவிஷ்ணுபகவான் என்னைப்பார்த்து நியமித்தருளக்கடவது. ஓ! தேவர்களே! இவருடைய அனுக்கிரகத்தால் நான் எனது சிரமத்தைவிடுவேன்.

56-ம் அத்தியாயம்முற்றிற்று.

## 57-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— அச்சபையிலுள்ள சகல சுவர்க்கவாசிகளும் பூமிதேவியாரின் வாக்கைக்கேட்டு அவளுக்காகவேண்டிய காரியத்தைப்பற்றியாலோசித்து பிதாமஹனான பிர்மாவிடந்தெரிவித்தனர். அதாவது:— ஓ! பகவானே! இத்தரணியானுடையபாரம் இறக்கப்படவேண்டும். எல்லாப் பிராணிகளுடையவும் சரீரத்தைப்படைப்பவராதலால் தாமல்லவோ அதைப்பற்றி ஈசுவரன். இந்திரன், வருணன், யமன், முதலியதேவர்களால்யாது செய்யவேண்டுவதோ அதையும், சந்திரனாலும், பாஸ்கரனாலும் வாயுவினாலும் யாதுசெய்யத்தக்கதோ அதையும், ஆதித்தியர்கள், வசுக்கள் உலகத்தோர்வணங்கும் ருத்திரர்கள், தேவவைத்தியர்களான அசுவினிகள் சுவர்க்கவாசிகளான சாத்தியர்கள், பிரகஸ்பதி, சுக்கிரன், காலன், கலி, சிவன், சுப்பிரம்மணியன், யக்ஷர், இராக்ஷஸர், கந்தருவர், சாரணர், உரகர், பதகர், பருவதர், பெருத்ததிரைகளையுடைய சமுத்திரங்கள், கங்கை முதலிய தேவநதிகள்முதலான யிவர்களாலெந்தெந்த சகாயம் செய்யவேண்டியதோ அதையும், ஓ! தேவேசனான பிதாமஹனே! சீக்கிரமுத்தரவளிக்கவேண்டும். எவ்விதம்யாருடைய அமிசமானதெப்படிபிரகாசிக்கவேண்டும். ஓ! பிதாமஹனே! உமக்குப் பிருதுவிக்காகச் சகாயமான காரியம் பார்த்திவர்கலகப்படும்படி செய்யவேண்டுமானால் நாங்களெல்லோருமெப்படி எங்களமிசங்களைக்கொண்டு பூவுலகிலவதரிப்போம் சுவர்க்கத்திலும் பூமியிலுமுள்ள சகலதேவர்களும், சபாயோக்கியர்களான விப்பிரர்களுடைய குலங்களிலும் ராஜவமிசங்களிலும், அயோநிஜங்களாகவும் யோநிஜங்களாகவும் தங்கள் தங்கள் தேகங்களை பூலோகத்தில் படைக்கின்றோம். என்றிவ்விதம் ஏகமனதாய்க்கூறிய ஸகலதேவர்களுடைய தீர்மானத்தைக் கேட்ட பிதாமஹன் அத்தேவர்மத்தியில் ஓ! தேவர்களே! உங்களிச்சைப்படி தங்கள் தங்கள் சரீராமிசங்களைக்கொண்டு தம்தமக்கு நிகரான புத்திரர்களைப் பூவுலகின்கண் அவரவர் மாஹாத்மியத்திற்குத்தக்கபடி சிருஷ்டியாகுமவதாரங்களைச் செய்யுங்களிது நிச்சயமேயென்றனர். பூமியையேநினைத்துநினைத்து மூவுலகுகளின் செல்வத்தையுமடைந்த இராஜகுலமாகிய பாரதவமிசத்தில் முன்பே இவ்விஷயங்களையறிந்த என்றால்பூவுலகில் செய்யப்பட்ட சிலசில காரியங்களையுங் கேளுங்கள். முன்பொருக்கால் மேற்குசமுத்திரத்தின் கரையையானடைந்து எனதுமகனும் மஹாத்மாவுமான கசியபனுடன் வீற்றிருந்துகொண்டு புராணங்களான கதைகளாலும், தேவலோக ஸம்பந்தமான விருத்தாந்தங்களாலும், அனேகவித



காசங்களாலும், பலபலவிதமாய் பொழுதுபோகும்படி பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது கங்கையுடன்கூடிய சமுத்திரராஜன் காற்றோடும் மேகத்தோடுங்கூட அதிவேகமாய் எனதருகாமையில்வந்து வக்கிரமான திரைகளுடன் ஜலஜந்துக்களால் நிறைந்த தனது தோயமாகிறதுணியால் தன்னைமறைத்துக்கொண்டும், சங்குமுத்துப் பவழங்களாற்செய்த பூஷணங்களாலலங்கரிக்கப்பட்டவனாகவும், சந்திரனால் பூரித்தவனாகவும், பேரொலியை யுடையவனாகவும், தனதுகரையைக்கடந்து என்னையவமானித்து உப்புநீர்களாலென்னைத்துன்பப்படுத்திவிட்டான். அச்சமயத்தில் அவனை நோக்கி ஏ! சமுத்திரனே! நீமிகவுமடக்கமுள்ளவனாயிருக்கின்றாயெனக் கூறினேன். அவ்விதமென்று லுரைக்கப்பட்டவுடன் இராஜலக்ஷ்மியுடன் விளங்குமச்சாகரனும் அலைகள்முதலிய யாதோராடம்பரமுமின்றி அடங்கிப்போயினன். மறுபடியும் நானடங்காதகோபத்துடன் கங்கையோடுகூடிய அச்சாகரனைச்சபித்தேன். அது உங்களுடைய இதத்திற்காகவும் இப்பூமியின்பாரத்தைக் கழிப்பதற்காகவுமான காரணத்தைப்பற்றியாயிற்று. அதெவ்விதமெனில்:— ஏ! சாகரனே! நீ யாதொருகாரணத்தால் இராஜவேஷத்துடன் என்சமீபம் வந்தனையோ, அதனால் நீ பூமியில் இராஜனாகவே பிறக்கக்கடவாய். அப்பொழுதும் உனக்கு ஸஹஜமான லீலைகளுடன்கூடவும் பராக்கிரமத்தோடுகூடவும் அனேகம்ஜனங்களுக்கு எஜமானனாகவும் பரதகுலத்திற்கு வல்லபனாகவுமாவாய். நீ சாந்தனாகக்கடவாய்" என்றுரைத்தமாத்திரத்தில் நீயும் தனுத்தன்மை (சிறியதன்மை) யையடைந்ததால் பூவுலகிலும் சந்தனுவென்ற பெயருடன் சிறந்தவடிவத்தையடைவாய். நீண்டகண்களையுடையவளும், மங்களரூபிணியுமான யிக்கங்கையும் தனதுருவத்துடனுன்னை வந்தடையப்போகின்றாள். என்றிவ்விதம்கூறிய என்னைப்பார்த்துச்சாகரனும் கலங்கியநெஞ்சத்துடன் கூறியதாவது:— தேவர்களுக்கெல்லாம் பிரபுவான ஓ! தேவனே! என்னையாது காரணத்திற்காக சபித்தீர், நானுந்தமக்கடங்கியவனும் தம்மையே வணங்கிக்கொண்டிருப்பவனல்லவோ. தமதுமைந்தனான என்னை அயோக்கியமான வார்த்தைகளாலெப்படி மனதுடன் சபித்தீர். ஓ! பகவானே! உமதனுக்கிரகத்தாலேயேயல்லவா பருவகாலத்தில் நான்விருத்தியடைந்தேன். அக்காலத்தில் நான் சிறிது அங்குமிங்குஞ்சலிப்பதால் யாதுதோஷம். ஓங்கியடித்த காற்றின்வேகத்தாற்கிளம்பியநீர் திவலைகளால் தாம்தொடப்பட்டால் யாது தோஷமுளது. பகவானே இக்காரியத்தில் என்னிடம் சபிக்கத்தக்க காரணமேதாவதுண்டோ. பெருத்தகாற்றாலும், கிளம்பியமேகங்களாலும், பருவகாலத்துசந்திரனாலும், பொங்கிவரப்பட்ட என்னிடம்

தோஷமென்றதெப்படி?. இவைகளெல்லாது தம்மால் வேறொன்றாவது கார
ணம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அதைத்தாம் பொருக்கவேண்டும்.
இந்தசாபத்தை நிவர்த்திசெய்துதரவேண்டும். இவ்விதமான காரணங்க
ளால் யாதொரு பிடிப்புமின்றித் தமது சாபத்தால் நடுங்கிய என்னிடம்
ஓ! தேவேசனே! கருணைசெய்யக்கடவீர். மேலும் தமது உத்திரவினால்
பூமியையடைந்திருக்கும் இந்தகங்கைக்கும் எனதுதோஷத்தைக் காரண
மாகக்கொண்டு சபிப்பது தகுதியல்ல. அனுக்கிரகிக்கக்கடவீர். என்றிவ்
வாறு வேண்டிக்கொண்டவனும், தேவகாரியங்களின் காரணத்தை யறி
யாதவனும், சாபாக்கினியால் வாடியிருப்பவனுமுள்ள அச்சாகரனைப்
பார்த்து நான்; ஓ! சாகரனே! பயப்படவேண்டாம் பிரசன்னனானேன்.
பரபரக்காது நிதானிப்பாய், எனச்சிறந்தவாக்கால் சமாதானப்படுத்தி ஏ!
நதிகளுக்கீசனான சமுத்திரராஜனே! இவ்விதம் நான் உன்னைச்சபித்தத
ற்கு எதிர்காலத்தில் ஏற்படப்போகிறவோர்காரணமிருக்கின்றது. அன்பனே!
ஆகையால் நீ பூலோகத்திலுள்ள மேன்மையான பாரதகுலத்தில் உனது
அம்சத்தால் உனது தேஜஸ்ஸைக்கொண்டு பிறப்பிப்பாய். அப்பொழுது
இச்சாகரரூபமான வடிவத்தைவிட்டு மஹீபாலரூபமான வடிவத்தையடை
யப்போகின்றாய். அன்றியுமப்பொழுது இராஜலக்ஷ்மியுடன்கூட நான்கு
வருணங்களையும் ரக்ஷிக்கப்போகின்றாய். இந்த நதிகளுக்குள்ளுத்தமை
யான கங்காதேவியும் சிறந்தவடிவத்துடன் அக்காலத்திற்குத்தக்கபடி
உனக்குப் பணிவிடைசெய்யப்போகின்றாள். எனதுத்திரவினால் இக்கங்
கையுடன் ஆனந்தித்து இந்தசாகரத்தன்மையையே மறந்துவிடுவாய். அதி
வேகமாக எனதுத்திரவானது உன்னாலவசியம் தேவசகாயத்தின் பொரு
ட்டுச் செய்தேதீரவேண்டும். அப்பொழுது வந்தடையும் கங்கையிடம்
பிராஜாபத்தியமென்ற விவாஹவிதிப்படி மணம்புரிந்து அவளிடம் சுகிக்கக்
கடவாய். அன்றியும், சுவர்க்கத்திலின்னும் அஷ்டவசுக்களும்மறுவிபாதா
ளத்தை யடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு நரஜன்மமடையவேண்டி
யிருப்பதால் அக்காரியத்தில் நீயே உபகாரஞ்செய்யத்தக்கவன். இந்தகங்
கையும் சூரியஸமானமான அஷ்டவசுக்களையும் தனது கர்ப்பத்தில் சந்தா
னத்திற்காக வகிக்கட்டும். ஆகையால் நீ பாரதகுலத்தில் அவதரித்தும்,
சீக்கிரமாகவே வசுக்களைப் பிறப்பித்தும், குருகுலத்தை நிலைநாட்டியும்,
பிறகு உனது சாகரயோனியில் சேருவாயாக. ஓ! தேவர்களே! இவ்வித
மாக முன்பொருக்கால்உங்களுடையஹிதத்தின்பொருட்டும்பார்த்திபர்கள்
வடிவமான மஹாபாரத்தை தீர்ப்பதற்காகவும் வருங்காலவிஷயத்தையறி
ந்து சந்தனுவின் வம்சமானது என்னால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.



யாதொருவசுக்கள் எட்டுப்பெயர்களும் பூமியில் பிறந்தார்களோ அவர்க
ளுள் எட்டாவிது வசுவானவன் இப்பொழுது பூவுலகில் காங்கேயனென்ற
பெயருடனிருக்கின்றான். மற்ற வேழுவசுக்களும் சுவர்க்கம்வந்து சேர்ந்
தனர். எட்டாவதொருவனே சாபத்தையனுபவித்துத் தொங்கிக்கொண்டி
ருக்கின்றான். அச்சந்தனுவென்றவன் இளையவனிடம் விசித்திரவீரியன்
என்ற பிரதாபசாலி பிறந்தான். அவனுக்குத் திருதராஷ்டிரன், பாண்டு
என்ற புகழ்பெற்ற இருமக்கள்கள் பிறந்திருக்கின்றனர். அவர்களுள் அழ
குநிறைந்த பாண்டுவிற்கு குந்தியென்றும், மாத்திரியென்றும் இரும்மனைவிக
ளுளர். அவ்விருவர்களும் தேவஸ்திரீகளைப்போன்ற வடிவையுடையவர்
கள். திருதராஷ்டிரனென்றராஜனுக்குப் பதிவிருதையான காந்தாரி
என்ற ஓர் மனைவியிருக்கின்றாள். அக்குலத்தில் நீங்களெல்லோரும் பூதல
த்திலவதரித்துக் கட்சிபேதங்களைச் செய்யுங்கள். அப்பொழுது அவ்விரு
கட்சிக்காரர்களுக்கும் பெருத்தகலகமுண்டாகும். அத்தாயாதிகலகத்தில்
அவர்களுக்குப்பக்கபலமாய் வருமனேகவரசர்களு மவரவர்சைன்னியங்க
ளும் மடிந்துபோகும். அந்தயுத்தமானது யுகாந்தகாலத்தின்பிரளயம்போல்
மிகவும் பயங்கரமாயாகும். இவ்விதம் சகலசைன்னியங்களுடனும் சேனா
பதிகளுடனும் இராஜர்களுடனும் அந்தயுத்தம் முடிவையடைந்தபின்
தேசங்களிலும் நகரங்களிலும் இடைவெளிகளுண்டாகும். பூமியும் பாரம்
இல்லாமல் களைமாற்றியவளாவாள். இதேமாதிரி முன்பொரு துவாபர
யுகாந்தத்தில் பூபாராவதரணம் நடந்திருக்கின்றது. அதை நான் நேரில்
பார்த்திருக்கின்றேன். அதில் மனிதர்களெல்லாம் ஒருவரோடொருவர்
பகைத்துக்கொண்டு ஆயுதங்களால் கொன்றுகொலையுண்டு அவரவரரசர்க
ளுடன் மடியப்போகின்றனர். இது நிச்சயம். அச்சண்டையிலும் மிகுந்த
அறிவில்லாது தூங்கிக்கொண்டிருக்கும் சிலமனிதர்களை இரவுகாலத்தில்
கிளம்பியசங்கரனுடைய அம்சமானது ஆக்கினேயாஸ்திரத்தால்விழுங்கப்
போகின்றது. யமனுக்குச் சமானமாயுள்ள கோரமான அந்தயுத்தம் தீர்
ந்தபின் துவாபரமென்றமூன்றாவதுயுகமும்தீர்ந்துபோகும். அதன்பிறகு
அந்தயுத்தத்தில் சேதித்தவராயும் தேவர்களுக்கெல்லாம் மஹேசுவரனும்
உள்ள ஸ்ரீகிருஷ்ணனுடைய அம்சமும் பூவுலகைவிட்டுவிடும். அவ்விதம்
அந்த ஸ்ரீகிருஷ்ணனுடைய அம்சமும் போனபின் மாஹேசுவரனென்ற
தபோமூர்த்தியின் தபோகுணத்தைப் பிரதானமாயுடைய கலியுகமானது
பிறக்கப்போகின்றது. அந்தயுகமோ மிகவும் கடுமையானது. பெரும்பா
லும் அதருமத்திலேயே சகலஜனங்களும் மனதடைந்தோராவார். சிறுபா
ன்மையாகச் சிலசிலவிடங்களில்மட்டும் தருமசிந்தையுடையோர்காண்பார்.

ஸத்தியம் முழுமையுமடியோடுகெட்டு அஸத்தியமே தலையெடுத்துப்போவதால் மோக்ஷப்பிரியரில்லாமல் கேவலம் பொருளையுமின்பத்தையுமே கருதி ஒவ்வொருவரும் மஹேசுவரனென்ற உருத்திரனையும், குமாரதேவனென்ற சுப்பிரம்மண்ணியனையுமே அடைந்து வணங்கப்போகின்றனர். பெரும்பாலும் நரர்களெல்லாம் அல்பாயுளையுடையவர்களாகவே இறப்போகின்றனர். அவ்விதமெல்லாமாவதற்கு இந்தஆலோசனையே பெரியவோர் காரணமாயிருக்கின்றது. இதிலேதான் சகல க்ஷத்திரியவீரர்களான அரசர்களும் மடியப்போகின்றனர். ஆனதுபற்றி நீங்களெல்லோரும் சீக்கிரமாக உங்களுங்களம்சத்தை அவதாரணம் செய்யுங்கள். தருமனது அம்சம் குந்தியினிடத்திலும், மாத்திரியிடத்திலும் படைக்கப்பட்டும். கலகத்திற்கு மூலகாரணமான கலியின் அம்சமானது காந்தாரியினிடம் ஜனிப்பிக்கப்பட்டும். காலனிலேவைப்பட்ட சகல ராஜர்களுமிவ்விருகக்ஷிகளையும் பற்றி பூமியினுடையால் அவரவரிடமாஸைகொண்டு கொடூரமானயுத்தத்தில் அழிந்துமுடிவில் மரணத்தையடைவார். பிறகு இவ்வசுமதியும் தனது பாரத்தைவிட்டு தன்னிலையடைந்து சுகமாகவுலகங்களைத் தரிப்பாள். அரசர்களுக்கும் யுத்தத்தில்சண்டைசெய்து மடிவதையும் பெரியதிவ்வடையாக சாஸ்திரங்களிலேற்படுத்தப்பட்டிருக்கிறது. இது சகலலோகங்களிலும் பிரசித்தமானது. ஆகையால் அந்தயுத்தமும் சாஸ்திரவிரோதமல்ல. நாமும் தருமவிரோதம் செய்தவர்களாகோம்.

வைசம்பாயனர்:— இவ்விதமுரைத்த பிதாமஹனுடைய வார்த்தையைப் பூமிதேவிகேட்டு வந்தவழியேசென்று தன்னிடம்போய் பார்த்திபர்களுடைய கலகத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனள். இங்கு பிர்மாவானவர் அசுரர்களுடைய வதத்திற்காகத் தேவர்களை ஆக்ஞாபித்தனர். அவர்யாவரெனில்:- நரனையும், சநாதனனுனநாராயணரிஷியையும், சேஷனையும், சனற்குமாரனையும், சாத்தியர்களையும், அக்கினிமுதலிய மற்றத் தேவர்களையும், வருணனையும், யமனையும், சூரியசந்திரர்களையும், கந்தருவர்களையும், அப்ஸரஸ்ஸுக்களையும், உருத்திரர்களையும், ஆதித்தியர்களையும், அசுவினிதேவர்களையுமாம். அவரவர் அம்சங்களைக்கொண்டு நான்முகன் அங்கங்கு நான் முன் ஆதிபர்வத்தில் கூறியபடி அயோநிஜர்களாகவும், யோநிஜர்களாகவும் படைத்தனர். அவ்விதம் படைக்கப்பட்ட தேவர்களெல்லாம் தைத்தியர்களையும், தானவர்களையும் கொல்லத்தகுந்த சிறந்த மனிதர்களாகவாயினர். அவர்களெல்லாம் பெருத்தசால்மரம்போன்ற வடிவையுடையவர்களாகவும், வச்சிராயுதத்தையும் தாங்கத்தக்கபலிஷ்டர்களாகவும், பதினாயிரம் யானைகளின் பலத்தையுடையவர்களாகவும், சிலர் ஆற்



றின்வெள்ளத்திற்கொப்பானவேகத்தையுடையவர்களாகவும், சிலர் கொடிமுடிகளையடித்துப் பொடியாக்க வல்லமையுடையவர்களாகவும் விளங்கினர். ஒவ்வொருவரும் கோட்டைவாயிற் கதவுகளின்னிரும்புத்தாள்கள் போன்ற கைகளையுடையவர்களாய் கதை பரிகம் சக்தி முதலிய வாயுதங்களையெடுத்துச் சண்டையிட வல்லமையுடையவர். இவ்விதம் அனேகம் ஆயிரம்பெயர் விருஷ்ணிவம்சத்திலும், குருவம்சத்திலும், பாஞ்சாலங்களிலும், செல்வம்நிறைந்த யாகசீலர்களான பிராம்மணகுலங்களிலும் அத்தேவர்களெல்லாம் எல்லாவஸ்திரங்களை யறிந்தவர்களாகவும், உத்தமமான வில்லையுடையவர்களாகவும், வேதமோதியவர்களாகவும், கூற்மையான நோன்புகளையுடையவர்களாகவும், சகல செல்வம் நிறைந்தவர்களாகவும் யாகசீலர்களாகவும், புண்ணியமான கருமங்களையுடையவர்களாகவும், ஒரு சமயம் கோபம்வந்தால் வெற்பையும்வேரோடு பறித்தெறியவல்லமையுடையவர்களாகவும், பிறந்தோங்கி விளங்கினார்கள். அவர்களுளொவ்வொருவரும் பூமியையே பெயர்த்தெடுக்கவும் ஆகாயத்தைக் கபளீகரிக்கவும் சமுத்திரத்தைக் கலக்கவும் வல்லமையுடையவர். அவ்விதம் முக்காலத்திற்கும் பிரபுவான பிர்மாவானவர் சகலதேவர்களையும் ஆக்ஞாபித்தவுடன், தனது பாரங்களையெல்லாம் நாராயணனிடத்தில் ஸமர்ப்பித்துவிட்டனர். அதனாலுலகங்களெல்லாம் க்ஷேமத்தையடைந்தன. ஓ! ஜனமேஜயராஜனே! பின்னும் பிராணனுக்கு நிகரான ஹிதமுள்ள பிரபுவான ஸ்ரீவிஷ்ணுவான நாராயணன் ஜனங்களுடைய ஹிதத்திற்காக யயாதிவம்சத்திலுதித்த புத்திமானான வசுதேவனுடைய பெருமைபொருந்திய குலத்திலிப்பூவுலகின்கண் நல்லகீர்த்தியைநிலைநாட்டுவதற்காக எவ்விதம் அவதரித்தருளினரோ அதைச் சொல்லுகின்றேன் கேள். அந்நித்தியர்களாயும் பெரும்பாலும் தருமத்திலேயே மனமுடையவர்களாயுமுள்ள நரர்களுடைய விருத்தாந்தத்தைக் கூறுவதாகிற இருண்டகாட்டில் புரண்டுபுரண்டு புழுதிபடிந்திருக்கும் எனதுவாக்கை சூராஜனது வம்சத்திலவதரித்த ஸ்ரீசௌரியினுடைய திவ்வியகதைகளின்சல்லாபமாகிற கங்கையாலினிப்பரிசுத்தம்செய்கின்றேன். நிலைத்தமனதுடனும் பெருத்தபக்தியுடனும் கேள்.

57-ம் அத்தியாயம் முற்றிற்று

## 58-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— இவ்விதமக்காலமானது சுவர்க்கத்தில் தான் செய்யவேண்டியதை செய்துவிட்டுப் போனவுடன், பூவுலகிலும் நியாயப் பிரகாரம் தேவர்களுடைய அம்சங்களானவை பாரதர்களின் குலத்தில் அவதரிக்கத்தொடங்கின. அவ்வசுருள் தருமராஜனுடையவும், இந்திரனுடையவும், வாயுதேவனுடையவும், தேவவைத்தியர்களான அசுவினிதேவர்களுடையவும், சூரியனுடையவும் அம்சங்களெல்லாமவதரிக்குமுன்பே தேவ புரோகிதரான பிரகஸ்பதியின் அம்சமுமவதரிக்க, அவ்விதமே வசுக்களுடைய எட்டாவது அம்சமும் பூமியிலிறங்க, மேலும் மிருத்தியுவின் பாகமும் கலியின்பாகமும் பூவுலகையடைய, அன்றியும் சுக்கிரனுடையவும் சந்திரனுடையவும் வருணனுடையவும் அம்சங்களெல்லாம் தரணியை அடைய, மேலும் சங்கரனுடையவும் அவருடைய மித்திரனான குபேரனுடையவும், கந்தருவர் உரகர் யக்ஷரென்றவர்களுடையவும் பாகங்களெல்லாம் பூதலத்தில் அவதரிக்க, நாராயணனுடைய அம்சம்மாத்திரமவதரிக்காமல் பாக்கியிருக்க அச்சமயத்தில் ஜ்வலிக்கின்ற அக்னிபோன்றவரும், பாலசூரியன்போன்ற கண்களையுடையவரும், இடம்வலமாகச் சுற்றிமுடியப்பட்ட ஜடாமண்டலத்தையுடையவரும், சந்திரன்போன்ற வெளுத்த வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டவரும், பொன்னாணிகளையுடையவரும், பிரியசகிபோன்ற வீணையை அக்குளிலணைத்துக்கொண்டிருப்பவரும், பொன்மயமான பூணூலோடுகூடிய கிருஷ்ணாஜினமென்ற மான்தோலை மேலுத்தரீயமாக தரித்திருப்பவரும், தண்டம் கமண்டலமிவைகளை வகித்தவரும், நேரிடவேறோர் தேவேந்திரனோவென சந்தேகிக்கத்தக்கவரும், உலகத்திலுள்ள ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகின்றவரும், யுத்தத்திற்கிருப்பிடமாயும், நான்குவேதங்களைப் பாடுகின்றவரும், ருத்துவிக்குகளுக்குள் முதல்வரானவுத்காதாவாயும், சிறந்த ரிஷியாயும், சண்டையிலேயேயின்பமுடையவராயும், பிர்மக்ஞானியாயும், கந்தர்வர்களுடைய சங்கீத சாஸ்திரவல்லவராயும், சத்துருக்களைச் சண்டைக்கிழுப்பிக்கின்றவரும், பிர்மருஷியும், கலகமூட்டிவிடுவதில் வேறோர் கலியோவெனக் கூறத்தக்கவரும், தேவர் கந்தருவர்சபையில் முதன்மையான பேசுந்திறமையையுடையவரும், மஹரிஷியும், அழிவற்றவரும், பிர்மலோகத்திலேயே பெரும்பாலும் சஞ்சரிப்பவருமான நாரதனென்ற பிர்மரிஷியானவர் அத்தேவசபையின் நடுவிலெழுந்திருந்து விஷ்ணுவைநோக்கி மிகபரபரப்புடனே விண்ணப்பஞ்செய்யநினைத்து அதற்கு முந்தினது பிர்மதத்தம்



என்ற வீணையில் ஏழுஸ்வரங்களாலும் பரிபூரித்தகானத்தை செய்யத்தொடங்கினர். அதன்முறையாவது:— முதலில் ஓர் இராகத்தையெடுத்து முதல் ஸ்வரமான ஷட்ஜம் பிறகு ரிஷபம் பின்பு காந்தாரம் உடன் மத்தியமம் என் நான்குஸ்வரங்களிலும் ஆரோஹண அவரோஹணக் கிரமமாக விஸ்தரித்து விஸ்தரித்துப் பிறகு ஸமகதியாகவும் வக்கிரகதியாகவும் கானம் செய்து, அதனுடன் பஞ்சமம், தைவதம், நிஷாதமென்றஸ்வரங்களில்ஸஞ்சாரம்செய்து முடிவில் நிஷாதத்தின் காகலிஸ்தானத்தில் மூன்று மாத்திரைகாலம் நின்றுவாசித்து அவைகளையொட்டிய இரண்டொருகிசுவோடு லயித்து நின்று மும்மூன்று அடிகளோடுகூடிய [illegible]ரிபுடைதாளத்துடன் லயமுந்தீர்த்து அந்தாளத்திலேயே தானஸ்வரங்களையும் முறைப்படி விஸ்தாரப்படுத்தி அந்தஸ்வரங்களோடு ஸாமகீதத்தின் வா[illegible]மென்ற ஸாஹித்தியங்களால் அளவில்லாத வீரியத்தையுடையவனும், [illegible]நாயகனும் உள்ள விஷ்ணுவை பிரணவமந்திரத்தை முன்னிட்டுக்கொண்டு தே[illegible] யோக்கியமான கானங்களைப்பாடினர். அதேவிதமாக் அவரோகணத்துடன் ஷட்ஜத்தில்வந்துநின்று பிரணவத்திலேயேகொண்டுவந்து முடித்துவிட்டு வருமாறு விண்ணப்பம் செய்யவாரம்பித்தார். அதாவது:— ஓ! விஷ்ணோ! இப்பொழுது தேவர்களெல்லாம்கூடி தம்தங்களம்சங்களைப் பூலோகத்திலின்னின்னவிடங்களிலிவ்விவ்விதம்தான் பிறப்பிப்பதெனத் தீர்மானித்து நடத்திவருகின்றனர். இராஜேந்திரர்களுடைய விநாசத்திற்காகப் பூவுலகிலிறக்கப்பட்ட இத்தேவர்களுடைய அம்சங்களெல்லாம் பிரயோஜனமற்றதேயாம். ஏனெனில் பூவுலகிலுள்ள க்ஷத்திரியசமூகமெல்லாம் ஈசுவரனை தம்மிடத்திலல்லவோ நிலைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் நரநாராயணர்களுடைய அம்சத்தோடு தேவர்களினம்சங்களும் கூடினாலே காரியத்தில் பிரயோஜனப்படுமென எனக்குத்தோன்றுகிறது. ஓ! தேவனே! இவ்விதமுள்ளகாரியத்தைத் தெளிவாயறிந்தவராயும், மற்றுள்ள சகலவுண்மைகளையும் தெரிந்தவராயுமுள்ள தம்மால், பூஸுரர், பிருதுவியென்ற இரண்டுபெயர்களின் சகாயத்திற்காக யாதொருசகாயமும் செய்யாமலிருப்பது தகுதியல்ல. கண்களையுடையவர்களுக்குத் தாமே கண்ணாய் விளங்குகின்றவர். தாமே பிரபுக்களுக்கெல்லாம் உத்தமமான பிரபு. யோகிகளுக்கெல்லம் தாமே உத்தமமானயோகி, நற்கதிகளுக்கெல்லாம் தாமே உத்தமமான கெதி. இவ்விதமிருக்கச்சகலதேவர்களுடைய அம்சங்களெல்லாம் பூதலத்தில் அவதரித்திருப்பதை நன்றாயறிந்துமின்னமிதுவரையில் எல்லாவஸ்துக்களுக்குமாதாரனைதாம் வசுமதியின் சகாயத்திற்காகத் தம்முடைய அம்சத்தைமட்டிலவதரிப்பிக்காதேயிருக்கவேண்

டும். தம்மாலெவ்விதம் தேவர்களெல்லாம் நாதனோடு கூடியவர்களோ, அப்படியே தேவாது அம்சங்களும தமது அம்சத்தால் நாதனோடு கூடியவைகளாகவேண்டும். அத்தேவரோ எப்பொழுதும் தம்மையே வடிவமாக உடையவர்களும் தம்மையே தியானித்துக்கொண்டு நம்பியிருப்பவர்களுமாம். ஆகையால் தம்மை நம்பி பூவுலகின்கண் தங்கள்தங்களம்சங்களால் அங்கங்கு ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றார்கள். அனதுபற்றி இவ்விஷயத்தை விண்ணப்பம்செய்தெழுப்புவதற்காக இத்தேவசபைக்குவேகமாய் வந்தடைந்தனன். இதிற்சில ...ங்களுள அவையாவன. தாரகாமயம் என்ற தேவாசுரயுத்தத்தில் எந்தெந்தவசுரர்கள் தம்மால் கொல்லப்பட்டார்களோ, அவர்களிற்சிலர் பூதலத்திற் பிறந்திருக்கின்றனர். அன்றியும் பூவுலகில் யமுனையாற்றின்கரையில் மிகவும் நெருங்கிய ஜனத்திரள்களோடு கூடியதும் மிகவும் சிங்காரமானதுமான மதுரையென்ற வோர்நகரமிருக்கின்றது. அந்நகரத்தில் யுத்தத்திலெதிர்க்கமுடியாத பராக்கிரமத்தோடு கூடிய மதுவென்ற வோரசுரனிருந்தான். அவனுக்கு மிகவும் பலிஷ்டனான இலவணனென்ற வோர்மகனுண்டானான். அவன் எல்லாப்பிராணிகளுக்கும் பயங்கரனாகவும் பெருத்ததேகவலிவோடு கூடியவனாகவுமிருந்தான். அவனுக்கு அங்கு அனேகம் மரங்களடர்ந்த பயங்கரமான வோர்வனமிருந்தது. அதற்கு மதுவனமெனப்பெயர். அவ்வனத்தில் அந்தலவணனென்றவசுரன் அனேகம் விருக்ஷங்கள்வரையில் வாழ்ந்து விளையாடிக்கொண்டு, அக்காலத்திலுள்ள மனிதர்களையும் தேவர்களையும் மதமுள்ள பெரியோர்களையும் தனது கொழுப்பாலவமானப்படுத்திவந்தான். அவ்விதமிருக்கையில் எவராலும் ஜயிக்கமுடியாத அயோத்தியை என்ற ராஜ்யத்தில் தருமங்களை நன்கறிந்தவராயும் அரக்கர்களையடக்கியவராயுமுள்ள ஸ்ரீராமன் அரசாண்டுவருங்காலத்தில், அத்தக்கடுமையானவனத்தில் வசித்துவந்த பலத்தால் பேர்போன அல்லவணாசுரன் ஸ்ரீராமனிடம் கெட்ட வார்த்தைகளைப் பேசுந்திறமையுடைய வோர்தூதனையனுப்பினான். அத்தூதன் போய் ஸ்ரீராமனைப்பார்த்து ஓ! இராமனே! உன்தேசத்திற்கருகாமையிலுள்ளவன்யான். மஹாராஜர்களெல்லாம் தமக்குச்சமீபத்தில் கொழுத்த சத்துருவை வைக்கமாட்டார்களல்லவா. மேலும் தனது ராஜ்யம் செழிக்கவேண்டுமென நினைக்கும் பிரஜைகளைக் காப்பாற்றும் விருதத்திலுள்ள ஒவ்வொரு அரசனும், ஜனங்களுடைய ஹிதத்தைவேண்டி எதிரிகள் வெல்லவேண்டியவர்கள். பட்டாபிஷேகஞ்செய்யப்பட்ட உனைந்த தலைமுடியுடனேயே முதல்முதலில் ஜனங்களையெல்லாம் சந்தோஷப்படுத்துவதின்பொருட்டு தனது கண்காது முதலிய ஐம்பொறிகளையும்



ஜயிக்கவேண்டும். அந்தஜயமே நிலையானவிஜயம். நல்வழியில் நடக்கவேண்டுமென்ற மனமுடைய மஹீபதிக்கு முக்கியமாய் வினயங்களை உபதேசிக்கவேண்டியவிஷயத்தில் உலகத்திற்குச்சமானமான குருயாரும் இல்லை. தருமத்தின் நடுவில் வசிப்பவனும் புத்திமானும் உயர்ந்தபலங்களை உடையவனும் உலகத்திற்குக் கீழ்ப்பட்டவனுமான அரசனுக்குத் துன்பம் என்பதை யாலோசிக்குங்காலையில், தனக்கருகாமையிலுள்ள சாமந்தன் என்ற அடுத்த எல்லையில் வசிக்கும் வைரியைவிட வேறு துன்பமேயில்லை. இந்திரியங்கள் உடன்பிறந்தவைகளாயினும் அவைகளே பெருத்துவிட்டாலவைகளைப்போன்ற சத்துருக்களவையுமில்லை. ஏனெனில் அவைகள் நேசர்களுக்கே யின்பங்களைச் செய்வதாகிய மோஹங்களால் அரசனை நிலைத்தமனமுடையாதவனாகச்செய்யும். இப்பொழுது யாதொரு உன்னால் ஒரு பெண்ணின் காரணத்திற்காக மோஹங்கொண்டு சுற்றத்தாருடன்கூடிய இராவணன் கொல்லப்பட்டானே இதைநான்யோக்கியமானதென நினைக்கவில்லை: இது மிகவும் கெட்டகாரியம். விருதத்தோடு கூடி வனவாசத்திலிறங்கிய உன்னால் அரக்கர்படையில்நுழைந்து சண்டையிடப்பட்டது நல்லோர்களுடைய நல்வழியன்று. நல்லோர்க்குக்கோபமின்மையேதருமம். அதுசுபமான நற்கெதியையடைவிக்கும். யாதொரு காரணத்தைப்பற்றிஉன்னால் அக்ஞானம்மேலிட்டுப்போய் இராக்ஷஸர்கள் எல்லாம் கொல்லப்பட்டார்களோ, அதனால் ஆசிரமங்களில்வசிக்கும் தவசிகளெல்லாம் பரிகாசம் செய்யப்பட்டனர். அந்த துர்ப்புத்தியான இராவணனென்பவன் சிறந்த விருதத்துடன்கூடியஉன்னால் கேவலமொரு பெண்நிமித்தமான கலகங்களையெதிர்பார்த்துக்கொண்டு பெருத்த ஸைன்னியத்துடன்யுத்தத்தில் கொல்லப்பட்டதால்மிகவும்தன்னியனானான். நீசரியான பராக்கிரமமுடையவனாகில்இப்பொழுது என்னோடு யுத்தத்தில்சண்டைக்கு வருவாயாக. எனமொழிந்த அந்த தூதனுடைய யதார்த்தவாதமான வார்த்தைகளையெல்லாம் ஸ்ரீராமனாகிய பிரபுகேட்டு மிகுந்த தைரியத்தினால் சரீரத்தில் சிறிதளவேனும் பரபரப்பில்லாதவராகப் புன்சிரிப்புடன் அத்தூதனைநோக்கிக்கூறுவதாவது. ஏ! தூதனே! அந்தலவணனிடமுள்ள கௌரவத்தால் இவ்விதம்உன்னால்கெட்டவாக்குக்கூறப்பட்டது. யாதொருகாரணத்தால் வேதவடிவமாயும் நிலைத்த புத்தியுள்ளவனாயுமுள்ள என்னைத் தனது தோஷத்தால் நிந்தித்தாயோ, அது பெரியோர்கள் ஒப்புக்கொள்ளாதவிஷயம். நான்நல்வழியறியாதமூடனானாலென்ன, இராவணன் கொல்லப்பட்டாலென்ன, என்னுடைய பாரியை அபகரிக்கப்பட்டால்

என்ன, இவனுக்கு அதில் யாதொரு சங்கடமும் வேண்டாம். கேவலம் வாய்வார்த்தையாலேயே நல்வழியிலிருக்கும் நல்லோர் தூஷிக்கப்படமாட்டார்கள். நல்லோர்விஷயத்திலும் தீயோர்விஷயத்திலும் தேவர்களெல்லாம் விழித்துக்கொண்டேயிருக்கின்றனர். ஏ! தூதனே! தூதனால் யாது செய்யத்தக்கதோ அது உன்னால் செய்யப்பட்டது. நீ சீக்கிரம் போ. தற்புகழ்ச்சியையுடைய கீழோரை நம்மைப்போலொத்தவர் மதிக்க மாட்டார்கள். சத்துருக்களைத் தமிக்கச்செய்யும் எனது தம்பியான சத்துருக்கினனென்றவன், அந்த துர்ப்புத்தியான அசுரனை யுத்தத்தில் இப்பொழுதுன்னாற் கூறப்பட்ட பதட்டத்திற்குப் பிரதி செய்வான் போ, என்றிவ்விதம் கூறப்பட்ட அத்தூதன் சத்துருக்கனனோடுகூடவே மதுரைக்குத்திரும்பினான். இவ்விதம் மஹாத்மாவாகிய நரேந்திரனை ஸ்ரீராகவனால் ஆக்ஞாபிக்கப்பட்டவரான சத்துருக்கினன் வெகுவிரைவாகவே அம்மதுவனத்திற்குப் போய்ச்சேர்ந்து அம்மதுவனத்தின் தூரத்தில் யுத்தத்தில் மனமுடையவராய்க் கூடாரமடித்து சைன்னியங்களையிறக்கினார். பிறகு தூதனுடைய வாக்கினால் மிகுந்த கோபத்துடன்கூட அவ்வசுரன் கோபத்தால் மூர்ச்சித்தவனாக அவ்வனத்தைப்பின்றள்ளி யுத்தத்திற்கு எதிர்முகமாய் வந்துசேர்ந்தான். பிறகு அவ்விடத்தில் சூரர்களும், மஹாபலிஷ்டர்களுமான அவ்வசுரனுக்கும் சத்துருக்கினனுக்கும் போர்க்களத்தில் அதிககோரமான யுத்தந்துடங்கிற்று. முதலில் அவ்விருவருமொருவருக்கொருவர் மிகவும்கூர்மையான சரங்களாலடித்துக்கொண்டனர். ஆகிலிவ்விருவருள் ஒருவராலும் சலிக்கவேயில்லை. இவ்விதமிருக்கையில் சத்துருக்கினனுடைய பாணங்களால் அசுரன் மிகு சலிக்கவாரம்பித்தான். அதுசமயம்பார்த்து இராகவானுஜன் அசுரனது கைசூலத்தைக்கண்டித்துத்தள்ளினர் அதனால் கோபாவேசங்கொண்ட இலவணன் சகல பிராணிகளையுங் கொல்லத்தகுந்ததும். தேவர்களால்பெற்றதுமான அங்குசம் என்ற கோர ஆயுதத்தைக் கையிலெடுத்துப் படைமுகத்தில்நின்று பூலோகம்முழுமையும் நடுங்கும்படி கர்ஜனை செய்தான். பிறகு அவ்வங்குசத்தைக் கைகொண்டவசுரன் அவ்வங்குசத்தின் தலையைப் பூமியிலகுத்தி நிறுத்தப்பிளந்து அவ்வழியில் நுழைந்து மேல்வந்து இராமானுஜனை மோசஞ்செய்ய எத்தனித்தான். அப்பொழுது சத்துருக்கினனுமவனுடைய குறைக்கண்டுபிடித்து உடனே பொன்பிடிபோட்ட உத்தமமான கத்தியைக்கையிலெடுத்துக்கொண்டு திடீரென்று தேரினின்று குதித்து லவணனெதிரிலோடிவந்து அவனது கழுத்தில் ஓர்வெட்டாய்வெட்டி அத்துராத்மாவை யிருதுண்டாக்கினார். இவ்விதம் அந்த மித்திரப்பிரிய



னான இராகவானுஜன் யுத்தகளத்தில் அவ்லவணாசுரனைக்கொன்று அதனுடன்தனது அஸ்திரத்தால் அவனது மதுவனத்தையும் சேதித்துச்சூன்னியமாக்கிவிட்டனர். பிறகு அவ்விடத்திலேயே தாம் ஓர் நகரத்தை நிர்மாணித்து வசிக்கவும் ஏற்பாடுசெய்தனர். ரமணீயமாயும் விஸ்தாரமாயுமுள்ள அவ்வனமிருந்தவிடத்தில் கட்டப்பட்டபுரியானது பிறகு மதுரையெனப் பெயர் பெற்றது. இவ்விதமாக அம்மதுவனமிருந்தவிடத்தில் சத்துருக்கினமஹாராஜனால் யுத்தத்தில் அத்தைத்தியனைக்கொன்று மிகவும் சிங்காரமாக மதுரையென்றநகரம் நிர்மாணிக்கப்பட்டது. அப்பட்டணமானது மிகவும் பெரிதாகவும், உயர்ந்தமதிற் சூழ்ந்த அகழிபெருத்தவாயில் முதலியவைகளையுடையதாகவும், ஜனப்பெருக்கமுள்ளதாகவும், மிகவும் விஸ்தீரணமுள்ளதாகவும், நிறைந்த சைன்னியங்களையும் வாஹனங்களையுமுடையதாகவும், சிறந்த பூங்காவுகளையுடையதாகவும், சிறந்த எல்லையையுடையதாகவும், நன்றாக நிலைப்பிக்கப்பட்டதாகவும், கையெடுப்பிற்குமேற்பட்ட உயர்ந்த மதிட்சுவராகின்ற வஸ்திரத்தை உடையதாகவும், அகழாகின்ற அரைஞான்மாலையையுடையதாகவும், கொடிக்கைகளாகிறதோள்வளைகளை உடையதாகவும், உப்பரிகைகளாகிற குண்டலங்களையுடையதாகவும், அரணிப்பான வாயில்களையுடையதாகவும், நாற்சந்திகளாகிற சிறப்பையுடையதாகவும், பிணியற்ற வீரபுருஷர்களையுடையதாகவும், யானைபரி தேர்களால் நிறைந்ததாகவும், பாதிசந்திரன்போன்ற வடிவையுடையதாகவும், யமுனையாற்றின் கரையை விளக்கச்செய்வதாகவும், சிறந்ததும் பரிசுத்தமானதுமான பெருத்த கடைவீதிகளையுடையதாயும், எதிராளிகளாற் தகர முடியாததாகவும், சிறந்தரத்தினக்குவியல்களால் செருக்கடைந்ததாகவும், அந்தந்தகாலங்களில் பயன்கொடுக்கத்தக்கதான கழனிவெளிகளையுடைய கிராமங்களோடுகூடியதாகவும், உயர்ந்த ஆண் பெண்களால் சந்தோஷிக்கப்பட்டதாகவும் விளங்குகின்றது. அந்த நகரத்தையே ஓர்சமயத்தில் சூரசேனமஹாராஜனும் கைப்பற்றி வசித்துவந்தான். இப்பொழுது அப்பட்டணத்தில் போஜகுலதிலகனான மஹா வீரியமுள்ள உக்கிரசேனனென்ற புகழ்பெற்ற மஹாராஜன் வசித்துவருகின்றான். அவன் பராக்கிரமத்தில் சுப்பிரமண்ணியனுக்கு நிகரானவன். ஓ! பகவானே! யாதொருகாலநேமி என்றவன் தம்மால் தாரகாமயமானயுத்தத்தில்கொல்லப்பட்டானோ அவ்வசுரன், அவ்வுக்கிரசேனமஹாராஜனுக்கு மைந்தனாய்ப்பிறந்திருக்கின்றான். அவனதுபெயர் கம்ஸன். அவன் விசாலமானகண்களையுடையவன். போஜகுலத்திற்குக் கீர்த்தியைப் பெருக்கத்தக்கவனாய் பூவுலகின்கண் சிங்கம் போன்றபராக்கிரமத்துடனும் மிகுந்த பிரசித்தியுடனும் மற்ற அரசர்களு

க்கெல்லாம் பயங்கரனும், எவ்வாசுரனும்பார்த்து சகிக்கத்தக்க நிலைமையையுடையவனுமாய் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தைச்செய்துகொண்டு நன்மார்க்கத்தினின்றும் தவறுதலையடைந்திருக்கின்றான். மேலும் எப்பொழுதும் கெட்டவஸ்துக்களிலேயே ஆசையுடையவனாகவும் கெட்ட எண்ணமுடையவனாகவும், மிகுந்த கொழுப்புடன்கூட கேட்டவர்களெல்லாம் பயத்தால் மயிர்கூச்செறியும்படியான நடவடிக்கைகளையுடையவனாகவும், அரசமுறையிலொழுகாதவனாகவும், தன்பக்கத்தோரிடம் சுகத்தை விரும்பாதவனாகவும், தனதுராஜ்ஜியத்திற்கு யாதொருசகாயத்தையுஞ்செய்யாதவனாகவும், மஹாகோபிஷ்டனும், பாபத்திலேயே எப்பொழுதும் சிந்தையையுடையவனாகவுமிருக்கின்றான். இவ்விதம் தம்மால் தாரகாமய யுத்தத்தில் கொல்லப்பட்டகாலநேமியென்பவன் கம்ஸனாகப்பிறந்துவளர்ந்து இப்பொழுது தனது தகப்பனான உக்கிரசேனமஹாராஜனைக் கட்டிச் சிறைப்படுத்திவிட்டுத் தானே மதுரையை ஆண்டுவருகின்றான். அன்றியுமெப்பொழுதும் மாமிசத்திலேயே பிரியமுடையவனாய் அசுரத்தன்மையோடு உலகங்களை வெகுவாகத்துன்பப்படுத்துகின்றான். யாதொருகுதிரைக்குச் சமமான பராக்கிரமத்தையுடைய ஹயக்ரீவனென்றவசுரனிருந்தானே, அவனிப்பொழுது கேசியென்றபெயருடன் மிகுந்த பலத்துடன் அக்கம்ஸனுக்குக்கீழே வசித்துக்கொண்டிருக்கிறான். அத்துஷ்டன் களைப்பதிற் சயர்த்தனாய்க்கொண்டு யாதொன்றையும் சட்டைசெய்யாமல் அம்மதுரைக்குச் சமீபத்திலுள்ள பிருந்தாவனத்தில் நரமாமிசங்களைப் புசித்துக்கொண்டு வசிக்கின்றான். பலிபுத்திரனான அரிஷ்டனென்றவனோ பெருத்த திமிலோடுகூடிய எருதுவடிவத்துடன் தனதிச்சைப்பிரகாரம் சமயம்போல் வடிவமெடுக்கத்தக்க சக்தியுள்ளவனாய் அப்பிருந்தாவனத்திலும் அதற்கருகாமையிலுள்ள இடங்களிலுமுள்ள பசுக்களையெல்லாம் ஹிம்ஸிக்கின்றான். திதியின்புத்திரனும் சகலவசுரர்களுக்கும்மேன்மையானவனுமான ரிஷ்டனென்றவன் குவலயாபீடமென்று பெயரையுடைய யானைவடிவத்துடன் கம்ஸனுக்கு வாகனமாய் விளங்குகின்றான். அசுரர்களுக்குள் மிகவும் கொழுத்த லம்பனென்றவனோ, பிரலம்பனென்ற பெயருடன் பாண்டீரவனத்தில் வந்துவசிக்கின்றான். கரனென்றவசுரனோ கழுதைவடிவத்துடன் தேனுகனென்றபெயரால் தாளவனமென்ற பனைகள்நிறைந்தகாட்டில் வசித்துக்கொண்டு அநேகம் பிராணிகளையெல்லாம் துன்பப்படுத்துகின்றான். வராகன், கிசோரனென்ற மஹாபலிஷ்டர்களான இருவர்களும் மல்லவித்தையிலுள்ள சாணூரனெனவும், முஷ்டிகனெனவும் பிறந்திருக்கின்றனர். ஓ! தானவாந்தகனான பகவானே! மய



னெனவும் தாரகனெனவும் பெயர்பெற்றிருந்த தானவர்களிருவரும் பூமிதேவி மகனாகிய நரகனுடைய பிராக்ஜியோதிஷமென்ற நகரத்தில் வசிக்கின்றனர். ஓ! விஷ்ணோ! இவ்வண்ணமாகத் தம்மால் கொல்லப்பட்ட தைத்தியர்களும் தானவர்களுமாகிய அசுரர்களெல்லாம் மனிதவடிவத்தை எடுத்துக்கொண்டு பூவுலகிலுள்ள மனிதர்களையெல்லாம் மிகவும் துன்பப்படுத்துகின்றனர். அதிலும் தம்முடையசரித்திரத்தில் மிகவும்பொறாமையுடையவர்களாய் தம்முடைய பக்தர்களான மனிதர்களையே கொன்று ஹிம்ஸிக்கின்றனர். இனித்தாமெங்கள்மீது செய்யுமனுக்கிரகத்தால் அவ்வசுரர்களெல்லாம் விநாசத்தையடையவேண்டும். ஏனெனில், சுவர்க்கத்திலுமவர்கள் தம்மிடத்தினின்றே பயப்படுகின்றவர் அவ்விதமே கடலிலும் தம்மிடத்தினின்றே அஞ்சுகின்றவர், அதேவண்ணமே புவியிலும் தம்மிடத்தினின்றே பயப்படுவோர்களையொழிய வேறெவ்விடத்தினின்றும் சிறிதேனும் சலியார்கள். கெட்டவொழுக்கங்களையுடைய அத்தைத்தியர்களெல்லாம் சுவர்க்கத்தில் தம்மாலேயே கொல்லப்பட்டு அச்சுவர்க்கத்தினின்றும் தவறியபின் அவ்வசுரர்களுக்கெல்லாமிப்பொழுது வசிப்பதற்கு பூவுலகமேதலமாயிற்று. அவ்விதம் பின்னுமங்கு முளைக்கப்பட்ட காலநேமி முதலிய வசுரர்களெல்லாம் பூவுலகத்திலும் தம்மாற் கொல்லப்பட்டால் கேசவனான தாமிருக்கும்பொழுது இனி சுவர்க்கத்திற்கு வரமாட்டார்கள். ஆகையால் ஓ! பகவானே! வாரீர் பூவுலகிற்கு நாமிருவரும் செல்வோம். அத்தானவர்களுடைய விநாசத்திற்காகத் தம்மை தம்முடைய சங்கற்பத்தால் அவதரிக்கச் செய்தருளவேண்டும். தம்முடைய மூர்த்திகளோ உயர்ந்த தேவர்களாற்கூடக் காணக்கூடியவைகளும், கூடாதவைகளுமாகவிருக்கின்றன. அவைகளுள் ஒன்றைத்தாமவதரிப்பித்தபின்புதான் மற்றத்தேவர்களெல்லாம் பூமியில் ஜனிப்பார்கள். தாமவதரித்தருளினாற்றான் அந்த கம்ஸனென்றவன் விநாசத்தையடைவான். மேலும் பூமிதேவியார் யாதொரு காரியத்திற்காக வந்தனளோ அக்காரியமும் கைகூடும். தாமே பாரதவருஷமென்றதேசத்திற்கு முக்கியமாகக் கண்திறக்கும் குருவாயிருக்கின்றீர். மேலும் பாரதமென்ற பரதமரபினர்கூடிச் செய்யப்போகும் யுத்தமாகிற காரியத்திற்கும் தாமே ஆசானாயிருந்து வழுவாமல் நடத்திவைக்கக்கூடியவர். தாமே நல்வழியில் நடப்போர்க்குக் கண். தாமே நல்லோர்க்குச் சிறந்தஜீவனம். ஓ! இருடிகேசனே! பூவுலகிலெழுந்தருளி அக்கம்ஸன் முதலிய தானவர்களை விஜயம் செய்தருள்வீர்.

58-வது அத்தியாயம் முற்றிற்று.

# 59-வது அத்தியாயம்.

வைசம்பாயனர்:— இவ்விதம் நாரதர் உரைத்த வார்த்தையை மதுசூதனன் கேட்டருளியதின்பின் எல்லோர்க்கும் அடையத்தக்கவரும், பரிசுத்தரும், அழிவற்றவருமான அப்பகவான் புன்சிரிப்புடன் வருமாறு மறுமொழி அருளிச்செய்கின்றனர்.

ஸ்ரீபகவான்:— ஓ! நாரதனே! மூவுலகங்களின் ஹிதத்திற்காக யாதொரு நம்மைப்பார்த்து நீயாதொரு விஷயத்தைப்பற்றிக் கூறுகின்றாயோ, அவ்விஷயத்தில் நன்றாயிறங்கியிருக்குமென்னுடைய வார்த்தையையும் கேள். யாதொரு தைத்தியர்களெல்லாம் நம்மால் கொல்லப்பட்டார்களோ அவர்களெல்லாம் பூவுலகில் எந்தெந்தயோனியில் பிறந்துவளர்ந்துவருகின்றனரோ அவர்களெல்லாம் நம்மால் நன்றாய் முந்தியே அறியப்பட்டவர்களே. உக்கிரசேனனுக்கு மைந்தனான கம்ஸனையுமறிவேன். மேலும் குதிரை உருவத்தோடுகூடிய கேசியென்பவனையும், யானையுருவத்தோடுகூடிய குவலயாபீடனையும், மல்லர்வேஷத்துடன்கூடிய சாணூரன் முஷ்டிகன் என்ற இருவர்களையும், இடபவுருக்கொண்ட அரிஷ்டனென்பவனையும் கரனையும், பிரலம்பனையும், பலியின்மகளான பூதனையையும், யமுனையாற்றின் மடுவில் கருடனுடையப்பயத்தால் ஒளிந்துவளரும் காளியனென்றவனையும், எல்லாவரசர்களுடைய முடிமேல்வீற்றிருக்கும் ஜராசந்தன் என்றவனையும், பிராக்ஜ்யோதிஷமென்ற நகரத்திலுள்ள நரகனையும், மனிதவுலகத்தில் மனிததேகத்தோடு தானுமோர் அரசனாய்ப் பிறந்து வளர்ந்துவரும் சோணிதபுரத்திற்கதிபதியாகிய குஹனுக்குச் சமானமான விக்கிரமத்தையுடைய பாணாசுரனையும், அவனாயிரங்கைகளுடன் தேவர்களாலும் எதிர்க்கமுடியாமல் கொழுப்பெடுத்திருப்பதையும், நம்மிடத்திலுள்ள பாரத்தை சமர்ப்பித்துவிட்டு நம்மிடத்திலேயே பக்தியோடுகூடிய பாரதபூமியையும், மற்றும் சகலராஜர்களுடைய நடவடிக்கைகளையும் நானறிவேன். அன்றியும் பூபதிகளெல்லாம் பூவுலகில் விநாசத்தையடைந்து அம்மனிதசரீரத்தை விட்டுத் திவ்வியசரீரத்துடன் சுவர்க்கத்தில் வெகுமானத்தை யெதிர்பார்க்கின்றார்கள். இவ்விஷயம் நம்மால் நேரிடப்பார்க்கப்பட்டது. அப்படிப்பட்ட சிறந்தவுருவங்களுடைய அரசர்களுக்கும் நமக்கும் மற்றுள்ள எதிரிகட்கும் இக்காலத்திற்குத்தக்க யுக்தியைச்சொல்லுகின்றேன். அதாவது:— அப்பார்த்திவர்கள் நடுவில் நாமுமோர் இராஜகுமாரனாக மனிதவடிவை யெடுத்து அக்கம்சன்முதலிய சகலவசுரர்களையும் எந்தெந்தவுபாயத்தாலெவ்வெவ்விதம் வதஞ்செய்யக்கூடுமோ அந்தந்தமாதிரியாக அங்கங்கு நாமே



நம்முடைய யோகப்பிரபாவத்தாலுள்நுழைந்து இந்த தேவர்களுடையவும், இந்திரனுடையவும் சத்துருக்களான அசுரர்களையெல்லாம் கொன்றுவிடுகின்றோம். அவ்விஷயத்தில் அநேகம் விதமான யோகநெறிகளெல்லாம் நம்மாற் பார்க்கப்பட்டிருக்கின்றன. எவ்விதமாயினும் இந்த தேவசத்துருக்களெல்லாம் யுத்தத்தில் வதம் செய்யவேண்டியவர்களே. உலக நன்மைக்காகச் சுவர்க்கவாசிகளான தேவகந்தர்வரிஷிமுதலியவர்களால் அவரவர் அம்சங்களெல்லாமெவ்விதம் பிறப்பிக்கப்பட்டனவோ, அவ்விதமே நம்முடைய அவதாரத்தைப்பற்றியும் முன்பே இந்த நாரதனுக்கு நம்மால் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது பிதாமஹனான நான்முகன் நமக்கு எங்கு எவரிடம் எந்த வேஷத்துடனே கூட வசிக்கலாமென்பதையும் எவ்வுருவத்தோடெளிதாயசுரரை கொல்லலாமென்பதையும், ஆலோசிக்கட்டுமென்று திருவாய் மலர்ந்தருளினவுடன் நான்முகன் விண்ணப்பஞ் செய்கின்றார்.

பிரம்மா:— ஓ! பகவானான நாராயணா! என்னால் நிச்சயித்து வைக்கப்பட்ட உபாயத்தை கேட்டருள்க. பூவுலகில் தம்மை ஜனிப்பிக்கத்தக்கவன் யாரென்பதையும், பெறத்தக்கவள் எவளென்பதையும், எக்குலத்திற் பிறந்தால் அக்குலம் கடைத்தேறுமோ அப்படிப்பட்ட குலத்தையும் தெரிவித்துகொள்ளுகின்றேன். யாதவர்களுடைய சிறந்த வமிசத்தையே தாம் வகித்தருள்வீர். அதிலவதரித்தருளி அசுரர்களையெல்லாம் கொன்று விஜயம் செய்து தம்முடைய வமிசத்தையும் உயர்ந்த மான்மியத்தோடு கூடியதாகப் பூவுலகில் நிலைநாட்டி உலகத்தில் மனிதர்களுக்குள், ஜாதிகளின் ஒழுங்கு, ஆசிரமங்களின் ஒழுங்கு இவைகளை ஸ்தாபித்தருளப்போகின்றீர். மேலுமோர் வார்த்தையைக்கேட்டருளவேண்டும். அதாவது:— முன்பு கசியபரென்ற மஹாரிஷியானவர் மகா தீரனான வருணனுடைய நிரம்பப் பால் கறக்கும் யாகத்திற்குரிய சிலபசுக்களைத்தான் செய்யப்போகும் யாகத்தினுபயோகத்திற்காக அவ்வருணனை யறியாமல் கைப்பற்றினர். அக்கசியபருக்கு அதிதி யென்றும் திதியென்றும் இருமனைவியார். முடிவில் அம்மனைவிகளுக்குத் திருப்திக்காக அப்பசுக்களையெல்லாம் கொடுத்துவிட்டனர். வருணன் நேரில் கேட்டுங்கொடுக்கவில்லை. அதன் பிறகு வருணனென்னிடம்வந்து என்னைத்தலையால் வணங்கியோர்வார்த்தை கூறினன்

ஓ! பகவானே! என்னுடைய பசுக்களெல்லாம் குருவான கசியபரால் அபகரிக்கப்பட்டன. பிறகு அவைகளாலாகவேண்டிய காரியங்களெல்லாம் முடிந்தும் திருப்பிக்கொடுக்கமாட்டேனென்கிறார். அன்றியுமவர்தமது

மனைவியார்களின் பேச்சைக்கேட்டு அவர்வாக்குகளிலேயே பற்றுள்ளவராயிருக்கின்றார். என்னுடையபசுக்களோ வேண்டியவைகளையெல்லாம் கொடுக்கக்கூடியவை. அவைகளெல்லாம் தங்கள் பிரபாவத்தாலேயே சாகரங்களில் எங்கும் தன்னிச்சையாய் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தவை. அப்படிப்பட்ட பசுக்களைக்கசியபரை யொழிந்த யாரும் கைப்பற்றமுடியாது. அவைகளெல்லாம் அட்சயமாயும் மேன்மை பொருந்தியதாயும் தேவாமிருதத்திற் கொப்பானதாயுமுள்ள பாலைக்கொடுக்கக்கூடியவை. ஆகையால் ஓ! பிர்மதேவனே! என்பசுக்களிப்பொழுது பிரபுவோ, மூர்க்கனோ, குருவோ, மற்றெவனோ எவரிடமிருந்தபோதிலும் அவர்களெல்லாம் தங்களுத்திரவிற்கு கீழ்ப்படியக்கூடியவர்களே. சீக்கிரமாக்ஞாபிக்கவேண்டும்— தாமேயனைத்து மேலான கெதி. ஓ! உலகங்களுக்குக் குருவான பிர்மதேவனே! காரியமிது அகாரியமிதென அறியாமல் நடத்தியவர்களுக்கேதாவதோர் தண்டனை யென்பதேயில்லாது போனால் உலகமரியாதையென்ற அணையே உடைபட்டுப் போகுமல்லவா. அந்த தருமசாஸ்திரவிஷய மெப்படியாவது இருக்கட்டும். என்னுடைய காரியத்தைச்செய்து கொடுப்பதற்குத் தாமேவல்லவர். எப்படியாவது என்னுடைய பசுக்களைக் கொடுத்தாலே, மறுபடியும் சாகரத்திற்குத் திரும்பிப்போவேன். யாவை தன்னுடைய தேவதைகளோ அவையெல்லாம் பசுக்களே. பசுக்களென்பவையாவையோ, அவைகளெல்லாம் அழிவற்றதாமே. தம்மால் படைத்துப்பெருகிவரப்பட்ட இவ்வுலகங்களுக்குள் உயர்ந்தது, கோ, பிர்ம்மணனென்ற இவ்வொன்றே முக்கியமானதென தருமசாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. அவைகளுள் முதலில் பசுக்களே காப்பாற்றத்தக்கவை அவைகள் பிராம்மணர்களையடைந்து அவ்வந்தணர்களைக் காக்கின்றன. ஆகையால் கோப்பிராம்மணரக்ஷணத்தாலேயே இவ்வுலகமெல்லாமிரக்ஷிக்கப்பட்டதாகும். ஓ! அச்சுத! இவ்விதம் ஸலிலபதியானவருணனால் தெரிவித்துக் கொள்ளப்பட்டபின், பசுக்களுடைய வுண்மையையறிந்துகொண்டு கசியபரிடம் சாபத்தைப் பிரயோகித்தேன். கசியபனென்ற மஹரிஷியாகிய உன்னுடைய யாதொரு அமிசத்தால் பசுக்களெல்லாம் அபஹரிக்கப்பட்டனவோ, அந்த அமிசத்தால் பூவுலகிற் சென்று கோபாலஜாதியையடைவாய். யாதொரு தேவர்களுக்குக் காரணமான சுரபி யென்றும் அதிதி யென்றும் பெயரையுடைய அக்கசியப மனைவிகளிருவருளரோ, அவ்விருமனைவிகளுடனே கூடவே ஜனித்து அவர்களுடனேயே இந்தப்படிலீலாவிநோதங்களை யநுபவித்துக்கொண்டிருக்கின்றார். ஆகை



யால் கசியபரது அமிசமானது அக்கசியபருக்குச் சமமான பிரபாவத்துடன் இப்பொழுது பூலோகத்தில் வசுதேவனென்ற பெயரால் யிருந்து பிரபாவத்துடன் பசுக்கள் நிறைந்த விடங்களிலேயே மனமுடையதாயிருக்கின்றதும் அம்மதுரைக்குச்சமீபத்தில் கோவர்த்தனமெனவோர் மலையினருகாமையில் கம்ஸனுக்குக்கப்பம்கட்டுமோர் சிற்றரசனாகவும் விளங்குகின்றது. புத்திமானான அவ்வசுதேவனுக்குக்கூறியபிரகாரம் அதிதியும் சுரபியும் தேவகி ரோஹிணியென்ற பெயருடன் மனைவிகளாயிருக்கின்றனர். ஓ! தேவனே! அவ்விடத்தில் கோபாலவேஷத்துடன் கூடிய ஸ்ரீமந்தத் தன்மையை முதன்முதலிலடைந்தருள்வீராக. ஓ! சிறந்தபுஜங்களையுடையவனே! பிறகு திரிவிக்கிரமாவதாரம் போலச்சிறுகச் சிறுகத் தம்பிரபாவத்தை விருத்தி செய்தருளவேண்டும். ஓ! மதுசூதனா! ஆகையால் தனது மனதாலேயே தன்னைத் தனது யோகமாயையைக்கொண்டு மறைத்து அவ்வசுதேவகுலத்திலேயே உலகங்களுடைய க்ஷேமத்திற்காகத்தாம் அவதரித்தருளவேண்டும். இந்த சுவர்க்கவாசிகளான தேவாதிகளெல்லாம் தம்மை ஜயவாக்குகளாலும் மங்களாசாஸனங்களாலும் மேன்மேலும் உற்சாகப்படுத்தி விருத்தி செய்விக்கின்றனர். தனது மனதாலேயே தன்னை மஹீதலத்திலவதரித்தருளி தேவகியையும் ரோஹிணியையும் கர்ப்பத்தால் சந்தோஷிப்பித்தருள்வீராக. அப்படியே பிறகு அனேகம் கோபகன்னிகளையும் சந்தோஷப்படுத்தி அவர்களுடன் ரமித்தருள்வீராக. ஓ! விஷ்ணோ! காடுகளில் பசுக்களை மேய்ப்பதற்காகத் தாமெழுந்தருளி அங்குமிங்கும் தாவித்தாவி நடந்தருளும்பொழுது அசைந்தவனமாலையையுடைய தம் திருமேனியை மஹா தன்னியர்களான புண்ணியவான்கள் பார்க்கப்போகின்றனர். யாதொருவருக்குத்தாம் புத்திரனாகவாகின்றீரோ அவரே யிவ்வுலகங்களில் மிகவுமுயர்ந்தவர். எவர் தம்மை மைந்தனே! என்றழைப்பாரோ அவரோ புண்ணியவான்களுக்குள் மேன்மை பொருந்தியவர். ஓ! தேவனே! எவர்கள் கோபாலவேஷத்தாற் சிறந்ததும், பீதாம்பரத்தோடு கூடியதும், கறுத்தும் சுருண்டுமுள்ள தலைமுடியையுடையதும், வனமாலையால் சிறப்பிக்கப்பட்ட திருமார்பையுடையதும், மயிற்றோகையாலலங்கரிக்கப்பட்டதுமான தம்திருமேனியை நமஸ்கரிப்பார்களோ, அவர்களே உத்தமோத்தமர்களென்றும் உலகத்திலுள்ள யெல்லோராலும் வணங்கத்தக்கவர்களுமாம். ஓ! தாமரை யிதழ்போன்ற கண்களையுடைய விஷ்ணோ! தாம் கோபாலனுடைய விரதத்தையடைந்து சிறுபாலனாயிருக்கும்பொழுது, உலகமும் ஒன்றுமறியாத பாலன் போலாகும்- (அசுரரும் பகவானான தமது மாஹாத்மியத்தை யறியாதுபோகும்) தம்முடைய பக்

தர்களெல்லாம் தம்முடைய சித்தத்திற்கு வசப்பட்டவர்களாய்க்கொண்டு தமது கிருபையால் தாம்வனத்தில் ஸஞ்சரிக்கையிலும், பசுக்களை மேய்க்கையிலும், மாட்டு மந்தையில் அங்குமிங்கும் தாவிநடக்கையிலும், யமுனா நதியில் நீராடுகையிலும், தம்மிடத்தில் விசேஷமான பேரன்பைவைக்கப் போகின்றனர். வசுதேவனுடைய ஜீவகாலமே நல்லகாலமாய் விளங்கப் போகின்றது. தாம் வசுதேவனைப்பார்த்துத் தந்தையே என்றழைப்பதும், வசுதேவன் தம்மைப்பார்த்து மைந்தனே யென்றழைப்பதும், உலகத்தில் மற்றொருவர்க்குங்கிடைக்கத்தகுந்த பேறோ? ஆம், ஆம், கசியபரைத்தவிர எவருக்கு புத்திரனாயவதரிக்கக் கூடும்? எவருமில்லை. மேலும் தனது கர்ப்பத்தில் அதிதியைத்தவிர யெவள் தரிக்க வல்லமையுள்ளவள். ஆகையால் ஓ! விஷ்ணோ! தமது யோகப்பிரபாவத்தால் உலகத்தை விஜயம் செய்வதற்காகச் சென்றருளவேண்டும். ஓ மதுசூதனே! நாங்களும் தங்கள் தங்களாலயங்களை குறித்துச்செல்லுகின்றோம்.

வைசம்பாயனர்:— இந்த மாதிரியாக பிதாமஹனென்ற நான்முகனென்னவர் தேவர்களுக்கெல்லாம் தேவேசனென்ற பகவானைப்பார்த்துப் பலவிதமாய் விண்ணப்பஞ்செய்து சபையைக்கலைத்துத் தமது சத்திய லோகத்தையடைந்தனர். அவ்விதமே மற்றதேவர்களும் வந்தவழியேசென்றனர். அந்த தேவசபையில் ஸ்ரீ விஷ்ணுவும் ஏகாந்தத்தில் சகலதேவர்களுக்கும் உத்தரவளித்தருளி திருப்பாற் கடலுக்கு வடபாகத்திலுள்ள தனது தேசத்தைத் தாமுமலங்கரித்தருளினர். அங்கு மேருபர்வதத்தின் கொடுமுடியில் எவராலும் செல்லமுடியாததும் பார்வதியென்ற பெயரையுடையதுமான குகையொன்றிருக்கின்றது. அது எப்பொழுதும் பர்வங்களில் அவருடையவர்களான மிகுந்த பராக்கிரமமுள்ள மூவர்களாலேயே பூஜிக்கப்பட்டு வருகின்றது. அந்தகுகையில் கம்பீரமான புத்தியையுடைய ஸ்ரீ ஹரியானவர் பழைமையான தனது தேகத்தை வைத்துவிட்டு பிறகு அப்பிரபு தன் (ஆத்மாவை) மனதை வசுதேவனுடைய அரண்மனையிற்சேர்ப்பித்தருளினர்.

59-ம் அத்தியாயம் சம்பூர்ணம்

ஸ்ரீ மஹாபாரதத்தின் கிலபருவமாகிய
ஸ்ரீ ஹரிவம்சத்தில் முதலாவது பர்வமாகிய ஹரிவம்சபர்வம்
ஸம்பூர்ணம்.

## முதலாவது பருவத்தின், பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 34 | யதாகவும் | யசோதகவும் |
| 4 | 4 | புத்திமிக | புத்திக்கெ |
| 19 | 15 | வைவஸ்த | வைவஸ்வத |
| ,, | 33 | மறாதபஸ் | மஹாதபஸ் |
| 20 | 9 | யிருக்தான். | யிருந்தான். |
| 21 | 26 | தேவிகள், | தேவிகள். |
| 23 | 16 | மறாந்தியம | மஹாந்தியம |
| 26 | 3 | உத்தமமான் | உத்தமனான |
| 27 | 8 | வந்த | வந்த |
| ,, | 15 | கட்குண்ட | கட்கொண்ட |
| ,, | 31 | விருசாதி | விருத்தி |
| 28 | 3 | யாகித்தா | யாசித்தா |
| ,, | 25 | கொள்வது | கொல்வது |
| 29 | 9 | தேதம | தேஜம் |
| ,, | 24 | கோற | கோர |
| 30 | 1 | புருதனே ! | புருஷனே ! |
| ,, | 8 | திறந்து | திரந்து |
| ,, | 12 | திறவி | திரவி |
| 32 | 34 | யைப்பரிந்து | யையறிந்து |
| 35 | 34 | பிரத | பிரதக் |
| 41 | 3 | லோற் | லோர் |
| ,, | 12 | கலயிர | களாலயிர |
| 45 | 13 | மாயா | சாயா |
| 46 | 34 | வட்ட | விட்ட |
| 50 | 2 | சத்தோகை | சாதோகை |
| ,, | 28 | னே ! சக்தி | னே ! பின்னும் சக்தி |
| 51 | 7 | சாதி | [illegible] |
| ,, | 21 | இம்மனிதன் | எம் [illegible] தனும் |
| ,, | 23 | பிளைன் | பி [illegible] |
| 52 | 7 | ஒட | கட |
| ,, | 12 | யமாயும், | யதாயும், |
| ,, | 21 | என்று | என்ற |
| 53 | 2 | அவது | அவது |
| ,, | 31 | இதாவா | இதரவா |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 54 | 2 | குத்தாள | குறித்தாள |
| ” | 6 | நிருகரி | பிராகரி |
| ” | ” | (சசா-- | (சச-- |
| ” | 10 | ஆதீபகம் | ஆவபகம் |
| ” | 12 | காரணபெயர் | காரணப்பெயர் |
| ” | 25 | இவ்வி | இவ்வி |
| 57 | 7 | மாறிகாா | மாரிகளா |
| 58 | 10 | னென்பனென்ற | னென்ற |
| 59 | 1 | குமாறன் | குமாரன் |
| ” | 4 | ளடய | ஸடய |
| 60 | 22 | ந்தது | ந்தது. |
| 61 | 2 | அஸன்தோ | அலங்தோ |
| ” | 20 | வவிஸ்ட | வெவிவ்ட |
| ” | 28 | ஷை | ஷேடி |
| 78 | 28 | லாச்சோ | லச்சோ |
| 79 | 5 | வேவொரு | யேமொரு |
| 80 | 1 | பங்கவான | பங்களான |
| ” | 5 | விதிர்தி | வசித்திர |
| 89 | 4 | தார் | தால் |
| ” | 5 | களார் | களாற் |
| 92 | 27 | மறாத்மியம் | மாஹாத்மியம் |
| 94 | 17 | பாற்கனே; | பார்க்கவனே ! |
| 95 | 5 | கெளசிகக் | கெளசிக |
| ” | 19 | றுய், | றும், |
| ” | 20 | கவொல்லாம் | கசால் |
| 96 | 2 | யேகிர | யோகி |
| 97 | 4 | அநுறா | அனுஹ |
| ” | 16 | ஒறவாரு | ஒருவாறு |
| ” | ” | திறப்ப | நிருப்ப |
| 101 | 25 | புத்தாறு | புத்தாது |
| ” | 26 | கற்றைய | காற்றை |
| 103 | 3 | கபித்தனது | கபி தனது |
| ” | 27 | குபீயாக | கும்பீயாக |
| 104 | 14 | உர்மைத்தனை | மைமைத்தனை |
| ” | 26 | மனிதரில் | மனிதரில் |
| ” | 19 | உரயினை | உரயினை |
| 105 | 25 | போறிற் | ப்போரிற் |
| 107 | 8 | யதை | அதை |
| ” | 11 | கசிருப | கசிரும |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 107 | 28 | வைகா | வைக்கா |
| 108 | 1 | தாலும் | ததாலும |
| 109 | 2 | வினையா | வினையால |
| ” | 30 | ஒன்றுகொ | ஒன்றுக்கொ |
| 110 | 21 | யோகத்தில் | யோகதில் |
| 111 | 20 | உயிருந்து | உருபிந்து |
| 112 | 16 | மரவ | ம்வர |
| ” | 19 | உதிவ்தடை | உத்திவ்தடை |
| 115 | 31 | ரகுருயும் | ரகுகருயும், |
| 116 | 21 | சத்துவிப | சாத்துவிப |
| 117 | 1 | போகத்தை | யோகத்தை |
| ” | 12 | நன்பனே ! | நண்பனே ! |
| 118 | 18 | பாவித்து | பாவித்த |
| ” | 19 | பூமியை | பூமியை |
| 120 | 4 | சோபத்தை | சோபையை |
| 122 | 13 | பாலிய | பாவிய |
| ” | 14 | சேய்ய | செய்ய |
| ” | 23 | தகுவினை | தகுதினை |
| 123 | 8 | யிலும் சிறந்த | யிறும் சிறந்த |
| ” | 21 | ஐயுன்:— | ஐயன்:— |
| ” | 29 | பார்த்து | பார்ப்பது |
| 124 | 1 | மர்கவொடு | மாகக்கொடு |
| ” | 8 | ஙாந்சரு | கந்தரு |
| 125 | 5 | மான்கனோ | மின்னல்களை |
| ” | 9 | முருவெடு | வருவெடு |
| 127 | 25 | பிராமணறு | பிராமணறு |
| 128 | 8 | வம், | வும், |
| ” | 34 | தாறு | தான் |
| 129 | 18 | கொள்வும். | கொள்ளவும், |
| ” | 20 | கள் | ஊனில் |
| 130 | 11 | செய்துக் | செய்[illegible] |
| ” | 28 | ஸாக்த | ஸ[illegible]க்த |
| 131 | 17 | செய்யும் மு | செய[illegible]மு |
| ” | 15 | பதின் | பத[illegible]ன் |
| 133 | 8 | யுமறு | யுவறு |
| 135 | 22 | னிடவெளி | னிடக்வெளி |
| ” | 28 | சென்று | சென்று |
| 136 | 10 | குசிக | குசிக |
| ” | 24 | முண்டான | ண்டான் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 133 | [illegible] | தௌத்திர | பௌத்திர |
| 144 | 12 | நர | நகர |
| 14[illegible] | 33 | சதுத்கும் | சதுக்கும் |
| 146 | 7 | எக்காரனை | எக்காரனே |
| ,, | 16 | என்ற | என்ற |
| ,, | [illegible] | போயெள | போயௌ |
| ,, | 31 | காசியுக்கா | காசியுதக்கா |
| ,, | 32 | நரகம் | நகரம் |
| 149 | 9 | மபகுரும் | மாபகுரும் |
| ,, | 26 | உருவசு | அருவசு |
| ,, | 27 | மதுவை | அதுவை |
| ,, | 33 | விட்டு | விட்டு |
| 150 | 6 | சபத்தா | சாபத்தா |
| ,, | 20 | விதிக்கி | விதிக்கி |
| ,, | 22 | பிகாவும் | பிதாவும் |
| ,, | 32 | பேயளவன | யௌவன |
| 151 | 10 | ஆசையா | ஆகையா |
| ,, | 13 | பெருக்குமே | பெருகுமே |
| ,, | 21 | விருப்பாரோ | விருக்கும்படியிருப்பாரோ, |
| 153 | 10 | அடிப்பட்ட | அடிபட்ட |
| ,, | 17 | தனங்க | தானங்க |
| 154 | 5 | நிருக | திருக |
| ,, | 23 | உள்ள மறித | உள்ளமறித |
| 155 | 19 | னின்றும் | னின்றும் |
| ,, | 21 | மகள் | மகன் |
| ,, | 27 | கைத்திய | சைத்திய |
| 156 | 13 | குசேயும்ம | குசேயும |
| ,, | ,, | தவ்த | தகுத |
| ,, | 14 | ஜவலனே | ஜுவலனே |
| ,, | 19 | விருதாசி | விருதாசி |
| ,, | 22 | யிதி | பிரதி |
| 157 | 3 | ருள்! | ருள். |
| ,, | 11 | வத்தர | வத்தர |
| ,, | 29 | ஜததனெ | விதத |
| ,, | 32 | ஜததறு | விததறு |
| ,, | 33 | வித | விதத |
| 158 | 1 | கள் | களுள் |
| ,, | 4 | யினர். | யினர். |



| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 158 | 8 | திலோ | திவோ |
| ,, | 10 | வாரணவி | வாரணவி |
| ,, | ,, | சோதம | கோமக |
| ,, | 21 | னென்ன | னென |
| ,, | 25 | மைக்கொ | மைமகொ |
| ,, | 27 | ரூற் | ராற் |
| ,, | 28 | இவ்வித | அவ்வித |
| ,, | 29 | தீமில்லே. | சமுமில்லே. |
| ,, | 30 | மிக்குரா | மக்குரா |
| ,, | 32 | டம் இருந்து | டமிருந்து. |
| 159 | 3 | ஞத்த | ஞந்த |
| ,, | 9 | ஜபு | விபு |
| ,, | 11 | மஜுராதன், | மஹாராதன், |
| ,, | 20 | பிராஜத் | பிரஹத் |
| ,, | ,, | அப்பிராஜத் | அப்பிரஹத் |
| ,, | 24 | ஜன்ஜ | ஜன்ஹ |
| 160 | 18 | மதி | வதி |
| ,, | 21 | யாயினர் | யாயனர் |
| ,, | 22 | ரோறு | ரோஹு |
| ,, | ,, | டம் இ | டமி |
| ,, | 32 | சத்தில் | சம |
| 161 | 2 | கருமவர் | கருமவர். |
| ,, | 8 | மூத்கலன், | முத்கலன், |
| ,, | 9 | கிருமாளா | கிருமிளா |
| ,, | 16 | மூத் | முத் |
| ,, | ,, | தக் கில | தாசுக்கில |
| 162 | 1 | திலோ | திவோ |
| ,, | 2 | மிந்திரயு | மித்திரயு |
| 163 | 17 | என்றவன் | என்றவன் |
| 164 | 10 | புகல் | புதல் |
| 165 | 8 | தந்தயோ | தையோ |
| ,, | 9 | சம்பட் | கப்பட் |
| ,, | 20 | போமுது | பொழுது |
| ,, | 31 | ரென்றவ | னென்றவ |
| 166 | 4 | கள்யென | கனென |
| ,, | 6 | வொர் | வோர் |
| ,, | 18 | நரக | நகர |
| ,, | 25 | ரதௌவீஸ் | ரதௌஜஸ் |
| 168 | 11 | வரு | வரு |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 168 | 13 | போழுது | பொழுது |
| ,, | 20 | யதிர் | யெதிர் |
| 169 | 3 | தங்களை | தலைகளை |
| ,, | 20 | களும், | களையும். |
| 169 | 22 | விட்டன. | விட்டது. |
| 171 | 2 | யம்முள்ள | யமுள்ள |
| ,, | 13 | காயத் வீ | கார்த்தவீ |
| ,, | ,, | ஜுன | ர்ஜுன |
| ,, | 28 | ளின்றும் | ளினின்றும் |
| ,, | 29 | விருஷ்ணி | விருஷ்ணி |
| 172 | 8 | யென்ப | யென்ப |
| ,, | 13 | ரும் | றும் |
| 173 | 5 | பாறைபாறை | பறைபாறை |
| ,, | 7 | அதவ | அகவ |
| 174 | 9 | அலங்கனே | அலங்கய்னே |
| ,, | 12 | சிறவச | சிரகல |
| ,, | 20 | வத்ஸாவா | வத்ஸவா |
| ,, | 23 | கைசீக | கைசிக |
| ,, | 30 | தேஷனே | தேஷ்னே |
| 176 | 25 | ஒரு | ஒரு |
| 178 | 4 | றும்ப | றும |
| ,, | 14 | யிறும் | யிறும் |
| ,, | 20 | மக | மருமக |
| 179 | 10 | வைதர்ப்பா | வைதர்ப்பி |
| 180 | 28 | மார்த்தி கா | மார்த்திகா |
| ,, | 26 | மூத்த | முத்த |
| 181 | 1 | குகந்தை | க்ருதந்தை |
| 182 | 20 | என்றும் | யன்றும் |
| 183 | 4 | திரிர் | திரிற் |
| ,, | 26 | நானவர் | ஞனவர் |
| 184 | 21 | சிரிது | சிறிது |
| ,, | 31 | வதிறய் | வாய் |
| ,, | 33 | கையிற் | கையில் |
| 185 | 4 | பேரழு | பொழுது |
| ,, | ,, | க்ரும் | ரும் |
| ,, | 6 | ாப்பகல் | இராப்பகல் |
| ,, | 17 | க்தி | த்தி |
| ,, | 18 | திறந்த | ச்சிறந்த |
| ,, | 28 | வாரபதி, | வாதபதி, |



| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 186 | 11 | அசுந்தரை | வசுந்தரை |
| ,, | 12 | மகனே | மகளை |
| ,, | 16 | சுபாகு | சுபாகு |
| ,, | 22 | திருப்பி | திருப்பி |
| 187 | 8 | யவாம். | பனவாம். |
| 188 | 19 | ஞானை | ஞான |
| 189 | 11 | ஆர்த்தீ | மார்த்தீ |
| ,, | 23 | அக்ரூரர் | அக்குரூர் |
| 191 | 13 | பிருமனே | பிராம்மனே |
| ,, | 22 | அடைந்தார். | அடைவானேன்? |
| ,, | 25 | வந்தார். | வருவானேன்? |
| ,, | 28 | பித்தார். | பிப்பானேன்? |
| ,, | 31 | னுஷ | ஷித |
| 192 | 2 | லாயினர். | லாவானேன்? |
| ,, | 3 | ளைப் | ளையே |
| ,, | 5 | பட்டார் | டுவானேன்? |
| ,, | 8 | கள் | களும் |
| ,, | 18 | கினி | கினி |
| ,, | 20 | ஞகவும், | ராகவும், |
| ,, | | ஓடி | ஓடி |
| ,, | 21 | களெல்லாம் | களையெல்லாம் |
| ,, | 28 | மூக் | மூந்தரு |
| ,, | 29 | அதனால் | வரனால் |
| ,, | 30 | பட்டாரோ, | பட்டானே, |
| 193 | 18 | பரிதிகளை | பரிதிகளை |
| ,, | 26 | யெஜுஸ் | யஜுஸ் |
| 194 | 3 | அத்வர் யு | அத்வர்யு, |
| 195 | 31 | த்தநி | த்தி |
| 196 | 12 | ஞருடைய | ஞருடைய. |
| ,, | 16 | ய வராக | யவராக |
| 198 | 1 | மேவா | மேதுவா |
| 199 | 10 | பூப | பூப |
| ,, | 18 | வாக்கிய | வர்க்கிய |
| ,, | 24 | தாக்கக | திறக்க |
| ,, | 28 | விம் | விதம் |
| ,, | ,, | எக்ஞ | யக்ஞ |
| 200 | 13 | ஷிரண்யகசுபை | ஹிரணியகசிபுவை |
| ,, | 21 | அதன் | அவர் |
| ,, | 25 | லாவாவது | லாவது |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ,, | 31 | ரதன் | ரசதன் |
| ,, | 32 | ஞன்வனும் | ஞைத்தும் |
| 210 | 1 | விஷய | விசுவ |
| 211 | 3 | வத்தின் | வித்தண. |
| ,, | 11 | சேய்து | செய்து |
| 213 | 2 | பார் | பறர் |
| ,, | 4 | விளங்கி | விளங்கி |
| ,, | 21 | திரது | திருது |
| ,, | 24 | ளொடு | ளோடு |
| 215 | 5 | ரசத்சாம் | ரவுத்தாற் |
| ,, | 14 | ஞதம் | நாதம் |
| ,, | 2) | துப்பாக்கி, | (துப்பாக்கி) |
| 216 | 13 | வஜ்ரு | வஜ்ஜிரா |
| ,, | 1ɔ | ஞவண் | ஞணவன், |
| ,, | 27 | தோள்களை | தோள்வளைகளை |
| ,, | 28 | பாகத்தை | பாசத்தை |
| 219 | 27 | அதாமம், | அதருமம், |
| 220 | 4 | ிற்று. | ின. |
| ,, | 34 | தெரி | தெறி |
| 222 | 18 | பொரி | பொறி |
| 225 | 9 | லும் இரு | லுமிரு |
| 228 | 14 | ளும் | ளை |
| ,, | 16 | அங்கங்க | அங்கதங்க |
| 230 | 5 | க்கும் | க்கொன்றொடொன்று |
| ,, | 19 | ளையும் | னால் |
| ,, | 31 | ளோ | றே |
| ,, | 2,, | களும், | கனும், |
| 232 | 19 | லேரிக் | வேறிக் |
| 234 | 2. | சமீபம் | சமீபத் |
| 235 | 10 | கசபு | கசிபு |
| ,, | 30 | ிவத | பிதா |
| ,, | 31 | ிபு | கசிபு |
| ,, | 32 | ஆ | அவ |
| 2:8 | 34 | வீதக் கூறு | த்தை கூறு |
| 240 | 17 | டினும் | டினும் |
| 241 | 20 | பிரமாணங் | பிரமாணங்கள் கூறு கின்றனவோ, அவை |
| 242 | 9 | கை யை | புகையை, |
| ,, | 31 | இறந்த | சிறந்த |



| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| £45 | 2 | று | ரு |
| 24: | 1ɔ | ஆகா | ஆசா |
| 249 | 33 | அசுரர் | அரசர் |
| 250 | :0 | வசியாயி | வசியமாயி |
| 251 | 1; | செம்மா | செவ்வா |
| ,, | 14 | சம்மதி | சம்பத்தி |
| ,, | 28 | வதே | அத்தே |
| 2 4 | 29 | யுவதை | யுவதி |
| 255 | 19 | பொழுமும் | பொழுதும் |
| ,, | 28 | கடவது. | கடவர், |
| 2 6 | 32 | தேவ | வேத |
| 259 | :1 | தபோ | தமோ |
| 261 | 8 | களின்னி | கனினி |
| ,, | 23 | அந்தி | அதி |
| 263 | 10 | தாளித்தி | தானத்தி |
| 2;4 | 17 | றைக்கு | றக்கு |
| [illegible] | :0 | நினைக்கும் | நினைத்தப் |



# விளம்பரம்.

# ஸ்ரீ ஹரிவம்சம்.

## தமிழ் மொழி பெயர்ப்பு

[illegible] ஸ்ரீ கிரு ஷ்ண பகவானுடைய சரித்திரத்தை [illegible] [illegible] விளக்குவதும், [illegible] மிகவும் [illegible] [illegible] தமிழ் மொழி பெயர்க்கப்பட்டு [illegible] மொழி [illegible] [illegible].

ஸ்ரீ ஹரிவம்சம் தமிழ் மொழி பெயர்ப்பு இதன் விலை ரூ. **1-0-0.**

கிடைக்கக்கூடிய இடங்கள் :—

1. மகா-ள-ள-ஸ்ரீ R. [illegible] அய்யங்கார்
   பெரிய உத்தர வீதி ஸ்ரீரங்கம்.
2. மகா-ள-ள-ஸ்ரீ [illegible] பிள்ளை,
   புத்தக வியாபாரம் ஸ்ரீரங்கம்.
3. ஸ்ரீமத் உ-வே. R. வெங்கடாசாரியார்,
   முனிசிபல் [illegible]
   கோயம்புத்தூர்.
4. ஸ்ரீமத் உ-வே A. K [illegible] ஐயங்கார்,
   103. [illegible] தெரு, பட்டணம் மதராஸ்.

இதனுடன் 2-வது, 3-வது பாகங்களின் 128 பக்கங்கள் [illegible] புஸ்தகம் [illegible] 8. [illegible]

இப்படிக்கு தங்கள்
அன்பன்

[illegible]
ஸ்ரீ கோவிந்தராமானுஜாசாரியார்,
1079 ஸ்ரீரங்கம்.